# குருவிக்கூடு

**கௌசி**

வெளியிட்டோர்

**வசந்தா பதிப்பகம்**

26, குறுக்குத் தெரு, ஜோசப் காலனி,

ஆதம்பாக்கம், சென்னை - 600 088

மின்னஞ்சல்: amrcts17@gmail.com

# நூல் விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின்பெயர் | : | குருவிக்கூடு |
| ஆசிரியர் | : | கௌசி |
| பதிப்பு | : | 2022 |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| பொருள் | : | சிறுகதைகள் |
| நூலின் அளவு | : | டெம்மி |
| புள்ளி | : | 11 |
| பக்கம் | : | 342 |
| படிகள் | : | 1000 |

ISBN: 978

| | | |
|---|---|---|
| கணிப்பொறி அச்சு | : | ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், மதுரை - 625 020. |
| அச்சிட்டோர் | : | பத்மாவதி ஆப்செட், சென்னை - 32. |
| விலை | : | ரூ.0/- |

# குருவிக்கூட்டில் பதிவாகியுள்ள தாய்நில வாழ்க்கையும் புலம்பெயர் வாழ்க்கையும்...



**முனைவர் மு. இளங்கோவன்**

தமிழ்ப் பேராசிரியர்,
கா.மா. அரசு பட்டமேற்படிப்பு மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி, இந்தியா muetamil@gmail.com

அயலகத் தமிழர்களைப் பற்றி அறியும் ஆர்வம் எனக்கு என் கல்லூரிப் படிப்புக் காலத்திலேயே தொடங்கிவிட்டது. அந்த ஆர்வம் மேலும் மேலும் சுடர்விட்டு, இன்று வளர்ந்து வருகின்றது. அவ்வகையில் செர்மனி நாட்டில் வாழ்ந்து வரும் எழுத்தாளர்கள், படைப்பாளிகள் குறித்த விவரங்களைத் தெரிந்துகொள்ள சிலவாண்டுகளுக்கு முன்னர் முனைந்தபொழுது, பலரின் தொடர்பு கிடைத்தது. அவர்களுள் கௌசி என்று அறியப்படும் சந்திரகௌரி சிவபாலன் அவர்களின் தொடர்பினைக் குறிப்பிட்டுச் சொல்லுதல் வேண்டும். பேச்சாற்றலும், படைப்பாற்றலும், வினைத்திறனும் கொண்ட அவரின் வாழ்க்கைக் குறிப்பைக் கேட்டு, மின்னஞ்சல் செய்தபொழுது, ஓரிரு நாளில் வாழ்க்கைக் குறிப்பு என்ற பெயரில் தம் வாழ்க்கைச் சித்திரத்தையே எனக்கு அனுப்பியிருந்தார்கள்.

கல்விப்புலத்தில் உழலும் எம் போன்றவர்களுக்குச் சிறு குறிப்புகளே போதுமானதாக இருந்தாலும் கௌசி அனுப்பியிருந்த குறிப்பில் அவரின் படைப்பாற்றலைக் கண்ணுற்றேன். தமிழ்ச் செழுமை தெரிந்தது. கற்பனை உள்ளம் பளிச்செனப் புலப்பட்டது. ஆவணமாக்கப்பட வேண்டிய பல செய்திகள் அவரிடம் உள்ளமையை அவரின் வாழ்க்கைக் குறிப்புகளால்

உணர்ந்தேன். விளையாட்டாக, 'தங்கள் குறிப்புகள் நாவலாக விரியும் தரம்பெற்றவை. எனவே, ஓய்வு கிடைக்கும்பொழுது இதனை விரித்து நாவலாக எழுதுங்கள்' என்று சொல்லிவிட்டு, என் வேலைகளில் மூழ்கினேன்.

ஒரு மாதம் உருண்டோடியது. தொடர்பறுந்து கிடந்த கௌசி அவர்களின் நினைவு மீண்டும் வருவதற்குக் காரணம் அவர்களின் புதினம் (நாவல்), குருவிக்கூடு என்னும் பெயரில் மின்னஞ்சலில் எனக்குக் கிடைத்தது. இவ்வளவு விரைவில் புதினம் உருவாகும் என்று நான் நினைக்கவில்லை.

அப்புதினத்தை முழுமையாகப் படித்துப் பார்த்தபொழுது அவரின் படைப்பாளுமையைக் கண்டு வியந்தேன். முன்னமே எம் அறிவுத் தந்தையார் ஈழத்துப்பூராடனார் (க.தா. செல்வராசகோபால்) அவர்களின் நூல்களின் வழியாக அறிந்திருந்த மட்டக்களப்பு மண்ணில் நிலவிவரும் பல பண்பாட்டுக் கூறுகளைக் கௌசியின் நூலினில் கண்டு உள்ளம் உவகையுற்றேன். கிழக்கிலங்கையின் பெருமையுரைக்கும் புதின வரிசையில் ஒரு எழுத்தாளர் கிடைத்துள்ளார் என்று மனம் நிறைவடைந்தேன். புலம்பெயர் தேசத்தில் நமக்கான ஓர் எழுத்தாளர் இருக்கின்றார்களே! என்று பெருமைகொண்டேன். அவருக்கு நன்றியும் வாழ்த்தும் சொல்லிவிட்டுத் தப்பிக்க நினைத்தேன். ஆனால் கௌசி அவர்கள் என்னை விடுவதாக இல்லை. மீண்டும் பின்தொடர்ந்து, இந்த நூலுக்கு ஓர் அணிந்துரை வரையுமாறு பணித்தார்.

இலண்டனில் வாழும் நூலகர் என். செல்வராசா ஐயா அவர்களின் "ஈழத்தின் தமிழ் நாவலியல் – ஓர் ஆய்வுக் கையேடு" நூலுக்கு 2020 ஆம் ஆண்டில் "ஈழத்துத் தமிழ்ப் புதினங்களின் ஆவணக் களஞ்சியம்" என்ற பெயரில் 21 பக்கத்தில் ஒரு புனைந்துரை எழுதிய பட்டறிவு எனக்கு இருந்ததால், ஈழத்துப் புதினங்களின் போக்குகள், புலம்பெயர் எழுத்தாளர்களின் படைப்புகள், உள்ளடக்கங்கள், உத்திகள் குறித்த அறிமுகம் எனக்கு முன்னமே கிடைத்திருந்தது. அதனால் கௌசி அவர்களின் குருவிக்கூடு குறித்த சில எண்ணங்களை இங்குப் பகிர்ந்துகொள்வது எளிதாக இருந்தது. இந்த அணிந்துரையின் வழியாகத் தமிழுக்கு ஈழத் தமிழ்ப் படைப்பாளிகளின் எழுத்துகளின் தேவையை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

கௌசி அவர்கள் குருவிக்கூடு புதினத்தில் பல பாத்திரங்களைப் பொருத்தமாக அமைத்து, கதையைச் சிறப்பாக நகர்த்தியுள்ளார். பரமசிவம் பிள்ளை, பார்வதி ஆகியோரின் மகளான சிநேகா இந்த நாவலின் முதன்மைப் பாத்திரமாகும். சிநேகாவின் கணவனான அரவிந்தன் என்ற பாத்திரம் கதை நகர்வதற்குப் பெருந்துணையாக உள்ளது. வைரவள்ளிப் பாட்டி, சங்கிலிக் கந்தசாமி, பரமசிவம் பிள்ளை, துரை, கீரன், நிரோஷன் முதலியவர்களும் நினைவில் நிற்கும் பாத்திரங்களே!. செர்மனி நாட்டில் நடைபெறும் கதைப்போக்கில் நிருபா, பீப்பர், திருமதி பீப்பர், கீசலா, வன்னா, பௌன், பியற், எடித், சுருதி முதலிய பாத்திரங்கள் நெஞ்சில் நிலைபெறும் பாத்திரங்களாகும்.

மட்டக்களப்பின் ஏறாவூரில் பிறந்த சிநேகா, உள்ளூரில் கல்வி கற்பதும், பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதும் ஊரில் நடைபெறும் போராட்டங்களால் நீர்கொழும்புக்குச் செல்வதும், அங்கு ஆசிரியர் பணியாற்றிக்கொண்டிருந்தபொழுது, அரவிந்தனைத் திருமணம் செய்துகொள்வதும், அரவிந்தன் செர்மனி நாட்டுக்குச் சென்று, உணவகம் நடத்துவதும், பின்னர் சிநேகாவும் செர்மனி சென்று, கணவரின் உணவகப் பணிக்கு உறுதுணையாக இருப்பதுடன். வயது முதிர்ந்த செர்மனியர்களைக் கண்காணிக்கும் பயிற்சி பெற்று முதியோர் பராமரிப்பில் ஈடுபடுவதும், பரமசிவம் பிள்ளை செர்மனிக்கு வந்த பிறகு அவரின் மூளைக்குள் பதிந்திருக்கும் நினைவகத்தைக் கணினி வல்லுநர் – நரம்பியல் நிபுணரான நிருபாவின் துணையால் ஆராய்ந்து, அந்த மூளையில் உள்ள பழைய நினைவுகளைக் கணினி வழியாக அச்சிட்டு, நூல்வடிவப்படுத்தும் சிநேகாவின் முயற்சி வெற்றி பெறுவதுமாகக் கதை நீண்டு செல்கின்றது.

சிநேகாவின் வழியாக இலங்கையின் மட்டக்களப்புப் பகுதியில் இருக்கும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள், விருந்தோம்பல், பழக்க வழக்கங்கள், உணவு முறைகள், பத்திய முறைகள், மருத்துவமுறைகள், பழமொழிகள், அங்கு நடைபெற்ற விடுதலைப் போராட்டம், தமிழ் முசுலீம்களின் கலவரங்கள், இடப்பெயர்வுகள், காவல்துறை – இராணுவ அத்துமீறல்கள் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நிலவும் குழூஉக் குறிகள், பகடி வதைகள் யாவும் சிறப்பாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதுபோல் இலங்கைத் தமிழர்கள் செர்மனி உள்ளிட்ட அயல் நாடுகளுக்கு அகதிகளாகச் சென்று தங்களை நிலைநிறுத்திக்கொள்வதற்குச் செய்யும்

முயற்சிகள், தந்திரங்கள், தொழில்கள், வேலைவாய்ப்புகள் முதலியனவும் மிகச் சிறப்பாகக் கதைப்போக்கிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

பகவத் கீதைக் கருத்துகள், கலில் ஜிப்ரான் வரிகள், சேக்சுபியர் வரிகள், மூதுரை, திருமூலர் கருத்துகள், வேதாத்திரி மகரிஷியின் கருத்துகள், கம்பராமாயணப் பாடலடிகள், எஸ். ராமகிருஷ்ணன் உள்ளிட்டோரின் கருத்துகளையும், திரைப்படப் பாடல்வரிகளையும் பொருத்தமான இடங்களில் ஆண்டு, தம் பரந்துபட்ட வாசிப்பனுவத்தைக் கௌசி இந்த நூலில் பதிவு செய்துள்ளார்.

மகப்பேற்றுக் காலங்களில் இலங்கையின் மட்டக்களப்பு, மற்றும் ஏறாவூர்ப் பகுதிகளில் வாழும் பெண்களுக்கு அளிக்கப்பட்ட தென்னஞ் சாராயப் பாட்டிலில் அடைக்கப்பட்ட மருந்துகள் குறித்த விவரங்களை இந்த நாவலில் படித்தபொழுது, நம் சித்த மருத்துவமுறைகளை இன்றைய ஆங்கிலேய மருத்துவமுறைகள் விழுங்கி ஏப்பம்விட்டுள்ளதை அறிந்து, 'கைப்பொருள் இழந்த செல்வந்தனின் நிலைபோல்' நம் நிலை உள்ளதைப் பார்க்கின்றேன். எத்தனையோ நோய்களைப் போக்கும் வழிமுறைகளை அறிந்திருந்த நம் முன்னோர்களையும் அவர்களின் மருத்துவ முறைகளையும் போற்றத் தவறியதால் அனைத்துக்கும் ஆங்கில மருத்துவத்தை நாடி ஓட வேண்டிய நிலையில் உள்ளோம். நாம் வாழ்வில் உழைத்துத் திரட்டிய பொருள்களை மருத்துவத்துக்காக இழக்க வேண்டி உள்ளதையும் நினைத்துக் கவலைகொள்ள வேண்டியுள்ளது. கொரோனா முதலிய கொடிய நோய்களைப் போக்கும் பக்க விளைவுகள் இல்லாத "கபசுரக் குடிநீர்" உள்ளிட்ட சித்தர் மருந்துகள் நம்மிடம் இருந்தும் மருந்து வணிகப் பெருமுதலாளிகளால் தடுப்பூசி வணிகம் உலக அளவில் கொடிகட்டிப் பறந்ததையும் மக்கள் தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள, அம்மருந்துகளை உடலில் செலுத்திக் கொண்டு, பக்க விளைவுகளை இன்றுவரை சந்தித்து வருதையும் இங்குக் குறிபிடுதல் வேண்டும்.

பெண்களின் கருப்பை நீக்கம் குறித்த செய்தியும் இந்த நாவலில் முதன்மைச் செய்தியாக அமைந்துள்ளது. குறிப்பிட்ட வயதுக்குப் பின்னர் பெண்களுக்குப் பெருந்தொல்லையாக அமையும் கருப்பை நோயின் தீவிரத் தன்மை இந்த நாவிலில் பதிவாகியுள்ளது. வலியை முற்றாக இல்லாமல் செய்வதில் கருப்பை நீக்கம் பெருந்துணையாக இருப்பதைச் சிநேகா பாத்திரத்தின் வழியாக நாம் அறிய முடிகின்றது. உலக அளவில்

பல பெண்கள் கருப்பை நீக்கத்தை முன்வந்து செய்துகொள்கின்ற சமூக நிலையும் இந்த நாவலில் பதிவாகியுள்ளது.

பாத்திரங்களை அறிமுகப்படுத்துவதில் எழுத்தாளர் கௌசி சிறப்பாகச் செயல்படுபவர். சிநேகா தம் மகள் சுருதியை அறிமுகப்படுத்தும் வகையில் சுருதியின் பன்முக ஆற்றலும் வாசகர்களுக்குத் தெரியுமாறு அறிமுகப்படுத்தியுள்ளமையும், அதுபோல் நிருபாவின் அறிவாற்றலும் செயல்திறனும் நாம் அறியும் வகையில் சிறப்பாகவே அறிமுகப் படுத்தியுள்ளார். வைரவள்ளிப் பாட்டியின் திறமையும் குணாதிசயங்களும், பொழுதுபோக்குகளும் நாவலில் சிறப்பாகப் புனைந்து காட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்புப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தயிர் குறித்த விவரணைகளைக் கௌசி தம் புதினத்தில் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார். அதுபோல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் சந்திக்கும் பகடி வதை, இன வேறுபாடுகள், வளாகத்தின் வனப்பு யாவையும் இப்புதினத்தில் சிறப்பாகப் பதிவாகியுள்ளன.

சிங்கள மக்களின் உணவு முறைகளையும், பழக்கவழக்கங்களையும் இந்த நாவலில் கௌசி சிறப்பாகக் காட்டியுள்ளார். "சில்வா வீட்டு உணவு வருடக் கணக்கில் பேசிக்கொண்டிருக்க வைக்கும் சுவை அனுபவத்தைத் தந்தது. பலாக்காய் மிளகு போட்ட கறி, குத்தரிசி போல மொக்கை மொக்கையாய் பெரிய அரிசிச் சோறு, பெரிய துண்டு மீனை மிளகு போட்டு, ஒரு பிரட்டி எடுத்த வறுவல் கறி. நினைத்தாலே நாவில எச்சில் வடிகிறது. எங்களுக்கு அந்த உணவு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. அவர்களுடைய உணவை முதற் காதல் இன்பம் போல நினைத்துக்கொண்டே இருக்க மனம் ஏங்கும்" என்று கௌசி வரைந்துள்ள வரிகள் சிங்கள மக்களின் உணவுப் பழக்கச் சிறப்பினைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது. கௌசி தாம் பயின்ற காலத்தில் தமக்கு உதவிய ஆசிரியர்கள், நண்பர்கள், மாணவர்களையும் அவர்களின் பண்பு நலன்களையும் சிநேகா பாத்திரத்தின் வழியாகப் புனைந்துகாட்டியுள்ளார்.

இலங்கையின் பேராதனை, தும்பறைக் கல்வி வளாகங்களில் தலைவிரித்தாடும் மாணவர்களின் பகடி வதைப் பழக்கம் இந்த நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்களை அறிவாற்றல் மிக்கவர்களாக வளர்த்தெடுக்கும் கல்வி வளாகங்கள் அரம்பர்களின் வேட்டைக் காடுகளாக மாறியுள்ளதைத் தம் அனுபவங்கள் வழியாகச் சிநேகா

என்ற பாத்திரத்தில் ஏற்றி நூலாசிரியர் படைத்துள்ளார். பேருந்துப் பயணத்திலேயே பகடிவதையில் மாணவர்கள் ஈடுபடுவதைக் குறிப்பிட்டுச் சொல்கின்றார். இத்தகைய பகடி வதைகள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில்தான் கொடிகட்டிப் பறக்கின்றன. சிலவாண்டுகளாக்கு முன்னர் சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவர் நாவரசு பகடி வதையால் படுகொலை செய்யப்பட்டு, அம்மாணவரின் பெற்றோர்கள் இன்றும் கண்ணீருடன் தன் மகனை நினைத்து வருந்துவதை அறியமுடிகின்றது. இதுபோல் பேராதனை வளாகத்திலும் ஒரு பெண் பகடி வதை தாளாமல் விடுதியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டாள் என்ற விவரத்தைக் கௌசி பதிவு செய்துள்ளார். இத்தகு இழிநிலை மாற வேண்டும் என்பதில் கற்று அறிந்தவர்களுக்கு மாற்றுக்கருத்துகள் இருக்க வாய்ப்பில்லை.

சத்யா, ஆட்டுத்தாடி விக்கினேஷ், ரோஹன விஜேவீர, பாரூக், நிகிலா, ராஜா, ஜெயா, வித்யா, பேரம்பலத்தார், விபுலாந்தண்ணன், தியான், போன்ற பாத்திரங்களும், விஜேவர்த்தனா விடுதியும் பல்வேறு செய்திகளை இப்புதினத்தைப் படிப்பவர்களுக்குத் தருவன ஆகும். பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்து மாணவர்களிடம் ‘‘சிரிப்பை வெட்டியெறி’’, ‘‘சள் அடித்தல்’’, ’’கொன் அடித்தல்’’, ‘‘கஜே அடித்தல்’’ முதலிய குழூஉக்குறிகள் உலவுவதைக் கௌசி குறிப்பிட்டுள்ளார்.

ஜெர்மனியின் சோலிங்கன் நகரப் பகுதியில் நடைபெறும் கதையில் ஒட்டுமொத்த ஜெர்மனி மக்களின் உயர் பண்புகளும், பண்பட்ட வாழ்க்கை முறைகளும், அந்த நாட்டு அரசு மக்களுக்குச் செய்யும் பல்வேறு மருத்துவ வசதிகளையும் இப்புதினத்தைப் படிக்கும் தமிழ் வாசகர்கள் நன்கு அறிந்துகொள்ள இயலும். ஜெர்மனியர்கள் தமக்குப் பிறக்கும் பிள்ளைகளை அடுத்த நாளே வெளியே நடப்பதற்கும் சுத்தக் காற்றைச் சுவாசிப்பதற்கும் அனுமதிப்பதைக் குறிப்பிடுவதுடன், ஜெர்மனியில் பிறக்கும் பிள்ளைகளுக்கு 25 வயது வரை அவர்களின் செலவுக்குப் பணம்கொடுக்கிற நாடல்லவா? என்று நாவலாசிரியர் நாட்டுச் சிறப்பை வியக்கின்றார். எந்தக் கற்கை நெறியாக இருந்தாலும் ஜெர்மனியர்கள் புகைப்பதற்கு நேரம் ஒதுக்குவார்கள். அதுபோல் காபி அருந்துவதும் அவர்களின் பழக்கமாகும். வெள்ளைப் பூண்டு உடைக்கும்பொழுது மூக்கைப் பொத்திக்கொண்டு நிற்பார்கள் என்று கௌசி நமக்கு ஜெர்மனியர்களை அறிமுகம் செய்கின்றார். நோயுற்ற

முதிய ஜெர்மனியர்களைப் பராமரிக்கும் முறைகளையும் இந்த நாவலில் நாம் கவனிக்கமுடிகின்றது.

பண்டிகைக் காலங்களில் ஜெர்மனியர்கள் வீடுகளை அலங்கரிக்கும் முறையும் கூறப்பட்டுள்ளது. ஜெர்மனியர்களின் உணவுண்ணும் முறையையும் நாவலில் அறிமுகம் செய்துள்ளார். அவர்கள் உண்ணும் பாண்களின் வகை 300 என்று கௌசி குறிப்பிடுகின்றார். கணவன் மனைவியரிடம் காணப்படும் அந்நியோன்யம் நம்மை வியக்கவைக்கும் என்கின்றார். கிறிஸ்மஸ் ஜெர்மனியில் கோலாகலமாகக் கொண்டாடப்படும் என்பதை அறியத் தருகின்றார். மருத்துவக் காப்புறுதிகள் மேல்நாடுகளில் முதன்மை இடம் வகிப்பதை இந்த நாவல் குறிப்பிட்டு, சமூக உதவிப்பணத்தில் வாழ்பவர்களுக்கு முழுப்பணமும் இந்த நிறுவனங்களே வழங்கும் என்கின்றார். கோடை விடுமுறையைக் கழிக்க வெளிநாட்டுச் சுற்றுலாவுக்கு ஜெர்மனியர்கள் செல்வது வழக்கம் என்பதையும் பதிவுசெய்துள்ளார். தொடருந்து என அறியப்படும் உந்துவண்டிக்கு எம்மவர்கள் ''தொங்குமான்'' என்று பெயரிட்டுள்ளதை இந்நாவல் குறிப்பிடுகின்றது. துருக்கியர்களை நம் மக்கள் ''துன்னாலை'' என்று அழைப்பதைக் குறிப்பிடுகின்றார்.

ஜெர்மனிய அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழ்பவர்கள் குறிப்பிட்ட நேரங்களில் சத்தம் போடக்கூடாது எனவும் சத்தம் போட்டால் காவல்துறைக்குத் தகவல் பறக்கும் என்பதையும் அறியும்பொழுது இந்த நாவல் ஜெர்மனியக் கலாச்சாரத்தைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்யும் பணியையும் செய்துள்ளது. இதன் வழியாக ஜெர்மனியர்களின் பொது ஒழுங்கினை அறிந்துகொள்ள முடிகின்றது. ஜெர்மனியின் சாலைப் போக்குவரத்து சிறப்புகளையும், ''கார்னிவல் கொண்டாட்டம்'' குறித்த செய்திகளையும் படிக்கும்பொழுது இந்த நாவல் ஒரு பல்துறைக் களஞ்சியம் என்னும் பெருமைக்கு வழிகோலுகின்றது.

பரமசிவம் பிள்ளையை நிருபா வீட்டில் தங்க வைத்து, நிருபாவின் கணினி, மருத்துவத்துறை அறிவால் பரமசிவம் பிள்ளையின் நினைவகத்தைக் கணினிச் சில்லாகப் பதிவு செய்து அதனை நூல்வடிவப்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன. அதற்குப் பரமசிவம் பிள்ளை வழங்கும் ஒத்துழைப்பும் அவரின் கனிந்த மனமும் நம்மை கண்ணீர்விடச் செய்கின்றன.

வருங்காலத்தில் வர உள்ள தொழில்நுட்பத்தை இந்த நாவலில் சோதனை முயற்சியாக கௌசி நமக்குப் படைத்துக்காட்டியுள்ளார்.

இலங்கையின் ஏறாவூர்ப் பிரதேசம், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, ஜெர்மனியின் சோலிங்கன் என்ற ஊர்களில் கதை நகர்வதன் வழியாகத் தமிழ் மக்களின் பண்புகள், சிங்கள மக்களின் உணவு மற்றும் பண்பாட்டுக் கூறுகள், ஜெர்மனி நாட்டு மக்களின் அறிவார்ந்த வாழ்க்கை முறையை இந்த நாவல் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

இலங்கையில் நடைபெற்ற இனப்போராட்டம், தமிழ் – இசுலாமியர் கலவரத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள், இலங்கைத் தமிழர்கள் தங்கள் உயிரையும் உடைமையையும் காப்பாற்றிக்கொள்ள இந்தப் பூமிப் பந்து முழுவதும் அகதிகளாகச் சென்ற அவல நிலை, தங்கள் இழப்புகளையெல்லாம் சரிசெய்துகொண்டு, இன்று அனைத்துச் சமூக மக்களும், நாட்டினரும் போற்றும் வண்ணம் வாழும் பெருமைக்குரிய முன்னேற்றம், வளர்ச்சி யாவும் இந்த நாவலின் வழியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தம் அனுபவங்களைச் சிநேகா என்ற பாத்திரத்தின் வழியாக உண்மையும் புனைவுமாகக் கலந்து எழுதியுள்ள சந்திரகௌரி சிவபாலன் அவர்களின் எழுத்து நடை போற்றுதலுக்கு உரியது. சொல்ல வேண்டிய செய்திகளைப் போதுமான அளவில் புனைந்துகாட்டும் திறன் அனைவருக்கும் முன்மாதிரியாக அமைகின்றது. கண்டியின் இயற்கையழகை இரசித்து, தன் மாணவப் பருவத்து மனத்தில் பதியவைத்த கௌசி, பலவாண்டுகள் ஆனாலும் அதனை மீள நினைத்து எழுதியுள்ள ஆற்றல் அவர் இயற்கையை நேசிக்கும் ஆர்வலர் என்பதை நமக்குக் காட்டுகின்றது. நூலினைப் படிக்கத் தூண்டும் வகையில் பல உத்திகளைப் பயன்படுத்தி, கதையை எளிமையாக முன் நகர்த்திச் செல்லும் பாங்கு வாசகர்களின் வரவேற்பினைப் பெறும்.

தமிழ்த்தாய்க்கு ஓர் அழகிய அணிகலனைச் சூட்டியுள்ள தமிழ் கற்ற மாணவியான கௌசி அவர்களுக்கு என் வாழ்த்துகளும் பாராட்டுகளும். இன்னும் எழுதுங்கள். தங்களால் தமிழ் வளம்பெறட்டும்.

வாழ்த்துகளுடன்
**மு. இளங்கோவன்**
புதுச்சேரி, இந்தியா
14.04.2024

# வாழ்த்துரை



**பேராசிரியர் துரை. மனோகரன்**

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை.

இன்று கௌசி என்று எல்லோராலும் சுருக்கமாகவும், அன்போடும் அழைக்கப்படும் சந்திரகௌரி சிவபாலன், பல ஆண்டுகளுக்கு முன் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவியாகத் தமிழ்ச் சிறப்புக்கலை பயின்று பட்டம் பெற்றவர். படிக்கும்போதே மிகுந்த ஆர்வத்துடன் கற்று உயர்ந்தவர். எனது நன்மாணாக்கர்களுள் ஒருவராக என்றும் திகழ்பவர்.

காலப்போக்கில் ஜெர்மனியைத் தமது புகலிடமாகக் கொண்டு, பலராலும் புகழக்கூடிய ஒருவராகத் தம்மைச் சந்திரகௌரி. வளர்த்து வந்துள்ளார். இலங்கையைச் சார்ந்த பல இலக்கியவாதிகளுக்கு, அவர்கள் வாழும் புகலிடங்கள், அவர்களுக்குப் புகழ் சேர்த்த இடங்களாகவும் விளங்குவதைப் பார்க்கலாம். அவ்வகையில், சந்திரகௌரியைப் பொறுத்தவரையிலும், அவரது புகலிடமாக விளங்கும் ஜெர்மனி, அவருக்குப் புகழ் தந்த இடமாகவும் அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

சந்திரகௌரி, தமது எழுத்து, பேச்சு, செயல்திறன் ஆகியவற்றால் உலகம் முழுவதும் உள்ள தமிழ் இலக்கியவாதிகளால் நன்கு அறியப்பட்டவராக உள்ளார். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம் முதலியவற்றால், உலகளாவியரீதியில் தமக்கென ஒரு பரந்த வாசகர் வட்டத்தையும் உருவாக்கியுள்ளார். பேராதனைப்

பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக்கலை பயின்றுள்ளமையால், இயல்பாகவே பழந்தமிழ் இலக்கியத்திலும், நவீன இலக்கியத்திலும் பரிச்சயம் உள்ளவராக விளங்குகிறார். அவர் பல்கலைக்கழகத்தில் பெற்ற கல்வியும், அவரது ஆசிரிய அனுபவமும், இயல்பான அவரது வாசிப்பு, எழுத்து ஈடுபாடுகளும் சந்திரகௌரியை இன்று உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன.

சந்திரகௌரியினது சிறந்த ஆளுமையின் இன்னொரு பக்கம், அவர் ஜெர்மனியில் இருந்து உலகளாவியரீதியில் மாதம்தோறும் நடத்திவருகின்ற தமிழ் வான் அவை நிகழ்ச்சியாகும். மிகவும் சிறந்த நிகழ்ச்சியாக இது நிகழ்ந்துவருகின்றது. இந்நிகழ்ச்சியின் வாயிலாகச் சிறந்த ஆளுமைகளை வெளியுலகத்துக்கு அவர் அறிமுகப்படுத்திவருகின்றமை பாராட்டுக்கு உரியதாகும். 2023இல் இதன் 40ஆவது நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நான் சிறப்புரை ஆற்றியமை, எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இயல்பாகவே நாவல் இலக்கியத்துறையிலும் ஈடுபாடு கொண்ட சந்திரகௌரி, தற்போது தமது புதிய ஒரு நாவலையும் தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு ஆக்கியளிக்கிறார். இந்த நாவலில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம், தாம் மாணவியாகக் கல்விகற்ற இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகப் பின்னணியிலும் கதையை நகர்த்தியிருப்பதாகும். நாவல் சிறப்பாகவும், சுவாரசியமாகவும் அமைந்திருப்பதால், நிச்சயம் வாசகர் வரவேற்பைப் பெறும் என்று நம்பலாம். அவர் ஆக்கியளித்துள்ள படைப்புகள் வரிசையில் இந்த நாவலும் ஒரு தனி இடம் பெறும் என்பது எனது நம்பிக்கை. உலகம் அறிந்த, உலகம் போற்றும் எனது மாணவி சந்திரகௌரியை மனமார வாழ்த்துவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவரது படைப்புகள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்பதே எனது பேரவா ஆகும்.

வாழ்த்துகளுடன்

**பேராசிரியர் துரை. மனோகரன்**

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை

14.04.2024



# என் மன ஓசை

*"மூளைப் புதையலை முனைப்போடு தோண்டினால்*
*முடிவில்லாச் சுரங்கங்கள் தெளிவோடு கொட்டும்"*

விரல்களுக்கும் சொற்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் மூளையின் கட்டுப்பாடு தோற்றுப்போக இதயத்தின் கட்டுப்பாடு வெற்றி கண்டது.

இத்தனை காலமும் எழுதத் தயங்கிய வரிகளை இன்று இந்த நாவலினூடாக இறக்கி வைக்கின்றேன்.

ஒவ்வொரு உயிர்களும் வெவ்வேறு அனுபவங்களையும் ஆதாரங்களையும் தாங்கியே வாழ்ந்து முடிக்கின்றன. அவரவர்க்கு அவரவர் நியாயங்கள் பெரிதாகப்படலாம். ஆண்டு ரீதியாக ஆவணப் பொக்கிஷங்கள் விரிக்கப்படுகின்ற போது அவரவர் காலக் கணிப்பீடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படலாம். உலகத்திலேயே அதிகம் பொய் நிறைந்த பகுதி சரித்திரம் தான். ஏனென்றால், அவரவர் தமக்குச் சௌகரியப்படி கண்டதையும் எழுதி வைப்பார்கள் எனச் சுகி சிவம் ஓர் இடத்தில் குறிப்பிடுகின்றார்.

சொல்ல வருகின்ற விடயத்தில் சரியானதைத் தெரிந்தெடுத்துச் சொல்ல வேண்டும். தவறானதைச் சொல்வதற்கு வாய்ப்பிருக்கின்றது

என பாரதி கூறுகின்றார். ஏனென்றால், தவறான சரித்திரமே உண்மை என்று நம்பிக்கொண்டிருக்கும் எவ்விதமான ஆய்வுகளும் மேற்கொள்ளாத மனிதர்களும் உலகத்தில் இருக்கின்றனர்.

இன்னும் ஒரு விடயம் வரலாற்றை அறிந்தவர்களாலேயே வரலாற்றைப் படைக்க முடியும் என்று அம்பேத்கர் சொல்லுகின்றார். இன்னும் ஒரு சொல்லைச் சேர்த்து அனுபவித்தவர்களாலேயும் வரலாற்றைப் படைக்கமுடியும் என்று நான் சொல்கின்றேன்.

எனவே வரலாற்று உண்மைகளை நான் அனுபவித்தது, என் கூடவே பயணித்தவற்றை மட்டுமே இங்குப் பதிவு செய்திருக்கின்றேன். ஒரு குருவி தனது கூட்டை விட்டுப் பறந்துபோய்த் தூரத்தில் நின்று தன்னுடைய கூட்டைத் திரும்பிப் பார்ப்பதைப் போல இந்த நாவலிலே சிநேகா என்னும் பாத்திரத்தைப் படைத்திருக்கிறேன்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும், 4 வருடங்கள் மத்திய மாகாணத்திலும், 4 வருடங்கள் மேல் மாகாணத்திலும், வாழ்ந்த எனக்கு அப்பிரதேச அனுபவங்கள் மட்டுமே இருக்கின்றன. இலங்கையின் வட பகுதி மக்களின் துயர் நிறைந்த சம்பவங்களை வாசிப்பின் மூலமே என்னால் அறியப்பட்டது. அதனால், அதுபற்றி இந்நூலில் எதுவும் என்னால் எடுத்துரைக்க முடியவில்லை. எதனையும் மூன்றாவது மனிதனாக நின்று பார்ப்பது என் வழக்கம். அதனை இந்த நூலை வாசிக்கும் போது நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

உண்மைக்குப் புறம்பான எதனையும் ஓர் எழுத்தாளன் பதிவு செய்ய முடியாது. இது உலகத்துக்கு நாம் செய்கின்ற பாவமாகப்படும்.

‘‘இவற்றைப் பதிவுக்குக் கொண்டு வா. இப்படியான சரித்திரங்கள் நடந்து முடிந்த சமுதாயம் தான் இது, இப்படியான மனிதர்கள் வாழ்ந்து முடிந்த காலத் தொடர்ச்சிதான் இது என்பதை வெளிப்படையாகச் சொல். ஆவணப்படுத்து’’ என்று என்னுடைய தந்தை என்னிடம் அறிவிப்பது போல மனம் உறுத்திக் கொண்டே இருந்தது.

உண்மையில் நான் ஒரு கருவி என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனக்குள் இருந்து இயக்கும் பிரபஞ்சத்தின் கட்டளை என்பதை உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த நூலை ஒரு தவமாகக் கொண்டு வந்திருக்கின்றேன்.

இந்த வாழ்க்கையின் வழிநடத்தலில் செல்லும் எங்களுடைய பாதையிலே யாருக்கும் யாரும் தீர்ப்புச் சொல்ல முடியாது. வெறுமனே கருத்து மட்டும் சொல்லமுடியும். எதற்கும் நதிமூலம் ரிஷிமூலம் பார்க்கக் கூடாது என்று சொல்வார்கள்.

மின்சாரம் இல்லாமல் கணினி தொழிற்படாது. உயிர் இல்லாது மூளை வேலை செய்யாது. அதனால், உயிர் இருக்கும் போதே மூளை யிலே வைத்திருப்பவற்றைக் கொட்டிவிட வேண்டும் என்று எண்ணுகிறேன். இது எனக்கான உந்துதல் மட்டுமல்ல அனைவருக்குமான வார்த்தைகள்.

ஒரு மனிதனின் இளமைக்காலம் ஓர் எழுத்தாளனை உருவாக்குகின்றது. அவனுடைய ஏக்கங்கள், வாசித்த எழுத்துக்கள், சொல்லத் துடிக்கும் அனுபவங்கள், மறைக்கப்பட்ட அனுபவப் பாடங்கள் அவனுடைய கைகளைக் கணினித் திரைக்கு இழுத்து வருகின்றன. அவ்வாறு என்னை இழுத்து வந்த பாத்திரமே சிநேகா.

இந்தக் குருவிக்கூடு முற்று முழுதான உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு மட்டுமல்ல. தேவை கருதி கற்பனையைக் கலந்திருக்கின்றேன். அதனை நீங்கள் வாசிக்கும் போது உணர்ந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

இந்த நூலிலே அறிவியல் இருக்கின்றது, ஆன்மீகம் இருக்கின்றது, இலக்கியம் இருக்கின்றது, அனுபவப் பாடங்கள் இருக்கின்றன. நிச்சயமாக உங்களுடைய சுவாரஸ்யம் குறையாமல் இந்நூலை நகர்த்தியிருக்கின்றேன் என்று நம்புகின்றேன். அதனை நிரூபிப்பவர்கள் வாசகர்களே.

*"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது"*

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க இந்நூல் வாசகர் கைகளில் தவழ்வதற்கு முற்று முழுதான காரணக்காரத்தாவாகிய எனது தந்தைக்கும், புதுச்சேரி முனைவர் மு. இளங்கோவன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய எனது ஆசான் பேராசிரியர் துரை. மனோகரன் அவர்களுக்கும், பல்கலைக்கழக நண்பன் சிவலிங்கத்துக்கும், இந்த நூல் வெளிவர உதவி புரிந்த நண்பி சாரதா இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், முனைவர் பூங்குழலி பெருமாள் அவர்களுக்கும், கவிஞர். உமா பாரதி அவர்களுக்கும், அச்சில் கொண்டு வந்த வசந்தா பதிப்பகத்தினருக்கும்,

பல தகவல்களை வழங்கிய பூசகர் வாமதேவன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

“கூடை நிறையக் கனிகள் குவிந்து கிடக்கின்றன
சுவைத்துப் பார்த்து இனிப்போ கசப்போ
சொட்டும் சொற்களால் கொஞ்சம் சிந்திவிடுங்கள்
கசப்பும் மருந்தாகும் இனிப்பும் நோயாகும்
அளவோடு அள்ளிக் கொள்ளுகின்றேன்”

உங்கள் அகன்ற, ஆழப் பார்வைக்கும் விரிந்த மனத்துக்கும் நன்றி சொல்பவள்.

*உங்கள்*
**கௌசி**


**சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)**

Felder str -56
42651 Solingen
Germany
*மின்னஞ்சல்:* c.gowry@yahoo.de
*தொலைப்பேசி: 04915209419269*
kowsy2010.blogspot.com
YouTube: Ilakkiya Maalai

# அத்தியாயம் 1

# அசுர வேகத்தில் ஆன்மாக்களின் பயணம்

அருகே யாரோ அழைப்பதுபோல் சிநேகா உணர்ந்தாள். அவள் சாயலிலே யாரோ அவளைத் தட்டி "மகள்... ... மகள்" என்று அழைப்பது போன்ற பிரேமை. துடித்து எழுகின்றாள். உடலெல்லாம் நடுங்குவது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகின்றது.

சுற்று முற்றும் பார்க்கின்றாள். யாரும் கண்ணில் படவில்லை. காலைச்சூரியன் கண் விழித்திருக்கின்றான். மாரிக்குளிரில் ஜெர்மனி சோலிங்கன் நடுங்கிக் கொண்டிருக்கின்றது.

சோலிங்கன் கத்தி என்றால், சொல்லி வெட்டும் என்று அறியாதாரில்லை. பொதுவாகவே இரும்பு என்றால், அது ஜெர்மனியே என்பதை வரலாறு தெரிந்தவர்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அதுவும் கத்தி என்றால் உலகப்பரப்பில் சோலிங்கனே.

கத்தி வெட்ட வேண்டியவற்றைத் தான் வெட்டும். காற்றை வெட்டுமா? வீசியடிக்கும் பனிக்காற்று சாளரக் கண்ணாடியைப் பனிமூட்டத்தினால் மூடிவிட்டிருந்தது. பனியின் படிவு பற்றிப் பிடித்துக் கொண்டதனால் வெளியுலகைப் பார்க்க முடியாது இருந்தது. இனி வெப்பமூட்டியைப் போட்டுத்தான் கண்ணாடிக்கு வெப்பமூட்ட வேண்டும்.

சூரியனின் வெப்பக் கதிரும் இந்தக் குளிருக்கு அடிபணிந்துதான் போயிருக்கிறது.

"நான் கேட்டேன் நிச்சயமாகக் கேட்டேன். இக்குரல் என்னுள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. அந்த மூச்சுக் காற்றை மறப்பேனா? என் அருகே கட்டி அணைத்துப் படுத்த அந்த ஸ்பரிசத்தை மறப்பேனா?

மெல்லிய ஆடைபோல் என் அரைக்கண்ணுக்குத் தெரிகிறது. ஒரு உருவம் என் அருகே ஊசலாடுகிறது. மங்கலாக உணருகின்றேன். ஆனால், தெரியவில்லை. குரல் மட்டும் கேட்கிறது.

என்ன படுத்திருக்கிறாய் என்னும் தொனியில்தான் ‘‘மகள், மகள் எழுந்திரு’’ என்று அந்தக் குரல் ஒலித்தது. துடித்து எழுகின்றாள்.

அவள் கால்கள் தடுமாறுகின்றன. இருக்கையில் அமர்ந்து விடுகின்றாள். அரைத்தூக்கத்தில் மூளை தன் சுயதொழிலை நிலைக்குக் கொண்டுவரத் தயாராகவில்லை என்று நினைக்கின்றாள். அம்மா அம்மாதான் அழைத்தார். அப்படி என்றால், இறந்து, உருவம் எரிந்து, எரித்த சாம்பல் கூட கரைந்து எல்லாவற்றையும் நாம் தொலைத்த போதும் அந்தக் குரல் மட்டும் எமக்குள் கேட்கிறது என்றால், அது ஒலி அலைகள் தான். இன்னும் அந்தக் குரல் அலைகளை என்னுடைய மூளை தாங்கிக் கொண்டு இருக்க வேண்டும் அல்லது எனது மூளையில் குரல்களைப் பதிவு செய்து இருக்கும் பகுதி இக்குரலை அழித்துவிடாது பொக்கிசப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்று பலவாறாகச் சிந்திக்கின்றாள்.

சிநேகாவின் தாயின் கருவறைக்குள் சதைக்கட்டிகள் இருப்பதை அவதானித்த மட்டக்களப்பு மருத்துவர். உடனடியாக அதை அகற்ற வேண்டும். அது வேறு நோயைக் கொண்டு வந்து விடும் என்று சொல்லி அக்கட்டியை அகற்றினார். அதேபோல், சிநேகாவுக்கும் மாதவிடாய் நேரத்தில் உதிரப் போக்கு அதிகமாக இருப்பதனால், மருத்துவரின் ஆலோசனை

‘‘இது பெரிய பிரச்சினை இல்லை. இப்படியே விட்டால் ஒவ்வொரு மாதமும் இந்த வலியை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு மேலும் ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்கும் ஆசை இருந்தால், அப்படியே விடுங்கள். இல்லையென்றால், உங்களுடைய கருப்பையை மட்டும் அகற்றிவிட்டால் நல்லது’’ என்றார்.

ஒவ்வொரு மாதமும் மாதவிடாய்க் காலங்களில் ஏற்படுகின்ற வேதனையைத் தாங்கும் சக்தி சிநேகாவுக்கு இல்லை. அதனால், இன்னும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தால், முதற் குழந்தைக்குப் பட்ட கஷ்டத்தையே மீண்டும் அனுபவிக்க வேண்டும்.

நாடு விட்டு நாடு தாண்டி விட்டோம். யார் இங்கே உதவப் போகின்றார்கள். 40 நாட்கள் பத்தியம் காத்து, பக்கத்திலேயே இருந்து

தாயையும் குழந்தையையும் கவனிக்க இலங்கை மண்ணைப் போல இங்கு யார் இருக்கின்றார்கள். உடல் தாங்குமோ தவிக்குமோ தனியாய் கடமைகளை முடிக்கவே வேண்டும். துணைக்குக் கைகோர்க்க யார் வருவார்.

முதல் பிள்ளை பிறந்தபோது நோகாமல் வளர்ந்த சிநேகாவிற்கு சத்திர சிகிச்சையால் ஏற்பட்ட வலியைத் தாங்கும் சக்தி இருக்கவில்லை. அச்சமயம் அவளுக்குத் துணையாக யாரும் இருந்ததில்லை. ஜெர்மனிய நண்பி எடித் அடிக்கடி வந்து மகள் சுருதியைத் தூக்கி வைத்திருப்பாள். வெளிக் காற்றைச் சுவாசிப்பதற்காகப் பூங்கா அல்லது காட்டுப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்வாள்.

அவளுக்கென்ன பத்தியக் கறி சமைக்கத் தெரியுமா? சிநேகா குளிப்பதற்காகப் போகின்ற போது சுருதியைத் தூக்கி வைத்திருக்க ஒரு தமிழ் அக்கா வருவார். அவர் கணவர் சிநேகா கர்ப்பவதியாக இருக்கும் போது மரத்திலிருந்து ஆப்பிள் பழங்கள் பறித்து வந்து உண்ணக் கொடுப்பார். அவரை சிநேகாவின் மகள் ஆப்பிள் மாமா என்று தான் அழைப்பாள்.

அந்த ஆப்பிள் மாமாவினுடைய மனைவி காயத்ரி அக்காதான் அடிக்கடி சிநேகா வேலை ஏதாவது செய்வதானால், குழந்தையைத் தூக்கி வைத்திருப்பார்.

இதுவே ஒரு குழந்தை பிறந்துவிட்டால் இலங்கையிலே பிள்ளை பிறப்பதற்கு 1 மாதத்திற்கு முன் கருவேலம் பட்டை, சித்தரத்தை, வேர்க்கொம்பு, பறங்கிக்கிழங்கு, மஞ்சள், ஓமம், வெட்டிவேர், நாயுருவி வேர், அசமதாகம், மிளகு, திப்பிலி போன்ற பல வேதிப் பொருட்களை மாதவிடாய் வந்த பிள்ளையிடம் கொடுத்து சின்னச்சின்னத் துண்டாக வெட்டிக் கழுவி அதனைத் தென்னஞ்சாராயப் போத்தலுக்குள் நல்ல நேரம் பார்த்துப் போட்டு மூடிவிடுவார்கள்.

அந்தப் போத்தலை நீர் ஊறுகின்ற வாய்க்கால் பகுதிக்கு அண்மையில் நிலத்துக்குக் கீழே புதைத்து வைப்பார்கள். குழந்தை பிறந்தபின் ஊற வைத்த போத்தலை எடுக்கும் போது அது நன்றாக ஊறி இருக்கும்.

குழந்தை பிறந்து 3 ஆவது நாளில் குழந்தை பெற்ற பெண்களை நன்றாகச் சுடுநீரில் குளிக்க வார்ப்பார்கள். மதியச் சாப்பாட்டின் பின்

இந்த ஊற வைத்த பொருட்களை வடித்தெடுத்து அப்பொருள்களை இவையெல்லாம் ஊறிய தென்னஞ்சாராயத்தில் இருந்து ஒரு தேக்கரண்டி எடுத்துக் குடிக்கக் கொடுப்பார்கள்.

அதன் பின் இந்த ஊறிய வேதிப் பொருட்களை நன்றாகக் காய வைத்து இடித்து மாவாக்கி குழந்தை பெற்ற தாய்மாருக்கு மாதவிடாய் ஏற்படுகின்ற காலத்தில் தேனில் கலந்து 3 உருண்டைகள் உருட்டிக் கொடுப்பார்கள்.

பெண்களைக் குளிக்க வார்ப்பதை வேது வார்ப்பது என்பார்கள். அதற்கு வேப்பம் பட்டை, வேப்ப இலை, ஆமணக்கு, ஆடாதோடை போன்றவற்றை அவித்த நல்ல சூடான நீரை இடுப்புப் பகுதிக்கெல்லாம் ஊற்றிக் குளிக்க வார்ப்பார்கள்.

இதைவிட வேர்க்கொம்பு, பரங்கிக்காய், கருவேலம் பட்டை, அசமதாகம், மஞ்சள், வெள்ளைப் பூண்டு, மிளகு, திப்பிலி போன்ற பொருட்கள் மாத்திரமே ஊற வைத்து மண்ணுக்குள் புதைக்காமல் கொடுக்கின்ற வழக்கம் ஏறாவூரில் இருக்கின்றது.

இவ்வாறெல்லாம் கொடுப்பது மட்டுமல்ல. பத்தியக்கறி என்று சரக்குச் சாமான்களாலேயே தூள் செய்து அந்தத் தூளிலேயே சமைப்பார்கள். ஒரு மாதத்துக்குக் குஞ்சுக் கோழி, மீன், முருங்கைக்காய் என்று பார்த்துப் பார்த்துச் சமைத்து உண்ணக் கொடுப்பார்கள்.

பச்ச உடம்பு பச்ச உடம்பு என்று பார்த்துப் பார்த்துச் செய்யும் பராமரிப்பு எல்லாம் செய்வதற்கும் ஊரிலிருந்து அம்மாவை அழைப்பதற்கும் சிநேகாவுக்கு அம்மா இருக்கின்றாரா? இல்லை இவையெல்லாம் செய்வதற்கு ஜெர்மனியில் யார் இருக்கின்றார்கள்? தற்போது தமிழர்கள் மூன்றாவது தலைமுறை கண்டு விட்டார்கள். அதனால் பிள்ளை தாங்கும் பெண்களைப் பராமரிக்கப் பெண்ணின் தாய், உறவினர்கள் இருக்கின்றார்கள். புலம்பெயர்ந்த முதல் சந்ததியினரின் தவிப்பில் வெறுமை என்பதும் ஒன்று.

ஜெர்மனியர்கள் தமக்குப் பிள்ளை பிறந்து அடுத்த நாளே வெளியே நடப்பதற்கும் சுத்த காற்றைச் சுவாசிப்பதற்கும் பிள்ளையைக் கொண்டு சென்று விடுவார்கள். நல்ல ஒயின்களும் இறைச்சியும் உண்டு திடமான உடல்வாகுடன் இருக்கும் அவர்களுக்கு, இந்தப் பிள்ளைப் பேறு என்பது சிறிய விடயம். நாமென்ன அப்படியா?

31 ஆவது நாளில் மருங்கை என்று மட்டக்களப்பில் நடத்தும் துடக்குக் கழிவு, 40 நாட்களின் பின் துடக்கு மயிர் நீக்கல் என்று கோயிலுக்குப் போய்ப் பிள்ளையின் தலைமயிரை நீக்கிப் பூசை செய்வது என்று சாத்திரச் சம்பிரதாயங்களுடன் அடைபட்டுக் கிடக்க வேண்டியவர்கள் அல்லவா? காலத்துக்கும் காலநிலைக்கும் ஏற்ப ஏற்படுத்தப்பட்ட கலாசாரத்துக்குச் சுட்டுப் போட்டாலும் மாறமாட்டோம் என்று அடம்பிடிப்பவர்களாயிற்றே நாங்கள்.

உண்மையிலேயே இந்த இந்து மதம் ஐரோப்பிய நாட்டிலே ஆரம்பித்து இருந்தால் நிச்சயமாக இந்துக்கள் சப்பாத்து, சொக்ஸ் அணிந்துதான் கோயிலுக்குப் போயிருப்பார்கள் என்று சிநேகா சொல்லி ஒருவரிடம் வாங்கிக் கட்டியவள். வசை பாடியவர் கால்களைக் கழுவிவிட்டுக் கோயிலுக்குள் போவது கிடையாது. தான் போட்டிருக்கும் காலுறையுடன் தாராளமாக நடந்து செல்வார். கால் கழுவும் கலாச்சாரம் எங்கே போனது? என்று ஒருமுறை சிநேகா கேட்ட போது முறைத்துப் பார்த்துவிட்டுப் போனார்.

இந்தச் சாத்திரச் சம்பிரதாயச் சடங்குகளைவிட சிநேகா உடல் பெருத்துவிடும் என்று அளந்து பார்த்துச் சாப்பிட்டவள் அல்லவா. அதனால் அவளுடைய உடலானது அவளுடைய வலிக்கு இடம் கொடுக்க முடியாதென அடம்பிடித்தது.

இனிமேல் குழந்தை வேண்டாம். நமக்கு ஒரு குழந்தை போதும் என்று அரவிந்தனும் சிநேகாவும் முடிவெடுத்திருந்தார்கள். அதனால், கருப்பையை அகற்றி விடுவதே சிறப்பு என்றும் முடிவெடுத்தார்கள்.

கருப்பை என்பது பிள்ளை சுமக்கும் இயந்திரம் மட்டுமே. பிள்ளையே வேண்டாம் என்னும்போது அந்த உறுப்பு எதற்கு? என்று அகற்றிவிட முடிவெடுத்தார்கள்.

ஆனால், மருத்துவர் குறித்த திகதிக்கு மருத்துவமனை சென்ற போது உங்களுடைய மாதவிடாய் முடிந்து ஒரு வாரமே ஆகியிருக்கின்றது. குழந்தை தங்குவதற்குரிய வாய்ப்பு உள்ளது. இந்தத் திகதியில் கருப்பையை அகற்ற முடியாது என்று மருத்துவமனையில் கூறினார்கள். அதுதான் நாங்கள் உறுதியாக இருக்கின்றோமே என்று கூறிய போது அப்படிச் சத்திரசிகிச்சை நாங்கள் செய்தால் கத்தோலிக்கத் தேவாலயம் தமக்கு வழக்குப் போடுவார்கள் என்று உறுதியாக மறுத்துவிட்டார்கள்.

காத்திருந்த கல்யாணம் தடைப்பட்டது போல உள்ளத்துக் குதூகலம் மறைந்தது.

ஜெர்மனி பிறக்கின்ற குழந்தைகளுக்கு 25 வயதுவரை பணம் கொடுக்கின்ற நாடல்லவா. பிள்ளைகள் தேகச் சுகத்துடன் வளர வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவர்கள். பிள்ளை பிறக்கும் சந்தர்ப்பம் உள்ளவர்களின் கருப்பையை அகற்ற முன்வருவார்களா!

வேறு ஒரு திகதியில் வெற்றிகரமாகக் கருப்பை எடுத்து வீசப்பட்டது. அன்றிலிருந்து சிநேகாவுக்கு ஆனந்தம், ஆனந்தமே. வலியில்லை, தடையில்லை, மாதாந்திர தடுப்பில்லை. மருந்து மாத்திரை இல்லை. அன்றிலிருந்து சிநேகாவின் முயற்சிகளின் துரிதம் மேலோங்கியே சென்றது.

தாயைப்போலப் பிள்ளை குணத்தில் மட்டுமல்ல. நோயிலும் தான். தாயும் கருப்பையைக் கடைசிக் காலம் வரை சுமக்காதவரே ஆவார். வயிற்றினுள் ஓர் இடம் காலியாகவே இருந்தது. ஆனாலும் உடலிலே எவ்வித மாற்றத்தையும் காட்டவில்லை. கருப்பையை அகற்றுவது உடலைப் பாதிக்கும் என்று வயதானவர்களும் பிறரும் கூறுவார்கள். சிநேகா விடயத்தில் இது தப்பான தகவல். வலியோடு வாழ்வதைவிட உடனடித் தீர்வுதான் முக்கியமானது. நடப்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

அந்தச் சத்திரசிகிச்சையின் போது கூட ஒருநாள் சிநேகாவின் படுக்கையின் கால் பகுதியில் மெல்லிய கண்ணாடி போன்ற திரைச்சீலை ஒன்று அசைந்தமையையும் அவளை பேபி என்று அம்மா அழைத்த குரலையும் அவள் உணர்ந்தாள்.

அதுகூட ஹல்லுசினேசன் (Halluzinaion) ஆக இருக்கலாம் என்றுதான் நினைத்தாள். உடல் பலவீனமாக இருக்கும் போது மூளையில் இவ்வாறான தோற்றங்கள் இருக்கும். அத்துடன் சிறுநீரகக் கோளாற்றினாலும் இவ்வாறு தோன்றும் என்றுதான் நினைத்தாள்.

சிநேகாவின் சிநேகிதி ஒருநாள் தனக்கு முன்னே ஒரு கறுத்த பருத்த உருவம் ஒன்று இருந்து எழும்பிப் போகின்றது என்று கூறியது சிநேகாவுக்கு ஞாபகம் இருக்கிறது. அதுகூட ஹல்லுசினேசனே. ஆனால், இன்று எதுவுமே நடக்கவில்லையே. சாதாரணமாகத்தானே உறங்கிக்

கொண்டிருந்தாள். எப்படி நிஜமாய் கனவில் சிநேகாவின் அம்மா வந்தாள். அவளுக்கான ஒரு தூண்டல் கொடுக்கப்படுகின்றது என்பதே உண்மை.

மூளையில் பளிச்சிட்டது ஒரு சிந்தனை. என்னோடு வாழும் எனக்குள்ளும் பல முற்போக்குச் சிந்தனைகளை, சமூகச் சிந்தனைகளை விதைத்தும் இருக்கின்ற என் தந்தை நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருக்கின்றார். இச்செய்தி மனத்துக்குள் பெரும் போராட்டத்தைச் செய்கிறது.

நோய் கண்ட இடமோ நுரையீரல். ஆனால்... மூளை நன்றாகத்தானே இருக்கிறது. சிந்தனைக்குள் ஒரு வித்து முளைக்கத் தொடங்குகிறது.

கைகளும் கால்களும் வழமைபோல் அவளுக்குத் தொழிற்படத் தொடங்குகின்றன. வெளிநாட்டில் உழைக்கும் பணம் எதற்கெல்லாமோ பயன்படுகின்றது. என்னுடைய தந்தையின் சிந்தனைகள் தொலைந்து போகாமல் பாதுகாக்கலாம் அல்லவா. வரலாறு காணாத புதுமையைச் செய்ய அவள் இதயம் படபடத்து வெளிப்படுத்தியது. தன் தந்தை

*"இருந்தாலும் மறைந்தாலும்*
*பேர் சொல்ல வேண்டும்*
*இவர் போல யார் என்று*
*ஊர் சொல்ல வேண்டும்"*

என்ற பாடல் வரிகளுக்கு ஒப்பாக வாழ்ந்தவர் அல்லவா!

இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு வரலாறு இருக்கின்றது. ஒரு மனிதன் இறந்தால் ஒரு சில நிமிடங்கள் மூளை உயிர்வாழும் என்பதை நன்றாகவே அறிந்து வைத்துள்ள அவள், தனது தந்தையின் மூளைப் பதிவுகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை நினைத்துப் பார்க்கவில்லையே! பதற்றத்துடன் துடியாய்த் துடிக்கின்றாள்.

இயற்கை அறிவிலிருந்து செயற்கை அறிவை பெற்றுக் கொள்ளச் சிநேகா ஆசைப்பட்டாள். எப்படியும் நிருபாவை சந்தித்துவிட வேண்டும். அவள் கணினியைக் கரைத்துக் குடித்தவள் அல்லவா! ஆராய்ச்சித் துறையைத் தன் உயிருக்கும் மேலாக மேற்கொள்பவள் அல்லவா! நரம்பியல் நிபுணராகத் தொழிற்படும் நிருபா தன்னுடைய வீட்டையே பரிசோதனைக் கூடமாக மாற்றியிருக்கின்றாள். திருமணம் என்று ஒன்று இருக்கின்றது என்பது அவளுக்குத் தெரியாது. அவளுடைய காதலனும் கணவனும் அந்த ஆய்வுக்கூடமே.

மனிதர்கள் பிறக்கின்றார்கள் வாழுகின்றார்கள், இறக்கின்றார்கள். சிலரே தாம் வாழ்ந்ததற்கான அடையாளத்தை இந்த உலகத்தில் பதித்து விட்டுப் போகின்றார்கள். இயல்பாகவே இவ்வாறான விடயங்களை நன்றாகச் சீனி போட்டுத் திகட்டாத ஒரு பலகாரம் உண்பது போன்று சுவைக்கும் சிநேகா எப்போதும் தேநீரில் ஈ போல் நிருபாவை மொய்த்துக் கொள்வாள்.

தொலைப்பேசி அலறலில் சிநேகா என்றால், நிருபாக்குத் தெரியும். தன்னை ஒரு புதிய உலகத்திற்குள் சிநேகா அழைத்துப் போகப் போகின்றாள் என்னும் விடயம். சுவாரஸ்யமாகத் தொலைநுட்பம், செயற்கை அறிவு, இயற்கையைக் கடந்த தேடல் என்று அவர்கள் உரையாடல் தொடரும். நிருபாவை மிஞ்சி சிநேகா சிந்திப்பதும் சிநேகாவை மிஞ்சி நிருபா உழைப்பதும் அவர்கள் நட்பின் ஆதாரம். அவளுடன் பேச வேண்டும். சட்டென்று எழ நினைக்கின்றாள். கைவலி முடியவில்லை. சும்மா கிடக்கும் சங்கை ஊதிக் கெடுப்பது என்பார்கள். சுகமாக இருந்த கையை நோப்பட வைத்துவிட்டு கையைத் தூக்க முடியாது அசைக்க முடியாது அவதிப்படுகின்றேனே சிணுங்கினாள்.

அடுக்கி வைத்திருந்த போர்வைகளை அலமாரியில் அடுக்குவதற்காகக் கவனமில்லாமல் நாற்காலியில் ஏறத் தன்னைத் தள்ளி வீழ்த்தி விட்டு நிமிர்ந்து நின்று சிரித்த நாற்காலியை நினைத்துப் பார்க்கின்றாள்.

"ஓடாதே ஓடாதே உன்னை மிஞ்சியும் ஒரு சக்தி இருக்கிறது. உன் வாழ்க்கையைத் தீர்மானிப்பதும் அதுதான் முடிவு எடுப்பதும் அதுதான்" என்று எக்களம் கொட்டிச் சிரிக்கின்றது. இந்தப் பிரபஞ்சம் ஏதோ தீர்மானித்து விட்டது. தன்னுடைய ஆட்டத்தைத் தொடங்கிவிட்டது. விழுந்த உடனே கை முறிந்துவிட்டது என்ற உணர்வுதான் ஏற்பட்டது. அப்போதும் அருகே இல்லாத அம்மாவைத்தான் அழைத்துச் சத்தமாக அழுகின்றாள்.

அப்போது அங்கே ஓடி வருகின்றாள் சிநேகாவின் ஒரே மகள் சுருதி.

"என்ன அம்மா..... எழும்புங்க... அம்மா... எழும்புங்க" என்று கையைப் பிடித்து எழுப்பி இருக்க வைக்கின்றாள்.

"ஆஸ்பத்திரிக்குப் போவோமா?"

சிநேகாவின் நிலைமையைப் பார்த்துச் சிநேகாவை விடச் சுருதிக்குத்தான் பயம் அதிகமாக இருக்கின்றது. ஓடிப்போய்க் குளிர்சாதனப்

பெட்டிக்குள் இருந்து ஐஸ் பையை எடுத்து வந்து நோப்பட்ட இடத்தில் வைக்கின்றாள்.

பாசம் என்பதற்கு வரைவிலக்கணம் சொல்லமுடியாது. சில சந்தர்ப்பங்களில் அது காட்சியாகவே வெளிப்படும். துடித்துப் போகிறாள் சுருதி. கைதாங்கலாகத் தாயை அழைத்துக் கொண்டு போய் நாற்காலியில் அமர வைக்கின்றாள். அவள் தாயாகிய தருணங்கள் பலவற்றைச் சிநேகா சந்தித்திருக்கின்றாள்.

*“வீதியில் மிடுக்காக நடக்கும் போது*
*வீதியோரம் போக வேண்டாம் வாகனங்கள் நசுக்கி விடும்*
*மழையில் நன்றாக நனைந்து விட்டீர்கள்*
*ஓடிப்போய்த் தலை கழுவுங்கள்*
*அளவாக இனிப்பைச் சாப்பிடுங்கள்*
*மாத்திரைகள் போட்டீர்களா*
*கை தொலைப்பேசியில் அலாரம் வைத்து விடுங்கள்*
*மறக்காமல் மாத்திரை போடுங்கள்*
*ஒவ்வொரு நாளும் சோறு வேண்டாம்*
*இன்று நான் சமைக்கின்றேன்*
*எப்படி இந்தச் சாப்பாடு பிடித்திருக்கிறதா?*
*என்ன இருமுகின்றீர்கள்?*
*நாளைக்கு டாக்டரிடம் கூட்டிப் போகிறேன்*
*எந்த நேரமும் கையில் தொலைப்பேசி*
*அதைக் கொஞ்சம் தள்ளி வையுங்கள்*
*இந்த ஆடை உங்களுக்குச் சரியில்லை*
*இதைப் போடுங்கள் நன்றாக இருக்கும்*
*என்ன வேண்டும் உங்களுக்கு?*
*கடைக்குப் போவோம் நான் வாங்கித் தருகிறேன்.*
*வாருங்கள் கொஞ்சம் விளையாடுவோம்*
*வாருங்கள் படம் பார்க்க போவோம்*
*வாருங்கள் நீச்சலுக்குப் போவோம்*
*வாருங்கள் கடற்கரைக்குப் போவோம்*
*வாருங்கள் சினிமாவுக்குப் போவோம்*
*இதைச் செய்ய வேண்டாம்*
*அதைச் செய்ய வேண்டாம்*
*அப்படியே திருப்பிப் பாருங்கள்*

*தாய் தந்தை கட்டளைகள் அனைத்தும்*
*மகள் கட்டளைகளாக மாறுகின்றன*
*உலகம் மட்டும் சுழல்வதில்லை*
*ஒவ்வொரு அணுவும்*
*அனைத்து பொருள்களிலும்*
*சுழன்று கொண்டு தான் இருக்கின்றன*
*வாழ்க்கைச் சுழற்சியிலே*
*ஒவ்வொரு மகளும்*
*பெற்றோர்களுக்குத் தாயாகின்றார்கள்"*

சிநேகாவின் அப்பா, அம்மா, அரவிந்தனின் குடும்பச்சாயல் என்று அத்தனை பேரின் வடிவங்களில் ஒரு சில அங்கங்களைப் பெற்று பிறந்திருக்கின்றாள்.

வெள்ளையர்கள் நாட்டில் பிறந்த கறுப்புத்தங்கம். இதுதான் அவளுக்கு வெள்ளையர் மத்தியில் பெருமையைத் தேடித் தந்தது. சிறுவயதில் இருந்து பியானோ, கர்நாடக சங்கீதம், பூப்பந்து விளையாட்டு, வயலின், பலே நடனம் (Ballett) என்று அரவிந்தனும் சிநேகாவும் தம்முடைய ஆசைகளை அவளில் திணித்தனர். காசைக் கரைத்தனர், ஓய்வின்றிப் பிள்ளையை அழைத்துச் சென்றனர். அனைத்திலும் திறமையைச் சிரேயா அள்ளிக் கொட்டியதால் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

அரவிந்தன் உணவகத்தின் உரிமையாளனாய் உழைத்த பணத்தில் தன் குடும்பத்திற்காக எதுவுமே சேகரிக்காது மகளுக்கு அத்தனையையும் முதலீடு செய்தான். முடிவு சுருதி வயதானபின் அனைத்தையும் இடையில் நிறுத்திவிட்டாள். பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, தனக்குப் பிடித்த வாசிப்பும் அதன் மூலம் பெறும் உலக அறிவையும் மட்டுமே விரும்பினாள். கணினிப் பொருளியலாளராகக் கல்வியை மேற்கொண்டாள்.

பிள்ளைகளின் இளமைக் காலத்தின் உணர்வுகள் பற்றிப் பெற்றோருக்குப் புரிவதில்லை. தம்முடைய ஆசைகளை அவர்களிடம் திணிக்கின்ற போது அவர்கள், அவர்களுக்காகப் பிறந்தவர்கள் என்பதையே மறந்து விடுகின்றார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்க்கை தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அதன்படியே இந்தப் பிரபஞ்சம் அவர்களை வழி நடத்திக் கொண்டு

செல்லும். ஆனால், இவை யாரும் கற்பிக்க முடியாது. அனுபவமே சிறந்த ஆசான். அனுபவம் வாழ்ந்து பார்த்தே புரிந்து கொள்ளக் கூடியது. அனுபவசாலிகள் சொல்லுகின்ற போது யாரும் புரிந்து கொண்டு திருந்துவது என்பது அரிது.

1902 ஆம் ஆண்டு உலகப் புகழ் பெற்ற சூஃபிக் கவிஞர் கலீல் ஜிப்ரான் அவர்கள் எழுதிய ஒரு கவிதை.

*“உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல.*
*அவர்கள் இயற்கையின் (கடவுளின்) குழந்தைகள்*
*உங்கள் மூலமாக வந்திருக்கிறார்களே அன்றி*
*உங்களிடம் இருந்து அல்ல.*
*உங்களுடன் இருந்தாலும் உங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல.*
*உங்களுடைய அன்பை அவர்களுக்குத் தரலாம்.*
*உங்களுடைய எண்ணங்களை அல்ல”*

அவர்களுக்கு என்று தனிச்சிந்தனைகள் உண்டு. உடலுக்குத்தான் பாதுகாப்புத் தர முடியும் ஆன்மாக்களுக்கு அல்ல.

இதில் அற்புதம் என்னவென்றால், நீங்கள் வில். உங்களிடம் இருந்து எய்யப்படும் உயிருள்ள அம்பு குழந்தைகள். அம்பு எதை அடைய வேண்டும் என்ற இலக்கை வில் தீர்மானிப்பதில்லை. அம்பை எய்பவன்தான் தீர்மானிப்பான். நீங்கள் அம்பை எய்பவன் அல்ல. நீங்கள் அந்த வில்லுதான். அந்த அம்பை எய்பவரை நீங்கள் இயற்கை என்று எடுத்துக் கொண்டால் இயற்கை. கடவுள் என்றால் கடவுள். இந்தக் கவிதை உள்ளத்தில் இருந்தாலும் செயல்கள் ஏனோ புலம்பெயர் வாழ்க்கையில் தவறியேதான் போகின்றன.

வீட்டின் ஒரே செல்லக்குட்டியானாலும் உலகத்தின் அத்தனை விடயங்களையும் சுருதி கரைத்து வைத்திருந்தாள். கேட்டவுடன் கிடைக்கும் அட்சய பாத்திரம் போல் தேக்கி வைத்திருப்பாள். ஆனாலும் துர்அதிஸ்டம் உடனே கிடைக்காது. சொல்லுங்கள், தேடுங்கள் என்று பாதை போட்டுவிடுவாள்.

பாதையில் துருவித் துருவித் தேடிக் கிடைக்கவில்லை என்றால் மட்டுமே எமக்குத் தேவையான பதில் கிடைக்கும். எங்கே இருந்து இந்தப் பழக்கத்தைப் பெற்றாய் என்றால், உங்களிடமிருந்துதான் அம்மா என்பாள். எப்படி என்று கேட்டால், பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள்

கேட்டவுடன் பதிலை நீங்கள் கொடுப்பீர்களா? அவர்களைச் சிந்திக்க வைத்துத் தானே தெளிவைக் கொடுப்பீர்கள்.

உடனே கிடைப்பது மறந்து விடும் தேடிப் பெறுவது நிலைத்து நிற்கும் என்று அறிவுரை வேறு அள்ளி வழங்குவாள். அதற்கிடையில் சிநேகாவுக்குக் கோபம் கரை மீறி வரும். சுருதி 3 வயதில் மாமாவுக்கு விளக்கம் கேட்டவளாயிற்றே.

“அம்மா! உங்களுடைய அண்ணனையும் மாமா என்கின்றீர்கள். வீட்டிற்கு வந்த இந்த மாமாவையும் மாமா என்கின்றீர்கள். மாமா என்பது என்ன உறவு அம்மா” என்று கேட்டவள் தானே.

அதற்குச் சிநேகாவும்

“காணுகின்ற வயதான ஆண்களை உன்னுடைய அம்மாவின் கூடப் பிறந்தவர்கள் என்று நினைத்துக் கொள்” என்பாள். 3 வயதில்

*“பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்*
*நல்லவர்களுக்குக் கேட்டதெல்லாம் கொடு*
*கெட்டவர்களைக் குடை எடுத்து அடி”*

என்று பிள்ளையாருக்குக் கட்டளை போட்டவள் அல்லவா!

இரண்டு வயதில் பூமிக்கு மேலே நாம் இருக்கின்றோம். பூமி சுற்றுகின்றது நாம் ஏன் விழவில்லை என்று விளக்கம் கேட்ட போது ஆச்சரியத்தில் சிநேகா ஆழ்ந்து போனாள்.

அந்தநாள் நினைவுகள் மங்கலாய் மறைந்து போகின்றன.

இன்று...

சிநேகாவுக்கு வலி ஓரளவு குறைகிறது. பல குற்றச்சாட்டுக்கள்.

“உங்களுக்குக் கவனம் என்பதே இல்லை. நான் எடுத்து வைப்பேன்தானே. இப்ப அவசரமாகப் போய் இப்படி விழுந்தடிக்க வேணும்.” இது அரவிந்தனின் கோபம்.

நடப்பது எல்லாம் தற்செயலாகத்தான் நடக்கின்றது. இதுதான் நடக்கும் என்று யாரும் தீர்மானிப்பது இல்லை. ஏதோ திட்டம் போட்டு விட்டது வாழ்க்கை என்று மட்டுமே சிநேகாவால் உணர முடிந்தது.

தன்னம்பிக்கையும் துணிவும் அவளோடு கூடப் பிறந்தது. கண்டவற்றை உடனே செய்து பார்த்துக் கற்றுக் கொள்ளுகின்ற தாயின் மரபணுத் தொழிற்பாடு சிநேகாவின் இரத்தத்தின் உயிர்ப்பூட்டலை முடக்கி விடக்கூடியது. இந்த விழுதல் எல்லாம் அவளுக்கு எழுதலுக்காக என்றே மனம் உத்தரவிட்டது.

இன்று நுண்கிருமியால் இந்த உலகம் அச்சப் புயலில் ஆட்பட்டுக் கிடக்கிறது. கொரொனாவின் உக்கிரம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் போகின்றது. இது யாரும் திட்டம் தீட்டியதும் இல்லை. முடிவைச் சொன்னதும் இல்லை.

மருத்துவத்தில் பேர் சொல்லும் ஜெர்மனி நாடு இன்று திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இலட்சக்கணக்கான உயிர்களை ஜெர்மனியில் தின்று ஏப்பமிட்டபடி தனது ஆட்சிப் பிடியில் ஈடுபட்டிருக்கின்றது கொரொனா என்னும் கொள்ளை நோய். உலகம் முழுவதிலும் கொத்துக் கொத்தாகக் கோடிக்கணக்கான உயிர்கள் எந்தச் சடங்கு சம்பிரதாயங்களும் இன்றித் தீக்கிரையாக்கப்படுகின்றன.

வைத்தியர்கள் மரணித்து மடிகின்றார்கள். தாதியர்களின் உயிர்கள் கொரொனாவினால் பறிக்கப்படுகின்றன.

*இறந்த உயிர்களின் அஸ்தி கூட யாருக்கும் கையளிக்கப்படவில்லை.*

*ஆலயங்கள் அடைக்கப்பட்டன.*
*நிறுவனங்களில் வேலைகள் நிறுத்தப்பட்டன.*
*பாடசாலைகள் மூடப்பட்டன.*
*போக்குவரத்து ஸ்தம்பிதமானது.*
*விமானங்கள் பறக்கவில்லை.*
*பல்கலைக் கழகங்கள் செயல் இழந்தன.*
*வைத்தியசாலையில் இடவசதி நெருக்கடிகள்.*
*ஒட்சிசன் இயந்திரம் தட்டுப்பாடு.*
*படுக்கைகளுக்குப் பஞ்சம்.*
*நோயாளிகள் தனித்து விடப்பட்டனர்.*
*வியாபார நிலையங்கள் அடைக்கப்பட்டன.*

நாளை யாரைக் காலன் கொண்டு செல்லப் போகின்றான் என்று ஒவ்வொருவரின் மனத்திலும் அச்சம் குடி கொண்டது. ஓர் அசுரனின் ஆட்சிக்குள் உலகம் அகப்பட்டுக் கொண்டது.

மிருகங்களுக்கு மனிதன் அஞ்சிய காலம் மாறி மனிதனைக் கண்டால் மனிதன் தள்ளி நிற்கும் காலம். கட்டியணைத்துக் கண்டவுடன் அரவணைக்கும் அன்புக்கு இப்போது தடைச்சட்டம் போட்டாயிற்று. கையெடுத்துக் கும்பிட்டு மனிதனைத் தெய்வமென்று மதிக்கின்ற காலம் நடைமுறைக்கு வந்து விட்டது. இஞ்சியும் மஞ்சளும் விலைபோகும் காலம். மனிதனை மனிதன் கண்டு அஞ்சி ஓடுகின்ற நாட்கள். பேரப்பிள்ளைகளைக் காண மாட்டோமா என்று ஏங்குகின்ற தாத்தா, பாட்டிகள் வீட்டுக்குள்ளே இருந்து சாளரம் ஊடாக உலகத்தைக் கண்டு களிக்கின்ற துர்அதிஷ்டம். ஜெர்மனியிலிருந்து பிராணவாயு செலுத்துகின்ற இயந்திரங்கள் இத்தாலிக்கு அனுப்பப்படுகின்றன. இத்தாலியிலே இயந்திரங்கள் பற்றாக்குறையால் மருத்துவர்களும் இயந்திரங்களும் உதவிக்கு அனுப்பப்பட்டன.

வாய் அசைவு பார்த்து மொழி கற்கும் குழந்தைகள் யாருடைய வாயசைவையும் பார்க்க முடியாது முகக் கவசம் மறைக்கின்றது. உறவினரைத் தெரியாது பிள்ளைகளின் வளருகின்ற பருவத்தில், வெளியே சென்று விளையாட்டு மைதானத்தில் சக நண்பர்களுடன் ஓடிப் பிடித்து, ஏறி இறங்கி, சறுக்கி விழுந்து, உடல் பயிற்சி விளையாட்டுகள் விளையாட முடியாது. தனி வீட்டில் பிள்ளைகள் தனித்திருக்கும் பருவமாக இளமை, குழந்தைப்பருவங்களைக் கடக்கின்றது மனிதப்பிறவி.

உயிர்களின் இழப்பு, பொருளாதார வீழ்ச்சி, அரசியலில் தழும்பலானது மனிதர்களின் மனநிலை பாதிப்பு, பிள்ளைகளின் குணநலன்களில் பாதிப்பு என்று உலகமே கொறொனா என்ற ஒரு கொடிய நோயின் ஒரு சொல் வாசகத்தில் தன்னை அடிமைப்படுத்தியிருக்கின்றது.

இந்த ஆண்டு மட்டுமா இந்த அவலம். 1980களில் 3 கோடிக்கும் அதிகமான மக்கள் எயிட்ஸ் நோயால் இறந்துள்ளார்கள். பெரியம்மை நோயால் 1967 இல் 20 இலட்சம் மக்கள் இறந்துள்ளார்கள். இவ்வாறு தொடர்ந்து 2000 இல் இருந்து 2003 வரை சார்ஸ் நோய் 2005 இல் பறவைக்காய்ச்சல், 2009 இல் இருந்து 2010 வரை பன்றிக் காய்ச்சல், 2010 எபோலோ என்று இந்தப் பூமிப்பரப்பு புதிய நோய்களைத் தந்து கொண்டுதான் இருக்கின்றது. அந்த வரிசையிலே தான் இன்று கொறொனா நுழைந்துள்ளது.

இந்த நிலையில் நோயென்று மருத்துவமனைக்குள் நுழைவதற்கு மக்கள் அஞ்சுகின்ற காலம். கண்ணுக்குத் தெரியாது எம்மைப் பற்றிக்

கொள்ள அவா... அவா என்று காத்துக் கிடக்கும் கொரொனா வைரஸ் காலம். இப்படி இருக்கும் போது எப்படி சிநேகா மருத்துவமனைக்கு உடனே போகமுடியும்.

நாளை சிறப்பு மருத்துவரிடம் போவோம். ஐஸ் பையை எடுத்து வந்து மகள் தருகின்றாள். அதனை அடிபட்ட கைகளில் வைத்துப் பிடிக்கும் போது நோ கொஞ்சம் குறைகின்றது. இலங்கையிலென்றால் சுடுநீர் ஒத்தடம் போடுவார்கள்.

ஜெர்மனியில் ஒவ்வொரு நோய்க்கும் அந்தந்த நோய்க்கான சிறப்புப் படிப்புப் படித்த வைத்தியர்கள் இருக்கின்றார்கள். அவர்களை ஒவ்வொருவரும் தம்முடைய நோய்களுக்கு ஏற்றவாறு தமக்கென்று வைத்துக் கொள்வார்கள். சிநேகாவும் அவளுக்கென்று அவள் உள் உறுப்புக்கள் அனைத்தையும் உச்சி முதல் உள்ளங்கால் வரை அறிந்து வைக்க ஒவ்வொரு மருத்துவரை நியமித்து இருந்தாள். அவர்கள் தனது உறுப்புகளுக்குப் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்தார்கள். அவளுடைய பல்லைப் பற்றி பல் மருத்துவரும் அக்குவேறு ஆணிவேராகத் தெரிந்து வைத்திருக்கின்றார். அதேபோல் எலும்பு மருத்துவரும் மாரிக்குளிரில் புட்டிமீன் போல் நொறுங்கித் தூள் தூளாகிப் போன எலும்பு பற்றி புரிந்து வைத்திருக்கின்றார். அவருக்கு முன்னே போனால் நோயாளிகளைப் பற்றிப் பேசுவார்களோ இல்லையோ கணினியுடன் பேசிக் கொண்டே இருப்பார்கள்.

கைக்குள் இருக்கும் பொருளுக்கு மகத்துவம் தெரிவதில்லை. இழந்த பின்புதான் ஏங்கித் தவிக்கும் மனித மனம். இது பாட்டி வைத்தியம் பார்த்த உடம்பு. இன்று எக்ஸ்ரே, எம். ஆர். ரி. என்று உள் உடம்பைப் படம் பிடித்தாலேயே நோயைப் புரிந்து கொள்ளும் வைத்தியர்கள் மத்தியில் இருக்கின்றது. கையைப் பிடித்துப் பார்த்து உடம்புக்குள் உள்ள இயந்திரங்களுக்கு என்ன நடக்கிறது என்று ஊகித்த சிநேகாவின் பாட்டியின் அறிவு நுட்பத்தை இன்று சிநேகா எண்ணிப் பார்க்கின்றாள்.

# அத்தியாயம் 2

# வைரவள்ளி புராணம்

சிநேகாவின் பாட்டி ஒரு சின்னத் தத்துவம். மனத்தில் உறுதி இருந்தால், எந்த மாமலையும் ஒரு கடுகாம் என்னும் வரிகளுக்கு வடிவம் கொடுத்தவர். சாதாரணப் பெண்ணாக இருந்தாலும் அவள் ஒரு புத்தகம். பக்கங்கள் புரட்டப் புரட்டப் பல பாடங்கள் கற்கலாம். பிள்ளை இல்லை என்று ஏங்குவார்க்கு அவளின் ஒரு பச்சிலை மருந்தே பதில் சொல்லும், வளைந்த எலும்புக்கு அவளின் எண்ணெய் விடை சொல்லும், முறிந்த எலும்புக்கு அவளின் ஒரு மூலிகைப் பத்துப் பதில் சொல்லும். ஆனால், இன்றோ வைத்தியர்கள் உடலை வெட்டிக் கொத்தி இறுதியில் சக்கர நாற்காலியில் அமர வைத்து விடுகின்றார்கள்.

அன்று எலும்பு வைத்தியத்தில் கைகளே ஆயுதங்களாகவும் இயந்திரங்களாகவும் தொழிற்பட்ட காலம். அக்காலத்தில் அந்தக் கிராமத்தில் அறியப்படாதவர்கள் எவருமின்றி வாழ்ந்த ஒரு பிரபலமே வைரவள்ளிக் கிழவி. அவள் தனியாகத் தன் பிள்ளைகளைத் தன்னுடைய முயற்சியினால் வளர்த்தெடுத்த தைரியலட்சுமி. முதன்முதலாக அவ்வூரில் சங்கிலி அணிந்த ஆணென்ற காரணத்தால், சங்கிலிக் கந்தசாமி என்றும், போட்டிக்கோ வீடு முதன்முதலாகக் கட்டிய காரணத்தினால் போட்டிக்கோ கந்தசாமி, கொப்புறத் தேங்காய் போடும் தொழிற்சாலை வைத்திருந்த காரணத்தால், கொப்புறக் கந்தசாமி என்றெல்லாம் பட்டப்பெயர் பெற்ற கோடீஸ்வரனுக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டுப் பணத்தின் வாடையை நன்றாகப் பழக்கப்பட்டு வாழ்ந்தவரே அந்த வைரவள்ளிக் கிழவி.

குறுணல் அரிசிச் சோறு அவித்து, அதனோடு குஞ்சு மீனில் சுண்டல் சுண்டி, கீரி மீனை தேங்காய்ப்பாலில் தீயல் கறி ஒன்று வைத்தாளானால் கந்தசாமி உண்ட மயக்கத்தில் உறங்கிப் போவார்.

“சும்மா சொல்லப்படாது வைரவள்ளி. உன்னோட கைப்பக்குவம் இந்த உலகத்தில எந்தப் பொம்புளைக்கும் வராது. தெரிஞ்சுக்கோ” என்பார்.

“சத்தியமாகச் சொல்றன் மட்டக்களப்பாள் சமைச்ச சாப்பாடு சாப்பிட்டால், எந்தச் சீமைக்காரனாக இருந்தாலும் மயங்கித்தான் போவான். இதைத்தானே எல்லாரும் “மட்டக்களப்பார் பாயோட ஒட்ட வைக்கும் மாந்திரீகம் பண்ணுவார்கள்” என்று வாய் கிழியச் சொல்வார்.

அவள் கழுத்திலே அட்டியல் கட்டி மூக்கிலே வைர மூக்குத்தி அணிந்து வந்தால், அந்த ஊரே வாய்பிளந்து பார்த்திருக்கும் அழகுப் பெண். பட்டுப்புடவையை மடிப்பெடுத்து வயிறு இடுப்புப் பகுதியை மறைத்து வளைத்து எடுத்துப் பின்புற இடுப்புப் பகுதியில் கொசுவம் ஒன்று போடுவாள். அவள் வெற்றிலை வாய் சிவக்க நடந்து வந்தால், ஊர்ப் பெண்கள் எல்லாம் வேலியேறி நின்று அழகு பார்ப்பார்கள். பாதங்கள் தாண்டி வாழைத் தண்டு போன்ற கால்கள் ஓரளவைக் காட்டியபடி புடவை அசைந்து வரும் அழகே அழகுதான்.

அந்த அழகுதான் இந்தக் கடுக்கண் போட்ட மாம்பழக் கலர் கோடீஸ்வரனுக்கு மயக்கத்தைக் கொடுத்தது. மட்டக்களப்பு மாப்பிள்ளைக்கு ஏறாவூர் கிராமத்தைத் தொடுப்புப் போட்டது. சொத்துப் பத்து வாங்கிப் போட்டுச் சுகமாக வாழ வைத்து மூன்று பிள்ளைகளைப் பெத்துப்போட்ட மனுசன் கோர்ட்டுக்கே சென்று உள்ள பணத்தையெல்லாம் அழித்தார்.

அந்தக் காலத்துப் பணக்காரர்கள் தமது குடிமனைக்குள்ளேயே ஒரு குடிக்கடை வைத்திருப்பார்கள். அழகாக அடுக்கப்பட்டிருக்கும் அரக்கர்களைத் தரம் பிரித்துப் பார்த்துச் சொட்டுச் சொட்டாக எடுத்து உயிரை சொட்டுச் சொட்டாக அதற்கு அர்ப்பணிப்பார்கள். இறுதியில் தமது கடமைகளை முடிக்காமலேயே வாழ்க்கையை முடித்துக் கொள்வார்கள். சொத்துக்கும் சுகங்களுக்கும் போட்டியும் பொறாமையும் கூடவே வரும். அதனாலேயே அதற்குச் செல்வம்(செல்வோம்) என்று பெயர். மனைவி என்ற அந்தஸ்தைத் தவிரப் பெரிதாக ஒன்றையும் வைக்காமலே கந்தசாமிப்போடி உலகத்துக்கு விடை கொடுத்துவிட்டார்.

தன் வயிறு சுமந்த மூன்று பிள்ளைகளும் முகம் பார்த்து நிற்க ஒரு பெருமூச்சு விட்டாள் வைரவள்ளி. சீலைத் தலைப்பை எடுத்து உதறிப் பின் இழுத்துக் கொசுவம் போட்டாள். மூக்கைச் சிந்திக் கொண்டு மூலையில்

அவள் இருக்கவில்லை. இந்தப் பிள்ளைகளைத் தனியாளாய் எப்படிக் கரையேற்றுவேன் என்று கலங்கவில்லை. இளவயது கவர்ச்சி இறைவன் அள்ளிக் கொடுத்த அழகு. இவை ஒரு பெண்ணை எப்படி வாழவைத்தது என்பதை அவள் வாழ்க்கை காட்டியது. வைரவள்ளி ஒரு தைரியலட்சுமி என்ற ஊரார் சொற்கள் ஆதாரம் காட்டியது.

வைரவள்ளி தன் பெட்டைப் பிள்ளையையும் மற்றைய இரண்டு பிள்ளைகளையும் தனியாளாய் வளர்த்தெடுத்த தைரியத்துக்கு எடுத்துக்காட்டாகச் சொல்வதானால், வைரவள்ளி வீடு பிரதான வீதி யில்தான் இருந்தது. முன்பக்கக் காணியை வீதியிலிருந்து மறைத்து தகரத்தினாலேயே வேலி போட்டிருந்தாள். கீழ்ப்பகுதி சற்று உயர்ந்து காணப்படும். இரவு படக்காட்சி முடிந்து போகின்றவர்கள் அந்த வேலி யிலேயே அப்பாடா என்று இருந்து சலம் கழிப்பது வழக்கம். இதை அறிந்திருந்த வைரவள்ளி கொதிநீரை நன்றாகக் கொதிக்கக் காய்ச்சி வைத்திருப்பாள். வேலியோரம் வந்து சிறுநீர் கழிக்க இருப்பவர்களுக்குக் கொதிக்க வைத்த நீரைச் சட்டென்று ஊற்றி அபஷேகம் செய்து விடுவாள். என்ன நினைச்சிட்டீங்க? இந்த வைரவள்ளியை. இவள் வச்சிச் செய்வாள் என்பது போல் சேலைத் தலைப்பை உதறிக் கொசுவம் போடுவாள். இருப்பவர்கள் துண்டைக் காணோம் துணியக் காணோம் என்று அரைவாசி சலம் ஒழுக ஒழுக கத்திக் கொண்டு ஓடுவார்கள். இவ்வாறு அவள் எதற்கும் அஞ்சாத ஒரு பெண்ணாகவே வாழ்ந்தாள்.

அவளின் அத்தனை தைரியத்தையும் சொத்தாகப் பெற்றுக் கொண்டவன் அவளின் இரண்டாவது மகன் துரைதான். கட்டைக் காற்சட்டைக்கு மேற்சட்டை போட அவனுக்கு மனசு வராது. வெள்ளைத் தோலை அப்பாவிடம் இருந்தும் அம்மாவிடம் இருந்தும் பெற்றுக் கொண்ட பெருமை அவனுக்கு இருந்தது. ஆனால், மூத்தவனோ டிப்டொப்பாக உடை போட்டு வெள்ளைக்காரத் துரைமார் போடுகின்ற தொப்பி அணிந்து பொலிஸ் பண்ணிய சப்பாத்துப் போட்டுத்தான் சந்தைக்குப் போவதென்றாலும் போவான். கூடவே வரும் தம்பியை யாரென்று யாராவது கேட்டால், எங்கள் வீட்டில் இருக்கும் பையன் என்று வாய் கூசாது சொல்லிவிடுவான். ஒருநாள் இப்படித்தான் அண்ணன் சொல்வதைக் கேட்டு ஓடி வந்த துரையும் சர்ரென்று வீட்டுக் கூரைக்கு மேல் ஏறி நின்று விட்டான். ஊரே கூடிவிட்டது.

“இவன் என்னை வேலைக்காரன் என்று சொல்லிப் போட்டான். நான் குதிக்கப் போறன்”

என்று சத்தமாகக் கத்தினான். வைரவள்ளி அவனைச் சமாதானப் படுத்தப்பட்டபாடு போதும் போதும் என்றாயிற்று. வைரவள்ளியின் தைரியத்துக்காகவே வந்து பிறந்த வாரிசு துரைதான்.

மண் தின்னும் உடலை வளர்க்க மண்ணையே தொழிலாய் ஏற்றாள். இந்தத் தொழிலைச் செய்கின்றாயே என்று எந்த உறவுகளும் கேட்கவில்லை. கேட்கவும் முடியாது. ஏனென்றால், வைரவள்ளி ஒரு பார்வை பார்த்தால் ஏறாவூர் கிராமமே வாய் மூடி நிற்கும்.

மண் இயற்கை அள்ளிக் கொடுத்தது. தங்கம் பூமியில் வளர்வது. தங்கத்தைத் தொட்டவர் எதுவும் இல்லாமல் போய்விட்டார். நான் என் பிள்ளைகளை வளர்க்க மண்ணில் கை வைக்கிறேன். உயிர் போனாலும் அப்பாவின் தொழிலை என் பிள்ளைகளுக்குக் கொடுக்க மாட்டேன். முடிந்தவரை அவர்களுக்குப் படிப்பைக் கொடுப்பேன் என்று சபதம் போட்டாள்.

வீட்டில் ஒரே பெண் வாரிசுக்குப் படிப்புப் பாதியிலேயே நின்று விட்டது. ஆங்கில மொழியில் கல்வி கற்கப் புகுந்தும் அறிவாளியால் உயர்ந்து நிற்க முடியாத நிலைமை. தாய்க்கும் தாயின் தொழிலுக்கும் கை கொடுக்க வேண்டிய பொறுப்பு மகள் பார்வதிக்கு ஏற்பட்டது. வைரவள்ளியின் பொறுப்பும், பொறுமையும், அழகும், அறிவும், கண்கண்டால் கை செய்யும் திறமையும் வாய்க்கப் பெற்றவளே பார்வதி.

வைரவள்ளி களிமண்ணை எடுத்து அதற்கு வடிவம் கொடுப்பாள். அவை சமையல் பாத்திரங்களாகும். அன்று மட்பாண்டம் வனைதலுக்கு எந்த இயந்திரங்களும் இருந்ததில்லை. களிமண்ணை எடுத்துத் தன் விரல்களால் வைரவள்ளி பிடிக்கும் அழகே ஒரு தனி அழகுதான். களிமண்ணை வாங்கி வந்து மாட்டுவண்டியால் இறக்குவாள்.

அதன்மேல் நின்று குதித்துக் குதித்து நடனம் புரிவாள். பிள்ளைகளை அதன்மேல் குதித்து விளையாட விடுவாள். அக்களிமண் பதமாக இதமாகப் பாவனைக்கு உரியதாகும்.

உருண்டைகளாய் கையில் எடுத்த களிமண்ணை ஒரு களிமண்ணால் செய்யப்பட்ட தட்டின் மேல் வைத்து கைகளால் சக்கரம் சுழற்றுவது

போன்று சுழற்றிச் சுழற்றிச் சட்டி, பானைகளை அழகாக வடிவமைப்பாள். சுழன்று சுழன்று வடிவமெடுத்த மட்பாண்டங்கள் அணுக்களின் சுழற்சி யினால் மூலக்கூறுகளின் கூட்டிலே பூமி உருவானது போன்று ஒரு வடிவத்தை எடுத்துவிடும். இந்தக் கலையை எப்படிப் பெற்றாள் என்பது எந்த யூட்டியூப்பும் அவளுக்கு அந்தக் காலத்தில் சொல்லித் தரவில்லை. வடிவமைத்த பானைகளை விதம்விதமான கற்களினால் உராய்ந்து உராய்ந்து பளபளப்பான பானைகளாக ஆக்குவாள். அதன் மேல் அழகான வடிவங்களை வரைந்து அழகு பார்ப்பாள்.

பின் சூளை மூட்டி அதற்குள் பானைகளை அடுக்கிச் சுட்டு எடுப்பாள். சூளை மூட்டும் நாள் கையிலே நீண்ட தடியோடு சூளைக்குப் பக்கத்தில் நின்று வீரத் தமிழச்சியாய் நிற்கும் தைரியமே அவளை வாழவைத்தது. தடியால் தட்டித்தட்டி மட்பாண்டங்களைப் பதமான சூட்டுக்குக் கொண்டுவருவாள்.

எந்தக் கலையும் அவரவர் கைப்பக்குவத்தில் தன்னை அடையாளம் காட்டும். அனல் நெருப்பு வெக்கை அவள் மேனியைச் சுட்டெரிக்கும். அதனைத் தன் பிள்ளைகளின் வாழ்க்கையை உயர்த்துவதற்காகத் தென்றலாய் ஏற்றுக் கொள்வாள். உழைப்புகள் அனைத்தையும் சூளை திரும்பத் தந்துவிடுவதில்லை.

சுட்டெடுத்த பாத்திரங்கள் விற்பனைக்குத் தயாராகிவிடும். வெடித்துப் பறந்தன போக, உடைந்து வெடித்தன போக, எஞ்சிய பாத்திரங்களை விலையின் படி பிரித்து வைத்து அருகே களைப்புடன் வைரவள்ளி அமர்ந்து கொள்வாள்.

அவள் உடலெங்கும் பாய்ந்தோடும் வியர்வையைச் சீலைத் தலைப்பால் ஒத்தியெடுத்து பார்வதி தந்த தண்ணீரால் உடல் சூடு தணிப்பாள். அதன்பின்பே வெற்றிலையினுள் பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு வைத்து, அந்த வெற்றிலையைப் பக்குவமாக மடித்தெடுத்து வாய்க்குள் ஒரு தள்ளுத் தள்ளுவாள். அசைபோடும் வாய், கணக்குப் போடும் மனம். இன்றைக்கு இவ்வளவுதான் மிஞ்சும் என்று மனக் கணக்குப் பார்ப்பாள். ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் உதட்டின் மேல் வைத்துப் பற்கள் கசக்கிப் பிழிந்த வெற்றிலைச் சாறை தூ... என்று இடையிடையே துப்பியபடி மகளுக்குக் கணக்கு நோட்டுக் கொண்டு வரும்படி ஆணையிடுவாள். இத்தனை வேலைக்கும் வைரவள்ளி

பக்கத்தில் நிற்பது பார்வதிதான். அதன்பின் வரிசையிலே அதனைக் கொள்வனவு செய்வதற்கு வியாபாரிகள் வந்து நிற்பார்கள். வாரம் ஒரு வெள்ளி வைரவள்ளி வீட்டில் சூளை என்று வியாபாரிகளுக்குத் தெரியும்.

கணக்கு நோட்டுடன் கணக்குப் போட பார்வதி தயராகி விடுவாள். வைரவள்ளிக்கு இலாப நட்டம் மனக்கணக்குச் சொல்லும். பேரம்பேசும் வியாபாரிகள் வைரவள்ளிக்கு முன் வாய் உயர்த்திப் பேச அஞ்சுவார்கள்.

"எடுக்கிற என்டா எடு. இல்லாட்டி நடையக்கட்டு. உன்னோட பேரம் பேச எனக்கு நேரமில்ல"

என்று சொன்னால் மறு வார்த்தை இல்லை. காசைக் கொடுத்து விட்டு இடத்தைக் காலி பண்ணிவிடுவார்கள்.

இதைவிட இடையிடையே முறிவு வைத்தியம், கை வைத்தியம், பிள்ளைப் பேற்று வைத்தியம் என்று சூரியனின் பார்வை உலகத்தில் படுவதற்கு முன்பாகப் பச்சிலை பறிக்கக் காட்டு யாத்திரை போய்விடுவாள் வைரவள்ளி. கரியபவளம் என்னும் ஒரு மருத்துவப் பொருள் அதனை அடுப்பில் வைத்துக் காய்ச்சி எடுக்க அதற்குள் சில வைத்திய மூலிகைகள் சேர்ந்து கொள்ள அதற்குள் போடும் வெள்ளைத் துணி கறுப்புத் துணியாக மாறும். சுடச்சுட எடுத்த துணியைக் கைச்சூட்டுப் பக்குவத்தில் நோப்பட்ட எலும்புக்குப் பத்துப்போட்டு விடுவாள்.

"பத்துத்தானாக விழும். உன் நோவும் தானாக மறையும். போயிட்டு வா"

என்று நோயாளியை வழியனுப்பி விடுவாள். பத்துப்போட்ட துணி விழுந்து கை வலி விடைபெற்ற பின்புதான் கைநீட்டி நோயாளியின் பணத்தை வைரவள்ளி வாங்குவாள். இது அவள் அவளுக்குப் போட்ட ஒப்பந்தம்.

பிள்ளையில்லாமல் மனம் நொந்து போய் இருக்கும் பெண்ணுக்குப் பச்சிலைக் கசாயம் காய்ச்சி அவர்கள் வீட்டிற்குக் கொண்டு போவாள். சூரியன் பயணம் புறப்படும் காலைவேளை கிழக்குத் திசையை அப்பெண்ணின் முகம் பார்க்க அவளே மூக்கை ஒரு கையால் பொத்தி சுவாசத்தை ஒருகணம் நிறுத்தி வாய்க்குள் அக்கசாயத்தைத் தன் கையாலேயே ஊற்றி விடுவாள். குமட்டி வரும் வயிற்றைப் பிள்ளையை எதிர்பார்த்திருக்கும் மனம் பொறுத்துக் கொள்ளும். தொடர்ச்சியாகச் சில நாட்கள் வைரவள்ளி அப்பணியைத் தலைமேற் கொண்டு செய்யக் கரு

ஒன்று வயிற்றில் தோன்றும். அடிவயிற்றில் கைவைத்து, இன்றுடன் கசாயம் தேவையில்லை என்ற இனிப்பான செய்தியைச் சொல்லி விட்டுத் திரும்பி விடுவாள். அதுநாள் வரை எங்கு வைரவள்ளி வைத்தியம் பார்த்தாள். எந்த நேரம் அவர்கள் வீட்டிற்குச் சென்றாள் என்னும் சங்கதி அத்தெருவிலோ வீட்டிலோ யாருக்கும் தெரியாது.

தேடக் கிடைக்காத அரிய பொக்கிசங்கள் எங்கள் பாட்டன், பாட்டி. அவர்கள் வாழுகின்ற காலத்திலே அவர்களின் அருமை, பெருமை புரியாதவர்களாகப் பிள்ளைகள் வளர்ந்திருக்கின்றார்கள்.

இரண்டு ஆண்பிள்ளைகளைப் படிக்க வைத்தாள். பருவம் வர பார்வதியைப் பெண்கேட்டுப் பலர் போட்டாபோட்டி போட்டாலும், பரமசிவம் பார்வை பார்வதியில் பட்டதனால் தன்னுடைய எண்ணத்தை முடித்து வைத்தார் பரமசிவம். பள்ளிக்கூடத்திலே பார்வதிமேலே பட்ட கண் பரமசிவத்துக்கு உடும்புப் பிடியாய்ப் பிடித்து வைரவள்ளியைப் பணிய வைத்தார். பார்வதிக்கு 3 முடிச்சுப் போட்டார். அந்தத் திடகாத்திரமான கவர்ச்சியான ஆண்மகனுக்குப் பார்வதி வாழ்க்கைப் பட்டாள். பார்வதியும் 4 பிள்ளைகளுக்குத் தாயானாள். ஆண்பிள்ளைகள் தம்முடைய துணைகளுடன் தனக்குடித்தனம் போகவே வைரவள்ளி வாழ்க்கை முழுவதும் கூடவே பயணம் செய்தது பார்வதியுடனேதான்.

வைரவள்ளி களைப்பாறும் இடம் சினிமாத் தியேட்டர்தான். வைரவள்ளிக்குத் தியேட்டரில் ஒரு சீட் எப்போதும் காலியாக இருக்கும். வெற்றிலை சப்பிக் கொண்டு காலை நீட்டி இருந்தபடி படம் பார்ப்பது அவளின் பொழுதுபோக்கு. கூடவே பேரப்பிள்ளைகளையும் தன்னோடு அழைத்துச் செல்வாள். அந்தப் பாக்கியம் சிநேகாவுக்கும் அடிக்கடி கிடைக்கும். இரண்டாவது பேரன் கீரனோ படக் கொட்டகையில் எம்.ஜி.ஆர் திரையில் வந்துவிட்டால் பக்கத்தில் யார் இருப்பது என்று தெரியாமலே நான் ஆணையிட்டால் என்று தன்னை மறந்து எழும்பி நின்று அடிக்கத் தொடங்கி விடுவான். இதனால், அவனை அழைத்துச் செல்வது வைரவள்ளிக்குக் கொஞ்சம் சிரமமாகவே இருந்தது. மட்டக்களப்புக்குப் பேருந்து பிடித்துப் படம் பார்க்கப் போனால், பகல் காட்சியும் முடிந்தபின், அப்படியே இரவுக் காட்சியும் பார்த்துவிட்டே வீட்டுக்குத் திரும்புவாள்.

தமிழினப் போராட்டத்திற்கு மருமகனுக்குத் துணையாகச் சத்தியாகிரகப் போராட்டத்தில் அடங்கி இருக்கும் மூத்த பேரன் சிவத்தையே அழைத்துச்

செல்வாள். சேலைத் தலைப்பை உதறி இடுப்பை வரிந்து கட்டியபடி தாய் மண் மடியில் அமர்ந்து தன் மடியில் சிவத்தை இருத்துவாள். பெண்களும் ஆண்களும் இணைந்து 1960 காலப்பகுதியில் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட நினைவுகளை அடிக்கடி பேரப்பிள்ளைகளிடம் சொல்லிப் பெருமை பேசிக் கொண்டிருப்பாள். செல்லையா இராஜதுரை தலைமையில் சத்தியாகிரகப் போராட்டம் மட்டக்களப்பு மாகாணத்தில் பரந்து நடந்து கொண்டிருந்தன. பெண்களும் ஆண்களும் தமிழ் உரிமைப் போராட்டத்திற்காகக் குரல் கொடுத்தார்கள். அதில் ஒருத்தி வைரவள்ளி.

அடுத்து அவளின் உடல்நோவும் உள்ளத்து நோயும் தீர அவள் நாடுவது அவளை மயக்கும் மதுவே. ஜெமினி கணேசன் கட்டியணைக்கும் சுகத்தை அதிகரிக்க வைக்கச் சாவித்திரிக்கு ஊற்றிக் கொடுத்து நிரந்தரக் குடிகாரியாக்கி விட்டாராம். இதேபோல் கூடிக் குடிக்க ஆள்துணை தேவை என்று கந்தசாமி துணைக்கு அழைத்த வைரவள்ளிக்கு மது பழக்கமாகி விட்டது. இரவில் சாப்பாட்டின் போது ஒரு கிளாஸ் எடுத்தால் மௌனம்... மௌனமே. யாருக்குமே தொல்லையில்லாமல் தூக்கத்தைத் தழுவி விடுவாள். என்ன ஆச்சரியம் நோய் என்று அவள் படுத்ததும் தூங்கியது அந்த இறுதித் தூக்கத்திற்காக மாத்திரமே. ஔவை கூட மதுக் குடித்தாள் என்று ஔவையைத் தனக்குத் துணைக்கு அழைப்பாள்.

நினைத்தவுடன் கவி பாடும் வல்லமையும் வைரவள்ளிக்கு இருந்தது. காலம் அழகி வைரவள்ளியை வைரவள்ளிக் கிழவியாக்கியது. ஆனாலும் அவள் கை பட்ட எலும்புகளும் நோய் கண்ட உடம்புகளும் அவள் காலம் முடியும் வரை அவள் திறமையை அடையாளப் படுத்திக் கொண்டே நின்றன.

வாழ்க்கையில் கொஞ்சம் நஞ்சமா கண்டிருக்கிறாள். எதனையும் பெருமூச்சோடு துடைத்தெறிந்துவிட்டுப் பிள்ளைகளைப் பெரிய வீட்டுக்காரர் என்று பேர் விளங்க வளர்த்தெடுத்த பெருமையை வைரவள்ளிக் கிழவி வைத்திருந்தாள்.

# அத்தியாயம் 3

# நாம் வாழ்க்கை முழுவதும் மாணவர்களே

“இந்த ஜீவிதம் அற்புதமான ஒன்று. ஒரு போதும் எதிர்பார்க்காத ஏதோ ஒன்றை அது உங்களுக்காகப் பொத்தி வைத்து எப்போதும் காத்திருக்கும்” என்ற மலையாள எழுத்தாளர் பாலச்சந்திரன் சுள்ளிக்காடு அவர்களின் வரிகளை நினைத்தவண்ணம் படுத்திருந்தாள் சிநேகா. ஆச்சியின் அபாரத் திறமைகளைத் தன் கைவலியின் தாக்கத்தால் நினைத்துப் பார்க்கின்றாள். ஒரு மருந்து உள்ளே போனால், அது இன்னுமொரு நோயை உருவாக்கும். அதனால், அடுத்த மருந்தை உடல் எதிர்பார்க்கும். இதுதான் அலோபதியின் அபாரத்திறமை. இறுதியில் ஒரு குளிசைப் பையுடன் டொக்டர் ஸொப்பிங் செய்யும் வண்ணம் இறப்புவரை கொண்டுவந்து நிறுத்திவிடும்.

பாட்டியின் நினைவுகளிலிருந்து மீண்டவளாய்ச் சிநேகா அடுத்த நாள் வேலைக்குப் போக வேண்டும். எலும்பெல்லாம் அடித்து உடைத்தது போன்ற வலி இருக்கின்றது.

இதற்கிடையில் தனக்கு ஏற்பட்ட இந்த உணர்வுக்குப் பரிகாரம் தேடவேண்டும். கட்டிலில் இருந்தபடி அருகாமையில் இருந்த தொலைப்பேசியை எடுக்கின்றாள். வரிசையாக எண்கள் பெயருடன் வந்து விழுந்தாலும் அடிக்கடி அழுத்தும் எண்கள் முன்பக்கம் வந்து விழுகின்றன. அது நிருபாவின் இலக்கம்தான்.

“ஹலோ... ... அன்ரி. எப்படி இருக்கின்றீர்கள்?

“ஆ... இருக்கிறேன். நிருபா.. உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும். எப்போது நேரம் கிடைக்கும்?

“ஏதும் அவசியமா அன்ரி”

“ஓம். அவசியம்தான். ஆனால், கொஞ்சம் விலாவாரியாகக் கதைக்க வேணும். இப்ப நான் வேலைக்குப் போக வேண்டும். வந்து கதைக்கலாம். நீங்க எப்ப வீட்ட வேலையால் வருவீங்க?

“4 மணியாகும் அன்ரி”

“பரவாயில்லை. அதுக்குப் பிறகு கதைப்பம். நான் ஐயாவப் பார்க்கப் போவன். வந்து கதைக்கிறன். இந்தக் கொரோனாவால நாம சந்திக்க இயலாம இருக்கு நிருபா”

“ஓகே அன்ரி. வாங்க பேசுவம்”

என்று சொல்லி நிருபா தொலைப்பேசியை வைக்கின்றாள்.

முக்கியமான ஒரு பணியைச் செய்து விட்டது போன்ற உணர்வு. இப்போது தொழிலா, டாக்டரா என்னும் போராட்டம். இறுதியில் தொழிலே வென்றது. ஆதரவுக்காக ஒரு வயதான பெண்மணியை ஒப்படைக்கும் போது தன்னுடைய நோயைக் காட்டி அவரைத் தனியே விடச் சிநேகாவின் மனம் ஒப்புக் கொள்ளவில்லை.

தன்னுடைய ஜெர்மனிய அறிவை வளர்த்துக் கொள்ளவும், ஜெர்மனியரைப் படிக்கவும் இந்தத் தொழில்தான் சிநேகாவுக்குத் துணைபுரிகின்றது. அவள் சாரதிப் பத்திரம் பெறக் காரணமானதும் இத்தொழில்தான். ஆத்மார்த்தமாக வயதானவர்களை, அதுவும் ஞாபகங்களை இழக்கின்றவர்களையும், தனிமை வலியில் இருப்போரையும் தேடிச் சென்று மகிழ்ச்சியை அவர்களுக்கு அள்ளிக் கொடுக்கின்ற தொழில். இப்போது அவள் வலியை விட அந்தக் கீசலாவின் மகிழ்ச்சி அவளுக்கு அவசியமாகப்பட்டது. lewa என்னும் நிறுவனத்தில் இதற்கான கற்கைநெறியைச் சாரதி அனுமதிப் பத்திரம் பெறும் பயிற்சியுடன் கற்றாள். அங்கு பல நண்பர்களும், அன்பான ஆசிரியரின் உறவும் கிடைத்தது. ஆசிரியர் பிறப்பால் ஜெர்மனியப் பெண். ஆனால், மனத்தால் இந்தியப் பெண். அவருக்கு இந்திய உணவே அமிர்தம், யோகா கைவந்த கலை, சைவ உணவுப் பிரியை. அதனால், சிநேகாவும் அவருக்குப் பிரியை.

நோயின் தாக்கம், அதற்கான பரிகாரம், நோயாளிகளுக்கு எவ்வாறு சமைக்க வேண்டும்? என்ன சமைக்க வேண்டும்? எப்படிப் பரிமாற வேண்டும்? என்பவை கற்கை நெறியில் அவசியமாக இருந்தன. தலைமயிரைக் கட்டுவதிலிருந்து பாத்திரங்களைப் பராமரிப்பது, உணவு

மேசையை அலங்கரிப்பது போன்றவைகூடக் கற்கை நெறிக்குள் அடங்கும்.

“நாளை இந்திய உணவு சமைப்போமா? என்று ஆசிரியர் கேட்பார். எல்லோரும் யா...... என்று ஆமோதிப்பர். அங்குத் தலைமை சமையற்காரி சிநேகா. அதற்கான உணவுப் பொருட்களைச் சிநேகாவும் நண்பர்களும் கடைக்குச் சென்று வாங்கி வருவார்கள். குறித்த நாள் எடுபிடிகள் சுற்றவர நிற்பார்கள். ஆனால், இதில் இந்திய உணவு பிடிக்காதவர்களும் அடங்குவார்கள். அவர்கள் அருகே நெருங்க மாட்டார்கள். எமது நோயாளிகளுக்கு இந்த உணவு நாம் தயாரிக்க மாட்டோம் என்று சிகரெட் புகைப்பதற்காகச் சென்று விடுவார்கள். ஆனால், இந்திய நோயாளி உங்களுடைய வாடிக்கையாளராக வந்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டு ஆசிரியை அவர்களைப் புகைப்பதை முடித்து விட்டு வந்து சிநேகா செய்வதை அவதானியுங்கள் என்று கட்டளை போட்டு விடுவார்.

இங்கு எந்தக் கற்கை நெறியானாலும் புகைப்பதற்கு நேரம் ஒதுக்குவார்கள். புகைப்பதும், கோப்பி அருந்துவதும் ஜெர்மனியர்களின் முன்னிலை பழக்கம். குளிர் நாட்டில் அவர்களுக்கு உடல் சூடேற்றுவதற்கு இவை இரண்டும் அவசியமாகப்படுகிறது என்று நினைக்கிறேன். பனிக்காலத்தில் புகைக்காமலே வாயிலிருந்து புகை தள்ளுவார்கள்.

அவர்கள் வெள்ளைப்பூண்டு உடைக்கும் போது மூக்கைப் பொத்திக் கொண்டு அவர்கள் நிற்பதைப் பார்க்கப் பாவமாக இருக்கும். இஞ்சி, மஞ்சள், போன்றவற்றால், இந்திய இலங்கை நாட்டவர்கள் ஜெர்மனியர்களுக்குப் பெருமைக்குரியவர்களாகக் காணப்படுகின்றார்கள். சிநேகா கற்கை நெறி முடியும் வரை உறைப்பில்லாத இந்திய உணவை lewa நிறுவன ஆசிரியர்களும் நிர்வாகிகளும் சுவை பார்த்து மகிழ்ந்திருந்தனர்.

சிநேகா தனக்குத் தெரிந்த சமையற்கலை, கணினிக் கலை, மேக் அப் கலை, கண் மயிர் திருத்துதல் என்று தன்னைச் சுற்றி நண்பர்கள் குழாமை ஓய்வு நேரத்தில் வைத்திருப்பாள். கலகலப்பாகக் கற்கை நெறி நடைபெற்று நாள்கள் கடந்து போயின. அந்நிறுவனத்தினுள் நுழைந்தால், வெளியே வரும் வரை சொந்தக் கவலைகள் எதுவுமே கூட வருவதில்லை. பொதுவாகவே ஜெர்மனியர் இறுக்கமானவர்கள். இலகுவில் சிரிக்க மாட்டார்கள். இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள

மாட்டார்கள், வேற்று நாட்டவர்களை நெருங்க விட மாட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன.

ஆனால், ஒவ்வொன்றும் அவர்கள் பழகும் விதத்திற்கேற்ப மாறுபடும் என்றே கருதுகின்றேன். ஒரு பெரிய கொடிய யுத்தத்தினால், அழிந்து நிமிர்ந்திருக்கும் ஒரு நாடு ஜெர்மனி. அந்தச் சந்ததியினரின் ஆதார வேர்களிலே ஆழமாக அந்த வடுக்கள் படிந்திருக்கும். இலங்கை யாழ்ப்பாண மக்களைப் புலம்பெயர்வில் அப்படித்தான் சொல்வார்கள். கலகலப்பில்லாது என்றுமே சோகத்தைச் சுமந்து, சொற்களிலே போர் இழப்பின் சாயலைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் வார்த்தைகள் சுமந்திருக்கும் மக்கள் என்பார்கள். புலம்பெயர்ந்த மக்கள் அனைவரும் ஒருவகையில் மனவழுத்தம் உள்ளவர்களே. மெல்ல மெல்லக் காலமாற்றம் அவர்களின் மனங்களைக் கழுவித் துடைத்து மகிழ்வு மலர்களாய்த் தூவ வேண்டும். இதற்குக் காலம் தான் பதில் சொல்லும்.

சிநேகா பெறுமதியான சான்றிதழுடன் கற்கைநெறி பூர்த்தியாகி அதற்கான பயிற்சியை நாள் பராமரிப்பு நிலையத்தில் 2 மாதங்கள் பெற்றுக் கொண்டாள்.

சக்கர நாற்காலியில் நோயாளியைத் தள்ளிக் கொண்டு செல்வது, டிமென்சியா என்று சொல்லப்படும் மறதி நோய் கண்ட நோயாளிகளுக்குப் பயிற்சியளிக்கும் விளையாட்டுக்கள், செய்முறைப் பயிற்சிகள், உணவு பரிமாறும் முறைகள், அவர்களுடன் கதைக்கும் முறைகள், பண்டிகைகளுக்கு அவர்களுடைய இருப்பிடங்களை அலங்கரிக்கும் முறைகள், பாகின்சன் என்று சொல்லப்படும் நரம்புத் தளர்ச்சி நோயாளிகளைப் பராமரிக்கும் முறைகள், அவர்களுக்கான உணவு தயாரிக்கும் முறைகள், என அனைத்தையும் பயின்றாள். அடுத்த மாதமே எதிர்பாராத விதமாகப் பயிற்சியுடன் கூடிய வேலையும் அமைந்து விட்டது.

முதலாவது நோயாளி டிமென்ஷியா நோயாளி கிளமென்ஸ். 7 பிள்ளைகளைப் பெற்ற ஒரு இசை ஆசிரியர். தன்னுடைய 60 வயதிலேயே 80 வயதானவர் போல் காட்சியளிக்கின்றார். மனைவி கிறிஸ்தவத் தேவாலயத்தில் பணிபுரிகின்றார். இசையில் நாட்டம் உள்ளவர்களுக்கும் அதைக் கையாளுபவர்களுக்கும் டிமென்ஷியா நோய் வராது என்று சொல்வார்கள். ஆனால், கிளமென்ஸ் வீட்டு 3 மாடிக்கட்டிடத்தில் ஒவ்வொரு

மாடியிலும் ஒவ்வொரு பியானோ இருக்கின்றது. இப்போதும் கிளமென்ஸ் பியானோ வாசிக்கின்றார். ஆனால், தப்புத்தப்பாக வாசிக்கின்றார்.

எப்படித்தான் இசையோடு வாழ்ந்தாலும் மழைக்கால ஈசல்கள் மடிந்து வீழ்வது போல் இந்த மூளையோ செல்களைக் கழட்டிக் கழட்டி விடுகின்றதே. சிநேகாவை கண்டவுடன் கிளமென்ஸை சிநேகாவிடம் ஒப்படைத்து விட்டுத் தன் பணிக்கு மனைவி போய்விடுவார்.

வாரத்தில் இரண்டு நாள்கள் கிளெமென்ஸ் அசைவுகளை அக்கறையுடன் கவனிக்கும் பொறுப்பு சிநேகாவிடமே வாய்த்திருந்தது.

காலை உணவு உண்கின்ற போது ஒரு துண்டுப் பாண் உண்பதற்கு ஓர் அரைமணி நேரம் எடுக்கும். பட்டர் பூசுவது போல் மேசையில் பூசிக் கொண்டு இருப்பார். சிநோகாவும் காலை உணவை அவருக்கு ஏற்றது போல் அருகே வைப்பாள். தன்னை அறியாமல் அதனை எடுத்து உண்பார். வலது கை பற்றும் இடத்தில் வசதியாகக் கோப்பிக் கப்பை வைப்பாள். அதன் பிடி அவருக்கு ஏற்றது போல் இருக்க வேண்டும். இல்லையென்றால் தடுமாறிவிடுவார்.

உணவை அவருடைய கவனிப்பில் வைத்துவிட்டுப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருப்பாள். பத்திரிகை வாசிப்பது அவருக்குப் பிடிக்கும். அதில் என்ன விளங்குகின்றதோ யாருக்கும் தெரியாது. கேள்வி கேட்டால் பதில் வராது. ஆனால், சிநேகா வாசிக்க வேண்டும். அதன் பின் தொலைக்காட்சியைப் போட்டுவிடுவாள். இலாவகமாகச் சோபாவில் படுத்திருந்து தொலைக்காட்சியைப் பார்ப்பார். ஆனால், அதனை விளக்குவதற்குரிய சொற்கள் அவருக்குத் தெரியாத மழலையாக அவர் இருப்பதுதான் வேடிக்கை.

சில சமயம் சமையலறையைக் குளியலறை என்று நினைத்துச் சிறுநீர் கழிக்க ஆயத்தமாகி விடுவார். எது சமையல் அறை, எது குளியலறை என்பதை அவருடைய மூளை மறந்து விட்டது. கண்ணும் கருத்துமாக இருந்து அவரைக் குளியலறைக்குள் அழைத்துச் சென்று விட வேண்டும். மெல்ல மெல்ல அவர் செயற்பாடுகளில் மாற்றம் காணவே நிரந்தரமாக வயோதிபர் இல்லத்தில் விடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால், அப்பணியிலிருந்து மாற்றலாகி சிநேகா வேறு ஒருவரிடம் செல்ல வேண்டியதாகிவிட்டது.

உடல் ஓர் ஆச்சரியம். அது ஓர் இயந்திரக்கூடம். பாய்ச்சப்படும் இரத்தத்தைப் பம்ப் பண்ணுகின்ற சத்தத்தைக் கேட்கும் போது பெரிய தொழிற்சாலையின் சத்தம் கேட்கும். அதுபோலவே சிறுநீரகமும் நீரை அடிக்கின்ற சத்தம் காதுகளைப் பொத்த வைக்கும். எமக்குள்ளேயே இத்தனை சத்தம் இருந்தும் எம்மால் அதனைக் கேட்க முடியாமல் இருக்கின்றதுவே ஓர் ஆச்சரியம் தான்.

எந்த அளவுக்கு மனிதனுக்கு முடியுமோ, முடிய வேண்டுமோ அதைத்தான் இயற்கை கொடுத்திருக்கின்றது. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு மேலே மனிதர்களின் கண்களால் பார்க்க முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழே உங்கள் கண்களால் காணமுடியாது. பக்றீரியாக்களையோ வைரஸ்களையோ உங்களுடைய கண்களுக்குப் பார்க்கும் சக்தி இல்லை. பார்க்கும் சக்தி இருக்கவும் கூடாது. நினைத்துப் பாருங்கள். உங்கள் உடலிலே நெற்றி முகங்களிலே எத்தனை பக்றீரியாக்கள் நடமாடிக் கொண்டிருக்கின்றன தெரியுமா? உங்கள் உடலிலிருந்து இறந்து மடியும் செல்களைத் தோல் சொடுகுகளை உண்பதற்காக உங்கள் மேலேயே திரிகின்றன. இவற்றை நீங்கள் பார்க்க முடியுமாயிருந்தால் உங்களால் நிம்மதியாக இருக்க முடியுமா? உங்களுடைய மனநிலை எப்படி இருக்கும். அதனால், யாருக்கு என்ன வேண்டுமோ. அது அளவாகத்தான் தரப்பட்டுள்ளது.

இவ்வாறான உடலுக்குக் கட்டளையிட்டுச் சரியான முறையில் தொழிற்பட வைக்கின்ற தலைமையகமாக இருப்பது இந்த மூளைதான். இது பழுதடையத் தொடங்கிவிட்டால் யார் திருத்தம் செய்ய முடியும். மூளை ஆரம்பத்தில் பதிந்து வைக்க வேண்டிய சில செய்திகளைப் பதிவு செய்வதற்குரிய பகுதி பாதிக்கப்படப் பதிவு சரியான முறையில் நடைபெறாது. அந்தப் பதிவு செய்த விடயத்தை மீளப் பெற முடியாது. மூளை மறந்து போகும். ரேப் ரெக்கோடரில் பதிவு செய்த ஓர் இடம் பழுதுபட்டால், அந்த இடத்தில் பதிவு செய்த விடயங்கள் எங்களுக்கு அலறலுடன் வரும். அல்லது வராது. அது போலவே மறந்த செய்திகளை நாம் பெற முடியாது மறந்து போகின்றோம்.

அதுபோலவே உடலின் இயக்கத்திற்கு மூளை கட்டளையிடும் பகுதிச் செல்கள் அழிந்து போனால் மூளை கட்டளையிடாது. உடலின் உறுப்புகளின் செயற்பாடு நின்று போகும். இதயத்தை இயக்க மூளை கட்டளையிடவில்லை என்றால் இதயம் செயற்படாது மனிதன் இறப்பைச்

சந்திக்கின்றான். மூளைச் செல்கள் அழிந்து கொண்டிருக்கின்ற மனிதர்களின் நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்பதைக் கற்று அனுபவித்துக் கொண்டிருக்கும் சிநேகா மாற்றலாகி வேறு ஓர் இடம் சென்றாள்.

இவர்கள் கணவன் மனைவி இருவரும் டிமென்ஷியா நோயாளிகள். இவர்கள் இருவரும் தபால் நிலையத்தில் வேலை செய்தவர்கள். அழகான இல்லம். இல்லம் நிறைந்த புத்தக அலமாரிகள். சிநேகா வீட்டு அழைப்பு மணியை அழுத்தும் போது பீப்பரே கதவைத் திறப்பார். திருமதி பீப்பர் காலை உணவு அருந்திக் கொண்டு இருப்பார்.

ஜெர்மனியர்கள் உணவருந்தும் அழகே ஒரு தனி அழகுதான். அழகான மேசை விரிப்பு, அதன் மேலே உணவருந்தும் தட்டின் கீழ் விரிக்கும் துணி, அதன் மேலே தட்டு, வலது கைப்புறத்தில் கோப்பிக் கோப்பை, அதன் அருகே அவித்த முட்டை அழகான பாத்திரத்தின் மேல் நிற்க வைத்து அதனருகே மிளகுதூள், உப்பு வைக்கும் உருவங்கள் அமர்ந்திருக்கும். மேசையில் வரிசையாக அடுக்கப்பட்ட சீஸ் வகைகள், சலாமி என்று சொல்லப்படும் இறைச்சியில் செய்யப்பட்ட தட்டையான இறைச்சி வகைகள், ஜேம், பழரசம், வகைவகையான பாண்கள். இப்போது ஆசிய நாடுகளில் உல்லாச விடுதிகளில் இது பழக்கத்தில் இருக்கின்றது. ஆனால், வீடுகளில் வழக்கத்தில் இல்லை. நாம் தான் ஆசிய நாடுகளில் இட்லி, தோசை, சாம்பார் என்று வழித்து உண்டு. கைவிரல்களில் காணப்படும் உணவையும் நக்கிப் பதம் பார்ப்பவர்களாயிற்றே.

ஜெர்மனியர் 300 வகையான பாண்களை உண்ணுகின்றார்கள். காலை உணவு இராஜவுணவாக அமைந்திருக்கும். இவ்வாறு காலை உணவு மேசையை அலங்கரித்து விட்டு மேசை அருகே திருமதி பீப்பர் இருக்கின்றாள். குடன் மோர்கன் என்று காலை வணக்கம் சொல்லி சிநேகா அருகில் அமர்வாள். அவளும் குடன் மோர்கன் சொல்லிவிட்டு உணவருந்தத் தொடங்கிவிடுவாள்.

தன்னை அறிமுகம் செய்த சிநேகா, இருவருடனும் சேர்ந்து கோப்பி அருந்துவாள். இருவரும் உணவருந்தி முடிந்தபின் நடப்பதற்குப் போவதற்கு ஆயத்தமாவார்கள். நல்ல காற்றோட்டமுள்ள இடத்திற்குக் கூட்டிப் போவதற்காக அவர்களைச் சிநேகா தன்னுடைய வாகனத்தில் ஏற்றிச் செல்வாள். நடக்கும் இடம் வந்தபின் இருவருடனும் சேர்ந்து நடக்கும்

போது சிறு குழந்தைகள் போல் வானத்தில் பறக்கும் விமானங்களைப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள். கதைகள் மூலம் அவர்களின் பழைய நினைவுகளை மீட்டியபடி சிநேகாவும் அவர்களுடன் நடந்து சென்று திரும்புவாள். வீட்டிற்குத் திரும்பி ஞாபகங்களை வரவழைக்கும் விளையாட்டுக்களை அவர்களுடன் இணைந்து விளையாடுவது வழக்கம்.

பேசிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் பேசப்படும். சொற்களில் தொடர்ச்சி இருக்காது. ஆனால், அன்புக்கு மட்டும் பஞ்சமில்லை. கணவன் மனைவியிடையே காணப்படும் அன்னியோன்யம் பிரமிக்க வைக்கும். ஜெர்மனியர்கள் பாசத்தைக் காட்ட வேண்டுமானால் காதலை வெளிப்படுத்த வேண்டுமானால், உடனே வெளிப்படுத்தி விடுவார்கள். அடுத்தவர்கள் பார்ப்பார்கள் என்னும் கவலை அவர்களுக்கு இல்லை. என்னுடைய மனைவியை நான் கட்டியணைக்க எனக்கு என்ன அச்சம் என்பார்கள். தமிழர்கள் தொட்டுக் கொள்வதற்கே சூழல் சுற்றம் பார்ப்பார்கள். எதற்கும் வெட்கம், அச்சம். ஆனால் இந்தத் திரு.திருமதி பீப்பர் அன்பைக் கொட்டி அரவணைக்கும் கணவன் மனைவி. நடக்கும் போது இருவரும் கைகளைப் பிடித்துக் கொண்டு நடக்கும் அழகே தனியழகு. பீப்பர் மனைவியை விடக் கொஞ்சம் நோயின் பாதிப்புக் குறைந்தவர். மனைவியின் கைகளைப் பிடித்து ஆறுதலாகப் பேசி அன்பைப் பகிர்ந்து கொள்வார்.

பிள்ளைகளில் மூத்தவள் ஒவ்வொரு நாளும் பெற்றோரைத் தேடிவருவதையும் கொஞ்சம் மறதி கூடிய தாயைக் குளிக்க வைப்பதையும் வீட்டு அலுவல்களைக் கவனிப்பதையும் சிநேகா பார்த்து இரசிப்பாள். வரும்போதே ஹலோ மம்மா, பப்பா என்று இருவரையும் கட்டியணைத்து முத்தம் கொடுப்பாள்.

தாயும் தந்தையும் பிள்ளையைக் கொஞ்சிக் குலாவுவதை விட அழகானது பிள்ளை தாய் தந்தையரைக் கட்டியணைத்து அன்பைப் பெருமைப்படுத்துவது.

ஏதோ ஐரோப்பியர்கள் பாசம் குறைந்தவர்கள், பெற்றோர்களை விடுதிக்கு அனுப்பிவிடுவார்கள். ஆசிய நாட்டவர்களே அன்பின் வடிவம் என்று பலர் கொண்டிருக்கும் எண்ணமானது அனுபவமற்றவர்கள் கூறுகின்ற வார்த்தைகளே. நமது நாட்டிலே கூடவே பெற்றோரை வைத்திருந்து நாளும் ஏச்சும் பேச்சும் அவமதிப்பும் செய்கின்ற எத்தனையோ பேரை நாம் அறிந்திருக்கின்றோம்.

‘‘பேசாமல் இருங்கள்’’ என்று அதட்டுவதையும்

‘‘வயசானால் தந்ததைச் சாப்பிட்டு விட்டு கம்மென்று இருக்கலாமே’’ என்பவர்களையும்

‘‘தொணதொண என்று தொடங்கிட்டீங்களா?

என்று வசை பாடுபவர்களையும் நாம் கண்டுதான் வளர்ந்திருக்கின்றோம். உலகத்துக்குப் பெற்றோரை வீட்டில் வைத்துப் பார்க்கின்றோம் என்று சொல்லி அவர்களைக் கரித்துக் கொட்டுபவர்களை அறியாதவர்கள் இல்லை. ஆனால், எல்லோரும் அப்படி இல்லை என்றாலும் இருக்கின்றார்கள்.

ஜெர்மனியில் வயதான காலத்தில் அவர்களுக்குச் சுதந்திரம் தேவை என்று எண்ணம் கொண்ட பிள்ளைகளும், எமக்கு அமைதி தேவை என்று எண்ணுகின்ற பெற்றோர்களுமே அதிகம். அதற்காக அவர்கள் பாசம் குறைந்தவர்கள் என்று எண்ணத் தேவையில்லை. தேவையான போது சந்திப்பதும், தேவையில்லாத போது அமைதியாக வாழவிடுவதும் இந்த நாட்டுப் பண்பு. கிறிஸ்மஸ் பண்டிகை என்றால், குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடுவார்கள். பேரன், பேத்தி, பூட்டன், பூட்டி என்று வீடே அமர்க்களப்படும். ஓபா, ஓமா என்று பிள்ளைகள் பாட்டா, பாட்டிகளை அணைக்கும் விதமே தனி ரகம்.

இவ்வாறான ஜெர்மனியக் கலாசாரப் பதிவுகள் சிநேகா வாழ்க்கையில் படிக்காமலே பாடம் கற்றுத் தந்தன. இவ்வாறுதான் சிநேகா வாழ்க்கை ஜெர்மனிய நோயாளிகளுடன் தொடர்ந்தது.

இன்று கீசலா வீட்டிற்குப் போக வேண்டிய பணி. மருத்துவரிடம் போகச் சொல்லும் கணவனை மறுத்து கீசலா என்ற நோயாளியிடம் போகவேண்டும் என்றும் அவளைக் கவனிப்பது அவசியம் என்று கூறியபடி நொந்த தேகத்துடன் பயணமானாள்.

மனது போட்ட கட்டளையை உடல் வாங்கியது. கணவன் அரவிந்தன் வீட்டிலே நின்ற காரணத்தால் சிநேகாவுக்கு அவரே சாரதியானார். கீசலா சிநேகாவைக் கண்டவுடன் முகம் மலர வரவேற்றாள். தனியே இருப்பவர்களுக்கு யாராவது வந்தால் மகிழ்ச்சி தாண்டவமாடும். முதல் கேள்வி

‘‘கோப்பி குடிக்கின்றாயா?

சிரித்தபடி

“இருங்கள் கீசலா, நான் கோப்பி தயாரிக்கின்றேன்” என்றபடி சமையலறைக்குள் சென்று இருவருக்கும் கோப்பிப் போட்டு எடுத்து வருகின்றாள். இருவரும் அமர்ந்திருந்து கோப்பியைச் சுவைக்கின்றார்கள்.

கொஞ்சம் நடந்து வருவோமா என்று கேட்டபடி கீசலாவை அருகே இருந்த பூங்காவுக்கு அழைத்துச் செல்கிறாள் சிநேகா.

தாங்கமுடியாத கை வேதனை. ஜாக்கெட்டை அணிவதற்குக் கூட முடியாத நிலை. பச்சைப் புண் அப்படித்தானே வலிக்கும். கொஞ்சம் மெத்தென்று ஒரு தலையணைக்கு மேல் கையை வைத்து ஆறுதலாகப் படுத்திருந்தால்தானே அவளுடைய உடம்பே அவளுக்கு வைத்தியம் பார்க்கும். மகிழ்ச்சியோ குதூகலமோ எல்லாமே உடலில் நோய் இல்லாத போதுதான் அனுபவிக்க முடியும். இந்த வாழ்க்கை பொத்தி வைத்திருந்த எதிர்பார்க்காத வலியை சிநேகாவுக்கு அறிமுகப்படுத்தியது.

கீசலா பேசிக் கொண்டே வருகிறாள். அவள் பேச்சை முழுவதுமாக அனுபவிக்க முடியாத நிலையில் சிநேகா. இடையிடையே ம்.. ம்... நான் தொழிலுக்குத் துரோகம் செய்கின்றேனா என்று ஒரு தடவை சிந்தித்துப் பார்க்கின்றாள். மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டிய கீசலாவுடன் சரியாகப் பேசக் கூட முடியவில்லையே. வலி தாங்க முடியவில்லை.

“கீசலா வீட்டிற்குத் திரும்புவோமா. நேற்று விழுந்து விட்டேன். என் கைவலியால் உங்களுடன் சரியாகப் பேசக்கூட முடியவில்லை” என்றாள்.

உடனே கீசலாவும் “ஏன் எனக்கு முன்னமே சொல்லவில்லை. உடனே மருத்துவரிடம் போ... இப்போது என்னை வீட்டில் விட்டுப் போ” என்றாள்.

பொதுவாகவே வேலை நேரம் 3 மணித்தியாலங்கள். ஒரு மணித்தியாலமே சிநேகாவால் சமாளிக்கக் கூடியதாக இருந்தது. வீட்டில் கீசலாவை விட்டுப் பின் எத்தனை மணிநேரம் அவளுடன் இருந்தேன் என்பதற்கான கையெழுத்தைப் போட்டவுடன் கணவனுக்குத் தொலைப்பேசி அழைப்பு விட்டாள். அரவிந்தனும் வந்தவுடன் நேரடியாக மருத்துவமனைக்குப் போனாள்.

270 க்கும் மேற்பட்ட எலும்புகளுடன் பிறந்த மனிதன் முதிர்ந்த தன்மையுடன் வளர்ந்த போது 206 எலும்புகளைத் தாங்குகின்றான்.

தசைகள் 639. கோடிக்கணக்கான நரம்பு செல்கள், இத்தனையையும் மறைத்துத் தோல் போர்த்திய தேகமாக வலம் வரும் போது யாரும் உடலுக்குள் என்ன இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்வதில்லை. எலும்பில் வலி வரும் போது தான் எமக்காக உழைக்கின்ற எலும்பு அடிபட்டு அழுகின்ற வேதனை புரியும்.

எலும்பை மட்டுமே படித்த மருத்துவர் சுத்தியலால் தட்டித் தட்டித் தோலின் மேல் அழுத்திப் பார்த்து நடக்கவிட்டுக் கைகளை அசைக்க விட்டு வலிக்கின்ற தேகத்தின் அழகு நடனம் பார்ப்பார்.

இறுதியாக வழமைபோல் பரிசோதித்த வைத்தியர் எக்ஸ்ரே படம் பார்த்தாலேயே சரியான சிகிச்சை அளிக்க முடியும் என்று சொன்னதால் எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. மீண்டும் கணினிக்குள் புதைகின்றார். தோள் மூட்டில் ஒரு சவ்வு கிழிந்திருக்கின்றது. ஒரு சிறிய சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்கிறார்.

என் உடலில் கத்தி வைப்பது என்றால், அதை நான் தான் தீர்மானிக்க வேண்டும். என்னால் முடியும் என்று என் மூளையும் என் உடலும் எனக்குக் கட்டளை இட வேண்டும். உடலுக்குள்ளே ஜீவகாந்தசக்தி ஓடிக் கொண்டிருக்கும் போது அதன் தொடர்பைக் கத்தி வைத்து நீக்கும் நிலையை விரும்பாதவள் நான் என்ற சிந்தனை அவள் மனத்துக்குள் உறுதியானது.

“டாக்டர் வேறு வழி இல்லையா? முதலில் ஏதாவது உடற்பயிற்சிச் சிகிச்சை செய்து பார்க்கலாமா?” என்றாள்.

“ஓகே. எழுதித் தருகின்றேன். சரி வந்தால் பார்ப்போம். வேலைக்கு ஒரு கிழமைக்கு விடுப்புத் தருகிறேன்” என்று கூறி உடற்பயிற்சிக்கும் எழுதித் தருகின்றார். எங்களுடைய மருத்துவர்கள் போல நீ என்ன மருத்துவரா? எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ சொல்லித் தருகிறாயா? என்று அவர் கேட்கவில்லை.

ஆனால், அதற்கிடையில் தனக்கும் ஓர் உழைப்புத் தேட எலக்ரோ தெரபி என்று நோ கண்ட இடத்தில் மின்சாரம் பாய்ச்சி வலியைக் குறைக்கும் சிகிச்சை செய்யும் படியும் எழுதித் தருகின்றார். 6 தடவை 20 நிமிடங்கள் மெல்லிய ஊசி குத்துவது போன்ற உணர்வைத் தந்த அந்த இயந்திரம் 6 தடவைக்குப் பணத்தைக் கறந்து மருத்துவருக்குக் கொடுக்கும். வலியில் மாற்றம் தரப் போவதில்லை என்று அவளுக்குத் தெரியும். எதற்கும் முயன்று பார்ப்போம் என்று முடிவை எடுக்கின்றாள்.

பொதுவாகவே A.O.K என்று சொல்லப்படும் மருத்துவக் காப்புறுதி நிறுவனத்தில் மாத சம்பளத்தில் ஒரு பகுதி செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. இதனை அரவிந்தன் தன்னுடைய சம்பளத்தில் ஒவ்வொரு மாதமும் செலுத்துவது வழக்கம். அதனைவிட இவ்வாறான சிகிச்சைகளுக்கு மேலதிகமாகப் பணத்துடன் 20 அல்லது 25 ஒயிரோக்கள் செலுத்த வேண்டும். A.O.Kக்குச் செலுத்துகின்ற பணம் இவ்வாறான பயிற்சிகளுக்கு ஒரு பகுதியைப் பொறுப்பேற்கின்றது. மிகுதிப் பணத்தை நோயாளியே செலுத்த வேண்டும். அதுகூட அவர்கள் பணி புரிபவர்களாக இருந்தால் மட்டுமே.

சமூக உதவிப் பணத்தில் வாழுகின்றவர்களுக்கு முழுப்பணமும் சமூபகார அலுவலகமாகிய சோசல் நிறுவனம் செலுத்தும். இப்போது பலவிதமான காப்புறுதி நிறுவனங்கள் ஜெர்மனியில் இயங்குகின்றன. மேலதிகமாக 25 ஒயிரோக்கள் சிநேகா பணம் செலுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால், 6 சிகிச்சையும் செய்து முடிந்த பிறகுதான் பயிற்சி நிறுவனத்தினர் பணத்திற்காகக் கைநீட்டுவார்கள்.

மேலும் நோவைக் குறைப்பதற்கான மாத்திரைகளும் சிநேகாவுக்குக் கையளிக்கப்பட்டன. அவள் வாழ்க்கையில் எலும்பு நோவும் கூட வருவதற்குக் குளிர்பிரதேசமும் ஒரு காரணமாகின்றது. வெயில் பிரதேசங்களில் வாழ்ந்து அனுபவித்த எலும்புகள், ஐரோப்பிய நாடுகளில் ரின் மீன் எலும்புகள் போல் நொறுங்கித்தான் இருக்கும். தசை போர்த்திய எலும்புகளைப் பாதுகாக்கத் தசைகளைத்தான் உறுதியாக வைத்திருக்க வேண்டும்.

உடனடியாக மின்னஞ்சலில் மருத்துவ விடுப்பை வேலைத் தளத்துக்கு அனுப்பிவிட்டாள்.

ஐரோப்பிய நாடுகளில் 3 மாதங்களே கோடை நாட்களாக இருக்கும். அக்காலங்களில் கூட இடையிடையே குளிரும் மழையும் மாறி மாறி வந்து வீட்டுக்குள் அடைய வைத்துவிடும். ஐரோப்பியர்கள் வருடத்திற்கு ஒரு தடவை சுற்றுலா போய்விடுவார்கள். அதுகூட கோடை விடுமுறைக்கே செல்வது வழக்கம். மாரி காலக்குளிரில் நன்றாக வேலை செய்வார்கள். வெப்பம் சோம்பலைத் தருவதாகவும், குளிர் சுறுசுறுப்பைத் தருவதாகவும் கூறிக் கொள்வார்கள். நாங்கள் குளிர் என்றால் போர்த்திக் கொண்டு படுக்க வேண்டும் போல இருக்கிறது என்று சொல்வோம்.

அதனால், கோடை விடுமுறையில் நல்ல சூரியன் ஆட்சி செய்கின்ற நாடுகளுக்கு சன் பார்த் என்று வெயில் குளிப்பதற்காகச் சென்று விடுவார்கள். அவர்கள் தங்களுடைய உடலை நன்றாகப் பராமரிக்கின்றார்கள். வருடம் முழுவதும் தொழிலின் நிமித்தம் படுகின்ற மூளைச் செலவைச் சுற்றுலா மூலம் மீண்டும் சம்பாதிக்கின்றார்கள். இந்த நிலைமை ஐரோப்பிய நாடுகளுக்கு வாழ வந்த ஆசிய நாட்டவர்களுக்கு முடியுமா!

இலங்கையிலிருந்து வேரைப் பிடுங்கி வந்து ஐரோப்பிய நாட்டில் நட்டிருக்கின்றார்கள். வாழ்வதற்கே உழைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதைவிட இந்த நாடானது தத்தெடுத்த மக்களை மட்டுமா வளர்க்கின்றது. அவர்களைப் பெற்றெடுத்த நாட்டையும் அல்லவா வளர்க்கின்றது. ஓடியாடி உழைத்து ஊரிலுள்ள உறவுகளுக்கு அனுப்பி அவர்களையும் வாழ வைக்க வேண்டிய பாரிய பொறுப்பல்லவா அகதிகளாக வந்த மக்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இந்த நிலைமையில் சுற்றுலா என்று உடலையும் உள்ளத்தையும் போற்றிப் பாதுகாக்க அவர்களால் முடியுமா!

என்ன செய்வது எலும்பு வலிகளுக்கு இவ்வாறான வசதி வாய்ப்புக்களைச் செய்து தரும் உடற்பயிற்சிகளுக்குச் செலவு செய்வோம் என்ற எண்ணத்துடன் சிநேகா வழமையாகத் தனக்குப் பயிற்சியளிப்பவனாகிய வன்னா என்பவனிடம் மருத்துவர் தந்த சீட்டை வழங்குகின்றாள்.

வன்னா. ஜெர்மனிய வாழ்க்கையில் வன்னாவை அழித்து விட்டு சிநேகாவின் எலும்பு வரலாற்றை எழுத முடியாது. கழுத்து எலும்பு, முழங்கால் எலும்பு, இடுப்பு எலும்பு என்பவை இருப்பதை அடிக்கடி அடையாளம் காட்டிக்கொண்டிருக்கும் உணர்வுகளானது அடிக்கடி தேடுவது வன்னாவைத்தான்.

கம்போடிய வேரில் வளர்ந்த விருட்சம். பிறந்தது முதல் வாழ்க்கை முழுவதும் அவனுக்கு ஜெர்மனி தான். தந்தை தாயைப் பிரிந்து கம்போடியாவில் வாழ்வதால், 2, 3 வருடங்களுக்கு ஒரு தடவை தந்தையைத் தரிசனம் செய்வதற்காக கம்போடியா போய் வருவான்.

தாய் காணும் பொருட்கள் எல்லாம் வாங்கி வாங்கி வீடு முழுவதும் கால் வைக்க முடியாதவாறு நிரப்பி வைத்திருந்தாள். அதனால், சேர்த்து

வைக்கும் உணவுப் பொருட்கள் பழுதடைந்து கிடக்கும். வீடு துப்பரவு செய்வது என்பது அவளுக்குப் புதிய கல்விமுறை. இது ஒரு மனநோய் என்றுதான் கூறுவார்கள். இப்படியானவர்களை ஜெர்மனியில் மெஸ்ஸி (Messy) என்பார்கள். தாயுடன் வாழமுடியாத காரணத்தால், தனியே வீடு வாங்கி வாழ்ந்து வந்தான் வன்னா. ஒருநாள் தன் வீடு நிறைந்த பொருட்களிலேயே தடக்கி விழுந்து 55 வயதிலேயே வன்னாவின் தாய் இறந்து போனாள். அவளுடைய வீட்டைத் துப்பரவு செய்வதற்கே வன்னாவுக்கு 1 மாதம் தேவைப்பட்டது.

வன்னாவுக்கு உடலிலே தசையைத் தேட வேண்டும். வானத்தில் பறக்கின்ற Paragliding என்னும் விளையாட்டும், surfen என்னும் கடலின் மேல் ஒரு மெல்லிய திறந்த படகின் மேல் ஓடும் விளையாட்டும், காட்டுப்பாதையில் நடப்பது, துவிச்சக்கரவண்டியில் பயணிப்பது, உடற்பயிற்சி செய்வது என்று உடலை உறுதியாக்கப் பயிற்சிகள் மேற்கொள்வான். ஜெர்மனியச் சில இளைஞர்கள் போல் அவனுக்குக் காதலிகள் வருவார்கள். வாழ்வார்கள். போய்விடுவார்கள். கேட்டால், W.W.W. என்பான்.

"சிநேகா இங்கு Work, Women, Weather இந்த மூன்றையும் நம்பவே முடியாது என்பான். யாரும் ஒரே வேலையில் இருந்ததில்லை. ஒரு பெண்ணுடன் வாழ்க்கை முழுவதும் வாழ்வதில்லை (வாழ்வது அருமை) காலநிலை நேரத்துக்கு நேரம் மாறிக் கொண்டே இருக்கும். அவனுக்கு ஏற்ற காதலி அமைய வேண்டும் என்று சிநேகா தான் செய்கின்ற தியானத்தில் இறைவனை வேண்டிக் கொள்வாள்.

நல்லவனானாலும் உனக்கு என்ன பிரச்சினை என்று கேட்டால், பெண்கள் என்றால் சலிப்பு (langweiling) என்பான். வேலை முடிந்து வீட்டுக்குப் போனால், கழுத்தை மசாஜ் செய், இந்த நரம்பை நெட்டி முறி என்கின்றார்கள். என்னால் முடியவில்லை. என்னுடைய வேலையை நான் பார்க்க வேண்டும். அவர்களுடைய வேலையையும் நான் பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது என்பான். ஒரு பெண் வீட்டில் இருந்தால் என்னுடைய சுதந்திரம் பாதிக்கப்படும் என்பான்.

அவனைப் புரிந்தது கொள்ள முடிகிறது. சில மனிதர்கள் அப்படித்தான். ஒவ்வொருவரும் தனி மனிதர்கள். அவரவர் வேலைகளை அவரவர் செய்ய வேண்டும். கணவன் மனைவியாக இருந்தாலும்

தம்முடைய அனைத்து வேலைகளுக்கும் துணை தேடக் கூடாது. இது அடுத்தவர்களுக்குச் சலிப்பைக் கொண்டு வந்து விடும். வேலை முடிந்து கணவன் வீட்டிற்கு வருகின்ற போது ஓய்வு எடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே உள் நுழைவான். அங்கும் தொந்தரவு காத்திருந்தால், வாழ்க்கை ஒரு கட்டத்தில் வெறுத்து விடும். ஒவ்வொரு மனிதர்களிடமும் நாம் பல பாடங்கள் கற்றுக் கொள்ளுகின்றோம். வாழ்க்கை முழுவதும் நாம் மாணவர்களாகவே வாழுகின்றோம் என்பது உண்மை.

வன்னாக்கு உறுதியான உடல் இருப்பதாலேயே எந்தப் பெரிய மனிதரையும் அவர்களுடைய கைகளின் இடையிலே தன்னுடைய இரு கைகளையும் கொண்டுவந்து கழுத்தின் பின்புறம் பிடித்துக் கழுத்துக்குள் கையைப் போட்டு இறுக்கிப் பிடித்துத் தூக்க முடியும். நரம்புகளைக் கைகளால் தொட்டுத் தொட்டு அவதானித்து நெட்டி முறிக்க முடியும். கழுத்தைப் பிடித்துப் படாரென்று திருப்பினால் சிநேகா கத்துகின்ற சத்தத்துடன் படபடவென்று நரம்புகள் திரும்புகின்ற சத்தமும் கேட்கும். கழுத்துக்குள் கையைப் போட்டு ஒரு திருப்புத் திருப்பினான் என்றால் முள்ளந்தண்டுக்குள் இருந்து படபடவென்று சிக்கிக்கொண்டு விடுபட முடியாமல் இருந்த எலும்பு நரம்புகள் எல்லாம் அப்பாடா என்று தம்முடைய பழைய நிலைக்கு வந்துவிடும்.

இந்தக் கலையைத் தானே சிநேகாவின் ஆச்சி மிக இலாவகமாகச் செய்தாள். அப்போது அதன் பெருமை புரியவில்லை. எதுவும் கைக்குள் இருக்கும் போது அதன் அருமை புரிவதில்லையே.

சிநேகா கல்வி கற்கின்ற காலத்தில் வித்துவான் எப்.எக்ஸ்.சி நடராஜா அவர்களைப் பார்க்கப் போவாள். அவர்தானே அவளுடைய கலைமாணிப் பட்டத்துக்காக எழுத வேண்டிய ஆய்வுக் கட்டுரைக்கு முழு உதவியும் செய்தார். அவரைக் காணச் செல்கின்ற போது அவர் நீட்டுகின்ற கைக்குள் பார்வதி தயார் செய்து தரும் ஏதாவது தின்பண்டங்களைப் புதைப்பவள் சிநேகா. அதேபோலவே வன்னாவிடம் போகின்ற போதும் வடை, ரோல்ஸ் போன்ற இந்திய உணவுப் பொட்டலம் ஒன்றுடனேயே புகுவாள். உறைப்பில்லாப் பண்டமே அவனுக்கு உகந்தது.

தந்தை தாயை விவாகரத்து செய்து விட்டு கம்போடியா போய்விட்டதனால், தாயுடனேயே ஜெர்மனியில் வளர்ந்தவன். போதைப் பொருள் விற்பனையில் கைதான தம்பி சிறையிலும் ஒரு தம்பி

சிறுவயதிலேயே வீட்டைவிட்டுப் போனவனாகவும் இருந்த காலப்பகுதியில் தாயையும் பறி கொடுத்து வாழ்ந்தவன். தாய், துணைவி ஆகியோரின் அரவணைப்பு இல்லாமல் தனியே வாழுகின்ற ஒருவனுக்குச் சிநேகா கொண்டு செல்லும் உணவுப் பண்டம் பெரிய சுவையாக இருக்கும். அதனால், கையுறையாக வீட்டில் செய்யும் உணவுகள் கொண்டு செல்வது சிநேகாவுக்கு வழக்கமாகியது. அவனுக்காக உறைப்பு இல்லாத உணவுகளைச் சமைப்பாள். மெல்ல மெல்லத் தொடங்கிய உறவு. அவனை வீட்டுக்கு உறவுக்காரன் போலவே ஆக்கிவிட்டது.

சிநேகா வன்னாவுக்கு 26 ஒயிரோக்கள் பணம் செலுத்த வேண்டி யிருந்தது.

இவ்வாறு மருத்துவக் காப்புறுதி எங்களுடைய நாட்டில் இந்தியாவில் இல்லையே என்று பலமுறை சிநேகா கவலைப்பட்டிருக்கின்றாள். எத்தனையோ தனவந்தர்கள் வாழுகின்ற நாடு. முதல் குரங்கு தமிழ்க் குரங்கு என்று சொல்லிப் பெருமை பேசிக் கொள்ளுகின்றோம். மருத்துவத்திற்காகச் செலவு செய்ய முடியாது எத்தனை உயிர்கள் அநியாயமாக உலகை விட்டுப் பிரிகின்றன. ஒவ்வொரு மனிதர்களும் தம்முடைய மாதாந்த வருமானத்தில் குறிக்கப்பட்ட தொகை மருத்துவக் காப்புறுதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டும். அவை அவர்களுக்கு மருந்து, மருத்துவர்க்குக் கொடுக்க வேண்டிய பணம், மருத்துவமனையில் இருந்தால் அதற்குரிய செலவு என்று அனைத்துக்கும் பயன்படுத்தப்படும்.

சிலர் வாழ்நாளில் குறைவாகவே நோய்வாய்ப்பட்டிருக்கலாம். ஆனால், அவர் செலுத்திய காப்புறுதிப் பணமானது வேறு ஒரு சமூக உதவிப் பணத்தில் வாழுபவர்களுக்குப் பயன்படும். சமூக உதவிப் பணத்தில் வாழுபவர்களுக்கு அரசாங்கமே மருத்துவக் காப்புறுதி செலுத்தும். நோய் என்று மருத்துவமனை நுழைந்தால், முதலில் வைத்தியம் அதன்பின்தான் பணம் பற்றிய பேச்சு. இத்தகைய சலுகை எங்கள் தாய் நாட்டில் இல்லையே. இருந்திருந்தால், நோயில் தவிக்கும் மனிதர்கள் மனவலி கொஞ்சம் குறைந்திருக்கும் அல்லவா.

மருத்துவர் கொடுத்த பத்திரத்தை எடுத்துக் கொண்டு சிநேகா உடற்ப யிற்சி சிகிச்சைக்குப் போக வேண்டும். வீட்டிற்குப் போய் அரவிந்தன் சமைத்து வைத்திருந்த உணவை உண்ட பின் கண் அயர்ந்து விட்டாள். அடித்துப் போட்ட உடலுக்கு ஆறுதல் தேவைப்பட்டது. இருந்தாலும் இன்று 2 வேலைகள் பாக்கி இருக்கின்றனவே.

நிருபாவிடம் போகவேண்டும். ஸ்ரியரிங்க்கைப் பிடித்துத் திருப்ப முடியாத வலி. ஈபு புரொபின் என்னும் ஒரு மாத்திரையை வாய்க்குள் போட்டாள். அச்சா... ... போட்டு அரை மணி நேரத்தில் வலியைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டது மாத்திரை. தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர எதையெல்லாம் அழிக்க முடியுமோ அதையெல்லாம் ஒரு கைவரிசை பார்த்து உடனடித் தீர்வாகி விடும்.

ஒரு மணி நேர அசதியிலிருந்து மீண்டும் புத்துணர்ச்சியுடன் எழுந்தாள். குளிருக்கான மேலங்கி அணிகின்றாள். மொத்தமாக ஒரு காலணி அணிகின்றாள். சப்பாத்துக்குள் காலைப் புதைக்கின்றாள்.

''ஐயாட்டப் போயிற்று. நிருபா வையும் சந்தித்துவிட்டு வருகிறேன். மாத்திரை தாக்குப் பிடிப்பதற்குள் வந்துவிட வேண்டும்.'' தகவலை அரவிந்தனிடம் கூறிய வண்ணம் வெளியே போகத் தயாராகின்றாள்.

''நீங்கள் ஒன்றும் கிழிக்க வேண்டாம். மாமாட்டக் கொண்டுபோய் விடுறன். கதைத்துக் கொண்டிருங்கள். பிறகு நிருபாட்டப் போகலாம்.'' ஏசிவிட்டு படபடவென்று வீட்டிலிருந்து மாடிப்படிகளில் இறங்கினான் அரவிந்தன்.

அரவிந்தன் பேச்சுக்கு மறு பேச்சுப் பேச முடியாது. அவன் வைத்ததுதான் சட்டம். பார்வதியும் பரமசிவமும் எப்படி சிநேகாவைப் பார்த்துக் கொண்டார்களோ. அதேபோல் அரவிந்தன் வீட்டு முழுப் பொறுப்பையும் தானே எடுத்துக் கொண்டான். சிநேகா எந்த வேலை செய்தாலும் அவனுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் செய்ய முடியாது என்ற வகையில் பார்த்துக் கொள்ளுவான்.

திருமண பந்தத்தை சிநேகாவும் அரவிந்தனும் ஏற்படுத்திக் கொண்ட நாள் ஊரே கூடி வாழ்த்துச் சொன்னது. பரமசிவம் குடும்பம் கையிலே எதுவுமில்லாமல் ஒரு கைப்பெட்டியுடன் ஊரை விட்டுக் கிளம்பியவர்கள். நீர்கொழும்பு மண்ணில் கால் வைத்த போது 25 ஆயிரம் ரூபாய்கள் சிநேகாவின் சம்பளப் பணம் மட்டுமே இருந்தது. சில சமயங்களில் அரசாங்கமும் நாம் அறியாது உதவி செய்கின்றது. அதை யாரும் கண்டு கொள்ளுவது இல்லை. எம்முடைய இளமைக்கால மகிழ்ச்சியையும், கல்விக்கான உதவியையும், வேலை வாய்ப்பின் பலன்களையும் இலாவகமாக மறந்துவிட்டுக் குறையை மட்டுமே சீர்தூக்கிப் பார்க்கின்ற மனிதர்களாகவே பலர் இருக்கின்றார்கள்.

பரமசிவம் ஓய்வூதியப் பணம் தடைசெய்யப்பட்டது. இளைய மகனுடைய பணம் வங்கியிலிருந்து அடைபட்டுவிட்டது. அரசாங்கத்தின் தடையால் இவர்களுடைய பணத்தை எடுக்க முடியாத நிலை. சிவம் இன்னும் அகதி முகாமில் இருந்தான். அதனால், சிநேகாவினுடைய பணத்தின் உதவியுடன் நீர்கொழும்பில் வாடகை வீடு ஒன்றை எடுத்துத் தங்கினார்கள்.

நீர்கொழும்பு விஜயரெத்தினம் மத்திய கல்லூரியிலே சிநேகாவுக்கு ஆசிரியர் தொழில் கிடைத்தது. தமிழாசிரியர் பற்றாக்குறையால், அப்பாடசாலை 10 ஆம் வகுப்பு சாதாரண தர மாணவர்களுக்கும் உயர்தர மாணவர்களுக்கும் தமிழ் ஆசிரியர் இல்லாத சமயத்திலேயே சிநேகா அப்பாடசாலையினுள் படி எடுத்து வைத்தாள். பெண் அதிபர் அப்பாடசாலையைச் சிறப்பாக நடத்தி வந்தார்.

83 இல் ஏற்பட்ட கலவரத்தில் தமிழர்கள் யாழ்ப்பாணம் என்றும் பிற பகுதிகளுக்கும் ஓடிப் போன போதும் அங்கேயே ஒளிந்திருந்து பாடசாலையை மீண்டும் இயங்க வைத்த பெருமை அவருக்கு இருந்தது. சிநேகாவைக் கண்டதும் அவருக்கு ஏதோ ஒரு நம்பிக்கை பிறந்தது. சிநேகா தன்னுடைய உழைப்பைப் பாடசாலைக்கு முற்றாகக் கொடுத்தாள். நடைபெறாது இருந்த கலைவிழாவைப் பொறுப்பெடுத்து நடத்தினாள். விளையாட்டுப் போட்டிகளில் மிகுந்த ஒத்துழைப்பை நல்கினாள். பாடசாலை நேரம் மாத்திரமன்றி மேலதிக நேரம் பாடசாலையிலேயே செலவு செய்தாள். மாணவர்களின் பாசம் மிதமாக அவளுக்குக் கிடைத்தது.

யாருக்கும் அடிபணியாத மாணவன் நிரோஷனின் தந்தை சிநேகா வீட்டுக்கு ஒருமுறை வந்திருந்தார்.

“மிஸ் நிரோஷனின் போக்கு உங்களுக்குத் தெரியும். அவனை யாராலும் அடக்க முடியவில்லை. என்னுடைய மகனைத் திருத்தி என்னிடம் ஒப்படையுங்கள்” என்று மன்றாடினார்.

“நிரோஷனின் குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட பாதிப்பே இந்த நிலைக்குக் காரணம். என்னுடைய வகுப்பிலே எந்தப் பிரச்சினையும் அவன் தருவதில்லை. இருந்தாலும் பாடசாலை முடிந்தபின் அவனை வீட்டுக்கு அழைத்து அவனுக்காக நேரத்தைச் செலவு செய்கிறேன்” என்று உறுதியளித்தாள். அதன்படி ஒவ்வொரு நாளும் நிரோஷனும் பாடசாலை முடிந்தபின் சிநேகா வீட்டுக்கு ஓடி வந்து விடுவான்.

சிநேகாவின் ஆச்சிக்கு வெற்றிலை பாக்கு வாங்கிக் கொடுப்பது. பரமசிவத்துக்குச் சிகரெட் வாங்கிக் கொடுப்பது. வீட்டிலிருந்து சிநேகாவுடன் செல்லங் கொஞ்சுவது என அவனுடைய வாழ்க்கை சில நாட்களில் மாறிப் போனது. பார்வதி அவனைப் பாசத்தோடு நடத்துவாள். அன்பு உள்ள இடத்தில் கர்வம் அடிபணியும். துடுக்குத்தனமும் அடங்கும். இது நிரோஷன் வாழ்க்கையில் மெய்யானது. அவன் பரீட்சையில் சித்தியடைந்த போது நிரோஷனுடைய தந்தை தன்னுடைய நன்றியைச் சிநேகாவுக்குத் தெரிவித்தார்.

இவ்வாறு தேனீக்களாக சிநேகாவை வலம் வந்த மாணவ மாணவிப் பட்டாளங்கள் அதிகம். கற்பிக்கும் சமயத்தில் மட்டுமே அவள் ஆசிரியை. மற்றைய நேரங்களில் நண்பியாகவே மாணவர்களுடன் பழகினாள். அவளருகே அமர்வதற்குப் போட்டி போட்டு அமர்வதுடன் உரிமைப் போராட்டமும் நடத்துவார்கள். சிநேகா மாணவர்களுக்காக அழுததும், மாணவர்களுக்காக வாதாடியதும், மாணவர்களுடன் கோபித்ததும், மகிழ்ந்ததும் அவளுடைய ஜென்மத்தில் மறக்க முடியாத நிகழ்வுகள்.

சிநேகா பாடசாலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும் போது அவள் பாடம் கற்பிக்காத மாணவர்கள் பாடசாலை பிரதான வாசலில் நிற்பார்கள். அவளை மறித்து பிரத்தியேக வகுப்பு எடுத்துக் கற்பிக்கும்படி வேண்டிக் கேட்பார்கள். சிநேகாவோ தான் பாடசாலையில் கற்பிக்கும் மாணவர்களிடமிருந்து பணம் பெற்றுப் பிரத்தியேக வகுப்பு எடுப்பதை விரும்புவதில்லை. சந்தேகம் இருந்தால் வகுப்பிலேயே கேட்கும்படி பணிப்பாள். ஆனாலும் அவள் பாடம் கற்பிக்காத சில மாணவர்கள் அவளைக் கட்டாயப்படுத்தி வீட்டுக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் பாடம் கற்பதுடன் சிநேகா வீட்டுச் சொந்தங்களுக்கும் அவர்கள் உறவினர்களாகி விடுவார்கள்.

ஆசிரியர்களின் பாரிய பொறுப்பு மாணவர்களைத் தம்முடைய கைக்குள் வைத்திருப்பது. ஒரு தாயாகத் தந்தையாக நண்பர்களாக மாறி உறவாடும் சமயத்திலே மாணவர்களின் அன்பு பொக்கிசமாகக் கிடைக்கும். சிநேகா புலம்பெயர்ந்த பின் அவளுடைய மாணவர்கள் அவளை அழைத்துப் பேசுகின்ற போது மனமகிழ்ச்சியில் திகைத்துப் போவாள்.

பணத்தைச் சம்பாதிப்பதற்காகப் பாடசாலையில் பொழுதைப் போக்கி பிரத்தியேக வகுப்புக்கு அழைக்கும் ஆசிரியர்கள் மத்தியில் சிநேகா

வேறுபட்டுக் காணப்பட்டாள். இதனாலேயே பிரத்தியேக வகுப்பு கற்பிக்கும் நிறுவனங்களுக்கு சிநேகா கற்பிக்கும் மாணவர்கள் வருவதில்லை என்பது பெரிய குறையாக இருந்தது.

அவளுடைய வாழ்க்கையில் நீர்கொழும்புப் பாடசாலை பல ஆழமான பதிவுகளை ஏற்படுத்தியது. மாணவர்களின் அளவு கடந்த அன்பை அங்குதான் அவள் பெற்றாள். பெரிய மாணவர்களைச் சுற்றுலா, கண்காட்சி என்று அழைத்துச் செல்வதாக இருந்தால் சிநேகாவை கட்டாயமாக அதிபர் அனுப்பி வைப்பார். காரணம் அவளாலும் அவளுடைய நண்பி இரசாயனவியல் ஆசிரியை சாந்தியாலும் மட்டுமே அந்த மாணவர்களை அடக்கி வைக்க முடியும் என்பதை அதிபர் நன்கு அறிந்திருந்தார்.

தொழில்களிலே அற்புதமான தொழில் ஆசிரியர் தொழில். அக்கட்டிடம் வெறுமனே கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டதல்ல. ஒவ்வொரு சுவரும் ஒவ்வொரு கதை சொல்லும். எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காலக்கணிப்பீடு அங்குதான் உள்ளது. உலகத்தின் எத்தனை பெரிய பிரச்சினை இருந்தாலும் பாடசாலைக்குள் நுழைந்து விட்டால் மாணவர்களின் முகங்களைக் கண்டால் அனைத்தும் மறந்து போகும். மாணவர்கள் மறக்கச் செய்வார்கள். அன்பை அவர்களுக்கு முழுமையாக வழங்கிப் பாருங்கள். ஆசிரியர்களிடம் முழுமையாகச் சரணாகதி அடைவார்கள். பல அற்புதமான மனிதர்களை ஆசிரியர்களால் உருவாக்க முடியும். ஒன்றை மட்டும் அடிக்கடி சிநேகா மாணவர்களுக்கு அறிவுறுத்திக் கொண்டே இருப்பாள்.

சாக்ரடீஸ் வார்த்தைகள்.

"யார் சொன்னார் எவர் சொன்னார் என்பதை விட்டு விட்டு எவர் சொன்ன சொல்லையும் உனது சொந்த அறிவால் எண்ணிப்பார்."

இதனாலேயே 2 நாட்களுக்கு முன்னேயே தான் கற்பிக்கப் போகின்ற பாடத்தின் அறிமுகத்தை மாணவர்களுக்குச் சொல்லிவிடுவாள். அந்தப் பாடம் நடத்துகின்ற நாள் மாணவர்கள் ஓரளவு ஆயத்தத்துடன் வருவார்கள். தம்முடைய சந்தேகங்களை மறுவாசிப்புக்களை ஆயத்தப்படுத்திக் கொண்டே வருவார்கள். சதீஸ் என்னும் மாணவன் சிநேகாவிடம் வாதிட்டு விடை பெறுவதற்காகவே ஆயத்தமாக வருவான். அவளும் அவனுக்கு ஈடு கொடுக்காமல் கற்பித்து விளக்கத்தைத் தந்துவிடுவாள். இதனாலேயே தமிழ் வகுப்பு மகிழ்ச்சியான கலகலப்பான வகுப்பாக அமைந்து போகும்.

அதிபரும் மகிழ்ச்சியுடன் கவனித்துக் கொண்டு போவார். இதனால், சிநேகா மேலே இருந்த அன்பு அதிபருக்கு நாளுக்கு நாள் அதிகரித்தது. இது மற்றைய ஆசிரியர்களிடம் பொறாமை உணர்வை ஏற்படுத்தியது. ஏற்கனவே அதிபருடன் சில பிரச்சினையில் இருந்த ஆசிரியர்களுக்கு இவ்வாறான உணர்வு ஏற்படுவதில் எவ்விதச் சந்தேகமும் இல்லைதானே.

ஆயினும் முதன்முதலாக 35 ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்து கலைவிழா ஒன்றை அப்பாடசாலையில் சிநேகா நடத்தினாள்.

அடுத்ததாக மாணவர்களுக்குச் சிநேகா மனத்தில் நிறுத்தும் திருவள்ளுவர் குறள்.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

ஒரு மனிதனை மாமனிதனாக மாற்ற இவை இரண்டையும் வேதவாக்காகக் கொள்ள வேண்டும்.

சிநேகா அப்பாடசாலையில் இணைந்து சில மாதங்களிலேயே ஆசிரிய ஆலோசகர் பதவி அவளுக்குக் கிடைத்து விட்டது. கல்வித் திணைக்களத்தில் தமிழ்த்துறைப் பணிப்பாளராகப் பணிபுரிந்த S.A.C.M இனாநூ அவர்கள் தான் பார்வையிடச் செல்கின்ற பாடசாலைகளுக்குச் சிநேகாவையும் அழைத்துச் செல்வார். அவர் ஆசிரியர்களின் கற்பித்தல் முறையைப் பார்வையிட்டுக் குறைநிறைகளை எடுத்துச் சொல்வது ஆசிரியர்களை இருக்க வைத்துப் பாடம் நடத்திக் காட்டுவதாகிய பாரிய பொறுப்புக்களை அவளுக்கு வழங்கியிருந்தார்.

காலப்போக்கில் ஆசிரிய ஆலோசகர் நிரந்தர நியமனம் அவளுக்குக் கிடைத்தது. கற்பித்த பாடசாலைக்கு 2 நாட்களே போகக் கூடியதாக இருந்தது. மற்றைய நாட்கள் கம்பஹா வலயத்திலுள்ள மற்றைய பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய தேவை அவளுக்கு இருந்தது. வாரத்தில் ஒருநாள் கல்வித்திணைக்களத்திலேயே பணி புரிய வேண்டிய தேவை இருந்தது.

இலங்கையில் நீர்கொழும்பு தமிழ் பேசும் சிங்களவர்கள் நிறைந்த இடம். இவர்கள் மீன்பிடித் தொழில் செய்கின்றார்கள். மீன் வளரும் கடற்கரைப் பிரதேசம் என்றால் வளம் ஒட்டித்தானே வாழ்க்கை.

அவர்களுக்குக் கிடைத்த வளம் கடல் வளம். அதனால், வாழ்க்கையும் வளமானதாகவே இருந்தது. மேரி மாதா திருவிழாக் கொண்டாட்டமும் அந்தோனியாரின் ஆசியும் அவர்களுக்கு இருந்தது. அதேபோல் முத்துமாரியம்மன், விநாயகக் கடவுள் துணையும் சிறப்பாகவே அங்கு வாழ்ந்த தமிழர்களுக்குக் கிடைத்தது.

சங்ககாலத்திலே குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் அந்த நிலப்பரப்புக்கேற்ற தொழிலையே செய்தார்கள். கடலும் கடல் சார்ந்த பகுதியிலும் வாழ்ந்த மக்கள் கடற்றொழிலையே மேற்கொண்டிருந்தார்கள். அதேபோல் கடற்பரப்பை அண்டி வாழும் நீர்கொழும்பு மக்களுக்கு வாழ்வாதாரத் தொழிலாக மீன்பிடி வணிகம் இருந்தது. அவர்களின் வீட்டின் முன் பக்கம் மீன்பிடி வலைகள் காயப்போடப்பட்டிருக்கும். இதுவே அவர்களின் அடையாளம். உல்லாசப்பிரயாணிகள் உலகம் முழுவதிலும் இருந்து இங்கு வந்தடைவதனால், பத்திக் போன்ற துணிகளும் கைப்பணிப் பொருள்களும் அதிகமாக விற்கப்படும்

அக்குவாரியம் என்று சொல்லப்படும் அழகான மீன்களைக் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்துக் கண்காட்சியாகக் காட்டுவார்கள். அவை நெளிந்து நெளிந்து செல்லும் அழகே அழகு. இந்த மீன்களை எல்லாம் எவ்வாறான கறி சமைத்து ருசிக்கலாம் என்றே அங்கு போகின்ற சமையற்காரன் எண்ணமெல்லாம் இருக்கும். செருப்புத் தைப்பவன் போகின்ற வருகின்றவர்களுடைய காலிலுள்ள செருப்பைத்தான் பார்ப்பான். அதேபோல சிநேகா வயதுக்கு வந்த பின் பரமசிவம் பார்க்கின்ற சிறப்பான ஆண்மகன்களை எல்லாம் சிநேகாவுக்கு திருமணம் செய்து வைக்கலாமா என்றே எண்ணுவார். அவ்வாறு துருவித் துருவி ஜெர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அரவிந்தனைக் கண்டு பிடித்தார்.

“இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று” என்ற சினிமாப் பாடலுக்கேற்ப சிநேகாவுடன் அரவிந்தன் வாழ இயற்கை எழுதி வைத்த சட்டமானது வடக்கு மண்ணின் யாழ்ப்பாணத்தில் பிறந்து ஜெர்மனியில் வாழ்ந்த அரவிந்தனுக்கு கிழக்கு மண்ணின் மட்டக்களப்பு ஏறாவூரில் பிறந்து நீர்கொழும்பில் வாழும் சிநேகாவுக்குத் தொடுப்புப் போட்டது.

பார்வதியோ மகள் திருமண வயதுக்கு வந்துவிட்டாள் என்ற எந்தக் கவலையையும் வைத்திருக்கவில்லை. அவளுக்கு மகள் என்றைக்கும்

பேபிதானே. ஆனால், முதல் தடவையாக மனத்துக்குள்ளே ஒரு விதை விழுந்துவிட்டது. சிநேகாவின் பிறந்ததினத்தைச் சிறப்பாகக் கொண்டாட நினைத்தாள். சிநேகாவுக்குத் தெரியாமல் அவளுடைய மாணவர்களுக்கும் அவளுடைய நண்பிகளுக்கும் சொல்லி கேக் வெட்டிக் கொண்டாடினாள். புகைப்படம் பிடிப்பதற்கு உறவுக்காரப் புகைப்படக் கலைஞரையும் அழைத்திருந்தாள். அவரும் சிநேகாவை வைத்து விதம் விதமாகப் படம் பிடித்தார். அதில் ஒன்றை சிநேகாவுக்கே தெரியாமல் அரவிந்தனுக்கும் அனுப்பியிருந்தாள்.

மாப்பிள்ளை படத்தைப் பார்த்து மயங்கிப் போனார். சிநேகாவைத் திருமணம் செய்வதற்குச் சம்மதித்தார்.

அதன்பின் எல்லோரும் வியக்கும் வண்ணம் கோலாகலமாக ஜெர்மனியில் இருந்து வந்த அரவிந்தனுக்கும் சிநேகாவுக்கும் திருமணம் நடைபெற்றது. ஒரு பயணப் பையுடன் நீர்கொழும்புக்கு வந்த பரமசிவம் குடும்பமானது தம்முடைய வசதியைப் பெருக்கிக் கொண்டு 500 பேர் நிறைந்த ஆடம்பர விடுதி மண்டபத்திலே சிநேகாவுடன் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று கோலாகலமாகத் திருமணத்தை நடத்தியது.

சிநேகா அம்மா பார்வதி யார் திருமணப்பெண் என்று அடையாளம் சொல்ல முடியாதவாறு அழகாகத் தோற்றமளித்தாள். சிவந்த மேனியிலே தழும்பில்லாத தேகம். நடு வகிடு எடுத்து தலைமயிரைத் தளர்வாகக் கொண்டை போட்டிருப்பாள். ஏறாவூரிலே ஊர் விழாக்களுக்கு விளக்கேற்ற முதலில் அழைப்பது சிநேகாவின் அம்மாவைத்தான். இலட்சுமி கடாட்சம் நிறைந்த அவள் முகத்திலே அன்பு தெளிவாகவே தெரியும். திருமண வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்த பார்வதி தன் உடலுக்குத் தேவையான மாத்திரைகளை மறந்துதான் போனாள்.

தன்னிடம் வராமல் ஓடிக் கொண்டு திரிகின்றார் என்று சிநேகாவும் அவளைக் குறை கூறிக் கொண்டாள். ஒருமுறை திருமண மண்டபத்தில் பார்வதி விழுந்ததாகச் சொல்லக் கேட்ட சிநேகா தாயிடம்

“அம்மா ஓர் இடத்தில் இருங்கள் அம்மா” என்ற போது

“நான் இருந்தால் இங்கு எல்லாம் முடிந்துவிடுமா? அது எனக்கு ஒன்றுமில்ல. நீ என்னை நினைத்துக் கவலைப்படாதே” என்று சமாளித்துக் கொண்டாள்.

3 நாட்கள் சிநேகா உல்லாச விடுதியில் தங்குவதற்கான ஆயத்தங்களைப் பரமசிவம் செய்திருந்தார். ஊரிலிருந்து வந்த உறவினர்கள், தங்குவதற்கான உணவு, வசதிகளைக் கீரனும் சிவனும் பார்த்துக் கொண்டார்கள். திருமண வீட்டில் என்ன நடக்கின்றது என்று எதுவுமே அறிய முடியாதவாறு சிநேகாவையும் அரவிந்தனையும் வீட்டார் வேறு உலகத்தில் சஞ்சரிக்கச் செய்திருந்தார்கள்.

பார்வதிக்கு வீட்டு வேலை நிச்சயமாக அதிகமாகத்தான் இருந்தது. மகளுக்குத் திருமணம் நடந்து முடிந்த மகிழ்ச்சியில் பார்வதி இருந்தாள். அதனால், அவள் மாத்திரைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் எண்ணத்தில் இல்லை.

# அத்தியாயம் 4

# காக்கையும் ஒரு குடுகுடுப்பைக்காரன்

விதியை வெல்ல யாரால் முடியும். உயிர்கள் அனைத்தும் திட்டம் போட்டு இந்த உலகத்தில் கொண்டு விடப்பட்டவர்களே. “நாம் பிறக்கும் போது இறப்பை நோக்கியே பிரயாணம் மேற்கொள்ளுகின்றோம்” என்கிறார் எழுத்தாளர் எஸ். இராமகிருஸ்ணன். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது என்கிறது பகவத்கீதை. அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் யாருக்கு இருக்கிறது.

திருமணக் கலகலப்பு ஓய்கிறது. புதுமணத் தம்பதிகளுக்கு விருந்து கொடுத்தல் என்று உறவினர்கள் அவர்களை ஓய்வில்லாமல் தம்முடைய வீட்டுக்கு அழைத்திருந்தார்கள். திருமணம் முடிந்து 20 ஆவது நாள் அரவிந்தன் ஜெர்மனி நோக்கிப் புறப்பட ஆயத்தமாகிறான். ஹொலன்ட் நாட்டுக்குப் போய் அங்கிருந்து ஜெர்மனி போவதாக விமான ரிக்கற் எடுத்திருந்தான். பொதுவாகவே நேரடியாக இலங்கையிலிருந்து ஜெர்மனி போவதென்றால் பயணத்தூரம் 10 மணித்தியாலங்கள். ஆனால், அரவிந்தன் ஹொலண்ட் போய் அங்கிருந்து ஜெர்மனி போவதால் கூடுதலான நேரம் தேவை.

ஜெர்மனிக்குப் பயணம் செல்வதற்கு முதல்நாள் இரவு அரவிந்தன் சிநேகாவிடம் சொன்ன வார்த்தை

“சிநேகா! நீ அம்மாவிடம் அளவில்லாத பாசம் வைத்திருக்கின்றாய். அது நல்லதுக்கல்ல. நீ கொஞ்சம் குறைத்துக் கொள். அதுதான் உனக்கும் நல்லது. அம்மாவுக்கும் நல்லது. நீ ஜெர்மனிக்கு வரப் போகின்றாய். உடனே உன்னுடைய அம்மாவை அங்கு கூப்பிட முடியாது. பிரிவு என்பது பொல்லாத நோய். கவனமாகப் பழகிக் கொள்” என்றான்.

அரவிந்தனுக்குக் கொடுத்து அனுப்புவதற்காக பார்வதி தொதல் என்னும் இனிப்புப் பண்டம் செய்தாள். வீட்டுக்குப் பின்புறம் அடுப்பு

மூட்டினாள். றெசிங்கவுண் என்று சொல்லப்படும் ஆடையை அணிந்திருந்தாள். பாவாடையை உள்ளே கட்டி அதற்கு மேலே ஒரு காற்றோட்டமான இறுக்கமில்லாத சட்டையை அணிந்து கொள்வது வழக்கம். மிகவும் சிறப்பாகத் தையல் வேலை செய்யக்கூடிய பார்வதி விதம் விதமாக றெசிங்கவுண் தைத்து அணிந்து கொள்வது வழக்கம். இலங்கையிலே மிகவும் பிரபலமான ஓர் இனிப்பு உணவுதான் தொதல். சமையலறையிலே துருவலையை இருத்தினாள். பாவாடையை மடித்துக் கட்டினாள். துருவலை மேலே அமர்ந்து கொண்டாள். துருவலைப் பற்களுக்குள் தேங்காய் புகுந்து கொண்டது. அழுத்திப் பிடித்த கையை விட்டுத் தப்பிக் கொள்ள முடியாமல் தேங்காய் தவியாய்த் தவித்தது. பரக்கு பரக்கு என்று துருவலையானது தன் பணியைத் தொடரத் தன்னுடைய வெண்மைச் சதையெல்லாம் இழந்த தேங்காய்கள் எல்லாம் மொட்டைத் தேங்காய்களாய் ஆயின.

பாவாடையை உதறிவிட்டு ஏற்கனவே எடுத்து வைத்திருந்த ஏலக்காயை உரலிலே போட்டுப் பொடியாக்கினாள்.

முந்திரிப் பருப்புக்களைச் சிறிது சிறிதாக நறுக்கினாள். தேங்காயைக் கசக்கிச் சாறு பிழிந்தாள். தேங்காய்ப்பால் வெண்ணிற ஆடை கட்டி அழகாகக் காட்சியளித்தது.

வீட்டின் பின்புறம் அடுப்பை மூட்டினாள். பாலுடன் அரிசி மாவைக் கலந்து சீனியுடன் காய்ச்சத் தொடங்கினாள். அடுப்பு வெப்பம் வியர்வை நீரைப் பார்வதி உடலிலிருந்து வடிகட்டி அனுப்பியது. தாரைதாரையாக வடியும் வியர்வையைத் துணி கொண்டு துடைத்துக் கொண்டிருக்கும் போது சிநேகா வருகின்றாள். இதுவரை தன்னுடைய தாய் என்ன செய்கின்றாளென்று அறியாதவளாய்.

‘‘என்ன செய்றீங்கள் அம்மா’’ என்றாள்.

‘‘அவர் நாளைக்கு ஜெர்மனி கொண்டு போக தொதல் செய்கிறேன்’’ என்றாள்.

‘‘இதுதேவையா அம்மா. உங்களுக்கு வேற வேலை இல்லையா? இந்த வெயிலுக்குள்ள. எழும்புங்கள். நான் செய்கிறேன்’’ என்று கையைப் பிடித்து இழுத்தாள்.

‘‘விடு விடு. உனக்குத் தெரியாது. அது பதம் பார்த்துச் செய்ய வேண்டும்’’

“பரவாயில்லை. நான் பழக வேணும் தானே” என்று சிநேகா கூறினாள்.

“நல்லாப் பழகு. நான் வேணாம் என்டனா. நான் செத்ததுக்குப் பிறகு நீ இதெல்லாம் பழகு. இப்ப என்னைய விடு நான் செய்றன்” என்றாள்.

“நீங்க வச்சதுதானே சட்டம்” என்று கூறிய படி சிநேகா வீட்டுக்குள்ளே போய்விட்டாள்.

இவ்வாறு அரவிந்தன் ஜெர்மனிப் பயணத்திற்கு வீடே அமர்க்களப்பட்டது. பரமசிவம் கடையிலே போய் மாம்பழங்கள் வாங்கி வந்தார். பலகாரங்கள் அடுக்கப்பட்டன. தொதல் வெட்டி பொட்டலம் கட்டப்பட்டது. கஜு பக்கெட் அடுக்கப்பட்டது. இவ்வாறு உணவுப்பண்டங்கள் பயணப்பொதியை நிரப்பின. பார்வதியும் ஓடியோடி வேலை செய்தாள். மட்டக்களப்பார் பாயோடு ஓட்டவைப்பவர்கள் என்று பரவலாக யாழ்ப்பாணத்து மக்கள் பேசுகின்ற வழக்கம் இருக்கின்றது. அந்த மந்திரம் என்னவென்றால், அன்பை உணவில் ஊற்றிக் குழைத்துப் பரிமாறும் மந்திரம்தான் என்பதை அனுபவப்பட்டவர்கள் புரிந்துகொள்வார்கள்

“என்னடா இது மட்டக்களப்புக்குப் போற ஆம்பிள்ளைகள் அங்கேயே கல்யாணத்தக் கட்டிற்று வியாபாரத்தத் தொடங்கிட்டுச் செற்றில் ஆயிடுறானுகள்” என்று யாழ்ப்பாணத்தவர்கள் ஆச்சரியப்படும் விடயம் மட்டக்களப்பு உணவு பரிமாறும், முறையிலும் கெட்டித்தயிரிலும், கடல் மீன் குழம்பிலும், பிடுங்கி வரும் திராய்க் கீரைச் சுண்டலிலும், வகைவகையாய் ஆக்கி வைக்கும் இறால் மீன் சொதியிலும், இன்னும் இன்னும் வரவேற்பு இலக்கணங்களை இயல்பாகப் பெற்றதனாலேயே மட்டக்களப்புக்குள் புகுந்த ஆண்கள் அம்மண்ணோடு ஒட்டி விடுகின்றார்கள் என்னும் உண்மையை இன்றுவரை அறிய முடியாது யாழ்ப்பாணத்தார் குழம்பித்தான் போகின்றார்கள்.

மட்டக்களப்பு மாந்திரீகம் உள்ள பூமிதான். அந்த மாந்திரீகம் பாயோடு ஒட்ட வைப்பதற்காக அல்ல. அது நோயகற்றும் மந்திரம்.

அடுக்கடுக்காய் பெட்டியிலே பொலித்தீன் பைகளிலே காற்றுப் புகாமல் பலகாரங்கள் அடுக்கி வைத்து ஒரு வேன் பிடித்து அதிகாலை விமானத்தில் சொந்தங்கள் சூழ அரவிந்தனை ஜெர்மனிக்கு அனுப்பி வைத்தார்கள்.

வீட்டுக்கு வந்தவுடன் அதிகாலை விழித்த அசதி எல்லோரையும் ஆட்டிப் படைத்ததால் இரவு நேரத்துக்கு உறங்கிப் போனார்கள். அடுத்த நாள் இரண்டாவது மகன் கீரன் மட்டக்களப்புத் திருமணம் ஒன்றுக்காகக் குடும்பத்துடன் புறப்படலானான். ஊரை விட்டு முழுவதுமாக வந்தாலும், உறவும் நட்பும் விடாமல் ஊர் உறவைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்தது. அதிகாலை அனைவரும் வாகனத்திற்குள் ஏறினார்கள். பார்வதியும், பரமசிவமும், சிநேகாவும், வைரவள்ளி ஆச்சியும், தங்கை சிந்துவும் மட்டுமே வீட்டில் நின்று கையசைத்து அவர்களை வழியனுப்பினார்கள்.

வீடு அமைதியடைந்தது.

நாளை பரமசிவமும் பார்வதியும் ஒரு திருமண வீட்டுக்குப் புத்தளம் புறப்பட வேண்டும். சிநேகாவுடைய மாணவிக்கு நடனத்திற்காகப் பார்வதி தன்னுடைய முடி மயிரைத் தந்திருந்தாள். அந்த முடி மயிரைக் கழுவி வெயிலிலே காயப் போட்டாள். பரமசிவத்தின் வேட்டியையும், சிநேகாவின் புடவை ஒன்றையும் கழுவி வெயிலிலே விரித்துக் கொண்டிருந்தாள் பார்வதி. இதேசமயம் வழக்கம் போல் வாசலின் முன்னுள்ள பகுதியில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள் சிநேகா.

வாசலிலே காகம் கரைந்தபடி ஏதோ செய்தி கொண்டு வந்திருந்தது.

“அம்மா என்னம்மா இந்தக் காகம் விடாமல் கத்துது” என்று கேட்டாள் சிநேகா. காக்கைக்கு நுண்ணறிவுத் திறன் இருக்கிறது. வருகின்ற விருந்தினரின் மனநிலையை அறிந்து எங்கே போகின்றார்கள் என்பதைக் குடுகுடுப்பைக்காரன் போலே முன்னமே வந்து அறியச் செய்து விடும். காக்கையார் விதம் விதமாய்க் குரல் கொடுத்தால் அதன் குரலின் பாகுபாட்டில் அது சொல்ல வரும் செய்தியைப் புரிந்துகொள்ளலாம்.

“அதுக்குப் பசியாக்கும். வாற விசிற்றர்ஸ் எல்லாம் வந்து போயிட்டாங்கள். பிறகு என்ன செய்தி கொண்டு வந்திருக்கோ தெரியல்லியே” என்றபடி தன்னுடைய வேலையில் கவனம் எடுத்தாள் பார்வதி.

மதிய உணவு முடிந்தது. அரவிந்தன் இன்னும் தொலைப்பேசி எடுக்கவில்லையே என்று அடிக்கடி கேட்டபடி இருந்தாள் பார்வதி. நீண்ட நேரமாக உண்ட களைப்பிலே கட்டிலில் கிடந்தபடி பல விடயங்களை சிநேகாவுடன் பகிர்ந்து கொண்டாள்.

அவள் வாய் விட்டுச் சொன்ன விடயங்கள் சிநேகா மனத்துக்குள் அஸ்தமனமாகிப் போயின. மனம் சில சம்பவங்களை விழுங்கினால், அவை சமீபாடடைவதில்லை. அவை பாறாங்கற்களாகப் பதிந்து விடும்.

"நான் ஜெர்மனி போனாலும் நீங்கள் நீர்கொழும்பிலேயே இருங்கள் அம்மா. ஊர் நிலவரம் இப்போதைக்குச் சரி வராது. யார் என்ன சொன்னாலும் பரவாயில்லை. கட்டிய வீடு, வாழ்ந்த வீடு வெறும் கட்டாந்தரையாக இருக்கும் போது உங்களுடைய ஆசைப்படி ஐயா கட்டிய அந்த வீட்டைப் பார்த்து உங்களால் வாழ முடியுமா? ஒருமுறை போய்ப்பட்ட பாடு மறந்திட்டீங்களா? என்றாள் சிநேகா.

அந்த நாளை அவளாலோ தாய் பார்வதியாலோ மறக்க முடியுமா. அதற்கு முன் நடந்த சம்பவங்களெல்லாம் திரைப்படமாய் மனதிலே வந்து போயின.

ஊரிலே இருந்த வீடு வளவுகளைப் போய்ப் பாருங்கள் என்று தன்னுடைய நண்பனுடன் பார்வதியை மகன் கீரன் அனுப்பி வைத்தான். மூத்தமகன் சிவம் மட்டக்களப்பிலே இருப்பதனால், அங்கு தங்கலாம் என்று எண்ணியபடி பார்வதி கீரன் நண்பன் தினேசுடன் மட்டக்களப்புப் பேருந்தில் பிரயாணம் செய்திருந்தாள். ஏன் போனாள், எதற்குப் போனாள் என்றெல்லாம் அவளுக்குள்ளேயே அடங்கிப் போகும் உணர்வுகள். காலம் சிலவற்றைக் கரைத்து விடும். ஆனால், உள்ளத்துக்குள்ளேயே அடிக்கடி நெருஞ்சி முள்ளால் குத்தி ரணத்தை ஏற்படுத்தும்.

உண்மையில் மனத்தில் அச்சம் அவளுக்குள் இருந்தது. ஆனால், காட்டிக் கொள்ளவில்லை. மனத்துக்குள் போராட்டமே. ஆனாலும், போயே ஆகவேண்டிய சூழ்நிலை.

மட்டக்களப்புப் பேருந்து ஓட்டமாவடியை நெருங்கியதும் சரமாரியாகக் கற்கள் பேருந்தின்மேல் வீசப்பட்டன.

"எல்லாரும் சீற்றுக்குக் கீழே இறங்கி இருங்கள். ஒருத்தரும் எழும்ப வேணாம். நாமளா அவனுகளா என்டு ஒரு கை பார்ப்பம்" என்று சாரதி பயணிகள் எல்லோரையும் எச்சரித்தான்.

சாரதி வாகனத்தை நிறுத்தாமல் வேகமாகச் செலுத்துகின்றான். இஸ்லாமிய இனத்தவர்களின் இனத்துவேசத்தால் இழந்த உயிர்கள் ஆயிரக்கணக்கில் இருந்த போதிலும் அடங்காத ஆவேசம் அவர்கள் மனத்துக்குள் கொந்தளித்துக் கொண்டே இருந்தன.

சிநேகாவின் வைரவள்ளி ஆச்சியின் தங்கை பொன்னி ஆச்சியை பிள்ளையார் கோயில் கிணற்றுக்குள் வெட்டிப் போட்டிருந்தார்கள். யாரோ களவாகச் சாமான்கள் எடுக்கப் போனவர்கள் கிணற்றுக்குள் அவவுடைய சடலத்தைக் கண்டு வந்து சொல்லிய போதே அவர் உயிரோடு இல்லை என்னும் விடயமும் அவாவை இஸ்லாமியக் காடையர்கள் வெட்டிப் போட்டார்கள் என்னும் செய்தியும் அறியக்கூடியதாக இருந்தது. இதைப் போல எத்தனையோ பேரைப் பழி கொடுத்துத்தானே நீர்கொழும்புக்கு உயிரைக் கையில் பிடித்துப் பரமசிவம் குடும்பம் குடிபெயர்ந்தது.

இஸ்லாமியக் காடையர்கள் கற்களிலே கோபக் கனலைப் பாய்ச்சி விசையாக வீசிய கற்களானவை பேருந்தின் கண்ணாடிகளை நொறுக்கி பேருந்தினுள்ளே வீசப்பட்டன. கண்ணாடித் துண்டுகள் வேகமாகப் புகுந்ததனால், காயப்பட்டவர்கள் உடலிலிருந்து இரத்தம் வெளியேறியது. பேருந்துக்குள்ளே கூக்குரல் அடங்கவில்லை. எந்தச் சத்தத்தையும் காதுக்குள் போடாமல் சாரதி விசையாகப் பேருந்தை நிறுத்தாமல் செலுத்தினான்.

இஸ்லாமியர்கள் ஏறாவூர் தாண்டி மட்டக்களப்பிற்குள் எந்தத் தமிழனும் நுழையக்கூடாது என்று மனத்துக்குள் வஞ்சம் வைத்திருந்தனர். பிட்டுக் குழலுக்குள் தேங்காய்ப் பூவும் பிட்டும் மாறி மாறி இருப்பதைப் போலத் தமிழரும் இஸ்லாமியரும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழுகின்றார்கள். ஓட்டமாவடி இஸ்லாமியர்கள், செங்கலடி தமிழர்கள் ஏறாவூர் நான்கு ஐந்தாம் குறிச்சி தமிழர்கள், 1, 2, 3, ஆம் குறிச்சிகள் இஸ்லாமியர்கள் என்று மாறி மாறியே வாழுகின்றார்கள்.

பார்வதி இருக்கைக்குக் கீழே நுழைந்து விட்டாள். தினேசும் அவளை எழும்ப விடவில்லை. விரைந்த வண்டி மட்டக்களப்புக் காவல் நிலையத்தில் நிறுத்தப்பட்டது.

மட்டக்களப்புக்குள் பேருந்து நுழைய முன்னேயே செய்தி நீர்கொழும்புக்குள் நுழைந்து விட்டது. எந்தவித புலன வசதிகளும் இல்லாத காலத்திலும் செய்தி விரைந்து பரமசிவத்துக்குக் கிடைத்தது. துடித்துப் போனார்.

“அவள அனுப்பியிருக்கக் கூடாது. இப்ப என்ன செய்யிறது” துடித்துப் போனார் பரமசிவம். அடுத்தடுத்து தொலைப்பேசியில் பலரை அழைத்து நல்ல செய்தி கேட்க தொலைபேசியின் அருகே அமர்ந்திருந்தார்.

அப்போது சிநேகா நீர்கொழும்பு விஜயரெத்தினம் பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தாள். பாடசாலை செல்வதற்கு மனம் ஏற்கவில்லை. தொலைப்பேசியின் அருகிலேயே அவளும் தந்தையுடன் இருந்தாள். பார்வதி எந்தவிதக் காயமும் இன்றி மூத்தமகன் சிவம் வீட்டுக்குப் போய்விட்டாள் என்ற செய்தி கேட்ட பின்புதான் பாடசாலைக்குப் போக வேண்டும் என்ற நினைப்பே சிநேகாவுக்கு வந்தது.

ஒவ்வொரு நிமிடமும் தாயின் இரத்த அழுத்தம் அதிகரித்து விடுமே என்ற பயம் அவளின் உள்ளத்தில் அச்சத்தைத் தந்து செல்லும். முதல் முதலாக பார்வதி இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட சம்பவம் சிநேகாவினுடைய மனத்திலே ஆறாத காயமாய் இருக்கிறது.

இந்திய இராணுவப் படையினர் வடக்குக் கிழக்கு மாகாணத்தைத் தம்முடைய பிடிக்குள் வைத்திருந்த காலம். இலங்கைக்கு இந்திய இராணுவத்தினர் வந்த போது விடுதலைப் போராளிகள் அவர்களை மலர் மாலை சூட்டி வரவேற்றனர். தம்முடைய இனப்பிரச்சினையைத் தீர்த்துத் தமக்குத் தமிழ் ஈழம் பெற்றுத் தருவார்கள் என்ற கனவு அவர்களுக்கு இருந்தது. இக்கனவு பகற்கனவாகப் போனபோது விடுதலைப் போராளிகளின் ஆயுதம் இந்திய இராணுவத்தினரை நோக்கித் திரும்பியது

ஏமாற்றத்தில் வஞ்சினம் கொண்ட விடுதலைப் புலிகளின் கன்னி வெடிக்கு இந்திய இராணுவத்தினரால் ஈடுகொடுக்க முடியாமல் போனது. மறைந்திருந்து தாக்கும் விடுதலைப் புலிகளை அவர்களால் இலகுவில் பிடிப்பதற்கு முடியாமல் போனது. தம்முடைய இயலாமையை இந்திய இராணுவத்தினர் அப்பாவிப் பொது சனங்களில் காட்டத் தொடங்கினார்கள்.

1985-ம் ஆண்டு காலப்பகுதி போக்குவரத்து வாகனங்களுக்குப் பின்னே ரோந்து நடவடிக்கை என்று வரிசையாக வாகனங்களில் இராணுவத்தினர் வருகின்ற போது ஆமை வேகத்தில் போக்குவரத்து வாகனங்கள் அவர்களுடைய வாகனத்தைப் பின் தொடர வேண்டும். அக்காலப்பகுதியில் சிநேகா கறுவாக்கேணி என்னும் பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தாள். பாடசாலை முடிந்து இராணுவத்தினருக்குப் பாதுகாப்புக் கொடுத்து வீடு வந்தடையச் சூரியன் ஒளித்துக் கொள்வான்.

ரோந்து நடவடிக்கை என்று தன்னாமுனைப் பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கு வசித்த சிநேகாவின் நண்பி தனலட்சுமி குடும்பத்தினரை ஒரே இரவில் கொன்று குவித்தனர். எந்தவிதக்

காரணமும் இல்லாமல் தம்முடைய இழப்புக்கு ஈடுகட்ட அப்பாவிச் சனங்களை அவர்கள் அழித்தொழித்த சம்பவங்கள் மட்டக்களப்பில் ஏராளம். சிநேகாவின் உறவினர் வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் தந்தையையும் மகனையும் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்றார்கள். சென்றவர்கள் வீடு திரும்பவில்லை.

கணவனும் பிள்ளையும் வருவார்கள் வருவார்கள் என்று காத்து நின்ற புனிதாவுக்குக் கிடைத்த செய்தி கட்டையால் மண்டையில் ஓங்கி அடித்தது போல இருந்தது. ஊரின் எல்லையிலே இருந்த பற்றையிலே தந்தையினுடையதும் மகனுடையதும் இறந்த உடல்கள் கிடப்பதாகவும் விரல்கள் வெட்டப்பட்டு அவர்களுடைய விரல்களில் இருந்த மோதிரங்கள் களவாடப்பட்டிருப்பதாகவும் வந்த செய்தி கேட்டு ஓடினாள். அவள் ஓட்டம் அவளைப் பித்துப் பிடிக்க வைத்தது. ஒரே நேரத்தில் அப்பாவிக் கணவனும் மகனும் போனபோது திரும்ப வருவார்கள் என்று ஏங்கி நின்றவளுக்கு அனாதரவாகக் கிடந்த அவர்களுடைய உடலைக் கண்டால், பித்துப் பிடிக்காமல் இருக்குமா?

இராணுவத்தினரின் அசம்பாவிதங்கள் கிழக்கு மாகாணத்தில் அடிக்கடி நடந்தது.

இராணுவத்தினர் ரோந்து வருகின்றார்கள் என்னும் செய்தி கேட்டால் எல்லாரும் வீட்டைப் பூட்டிக் கொண்டு வீட்டுக்குள்ளே இருந்துவிட வேண்டும்.

வெளியிலே காணுபவர்களைப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள். பிடிபட்டவர்கள் திரும்புவது இல்லை.

சிநேகாவின் வீட்டிற்கு முன்னே புகையிரத நிலையம் இருந்தது. இரவிலே யாழ் தேவி போகின்ற போது ஒரு நீண்ட ஊர் ஊர்ந்து செல்வது போல மின்விளக்குப் பிரகாசத்துடன் செல்லும் அழகை சிநேகா இரசித்துப் பார்த்துக் கொண்டிருப்பாள். சிநேகாவின் வீட்டின் முன்புறம் போட்டிக்கோ இருந்தது. அதன்முன்னே சதுரமாக கடல் மணல் பரப்பிச் சுற்றிவரப் பாத்தி போட்டது போலக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. சுற்றவர போர்கன் விலா, ரோஜா, ஓக்கிட்ஸ், செவ்வந்தி மலர்கள் நிறைந்த பூங்காவை வடிவமைத்திருந்தாள் தாய் பார்வதி. பரப்பப்பட்ட கடல் மணலிலே இரவிலே பாய் போட்டு எல்லாரும் சுற்றியிருந்து பேசிக் கொண்டிருப்பது வழக்கம்.

இரவுப் பொழுது தாயக்கட்டை விளையாடுவதும், பாட்டுக்குப் பாட்டுப் போட்டி வைத்து விளையாடுவதும், பலதும் பத்தும் பேசி மகிழ்வதும் என்று மகிழ்ச்சியாக இருக்கும். அன்று உறவுப் பின்னல்களே தற்போதுள்ள கைத்தொலைபேசியாக இருந்தது. பாடல் இருக்கும். ஆனால் தொலைப்பேசியில் இல்லை. விளையாட்டு இருக்கும். ஆனால் தொலைப்பேசியில் இல்லை. உலகநடப்பு சம்பாஷணைகள் இருக்கும். ஆனால், அவை தொலைப்பேசியில் இல்லை.

பக்கத்து வீடு சிநேகாவின் அத்தை வீடு. இரண்டு வீட்டுக்கும் இடையில் ஒரு காணி இருந்தது. தம்முடைய வேலியிலே ஒரு கடவை செய்து அதனூடாக அத்தை வீட்டுக்கு அடிக்கடி போய் வருவார்கள். அவர்கள் போகும் வழி நடந்து நடந்து குறும்பாதை உருவாகியிருந்தது.

அடுத்த பக்கத்தில் ஒரு காணி. அதற்கடுத்து சிநேகா மாமா வீடு இருந்தது. ஏறாவூர் இரயில் நிலையம் ஊடாக மட்டக்களப்புச் சென்றடையும் பிரயாணிகள் ஏறாவூர் இரயில் பாதையால் போகின்ற போது முன்னே கம்பீரமாக இந்த மூன்று வீடுகளையும் கண்டுதான் போவார்கள். அன்று வாட்ஸ் ஆப் இருந்ததில்லை, TikTok இல்லை, கணினி இல்லை, கைத்தொலைப்பேசி இல்லை, instagram இல்லை. இவையெல்லாம் இல்லாமல் விட்டதனால், மகிழ்ச்சி இருந்தது. உறவு இருந்தது.

வீட்டுக்கு உறவினர்கள் வந்தால் அவர்கள் ஒரு வாரம் தங்கிப் போகாமல் இருப்பதில்லை. அனைவரும் ஒன்றாகப் படுத்திருந்து இரவிரவாக உறவுகளின் கதைகளெல்லாம் பரிமாறிப் படுக்கையிலே கிடந்து பாட்டுக்குப் பாட்டுப் போட்டி வைத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்த காலம் மலையேறி விட்டது.

இன்று புலம்பெயர்ந்த வாழ்வில் வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அறை. பிள்ளைகளைப் பெற்றோர் சாப்பாட்டு மேசையிலேயே காண்பார்கள். அதுகூடச் சில பிள்ளைகள் தம்முடைய அறைக்கே சாப்பாட்டைக் கொண்டு போய்விடுவார்கள். சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் 5 பிள்ளைகள் இருந்தால், 5 பிள்ளைகளுக்கும் தனியறை இருக்கும் வண்ணம் வீடு எடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டு அதற்குரிய வீட்டு வாடகையை சமூபகார அலுவலகம் வழங்கிவிடும். இதனால், வீட்டுக்குள்ளேயே ஒவ்வொருவரும் ஒவ்வொரு தீவில் வசிப்பார்கள்.

ஆனால், மட்டக்களப்பில் கூடிக் கும்மாளம் போட்டு இருந்த நிலையானது மாறி இந்திய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் எப்போது ஏற்பட்டதோ அன்றிலிருந்து இருந்ததெல்லாம் ஒன்றுதான் உயிர்பயம்.

ஒவ்வொரு நாளும் பார்வதி சமைத்துப் போடும் சமையலுக்குப் பங்கு கொள்பவர்களின் எண்ணிக்கை 12 க்கு மேல். கணவனுடன் சேர்த்து நான்கு பிள்ளைகளும், மூத்த மகன் மனைவியும், வைரவள்ளி ஆச்சியும், வீட்டில் வேலைக்கு இருந்த ஓர் ஆச்சியும், படிப்பதற்காக சிநேகாவின் வீட்டில் தங்கியிருந்து படித்த 3 பையன்கள். இவர்களுடன் சொந்தவீடு போல் வந்து போகின்ற கீரனின் நண்பர்களுக்கு நாளும் அவித்துப் போட்டு உபசரிக்கும் பணியை மகிழ்ச்சியுடன் செய்பவள் பார்வதி. பரமசிவம் வீட்டின் ஒரு அறையின் மேல் கூரைக்குக் கீழ் ஓர் இரகசிய அறை கட்டியிருந்தார். அதில் சிலவேளைகளில் பிள்ளைகள் விளையாடுவதும் பொருட்களை வைப்பதும் வழக்கம். போராளிகளுக்குப் பயந்து தம்முடைய மகனைப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள் என்று பயந்த பெற்றோர் ராகுலனை அங்கு மறைத்து வைத்திருந்தார்கள்.

காலை எழுந்தாள் பார்வதி பம்பரமாய்ச் சுழல்வாள்.

இந்த மகிழ்ச்சியில் ஒரு தடை இந்திய இராணுவம் வந்தபின் ஏற்பட்டது. அடிக்கடி வீட்டுக்கு வருபவர்கள் மறைந்து மறைந்தே வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அடிக்கடி ஊரடங்குச் சட்டம் என்று ஒரு பதற்றமான சூழ்நிலை இருந்தது.

சந்தேகத்தின் பேரில் கொத்துக் கொத்தாகப் பிடித்துக் கொண்டு போகின்ற ஆண்களைப் பெரிய கிடங்கு வெட்டப்பட்டு அதற்குள்ளே போட்டு மூடி விடுவார்கள். சுடலை தேவையில்லை. மரணச் சடங்குகள் இருந்ததில்லை. இந்திய இராணுவத்தினரே துப்பாக்கி நெருப்பில் அநியாயமாக அப்பாவிகளை எரித்து விட்டார்கள். இவ்வாறான காலப்பகுதியில் கீரன் தன்னுடைய ஆசிரியப்பணியை விட்டு வெளிநாடு சென்று உழைத்து வந்த பணத்திலே வியாபாரம் மேற்கொண்டிருந்தான்.

கீரனுடைய கடையிலே போட்டோ பிரதி இயந்திரம், அலங்காரப் பொருள்கள், அழகு சாதனப் பொருட்கள், தமிழ் சினிமாப் படங்களின் காணொளிகள் விற்பனை செய்வது, வாடகைக்கு விடுவது என்று வியாபாரம் நடைபெற்றது. சிங்களம், ஆங்கிலம் நன்றாகப் பேசக்கூடிய

கீரனுடைய கடையிலே இந்திய இராணுவத்தினர், சிங்கள இராணுவத்தினர் பொருட்கள் வாங்குவதற்கு வருவது வழக்கம். அவர்கள் விரும்புகின்ற சில பொருட்களை கொழும்பு சென்று வாங்கி வந்து இவர்களுக்கு விற்பனை செய்வதும் கீரனுக்கு வழக்கமாக இருந்தது.

இன மொழி பேதமின்றி நட்புடனே அவர்கள் கீரனுடன் பழகுவதனால் உயிர் ஆபத்து கீரனுக்கு இருந்ததில்லை. இதேவேளை பரமசிவம் பிரஜைகள் குழுத் தலைவராக இருந்த காரணத்தால், போராளிகளினாலும் அச்சம் இருந்ததில்லை. போராளிகள் இடையிடையே போட்டோ பிரதி இயந்திரத்தைத் தம்முடைய விளம்பரங்கள் அடிப்பதற்காக எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள்.

அவர்களிடம் பேரம் பேச முடியாது அல்லவா. பேசினால், அவர்களுடைய துப்பாக்கியே பேரம் பேசும். அதனால், கேட்கும் போதெல்லாம் இரவில் ஊர் உறங்கும் நேரம். கீரனுடைய தயவில் இலவச விளம்பரங்கள், செய்திகள் பிரதி எடுத்து விநியோகிப்பார்கள். ஏதோ தமிழர்கள் நாளை பெறப்போகும் சுதந்திரத்திற்கு எம்மாலான உதவி என்று மனத்தைத் தேற்றிக் கொள்வான் கீரன். கீரன் அண்ணன் என்று போராளிகளும் உருகி வடிவார்கள்.

பரிசுத்தமான மனத்துடன் பாகுபாடின்றி மனித மனங்களை நேசிப்பவர்களுக்கு இயற்கை உதவும் என்று சொல்வார்கள். இது கீரன் விடயத்தில் எப்படி.........

அன்று காலை கடையைத் திறப்பதற்காகக் கீரன் வந்தான். வாசல் கதவைத் திறப்பதற்கு வந்த போது விடுதலைப் புலிகளின் வாகனம் வாசலுக்கு வருகின்றது.

‘‘கீரன் அண்ணன் கொஞ்சம் வாறீங்களா? ஒரு இடத்திற்குப் போக வேண்டும் என்று வாகனத்தில் ஏற்றினார்கள். எங்கே போவது என்று தெரியாமல் மறு பேச்சின்றி வாகனத்துக்குள் ஏறினான். பக்கத்தில் இருவர் ஏ.கே. 47 துப்பாக்கியோடு நின்றார்கள்.

வீதியில் விடுதலைப் போராளிகளின் வாகனத்தில் கீரன் அழைத்துச் செல்லப்படுவதைக் கண்டவர்கள் மூலம் செய்தி வீட்டுக்கு விரைகிறது. அவர்கள் கைகளில் அகப்பட்டாலும், இராணுவத்தினர் கைகளில் அகப்பட்டாலும் ஒன்று தான். துப்பாக்கி தூக்கியவர்களுக்கு உயிர்களின் பெறுமதி விளங்கப் போவதில்லை.

சின்னக் கிராமமானாலும் நகரத்தின் தோற்றத்தில் கலகலப்பான கிராமம். இஸ்லாமியர்களும், சிங்களவர்களும், தமிழர்களும், ஓரிரு பேகர் குடும்பங்களும் ஒன்றாக வாழ்ந்த தெருக்களில் எது நடந்தாலும் செய்தி பறந்து வரும்.

கீரனை இயக்கம் பிடித்துக் கொண்டு போகின்றது என்ற செய்தி நாரசமாக பார்வதி காதுகளை வந்தடைந்தது. அண்ட சராசரங்கள் அத்தனையும் தன்னுடைய காலுக்குக் கீழே இடிந்து விழுவது போல பார்வதி உணர்ந்தாள். அவளுடைய இரத்தநாளங்கள் சூடேறின.

போட்டிருந்த றெசிங்கவுணுக்கு மேலே சேலையைச் சுற்றினாள். செருப்பை மாட்டினாள். வா பேபி என்று சிநேகாவைத் துணைக்கு அழைத்தாள். இருவரும் சேர்ந்தே ஓடினார்கள். கோடை வெயில் நடு உச்சிக்கு வந்திருந்தது. ஓடத் தொடங்கினாள். வழியெல்லாம் அவள் கண்ணீர் தாரை தாரையாகச் சொட்டியது. ஊரை மறந்தாள், உறவுகளை மறந்தாள், பாதையை மறந்தாள், பார்ப்பவர்களை மறந்தாள். ஒரே நோக்கம் என்ர பிள்ளய என்ன செய்யப் போறானுகள். ஆண்டவனே பிள்ளயக் காப்பாத்து பிள்ளையக் காப்பாத்து.

"அம்மா கொஞ்சம் அமைதியாக இருங்கள். ஒன்டும் நடக்காது. அண்ணன் என்ன செய்தவர். அவங்களுக்கு உதவிதானே செய்தவர். கேட்கிற நேரமெல்லாம் அவங்களுக்குக் காசு அள்ளிக் கொடுக்கிறவர்தானே. ஒன்டும் நடக்காது" என்று செல்லும் வழியெல்லாம் சிநேகா தாயைச் சமாதானப்படுத்திக் கொண்டே வந்தாள்.

போகின்ற பாதை தோறும் இஸ்லாமியர்களைக் கடக்க வேண்டும். புத்த விகாரையைக் கடக்க வேண்டும். பத்திரகாளி அம்மனைக் கடக்க வேண்டும். சித்தி விநாயகர் கோயிலைக் கடக்க வேண்டும். அத்தனையும் கடந்து சென்றாள். ஆனால், யாரிடமும் நின்று பேசியதில்லை. எந்த முறையீட்டையும் சொன்னதில்லை. ஏறாவூர் பிரதான வீதிக்கு வருகின்றாள். கடைக்குப் பின்னே தம்பி வீட்டில்தான் பார்வதி கால்கள் நின்றன. அப்படியே தரையிலே சாய்ந்தாள்.

கன்றை இழந்த தாய்ப்பசு மனுநீதி சோழனிடம் துணிந்து நீதி கேட்டது போல இவர்களிடம் கேட்க முடியுமா? அவர்கள் நீதி என்றால் என்ன விலை என்று கேட்பார்கள்.

“என்ன நடந்தது? என்ன நடந்தது. என்று அலறுகின்றாள். பார்வதியினுடைய ஓட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாத இரத்தநாளங்கள் சூடேறின. ஏதோ நரம்பு இரத்தக் கொதிப்பினால், வெடித்துச் சிதறியது. அவளுடைய மூக்கினூடாக இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்தது. கவலையையும் கொதிப்பையும் எவ்வளவுதான் உடல் தாக்குப் பிடிக்கும். ஒரு சமயம் தன்னுடைய பலத்தை அது இழக்கத்தானே செய்யும். உடனே வாகனத்தில் பார்வதியை ஏற்றினார்கள். வாகனம் மட்டக்களப்பு அமரசிங்கம் வைத்தியசாலைக்கு விரைந்தது. அவர்தானே அவளுடைய குடும்ப வைத்தியர்.

“இரத்தக் கொதிப்பு அதிகமாகி நரம்பு வெடித்திருக்கின்றது. நல்லது உடனே கொண்டு வந்தீர்கள். நரம்பு வெடிக்கவில்லையென்றால், இரத்த அமுத்தம் இதயத்தையோ மூளை நரம்புகளையோ சிதைத்திருக்கக் கூடும். பார்வதியை நீங்கள் உயிரோடு பார்க்க முடியாமல் கூடப் போயிருக்கும்” என்றார் வைத்தியர்.

பார்வதி வைத்தியசாலையில் மகனை நினைத்து ஏங்கியபடி படுத்திருந்தாள். அவளருகே சிநேகா நின்றாள். ஊரில் நடக்கும் விடயங்களைத் தெரிவிக்க எந்த வசதியும் இல்லை. வைத்தியசாலைக்கு வருகின்ற தொலைப்பேசி அழைப்பாலேயே செய்தியை அறிந்து கொள்ள முடியும். மருத்துவரும் அவளுக்கு உறவினர் என்ற காரணத்தால், அவரும் இந்த விடயத்தில் அக்கறையாகவே இருந்தார்.

கீரனை ஒரு வீட்டிலே கொண்டு இருக்க வைத்து, அங்கிருந்த தொலைக்காட்சியை ஓட விட்டு,

“இருங்கள் அண்ணன் நாங்க கொஞ்ச நேரத்தில வாறம்” என்று சொல்லி வந்தவர்கள். பரமசிவத்திடம் வந்தடைந்தார்கள்.

“என்ர பிள்ளய என்ன செய்தனீங்கள்? எங்க வச்சிருக்கிறீங்கள்? அவன ஒன்டும் செய்து போடாதீங்க தம்பி” என்று கேட்ட பரமசிவத்திடம்

“அது உங்கட கையிலதான் இருக்கு ஐயா. இப்ப மட்டும் நாங்க ஒன்டும் செய்யல்ல. ஒரு இலட்சம் ரூபாய்கள் எங்களுடைய கையில் பின்னேரம் வைக்கல்ல என்றால், உங்களுடைய மகனை நீங்கள் காண முடியாது. அவ்வளவுதான்” என்றார்கள்.

“இப்பிடி உடனே கேட்டா. நான் எங்க போவன் தம்பி. என்னட்ட உடனே தாறதுக்கு எங்க காசு இருக்கு” என்று காலில் விழாத குறையாக

அழுது புலம்பினார். ஊரே மதிக்கின்ற மனிதன் அன்று அவர்கள் காலடியில் மண்டியிட்டுக் கிடந்தார்.

“அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. இது மேலிடத்து உத்தரவு. நாங்கள் இப்ப போறம். பின்னேரம் வருவம். காசை ரெடி பண்ணுங்க” என்று சொல்லி வாகனத்தில் ஏறினார்கள்.

காட்டுக்குள் இராமன் செல்ல வேண்டும் என்ற செய்தி தசரதன் மூர்ச்சையாகக் காரணமாகியது.

துப்பாக்கி தூக்கியவர்கள் கையில் மகன் அகப்பட்டான் என்றால், ஒரு தந்தையின் நிலை எப்படி இருக்கும் என்று விவரிக்கத் தேவையில்லை.

பரமசிவம் தன்னுடைய உடலை விட்டு ஆவி போனதுபோலத் துடித்துப் போனார். மாமனிதனாக வாழ்ந்த மனிதனுக்கு வந்த சோதனையாக அமைந்திருந்தது. நம்மட பிள்ளைகள், நம்மட பிள்ளைகள் என்று தலையில் வைத்துக் கொண்டாடியவர்கள் அவருக்கு வைத்த ஆப்பு. அதைக் கழட்ட முடியாமல் அவர் தவித்துப் போகின்றார்.

ஓடினார்.. .. .. ஓடினார். நண்பர்கள், உறவினர்கள், சொத்துக்கள் என்று அத்தனையும் பயன்படுத்தினார். அவருடைய இயல்புக்கு மேலாக முயற்சி செய்தார். இறுதியில் அவரால் 75 ஆயிரம் ரூபாய்களே உடனடியாகச் சேகரிக்க முடிந்தது. அந்தக் காலத்தில் 75 ஆயிரம் ரூபாய்கள் பெரிய தொகை என்பது யாவரும் அறிந்ததே. பின்னேரம் பணம் வசூலிக்க வந்தவர்களிடம்

“இதற்கு மேல என்னால் புரட்ட முடியல்ல. தம்பிமாரே. இத எடுத்திட்டு என்ர பிள்ளய விட்டிடுங்க” என்று சொல்லி அவர்களுடைய காலிலே விழுந்து கதறினார்.

“சரி சரி எழும்புங்க. கீரன் அண்ணனை வீட்ட கொண்டுவந்து விடுறம்” என்று பணத்தைச் சுருட்டிக் கொண்டு போனார்கள்.

இராணுவ உடையிலே கையிலே ஏ.கே 47 துப்பாக்கிகளுடன் அரசாங்கத்தை நோக்கிக் குறி பார்க்க வேண்டிய துப்பாக்கிகள். சொந்த இனத்துக்கும் குறி பார்ப்பதனாலேயே பரமசிவம் போன்றவர்கள் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு யாருக்கு அஞ்சுவது என்று தெரியாமல் பயந்து நடுங்க வேண்டிய சூழ்நிலை இருந்தது.

மாலைப் பொழுது பரமசிவம் வீடு சனக் கும்பலால் நிறைந்திருந்தது. ஊரார் உறவினர்கள் இந்தத் துக்கச் சம்பவத்தில் இணைந்து கொண்டார்கள். எல்லாருக்கும் தேநீர் பரிமாறப்பட்டது. இதுதான் கிராமம். அங்கு ஓடி வருவதற்கு உறவுகள் இருந்தன. மகிழ்ச்சியோ துக்கமோ வீடு நிறைந்த கூட்டம் இருக்கும். கவலையோ, மகிழ்ச்சியோ பங்கு போட்டுப் பகிர்ந்து கொள்ள ஆட்கள் இருக்கும்.

பார்வதியும் சிநேகாவும் வீட்டுக்கு வந்து விட்டார்கள். அதன்பின் கீரனை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டார்கள். பார்வதி ஓடிப் போய் மகனைக் கட்டிப் பிடித்து அவனுடைய முகத்துக்கு மாறி மாறி முத்தம் கொடுத்தாள். என்ன நடந்தது என்று தெரியாத கீரனோ வந்திருந்தவர்களை விநோதமாகப் பார்த்தான். கண்ணன் என்னும் போராளி பார்வதி அருகே வந்து

"இதை எல்லாம் தாங்கத்தான் வேண்டும் அம்மா. இப்படி எத்தனை தாய்மார்கள் தம்முடைய பிள்ளைகளைப் பறி கொடுத்திருக்கின்றார்கள்" என்றான்.

பணத்துக்காக எத்தனை மனங்களை, உயிர்களைக் கொன்ற அவர்களை நினைத்து மனத்துக்குள்ளே பார்வதிக்கு அடங்காத கோபம். ஆயிரம் கேள்விகள் போராளிகளைப் பற்றி அவளிடம் அடுக்கடுக்காய் வந்தன. ஆயினும் பிள்ளைகளுக்காகவும் கணவனுக்காகவும் அனைத்தையும் மனத்துக்குள் அடக்கிக் கொண்டாள். இதுதான் பார்வதி உயிருக்கு வந்த முதல் பாதிப்பு.

ஒரு முயற்சிக்குத் தோல்வி ஏற்படுவதாக இருந்தால், அந்த முயற்சியில் தவறு இருக்கின்றது. அல்லது முயல்கின்ற முறையில் தவறு இருக்கின்றது என்பதுதான் இறை நியதி.

அழியாத கோலங்களாக மனத்துக்குள் அச்சடித்து வைத்திருக்கும் நினைவுகள் சிநேகாவுக்கு வந்து போயின. உண்ட மயக்கமும் காலைச் சூரியன் கண்விழிக்க முன் எழுந்த தூக்கக் களைப்பும் ஒன்றாக இணையத் தாயும் மகளும் கட்டிலிலே தூங்கிப் போனார்கள்.

தூக்கம் களைந்து எழுந்த சிநேகாவிடம் பாடம் படிக்க வரும் மாணவர்கள் வந்ததனால், அவளுடைய பொழுது கரைந்தது. பார்வதியும் இரவுச் சமையலை முடித்தாள். மறுநாள் புத்தளம் செல்ல வேண்டிய பயணம் இருந்ததால் அதற்குரிய ஆயத்தங்களைச் செய்தபின் இரவு

உணவு அருந்த மேசையிலே பரமசிவம் அமர்ந்தார். உணவைப் பரமசிவத்துக்கும் கடைசி மகள் சிந்துவுக்கும் சிநேகாவுக்கும் வைரவள்ளி ஆச்சிக்கும் பகிர்ந்துவிட்டுத் தானும் உணவருந்த பார்வதி அமர்ந்தாள்.

சோயா இறைச்சிப் பிரட்டலும், கத்தரிக்காய்க் கறியும், இரசமும் குழைத்தெடுத்தாள். மீன், இறைச்சி போன்ற உணவு வகைகளை மட்டக்களப்பில் அடித்த சூறாவளியுடன் ஒதுக்கிய பார்வதி சைவ உணவுகளையே உண்பது வழக்கம். ஆனால், மருத்துவரின் ஆலோசனையின் படி ஆட்டீரல் மட்டும் வறுவல் செய்து உண்பாள்.

அடுத்த நாள் ஆட்டீரல் வேண்டும் என்று வீட்டுக்கு இறைச்சி கொண்டுவரும் வியாபாரியிடம் ஏற்கனவே சொல்லியிருந்தாள். வீட்டில் அனைவரும் உணவு உண்டு கொண்டிருந்தார்கள். அப்போது அரவிந்தன் தான் வந்தடைந்த விடயத்தை சிநேகாவிடம் கூறுவதற்காக சிநேகாவை அழைக்கும்படி முன் வீட்டுத் தொலைப்பேசிக்கு அழைப்பு விடுத்திருந்தான். தொலைப்பேசி வந்திருக்கிறது என்ற செய்தி கேட்டு ஓட எத்தனித்த சிநேகாவைப் பார்வதி அழைத்தாள்.

“இந்தா ... இஞ்ச வா. ஒருவாய் வாங்கிட்டுப் போ” என்றாள். தாய் உணவருந்தினால், ஒரு வாய் கேட்டு ஆ.... என்று நிற்பவள் சிநேகா. அதனால், வாங்கிவிட்டுப் போ என்றாள். வாய்க்குள் புதைந்த உணவைப் பற்களால் அரைத்த படி அரவிந்தனுடன் தொலைப்பேசியில் பேசுவதற்காகச் சிநேகா பறந்துவிட்டாள்.

அக்காலத்தில் வெளிநாட்டு மாப்பிள்ளை என்பது ஒன்றாக வாழ்வைத் தொடங்கும் வரை சந்தேகமான உறவுதான். எத்தனையோ ஆண்கள் பெண்களைத் திருமணம் செய்துவிட்டுத் தவிக்கவிட்டுப் போன சம்பவங்கள் பல இலங்கை மண்ணில் தொடர்கதைகளாக இருந்தன. அதனால், அரவிந்தன் போய்ச் சேர்ந்து விட்டான். மகளுடன் தொடர்பு வைத்திருப்பான் என்ற திடீர் மகிழ்ச்சி பார்வதியின் உள்ளத்துக்குள் உத்வேகத்தைத் தந்தது.

“பிள்ளையிட அவர் ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்திட்டார் போல அப்பா” என்று பரமசிவத்திடம் பார்வதி சொன்ன அடுத்த நிமிடமே.

“ஐயோ தலைக்குள்ளே என்னவோ செய்யுது. தாங்க முடியல்லியே. ஐயோ தலைக்குள்ள என்னவோ செய்யுது” என்று பெரிதாக அழத் தொடங்கினாள்.

ஒருநாள் கூட சத்தமாகப் பேசாத பார்வதி  வலியால் துடிப்பதைப் பார்த்த பரமசிவத்துக்குச் சந்தேகமும் பயமும் ஏற்பட்டது. உடனடியாக மருத்துவரை வீட்டுக்கு அழைத்து வருகிறேன் என்று ஓடினார். நாற்காலி யிலே அமர்ந்தபடி தலையை ஆட்டியாட்டி அழுது புலம்பினாள். அந்த வீடு அன்றுதான் பார்வதி என்ற ஜென்மத்துக்கும் வலி இருக்கின்றது என்று அறிந்தது. நோயென்று பாயில் படுத்ததில்லை. காலை 5 மணிக்குக் கண் விழித்தால், ஊர் அடங்கி, வீடு அடங்கிய பின்தான் பார்வதி கண் அயரும். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பேசாமல் படுங்கள் என்று சிநேகா, சொன்னாலும் பரமசிவம் பார்வதியிடம்

‘‘எழும்பு எழும்பு’’ என்று எழுப்பிவிடுவார்.

தந்தையிடம் சிநேகா சினந்து கொள்வாள்.

‘‘லீவு நாளிலாவது அம்மாவைப் படுக்க விடுங்களேன். நாங்கள் பிறந்து பாடசாலைக்கு அனுப்பிய காலத்திலிருந்து 5 மணிக்கு எழுந்து மாடாய் உழைக்கிறாதானே’’ என்பாள்.

‘‘அது அப்படித்தான் உனக்குத் தெரியாது’’ என்று சிநேகாவின் வாயை அடைத்து விடுவார். அவர் என்ன நினைத்தார் என்பது அவருக்கு மட்டுமே தெரியும்.

அரவிந்தனுடன் தொலைப்பேசியில் உரையாடிவிட்ட மகிழ்ச்சியில் அம்மாவிடம் அவர் சுகமாகச் சேர்ந்த கதை சொல்வோம் என்று ஓடி வருகின்றாள். முன் வாசலில் வழமையாக வருகின்ற பசுமாடு அவளை மறைத்துக் கொண்டு நின்றது. அதனை ஒரு பக்கமாகத் துரத்திவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். அங்கே அம்மா படும் பாடு அவளை நடுங்க வைத்தது.

‘‘என்ன அம்மா செய்யுது? குளிசை போட்டீர்களா? ஐயா எங்கே? என்று ஆரவாரமாக இருந்தவளிடம் தங்கை சிந்து

‘‘ஐயா டாக்டரைக் கூட்டிவர போயிட்டார் அக்கா’’ என்றாள்.

‘‘அம்மா குளிசை போடவில்லையா’’

‘‘இல்லை. தலைக்குள்ளே ஊர்றது மாதிரி இருக்கிறது’’

என்றவுடன் ஓடிப்போய் மாத்திரையை எடுத்து வந்து கொடுக்கின்றாள். வாய்க்குள் போன குளிசையை உள்ளே அனுப்பும் அளவுக்கு மூளையால்

தொழிற்பட முடியவில்லை. அப்படியே உள்ளே சென்ற குளிசை வெளியே தள்ளப்பட்டது. எது செய்வதென்று தெரியாத சிநேகா தாயின் கை, கால்களை உராய்ந்து விட்டுக் கொண்டிருந்தாள். நடுங்கிய வண்ணம் பக்கத்தில் சிந்து நின்று கொண்டிருந்தாள். வைரவள்ளி மகளின் காலுக்குக் கீழே இருந்தபடி அண்ணாந்து மகளை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன.

மருத்துவர் வந்தவுடன் கட்டிலில் படுக்க வைக்கும்படி பணித்தார்.

"இல்ல இல்ல.. ... என்னால் முடியாது" என்று பார்வதி மறுத்தாள்.

"இல்லை பரிசோதனை செய்வதற்குக் கட்டிலில் படுங்கள்" என்றார் மருத்துவர்.

மூளைக்குள் நரம்பு வெடித்து ஓடுகின்ற இரத்தம் பற்றி அறிய மருத்துவர் ஒன்றும் கடவுள் இல்லையே. படுக்கும் போது ஓடுகின்ற இரத்தம் மூளை முழுவதும் பரவ வாய்ப்பு அதிகம் என்பதைச் சிந்திக்காத மருத்துவர் பார்வதியைக் கட்டிலில் வலுக்கட்டாயமாகப் படுக்க வைத்தார். பரிசோதனை செய்வதற்கு சிநேகாவின் அம்மா அணிந்திருந்த றெசிங்கவுணை உயர்த்தச் சொன்னார். சிநேகா றெசிங்கவுணை உயர்த்துவதற்காகக் கையை வைத்த போது உடனே பார்வதி தன்னுடைய கைகளால் தடுத்தாள்.

"சீ ஆட்கள் நிக்கிறார்கள்" என்றாள்.

பக்கத்து வீட்டு ஆசிரியை குடும்பம், முன்வீட்டு குடும்பம் என்று மக்கள் கூடிவிட்டனர். பார்வதியின் அன்பான பேச்சிலும், அழகான முகவெட்டிலும் அத்தெரு மக்கள் அவரை அதிகமாக நேசிக்கின்றார்களே. அதனால், அந்த இரவில் கூட்டம் கூடிவிட்டது.

"ஒரு பக்கம் விறைக்கிறது போல இருக்கிறது" என்பதுதான் அவள் கூறிய கடைசி வார்த்தை.

ஒரு தடவை அப்படியே எழுந்தாள். வயிற்றுக்குள்ளே தஞ்சமடைந்திருந்த உணவு அப்படியே வெளியே வாந்தியாக வெளித்தள்ளியது. மீண்டும் படுக்கையில் சரிந்தாள். ஒருவிதமான குறட்டை ஒலி அவளிடமிருந்து தொடர்ச்சியாக ஒலித்துக் கொண்டிருந்தது.

அதற்குப் பின் அப்படியே உணர்விழந்தாள்.

“இரத்த அழுத்தம் 200 க்கு மேல் காட்டுகிறது. உடனே வைத்திய சாலைக்குக் கொண்டு போங்கள்” என்று டாக்டர் கூறிவிட்டுப் போனார்.

பரமசிவம் கால்கள் மனத்தை விட வேகமாக முன் வீட்டுக்காரன் சோமசுந்தரத்திடம் ஓடியது. சோமசுந்தரம் சொந்தமாக நகைத்தொழில் செய்பவன் அவனிடம் வாகனம் இருந்தது. அவனுடைய வங்கிக் கணக்குகள் எழுதுகின்ற உதவி அனைத்தையும் பரமசிவம்தான் செய்வார். அவரிடம் சோமசுந்தரம் நல்ல மதிப்பு வைத்திருந்தான். பார்வதியிலும் நல்ல மரியாதை வைத்திருந்தான். உடனே வாகனத்தைக் கொண்டு வந்துவிட்டான். பின் வீட்டில் குடியிருந்த ஆசிரியையின் கணவன் யாருடைய அனுமதியும் கேட்காமல் விரைவாகப் பார்வதியைத் தூக்கினார். வாகனத்தினுள் அவளைப் படுக்க வைத்தார். தாயுடன் சிநேகா வாகனத்துக்குள் ஏறினாள். இருப்பதற்கு இடமில்லை என்பதனால் தாயின் காலடியில் அமர்ந்தாள். போகும் வழியெல்லாம் அம்மா.... அம்மா என்று அவள் கண்களைத் திறந்து பார்ப்பாளா? என்ற ஆதங்கத்துடன் அழைத்துக் கொண்டே போனாள்.

ஒரு தடவை ம்.... என்ற வார்த்தை வந்தது. ஆனால், தொடர்ச்சியாகக் குறட்டைச் சத்தம் ஓயவில்லை. வாழ்க்கையில் சிநேகா இப்படியான அவஸ்தையைச் சந்தித்திருக்க மாட்டாள். இந்தக் காட்சி அவளுடைய இறுதிமூச்சுவரை தொடரும்.

இரண்டு தடவைகள் தாயுடன் இரத்த அழுத்தம் காரணமாக மருத்துவமனையில் தங்கியிருக்கின்றாள். ஆனால், இப்படி ஒருநாளும் அவள் பதற்றப்பட்டது இல்லை. வேண்டாத கடவுள் இல்லை. செய்யாத நேர்த்திக் கடன் இல்லை. வாகனம் வழமையாக பார்வதி செல்கின்ற மருத்துவமனையை அடைந்தது.

நீர்கொழும்பு உறக்கத்தில் நிசப்தமாக இருந்தது. ஆனால் பார்வதி நிம்மதியாகக் குறட்டை விட்டு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். சிநேகாவினுடைய மூளையோ பெரும் போராட்டத்தில் தவித்துக் கொண்டிருந்தது. தனியார் மருத்துவமனைக்குள் நுழைந்த போது பெண் மருத்துவர் ஒருவரே இருந்தார். தலைமை மருத்துவர் வீட்டில் உறக்கத்தில் இருந்தார்.

பெண்மருத்துவர் கண்களுக்கு ஒளி அடித்துப் பார்த்தார். இவர் எங்களுடைய மருத்துவ வாடிக்கையாளரா என்று கேட்டார்.

ஆம்... என்றபோது அத்தாட்சியைக் காட்டும்படிக் கேட்டார்.

அவசரத்தில் எதையுமே கவனிக்காது வந்துவிட்ட பரமசிவமும் சிநேகாவும் முதலில் உள்ளே எடுங்கள் என்று பலவாறாகச் சொல்லிய பின் நீங்கள் கொண்டு வந்தபின்தான் ரீற்மன்ட் தொடங்குவோம் என்று சொல்லிவிட சிநேகா வாகனத்தில் சோமசுந்தரத்துடன் பார்வதியுடைய மருத்துவக் கோப்பை எடுப்பதற்காக விரைவாகச் சென்றாள்.

சோமசுந்தரன் முடிந்தவரை வாகனத்தை விரைவாகச் செலுத்தினான். போகின்ற பாதையில் பார்வதிக்கு சிறிய வருத்தம் என்றாலும் கவனிக்கின்ற மருத்துவர் வீட்டு வாசலில் நின்று அழைத்துப் பார்த்தார்கள். அவர் கதவைத் திறக்கவில்லை. அவருக்கு இவர்களுடைய பிரச்சினை எங்கே தெரியப் போகின்றது? அன்று அவர்கூட வெளியூரிலிருந்து அப்போதுதான் வீட்டுக்கு வந்திருந்தார்.

அழைத்துப் பார்த்து பிரயோசனம் இல்லையென்ற காரணத்தால், வீட்டுக்குச் சென்று மருத்துவக் கோப்புகளை எடுத்துக் கொண்டு விரைந்தார்கள். அவ்வேளை வீட்டிலே பலர் கூடி விட்டார்கள். யாருடைய கேள்விக்கும் சிநேகாவால் பதில் சொல்ல முடியவில்லை. தாயுடைய அனைத்து மருத்துவக் கோப்புக்கள், மருந்து விபரங்கள் எல்லாம் அவளிடம் இருந்ததால் விரைவாக எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

இப்போது போல் அன்று அளவுக்கதிகமாக மாத்திரை, மருந்துகளை யாரும் பாவிப்பதில்லை. வைரவள்ளி ஆச்சி என்றுமே மாத்திரைகள் பாவித்தது இல்லை. பரமசிவம் ஏதாவது காய்ச்சல் போன்ற நோய் வந்தால் மட்டுமே மாத்திரை பாவிப்பார். பார்வதி இரத்த அழுத்தத்துக்கு மட்டுமே மாத்திரை எடுப்பாள். நெஞ்செரிச்சல் வந்தால் மட்டும் ஜெலுசில் என்னும் மருந்து ஒரு கரண்டி குடிப்பாள். வேறு எந்தவித மருந்து மாத்திரைகளும் பாவிப்பது இல்லை. ஆனால், இன்று ஒவ்வொருவரும் கையில் மருந்துப் பையோடுதான் காலையில் கண்விழிப்பார்கள். அவை நேரம் பார்த்து நேரம் பார்த்து ஒவ்வொரு பருக்கை உணவுபோல வாய்க்குள் போகும். மாத்திரைகளே மனிதர்களை இப்போது வாழவைத்துக் கொண்டிருக்கின்றது.

பார்வதியின் கோப்புக் கொடுத்த பின்பே தலைமை மருத்துவருக்கு அழைப்பு விடுத்து அவர் மருத்துவமனை வந்தடைந்தார். சிநேகா அதுவரை நிமிர்ந்து படுக்கும் பார்வதியின் குறட்டை ஒலி அதிகரிக்கும்

போது அவளைத் திருப்பி விடுவாள். பின் சத்தம் குறைவாக இருக்கும் போது அப்படிப் படுக்க விடலாமோ என்று தெரியாமல் மீண்டும் நேராகப் படுக்க விடுவாள். மீண்டும் அதே ஒலி அதிகரிக்கும். தன் கண்ணுக்கு முன் இப்படி அம்மா படுத்திருப்பதை எந்தப் பிள்ளையும் காணக்கூடாது. அந்த வேதனையை, அந்தக் காட்சியை அவர்களின் பிள்ளைகள் மரணத்தின் போது மட்டுமே மறப்பார்கள்.

சிநேகாவும் பரமசிவமும் அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாமல் கடலில் தத்தளிக்கும் படகுபோல மனத்தால் துடித்துக் கொண்டிருந்தனர். விரதங்களும் கோயில் தொண்டும் செய்து வரும் பார்வதிக்கு அந்தப் பத்திரகாளி அம்மனே துணை புரிவாள் என்று உள்ள நேர்த்திக் கடனெல்லாம் சிநேகா வைத்தாள்.

தலைமை மருத்துவர் வந்தார். அதன்பின்பே ஒட்சிசன் பைகள் கொண்டு வரப்பட்டன. சிநேகாவை வெளியே அனுப்பினார்கள். திருமணம் முடிந்து 20 நாட்கள் மகிழ்ச்சிக் கடலிலே குளித்துக் கொண்டிருந்த சிநேகா இன்று கண்ணீர் வெள்ளத்தில் கரைந்து கொண்டிருந்தாள். அவளுடைய வாழ்க்கையில் இப்படியான ஒரு சம்பவமும் கவலையும் அவள் அனுபவித்ததே இல்லை. சிறிது நேரத்தின் பின் வெளியே வந்த பரமசிவம் சிநேகாவை இறுக்கிப் பிடித்தார். அந்தப் பிடியில் அவளை ஓட விடக்கூடாது என்ற அழுத்தம் இருந்தது. சிநேகாவுக்கு விபரம் புரியவில்லை.

“மகள்.... அவர் வார்த்தை தடுமாறியது. அம்மாவுக்கு மூளை நின்றிட்டாம். இதயம் மட்டும் சில நிமிஷங்கள் வேலை செய்யுமாம்” தந்தையின் இறுக்கத்தைத் தளர்த்துவதற்காகத் தன்னுடைய பலம் முழுவதையும் பயன்படுத்தி முயற்சி செய்தாள்.

ஆனால், அவர் தன்னுடைய இறுக்கத்தைத் தளர்த்தவில்லை. அவளுக்குத் தாய்தான் உலகம் என்பது அவருக்குத் தெரியும். பல்கலைக்கழகத்தில் கூட தாயைக் கூட்டிக் கொண்டுபோய் வைத்திருந்தவள். தாயை விட்டு ஒருநாள் கூட அவள் தூங்கியது இல்லை. பார்வதியின் கைக்கும் மார்புக்கும் இடையில் தலையை வைத்து உறங்கினாலேயே அவளால் உறங்க முடியும். அப்படியானவளை விட்டால், என்ன செய்வாள் என்பதை அனுபவசாலி பரமசிவம் அறிந்திருந்தார்.

அவருடைய பிடியிலிருந்து அவளால் விடுபட முடியவில்லை. பரசிவமும் சிநேகாவும் பார்த்துக் கொண்டிருக்கும் போது வெள்ளைத்துணியால்

முழுவதுமாகப் போர்த்தியபடி பார்வதி உடல் ஸ்ரெச்சரில் நகர்கிறது. பார்வதி என்னும் சகாப்தம் கண் மூடிவிட்டது. உலகத்துக்குத் தன் கடமை முடித்து தன் மீளாப் பயணத்தைத் தொடங்கிவிட்டது. விண்ணிலிருந்து கற்கள் சரமாரியாகத் தன்னுடைய தலையில் கொட்டுவது போல சிநேகா உணர்ந்தாள்.

தாராளமாக நறுமணத்தையும் தேனையும் கொடுக்கின்ற மலரைப் பாருங்கள் அதனுடைய வேலை முடிந்தவுடன் அமைதியாக உதிர்ந்துவிடுகின்றது. அந்த மலரைப் போல இருக்க முயற்சி செய்யுங்கள் என்று கீதை சொல்கிறது. அந்த வாக்கியத்தைத்தான் பார்வதி மனத்திலே பதித்தாள் போல இருக்கின்றது. கடமை முடிந்தது. கடைத்தேறி விட்டாள்.

அழைத்து வந்த தெய்வத்தை மருத்துவமனைக் கட்டிலில் விட்டு இரண்டு நடைப்பிணங்கள் பேச்சு மூச்சின்றி வீடு நோக்கிப் புறப்பட்டன. விதியின் அபார சக்தியை யாராலும் எதிர்த்து நிற்க முடியாது. பரமசிவம் வாழ்க்கை பார்வதியின்றி தொடருமா என்பது கேள்விக்குறியாகி விட்டது. நொடிக்கொரு தடவை இஞ்சப்பா இஞ்சப்பா என்று அழைத்தபடி கேளிக்கையும் பரிகாசமும் செய்து வம்புக்கிழுக்கும் தன்னுடைய மனைவி இனிமேல் தன்னுடைய வாழ்க்கையில் தொடரமாட்டாள் என்னும் சோகமானது அவரை வாய் புலம்ப வைத்தது.

"எனக்குத் தெரியும் எனக்குத் தெரியும். இந்த பொல்லாத நோய் இப்பிடித்தான் திடீரென்று கொண்டு போகும் என்று" என்று வாய்விட்டு அழத் தொடங்கினார். வீட்டிற்குள்ளே நுழைந்தார்கள். ஓடிச்சென்று கதிரையில் தொப்பென்று விழுந்தாள் சிநேகா. பரமசிவம் சிநேகாவின் நிலைமையைக் கண்டவுடன் எல்லாருக்கும் நிலைமை புரிந்து விட்டது.

"சேடம் இழுக்கிறது என்று எனக்கு விளங்கிட்டு, எனக்கு விளங்கிட்டு. இனி நான் ஏன் வாழ வேண்டும். பிள்ளைகளை எல்லாம் கொடுத்துவிட்டு எனக்கு ஏன் இந்த உலகில் வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது" என்று வைரவள்ளி புலம்பத் தொடங்கினாள்.

மூத்தமகன் இருதயக் குழாயின் ஒடுக்கம் காரணமாக 50 வயதுக்கு முன்னமே இறந்தான். இரண்டாவது மகன் இஸ்லாமியர்களால் கொல்லப்பட்டான். இப்போது தன்னை வைத்துப் பராமரித்த மகள் போய்விட்டாள். இதற்கு மேல் வைரவள்ளிக்கு வாழ்க்கையைப் பற்றிய பிடிப்பு இருக்குமா?

முதுமைப் பருவம். ஓயாமல் அடுத்தவர்களிடம் பழியைப் போட்டு வாழுகின்ற காலம். இதனையே அறளை பெயர்ந்து விட்டது என்பார்கள்.

"இந்தத் திராய்ச் சுண்டலோட ஒரு பிடி சாப்பிடுவம் என்றால், எங்க எனக்குக் கிடைக்குது" என்று எவ்வளவுதான் சமைத்துக் கொடுத்தாலும் அதைத்தான் கேட்டு பார்வதியிடம் சண்டை பிடிப்பா.

"இன்டைக்கு இதைச் சாப்பிடுங்கள். நாளைக்குச் செய்து தாரன்" என்று சொன்னால், எதுவுமே சாப்பிடாமல் வைரவள்ளி இருப்பாள்.

"சரியான பிடிவாதக்காரி" என்று திட்டிவிட்டு பார்வதி உடனே சமைத்துக் கொடுப்பா.

இவ்வாறு அடம்பிடித்து தன்னுடைய தேவைகளையெல்லாம் நிறைவேற்றியவர் அல்லவா வைரவள்ளி.

வைரவள்ளியும் சமையலில் கெட்டிக்காரிதான். மூத்த மகன் வேலாயுதத்தின் மனைவி விடுமுறைக்கு கூனித்தீவுக்குப் போய்விடுவாள். அந்த நேரத்திலே வைரவள்ளி வேலாயுதம் வீட்டிற்கு வந்து தங்குவாள். அவருக்கு வகைவகையாகச் சமைத்துக் கொடுப்பாள். அங்குதான் வைரவள்ளி இறுதியாகச் சமைத்தாள். இல்லையென்றால், பார்வதிக்கு நோய் ஏற்பட வேண்டும். அது அருமையாகத்தான் கிடைக்கும். எந்த நோயையும் பார்வதி பெரிதாக் காட்டிக் கொள்வதில்லை. அதை விட வீட்டில் உறவினர் பெண்கள் எல்லாம் வந்து நிற்பார்கள். அவர்கள் சமைப்பார்கள். இதனால், வைரவள்ளிக்கு சமையல் வேலை இல்லை.

பொதுவாக வைரவள்ளி மீன் சுண்டலும், கீரி மீனில் வத்தல் வெள்ளைக்கறியும், கட்டித் தேங்காய்ப் பாலில் சமைத்தால் 2 தட்டு அதிகமாகச் சாப்பிடலாம். அதைவிடப் பனாட்டு தேங்காய்ப் பாலில் பிழிந்து கரைத்து சீனி போட்டு சோற்றுடன் கொடுப்பாள். நாவில் தேனூறும். அவ்வாறு கறியில் சுவை கூட்டும் திறமை இருந்தும் வயது எல்லாவற்றையும் மழுங்கடித்து விட்டது.

தனக்கு என்று உரிமைப் போரைப் பிடிவாதமாக இனிமேல் யாரிடம் செய்ய முடியும். தலையிலே மாறி மாறி அடிக்கின்றாள்.

"இவளுக்கென்ன சாகிற வயசா. 58 வயதில இராசாத்தி மாதிரி வாழ வேண்டியவள். போயிட்டாளே. இந்தக் கிழம் என்னத்துக்கு இன்னும் வாழ வேண்டும். உன்னோடயே கூடவே கூட்டிற்று போ பிள்ள... ... என்று கதறத் தொடங்கினாள்.

யாருக்கு யார் ஆறுதல் சொல்ல முடியும். எல்லோரும் நடந்து முடிந்த திடீர் இழப்பின் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாது இருக்கின்றார்கள். இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதே இயற்கைதான்.

இரவோடிரவாகச் செய்தி மட்டக்களப்பு சென்ற மகன் குடும்பத்தாருக்கும் மூத்தமகனுக்கும் சென்றது. இரவோடிரவாக அங்கிருந்து புறப்பட்டு விட்டார்கள். யாருக்கும் பார்வதி இறந்தாள் என்ற செய்தி நம்பிக்கையைத் தரவில்லை. ஓடியாடி வேலை செய்து தங்களை வழியனுப்பி வைத்தவளுக்கு இப்படி நடக்கும் என்று யார் நம்பப் போகின்றார்கள். உறவினர்கள் எல்லாரும் இரவோடிரவாக வந்து சேர்ந்தார்கள்.

அடுத்த நாள் காலை வீட்டிற்கு பார்வதியின் உடல் பெட்டிக்குள் அடைக்கப்பட்டுத் தூக்கி வரப்பட்டு வீட்டை வந்தடைந்தது. அழகான ரோஜா மலர்களின் படுக்கையிலே ஆழ்ந்த மீளா உறக்கத்தில் ஓயாத உடல் ஓய்வெடுத்து உறங்கிக் கொண்டிருந்தது. ரோஜா இதழ்கள் போல் சிவந்த மேனி சிறிது நிறம் மாறியிருந்தது. அம்மாவைக் கொண்டு வந்துவிட்டார்கள் என்ற செய்தி கேட்ட சிநேகாவின் கால்கள் தாயிடம் ஓடியது. வரவேற்பறையினுள் உடல் வைக்கப்பட்டது. ம்.... உடல்... என்ன வாழ்க்கை இதற்காகவா இந்த ஓட்டம். கட்டிலிலும் தொட்டிலிலும் போட்டு, இரவு பகல் கண்விழித்து கரிசனையுடன் வளர்த்த பிள்ளைகளைத் தவிக்க விட்டுப் போகவா இந்த வாழ்க்கையை மனிதர்கள் வாழுகின்றார்கள். சுற்றிவர ஒப்பாரி. ஆனால் பார்வதியோ சுகமாகத் தூங்கிக் கொண்டு இருக்கிறாள். சிநேகாவின் உதடுகள்,

“காயமும் பொய்தானோ அது வெறும் காற்றடைத்த பை தானோ” என்று பிதற்றியது.

கைகளால் தாயைத் தொட்டாள். சில்லென்று இருந்தது உடல். “ஐயோ..............” என்று வாய் பிளந்து நின்றாள். ஒரு தசையிலிருந்து மயக்கமில்லாத உடலில் ஒரு தசையை வெட்டி எடுப்பார்களே! அப்படி ஒரு வலி உடலெல்லாம் எடுத்தது. எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்று கூட நினைத்தாள். பார்வதியின் ஆடைகளை இறுக்கி அணைந்து பார்வதியின் சுகந்தத்தை உறிஞ்சி உறிஞ்சி மூக்கினுள் எடுக்கத் தொடங்கினாள். அருகே தங்கை சிந்து அம்மா..... அம்மா ....... என்று அழுதபடி நின்றாள். என்னைத் தனியாக விட்டிற்று போய்விட்டீர்களே என்று அவள் அலறினாள். அந்தக் குறை ஒன்று தான் பார்வதி

மனத்தில் இருந்திருக்க வேண்டும். அவளுடைய வாழ்க்கையை நினைத்து நிச்சயமாக பார்வதி ஆத்மா தவித்திருக்கும்.

நிலைத்து நின்ற கண்கள், நிதானம் இழந்த உணர்வுகள், பேச்சிழந்த வாய், பித்துப் பிடித்ததுபோல் இருக்கையில் இருந்த பரமசிவம், மெல்லக் கால்களை அசைத்தார். அமைதியாக பூப்பஞ்சணையிலே மலர்ந்த முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்த பார்வதி ஓயாத அங்கங்களுக்கு ஓய்வு கொடுத்து மீளா உறக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தாள்.

சிகரெட் பழக்கமுள்ள பரமசிவம் அடிக்கடி தேத்தண்ணீர் ஊத்து என்றால், கையிலே தேநீருடன் நிற்பாள். தண்ணீர் கூடத் தனியாக எடுத்துக் குடிக்கத் தெரியாமல் பரமசிவத்தைப் பராமரித்தவள் இன்று கடமைகள் முடிந்தன என்று சொல்லாமல் சொல்லி உறங்கிக் கொண்டிருந்தாள்.

இனி வரும் காலங்கள் பெற்ற பிள்ளைகளானாலும் ஒட்டி உறவாட முடியுமா! எட்ட நின்றே இன்பங் கண்டு களித்திருக்க அனுபவங்கள் ஆணையிட, யாருக்கும் சுமையாகக் காலம் தள்ளும் சுகம் வெறுத்து மீளா உறக்கம் கொண்டு அழகாகத் தூங்கினாள். அருகே வந்த பரமசிவம் அவள் கரங்களைப் பற்றினார். ஓ..... என்று வெடித்தது குரல், கண்களுக்குள் மறைந்திருந்த கண்ணீர் மேகம் உடைத்துக் கொண்டு கொட்டத் தொடங்கியது.

“உன்ன எங்கே நான் கூட்டிக் கொண்டு போகல்ல. எல்லா இடமும் ஒன்றாகத்தானே போனோம். இப்ப மட்டும் தனியாகப் போக எப்படி நினைச்சநீ. இந்தியாவிற்கு உன்னைக் கூட்டிக் கொண்டு போய்க் காட்ட வேண்டும் என்று தீராத ஆசை கொண்டிருந்தேனே. ஐயோ... உன்ன அனுப்பிட்டு நான் ஏன் இஞ்ச நிற்கிறன். நான் என்ன செய்வன்...” வார்த்தைகள் அடங்கவில்லை.

அருகே இருந்தவர்கள் அணைத்துக் கூட்டிக்கொண்டு வெளியே கொண்டு வந்தார்கள். தனது தொழில் நிறுவனத்தில் கூட மாற்றங்கள் வரும் போதெல்லாம் மந்திரிகளின் துணையுடன் மனைவியை விட்டுப் பிரியாது பிரிவின்றி ஒன்றாக வாழ்ந்த தம்பதியினர். இறப்பு ஒன்றுதான் அவர்களைப் பிரிக்கும் என்பது நியதி. அதுவே நடந்தது.

சிநேகாவின் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். வீட்டுக்கு மாணவர்கள் சிநேகாவைச் சந்திக்க

வருகின்ற போதெல்லாம் சிரித்த முகத்துடன் உங்கட ரீச்சர் அது செய்றா இது செய்றா என்று அன்பாகத் தங்களுடன் உரையாடுபவரும், தாங்கள் அம்மா என்று அன்போடு அழைப்பவருமாகிய அம்மாவை மீளா உறக்கத்தில் கண்டபோது மாணவர்கள் துடித்துப் போனார்கள்.

மட்டக்களப்பு சென்ற கீரனும் குடும்பத்துடன் வந்துவிட்டான். மூத்தமகன் சிவமும் குடும்பத்துடன் பதறியடித்து ஓடி வந்தான். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் உறவினர்கள், நண்பர்கள் என்று நிறைந்து விட்டார்கள். தெருவெல்லாம் சத்தம் ஓங்கி ஒலித்தது. 18 நாட்களின் முன் இதே வீடுதான் திருமணக் கலகலப்பில் ஆழ்ந்திருந்தது. இதே வீடு இன்று மரண ஓலத்தில் நிறைந்து கிடக்கின்றது.

எப்போது எது நடக்கும் என்று அந்தப் பிரபஞ்சம் முடிவு செய்து வைத்திருந்து ஒவ்வொரு காட்சியாக வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. எதிர்பாராத திருப்பங்கள் வாழ்க்கையில் அவ்வப்போது வந்து கொண்டுதானே இருக்கும்.

மனைவி தன் அரை உயிரைக் கொண்டு சென்ற உணர்வு அடுத்தடுத்த வாரங்களில் பரமசிவத்தின் உடலுக்குள் ஒலித்தது. ஓடிக்கொண்டிருந்த இரத்தம் நிலைகுலைந்தது. செல்களுக்குள் ஒரு தவிப்புப் பற்றிக் கொண்டது. அவள் இல்லையா! இனி வரமாட்டாளா! இனி எப்போதும் காணமாட்டோமா! தவியாய்த் தவித்தது மனம்.

மனைவியோடு எவையும் போம் என்பதை உடல் உணர்ந்தது. உள்ளத்தால் நொந்து போனார். மெல்ல மெல்ல உள்ளத்து உறுதியை மனைவி கொண்டு சென்று விட்டாள்.

பரமசிவம் தன்னுடைய காணிக்குள் இரண்டு குடும்பங்களைக் குடி வைத்திருந்தார். தங்களுடைய வளவுக்குள்ளே வீடு கட்டி வாழ்வதற்குச் சம்மதித்திருந்தார். அந்த வீட்டு ஆச்சி பார்வதிக்கு வீட்டு வேலைகளுக்கு உதவி செய்வதற்கும், கடைகளுக்குப் போய் வருவதற்கும் துணையாக இருந்தவள். பார்வதியின் மறைவுச் செய்தி கேட்டவர்கள் ஏறாவூரிலிருந்து இரவோடிரவாகப் பயணம் செய்து வீட்டிற்கு வந்து விட்டார்கள். சிநேகாவில் மிக்க அன்பு வைத்திருந்தவர்கள் வந்தவுடனேயே சிநேகாவைக் கண்டவுடன்

சிநேகாவைப் பார்த்து

“அம்மாவை அனுப்பிட்டு எப்படி இருக்கிறீங்க தங்கச்சி” என்று பெரிய சத்தத்துடன் அழுது புலம்பியபோது சிநேகாவால் தாங்க முடியவில்லை.

“ஆ.........” என்று வாய் திறந்து அவள் கத்தியபோது திறந்த அவளுடைய வாயை மூட அவளால் முடியவில்லை. ஓடி வந்த மூத்த அண்ணன் சிவம் அவளுடைய திறந்த படியிருந்த வாயை அடித்து மூடினான். ஒவ்வொரு கவலையும் அதனை அனுபவிப்பவர்களுக்கே புரியும்.

நினைத்துப் பார்க்க முடியாத வாழ்க்கைத் திருப்பத்தை சிநேகா கடந்து போக வேண்டிய சூழ்நிலை. பரமசிவம் மீதியுள்ள வாழ்க்கையை பார்வதி இல்லாது வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவருடைய வாழ்க்கையின் மறுபக்கம் என்று சொல்லலாம். இராஜா போல் வாழ்ந்தவர் மற்றவர்களை கடமைப்படுத்த விரும்பவில்லை. ஏதோ வாழுகின்றோம் என்று வாழத் தொடங்கினார்.

மேய்ப்பான் இல்லாத ஆடாய் வெறுமையாய் விறைத்து நின்றாள் சிநேகா. அவளுடைய வாழ்வின் பக்கங்கள் தாயின் பற்றிலேயே கழிந்தன.

சில நாட்களாக வீட்டைச் சுற்றி ஒரு நாய் வித்தியாசமான குரலிலே குரைத்துக் கொண்டும் அழுது கொண்டும் திரிந்த சம்பவங்களும், அரவிந்தனுடன் தொலைப்பேசியில் பேசிவிட்டு வந்த போது வீட்டு வாசலை மறைத்து நின்ற மாடும் தன்னுடைய தாய் தன்னை விட்டுப் பிரியப் போகின்றார் என்பதற்கு துர்நிமித்தங்கள் என்பதை இப்போது நினைத்துப் பார்க்கின்றாள் சிநேகா.

“அம்மாவுடன் ஒட்டிவிடப் போகிறாய். கொஞ்சம் தள்ளி நில்லு” என்பாரும்

சிநேகாவின் திருமணத்தின் பின் கேளிக்கையாக “இப்போது அம்மாவை என்ன செய்யப் போகின்றீர்கள்” என்று கேட்டவர்களும் வாயடைத்து நிற்கக் கடந்து வந்த பாதையைத் தன் மனத்திரையின் முன் சிநேகா நிறுத்தினாள்.

# அத்தியாயம் 5

# கடந்து வந்த பாதை

சிநேகாவின் அத்தை மட்/அல் முனீரா மகளிர் மகாவித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருந்தார். பாடசாலைக்குப் போகும் போது 5 வயதாக இருந்த சிநேகாவையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு போவார். இரட்டைப் பின்னலும், ரிப்பனால் கீழே இரண்டு போவும் கட்டி நெற்றியிலே மூன்று விரல்களால் திருநீற்றுப் பூச்சு பூசி அதனடுவே ஒரு கறுத்தப் பொட்டும் இட்டு அத்தையின் விரலைப் பிடித்துக் கொண்டு ஓடு நடையாய் மனம் நிறைந்த துள்ளலுடன் பாடசாலைக் கல்வியை ஆரம்பித்தவளே சிநேகா. இஸ்லாமியப் பிள்ளைகளுடன் இணைந்து குர்ஆன் கற்றாள், எழுத்துக்களுக்கு அடி எடுத்தாள்.

காலப்போக்கில் ஏறாவூரில் தமிழ் மாணவர்களுக்கு ஒரு பாடசாலை கட்டுவதற்கு முயற்சி மேற்கொண்டு ஊரார் உதவியுடன் கட்டிமுடித்த தந்தை பரமசிவம், சிநேகாவை அப்பாடசாலையில் முதல் வகுப்பில் சேர்த்தார். அங்கு கல்வியுடன் நடனமும் பயின்றாள். கோயில் சடங்கு, பாடசாலை விழாக்களுக்கு நடனம் ஆடுகின்ற போது பரதநாட்டிய உடைகள் பார்வதியே தைத்துக் கொடுப்பாள். ஒருமுறை சிநேகாவின் குட்டை உடலுக்கு நீண்ட பாவாடை அம்மா தைத்துவிட்டார் என்று அழுது கொண்டு வீட்டுக்கு வந்த போது நேரம் போதாமையால் பூட்டூசியால் பாவாடையைப் பார்வதி குட்டையாக்கிக் கொடுத்தாள். நடனம் ஆடுவது சிநேகாவுக்குக் கொள்ளை ஆசை. கோயில் சடங்கின் இறுதித் திருவிழாவிலே நடைபெறும் மேடை நிகழ்ச்சிகளில் நடனமாடுவதில் மிகுந்த ஆர்வம் அவளுக்கு இருந்தது.

7 ஆம் வகுப்பு சித்தியெய்திய போது சிநேகா மட்டக்களப்பு வின்சன்ட் பாடசாலைக்குச் சேர்க்கப்பட்டாள். சிநேகாவுக்குப் படிப்பதில்

ஆர்வம் குறைவதில்லை. ஆனால், நடனம் அவளுடைய இரத்தத்திற்குள் ஊறிவிட்டது. வீட்டில் நேரம் காலம் இல்லாமல் குதித்து ஆடிக் கொண்டே இருப்பாள். “ஒரு முறை தலையாட்டிவிடு மகள்” என்று பரமசிவம் கேட்டால் உடனடியாக நின்ற இடத்தில் நின்று பரதநாட்டியம் ஆடத் தொடங்கி விடுவாள். இது எதிர்காலத்தில் அவளுடைய கல்வியைப் பாதிக்கும் என்று நினைத்த பார்வதி அவளுடைய நடன வகுப்பை நிறுத்தி விட்டார்.

எதிர்காலம் எப்படி வரப்போகின்றது என்பதை எப்படி ஒருவரால் முடிவு செய்ய முடியும். காலம் ஏதோ ஒன்றை ஒளித்து வைத்திருக்கும். அதுதான் சிநேகா நடனத்தில் நாட்டமுடையவளாக இருந்தாளோ தெரியவில்லை. கலைகளைக் கற்றவர்கள் வெளிநாடுகளில் நன்றாகச் சம்பாதிக்க முடியும் என்பதை பார்வதி அறிந்தாளா? கலைகள் மூலமே எதிர்காலத் தலைமுறையினருக்குத் தமிழ் உணர்வை, மொழியைப் புலம்பெயர்ந்த நாடுகளில் ஊட்ட முடியும் என்ற அறிவு சிநேகாவின் இளம் பருவத்துக்கு அவசியமாகப்படவில்லை. தன்னுடைய மகள் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்பதுதான் பார்வதியின் உள்ளம் முழுவதும் நிறைந்திருந்தது. சிநேகா ஜெர்மனியில்தான் தன்னுடைய இறுதிக் காலத்தைக் கழிக்கப் போகின்றாள் என்பதை அறிய பார்வதி ஒன்றும் எதிர்காலத்தை அறிந்து சொல்லும் நொஸ்ராடாமஸ் இல்லையே,

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலையில் சிநேகா கல்வி கற்பதற்குப் போட்டிகள் நிறையவே இருந்தன. தன்னுடைய ஊர்ப் பிள்ளைகளுடன் மட்டுமே கல்வி கற்றுத் தன்னுடைய திறமையைக் காட்டிய சிநேகாவுக்கு வேறு ஊர்ப் பிள்ளைகளின் தொடர்புகள் கிடைத்தன. இதுவே அந்நியர் தொடர்புக்கு அச்சாரம் போட்டது. தொடர்ந்து படித்தாள். பேருந்துப் பயணம் சிநேகா வாழ்க்கையில் சுவாரஸ்யமாகவே இருந்தது. ஜீ.சீ.ஈ தராதரப் பத்திரப் பரீட்சை எழுதி முடிவுகள் வரும்வரை தையல், பின்னல், சுவெற்றர் பின்னல் என்று வீட்டிலே இருக்க வைக்காது சிநேகாவைப் பார்வதி ஓட ஓட விரட்டினாள். அனுபவங்கள் வாழ்க்கையைச் சிதைத்துச் சீரமைக்கும் என்பது பார்வதியின் பக்க நியாயம். அதில் எவ்விதப் பாதிப்பும் இல்லை. என்னவென்றால் அதுதான் இன்றும் சிநேகாவின் தூங்கா இரவுகளுக்கும் தொடர் எழுத்துப் படையல்களுக்கும் காரணங்களாயின.

ஜீ.சீ.ஈ உயர்தரக் கற்கை நெறிக்குள் சிநேகா புகுந்த போது பேருந்துப் போக்குவரத்து நேரத்தைக் கொன்று விடுவதனால், பாடங்களை

மீட்டுவதற்கு நேரம் போதாது என்று நினைத்த பார்வதி சிநேகாவை மட்டக்களப்பில் வாழுகின்ற தன்னுடைய அக்கா வீட்டிலே தங்கிப் படிக்க வைத்தாள்.

அக்கா என்றால் தன்னுடைய தந்தையின் முதல் தாரத்துக்குப் பிறந்த பிள்ளை. தனவந்தர்கள் அக்காலத்தில் ஒரு மனைவி இறந்தாலோ, இருந்தாலோ வேறு ஒரு மனைவியைத் தேர்ந்தெடுப்பது ஒன்றும் பெரிய விடயமில்லை. பார்வதியின் அப்பாவும் அப்படியே மனைவி இறந்தவுடன் வைரவள்ளியைத் திருமணம் செய்தார். பெரியம்மாவின் வீட்டிலே தங்கி இருந்ததாலே சிநேகாவுக்கு கற்பதற்கு வசதியாக இருந்தது.

உணவு இடைவேளையின் போது சிநேகா பெரியம்மா வீட்டுக்கு நண்பி குணவதியுடன் ஓடி வந்து விடுவாள். வருகின்ற வழியெல்லாம் ஆண் மாணவர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஈடு கொடுத்து அவர்களைக் குணவதி வம்புக்கு இழுப்பாள். வெள்ளைப் பாலம் என்று சொல்லப்படுகின்ற பாலத்தைக் கடந்தே பெரியம்மா வீட்டுக்குப் போக வேண்டும்.

அப்பாலத்தைக் கடக்கும் வரை தமது கவனம் முழுவதும் பாடசாலை சீருடைக்குள்ளேயே இருக்கும். பாலத்தின் மேலே வரிசைக்கு மாணவர்கள் அமர்ந்திருப்பார்கள். நக்கலும் நையாண்டிகளும் ஒருபுறமிருக்க வெள்ளைப் பாலத்தில் வீசுகின்ற காற்றுக்கு மானம் மரியாதை கிடையாது. மாணவிகளின் பாடசாலைச் சீருடையைத் தூக்கிப் பார்க்கவே வீசுவது போலும் துள்ளிக் குதித்துக் கூத்தாடி பாடசாலைச் சீருடையைக் கிளப்பி விடும். புத்தகக் கட்டைப் பிடிப்பதா? யூனிபோர்மை இறுக்கப் பிடிப்பதா?

காற்று சீருடைக்குள் புகுந்து பாலத்துக் கட்டுகளில் குரங்குபோலக் குந்திக் கொண்டிருக்கும் ஆண் மாணவர்களுக்கு முன் அவமானத்தைத் தந்துவிடும். அந்தக் காலத்தில் யார் புத்தகப் பை தூக்குவார்கள்? புத்தகங்களை அடுக்கி இடது கையை மடித்து அதிலே தாங்கி இடையிலே சொருகுவார்கள். அந்தப் புத்தகங்கள் சில சமயங்களில் சின்னாபின்னமாக விழுந்து சிதறுவதும் உண்டு. அதைக் குனிந்து எடுக்க முடியாது பாடசாலைச் சீருடை வில்லனாகும். காற்றாக நாம் மாற வேண்டும் என்று இளைஞர்கள் பாட்டுப் பாடுவார்கள்.

மாணவர்கள் அழகாக அடுக்கிய புத்தகங்களைப் பக்கவாட்டில் பிடித்தபடி நீண்ட காற்சட்டை போட்டு கம்பீரமாக நடந்து வருவார்கள்.

இதைப் பார்க்கும் போது ஆடை விடயத்தில் பெண்களுக்கு ஏக்கம் இருந்ததுண்டு.

நக்கலும் நையாண்டியுமாகக் காலம் கிளுகிளுப்புக்களை இந்த இளமைப் பருவத்தில் காட்டிக் கரைந்து போனது.

இவ்வாறு பாடசாலைக் காலங்கள் பல நினைவுகளைத் தந்து சென்றது.

## ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகள்

சிநேகா அன்று காலை பாடசாலைச் சீருடை போட்டுவிட்டாள். மனத்துக்குள் படபடப்பு. அன்று தான் அவளுடைய ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. தன்னுடைய பல்கலைக்கழகக் கனவு நிறைவேறப் போகின்ற தருணம். முடிவுகள் தவறானால், அவளுடைய வாழ்க்கையின் அடுத்த கட்டம் என்ன என்பதைத் தீர்மானிக்க முடியாத நிலை.

வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் முக்கியமாக சிநேகாவின் அம்மாவுக்கு எதிர்பார்ப்பு அதிகம் இருந்தது. ஏனென்றால், சிநேகா படிப்பதற்கு நித்திரை முழிப்பவள் அவள் தானே. அவளுக்கு மேசைக்கு உணவு கொண்டு வருவதுடன் சிநேகா உணவுண்ணச் சங்கடப்படும் வேளையிலே தன்னுடைய அன்பையும் விரல்களின் சுவையையும் சேர்த்துக் குழைத்த சோற்றை ஊட்டி விடுபவளும் அவள்தானே. சிநேகா வேண்டாம் வேண்டாம் என்று அடம்பிடித்துப் பார்ப்பாள்.

"அம்மா..... போதும். எனக்கு வாந்தி வருது" என்று நடிப்பாள்.

"நல்லாச் சாப்பிட்டால்தான் நல்லாப் படிக்கலாம். சும்மா மொடலாக நீ போகப் போவதில்லை. பிறகு ஒரு சின்ன வருத்தமென்றாலும் சுருண்டு கிடப்பாய். என்ர குஞ்சல்லா. இன்னும் கொஞ்சம் ஒருவாய் ஒருவாய்"

என்று தட்டிலுள்ள சோறெல்லாம் இந்த ஒரு வாய் மந்திர உச்சரிப்பால் சிநேகா வாய்க்குள் இறங்கிவிடும். இது பார்வதி இறக்கும் வரைத் தொடர்ந்தது. தன்னுடைய மகளுக்குச் சோற்றோடு சேர்த்துப் பார்வதி பருக்கிய தத்துவம்.

"கட்டிய கணவன் என்றாலும் நீ கை நீட்டி நிற்கக் கூடாது. உன்னுடைய சொந்த உழைப்பில் நீ வாழ வேண்டும். உன்னால் முடியாத

சூழ்நிலையில் உன் வாய் உன் ஆசைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். உன்னுடைய மனம் அதற்குக் கட்டுப்பட வேண்டும். உழைத்துச் சாப்பிட முடியாதவர்களுக்கு ஆசையும் வரக்கூடாது.''

தாய் கூறிய வார்த்தைகள் அவளுடைய வாழ்நாள் முழுவதும் பசுமரத்தாணி போல் மனத்துக்குள் அடிக்கப்பட்டுவிட்டது.

ஏறாவூரிலே வம்மியடி பேருந்து நிலையமே மட்டக்களப்புக்குச் செல்வதற்குச் சிநேகாவோ பரமசிவமோ காத்திருக்கும் பேருந்து நிலையம். அந்தப் பேருந்து நிலையத்தருகே வம்மியடி கந்தசாமி என்பவர் சட்டிபானைக் கடை போட்டிருந்தார். அங்கு பேருந்துப் பயணம் செய்ய வருபவர்கள் அவருடைய கடையிலேயே இருந்து தங்களுடைய சொந்தக் கதை சோகக் கதை கூறுவார்கள். அவரும் மனைவியும் வியாபாரத்தைப் பொழுதுபோக்காகச் செய்து முடிப்பார்கள்.

அவர்கூட பின் வந்த கலவரத்தில் இஸ்லாமியர்களினால் வெட்டப்பட்டு இறந்தார் என்னும் செய்தியை எதிர்காலத்திலே கேட்போம் என்று அந்த இளம் பருவத்தில் சிநேகா நினைத்துப் பார்க்கவில்லை.

வழக்கம் போலப் பாடசாலைப் பேருந்து வந்து நிற்கிறது. மனத்துக்குள் படபடப்பு. கிருஸ்ணப்பிள்ளை நடத்துநர் இளவட்டம் என்றதனால், வாசற்படியில் நெருக்கிக் கொண்டு நிற்பார். அவருடைய உரசல் பட்டே மாணவர்கள் உள் நுழைய வேண்டும். அவரை ஒரு தடவை தொட்டு நெருக்கமாகிப் போகவேண்டியது அவசியம்.

ஏறாவூரில் எந்த மாணவி ஏறுவார் என்பதை செங்கலடி தாண்டும் போது அவருடைய மனத்துக்குள் படம் ஓடும். நீண்ட உருவம். கை விரல்களின் இடையிலே தாள் நோட்டுகளை அடுக்கி வைத்திருப்பார். எந்த விரலுக்குள் எந்த ரூபாய் நோட்டு இருக்கும் என்று அவர் மூளை கட்டளையிடாமலே எடுத்துக் கொடுக்கக் கூடிய திறமை அவருக்கு இருந்தது. டிக்கட் புத்தகமும் கைகளில் இருக்கும்.

பேருந்துப் பயணத்தில் அடிக்கடி பின்னிருந்து முன் பக்கமாக அத்தனை மாணவ மாணவிகளுக்கும் இடி வைத்தியம் கொடுத்து நகர்ந்து ``யாருக்கு டிக்கட் வேண்டும்'' என்று அடிக்கடி கேட்டுக் கொண்டே உள்நுழைவார். ``முன்னுக்குப் போங்கள் முன்னுக்குப் போங்கள்'' என்று வாகனம் ஓட்டுபவருக்குக் கேட்கும்படியாக அவர் குரல் உயர்த்தினாலும் வாசற்படியில் இருக்கும் மாணவர்கள் எதற்காகவும் நகர்வது இல்லை

என்னும் விடயத்தைப் பிற்காலத்திலேயே அவள் மூளை உள்வாங்கியது. பேருந்தின் வாசற்படி நெருக்கி இறுக்கி வியர்த்துக் கொட்டும். ஆனால், மேலே போனால் நகர்ந்து போக இடம் விசாலமாக இருக்கும்.

ஹா ஹா ஹா அக்காலத்தில் சென்ற் அடித்து மாணவர்கள் வருவது கிடையாது. பவுடர் வாசனைதான். யாராவது அரபு நாடுகளுக்கு வேலைக்குச் சென்று வந்தாலேயே அவர்கள் வீட்டுப் பிள்ளைகளின் சென்ற் வாசனை தூக்கலாகப் பவுடர் வாசனையை வென்று வரும். பவுடர் மணம் மூக்கைத் துளைக்கப் பருவப் பெண்கள் எல்லாரும் படியேறும் போது காற்றில் வரும் கீதம் போல் மூக்கில் வரும் பவுடர் வாசனை.

பேருந்து வாசற்படி கடந்து சிநேகா உள் நுழைந்தாள். நெருக்கமான வாசலில் நெருங்கி நிற்போர் அநேகம். வழமைபோல் ஜூலியான் அவளுக்காய் இடம் பிடித்து வைத்திருந்தான்.

“அக்கா... ...” என்று அவன் அழைக்கும் சத்தத்தின் திசை நோக்கி அவள் நகருகின்றாள். அவளுக்கும் ஜூலியானுக்கும் உள்ள உறவு உடன்பிறவா அக்கா தம்பி உறவு. அந்த அன்பின் ஈர்ப்புக்குக் காரணம் புரியவில்லை. ஆனாலும் அவளுக்காக அவன் ஏங்குவதும். அவள் வரவை எதிர்பார்த்து நிற்பதும். தன்னுடைய இடத்தைக் கொடுத்துவிட்டுத் தன்னுடைய புத்தகக் கட்டை சிநேகாவின் மடியில் வைத்துவிட்டு அருகே நின்று அளவளாடுவதும் அவனுக்குக் கடலை அல்வா தின்பது போல் இருக்கும்.

பொதுவாகவே இருக்கையில் அமர்வது சிநேகாவுக்குப் பிடிக்காது. பாடசாலைச் சீருடை மடிப்புக்கள் கசங்குவது அவளுக்குப் பிடிக்காது. இருக்கும் போது மடிப்புக்களைக் கைளால் அடுக்கிப் பிடித்து அப்படியே அமர்ந்து விடுவாள்.

சீனச்சட்டி இஸ்திரியினுள் தேங்காய்ச் சிரட்டையை நெருப்பில் எரித்து அந்தத் துண்டுகளை இஸ்திரிப் பெட்டிக்குள் போட்டு வரிசைப் படுத்திய பாடசாலைச் சீருடை மடிப்புக்களை அந்த இஸ்திரியால் அமுத்தத் தேய்த்து சீருடையை இஸ்திரி போடுவது அக்காலத்து வழக்கம். இந்த மடிப்புக்கள் சிநேகாவின் ஆடையில் கலைந்தது சரித்திரமே இல்லை. அம்மா பாடசாலை சீருடை கழுவுகின்ற போது அந்த மடிப்புக்களைப் பார்த்து நீ இருப்பதே இல்லையா? என்று கேட்பார்.

வெள்ளை கென்வஸ் சப்பாத்தைக் கழுவிய பின் வெள்ளைக் கட்டி போன்ற பூசுகின்ற கட்டியினால் அதன்மேல் பூசிக் காய வைக்க வேண்டும். காய்ந்தபின் பால் வண்ணத்தில் சப்பாத்துக்கள் பளிச்சிடும். இவ்வாறு பல பிரயத்தனங்களுடனேதான் நேர்த்தியாகப் பாடசாலைக்குக் கிளம்ப வேண்டும்.

இப்போது தேவைகளை அவதானித்துத் தயாரிப்புக்கள் உற்பத்தியாவது வாழ்க்கையை இலகுவாக்குவதுடன் சோம்பேறிகளாக்குவதும் உண்மைதான்.

அதேவேளை ஜெர்மனியில் பாடசாலைச் சீருடை கிடையாது. சீருடை அணிவதைப் பெற்றோர்கள் விரும்புவதில்லை. அதனால் மாணவர்கள் சீருடை அணியும் கட்டுப்பாடுகள் இல்லை.

பேருந்துக்குள் சிலருடைய பார்வைகள் அவளுக்காகக் காத்திருப்பதை அறியாதவள் இல்லை சிநேகா. அந்த 7 மைல்கள் பேருந்துப் பயணம் கற்பித்த பாடங்கள் அதிகம். சேர்த்துத் தந்த அனுபவங்கள் ஆயிரம்.

ஒருநாள் ஒன்றாகத் தன் சிநேகிதிகளுடன் 4 இருக்கைக் கம்பிகளை இடுப்புக்கு முட்டுக் கொடுத்துவிட்டுத் தம்முடைய புத்தகங்களை வைத்திருக்கக் காத்திருக்கின்ற மாணவர்களிடம் கொடுத்துவிட்டுப் பலதும் பத்தும் பேசிச் சிரித்துக் கும்மாளமிட்டுக் கலகலப்பாக இருக்கும் போது ஒரு மாணவன் தன்னுடைய உதடுகளைக் கடித்தபடி சிநேகாவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பதை அவதானித்தாள்.

இரகசியமாகத் தன்னுடைய சிநேகிதிகளிடம் மெல்ல அவனை அவதானிக்கச் செய்தாள். நால்வரும் பேசி முடிவெடுத்ததும் நால்வரும் ஒரே நேரத்தில் ஒன்றாக அவனை நேராக விறைத்துப் பார்த்தார்கள். இதைக் கண்ட அவனும் நாணிக் குறுகித் தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினான். நால்வரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அந்தச் சம்பவத்தின் பின் சிநேகாவின் பக்கம் அவன் பார்வை பட்டதே இல்லை.

இவ்வாறு எத்தனையோ பூச்சாண்டிகளும், ஒருதலைக் காதலர்களும் 7 மைல் பேருந்துப் பயணத்தில் வந்து போனார்கள்.

இன்று கானல் நீர் போல் காட்சிப்படுத்தப்படும் இந்த நினைவுகள் புன்னகையை உதடுகளில் தந்துவிட்டுப் போகும்.

பாடசாலைக்குள் நுழைகிறாள். நெஞ்சு பக்குப் பக்கென்று அடிக்கிறது. எந்த ரென்சன் பிடித்த ஆசிரியரின் கையில் என்னுடைய விடைத்தாள்கள் சிவப்புப் பேனாவால் அடி வாங்கியதோ! இத்தனை

நாளும் நினைத்துப் பார்க்காத எதிர்மறை நினைவுகள் அவளுடைய மனத்துக்குள் ஆக்கிரமித்திருந்தன.

அறிவிப்புப் பலகையில் மாணவர்கள் முட்டி மோதிக் கொண்டிருந்தனர். முகத்தைத் தொங்கப் போட்டபடி சிலர். கைகளில் அபிநயம் பிடித்தபடி ஆடிக் கொண்டே கும்பலிலிருந்து வெளி வந்தவர்கள் சிலர். அந்த இடம் நோக்கி நகர்ந்தாள் சிநேகா.

சங்கரப்பிள்ளை ஆசிரியை அவளைத் தாண்டிப் போனார். அவளைத் திரும்பிப் பார்த்து கொங்குரஜுலேசன் சிநேகா என்றார். திரும்பிப் பார்த்தாள். வலது கையின் பெருவிரலை உயர்த்திக் காட்டி அவர் சிரித்தார். சிநேகாவுக்கு அந்த சமிக்ஞை போதும். குதூகலத்துடன் ஓடினாள். ‘‘சிநேகா நீ பாஸ்டி. யூனிவர்சட்டிக்குப் போற ரிசல்ட்’’ ‘‘உனக்கு?’’ செய்தி சொன்ன மலரிடம் உனக்கு என்று திரும்பக் கேட்டாள். இந்தக் கேள்வி சிநேகாவுக்குத் தேவையா? இதுதான் மனித மனம்.

பல்கலைக்கழக அனுமதி நிச்சயம் என்றாகிவிட்டது. தேர்வு முடிவுகள் பெற்றுவிட்டாள். பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பப் படிவமும் கிடைத்துவிட்டது. இன்றிலிருந்து பாடசாலைச் சீருடைக்கு விடுதலை.

வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை வாசற்படியில் சிநேகா கால்கள் பதியாது. போக்குவரத்து சில்மிசங்களுக்கு விடுதலை. இனி ஒரு சுதந்திரம் மனத்துக்குள் முளை விட்டது. தணியாத ஆசை பேராதனைப் பல்கலைக்கழகம். இலங்கையின் முதல்தரப் பல்கலைக்கழகம் என்று பெயர் பெற்றது. ஆசையின் படி மேலேறுகிறது. அடுத்த கட்ட நடவடிக்கை மனத்துக்குள் பதியம் போடப்படுகிறது.

சிட்டாய்ப் பறந்து வீட்டை அடைந்தாள். அவளுடைய வீடு பிரதான வீதியை ஒட்டியே அமைந்திருந்தது. அம்மா இரட்டை ஜடை பின்னலுக்கு எண்ணெய் போட்டுப் பின்னித் தலைவாரும் போது பாடசாலைப் பேருந்து சிலவேளை அவளுடைய சிகையலங்காரத்தைப் பார்த்தே பயணிக்கும். அந்த இரட்டை ஜடைகளும் பின்பக்கத்தைத் தட்டித் தட்டி நடனம் புரிந்தே அவளுடைய நடையில் மகிழ்ந்திருக்கும். வாசல் கதவைத் திறந்து உள்ளே வர அம்மா ஓடி வந்தாள்.

‘‘என்ன மகள்? எப்படி முடிவு?

எதுவுமே பேசாத சிநேகா வழமைபோல் அம்மாவைக் கட்டிப் பிடித்து

இரு பக்கக் கன்னங்களிலும் முத்தச்சரம் பொழிந்தாள்.

"ஓ.... நீ பாஷா குஞ்சு. கீரன் இங்க வா...... வா சிநேகா ஏ.எல் பாஸ் பண்ணிட்டாள். ஏறாவூரில் உள்ள தமிழர்களில் இரண்டாவது பட்டதாரி என்ர மகள்" தன்னுடைய மகிழ்ச்சியை இரண்டாவது மகனிடம் சொல்லி மகிழ்ந்தாள்.

ஒருசோடி தங்க வளையல்கள் அம்மாவின் மகிழ்ச்சியில் சிநேகாவுக்கு அன்பளிப்பாகக் கிடைத்தன.

இப்போது பேராதனையில் கற்கை நெறி ஆரம்பிப்பதாக இருந்தால், 1 வருடம் தும்பறை பல்கலைக்கழகத்தில் கற்க வேண்டும். அதில் பெறுகின்ற பெறுபேறுகளைப் பொறுத்தே பேராதனையில் 3 வருடங்கள் சிறப்புப் பாடம் கற்பதற்குச் செல்ல முடியும். இல்லாவிட்டால் 3 வருடங்களே பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்வதற்கு 2 வருடங்கள் தும்பறையிலும் 1 வருடம் பேராதனையிலும் கற்க வேண்டும். அதற்கு முதலில் தும்பறை பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் ஏதாவது வீடு வாடகைக்கு எடுக்க வேண்டும்.

கல்குடா அமைச்சர் தேவநாயகம் அவர்களின் மெய்ப் பாதுகாவலன் சில்வா வீடு கண்டி மாநகர மடவெல்ல பகுதியில் இருந்தது. தன்னுடைய வீட்டில் தங்கலாம் என்று அவர் சிநேகாவின் அப்பாவிடம் சொன்னதனால், தன்னுடன் ஒன்றாகப் பாடசாலையில் படித்த சத்யாவும் தன்னோடு அந்த வீட்டில் தங்குவதற்கான அனுமதியைப் பெற்று மகளுக்குத் துணையாக சிநேகாவின் அப்பா சத்யாவையும் இணைத்துக் கொண்டார்.

உயர்ந்த கட்டுக்கோப்பான திடகாத்திரமான சில்வாவின் துணையுடன் பல்கலைக்கழப் பதிவுகள் எல்லாம் செய்வதாக இருந்தது. அவரும், பரமசிவம், பார்வதி, சத்யா, சிநேகா நால்வரும் கண்டிப் பேருந்திலே படி எடுத்து வைத்தார்கள்.

# அத்தியாயம் 6

# தும்பறை வளாகம்

பேருந்தின் முன் வாசல் சீட்டின் கீழே சின்னச் சின்ன தயிர் முட்டிகள் அமர்ந்திருந்தன. முட்டித் தயிரை ஓர் இலையால் மூடி சணல் நூலால் வரிந்து கட்டிப் பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். மட்டக்களப்புத் தயிர் இலங்கையில் பெயர் பெற்ற தயிர். இலங்கையின் பல பகுதிகளுக்கும் பசுத்தயிரும், எருமைத்தயிரும் கட்டிகட்டியாக வழித்தெடுத்து பலருடைய வயிற்றுக்குள் அஸ்தமனமாகும். இந்தத் தயிர் பற்றி மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நூலில் வீ.சீ. கந்தையா அவர்கள் எழுதிய வரிகளை நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

> ‘‘மோட்டெருமை வெண்டயிரும் முப்பழமும் கற்கண்டும்
> போட்டினிய சீனி தேன் பொருந்து செந்நெல் வெண்சோற்றைக்
> கூட்டிஒன்றாய்க் குழைத்ததனை குலக்குமரர் தமைக்கூவிக்
> கூட்டுணுவார் அமிர்தமெனக் குறைவில் செல்வ மவர்க்கம்மா’’

என்று பாடியுள்ளார்.

முத்துச்சம்பாச் சோற்றுக்குள் தயிர் போட்டு அதற்குள் சீனி, மா, பலா, வாழை என்னும் முப்பழங்களையும் சேர்த்துத் தேனும் கலந்து மட்டக்களப்பிலே தயிர் சாப்பிடும் வழக்கம் இருக்கின்றது. ஒன்றும் கிடைக்காவிட்டால் சோற்றுக்குள் தயிரும் சீனியும் வாழைப்பழமும் கலந்து சாப்பிடும் வழக்கம் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் தயிரைக் கறியுடன் உண்பார்கள். மலைப்பகுதியில் கித்துள் பனங்கட்டியுடன் சாப்பிடுவார்கள்.

மண்சட்டியில் பாலை ஊற்றி விறகடுப்பில் நன்றாகக் கொதிக்க வைத்து நன்றாக நுரை வரும் வரை கரண்டியால் ஊற்றி ஊற்றி நன்றாக ஆத்த வேண்டும். அப்போது அந்த நுரை ஆடையாக வரும். காய்ச்சி எடுத்த பலை ஆறவிட்டு நன்றாக ஆறிய பின் ஏற்கனவே எடுத்து

வைத்த கட்டித் தயிராகிய உறை மோரைக் கட்டித்தன்மை இல்லாமல் நசித்தெடுத்து பாலுக்குள் விட்டு மண் சட்டி மூடியால் மூடவேண்டும். அடுத்த நாள் எடுத்துப் பார்த்தால் ஆடை போட்டுத் தயிர் அழகாகக் காணப்படும்.

அந்த ஆடையை எடுத்துத் தயிருடன் உண்ணலாம். அந்தளவு சா... வாய்விட்டுச் சொல்லமுடியாத சுவையாக இருக்கும். பின் ஒரு பருத்தித் துணியில் தயிரைப் போட்டு இறுகக் கட்டிக் கொளுவி விட வேண்டும். அப்போது அந்தத் தயிரிலுள்ள நீர்த்தன்மை போய்க் கட்டித் தயிராக இருக்கும். இதைச் சீனி, பால், பழம் கலந்து சோற்றுடன் மட்டக்களப்பார் உண்பார்கள்.

பெரிய வருமானம் செய்யும் தொழிலாகத் தயிர்த் தொழில் மட்டக்களப்புப் பகுதி மக்களுக்கு இருக்கின்றது. ஒரு நீண்ட தடி எடுப்பர். அந்தத் தடியிலே முட்டித் தயிர்கள் தொங்கவிடப்பட்டிருக்கும். அத்தடியில் முன் பக்கமும் பின் பக்கமும் இருவர் வாய்மொழிப் பாடல்களைப் பாடிக் கொண்டே தம்முடைய தயிர் முட்டிகளைத் தோளில் தூக்கிக் கொண்டு போகும் அழகே தனி அழகு. இதனையே ஆடவர் தோளிலும் கா, அரிவையர் நாவிலும் கா என்று ஈழத்துக் கவிஞர் யாழ்ப்பாணத்து வீரமணி ஐயர் பாடியிருக்கின்றார்.

வியாபாரிகளுக்கு அடிபணிந்து கண்டி நோக்கித் தயிர்ச்சட்டிகள் தன் பயணத்தைத் தொடர்கின்றன. காலுக்குள் கீழே இருக்கும் தயிர்ச்சட்டியின் மேல் வாந்தி அபிஷேகம் செய்பவர்கள், கண்டி பேருந்திலே அதிகம். ஏனென்றால், மலைப்பகுதியில் பேருந்து பிரயாணம் செய்கின்ற போது மலையின் உயரத்திற்கேற்ப வளைந்து வளைந்து பாம்பு போலப் பேருந்து பயணிக்க அதற்குள் இருப்பவர்கள் குடலும் வளைந்து வளைந்து குமட்டிக் கொண்டு வந்து குப்பென்று வாய்வழியே புறப்பட்டு தயிர்ச் சட்டிகளை அபிஷேகம் செய்து விடும். அதன் பின் விற்பனையாளர்கள் என்ன செய்கின்றார்களோ தெரியவில்லை.

உள்ளே நுழைந்த நால்வரிலும் கருணையுள்ளம் கொண்ட ஒருவரின் தயவால் சிநேகாவின் அம்மாவுக்கு இருப்பதற்கு இருக்கை கிடைத்து விட்டது. அம்மாவை ஒட்டிக் கொண்டிருப்பவள் அல்லவா சிநேகா பக்கத்திலே சாய்ந்தபடி நின்றாள். அப்போதுதான் கண்டாள் ஆட்டுத் தாடியுடன் உயர்ந்த, மெலிந்த, விறைத்த முகத்துடன் ஓர் இளைஞன்

அம்மா இருந்த இருக்கைக்குப் பின் இருக்கையில் இருந்தான். அவனைப் பார்த்த முதல் பார்வையிலேயே ஒரு வெறுப்பு. இவன் நிச்சயமாகச் சீனியராகத்தான் இருக்க வேண்டும். அதனாலேயே ஐயா வெறித்துப் பார்த்துத் தன்னுடைய சீனியர் திமிரைக் காட்டுகிறார் போல இருக்கிறது என்று சிநேகா மனத்துக்குள் நினைத்தாள்.

பேருந்துக்குள்ளேயே பகடிவதை தொடங்கிவிடும் என்று அவளுக்கு மாணவர்கள் எச்சரிக்கை தந்திருந்தார்கள். நான் தான் மந்திரியின் மெய்ப்பாதுகாவலனுடன் அல்லவா வருகிறேன். இந்த ஆட்டுத்தாடியுடைய பருப்பு வேகாது என்று மனத்துக்குள் நினைத்தவளாய் ‘‘இவனெல்லாம் என்ன மனிசன் இரண்டு பெண்பிள்ளைப் பிள்ளைகள் பேருந்தின் போக்குக்கேற்ப வளைந்து வளைந்து நிற்க முடியாமல் தடுமாறுகின்றார்கள். இந்த மாடு இருந்த இடத்தை விட்டு அசையுதா என்று பாரு’’ என்று சத்யாவிடம் நாசுக்காகச் சொன்னாள். பேருந்து வளைகின்ற போது மேலதிகமாக விழுவது போலெல்லாம் நடித்துக் காட்டினாள். அவனோ அசையவில்லை. அந்த நிமிடத்திலிருந்து அவனைப் பற்றிய தவறான பதிவு அவள் நெஞ்சுக்குள் பதிந்து விட்டது.

இதற்குப்பின் சிநேகாவின் மூக்குக் கண்ணாடியை ஒளித்து வைத்து விட்டு ‘‘சிநேகா மனசைத் தந்தாள் நான் மூக்குக் கண்ணாடியைத் தருவேன்’’ என்ற சினிமா வசனம் எல்லாம் அவளிடம் வேகுமா?

சிறிது நேரத்தில் சிநேகாவின் அம்மாவின் பக்கத்தில் இருந்தவர் இறங்குவதற்குரிய இடம் நெருங்கியதால் எழுந்தார். அந்த இடத்தில் சிநேகாவும் வேறு ஓர் இடத்தில் சத்யாவும் அமர்ந்து கொண்டார்கள். இருந்தவுடன் அம்மாவின் தோளில் சாய்ந்து கொண்டாள். கண்களை மூடினாள். முழித்திருந்தால், குடலும் முழித்துக் கொள்ளும். பிறகு வயிற்றைக் குமட்டி வாய்வழி கிளம்பி பிறகு வெட்கமாகப் போய்விடும்.

முதல் நாள் பிரயாண அனுபவம் இனிமேல் இந்தப் பேருந்தில் வரக்கூடாது. இந்த பேருந்து எலும்பு, உறுப்பெல்லாம் திருகி எடுக்கிறது. வேறு வழியால், புகையிரதம் மூலம் பொல்காவலை போய்க் கண்டி போக வேண்டும் அல்லது பொலன்னறுவை போய் வேறு பாதையிலேதான் போக வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

சிநேகா இறங்க வேண்டிய தரிப்பிடம் வந்தது. எழுந்தாள். அப்போதுதான் அந்த ஆட்டுத்தாடி வாய் திறந்தது.

“நாளைக்கு வா என்ன நடக்கிறது என்று பார்” என்றான்.

“இவனென்ன வா என்று ஒருமையில் பேசுகிறான் வடுவா. சத்யா இவரென்ன கிழிக்கப் போகிறார் என்று பார்ப்போம்” என்று சொல்லிச் சிரித்தபடி நால்வரும் சில்வாவின் வீடு நோக்கி நடந்தார்கள்.

அன்றுதான் மலைநாட்டின் மகிமையை அவள் காண்கின்றாள். சில்லென்று ஒரு தென்றல். மிதமான காலநிலையின் குளிர்ச்சி. பச்சைப் பசேலென்று காட்சியளிக்கும் மரங்கள். தூசி படியாத சுற்றாடல், பனி மழையானது படிகின்ற தூசியை நாளும் கழுவித் துடைக்கும் தொழிலைச் செய்கின்றது போலும். வீடுகளின் கூரைகளை மேலுள்ள வீடுகளில் இருந்த படி பார்க்கக் கூடியதாக இருந்தது. ஒவ்வொரு வீட்டின் முன்னும் அழகான பூந்தோட்டங்கள் தண்ணீர் வார்க்காமலே தளைத்துக் கொண்டு போகும் தளிர்கள். ஊரே பசுமையாக ஈரப்பதத்துடன் காணப்படும்.

படியேறித்தான் வீடுகளுக்குப் போக வேண்டிய சூழல். மலைகளின் அழகுத் தோற்றங்கள். வாய்விட்டுச் சொல்ல முடியாத இயற்கை அழகை ஆண்டவன் மலைநாடுகளுக்கு அள்ளிக் கொடுத்திருக்கின்றான். இந்தக் கண்டிக் குறிஞ்சி அழகைப் பாட கபிலர்தான் பிறந்து வர வேண்டும். அதன் அழகை வர்ணிக்க ஆயிரம் வாய்கள் வேண்டும். இந்தப் பல்கலைக்கழகத்தில் சிநேகாவுக்கு அனுமதி கிடைத்ததையிட்டுச் சிநேகாவின் பெற்றோரும் பெருமை கொண்டார்கள்.

வெப்பமான ஊரிலிருந்து வந்த சிநேகாவுக்கு கண்டி நகரத்து மடவெல்ல பிரதேசத்தின் அழகும் குளிர்ச்சியும் இன்பமான உணர்வைத் தந்தது. புத்தகத்தில் வாசித்த அழகை இன்று கண்கள் குளிர உணர்ந்து வாசிக்கின்றாள். ஏறாவூரிலே சிங்களவர்கள் வாழ்ந்தாலும் ஓரிரண்டு சொற்களே பரீட்சயமான சிங்கள மொழியுடன் களமிறங்கி இருந்தாள். அத்துடன் கையும் காலும் நடனமாடும் வார்த்தைப் பரிமாற்றங்கள்.

மொழி தோன்றியதும் இப்படித்தான். மனிதன் புதிய மொழியைக் கற்பதும் இப்படித்தான். ஓசையும் சைகையுமே மொழியின் ஆரம்பமும் கற்கும் ஆரம்பமும்.

அடுத்த நாள் அம்மாவின் துணையுடன் முதன் முதலாக உடலைச் சுற்றிப் புடவையை அணிந்தாள். கம்புத் தடிக்குச் சுற்றுவது போல் இருக்கிறது என்று சொன்னபடி அம்மா புடவையைச் சுற்றினார். சத்யா ஒரு புறம் புடவைக்குள் நுழைந்தாள். பாடசாலையில் அவ்வளவு

சிநேகம் சத்யாவுடன் இருந்ததில்லை. கிரான் பகுதியில் வசிப்பதனால் ஒரே பேருந்தில் பிரயாணம் செய்திருக்கிறார்கள். பெரிதாக நட்புறவு இல்லாவிட்டாலும் பாடசாலையில் ஏற்பட்ட பழக்கத்தில் கேட்டுக் கொண்டதற்கமைய பல்கலைக் கழகத்தில் இணைந்து பயணிக்க இருவரும் முடிவெடுத்தார்கள். அந்தப் பழக்கத்தால் பிற்காலத்தில் சத்யாவினுடைய அப்பா சிநேகாவின் தந்தையினுடைய வயற் பூமியைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

02.03.1981 அன்று முதன்முதலாக தும்பறை வளாகத்துக்குள் நுழைகின்றாள். ஐவரையும் தும்பறை வளாகத்துக்குள் கண்ட சீனியர்கள் ஒருமாதிரியாக முறைத்துப் பார்த்தபடி இருந்தார்கள். அந்த ஆட்டுத்தாடி விக்கினேஷ் என்ற பெயருடன் இருக்கிறான் என்பதை அன்றுதான் அறிந்தாள் சிநேகா.

உள் நுழைவின் வலக்கைப் பக்கம் உணவகம் இருந்தது. இடக்கை பக்கம் பதிவு அலுவலகம் இருந்தது. அங்குதான் முதற் பதிவை முடிக்கின்றாள். அதைத் தாண்டிப் படிகளில் ஏறிப் போகின்ற போது ஒரு புத்தருடைய ஸ்தூபி இருக்கிறது. அமைதி தவழும் சாந்த சொரூபமாகப் புத்தர் அமர்ந்திருந்தார். போகும் பாதையில் நூலகம். அதற்குக் கீழ் ஒரு ஜேம் பழ மரம் இருந்தது. அதற்கு நேரெதிராக மாஸல் அலுவலகம் இருந்தது. வலப்பக்கம் திரும்பினால் சுகாதார நிலையம் இருந்தது. சில்வா வளாகம் முழுவதையும் நால்வருக்கும் சுற்றிக் காட்டினார்.

‘‘டேய் விக்கினேஷ் இவளாடா நீ சொன்ன மெய்ப்பாதுகாவலர் பெட்டை. எத்தனை நாள் இந்த பொடிகார்ட்டுடன் அம்மா யூனிவேர்சிட்டிக்கு வரப் போறா. நாளைக்கு நம்மளிட்ட அகப்படத்தானே வேண்டும்’’ இது அவனுடைய நண்பனின் மிரட்டல் சிநேகா காதுகளுக்குள் நுழைந்தது.

பொதுவாகவே அக்காலப்பகுதியில் யாரும் யாருக்கும் பகடிவதை செய்யக் கூடாது என்ற சட்டம் இருந்தது. மாஸல் அங்கும் இங்கும் தவறான முறையில் பகடிவதை நடக்கின்றதா என்பதை அவதானித்துக் கொண்டே திரிவார். மாஸல் என்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அழைக்கும் வழக்கம் இருந்தது. ஆனாலும் அதையும் தாண்டி பகடிவதைகள் நடந்து கொண்டுதான் இருந்தன. ஒரு பெண்ணுக்கு நடந்த தகாத பகடிவதையால் ஓர் உயர்ந்த தங்குவிடுதியிலிருந்து ஒரு

பெண் குதித்துத் தன்னுடைய உயிரை மாய்த்த சம்பவத்திற்குப் பிறகு பகடிவதை தடை செய்யப்பட்டிருந்தது.

அந்தப் பகடி வதையால் உயிர் போவது மட்டுமல்ல. எத்தனையோ உள்ளங்கள் மனத்தால் அழுது துடிப்பது தெரிந்தும் ரேகிங் என்னும் பகடி வதை இன்றும் கூட பல்கலைக்கழகங்களில் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

பல்கலைக்கழக வளாகங்களில் புதிய மாணவர்கள் மந்திரித்துவிட்ட ஆடு போல் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு சொம்பி போல் பழைய மாணவர்கள் பின் செல்வதும். ஒரு மாணவன் அல்லது மாணவியைச் சுற்றி இரண்டு மூன்று பழைய மாணவர்கள் நிற்பதும் காணக்கூடியதாக இருந்தது. அருகே போகின்ற மாணவர்கள்.

“என்னடா சள் அடித்துக் கொண்டு நிற்கிறாய் கொன் அடித்துக் கொண்டிருக்கின்றாய்” என்றும்.

ஒன்றும் புரியாத மொழியால் பேசிச் செல்வார்கள். காலப்போக்கிலேயே இது ஒரு குழூஉக்குறி என்பதைச் சிநேகா புரிந்து கொண்டாள். ஆணும் ஆணும் பேசிக் கொண்டிருந்தால், அல்லது பெண்ணும் பெண்ணும் பேசிக் கொண்டிருந்தால், கொன் அடிப்பது என்று கூறுவார்கள். ஆணும் பெண்ணும் பேசிக் கொண்டிருந்தால் சள் அடிப்பது என்றும் சொல்வார்கள். ஒரு மாணவனுடைய விடுதி அறையில் பதிவு செய்யாது களவாகத் தங்கியிருப்பதைக் கஜே அடிப்பது என்று சொல்வது போன்ற வார்த்தைகள் பல்கலைக்கழகக் குழூஉக்குறிகளாக இருந்தன.

அன்றைய நாள் சிநேகாவும் சத்யாவும் தப்பிப் பிழைத்தார்கள். வீட்டிற்குப் போகின்ற வழியிலே ஒரு மாணவன் நிலத்திலே கிடந்து நீச்சலடித்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ஒருவன் மரத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு காதல் மொழி பேசிக் கொண்டிருந்தான். ஓஹோ இதுதான் இயற்கையைக் காதலிப்பதோ என்று அவள் நினைக்க ஒருவன் ஒரு பெரிய தடியை எடுத்து வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகம் நடித்துக் கொண்டு இருந்தான்.

மாணவர்களுக்கு இப்படித்தான் பகடிவதை நேரத்தில் பித்துப் பிடிக்குமோ என்று நினைத்தவளாய்ப் பெற்றோரைப் பின் தொடர்ந்தாள். ஒருவருடைய முகத்திலும் ஈயாடவில்லை. வாய் வரை வந்த சிரிப்பை சிநேகா அடக்கினாள். ஏனென்றால், சிரிப்பவர்களைக் கண்டால், என்ன

சிரிப்பு என்று விலாசித் தள்ளுவார்கள். சிரிப்பை வெட்டச் சொல்வார்கள். சிரிப்பை நிறுத்துவதைச் சிரிப்பை வெட்டி எறி என்று சொல்வதும் ஒரு குழூஉக்குறியே. காதலில் பிளவு வந்தால், அவள் அவனைக் காய் வெட்டிப் போட்டாள் என்பதும் ஒரு குழூஉக்குறியே. பல்கலைக்கழக வாழ்வு முடிந்து போக இந்த வார்த்தைகளும் மறந்து போயின.

"மகள் என்ன இது நடக்கிறது" என்று அம்மா கொஞ்சம் பயத்துடன் கேட்டாள். அது 1 மாதத்திற்கு அப்படித்தான் அம்மா. பிறகு இந்தப் பகடி வதை செய்பவர்களே நல்ல சிநேகிதர்களாக இருப்பார்கள் என்று சமாளித்தாள்.

அன்றைய பொழுது சிநேகாவுக்குச் சுமுகமாகப் போனது. சில்வா வீட்டு உணவு வருடக் கணக்கில் பேசிக் கொண்டிருக்க வைக்கும் சுவை அனுபவத்தைத் தந்தது. பலாக்காய் மிளகு போட்ட கறி, குத்தரிசி போல் மொக்கை மொக்கையாய்ப் பெரிய அரிசிச் சோறு, பெரிய துண்டு மீனை மிளகு போட்டுப் பிரட்டி எடுத்த வறுவல் கறி. நினைத்தாலே நாவிலே எச்சில் வடியும். சிநேகாவுக்கு அந்த உணவு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. அவர்களுடைய உணவை முதற் காதல் இன்பம் போல் நினைத்துக் கொண்டே இருக்க அவள் மனம் ஏங்கும்.

அம்புல் மாலு கறி அது கொறுக்காப் புளிக்குள்ளே மீனைப் போட்டு ஒரு பிரட்டல் கறியாகச் செய்வது. பொலஸ் என்னும் பலாக்காய்ப் பிஞ்சை வெட்டி கொஸ் கறி செய்வார்கள்.

பலாச்சுளையை எடுத்துக் கறி சமைப்பது. ஈரப்பிலாக்காயில் தெள கறி சமைப்பார்கள். அம்பர்லங்கா சட்னியை நினைத்தால் இனிப்பும் புளிப்பும் உறைப்பும் சேர்ந்த சுவை கூட்டி நாவிலே நின்று நடம்புரியும். ஹிரி பத் என்னும் பால் சோற்றுடன் கட்டைச்சம்பல் வைத்துச் சாப்பிட்டால், நாவில் பாலுடன் சேர்ந்த உறைப்பு தண்ணீரைக் குடிக்க வைக்கும். கொளை என்று ஒரு உணவு பலவித இலை வகைகள் சேர்ந்திருக்கும். அதில் மரவள்ளி இலை கூட சேர்ந்து கொள்ளும். இவ்வாறு இலைகள் சேர்த்து ஒரு சத்துணவு போடுவார்கள்.

தூரியம், பட்டர் புரூட் என்று சொல்லும் அவக்காடோ இவையெல்லாம் இவர்களுடைய உணவு வகைகளாக நினைத்தால்

"நெஞ்சினிலே நெஞ்சினிலே ஆடுதே ஊஞ்சலே
சாப்பாட்டுச் சாப்பாட்டுக் கனவு"

என்று பாட வேண்டும் போல் இருக்கும்.

மலை நாட்டுத் தண்ணீரின் மகிமையானது மலையக மக்களின் உணவிலும் இங்கு வாழும் மகளிரின் தலை மயிரிலும் முறையே அளவுக்கதிகமான சுவையையும் அழகையும் அள்ளி வழங்குகின்றது.

சிங்களப் பெண்களின் நீண்ட கூந்தலுக்கு அருவி நீரில் நீராடி மகிழ்ந்த பெருமையைக் காணலாம். மலையிலிருந்து மூலிகைச் சத்தெல்லாம் உறிஞ்சி எடுத்துக் கொண்டே பாய்ந்து வரும் அருவி நீராடும் பெண்களின் உச்சிக்கு மருத்துவத்தை அள்ளி வழங்குகின்றது.

இயற்கை அள்ளித் தரும் கொடைகளை அள்ளிப் பருக எல்லாருக்கும் கொடுத்து வைக்க வேண்டுமே. மலைநாடெங்கும் சிங்களவர்கள் அழகையும் இரசனையையும் நேரடியாக இரசிக்கின்றார்கள். மலைநாட்டழகை நாம் புத்தகப் பக்கங்களைப் புரட்டிக் கற்பனையில் இரசிக்க வேண்டும்.

அம்மாவின் நிறைந்த அறிவுரைகளுடன் இரவு பல்லை இடுக்கும் ஆளைக் கொல்லும் குளிருடன் அன்றைய பொழுது கழிந்தது.

அடுத்த நாள் பரமசிவம், அம்மா, சில்வா மூவரும் ஊருக்குத் திரும்புகின்றார்கள். முதல் தடவையாக அம்மாவைப் பிரிந்து நீண்ட நாட்கள் வாழப் போகின்றேன் என்ற ஏக்கம் சிநேகாவின் மனத்தில் பற்றிக் கொள்ளுகின்றது. பொத்தி வைத்த கிளியை வேறு ஒரு கூட்டுக்குள் தங்க வைத்துப் பிரியும் மனநிலையில் அம்மா. அம்மாவின் சொத்தான அறிவுரைகளை இறுகப் பிடித்துத் தன்னுடைய மனத்துக்குள் பசை போட்டு ஒட்டி விட்டாள். இனி காலம் தான் அவளுடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

பல்கலைக்கழகம். இங்குப் பல நிற மனங்களும், பல நிறக் குணங்களும் பல இனக்கலாசாரங்களும், இரு வேறுபட்ட மொழியுடைய மனிதர்களும், இலங்கையின் வெவ்வேறு பகுதியின் குடும்பச் சூழலின் வெளிப்பாடுகளும் இணைந்த ஒரு வாழ்க்கை. இது ஒரு காமக்கூடம் என்பார் சிலர், கலைக்கூடம் என்பார் சிலர், மனிதனைப் பட்டை தீட்டி அனுப்பும் பருவக்கூடம் என்பார் சிலர். இதிலிருந்து பட்டம் பெறுபவர் வாழ்க்கைப் பாடத்திலும் தேறுவார் என்பதே நிச்சயம். ஒருவனுடைய எதிர்காலத்தை இந்த 4 வருட வாழ்க்கை காட்டிக் கொடுத்துவிடும். அதுவும்

பேராதனைப் பல்கலைக்கழகம் என்பது இலங்கைப் பல்கலைக்கழகங்களில் விசேடமானது. அதுபற்றிப் பின்னர் மகிழ்ந்தின்புறலாம்.

பிந்தி வந்த பேயை முந்தி வந்த பேய் ஆட்டிப் படைப்பது போல தும்பறை வளாகத்துப் புத்தம் புதிய சிட்டுக்களைப் பதம் பார்க்கும் பழைய சிட்டுக்களின் திமிரைப் பார்ப்போம். பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து பழைய மாணவர்கள் பகடி வதைக்காக தும்பறை வளாகத்துக்குக் களம் இறங்கியிருந்தார்கள். இன்று நீ. நாளை நான் என்பது போல அடுத்த வருட ஒத்திகைக்குத் தயாராகும் புதிய மாணவர்கள் வரிசையில் சிநேகா.

இவர்களெல்லாம் பல்கலைக் கழகத்திற்கு வரவிருக்கின்றார்கள் என்னும் பெயர்ப் பட்டியல் முன்னமே பழைய மாணவர்களுக்குக் கிடைத்துவிடும். அவர்களைப் பற்றிய விபரங்களைக் கையில் வைத்துக் கொண்டே பழைய பகை, பொறாமை, மகிழ்ச்சி எல்லாவற்றையும் காட்ட இந்தப் பகடி வதையைப் பிரயோகிப்பார்கள்.

அடுத்த நாள் சிநேகாவும் சத்யாவும் தும்பறை வளாகத்துக்குள் நுழைந்தார்கள். சிநேகாவின் பின் புலமும் அறியப் பட்டிருந்தது. ஊரின் தலைவரின் மகள், அரசியல்வாதிகளின் செல்வாக்குள்ள தந்தை. இந்த விடயங்கள் அவர் வருவதற்கு முன்னமே தும்பறைக்குள் நுழைந்துவிட்டது. இவை சில சமயங்களில் அவளுடைய பகடி வதைகளுக்குக் கைகொடுத்திருக்கின்றது.

ஏதோ அடக்குமுறைக்கு உட்பட்ட இராணுவ முகாம் போன்ற உணர்வை அந்த வளாகம் தந்தது. சிறிது உள்ளே போன போது கண்ணாடி அணிந்த தாடிக்காரன் ஒருவன் மாணவர்களுக்கு எதையோ பேசிக் கொண்டிருந்தான். சிநேகாவினுடைய கற்கை ஆண்டில் 160 புதிய மாணவர்கள் வந்திருந்தார்கள். இவர்களில் 90 வீதமானவர்களுக்குச் சுட்டுப் போட்டாலும் சிங்களம் வாய்க்குள் நுழையாது.

மலையக மாணவர்களுக்குத்தான் சிங்களம் பேச வரும். எங்கள் அனைவரையும் ஒருவன் பெரிய மண்டபத்திற்குள் அழைத்துச் சென்றான். அவன் நீண்ட நேரமாக உரையாற்றிக் கொண்டிருந்தான். என்ன பேசுகின்றான் என்பது புரியாமல் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்ப்பதுபோல் புதிய மாணவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிங்கள மாணவர்களின் முகபாவங்களுக்கு ஏற்ப அவர்கள் கை தட்டும் போது

சேர்ந்து கை தட்டுவதும், அவர்கள் சிரிக்கும் போது சேர்ந்து சிரிப்பதுமாக நடித்துக் கொண்டிருந்தார்கள்.

3 மொழிகளும் நன்கு தெரிந்த சிநேகாவின் மாணவர் குழுவில் இருந்த ஒரு மாணவனே விளக்கினான். மக்கள் விடுதலை முன்னணி அதாவது ஜே.வி.பி. அமைப்பாளர் ரோஹன விஜேவீர என்பதை அறியச் செய்தான். அப்போதுதான் அவன் சிறையிலிருந்து விடுதலையாகியுள்ள காலப்பகுதி என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

வெளியே வந்த சிநேகாவைத் தன்னுடன் அழைத்துப் போக வாசற்படியில் பாரூக் நின்றான்.

‘‘எங்கடி போறாய். இஞ்ச வந்து நில்லு’’ இதுதான் சாட்டென்று சத்யா அவ்விடத்தை விட்டு விலகி விட்டாள். சிநேகா பேசா மடந்தையானாள்.

‘‘நீ என்ன பெரிய இவளா. ஒரு தூஷணம் சொல்லு...’’ என்றான். சிநேகா எதுவுமே பேசாமல் நின்றாள்.

‘‘நீ இப்போது சொல்லவில்லை என்றால், லெக்ஸசுக்குப் போக முடியாது’’ என்றான்.

மனத்துக்குள் திடமாக முடிவெடுத்து விட்டாள் சிநேகா உயிரே போனாலும் அவள் வாயிலிருந்து அந்த வார்த்தைகள் வரப் போவதில்லை

‘‘எனக்குத் தெரியாது’’ பிடிவாதமாக இருந்தாள்.

எவ்வளவோ முயன்று பார்க்க அவளைக் கவ்விக் கொண்டு போ காகம் மாதிரி விக்னேஷ் காத்திருப்பது தெரிந்தது

‘‘இன்றைக்குப் போ. நாளைக்குக் கட்டாயம் நீ சொல்ல வேண்டும்’’ என்றான்.

போடா டேய்... ... இன்றைக்கு விக்னேஷ் வந்தது போல் நாளைக்கு ஒரு தினேஷ் வர மாட்டானா என்று மனத்துக்குள் நினைத்தபடி அடுத்த விக்னேஷ் அருகே சென்றாள்.

அப்போது விக்னேஷ் பார்த்தானே ஒரு பார்வை. அவளுடைய அங்கங்களெல்லாம் கூசியது. அவளுடைய மனத்துக்குள் அருவருப்பாக இருந்தது. எதுவுமே பேசாது பார்த்துக் கொண்டிருந்தே அந்த வதையை அவன் செய்தான். அந்த இடத்தை விட்டு அவள் நகர எத்தனிக்கும் போது

“ஏய் இஞ்ச நில்லு. போவதற்கு நான் பெர்மிசன் தந்தேனா? எனக்குப் பின்னால் வா” என்று ஹென்டினுக்குள் அழைத்துச் சென்றான்.

இந்தப் படுபாவியிட்ட இருந்து யார் என்னைக் காப்பாற்றுவார்கள் என்று நினைத்தபடி அவன் பின்னே சிநேகா நடந்தாள்.

உணவகத்துக்குள் இருக்க வைத்து எரிச்சல் ஊட்டும் வகையில் பலவித வார்த்தைப் பிரயோகங்கள் அவள் செவிகளுக்குள் நாராசமாகப் புகுந்தன. முடிவாகச் சிநேகா ஒன்றை உணர்ந்தாள். முதல் பார்வை யிலிருந்து சிநேகாவைத் தன்னுடன் இணைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குள் இருப்பதை உணர்கின்றாள். ஏதோ பகடி வதை என்றார்கள். முதல் நாளே தனக்கு இப்படி ஒரு பிரச்சினை விதை முளைத்திருக்கிறதே என்று நினைத்தாள். ஆனால், அவளுக்கு அவள்தான் நீதிபதி. மனத்தில் உறுதி இருந்தால் மாமலையும் ஒரு கடுகாம் என்பது போல் அவளை அவள் நம்பினாள்.

“லெக்ஸர்ஸ் போக வேண்டும்” என்று அனுமதி பெற்ற பின் அறை தேடிப் போகும் போது அழுது கண்கள் சிவந்த நிலையில் சத்யா நின்று கொண்டிருந்தாள். அருகே கருணா ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தான். இவளைக் கண்டு தன்னிடம் ஓடி வந்த சத்யாவை.

“என்ன நடந்தது? சத்யா என்ன நடந்தது?”

என்று ஆரவாரமாகக் கேட்டவளிடம் எதுவுமே சொல்லாமல் அழுது கொண்டிருந்த சத்யாவை

“நான் எதுவுமே கேட்கவில்லை. வா லெக்ஸஸ்க்குப் போவோம்” என்று சிநேகா அழைத்துச் சென்றாள். பொய்யை மெய்யாகச் சொல்லத் தெரிந்த சத்யாவுக்கு அவன் கூறிய வார்த்தைகளில் ஏதோ விஷம் இருப்பதனால், அதைத் தன்னுடைய மனத்துக்குள் போட்டு அரிக்க வைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது. விரிவுரை முடிந்தவுடன் கழுகு போல் கொத்திக் கொள்ளப் பலர் காத்திருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மிரட்டல்கள், பயமுறுத்தல்கள்

அதுவும் பெண் சீனியர்ஸ் இருக்கிறார்களே. அப்பப்பா சொல்லத் தேவையில்லை. அதிலும் நிகிலா என்பவள் தன்னுடைய காதலனுடன் செய்கின்ற சேட்டைகளுக்குக் கணக்கே இல்லை. ஆனால், காதலனோ சிநேகாவினுடைய அப்பாவிற்குத் தெரிந்தவன் என்பதனால் சற்று

விலகி ஆள் இடம் மாறிவிட்டான். அவள் கேட்ட கேள்விகளில் இருந்த மோசமான வார்த்தைகளால் வெறுப்பேறிய சிநேகாவும் மனத்துக்குள்ளே

"இந்த எலும்பி, ஆளப் பார்த்தால் ஒரு காற்றடித்தால் பறந்து போவது போல் இருந்து கொண்டு கதைக்கும் கதை" மனத்துக்குள்ளேதான் நினைத்தாள். வெளியில் சொல்ல மறுத்தாள். பேசாதிருந்தாள். உம்மென்று இருக்காதே. பேசினால், கதை அளக்காதே. எதற்கும் இடக்கு முடக்கான வார்த்தைப் பிரயோகங்கள். அவளிடமிருந்து தப்பிய சிநேகா நிகிலாவுடைய நண்பனிடம் நிகிலா கண்டபடி பேசுகிறாள் என்று சொன்னாள். அவள் நல்லவள். பயப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறிய அவளுடைய காதலன் சிநேகாவைப் பேருந்துக்குள் ஏற்றி விட்டான்.

பேருந்துக்குள் ஏறினால், பக்கத்து இருக்கையில் இடத்தை வைத்திருந்து.

"இங்கே வா..." என்று அழைத்தான் பாரூக்.

எதுவும் பேசாமல் அவனுக்கு அருகே போய் அமர்ந்தாள்.

"சொல். சொல்லடி..." என்று தூஷண புராணத்தை ஆரம்பித்தான்.

நல்லவேளையாக மட்டக்களப்பிலிருந்து தன்னுடைய காதலியைச் சந்திக்க வந்திருந்த ராஜா அந்தப் பேருந்தில் அமர்ந்திருந்தான். இது சிநேகாவுக்கு வாச்சுப் போச்சு. ராஜா அண்ணா என்று அவரை அழைத்தாள்.

அவரும் திரும்பிப் பார்த்தவர் சிநேகாவையும் பாரூக்கையும் கண்டார்.

"சிநேகா... எப்படி இருக்கிறாய்" என்ற போது கண்ணால் பக்கத்தில் இருக்கும் பாரூக்கைக் காட்டினாள்.

ராஜாவிற்குப் புரிந்தது. இருக்கையிலிருந்து எழுந்து வந்த ராஜா பாரூக்கிடம்

"எப்படி மச்சான் இருக்கிறாய்" என்றான்.

"ஓ ராஜா. ஒரு சிட்டுக்கு வைத்தியம் கொடுக்கிறன். நீயும் சேர்ந்து கேள்" என்றான்.

‘‘யாரந்த சிட்டு?’’ என்று கேட்டான்.

‘‘புதிதாய் தும்பறைக்குப் பறந்து வந்து என்னட்ட மாட்டுப்பட்டுப் போனது’’ என்று சிநேகாவைக் காட்டினான்.

‘‘டேய் மச்சான். சிநேகா என்ர சொந்தக்காரி. உன்ர தங்கச்சி விளையாடாத’’ என்றான்.

‘‘அப்படியா மச்சான். மன்னித்துக் கொள்ளு மச்சான். சிநேகா நீ தப்பி விட்டாய். இனி உனக்கு ஏதாவது பிரச்சினை என்றால், என்னட்டச் சொல்லு. அண்ணன் நான் இருக்கிறன்’’ என்றான்.

ஆஹா எப்படிச் சொந்தமெல்லாம் வருகின்றது. உண்மையிலேயே அதன் பின் பாரூக் அண்ணன் போலவே சிநேகாவுக்கு உதவிகள் செய்தான்.

ஏறாவூரிலிருந்து கிட்டத்தட்ட 200 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கண்டிக்கு நம்பிக்கை என்ற துணையுடனேதான் சிநேகா பட்டப்படிப்பை முடிக்க வந்தாள். அதேபோல் மற்றைய மாணவர்களும் இலங்கையின் பல்வேறு பகுதியிலிருந்து வந்திருந்தார்கள். சிலர் 3 வருடங்கள், சிலர் 4 வருடங்கள், தம்முடைய கற்கைநெறிக் காலங்களை முடிப்பார்கள். அதுவரை நட்பாகவும் தம்முடைய சொந்த உறவுகளை மறந்து கலகலப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு உற்ற துணையாக இருப்பவர்கள் சக மாணவர்களே.

இலங்கையின் மற்றைய பல்கலைக்கழகங்கள் போல் பேராதனைப் பல்கலைக்கழகம் இருந்ததில்லை. ஊருக்கும் மாணவர்களுக்கும் அஞ்சல்க் கடிதம் தவிர வேறு எவ்விதத் தொடர்பும் இருந்ததில்லை. யாழ்ப்பாண, கிழக்குப் பல்கலைக்கழகங்களை எடுத்து நோக்கினால், அவை ஊருக்கு மத்தியில் இருக்கும். மாணவர்களின் நடவடிக்கைகளைச் சமூகம் உற்று நோக்கிக் கொண்டிருக்கும். ஏதாவது நடந்தால் உறவினர்கள் துணைக்கு வந்து விடுவார்கள். ஆனால், பேராதனை என்பது ஒரு தனி இராச்சியம்.

முதல் வருட தும்பறை வளாகம் ஓரளவு மாணவர்களைப் பதப்படுத்தி அவர்கள் எதில் நாட்டமுள்ளவர்களோ அந்தத் திறமையையும் விருப்பங்களையும் பரீட்சை மூலம் பரிசீலனை செய்து அத்துறையை மேலும் விசேடமாகக் கற்பதற்கு பேராதனைக்கு அனுப்பி வைக்கும். அதுவரை ஒரு வருடம் ஆங்கிலம் கணிதம் உட்பட வணிகம்,

பொருளாதாரம், தமிழ், கணக்கியல் போன்ற பாடங்களைத் தும்பறை போதிக்கும்.

அந்த ஒருவருடத்தில் தங்குமிட வசதியில்லாத காரணத்தால் தும்பறை வளாகத்தை ஒட்டியுள்ள பிரதேசங்களிலுள்ள வீடுகளிலேயே மாணவர்கள் தங்கியிருந்து கற்க வேண்டிய தேவை இருந்தது.

அதனாலேயே சிநேகாவும் சத்யாவும் மந்திரியின் மெய்ப்பாதுகாவலன் சில்வா வீட்டில் தங்கிப் படித்தார்கள். காலையில் எழுந்து அவர்களுக்கு உணவு தயாரித்து பெட்டியில் கட்டிக் கொடுப்பதிலிருந்து அன்பாகவும் அரவணைப்புடனும் அந்தச் சிங்களக் குடும்பம் இருவரையும் கவனித்தார்கள். சில்வாவின் பிள்ளைகளும் சேர்ந்து பழகுவதனால் இலகுவில் சிநேகா சிங்கள மொழியைக் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

காலத்தின் விரிசலில் பல்கலைக்கழக விடுமுறை வந்தது. இருவரும் பிரியாவிடை பெற்று மட்டக்களப்பு செல்வதற்காகப் புகையிரதம் எடுத்தனர். அக்காலப் புகையிரதப் பயணம் பற்றி சிநேகா நினைத்துப் பார்க்கிறாள்.

கோச்சு வண்டியிலே ஏறி ஏறாவூருக்குச் செல்வதற்காக பொல்காவலையை அடைவதற்குள் குட்டைப் பாவாடைக்குள் இரகசியமாய் நுழைந்து மட்டக்களப்பு ஆணத்தைச் சுவை பார்க்கும் மூட்டைப்பூச்சி. அந்த மூட்டைப் பூச்சியைப் பிடித்து நசுக்க முடியாத விரல் நகங்கள் அவள் தொடையைப் பதம் பார்த்து அழகான சிறுவீக்கக் கோலங்களுடன் இறங்க அவள் ஆயத்தமாகும்போது பொல்காவலைக்குள் புகையிரதம் நுழைந்து கொள்ளும். புகையிரத நிலையத்தில் இறங்கிக் கொள்ள இரவு விழித்துக் கொள்ளும் பகல் உறக்கம் காணும்.

சுற்றிவர இரவுக் காவலனே துணை இருப்பான். அவளோடு இணைந்து அவளுடைய நண்பிகள் ஓரிருவரும் பாடலுடனும் பரிகாசத்துடனும் இரவுடன் போட்டி போட, இருக்கையை மறந்த கண்கள் உறக்கத்தை அணைக்கும். திடுக்கிட்டு எழும்போது மட்டக்களப்பு இரயில்ச் சத்தம் உறக்கக் காதலனைத் துரத்திவிட்டு அவர்களை ஆட்சி கொள்ளும். துடித்தெழுந்து கனமான பெட்டியைத் தூக்குவார்கள். அக்காலத்தில் இழுத்துச் செல்லும் வசதியைப் பயணப்பொதி அறிந்ததில்லை. சிநேகா அந்த பயணப் பொதியைத் தூக்கிக் கொண்டு இரயிலுக்குள் ஏற மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கும். அவள்தானே உடம்பை சிலிம்மாக வைத்திருக்க வேண்டும் என்று உணவுக் கட்டுப்பாட்டுடன் இருப்பவளாயிற்றே.

இவ்வாறான பயணத்தில் ஏறாவூர் தொடருந்து நிலையத்தில் பெருத்த வாய் திறந்து ஓலமிட்டது தொடருந்து. செய்த வேலையை விட்டு ஓடி வருவாள் பார்வதி. வீட்டு வாசலிலிருந்து தலைவாயில் வரை ஒரு 100 மீற்றர் தூரம் இருக்கும் அதுவரை மண் உயர்த்தி வாகனம் வருவதற்காகப் பாதை போடப்பட்டிருந்தது. ஓடி வந்து வாசலின் முன்னே குழந்தை போல் நிற்பாள். சிநேகாவைக் கண்டதும் அவளை அணைத்துக் கொள்வாள். இவ்வாறுதான் நான்கு வருட கல்வியாண்டுப் பிரயாணங்கள் சிநேகாவுக்கு முடிந்தது.

சிநேகா வீடு சென்று ஓரிரு நாட்களின் பின் அவள் வீடு கதிகலங்கி நின்றது. இலங்கையின் சிங்களக் கிராமம் ஒன்றினுள் புகுந்த போராளிகளின் வேட்டையால், உயிரிழந்தவர்களின் செய்தி காதுகளுக்குள் நெருப்பைக் காய்ச்சி ஊற்றியது போல் சென்றது. வதந்திகளும் செய்திகளும் வரத் தொடங்கின.

இனி எப்படி அந்தச் சிங்கள வீட்டிலே அவர்களின் கைகளால் உணவு உண்ண முடியும்? கண்டி, நுவரேலியா, அனுராதபுரம், பொலனறுவப் பகுதிகளில் பிறந்ததிலிருந்தும், வியாபாரத்துக்காகவும் சென்று வாழுகின்ற தமிழ் மக்கள் எப்படி நிம்மதியாக வாழ முடியும். நாம் எப்படி மீண்டும் சென்று படிப்பது? ஆயிரம் கேள்விகள் சிநேகா மனத்துக்குள் ஓடியது

‘‘இந்தப் படிப்பொன்டும் புள்ளைக்குத் தேவல்ல. பிள்ளய அங்க அனுப்பிட்டு வயித்தில நெருப்பக் கட்டிற்று இருக்க முடியாது. சும்மா ரீச்சர் வேலய எடுத்துக் குடுக்க உன்ர புருஷனிட்ட சொல்லு... ...’’ என்று வெற்றிலையை உரலில் போட்டு அத்தோடு பாக்கு, புகையிலை, கராம்பு, கொஞ்சம் சுண்ணாம்பு போட்டு வழமையாக இடிக்கும் சத்தத்தை விடக் கொஞ்சம் அதிகமாகவே சத்தமாக இடித்தபடி ஆச்சி வைரவள்ளி தொணதொணக்கத் தொடங்கிவிட்டாள்.

அவளுக்குப் பேரப்பிள்ளைகளென்றாள் உயிர். சின்னப் பேரன் கீரன் தன்னுடைய வியாபார நிறுவனத்தைப் பூட்டிவிட்டு வீட்டுக்கு வரச் சற்றுத் தாமதித்தால் போதும் வாசலிலேயே காலை நீட்டி இருந்தபடி

‘‘என்ர ஈரக்குல நடுங்குது. என்ன ஆச்சோ. எந்த ஆமிக்காரனிட்ட மாட்டுப்பட்டிற்றானோ, இயக்கக்காரனுகளிட்ட மாட்டுப்பட்டிற்றானோ’’ என்று புலம்பத் தொடங்கி விடுவாள்.

யாரில் பழி போடுவது என்று தெரியாத பரமசிவமும் பார்வதியிடம்

“இஞ்ச கத்தி ஒன்டும் ஆகப் போவதில்ல. யாரில் யார் பழி போடுவது என்று தெரியாது. நாம வாய மூடி இருக்கிறதுதான் இப்போதைக்குச் சரி. உன்ர அம்மாட வாயைக் கொஞ்சம் மூடி வைக்கச் சொல்லு. வாயக் குடுத்து பிள்ளைகளைப் பழி குடுக்கப் போறியா? திருநிதி பயந்து வந்து எங்கட மோட்டுக்குக் கீழே படுத்துக் கிடந்ததை மறந்து போனியா? என்றார்.

ஆமாம் திருநிதி என்னும் சிநேகாவின் அண்ணனுடைய நண்பனின் தம்பியைப் போராளிகள் தம்முடைய இயக்கத்துக்குப் பிடித்துக் கொண்டு போகப் போவது அறிந்த போது திருநிதியை அவர்கள் வீட்டினர் சிநேகா வீட்டில் பாதுகாப்புக்காக அனுப்பினர்.

சிநேகாவின் வீட்டுக் கூரையின் கீழ் பாத்திரங்கள் பொருட்கள் வைப்பதற்காக ஓர் இடம் விட்டு பலகைக் கூரை அடித்திருந்தார்கள். அங்கு படுக்கக் கூடிய வசதிகளும் இருந்தன. மேலே போவதற்கு வழி தெரியாமல் இருப்பதற்காகக் கீழே ஒரு அலமாரி போல் கட்டியிருந்தார்கள். அதில் ஏறி மேலே போகலாம். அந்த இடத்தில் திருநிதி தங்கியிருந்ததைப் பரமசிவம் ஞாபகப்படுத்தினார்.

சிநேகாவிடம் திரும்பினார் பரமசிவம்

“நீ என்ன சொல்றா மகள்... ...”

“எனக்கு பி.ஏ பட்டம் எடுக்க வேணும் ஐயா. லீவைக் கூட்டி யிருக்கிறார்கள். பொறுத்துப் பாப்பமே. யூனிவேர்சிட்டி ஸ்ருடன்ஸ் ஒன்றும் பிரச்சினை இல்லை ஐயா” என்றாள்.

“கேட்டீங்களா... பொறுங்க எல்லாம் எடுத்தோம் கவுத்தோம் என்று முடிவு எடுக்கக் கூடாது. அது அவளுடைய ஆசை. ஏன் பார்வதி நீதானே பிள்ள போக வேணும் என்று பிடியாய்ப் பிடித்தாய். இதுக்குப் பிறகு இந்தக் கதை வரக்கூடாது” என்று கட்டளையிட்டவராய் பரமசிவம் இடம் விட்டு நகர்ந்தாலும் மனத்துக்குள் பயத்தை ஒளித்து வைத்துக் கொண்டிருந்தார்.

இவ்வாறு உரிமைப் போராட்டத்திலே மனங்களுக்குள் எல்லாம் பயத்தின் அடி விழுந்து கொண்டு இருந்தது. அதன் பிரதிபலிப்பே 60 தாண்டி வாழுவதற்கு முடியாமல் இதயங்கள் உலகத்தை விட்டுப் பிரிகின்றன. போராளிகளுக்குப் பயப்படுவதா? சிங்கள

ஆமிக்காரர்களுக்குப் பயப்படுவதா? என்று தெரியாத நடுக்கம். இருவரும் தம்முடைய விருப்பத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எந்த எல்லையையும் தாண்டுவார்கள்.

பரம்பரை பரம்பரையாக ஏறாவூரில் வாழ்ந்து கருவாட்டுக் கடை வைத்திருந்த சிங்களக் குடும்பத்தினரை ஒருநாள் இரவோடிரவாகக் கொலை செய்தவர் அன்றே புறப்பட்டு பிரான்ஸ் நாட்டுக்குக் குடி பெயர்ந்த கதையை ஆதாரத்துடன் அறிந்தவர் பரமசிவம்.

அக்குடும்பத்தின் முதல் வாரிசு முதலாவது வயதுப் பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்த போது, சிநேகா குடும்பமும் அவர்களுடன் இணைந்து கொண்டது. அந்தப் பிஞ்சுக் குழந்தையே முதல் துப்பாக்கிக் குறிக்கு உட்பட்டு உயிர் நீத்தாள் என்ற செய்தி கேட்டு சிநேகா குடும்பம் உடைந்து போனது. அடுத்தடுத்து அத்தனை பேரையும் துப்பாக்கிச் சூடு பழி எடுத்த போது இவர்களின் சகவாசமே வேண்டாம் என்று மனத்துக்குக் கட்டளை போட்டவர் பரமசிவம். அரபு நாடு சென்ற ஹாமினி திரும்பி வந்து குடும்பத்தில் யாருமில்லை என்று அறிந்தபோது கண்கலங்கி நின்றான். எந்தப் பிள்ளையைப் பெற்ற தந்தையும் கலங்காமல் இருக்க மாட்டார்.

கண்ணோடு கண்ட முகங்களைக் காண முடியாதென்று கலங்கி நின்ற போதே முடிவெடுத்தார். ஈரக்குலை ஆடும் போது இதயம் என்ன கல்லாய்ப் போகுமா? உயிர்கள் வேட்டையாடப்படும் போது வீர வசனம் பேச மனம் ஒப்புதல் தருமா?

காலம் அனைத்தையும் கரைத்துக் குடித்துவிடும். மீண்டும் சிநேகா கண்டி நோக்கிப் பயணமானாள். சத்யாவும் சிநேகாவும் சில்வா வாசற்படியை அண்மித்து அழைப்பு மணியை அழுத்தினர், அழுத்தினர், அழுத்தினர். கதவு திறக்கப்படவில்லை. ஆள்நடமாட்டமுள்ள வீட்டில் கதவு திறக்கப்படவில்லை. இப்படித்தான் சிங்களத் தமிழ் விரோதம் ஆரம்பமாகியது.

வினை விதைக்கப்பட்டது எங்கோ. அறுவடை யாருக்கோ...

விபரம் புரிந்து கொண்ட இருவரும் அந்த இடத்தை விட்டு நகர்ந்தனர். அன்று கைத்தொலைபேசி இல்லை, உடன் உணர்வுப் பரிமாற்றம் இல்லை. இருந்திருந்தால் சில்வாவின் ஒரு குரலுக்குக் கதவு திறந்திருக்கும். சுழன்று கொண்டிருக்கும் பூமியின் மேல் தளத்தில் என்ன

செய்வதென்று தெரியாது இருவரும் பயணப்பொதியுடன் அலைந்தார்கள். யாரைத் தேடுவது? எங்கே போவது? வீதியிலே வாகனங்களின் போக்குவரத்து தெரியவில்லை. திடீரென்ற ஒரு நினைவு பளிச்சிடச் சிநேகிதி ஜெயா வீட்டுக்குப் போகத் துணிந்தார்கள்.

கட்டுகஸ்தோட்ட என்னும் இடத்திலுள்ள ஒரு யாழ்ப்பாணக் குடும்பம் வாழுகின்ற வீடு. வீடு சிறியது என்றாலும் மூன்று அறைகளை வாடகைக்கு விட்டிருந்தார்கள். தொந்தி பெருத்த பேரம்பலம். அன்பும் பெருத்தவர் என்று தான் நம்பியிருந்தார்கள். வாழ்வாதாரத்துக்காக இளவயதிலிருந்து கட்டுகஸ்தோட்டையில் குடும்பத்துடன் வாழ்ந்து வருபவர். சுருட்டுக்கடை வருமானத்துடன் இஸ்லாமியப் பெண் ஒருவரைத் திருமணம் செய்தவராய் அப்பெண்ணை இந்துமதப் பெண்ணாக வாழ வைத்தவர். உடலின் வீக்கத்திற்கேற்ப அவர் பணவீக்கத்திலும் பிரியனே.

மலையகம் தொட்டு சிங்கள நாடுகள் வரை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று இலங்கையின் 4 திசைகளிலும் தமிழர்கள் வியாபாரத்திற்காகவும் அரசாங்கத் தொழில் செய்வதற்காகவும் கால் பதிக்காமல் இல்லை. காலங் கழிக்காமலும் இல்லை. இருந்தும் இலங்கை முழுவதிலும் சனத்தொகையில் சிங்களவர்களைவிட மிகக் குறைவாகவே தமிழ் மக்களே வாழ்கின்றனர். இவ்வாறு கண்டி மாகாண கட்டுக்கஸ்தோட்டைக்குள் புகுந்தவரே பேரம்பலம்.

ஓர் அறையைக் காலணிக் கடை உரிமையாளர்கள் அண்ணன் தம்பி இருவருக்கும் கொடுத்திருந்தார். மூத்தவர் விபுலானந்தன், தம்பி விசாகன். இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். நீண்ட காலமாக அங்கு காலணிக் கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார்கள். அடுத்த இரு அறைகளிலும் வித்யா, ஜெயா இருவரும் இருந்தார்கள். வித்யா யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறாள்.

சிநேகாவும் சத்யாவும் மலையேறி அலைந்து, களைத்துப் பேரம்பலம் வீட்டு வாசலில் நின்றபோது பேரம்பலம் தாமதம் இல்லாமல் தன்னுடைய வீட்டில் தங்க வைக்க ஆமோதித்தார். ஜெயா அறையில் மூவரும் பங்கு போடுவதாக முடிவெடுத்தார்கள். ஓர் அறையில் 3 பேருடைய வாடகைப்பணம் வருவதென்றால், மனிசன் தாராளப்பிரபு தான். ஒருவருக்கு 60 ரூபாய் வாங்கியவருக்கு, மூவருக்கும் 180 ரூபாய் என்றால் விடுவாரா.

‘‘ஜெயா உம்மட கூட்டாளிகள் தானே. உம்முடைய அறையில இவையளும் தங்கட்டுமே’’ சுருட்டுப் புகையைத் தள்ளியபடி ஜெயாவிடம் அனுமதி கேட்காமலே மனிசன் முடிவு சொன்னார். ஜெயாவும் தலையை ஆட்டினாள்.

‘‘நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். வாங்கடி வாங்க. இனி இந்த மனிசன் பலாக்காய் ஒன்றை அதிகமாக வாங்குவார். நானே எப்ப வீட்டக் காலி பண்ணலாம் என்றிருக்க. நீங்கள் வேற’’

‘‘ஏன்டி என்ன பிரச்சினை’’ என்று கேட்டாள் சத்யா.

பரந்த வீட்டில் சகல வசதிகளுடனும் வாழ்ந்த சிநேகா இந்த வீட்டைப் பார்க்கப் பார்க்க வாயடைத்து நின்றாள். என்ன செய்வது வேறு வழி? விதியின் வலிமையை என்னென்பது. படிப்பது என்பது பாடம் மட்டுமல்ல. சூழலுடன் சேர்ந்து வாழவும் படிப்பதே என்பதை அன்றுதான் உணர்ந்து கொண்டாள்.

ஜெயா விரிவுரை வைத்தாள்.

‘‘கேளுங்கள். இரவில் வீட்டு வெளிச்சம் மின்மினிப் பூச்சிதான். அதுக்குள்ளயே நீங்கள் படிக்க வேண்டும். அலுவல்கள் பார்க்க வேண்டும். ஒடுங்கிய இந்த வராந்தாவிலேதான் கொஞ்சம் மூச்சு வாங்க வேண்டும். முன் அறையில் இருக்கிற விபுலானந்தண்ணன் எங்கள் மேல் பாவப்பட்டு இறைச்சி வாங்கி வந்து கொடுத்தாலேயே மாமிசச் சாப்பாடு மேசைக்கு வரும். தண்ணியத் தீர்த்தம் போலத்தான் பாவிக்க வேண்டும். நீங்க குளிக்க என்று தண்ணிய வாரி இறைச்சீங்களென்டால். பைப் தண்ணியப் பேரம்பலத்தார் பவித்திரப்படுத்திப் போடுவார். அதவிடப் பெரிய புதுமை பேரம்பலத்தார் இந்த வீட்டில வச்சிருக்கார்.

‘‘அது என்ன புதுமை!!!’’

‘‘ரொய்லட்டுக்குப் பூட்டில்லாத கதவு. புடிச்சிட்டு இருக்க வேணும். அது மெல்ல மெல்லத் திறக்கும். ஒரு கை கதவில இருக்க வேணும்‘‘

ஆச்சரியத்தில் அகலக்கண் விரித்தனர் சிநேகாவும், சத்யாவும்.

‘‘சிநேகா உன்ர வீட்டு அட்டாச் பாத்ரூமெல்லாம் இங்க கிடையாதம்மா. காவலுக்கு ஆளில்லையென்றால் அம்போதான்.’’

‘‘எப்பிடிடி... ... இவ்வளவு நாளும்... ...’’

“எனக்கு வித்யா காவல். வித்யாவுக்கு நான் காவல். முன்னுக்கு மலை காவல்”

சர்வசாதாரணமாக ஜெயா சொன்ன விடயம் இருவருக்கும் இது சரிப்பட்டு வராது என்று தோன்றியது. சரிப்படாது சரிப்படாது என்று 3 வாரம் கழிந்து விட்டது. ஒருநாள் சாப்பாட்டைப் பேரம்பலத்தார் மனைவி சாப்பாட்டு மேசையில் வைத்தபோது, அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஜெயா அச்சாப்பாட்டைக் கொண்டு போய் வெளியிலே கொட்டினாள்.

“நாங்கள் காசுதான் கொடுக்கிறம். இந்த பொலஸ் சாப்பிட்டு சாப்பிட்டு நா மரத்துப் போயிற்று. பஞ்சப் பரதேசிகள்” என்று தனக்குள் பொரிந்து தள்ளினாள்.

கஷ்டங்களை மனத்துக்குள் அடைத்துவிட்டுச் சமாளித்து வாழ வேண்டும் என்று நினைத்துக் காலமெல்லாம் மனச் சுமையுடன் வாழ்வதை விடக் கோபத்தை உடனடியாக வெளிப்படுத்தி விட்டுத் தீர்வைப் பெற்றுப் போய்க் கொண்டே இருக்கும் பண்பு ஜெயாவிடம் இருந்தது. வேறு வழியில்லை என்று வந்து நின்ற போது கைகொடுத்த இடம் என்பதை மனத்துக்குள் வைத்துப் பொறுத்துப் போன சிநேகா சத்யாவுக்கு இது சங்கடமாகப் போனது.

ஒருநாள் விபுலானந்த அண்ணனே.

“சிநேகா, இது உங்களுக்குச் சரிப்படாது அம்மா. படிக்கிறதுக்கு இஞ்ச கஷ்டம். நான் ஒரு வீடு பார்த்திருக்கிறன். சிங்களவர்கள் தான் ஆனால், பிரச்சினை இல்லை. சாப்பாடும் நல்லாப் போடுவார்கள். நல்ல சாப்பாடு. இப்படி புறங்கையால் காகம் கலைக்க மாட்டார்கள். பக்கத்து வீட்டில் உமாக்கா இருக்கிறா. அவவும் நல்ல உதவி செய்வா. உங்கட காசக் குடுத்திட்டு அந்த வீட்டுக்குப் போங்கள். நான் சொல்லி வைத்திருக்கிறேன்” என்று இனிப்பான செய்தி தந்தார்.

வாழ்க்கைப் பாதையில் எத்தனையோ முகங்கள், அறிமுகங்கள் எந்த சொந்த பந்தம் இல்லாமலே அன்பையும் உதவியையும் வாரி வழங்கிக் கொண்டே இருப்பார்கள். தெய்வம் நேரில் வருவதில்லை. பிரபஞ்சம் தேவை அறிந்து மனிதர்களை அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்கும்.

விபுலானந்தண்ணன் தெய்வமாய் வந்தார். தேடித்தந்த இடமும் அந்த நேரத்துச் சொர்க்கமாகப் போனது.

அடிக்கடி அங்கிருந்து மூவரும் கட்டுகஸ்தோட்ட பாலம் தாண்டிக் கண்டி கட்டுக்கல பிள்ளையார் கோயிலுக்குப் போய்வருவது வழக்கம். கண்டியில் மிகப் பிரபலமான இந்து ஆலயமாக அது விளங்கியது. அக்காலத்திலேயே இந்தியாவிலிருந்து வந்த கிரிக்கட் விளையாட்டு வீரர்களான சுனில் கவஸ்கார், ரவி சாஸ்திரி, கபில்தேவ், ஸ்ரீகாந்த் போன்றோர் மெட்ச்சுக்காக கண்டி வந்தபோது கட்டுக்களைப் பிள்ளையார் கோயிலில் மூவரும் பாய்ந்தடித்துப் பேருந்து பிடித்து அவர்களைப் போய்ச் சந்தித்து அவர்களுக்குக் கைகொடுத்து அன்பைப் பகிர்ந்து கொண்ட செய்தியைப் பல்கலைக்கழகத்தில் சொல்லிப் பெருமை காட்டினர்.

ஒரு வருட தும்பறை வாழ்க்கையானது 3 வீடுகளை மாற்றியது. பல நண்பர்களை உருவாக்கியது.

பகடிவதைக் காலம் கழிந்த பின் பகடிவதை செய்தவர்களே நண்பர்களாகியமையும், சிநேகாவின் அன்பைப் பெறுவதற்காக பேராதனையிலிருந்து அடிக்கடி வரும் விக்னேஷின் முயற்சியும், உடன் பயின்ற தியானின் இதயத்துக்குள் சிநேகா புகுந்து ஏற்படுத்திய மாற்றமும், மற்றைய இளைஞர்களை அவளருகே நெருங்க விடாமல் தியான் செய்த முயற்சிகளும், காலத்தால் அழிக்க முடியாத பதிவுகளாகவே சிநேகா உணர்ந்தாள்.

எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவளுடைய வளர்ப்பு முறையும், மனத் திடமும், தைரியமும் மட்டுமே. எது எப்படி முடியும் என்பதை மனக்கணக்குப் போட்டுப் பார்க்க அவளுக்குத் தாய் கற்றுக் கொடுத்திருந்தாள். உணர்ச்சிகளுக்கும் பரிதாபத்துக்கும் இடம் கொடுத்தால், எஞ்சிய வாழ்க்கை எங்கே முடியும் என்பதை அறிய அவள் படித்த புத்தகங்களும், திரைப்படங்களும் அம்மாவின் அறிவுரைகளும் கற்றுக் கொடுத்தன.

காதல் என்பது கண்டவுடன் மலர்ந்தாலோ, பழகிப் பார்த்து மலர்ந்தாலோ, மனத்தைத் தாண்டி ஒன்றும் அது பயணிக்க முடியாது. மனம் தனக்குள்ளேயே சில வரன்முறைகளை மனத்தில் போட்டுக் கட்டி வைத்திருக்கும். அதைத் தாண்டி வரக் கூடியவர்களே சிநேகாவின் இதயத்துக்குள்ளும் புகுந்து கொள்ள முடியும். தம்மை வன்முறைக்கு

உட்படுத்துவது மனத்தை அடைய வழிமுறைகள் அல்ல. பொறுக்க முடியாத நேரங்களிலேயே பெண்கள் நடிக்கவும் செய்கின்றார்கள்.

மீதமுள்ள 3 வருடங்கள் தமிழ் சிறப்புக்கலை கற்பதற்காக பேராதனையில் வாசம் செய்ய வேண்டும். இல்லையென்றால், மேலும் 2 வருடங்கள் தும்பறையில் ஜென்றல் டிக்கிரி முடிக்க வேண்டும். சிநேகா ஒரு சிற்றிலக்கியப் பிரியை,

“செந்தமிழ்த் தேன் மொழியாள்
நிலாவெனச் சிரிக்கும் மலர்க்கொடியாள்
பைந்தமிழ் இதழில் பழரசம் தருவாள்
பருகிடத் தலைகுனிவாள்”

என்னும் கண்ணதாசன் வரிகள்

“அன்னம் கூட அவளிடத்தில் வந்து நடை பயிலும்
ஆடற்கலை இலக்கணத்தை அறிய வரும் மயிலும்
இன்னிசையைப் பாடம் கேட்க எண்ணி வரும் குயிலும்
இயற்கை எல்லாம் அவள் குரலின் இனிமையிலே துயிலும்”

போன்ற பாடல்வரிகளைத் தன் மனத்துக்குள் போட்டுக் கவிச் சுவை அருந்துபவள் தமிழ் சிறப்புக்கலை கற்பதற்குத் தயங்குவாளா?

அவளுடைய கனவுலகு பேராதனை. அவளோடு படித்த சிவராஜேந்திரன் தூண்டுதல் இவையெல்லாம் மொத்தமாக இவளைப் பேராதனைப் பல்கலைக்கழகம் குத்தகைக்கு எடுக்க வித்திட்டது.

# அத்தியாயம் 7

# கற்றதனால் ஆய பயனென் கொல்

**பேராதனை**

முதல் முதலாகப் பேராதனை என்னும் பல்கலைக்கழக வாழ்வுக்குள் சிநேகாவின் கால்கள் பதிகின்றன. எவ்வளவு அழகான காரணப் பெயரை பல்கலைக்கழகம் என்று வைத்திருப்பதை அக்காலப் பகுதியிலேயே சிநேகாவால் உணர முடிந்தது. இது அவளுடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்ற இடம். சத்யா ஜென்றல் டிக்கிரி செய்வதற்காக தும்பறையிலேயே தங்கிவிட்டாள். சிறிய ஒரு பாலத்தைக் கடந்து கால்கள் அவளுக்காகத் தயாராகி இருக்கும் விஜேவர்த்தன விடுதி அறைக்குப் போக வேண்டும்.

நீதியரசர் அக்பர் அவர்களின் பரிந்துரையின் பெயரில் இயற்கை அள்ளிக் கொட்டிய அழகு, இதமான காலநிலையுள்ள பேராதெனிய நகரில் தும்பற பள்ளத்தாக்கில் ஹந்தானை மலைச்சாரலில் இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்காக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதுவே இலங்கையின் முதலாவதாக பல்கலைக்கழகம். 1942 இல் university of ceylon என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இப் பல்கலைக்கழகத்தைத் திறந்து வைப்பதற்காக இங்கிலாந்து நாட்டின் இளவரசி வந்திருந்தாராம். தற்போது இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களைப் பார்க்கின்றபோது ஒரே இடத்தில் எல்லாப் பீடங்களும் அமையப் பெற்ற ஒரேயொரு பல்கலைக்கழகம் இதுவாகும்.

சிநேகாவினுடைய பயணப்பொதிகளைச் சுமந்தபடி சிநேகாவுக்குத் துணையாக தியான் நடந்து வந்தான். உண்மையாக ஒரு நண்பன் வேண்டுமென்றால், அது தியானாகத்தான் இருக்க வேண்டும் என்ற கொள்கை அவளுக்கு மட்டுமல்ல, பல்கலைக்கழக மாணவிகள் அனைவருக்கும் இருந்தது. அனைவருக்கும் அவனைப் பிடிக்கும்.

அவனுடைய கேலி, கிண்டல், இனிய குரலெடுத்துப் பாடல், உதவும் மனப்பான்மை அத்தனையும் பிடிக்கும். ஆனால், அவனுக்குப் பிடித்தோ சிநேகாவை மட்டுமே. ஆம் என்ற ஒரு வார்த்தைக்காக அவன் சிநேகாவைப் பின்தொடர்ந்தான். அவளோ நல்லவர்கள், நண்பர்கள் காதலியாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை வலியுறுத்திக் கொண்டேயிருந்தாள்.

தியானின் உதவியுடன் விஜேவர்த்தன விடுதியை அண்மித்த போது சிநேகா கண்ட காட்சிகள் இப்படித்தானா இந்த வாழ்க்கை என்ற அச்சத்தை மனத்துக்குள் ஏற்படுத்தியது. முன்னே இரண்டு தூண்கள். தூண்களின் மறைவில் கல்லால் கட்டப்பட்ட வாங்கு. இரண்டு பக்கங்களிலும் இரண்டு காதற் பறவைகளின் அழகுக் காட்சி. பெண்ணை இருக்க வைத்துத் தூணைப் பிடித்தபடி முகமலர்ச்சியுடன் அவளைக் கிண்டல் அடித்தபடி ஒருவன் நின்றான். அவளின் குனிந்த தலையிலே மௌனத்தின் மொழி படர்ந்திருந்தது. ஒரு ஜோடிப்பறவை தமிழ்ப்பறவைகள் என்பதைக் காட்டிக் கொடுத்தது. பொட்டு வைக்காது விட்டாலும் தமிழனின் சாயலை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆம். புலம்பெயர்ந்த தேசங்களில் வாழுகின்ற போது துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, யூகொஸ்லாவியா, மொறொக்கோ, இத்தாலி போன்ற எல்லா நாட்டுக்காரர்களையும் பார்த்தவுடன் இனம் கண்டுவிடக் கூடியதாக இருக்கும். அங்க அடையாளங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன.

ஒருமுறை இனப்பிரச்சினையால், பல்கலைக்கழகத்தில் தடையுத்தரவு போட்டுவிட்டார்கள். அவுட் ஒப் பொன்ட்ஸ் என்றால், பல்கலைக்கழக வளாகத்திற்குள் யாரும் நிற்க முடியாது. எல்லாவற்றையும் காலி பண்ணிக் கொண்டு வீட்டுக்குப் போய்விட வேண்டும். அந்த சமயத்திலே யாருக்கும் தெரியாமல் ஏறாவூரில் கருவாட்டுக் கடை வைத்திருந்த ஹாமினியின் அப்பா குடும்பத்தார் ஒருவர் சிநேகாவை அழைத்துச் சென்று கண்டிக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்திலுள்ள தன்னுடைய வீட்டிலே தங்க வைத்தார்.

இரவு முழுவதும் அவரது வீட்டில் சிநேகா இருந்த காரணத்தால் வீட்டுக்கு விளக்கு எரிக்காமலிருந்தார். விடிந்தும் விடியாத அந்தி யாமப்பொழுதில் சிநேகாவை அழைத்துக் கொண்டு அவளை அவளது

வீட்டிலே உயிரோடு சேர்ப்பித்தார். அவருடைய வீட்டுக்குச் சிநேகாவை அழைத்துச் செல்லும்போது நெற்றிப்பொட்டைச் சிநேகா எடுத்துவிட்டாள். பேருந்து நிலையத்தில் இருந்த ஒரு சிங்களவர் நெற்றியைக் காட்டி பொட்டில்லை. மூக்குத்தி இருக்கின்றது என்று சைகை காட்டினார். எதைத்தான் நாம் மறைத்தாலும் எம்மைச் சிங்களவர் இனங்கண்டு விடுவார்கள்.

விஜேவர்த்தன விடுதி வாசலின் முன் இருபுறமும் பாதைகள் பாம்பு போல் வளைந்து இரு பக்கங்களிலும் செல்கிறது. பாதையின் இருபுறங்களிலும் இருவர் இருவராக இணைகள் சல்லாபம் தெரிகிறது. பறக்கின்ற புகையைக் கக்கிய படி கோப்பிக் கப்புகளைத் தாங்கிய பெண்கள், அடிக்கடி அதை வாங்கி வாங்கிப் பருகும் ஆண்கள். சில சிணுங்கல்கள், சில கெஞ்சல்கள், சில கோபப் பார்வைகள், கண்களில் தாபங்கள். இவையெல்லாம் இவர்கள் யாரென்று உணர்த்தாமல் இருக்குமா? இதுவும் அந்தச் சூழலில் அழகாகத்தான் இருந்தன. ஆனாலும் மனத்துக்குள் ஒரு நடுக்கம். கட்டளை போட ஆளில்லை. மனத்தைக் கட்டிப்போட உறவினர்கள் இல்லை. என்ன நடந்தாலும் ஓடி வந்து காப்பாற்றச் சொந்தங்கள் இல்லை. இது இப்படித்தான். இதுவும் ஒரு மாதிரி அற்புதமாகத்தான் இருந்தது.

விஜேவர்த்தனா விடுதி இந்த அறிமுகத்துடனேயே சிநேகாவை வரவேற்றது. வாசலுக்கு நேரே வார்டன் அறை இருந்தது. படியேறி அந்த அறைக்குள் பிரவேசிக்க வேண்டும். முன்னே வரவேற்பறை அங்கும் தமிழ், சிங்களக் காதலர்கள், நண்பர்கள் எல்லோரும் இணைந்திருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கே நிகிலா தன்னுடைய காதலனுடன் பேசிக் கொண்டிருந்தாள். சிநேகாவைக் கண்டவுடன் ஓடி வந்தாள். “பழைய குருடி கதவைத் திறடி” என்பது போலத் திரும்பவும் என்னை வம்புக்கு இழுக்கப் போகிறாளோ என்று நினைத்தபடி சிநேகா நடந்தாள்.

“சிநேகா உனக்கு விஜேவர்த்தனாவா கிடைத்திருக்கிறது. வா நான் உன்னைக் கூட்டிக் கொண்டு போய் பதிவு செய்கிறேன். தியான் நீங்கள் போகப் போகின்றீர்களா? இல்லை இவரோடு கதைத்துக் கொண்டு இருக்கப் போகின்றீர்களா” என்று கேட்டாள்.

நிகிலாவை நினைக்க ஆச்சரியமாக இருந்தது. அப்படி அவளை வறுத்தெடுத்தாள். இன்று வலிய வந்து உதவி செய்கின்றாள். இவர்கள் இப்படித்தான். இன்னும் எத்தனை ஆச்சரியங்கள் காத்திருக்கப்

போகின்றதோ! என்று மனத்துக்குள் சிநேகா நினைத்தாள். தியான் விடைபெற்றான்.

தியானும் புவியியல் பாடத்தில் சிறப்புப் பட்டம் பெறுவதற்காக பேராதனை புகுந்திருந்தான். அவனுக்கும் ஜே.பி விடுதி கிடைத்திருந்தது.

பதிவுகள் நிகிலா உதவியுடன் முடிந்தன. வருடத்துக்கு 70 ரூபாய்களே வாடகை. உணவு சமைத்துச் சாப்பிடலாம். இல்லையென்றால் அங்குள்ள உணவகத்தில் அல்லது வெளியே எங்காவது எடுத்துச் சாப்பிடலாம்.

“அன்றைய 70 ரூபாய்கள் இன்றைய 2000 ரூபாய்களாக இருக்கும் என்று நம்புகிறேன். தந்தை அரசாங்க வருமானம் இல்லாவிட்டால், வங்கியில் கடன் பெற்றுக் கட்டலாம். வங்கியில் பணம் பெறும் மாணவிகள் நன்றாகச் செலவு செய்வார்கள். சிநேகாவின் அப்பா அரசாங்க உத்தியோகம் பார்ப்பதனால் வீட்டிலிருந்து சிநேகாவுக்கு அப்பா பணம் அனுப்ப வேண்டும். பணம் வரத் தாமதமானால் கடுப்பாக இருக்கும். நண்பர்களிடம் கடன் கேட்க வேண்டும்.

சிநேகாவுக்குத் தங்குவதற்கான அறை கிடைத்தது. அறைக்குள் சென்றாள். இரண்டு கட்டில்கள், இரண்டு மேசைகள், இரண்டு நாற்காலிகள், இரண்டு அலமாரிகள், கண்ணாடிகள், இவை இருவர் தங்கும் அறை என்பதைப் படம் பிடித்துக் காட்டின. தன்னோடு அறையைப் பங்கு போடப் போகின்றவர் யாரென்று தெரியாமல் அக்கணச் சிந்தனை விரிந்தது.

பக்கத்து அறையிலே மட்டக்களப்பைச் சேர்ந்த வணிகத்துறை கற்பதற்காக வந்த ஈழவாணி, சசித்ரா இவரும் “ஜே... ... சிநேகா...” என்றபடி வந்தார்கள்.

“நாங்கள் பக்கத்து அறை. சேர்ந்து கும்மாளங் கொட்டுவோம். இன்னும் 3 வருஷங்கள் இங்கேதான். உன்னோடு தங்க ஒரு ஆளப் பிடிக்க வேண்டும். லெக்ஸஸ் போகும் போது கேட்டுப் பார்ப்போம்” என்றார்கள்.

சிநேகா இருண்ட வானத்தைக் கண்டால், பேய் வரும் என்று பயப்படுபவள். இரவோடு தனியே பயணிப்பது என்பது அவளுக்குக் காட்டுக்குள் இரவில் விட்டது போல இருக்கும்.

“இரவு உங்களோடேயே படுக்கிறேனே” என்று இருவரிடமும் அனுமதி பெற்றாள்.

“நாங்கள் ஒருதரம் லெக்ஸஸ் ரூமைப் பார்க்கப் போகின்றோம். நீ எப்படி வாறாயா?” என்று இருவரும் கேட்டார்கள்.

“இங்கேயும் ரேகிங் இருக்காடி” என்று கேட்டதற்கு “போய்ஸ்க்கு இருக்கு. கேர்ள்ஸும் சிலவேளை மாட்டுப்படுவார்கள். விஜேவர்த்தனாவில் சிங்கள மாணவிகள்தான் அதிகம். அதால நாம தப்பினோம்” என்றார்கள்.

பொருட்களை எல்லாம் வைத்தபடி மூவரும் வெளியேறினார்கள். முதன்முதலாக விஞ்ஞான பீடத்தையே கண்டார்கள். விஜேவர்த்தனா விடுதியிலிருந்து வெளியே வலது பக்கமாகச் செல்கின்ற பாதையிலிருந்து சிறிய ஒடுக்கமான பாதை இருக்கிறது. அதனூடாகவே இரவில் காதலர்கள் அந்த விடுதி மண்டபத்திற்கு அருகாமையிலுள்ள மரங்களுக்கும் மண்டபங்களுக்கும் கதை சொல்வார்கள் என்னும் விபரத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

விஞ்ஞான பீடத்தைக் கடந்து செல்லும் போது ஜெயத்திலக என்னும் விடுதி வரும். அதைக் கடந்து செல்லும் போது ஒரு பெரிய அரக்கன் போன்ற ஒரு மரம். அதில் இருந்து தலைகீழாகப் பல வெளவால்கள் தொங்கிக் கொண்டிருக்கும். அந்த மரத்தைக் கடக்கும் போது கடவுளே கடவுளே என்று சிநேகா மனத்துக்குள் உச்சரித்துக் கொண்டே போவாள். வெளவால்கள் பகலில் பறப்பதில்லை. அதற்குக் கண் தெரியாது என்பது தெரிந்திருந்தாலும், தொங்கிக் கொண்டிருக்கும் கையை விட்டால், தனக்கு மேல் விழுந்துவிடும் என்ற அச்சம் பல்கலைக்கழக வாழ்வு முடியும் வரை சிநேகாவுக்கு இருந்தது.

இடையில் பெரிய வட்டமாய் நீர் தேங்கி நிற்கும் குளம் கட்டப்பட்டிருந்தது. அதற்குள் அழகான மலர்வனம். அதன் அழகை இரசித்த படி சென்ற போது ஆயிரங்கால் மண்டபமாய் சிற்ப வேலைப்பாடுகள் அலங்கரித்த தூண்களில் தொங்கிய விரிவுரை அறைகள். முன் இரு பக்கங்களிலும் இரண்டு யாளி உருவங்கள். கலைப்பீடம் என்று எழுதப்பட்ட ஒரு கல்லாலான அறிவிப்புக் கட்டிடம். உலகத்தில் பிறந்த அனைவரும் ஒரு தடவை பேராதனை அழகைக் காண வேண்டும். பல்கலைக்கழகச் சூழலில் வாழ வேண்டும். அனைவரும் கவிஞராவார்கள் என்று நினைத்தபடி மூவரும் நடந்தார்கள்.

சொற்களால் விவரிக்க முடியாத அழகை, வாழ்ந்து பார்த்தால் எப்படி இருக்கும்?

மூவரும் கலைப்பீடத்தை அடைகின்றார்கள். தூண்கள் நிறைந்த மண்டபத்திலே ஒரு சக்கர நாற்காலியில் ஒருவர் ஒய்யாரமாய் அமர்ந்திருந்தார். அவரைத் தாண்டிச் செல்லும் போது "புதிய வரவா" என்று அவர் கேட்ட போது அவர் தமிழன்தான் என்பதை அவர்களால் அறியக்கூடியதாக இருந்தது. அவர்தான் சிவசங்காரம் என்னும் வணிகத்துறை விரிவுரையாளர் என்பதை அறிந்தார்கள். அன்பாக முதன்முதலாக அறிமுகமான விரிவுரையாளர் அவர்தான்.

"ஆம்..." என்று சொல்லியபடி நகர்ந்தார்கள். முன்னே தலைமையகம் அதனைக் கடந்து சென்ற போது விரிவுரை அறைகள் காணப்பட்டன. படியேறிப் போனபோதும் விரிவுரை அறைகள் காணப்பட்டன. மாணவர்கள் அமர்ந்திருப்பதும் விரிவுரையாளர்கள், கற்பிப்பதுமான காட்சிகள் காணப்பட்டன. பரந்து விரிந்த விரிவுரை அறைகளையும் அருகே பிரமாண்டமான வாசிகசாலையையும், அதன் அமைப்பையும் கண்ட போது அவர்கள் மனத்துக்குள் பெரிய அதிர்ஷ்டசாலிகள் போல் உணர்ந்தனர். எங்கு வேண்டுமானாலும் கற்கலாம். ஆனால் இங்கு கற்பதற்கு இறைவன் ஆசி வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகம் ஒரு சிறிய கிராமம் போன்று காட்சியளிக்கும். வண்ண மலர்களும், வண்ண வண்ண ஆடைகளில் அழகுச் சிட்டுக்களாய் மாணவிகளும், கம்பீரமான இளமை ததும்பும் இளைஞர்களும், தாழ்ந்து விரிந்து கிளை பரப்பிய அகன்ற மரங்களும், சுற்றிவர மகாவலிகங்கை ஆற்றுப்படுக்கையும். சூழவுள்ள மலைகளும், சில்லென வீசும் குளிர் காற்றும், விரிவுரையாளர்கள், அவர்களுடைய குடும்பங்களும், மாணவர்களும், மட்டுமே ஆட்சி செய்கின்ற இராஜ்ஜியம்.

இங்கு வெளியார் வரலாம் போகலாம். ஆனால் அந்த 3 வருடங்களும் அந்த மாணவர்களே இராசாக்கள், இராணிகள். சுதந்திர உணர்வானது தைரியத்தைச் சொல்லாமலே கற்றுக் கொடுத்துவிடும். ஒருவருக்கொருவர் அன்பும், ஆதரவும், அன்னியோன்யமும், நட்பும் என்று ஒரு பந்தத்தை உருவாக்கிவிடும். 3 வருடங்களின் பின் பிரியவே போகின்றோம் என்னும் உணர்வு மாணவர்கள் யாருக்கும் கற்கின்ற காலங்களில் இருந்ததில்லை.

புவியியல் பீடத்தைக் கடந்து செல்லும் போது தோன்றிய அக்பர் பாலம் மிகவும் அற்புதமாக அமைக்கப்பட்டிருந்தது. பேராசிரியர் துரைராஜா அவர்கள் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்த போது அவராலேயே இப்பாலம் நிர்மாணிக்கப்பட்டது. மகாவலி ஆற்றிலே ஒரே ஒரு தூணிலே இப்பாலம் அமர்ந்திருப்பது பார்ப்பதற்கு அழகாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

வீட்டை விட்டு பல்கலைக்கழகம் வருவதற்காகப் புகையிரதம் எடுத்தால், விடுதி வந்து கடிதம் போட்டு, அந்தக் கடிதம் வீட்டிற்கு வரும் போதுதான் பிள்ளைகள் பல்கலைக்கழகம் போய்ச் சேர்ந்தார்கள் என்பது வீட்டாருக்குத் தெரியவரும். இப்போதுபோல் அடிக்கடி செல்லும் வழியெல்லாம் காட்டிக் கொண்டு போக வசதியுள்ள தொலைப்பேசி இருக்கவில்லை. கைத்தொலைபேசியே இல்லாத காலம். நம்பிக்கை என்ற ஆயுதத்தை நம்பியே பெற்றோர்கள் பிள்ளைகளைப் படிக்க அனுப்பி வைப்பார்கள். அப்போது சிங்களவர் கொன்று விடுவார் என்ற பயமெல்லாம் இருந்ததில்லை. எப்போது நாடு பிரிக்க ஆசைப்பட்டோமோ அப்போது இருந்து அச்சமும் எம்மோடு கூடவே வந்தது. கண்ணெதிரே காணுகின்ற சிங்களவரைக் கண்டாலும், போராளிகளைக் கண்டாலும் பயந்து பயந்து சாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

மலையேறிக் காட்டுவழி கடந்து போக குறிஞ்சிக்குமரன் என்னும் ஆலயத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் குறைதீர்க்க முருகன் அமர்ந்திருக்கின்றார். மரக்கறி பட்சிகளுக்கு இங்கிருந்துதான் உணவு விற்பனையாகும்.

விஜேவர்த்தன, ஜெயதிலக்கா, அருணாசலம், ஜே.பி, மார்க்ஸ், ஹில்டா, சங்கமித்த, இராமநாதன், அக்பர் ஆகிய விடுதிகள் மாணவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. சங்கமித்த, விஜேவர்த்தன, இராமநாதன் இந்த மூன்று விடுதிகளையுமே மாணவர்கள் கண்ணுக்குள் பாதுகாத்து வைத்திருக்கின்றார்கள். ஏனென்றால், அங்கேதானே பருவ வயதுக் கோளாறு அவர்களைக் கட்டி இழுத்துக் கொண்டு செல்லும் பெண்கள் அங்கேயே தங்கியிருக்கின்றார்கள்.

விஜேவர்த்தன விடுதிக்கு அப்பால் உயரத்தில் ஜெயதிலக விடுதி இருந்தது. அதைக் காட்டி

“அங்கே தெரிகிறது பார் அதுதான் வைரவர் கோயில். அதைப் பார்த்துக் காதைப்பிடித்துத் தோப்புக்கரணம் போடு” என்று புதிதாக வந்த

மாணவிகளுக்குப் பகடி வதை நடைபெறும். விஜேவர்த்தன விடுதி அம்மன் கோயில் என்று ஆண் மாணவர்களுக்குப் பகடி வதை நடக்கும்.

விடுதிக்கு வந்ததும் மூவருக்கும் பசி எடுத்தது. விடுதி உணவகத்தில் உணவருந்தச் சென்ற போது மரக்கறி உணவு 3 ரூபாய்களாகவும் மாமிச உணவு 3.25 ரூபாய்கள் ஆகவும் இருந்தது. தட்டில் போட்டுத் தரும் உணவுக்கு மேலதிகமாக எடுக்க வேண்டுமென்றால், அதை அடு என்பார்கள். அடு எடுக்க 25 சதம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். உணவு வாங்கி உண்டபின் மூவரும் பேசிப் பேசி உணவுப் பருக்கைகள் கைகளில் காய்ந்து போகத் தூங்கிய நேரம் தெரியவேயில்லை.

பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்த காலத்தில் மரக்கறிச் சாப்பாடு குறிஞ்சிக்குமரன் கோயிலில் இருந்து எடுத்தனர். 5 ரூபாய்க்கு மரக்கறிச் சாப்பாடு ஒருவிதச் சுவையாக இருக்கும். புதிய மாணவர்கள் நுழைவுக்கும், பழைய மாணவர்கள் விடுகைக்கும் ஆடல் பாடலுடன் பார்ட்டி நடக்கும். இந்த நாளில் செட் பண்ணி புதிய காதலர்களை அருகருகே இருக்க வைத்து விடுவார்கள். அந்தச் சமயத்தில் சிநேகாவுக்கு விரத காலப்பகுதியாக இருப்பதால் சிநேகாவைப் போல மரக்கறிக்காரருக்குக் குறிஞ்சிக்குமரன் சாப்பாடுதான் கிடைக்கும்.

அடுத்த நாள் ஆப்ப... ... இடியாப்ப... ... என்று கத்திக் கொண்டு சிநேகாவின் அறை யன்னலோரம் ஒரு சிறிய சிங்களப்பிள்ளை சென்றாள். பாடசாலைக்குப் போவதற்கு முதல் அப்பம் விற்பவள் என்பதைப் பிறகுதான் மூவரும் அறிந்தார்கள். ஒவ்வொருநாளும் அவளுடைய குரல் அவர்களுக்குப் பூபாளம். அவள் உச்சரிப்பு ஏதோ அவர்களைத் தட்டி எழுப்புவதற்காகச் சொல்வதுபோல் இருக்கும்.

அடுத்தநாள் விரிவுரைக்குச் சென்றார்கள். கலைப்பீட மாணவிகள் மட்டுமே சேலை உடுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. இது கடினமாக இருந்தாலும். கலைப்பீட மாணவிகள் சேலை அணிந்து வரும் போது தேரோடும் வீதி போல் இருக்கும். இந்த அழகைச் சிவராஜேந்திரம் ''பூணுக்கு அழகளிக்கும் பொற்கொடியர்'' என்று புகழேந்தி பாணியில் பின் ஒருநாள் புகழ்ந்திருக்கின்றான்.

அடுத்தநாள் விரிவுரை அறைக்குள் சிநேகா முதன்முதலாக உள் நுழைந்தாள். விரிவுரை மண்டபத்தினுள் சிவராஜேந்திரம் மட்டுமே அமர்ந்திருந்தான். அவனுடைய கேலிப் பேச்சும், கிண்டலும் நாள்

முழுதும் சிநேகாவைக் கலகலப்பாக வைத்திருக்கும். தமிழ் சிறப்புக் கலை கற்பதற்கு சிநேகாவும், சிவராஜேந்திரனும் மட்டுமே சென்றிருந்தார்கள்.

"எப்படி... ... இழுத்துப் போட்டேன்" என்று சிநேகாவைத் தமிழ் ஸ்பெசல் படிக்க வைத்து விட்ட சந்தோசத்தைக் கிண்டல் அடித்தான்.

அன்று முழுவதும் தனக்கும் நண்பர்களுக்கும் விடுதியில் நடந்த பகடிவதைகளைப் பகடியாகவே சொல்லி முடித்தான்.

"சிநேகா புதிய மாணவர்கள் அன்னாசிப் பழம் வாங்கி வர வேண்டும். அவர்களுடைய ஆடை முழுவதுமாகக் களையப்படும். அம்மணமாக ஒவ்வொரு அறைக் கதவையும் போய்த் தட்ட வேண்டும். அந்த அன்னாசிப்பழத்தை நாம் என்ன செய்தோமென்று நான் சொன்னால்... ... இல்லை சொல்லலாம். சொன்னால், உங்கள் குனிந்த சிவந்த முகத்தைக் காணலாம். ஆனால், உங்களுக்கு நான் சொல்ல முடியாது சிநேகா" என்றான்.

"சொல்லுங்கள்... சொல்லுங்கள்" என்று சிநேகா அடம்பிடித்தாள்.

"நான் சொன்னாப் பிறகு. எனக்கு நீங்கள் அடிக்கக் கூடாது. அது கொஞ்சம் கேவலமா இருக்கும். பரவாயில்லை என்றால் சொல்லுகிறேன்" என்றான்

"வேண்டாம் சாமி. வேறு கதையிருந்தால், சொல்லுங்கள்" என்றாள்.

"பேணிகளை அடுக்கி வைப்பார்கள். அந்தப் பேணியில் பெண் மாணவிகளின் பெயரை எழுதுவார்கள். அந்தப் பேணியில் மாணவர்களை சல அபிஷேகம் செய்ய வைப்பார்கள். தம்முடைய காதலியின் பேணியில் யாராவது அபிஷேகம் செய்தால் அப்பெயருடையவளின் உரிமைக்காரன் கொதித்து எழுவான். அவனை அடையாளம் கண்டு உடனே பார்ட்டி வைக்குமாறு கட்டளை பிறக்கும். இதைவிட தியான் பாட்டுப்பாட மற்றையவர்கள் ரேப் சுற்றுவது போலச் சுற்ற வேண்டும். நிறுத்தித் திரும்பவும் பாட அவர்கள் ரீவைன்ட் பண்ணுவது போல் சுற்ற வேண்டும். நிறுத்தி முன்னுக்குப் பாட இவர்கள் போர்வேட் பண்ணுவது போலச் சுற்ற வேண்டும். நான் ரீவைண்ட் பண்ணி நாற்காலியில் மோதி விழுந்து, அந்தக் கன்றாவிய என்ன என்பது" என்றான்.

இதைக் கேட்டு சிநேகா விழுந்து விழுந்து சிரித்தாள்.

“உங்களுக்குச் சிரிப்பு. அருணாசலம் பொன்ட்டில் (அழகுக்காக் கட்டப்பட்ட சிறிய குளம்) உள்ள நீரைச் சிரட்டையால் அள்ளி அள்ளி வெளியே கொட்ட வேண்டும். அது கொட்டக் கொட்ட நிரம்பிக் கொண்டே இருந்தது. அதற்குள் செல்வராஜனுடைய கட்டுப்பல் செட் விழுந்து விட்டது. அதை அவன் தவளை போல் தேடிப்பிடித்துத் தன்னுடைய வாய்க்குள்ளே பொருத்தப் படாத பாடு பட்டிற்றான். பாவம் அது தொலைந்திருந்தால், அவன் பெட்டையள் முன்னுக்குப் பல்லில்லாத பாட்டனாகத்தான் போயிருக்க வேண்டும்” என்றான்.

சிநேகாவும் விரிவுரை அறையென்ற எண்ணத்தை மறந்து பெரிதாகச் சிரித்தாள்.

வேறு விரிவுரைகளுக்குப் போன மாணவர்கள் இவர்களை எட்டிப் பார்த்து

“என்ன நடக்குது இங்கே” என்று சொல்லிப் போனார்கள்.

“சிநேகா ஒன்றுக்கு மட்டும் நான் தப்பிவிட்டேன். நான் ரேப் சுற்றியதால், மூக்கு முட்ட மதுபானம் குடிக்க வேண்டிய அவசியம் வரவில்லை. பீதாம்பரம் தண்ணியில தவண்டான். வீமன் சுப்பர் டான்ஸ் ஆடினான். அதைப் பார்க்க வேண்டுமே. நாய்க்குக் குடிக்கக் கொடுத்துப் பாருங்கள். அதப் போலத்தான் வீமனுடைய குடிக் கூத்துக் களை கட்டியது.”

இவ்வாறு சிவராஜேந்திரனின் கதையில் சிரித்துச் சிரித்து வயிற்றைப் பிடிக்கப் பூலோகம் சேர் அறையைத் திறந்து உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

“முதல் நாளே தொடங்கிவிட்டீர்களா...” என்றார்.

அவர் என்ன நினைத்தாரோ. அதே போலத்தான் விரிவுரையாளர்கள் எல்லோரும் நினைத்தார்கள்.

“ஆரம்பிக்கலாமா...” என்று விக்ரம் பட கமலஹாசன் போல் தொடங்கினார். முதல்நாள் பாடம் தொடங்கியது. தமிழ் ஸ்பெசல் ஆகத்தான் இருந்தது. கற்கை ஆரம்பித்தது.

முதல் நாள் கழிந்தது. அந்தக் காலத்தில் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் கலைப்பீடத் தலைமைப் பொறுப்பில் இருந்தார். அவருக்குப் பின் பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

சிவராஜேந்திரன் பகடி வதைகளைக் கேட்டு அன்று முழுவதும் விடுதியிலும் சொல்லிச் சொல்லி சிநேகா சிரித்தாள்.

சிவராஜேந்திரன் பார்வை குதிரைக்கு வடம் கட்டியதுபோல் நேராகவே இருக்கும். நேர்த்தியான ஆடை, அணிவகுப்பு நடைபோல் நிமிர்ந்த நடை, சின்னச் சின்ன எட்டு எடுத்துக் காலை விசிறி விசிறி நடந்து வருவதுடன் தமிழ் இலக்கியத்தைப் பல்கலைக்கழகம் வருவதற்கு முன்னமே கற்றுத் தேர்ந்த அறிவு, அடர்த்தியான வாரிய முடி, நகைச்சுவையை நாசூக்காகச் சொல்லிவிட்டு சிரிக்காமல் பார்த்துக் கொண்டிருப்பது. நக்கல் கலந்த நகைச்சுவை அதற்குள் பற்கள் தெரியாமல் ஒரு சிரிப்பு. விரிவுரை அறையில் சிநேகாவுக்குப் பின் வந்த சரித்திரமே இல்லை. அவள் உள்நுழைய ஒரு நக்கலுடன் வரவேற்பது அவளுக்குப் பரீட்சயம். சிநேகிதன் என்றால் சிவராஜேந்திரன் என்பது போல் பல்கலைக்கழக வாழ்வில் சிநேகாவுக்கும் சிவராஜேந்திரனுக்கும் இடையில் நட்பு நிறைந்திருந்தது.

ஒரு வருட தும்பறை வாழ்க்கை. தனியே வாழுகின்ற ஒருவர் அல்லது ஒரு பெண் அனுபவிக்க வேண்டியவற்றைக் கற்றுக் கொடுத்தது. அழகான பிரதேசமும், ஆழமான நோக்கமும், பிடிவாதமாக மனஅலைக்குள் சிக்கிக் கொண்டால் அவர்கள் எந்தப் பிரச்சினையையும் மீறி வருவார்கள் என்பதையும் கற்றுக் கொடுத்தது. பேராதனை வாழ்க்கையின் 3 வருட காலம் எப்படி அமையப் போகின்றது என்பதைத் தொடர்ந்து வந்த காலங்கள் அவளுக்குக் கற்றுத் தந்தன.

பேராசிரியர் பூலோசிங்கம், பேராசிரியர் தில்லைநாதன், கலாநிதி துரைமனோகரன், பேராசிரியர் சதாசிவம், பேராசிரியர் அருணாச்சலம், திருமதி தியாகராஜா, போன்றோர் சிநேகாவுக்கும் சிவராஜேந்திரனுக்கும் தமிழ் இலக்கண இலக்கியத்தின் தேனைச் சுவைக்கப் பருகத் தந்தனர். கட்டுக்கட்டான புத்தகங்கள் தமிழின் தொன்மையை எண்ணிப் பெருமைப்பட வைத்தன, தமிழின் இனிமையைச் சுவைத்தின்புறச் செய்தன. சிநேகா தமிழில் இருந்த ஆர்வம் மேலும் பன்மடங்காகியது.

கற்கின்ற போதே சில குறிப்புக்களை எடுப்பாள். கண்மூடி அதில் இலயித்துப் போவாள்.

"பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடியவள் ஆகி

அஞ்சொலிள மஞ்ஞைஎன அன்னம்என மின்னும்
வஞ்சிஎன நஞ்சம்என வஞ்சமகள் வந்தாள்''

இவ்வாறான கம்பராமாயணப் பாடல்கள்.

காலம், நேரம், ஏன், என்ன பா, ஏனிந்தப் பாவகை, கம்பன் கற்பனைத்திறன், சொல்லாட்சி, பொருளாட்சி, ஓசை நயம் என ஆய்வு செய்து அழகாய் இரசித்தாள். கலிங்கத்துப் பரணியில் ஊழிக்கூத்தை வாய்விட்டுப் படிப்பாள். குற்றாலக்குறவஞ்சியைத் தனக்குள் பாடி நடனம் புரிவாள். நூலகம் சென்று தேடிப் பெற்ற நூல்களைக் கொண்டுவந்து கற்கும்போது கடினமான புத்தகச் சுமையும் இலேசான காற்றுப் போலாகும்.

காலப்போக்கில் ஆங்கில மீடியத்திலே புவியியல் துறை கற்ற இஸ்லாமிய மாணவி ஆயிஷா சிநேகாவுடன் அறையைப் பகிர்ந்து கொள்ள வந்தாள். பக்கத்து அறை ஈழவாணி, சசித்திரா, ஆயிஷா, சிநேகா நால்வரும் இணைந்து இரவுச்சாப்பாடு உண்ணத் தொடங்கினால், விரல்களில் படிந்திருக்கும் உணவைத் தட்டிவிட்டு அலுவல் பார்க்கலாம். அந்த அளவில் உணவு காய்ந்து வறண்டு விடும்.

ஆயிஷாக்கு ஒரு காதலன் இருந்தான். மட்டுவெலவில் வசிக்கும் பெற்றோருக்குத் தெரியாதபடி காதலனுடன் சிநேகா வீட்டில் ஒரு வாரம் தங்கியிருந்தாள். சிநேகா அம்மா பார்வதியிடம் இருவரும் அண்ணன் தங்கை என்றே சொல்லி வைத்திருந்தாள். இருவரையும் மட்டக்களப்பு முழுவதும் சுற்றிக் காட்டினார்கள். கட்டுப்பாடான இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் காதல் எந்த எல்லைக்கும் கொண்டு செல்லும் என்பதற்கு அவர்களுடைய துணிவும் காரணமாகும்.

நால்வரும் பொலைக்குப் (சந்தை) போய் மரக்கறிகள் வாங்கி வந்து அறையிலே சமைக்கத் தொடங்கினார்கள். பொலை என்றால், சிங்களத்தில் சந்தை. துருவலையின் இருக்கும் பகுதியைக் கட்டிலின் மெத்தையின் கீழ் வைத்து அதற்கு மேல் ஏறி இருப்பார்கள். தலைப்பகுதியில் தேங்காயைச் சொருகி நிலத்திலே ஒரு தட்டை வைத்து வறக்கு வறக்கென்று துருவிப் பால் பிழிந்தெடுத்து சமைப்பது ஒரு அனுபவமே. பொலைக்குப் போவதற்காகப் பேருந்துப் பயணம் செய்வது அல்லது குறுக்கு வழியால் நடந்து போவது சுற்றுலா போல் இருக்கும். ஆனால், திரும்பி வரும் போது கண்டிக் குளிரிலும் வியர்த்துக் கொட்டும்.

தூக்க முடியாத பாரத்தைத் தூக்கிக் கொண்டு வந்து கட்டிலில் பட்டென்று விழுவார்கள். அக்காலப்பகுதியில் அவர்களுக்குப் பிடித்த பழம் பட்டர் புரூட். பட்டர் புரூட் என்றால், அவக்காடோ. பட்டர் புரூட்டை வெட்டி அதிலுள்ள சதையை வழித்தெடுத்து அங்கர் மாவையும் சீனியையும் போட்டுக் கடைந்து ஐஸ்கிரீம் போல் சாப்பிடும் சுவை இருக்கிறதே. அது தனிச் சுவை.

அதை ஜெர்மனியர் பாணுக்கு மேலே பூசி அதற்கு மேல் முட்டை ஓம்லட் வைத்து காலைச் சாப்பாடாகச் சாப்பிடுவார்கள். மலச்சிக்கலுக்கு அது சிறந்த மருந்தாக இருந்தது.

இக்காலத்தில் ஆட்டோவைப் பிடித்து வந்து பொலைக்குப் போய் வந்து இறங்கும் இலகுவை விட பாரந் தூக்கிக் களைத்து நடந்து வரும் அனுபவம் சுவாரஸ்யமே. வாழ்க்கையின் கஷ்டங்கள் கூடப் பிற்காலத்தின் ஒரு கட்டத்தில் நினைத்து நினைத்து இன்புறச் செய்யும் சுகமாகவே இருக்கும்.

வீட்டிலே சமையலறைப் பக்கம் அம்மாவை ஒரு தரம் இறுக்கி முத்தமிட மாத்திரமே போகின்ற சிநேகா, பச்சை போஞ்சியைக் கறி (Beans) சமைத்தபோது அது மஞ்சள் நிறமாக வர வேண்டும் என்று மணிக்கணக்கில் அவித்த கதையை ஈழவாணி சொல்லிச் சொல்லிச் சிரிப்பாள்.

சீனா பீக்கிங் வானொலியில் இருந்து பாங்யாசிங், சென்சிபாங் என்னும் இரண்டு சீனப் பெண்கள் தமிழ் மொழி கற்பதற்காகப் பேராதனைப் பல்கலைக்கழகம் வந்திருந்தார்கள். அவர்களில் பாங்யாசிங் சிநேகாவுடன் நல்ல நட்பில் இருந்தாள். மாலைப்பொழுதிலே சிநேகாவிடம் திருக்குறள் கேட்டுக் கற்பதற்காக வருவாள். உயரம் குறைவாகவும், மெல்லிய தோற்றத்துடனும் சீன மக்களுக்கே உரிய சப்பை மூக்கும், அழகும் மிக்கவள். பாதங்களை அருகே அருகே வைத்து அழகாக நடப்பாள். சிநேகாவிடம் “உங்களுடைய மூக்கு கத்தி போல் அழகானது. உங்களுடைய நிறம் எனக்கு மிகவும் பிடிக்கும்” என்று இலக்கணத் தமிழில் பேசுவாள். அன்பு மிக்க பாங்யாசிங் சிநேகாவின் சமையலைச் சுவையோ சுவை என்று புகழ்ந்து தள்ளுவாள். சிநேகாவின் சமையலைப் பற்றி ஈழவாணிக்குத்தான் தெரியும். அதனால், இரகசியமாகக் கண்ணைக் காட்டிச் சிரிப்பாள்.

கற்பித்தலிலே எத்தனை விரிவுரையாளர்கள் கற்பித்தாலும் மனத்துக்குச் சிலரைத்தான் பிடிக்கும். அது விரிவுரையாளர் மட்டுமல்ல. பழகும் அனைவரும்தான். அந்தவகையில் சிநேகாவுக்கு இருவரை மிகவும் பிடித்தது. ஒருவர் முனைவர் துரை. மனோகரன் அவர்கள். அவர் பிரபந்தங்கள் கற்பித்தார். அவர் கூறும் ஒரு வாசகத்தைச் சிவராஜேந்திரன் நினைவுறுத்திக் கொண்டிருப்பான். "கதவைத் திறவுங்கள் காற்றோடு பறக்கட்டும்." அடுத்தவர் பேராசிரியர் அருணாசலம் அவர்கள். அவர் யாப்பருங்கலக்காரிகை கற்பித்தார். எந்தவிதப் பெருமையும் இல்லாமல் எம்முடன் நண்பர்கள் போலவே பழகினார்கள்.

துரை. மனோகரன் சேர் பி.எச்.டி செய்வதற்காக இரண்டாவது வருடம் இந்தியாவுக்குச் சென்று விட்டார். அங்கிருந்து அவர் சிநேகாவுக்கு எழுதிய கடிதத்தில் தஞ்சைப் பெரிய கோயிலிலே அவர் விக்கிரகங்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த ஒரு பெண் யாரோ ஒருவரிடம் இந்தக் கோயிலை யார் கட்டினார்கள்? என்று கேட்டாராம். அப்போது அவரும் சிவாஜி கணேசன் என்று சொன்னாராம். இந்தியாவிலே அதிகூடிய கெட்டிக்காரர்களும் இருக்கின்றார்கள். அடிமட்டப் படிக்காதவர்களும் இங்குதான் இருக்கிறார்கள். பெரிய கோடீஸ்வரர்களும் இங்குதான் இருக்கின்றார்கள். அடிமட்ட வறியவர்களும் இங்குதான் இருக்கின்றார்கள் என்று எழுதினார். அவரிடம் தொடர்ந்து படிக்க முடியாமல் போனது சிநேகாவுக்குக் கவலையாகத்தான் இருந்தது.

அடுத்த அருணாசலம் ஆசிரியர் அன்பான ஒரு விரிவுரையாளர். அவரை சிநேகா ஆசிரியராக இருந்த போது க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் போது அவளுடைய மேலதிகாரியாக வந்திருந்தார். அதுதான் அவரைப் பார்த்த இறுதி நாட்கள். இப்போது அவர் இல்லை என்பதை நினைக்கும் போதெல்லாம் சிநேகா வேதனைப்படுவாள்.

பேராதனைக்கு ஒரு அழகு பேராதனைத் தாவரவியல் பூங்கா. அங்குள்ள பூக்கள் அழகு என்றால், அத்தாவரங்களுக்குக் கீழே அமர்ந்திருக்கின்ற காதலர்களும் அழகுதான். சுற்றிவர ஓடுகின்ற மகாவலி கங்கையில் பட்டு வீசுகின்ற சில்லென்ற காற்று காதலர்களுக்குக் கிலுகிலுப்பை ஊட்டும். பல்கலைக்கழகக் காதலர்களின் பல மணிப்பொழுதுகளை அது களவாடியிருக்கிறது. அங்குள்ள ஒவ்வொரு மரங்களும் வாயிருந்தால் பலவித சுவாரஸ்யங்களை வாயூறிச்

சொல்லியிருக்கும். உலகமெங்கும் இருந்து இங்கு வரும் உல்லாசப் பயணிகள் பூவை இரசிப்பதா, பூவையரை இரசிப்பதா என்று தெரியாது செல்வார்கள். இது பல்கலைக்கழக மாணவர்களுக்கு இயற்கை கட்டிக் கொடுத்த இராஜபுரி.

பேராதனையில் இரண்டாவது வருட ஆரம்பம். தும்பறை வளாகத் திலிருந்து ஜெனரல் டிகிரி முடிப்பவர்கள் பேராதனையில் மீதி ஒரு வருடத்தை நிறைவு செய்வதற்காக வந்தார்கள். தும்பறை வளாகத்தில் புதிய மாணவர்கள் வருகின்றார்கள். வாங்கிக் கட்டியதை எல்லாம் திருப்பிக் கொடுப்பதற்காக பேராதனையிலிருந்து சிநேகாவினுடைய கற்கைநெறி மாணவர்கள் படையெடுக்கின்றார்கள்.

அந்த மாணவர்களுடன் சிநேகாவுடன் பாடசாலையில் கற்ற நண்பி தருமினியும் வந்திருந்தாள். அவள் வருகின்ற விடயத்தை சிவராஜேந்திரனிடம் சிநேகா சொல்லியிருந்தாள். போய்க் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சிவராஜேந்திரனை அனுப்பி வைத்தாள். ஐயா அன்று கவனிக்கப் போனவர்தான். அன்றிலிருந்து அவர் வேறு யாரையுமே கவனிக்கவில்லை. தருமினியில் கண் தூண்டிலில் சிவராஜேந்திரனின் மனம் சிக்குப்பட்டுப் போயிற்று. மந்திரத்தில் கட்டுப்பட்ட ஆடு போல விரிவுரை மண்டபத்துக்கு வந்திருந்தான்.

தருமினியைக் கவனிக்கச் சொன்ன சிநேகா அவனைக் கட்டுப்பாடாக இருக்கச் சொல்லவில்லை.

“சிநேகா. சிவனே என்று இருந்த என்னை. சிக்க வைக்க எப்படித் திட்டம் போட்டீர்கள். நான் உங்களுக்கு என்ன பாவம் பண்ணினேன். நண்பி வருகிறாள் என்றீர்கள். அவள் எப்படி நண்பி என்று சொல்லவே இல்லையே. அவள் என்னைப் பார்த்தாள் ஒரு பார்வை. கரண்ட் அடிச்சதே ஒரு அடி. அடித்த ஷொக்கில ரேகிங் எல்லாம் மறந்து போச்சு” என்றான்

அன்று தொடங்கிய தருமினி புராணம். விரிவுரை நாட்களெல்லாம் ஒரு கதையுடன் ஆரம்பமாகும். இலக்கிய மாணவன் என்றால், கற்பனைக்கும் அலங்காரங்களுக்கும் வர்ணனைக்கும் குறைவு இருக்குமா? இலக்கியங்கள், புராணங்கள் எல்லாம் இப்படித்தான் படைக்கப்பட்டனவோ என்று எண்ணுவாள்.

காதலுக்கு மனம் தான் காரணம். எல்லோரும் வயது வந்துதானே பல்கலைக்கழகத்திற்குப் போகின்றார்கள். எது எமக்குச் செட்டாகும் என்று

ஆய்ந்து அறியும் வயதுதானே எல்லோருக்கும் இருக்கிறது. தெரியாமல் சேற்றில் கால் வைக்க யாருடைய மூளை நரம்புகளும் பழுதுபட்டு இருப்பதில்லையே. சிநேகாவும் தன்னுடைய வாழ்க்கையை வரம்பு கட்டியே வாழ்ந்தாள்.

வாழ்க்கை அந்தந்தக் காலங்களில் அழகே. அதை அனுபவிக்கப் பிள்ளைகளை அனுமதிக்க வேண்டியது பெற்றோரின் கடமை. சிநேகா எந்தவிதத்திலும் பெற்றோரால் கட்டுப்படுத்தப்பட்டவள் அல்ல. காரணம் அவள் வாழ்க்கையை அவர்கள் கூட இருந்தே பார்ப்பவர்கள் அல்லவா. அவளுக்குத் தாயின் றெசிங்கவுண் பாவாடையே தொட்டில். நாற்காலியில் தாய் இருந்தால், பாவாடைத் தொட்டிலில் அவள் இருப்பாள்.

அளவுகடந்த ரோச்சர் காதலில் வெறுப்பையே தரும். காதல் சுகமானது. சுமையாக இருக்கக் கூடாது. நீ சம்மதிக்காவிட்டால், தற்கொலை செய்வேன் என்பதும், சிகரெட் புகையால் தன்னுடைய கைகளை எரிப்பதும், தன்னைத் துன்புறுத்துவதும். அதைக் கண்முன்னே காட்சிப்படுத்துவதும், காதலுக்குச் சம்மதம் பெறுவதற்காக மிரட்டுவதும் ஒரு பயத்தையே கொண்டு வரும். சில தொல்லைகள் சிநேகாவுக்குக் காதலில் வெறுப்பைக் கொண்டு வந்தது. ஓரிருவரின் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டாள்.

வேறு யாராக இருந்தாலும் சரி என்று சொல்லிக் காலத்தைக் கடத்தியிருப்பார்கள். ஆனால், அவளுடைய கண் முன்னே அவளுடைய தந்தையின் கௌரவம் பெரிதாகப்பட்டது, அவளுடைய தாயின் அன்பு பெரிதாகப்பட்டது. அவளுடைய எதிர்காலம் பெரிதாகப் பட்டது. சிவராஜேந்திரனிடமும் அவளுடைய சிநேகிதிகளிடமும் அனைத்தையும் கொட்டுவாள். சிவராஜேந்திரன் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்தும் அறிவுறுத்திப் பார்த்தும் ஏற்றுக் கொள்ளாத தன்மையால் சிநேகா சமாளித்துக் கொண்டு போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது,

விதி என்று உதறித் தள்ளிவிட முடியாமல் முயற்சிமேல் முயற்சி எடுத்தமையால் தன்னுடைய பெற்றோருக்கு ஏற்ற பெண்ணாக அவளால் வாழமுடிந்தது. அதில் பெரிய திருப்தியும் அவளுக்கு ஏற்பட்டது.

இவ்வாறான அனுபவங்கள் ஐரோப்பியர்களுக்கு இல்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தாது என்றால், முயற்சியை விட்டுப் பின் நண்பர்களாகப் பழகுவார்கள். இப்படி வற்புறுத்த மாட்டார்கள்.

இது தமிழர்களிடம் இன்று நேற்று வந்தது இல்லை. சங்ககாலத்திலேயே ஒரு பெண்ணை ஒரு ஆண் விரும்பிவிட்டால், அவள் தன்னுடைய காதலை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அல்லது பெற்றோர் சம்மதிக்காமல் விட்டால் மண் குதிரை செய்து ஆற்றில் இறங்குதல், பனை ஓலையில் குதிரை செய்து அதில் ஏறி உடலெல்லாம் இரத்தம் வடிய ஊராருக்கு முன் செல்லுதல். இவ்வாறு செய்து பெண்ணை, பெண்வீட்டாரைச் சம்மதிக்க வைக்கும் வழக்கம் இருந்தது. அந்தப் பரம்பரைதான் இன்றும் தொடர்கிறது.

சிநேகாவின் பல்கலைக்கழகக் காலத்திலே இப்போது போல் இணையவழிக் கல்வியோ, கணினி மூலம் படிக்கும் வசதியோ இருந்ததில்லை. ஒருநாள் அவளுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் ஒன்று நடந்தது.

அன்றைய நாள் அவர்களுடைய கற்கும் காலத்து மாணவன் சிவாவுக்குப் பிறந்தநாள். அன்று நண்பர்கள் பேராதனைப் பூங்காவிலே பார்ட்டி வைத்துவிட்டு வருகின்ற போது பாலத்தடியிலே ஓர் இடத்தில் தமிழ் ஈழம் என்று எழுதப்பட்ட பதாதையைக் கண்டிருக்கின்றார்கள். இதென்னடா பெரிய பிரச்சினை வரப் போகிறது போல என்று முணுமுணுத்தபடி இவர்கள் மெல்ல நடந்து வளாகத்துக்குள் வந்து விட்டார்கள்.

அந்தக் காலத்தில் ரூபவாஹினி என்னும் தேசிய தொலைக்காட்சி மாதம் ஒவ்வொரு புதன் கிழமையும் தமிழ்த் திரைப்படம் போடுவார்கள். அதற்கு அனைத்து விடுதியிலும் இருந்து விஞ்ஞானப் பிரிவு உணவகத்துக்கு மாணவ மாணவிகள் செல்வது வழக்கம். அன்று புதன்கிழமை திரைப்படம் பார்ப்பதற்குச் சிலர் போனார்கள். அடுத்த நாள் ஓர் ஆய்வுக்கட்டுரை விரிவுரையில் கொடுக்க வேண்டியிருந்ததால் அதைச் சிநேகா எழுதிக் கொண்டிருந்தாள். அதனால் சிநேகா, ஈழவாணி, சசித்ரா, ஆயிஷா ஆகிய நால்வரும் படம் பார்க்கப் போகவில்லை.

அடுத்த நாள் அதிகாலை 2 மணியிருக்கும் விஜேவர்த்தன விடுதி யன்னலோரம் சிநேகாவினுடைய கற்கைநெறி மாணவர்கள் “சிநேகா... ... ஈழவாணி... ... சசித்திரா... ...” என்று கத்தினார்கள். நித்திரைக் கலக்கத்தில் மூவரும் யன்னலால் எட்டிப் பார்த்தார்கள். எல்லாச் சாமான்களையும் கட்டி எடுத்துக் கொண்டு ஓடி வாருங்கள். இரவோடிரவாக ஊருக்குப் போக வேண்டும். இங்கே இருந்தால் நாளைக்குப் பிரச்சினை

கூடும் என்றார்கள். ‘‘ஏன் ஏன்’’ என்று கேட்ட போது ‘‘வாங்கள் பிறகு சொல்லுகிறோம்’’ என்று கத்தினார்கள். நித்திரை எங்கே பறந்தது என்று தெரியவில்லை.

மூளைக்குச் சொல்லாமலே கையும் காலும் வேலை செய்தன. அரை மணிப்பொழுதுக்குள் அங்குமிங்கும் பார்த்துக் கீழே இறங்கினார்கள். பல்கலைக்கழகம் குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தது. கீழே வந்த போதுதான் தெரிந்தது. நண்பர்கள் கதைகதையாய்ச் சொன்னார்கள்.

படம் பார்க்கப் போன மாணவர்களுக்குச் சிங்கள மாணவர்கள் முழு ஆடையையும் கழட்டி அடித்திருக்கின்றார்கள். ஆண் விடுதிகளுக்குள் சென்று அவர்களின் ஆடைகள் எல்லாம் கழட்டி ஊர்வலமாகப் பேராதனைச் சந்திக்கு அடித்து அடித்துக் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

‘‘அத ஒயட்ட. ஹெட்ட ஹாந்தாவட்ட’’ என்று அடித்திருக்கிறார்கள். இன்று உங்களுக்கு நாளை பெண்களுக்கு என்று சொன்னதுடன்

‘‘ஒயாகே கெம்பஸ் யாபானய’’

உங்களுடைய பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. அங்கே போங்கள். இங்கே ஏன் வந்தீர்கள்? என்று வெளுத்து வாங்கி யிருக்கின்றார்கள். இது அவர்களுக்குப் புரியவில்லையே. தமிழர்கள் இலங்கையின் எந்த மாகாணத்தையும் விடுவதாய் இல்லையே. இலங்கை முழுவதிலும் தமிழர்கள் பரந்து வாழ்கின்றார்களே.

அடிவாங்கிய நண்பர்களை எண்ணிக் கவலைப்படுவதா? இல்லை தம்மைக் காப்பாற்றுவதா? அதைவிடக் கலைப்பீட மாணவிகள் சேலை அணிய வேண்டியதால், சேலை, அதற்குரிய உள்பாவாடை, அதற்குரிய மேலாடை, வேறு ஆடைகள் என்று அதுவேறு பாரம். சிநேகா தான் தமிழ் சிறப்புக் கலை கற்கின்றாளே. அவளுக்கு மற்றவர்களை விடப் புத்தகச் சுமை அதிகம். தமிழ் சிறப்பு கற்பவர்களுக்கு ஒரு பாரிய தண்டனையாக இருப்பது இந்தப் புத்தகப் பழுவைச் சுமக்க வேண்டிய கட்டாயம்.

இப்போது எழுதிக் கொட்டுபவர்கள் போல் அப்போதும் எழுதிக் கொட்டிவிட்டார்கள். கம்பராமாயணம் 6 காண்டங்கள் 113 படலங்கள். 10.500 பாடல்கள். இவ்வாறு சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி என்று புத்தகச் சுமை அவளோடு கூட வர, மற்றைய நண்பிகள் இலகுவாக நடந்து செல்ல, சிநேகாவை ‘‘விரைவாக வா’’ என்றால் எப்படி முடியும்.

“உன்னால பெரிய ரகளையாப் போச்சு” என்று சினந்தபடி ஈழவாணி சிநேகாவுக்கு உதவினாள்.

உயிருக்கு ஆசை இருந்தால் இப்படித்தான் ஓடுவார்கள். மானம் பெரிதென்று தானே இரவோடு இரவாக ஓடி வந்தார்கள். சரசவி உயன்ன புகையிரத நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து புகையிரதத்தில் மட்டக்களப்பை வந்தடைந்தார்கள். சிநோகா வீட்டிற்கு வரும்வரை பல்கலைக்கழகத்தில் என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. அந்தச் சம்பவத்தினால் பல்கலைக்கழகத்தை மூடிவிட்டார்கள்.

சில மாதங்களின் பின் மீண்டும் பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது. “மஞ்சள் குருவிகள் (ஹாமதுறு) நெஞ்சைத் தழுவ” என்று மாணவர்கள் சொல்வது போல மீண்டும் எல்லாம் மறந்து கற்கை நெறி தொடர்ந்தது. மீண்டும் 1983 விடுமுறைக்கு வீட்டுக்கு வந்து பின் திரும்பவும் பல்கலைக்கழகம் வர முடியவில்லை. 3 ஆவது 4 ஆவது வருடப் பரீட்சைகளை 1984 இல் ஒன்றாகவே எழுதினாள். சிநேகாவினுடைய ஆய்வுக்கட்டுரைக்கு விரிவுரையாளர் பூலோகசிங்கம் அவர்கள் மேற்பார்வை எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பமே சிநேகாவுக்குக் கிடைக்கவில்லை.

அவர் கொழும்பில் வசித்தார். இனப்பிரச்சினை காரணமாக இலங்கை முழுவதிலும் பிரயாணம் தடைப்பட்டிருந்தது. தமிழர்கள் சிங்களவர்களின் கண்களில் பட முடியாத வகையில் எல்லோரிடமும் பீதி குடி கொண்டிருந்தது.

அதனால், எப்.எக்ஸ்.சி. நடராஜா அவர்கள் சிநேகாவின் “20 ஆம் நூற்றாண்டு மட்டக்களப்புத் தமிழ் இலக்கியமும் பிரதேசப்பண்பும்” என்னும் ஆய்வுக்கட்டுரைக்குத் துணையாக இருந்தார். புத்தகம் முடிவதற்குள் இலங்கைப் பிரச்சினை பாரிய பிரச்சினையாகப் போய்விட்டது.

முதலில் எப்படிப் புத்தகம் முடித்தாள் என்பதே ஓர் ஆச்சரியம். ஊரடங்குச் சட்டம் போட்டுவிட்டார்கள். பரமசிவம் தன்னுடைய அலுவலகத்தில் இருந்து தட்டச்சு இயந்திரத்தை வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தார். இதற்கு முன் எப்போதுமே தட்டச்சு இயந்திரத்தில் பரிச்சயம் இல்லாத சிநேகாவினுடய அண்ணன் கீரன் தட்டச்சை அந்த இயந்திரத்திலேயே பழகி சிநேகாவினுடைய புத்தகத்தைத் தட்டித்

தட்டி அடித்துத் தர, அதைப் பரமசிவம் எங்கேயோ இரகசியமாகக் கொண்டுபோய்ப் புத்தகமாகக் கட்டிக் கொண்டு வந்தார்.

அதை எப்படிக் கொழும்பில் இருக்கும் பூலோகசிங்கம் ஆசிரியரிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது என்று கலங்கி நின்றபோது கொழும்பு செல்லும் ஒரு பையனிடம் கொடுத்துவிட்டார்கள். அவனும் அந்தப் புத்தகத்தைப் பூலோகசிங்கம் ஆசிரியரிடம் கொண்டு சேர்த்தான். அவர் அவனை உள்ளே வர விடாமல் வெளி வாசலிலேயே நிற்க வைத்து அந்தப் புத்தகத்தை வாங்கினார்.

புத்தகத்தின் இறுதி வடிவத்தை எப்.எக்ஸ்.சி ஐயாவால் கூடப் பார்க்க முடியவில்லை. இவ்வாறுதான் சிநேகாவினுடைய "20 ஆம் நூற்றாண்டு மட்டக்களப்புத் தமிழ் இலக்கியமும் பிரதேசப் பண்பும்" என்னும் ஆய்வுநூல் பல்கலைக்கழகத்துக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது.

பின் 01.01.1985 இல் பட்டமளிப்பு விழாவிலேயே எல்லோரும் சந்தித்தார்கள். பிரிந்தார்கள்.

பிரிவுவரும் என்றெண்ணி வாழ்ந்ததில்லை
பிரிவோமென்று எண்ணிச் சோர்ந்ததில்லை
இதயங்கள் பல களவாடி
இன்பமாய் ஆர்ப்பாட்டச் செலவுசெய்து
உள்ளக்களிப்பில் மிதமாய் உறவாடி
உளமார உதவிகள் புரிந்தே
ஒற்றுமை வாழ்வு வாழ்ந்தார்கள் இனி
காணுமிடம் எதுவென்று கண்கலங்கி நின்றார்கள்
கண்களுக்குள் வாழ்வைக் கொண்டு சென்றார்கள்
கனவுபோல் பல்கலைக்கழக வாழ்வு கழிந்தது
காலங்கள் நட்பைத் தோற்கடித்து மகிழ்ந்தது.

அதன்பின் சில நண்பிகளைத் தவிர வேறுயாருடனும் தொடர்புகள் இருந்ததில்லை. பின் முற்றாகத் தொடர்புகள் அழிந்து போயின. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்க்கை, ஒவ்வொரு தொழில். இன்று வட்ஸ்அப், முகநூல் பல நண்பர்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றது. பலர் இந்த உலகத்தை விட்டுச் சென்று விட்டார்கள். சிவராஜேந்திரன், ஈழவாணி, போன்ற நண்பர்களுடன் பல்கலைக்கழக வாழ்க்கையை அவ்வப்போது பேசி மகிழ்கின்றாள். அந்த வாழ்வை எண்ணிச் சிநேகா தவிக்கின்றாள்.

# அத்தியாயம் 8

# ஆசிரியர் நியமனம்

சிநேகாவுக்குச் சில மாதங்களிலேயே பட்டதாரி ஆசிரியர் தொழில் கிடைத்துவிட்டது. அதற்கு முன் ஆசிரியர் பயிற்சிக்குப் போக வேண்டும் அல்லவா.

அங்கு தான் ஓர் ஆசிரியர் உருவாகின்றார். அறிவு மட்டும் போதுமா? அழகான வாகனத்தை வைத்துக் கொண்டு அதனைக் கை தொட்டுச் செலுத்தத் தெரியாவிட்டால் எப்படி இருக்கும்? வகுப்பறை முழுவதும் மாணவர்கள். ஆனால் ஆசிரியர் கற்பிக்கத் தெரியாது தடுமாறக்கூடாது அல்லவா! ஓர் ஆசிரியர் மாணவனைப் பட்டைதீட்டி வைரமாக மிளிரச் செய்ய வேண்டுமே. அதற்குக் கற்பித்தல் முறையைக் கற்றுக் கொள்ள வேண்டும். சிநேகாவுக்கு ஆடல், பாடல், விளையாட்டு, அத்துடன் கற்பித்தல் முறையின் பயிற்சி அத்தனையும் கிடைத்தன. காலை 5 மணிக்கு உடற்பயிற்சிக்கு ஆயத்தமாக வேண்டும். இராணுவ அதிகாரியே பயிற்சி தந்தார். பிலிமத்தலாவ என்னும் மலைப்பிரதேசத்திலேயே பயிற்சி நடந்தது. நடுங்கும் குளிர் அதிகாலை மலையிலே ஓட வேண்டும். ஆசிரியர்களுக்கு முன்னே மலையிலே வளைந்து வளைந்து அதிகாரி ஓட அவரைத் தொடர்ந்து பயிற்சியாளர்களாகிய ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் ஓடுவார்கள். பயிற்சி முடிந்து வந்தவுடன் காலைச் சாப்பாடு முட்டையுடன் கிடைக்கும். இதன் பின் மற்றைய பயிற்சிகளுக்கு ஆயத்தமாவார்கள். அங்கும் குறுகிய காலமானாலும் நல்ல நட்பு வட்டத்தைச் சிநேகா பெற்றாள்.

முதன் முதலாக வாழைச்சேனை மாவட்டத்திலுள்ள கறுவாக்கேணி பாடசாலையில் சிநேகா கற்பித்தல் தொழிலை ஆரம்பித்தாள். அழகான சிறிய கிராமம். பிள்ளைகளுடன் பெற்றோரும் அன்பை

அள்ளி வழங்கினார்கள். அழகான பரந்த தலைவிரித்த ஒரு அரசமரம் பேருந்திற்காகக் காத்திருக்கும் பிரயாணிகளுக்கு நிழல் கொடுத்துக் கொண்டே இருக்கும். வயல்வெளியின் நடுவே ஒரு பாதை. அப்பாதையால் பாடசாலையை நோக்கி நடந்து உள்ளம் செல்லக் கண்கள் மட்டும் பாதை ஓரங்களைத் தடவிக் கொண்டே செல்லும். அவ்வேளை வேகம் கொண்ட தென்றல் வந்து நெற்கதிர்களைத் தொட்டுச் சிநேகாவின் மேனியை வருடும். ஆங்காங்கே குருவிக் கூட்டங்கள் கூடி மகிழ்ந்து எக்காளம் போட்டுச் சிரித்த வண்ணம் பறக்கும். குருவி மொழி கற்றிருந்தால், அவர்கள் குறும்புகளை நானும் புரிந்து கொள்வேன் என்று மனத்துக்குள் இலேசாகப் பேசுவாள் சிநேகா. கட்டாக்காலி நாய்கள் சிநேகாவை நன்றாகவே பழகிப் போயிருந்தன. விரைவாக ஓடிப் போய்த் தூரத்தே நின்று திரும்பிப் பார்க்கும். அதுவரை சிநேகா சென்றால், மீண்டும் ஓடிப் போய்த் தூரத்தே நின்று தன் பார்வையை அனுப்பும். என்ன சிநேகா காதலுக்கு நாய் அப்ளிகேசன் போடுகின்றது போல என்று இணை ஆசிரியை சொல்லிச் சிரிப்பார்.

சிநேகா தன்னை அலங்கரிப்பதில் மிகுந்த நாட்டமுள்ளவள். அவள் கற்பிக்கின்ற பாடசாலைக்குப் போகின்ற போது தான் அணிந்து போகும் சேலைக்கு ஏற்ற நிறத்திலே முத்துமாலையும், அதே நிறத்தில் அக்காலத்து வசந்த மாளிகை என்னும் பெயருடைய கண்ணாடிக் காப்புகளும் அணிந்து செல்வாள். காலையிலே நீராடுகின்ற போது கால் பாதங்களின் பின் பகுதியிலே மஞ்சள் அரைத்துப் பூசிக் கழுவியிருப்பாள். நடக்கின்ற போது உடுத்தி வரும் சேலை உயர்ந்தால், பின்பக்கம் பூசியிருக்கும் மஞ் சள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். கால் விரல்களில் பூசியிருக்கும் நகப்பூச்சு விரல்களை எடுப்பாகக் காட்டும். தன்னுடைய பாதங்களைக் கூட அழகாக வைத்திருப்பதற்குக் கவனம் எடுப்பாள். பொதுவாகவே மகர ராசிக்காரர்கள் தம்மை அழகுபடுத்துவதில் ஆர்வம் மிக்கவர்கள் என்றுதான் ஜோதிடம் கணிக்கின்றது. அது சிநேகாவுக்குப் பொருந்தித்தான் போகிறது.

அக்காலத்தில் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய உணவு பாடசாலையிலேயே தயாரித்துக் கொடுக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தது. பெற்றோர்களும் அதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். இதனால், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் உறவு மேலோங்கிக் காணப்பட்டது.

இப்பாடசாலைக்குப் பேருந்தில் பயணம் செய்கின்ற போதே இயக்க மோதலால் சகோதரப் படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களின் உடல் முள்வேலியில் தொங்க விடப்பட்டு இருப்பதைக் காணுவாள். திருக்குறளும், நன்னெறியும் கற்பிக்கின்ற ஓர் ஆசிரியை இவ்வாறான காட்சிகளைக் காணுகின்ற போது எவ்வாறான மனத்தாக்குதலைப் பெறுவாள் என்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனாலும், அவள் மனத்துக்குள் ஒரு சிந்தனை முளைவிட்டது. நோய்க் கிருமிகள் எம்முடைய உடலுக்குள் நுழைந்து விட்டால், போர்க்கருவி ஏந்திய வெண்குருதிச் சிறுதுணிக்கை நுழைந்த கிருமியை அடித்துத் துவசம் பண்ணி ஆட்சியை ஏற்றுக் கொள்ளுகின்றது. தான் வாழுகின்ற இந்த உடலை யாராலும் அழிக்க முடியாது என்று தன் முழு முயற்சியையும் மேற் கொண்டு வெற்றியடையும். உடலின் முழுக்கவனமும் எதிரியைக் கொல்வதிலேயே இருக்கும். அதுதான் தொற்று நோய் கண்டவர்கள் கண்கள் எப்போதும் உறக்கக் களைப்பிலேயே இருக்கும். மீண்டும் உடல் உறுதி கிடைத்தவுடன் பழைய நிலைக்கு வந்துவிடும்.

இவ்வாறு அழிக்கும் குணம் எம்முடைய உடலோடு இருக்கின்றது. அதனால்தான் என்னவோ பகைவர்களை அழிக்கின்ற குணம் மனிதர்களுக்கும் மற்றைய உயிர்களுக்கும் இருக்கின்றது. ஆனால், இந்த இயக்க மோதல் ஒரே இனத்துக்குள் அல்லவா ஏற்படுகின்றது எனச் சிந்தித்துக் கொண்டே பயணம் மேற்கொள்வாள்.

இப்பாடசாலை அதிபர் சிநோகாவுக்குச் சில பொறுப்புக்களைக் கொடுத்திருந்தார். ஆசிரியர்களின் சம்பள விபரங்கள் தயாரித்தல், ஆசிரியர்களுக்கான வகுப்பு நேர அட்டவணை தயாரித்தல், என்று நிருவாக நடைமுறைகளை ஆர்வத்துடன் வீட்டுக்குக் கொண்டு போயும் செய்தாள். இவ்வாறு சிநேகாவிடம் அதிபர் தன்னுடைய பணிகளை ஒப்படைக்கும் போது,

“உன்ர பிரின்சிபல் என்ன செய்றார். மேலதிகமாக உனக்குச் சம்பளம் போடுகிறாரா?” என்று பரமசிவம் கேட்பார்.

மேலதிக வேலையானாலும் அந்த வேலையை விரும்பியே சிநேகா செய்தாள். அவளுக்கு மேலதிக அனுபவம் இதன் மூலம் கிடைத்தது. அவளுடைய வாழ்க்கை முழுவதும் இவ்வாறுதான் எங்கு போகின்றாளோ அங்கு தன்னுடைய முழு உழைப்பையும் போடுகின்ற தாராள குணத்தை

மாற்ற முடியாது இருக்கிறது. அதனாலேயே சிநேகாவை எல்லோரும் கறிவேப்பிலை போலப் பாவிக்கின்றார்கள்.

சிநேகா இப்பாடசாலையிலிருந்து ஏறாவூர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 1990 ஆம் ஆண்டு மாற்றலாகி வந்தாள். அங்கும் அவ்வாறுதான் தமிழ் கற்பிப்பதுடன் மாத்திரமன்றி விளையாட்டுத் துறை ஆசிரியருடன் இணைந்து விளையாட்டுப் பயிற்சிகளும் மாணவர்களுக்குக் கொடுத்தாள். கற்பித்தல் நேரம் தவிர மேலதிக நேரத்தைப் பாடசாலையில் செலவு செய்தாள். ஆனால், இப்பாடசாலையில் நீண்ட காலம் பணியாற்ற அவளால் முடியவில்லை. 9 மாதங்களே தனக்கு அர்ப்பணிப்பைத் தன்னுடைய அடிப்படைக்கல்வியை வழங்கிய பாடசாலைக்குக் கொடுக்க முடிந்தது.

அங்கிருந்தே இஸ்லாமியர்களின் தாக்குதலால் புலம் பெயர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நீர்கொழும்பு விஜயரெத்தினம் தமிழ் மகாவித்தியாலயத்தில் கற்பித்தல் ஆரம்பமாகின்றது. பலவிதமான அனுபவங்களை அள்ளித்தந்த பாடசாலையிலே கற்பிக்கும் போதே ஒரு புதிய அனுபவமாகச் சிநேகாவுக்கு அமைந்தது ஜெர்மனியில் இருந்து வந்த பிரிட்றிஸ் ஏபெர்ட் ஸ்ரிப்ருங் (British Ebert Stiftung) நடத்திய பயிற்சிப்பட்டறை.

இந்தப் பயிற்சிப்பட்டறை இலங்கையில் அமைந்திருந்த சங்கங்களுக்காக நடத்தப்பட்டது. அகில இலங்கை ரீதியாக ஆசிரியர் சங்கத்தில் இருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து மாலதி என்னும் ஒருவர். மற்றவர் நீர்கொழும்பு மாவட்டத்தில் இருந்து சிநேகா. பத்திரிகையாளர் சங்கம், தோட்டத்தொழிலாளர் சங்கம், தொலைத்தொடர்பு சாதன நிறுவனங்களின் சங்கம், சமூக ஊடக சங்கம், என்று பலவிதமான சங்கங்களுக்கு உஸ்வெற்றக்கையாவ என்னும் சிங்களப் பகுதியில் அமைந்திருந்த பால்ம் வில்லேஜ் ஹொட்டலில் 6 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரை செப்ரெம்பர் மாதம் 1993 ஆம் ஆண்டு பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது. அந்த 6 நாட்களும் 6 வருட அனுபவத்தை இப்பயிற்சிப் பட்டறை சிநேகாவுக்குத் தந்தது. கொண்டாட்டங்களும், ஆளுமையை மேம்படுத்தும் பயிற்சிகளும், நண்பர்களின் குதூகலமும் அவளுடைய மூளையின் விரிவுபட்ட சிந்தனைக்கு வழிவகுத்தன.

யாருடன் தொடர்புகள் மேற்கொள்ளுகின்றோமோ அதற்கேற்ப அறிவும் அனுபவங்களும் எமக்கு அதிகரிக்கும். வீட்டுக்குள்ளே இருந்து சாளரத்தினூடாக உலகத்தைப் பார்ப்பதைவிட உலகத்துக்குள் இறங்கி தொடர்பு கொள்ளுகின்ற போதே ஆய்வு உள்ளம் விரிவுபடும். அதனாலேயே மனிதர்களின் குறைகளை இலகுவாக சிநேகாவால் கண்டறியப்படுகின்றது. அந்த உலகத்தை விட்டு ஓடிச் செல்ல உள்ளம் உந்துகின்றது.

நீர்கொழும்பில் கற்பிக்கின்ற காலத்திலேயே நாவல, நுகேகொட என்னும் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமா 2 வருடக் கற்கை நெறியை முடித்தாள். சிநேகா கற்ற காலத்திலே அப்பல்கலைக்கழகம் புதிதாகக் கட்டப்பட்டிருந்தது. பெரிய காணியிலே அக்கட்டிடம் அமைந்திருந்தது. அதி நவீன கட்டிடம். இதனை முன் வாயில் பகுதியிலிருந்து பல காத தூரத்திலே கட்டியிருந்தார்கள். கொழுத்தும் வெயிலிலே குடையின் தடையுடன் அக்கட்டிடத்தை அடையச் சூரியன் தன்னுடைய கைவரிசையைக் காட்டிவிடுவார். பாலைவனத்துக்குள் நடப்பது போன்று விரிவுரை வகுப்புக்குப் போக வேண்டும். இப்போது அருகாமையிலேயே கட்டிடங்கள் வந்துவிட்டன.

ஒவ்வொரு முறை விரிவுரைக்குச் செல்லும் போதும் கட்டுக்கட்டான புத்தகங்களைக் காவிக் கொண்டு பேருந்துப் பயணத்தில் நீர் கொழும்பிலிருந்து ஆரம்பித்து கொழும்பை வந்தடைவாள். அங்கிருந்து நுகேகொட பேருந்தைப் பிடித்து நாவல பேருந்து தரிப்பு நிலையத்தை அடைவாள். அங்கிருந்து விரிவுரை நடைபெறும் கட்டிடத்துக்குச் சென்று கற்கைநெறி முடித்து மீண்டும் நீர்கொழும்பு வந்தடைய உடல் கசக்கிப் போட்ட காகிதம் போலாகும். மீண்டும் காலையில் பாடசாலை. இவ்வாறு கற்பித்தலுடனேயே கல்வியியல் டிப்ளோமாவையும் முடித்து இரண்டாவது பட்டத்தையும் எடுத்தாள். அதனைத் தொடர்ந்து S.L.A.S (அரசாங்க அதிபர் பதவிபரீட்சை எடுப்பதற்குத் தயாராகும் போதே அவளுடைய வாழ்க்கையில் பெரிய திருப்பம் காணுகின்றது.

நீர்கொழும்பில் இருக்கும் போதே அரவிந்தனைத் திருமணம் செய்கின்றாள். தாயை இழக்கிறாள். ஒரு பெண்ணின் மறுபக்கம் ஆரம்பமாகிறது. அவளுக்கு ஆறுதல் தேவை. திருமணத்தின் பின் தொடர்ச்சியான உயிர் இழப்புக்கள். அம்மா தன்னுடைய வலது கையைப் பறித்துவிட்டாள். ஆச்சி அவளுடைய பாசத்தைப் பறித்து விட்டாள்.

சிநேகா ஓர் அணைப்பை எதிர்பார்த்தாள். அரவிந்தனுடைய தோளில் சாய்ந்து தன்னுடைய சோகத்தைச் சொல்லி அழ மனம் ஏங்கியது. அதனால், தன்னுடைய தொழிலிலிருந்து விடுபடுவதற்கான எந்த நடைமுறைகளையும் மேற்கொள்ள அவள் நினைக்கவில்லை. ஒரு வருடம் சம்பளம் இல்லாத விடுமுறையை எடுத்துவிட்டு ஓய்வூதியம் பெற்றுச் செல்லலாமே என்று பலர் கூறிய அறிவுரைகள் அவளுடைய காதுகளில் நுழையவில்லை. ஆனால், இன்று அதை எண்ணிக் கலங்குகின்றாள். ஏன் இந்த முறைமைகளை முடிக்காமல் ஜெர்மனிக்குப் பயணமானாள். அவளுக்கே தெரியாத விடயத்துக்கு விளக்கம் அவளால் எப்படிச் சொல்ல முடியும்?

கற்றது அனைத்தும் விழலுக்கிறைத்த நீர் போல ஆகிவிட்டது. எத்தனை கடினங்களை அனுபவித்துப் பெற்ற பட்டங்கள் வானில் பறக்கும் பட்டங்கள் போலாயிற்று. ஜெர்மனியில் இவற்றை வைத்து என்ன பண்ண முடியும். காலங்களும் பிரயத்தனங்களும் போகின்ற வழியிலே கடந்துதான் போகின்றன. அழிந்துதான் போகின்றன. உயிர் இருக்கின்றது தானே மூளை இயங்குகின்றதுதானே என்று வாழ்க்கை தொடர்ந்து செல்ல வழிகாட்டுகிறது. தொடருகின்ற வாழ்க்கையிலே ஆகாயத்தினூடாக உலகத்தின் அடுத்த பகுதிக்கு வாழ்க்கை அவளை அழைத்துச் சென்றது.

# அத்தியாயம் 9

# ஜெர்மனிய வாழ்க்கை

நீர்கொழும்பு வாழ்க்கை முடிவுக்கு வரத் திருமணம் என்னும் பந்தத்தாலே ஜெர்மனியை வந்தடைகின்றாள். அவளுடைய பயணம் தொடருந்து போல அனுபவங்களை மட்டுமே தாங்கி உறவுகளைப் பிரிந்து பயணமாகின்றது. ஜெர்மனியிலே கால் வைக்கும் போது பனிமழை கொட்டிப் பாதையெங்கும் பனி குவிந்து போய்க் கிடக்கின்றது. மார்கழி 24 ஆம் திகதி. பாலன் வருகைக்காக மக்கள் தம்மை தயார்ப்படுத்திக் கொண்டிருந்த நேரம். வைச வைனாக்ரன் என்று சொல்வார்கள். வெள்ளை கிறிஸ்மஸ். சிநேகாவுக்கு இது புதிய அனுபவம். அரவிந்தன் தன்னுடைய ஜெர்மனிய நண்பர்களின் வாகனத்தில் டுசில்டோப் விமான நிலையத்துக்கு வந்திருந்தான். சில்லிடும் குளிருக்கான ஆடையை அவளிடம் தந்து பூச்செண்டுடன் அவளை வரவேற்றான். பனிக்குவியல்களை இரசித்த வண்ணம் பயணம் வூப்பர்ரால் நகரம் வரை தொடர்ந்தது. பாதை தோறும் ஊசியிலை மரங்களும், இலைகளை உதிர்த்துவிட்ட மரங்களும் அம்மணமாக வழியெல்லாம் தோற்றமளித்தன. இவை ஆடை அணிந்தால் கோடை எவ்வாறு காட்சியளிக்கும் என்று நினைத்தவண்ணம் வூப்பர்ற்றால் நகரத்தை அடைந்தாள்.

வூப்பற்றால் என்றால், அங்கு பூமிக்கும் வானத்துக்கும் இடையே பயணம் செய்கின்ற உலகப் புகழ் பெற்ற தொடருந்துதான் முன் வந்து நிற்கும். எம்மவர்கள் தொங்குமான் என்று பெயர் வைத்துள்ளார்கள். தொடருந்து தண்டவாளத்தின் மேல் ஓடும் என்பதுதான் யாவரும் அறிந்தது. ஆனால், இந்தத் தொடருந்து தண்டவாளத்தின் கீழ் தண்டவாளத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஓடும்.

அதுதான் பட்டப்பெயர் வைப்பதில் பேர் எடுத்த நம் தமிழர்கள் அதற்குத் தொங்கு மான் என்பார்கள். அதைவிட எம்மவர் துருக்கி இனத்தவரைத் துன்னாலை என்று அழைப்பார்கள்.



சிநேகாவுக்காக எடித்தும் அவளுடைய நண்பனும் பார்த்துப் பார்த்துத் தயார் பண்ணிய வீட்டில் காலடி வைக்கின்றாள். அவளுடைய கற்பனை முதலில் தவிடு பொடியாகிறது.

தொடர்மாடிக் கட்டிடத்தில் வாழ்ந்த அனுபவம் அவளுக்குச் சிறிதும் இருக்கவில்லை. தனி வீடுகளிலேயே வாழ்ந்த அனுபவம் அவளுக்கு இருந்தது. வீட்டுச் சுவர்களில் அழகான வோல் பேப்பர் ஒட்டப்பட்டிருந்தது. நிலத்துக்கு காப்பெற் போடப்பட்டிருந்தது. மேல் வீட்டிலும், கீழ் வீட்டிலும் யாரோ ஜெர்மனியர்கள் குடியிருந்தார்கள். வீட்டுக்குள்ளே வெப்பமூட்டி போடப்பட்டிருந்தாலும் ஒரு அணைப்புத் தேவைப்பட்டது. குளியலறைக்குள் வெப்பநீரும், குளிர் நீரும் கலந்து வருகின்ற குழாய் பொருத்தப்பட்டிருந்தது. இவையெல்லாம் சிநேகாவுக்குப் புது அனுபவமாக இருந்தாலும் காலப் போக்கில் அவளுக்குப் பழகிப் போனது. ஆனால், ஆள் பற்றாக்குறையே அவளுக்குப் பெரிய மனவழுத்தத்தைக் கொடுத்தது.

8 பேர் ஒன்றாக வாழ்ந்த குடும்பத்தில் இருந்து வந்தவளுக்கு 35,40 ஆசிரியர்களும் ஆயிரக்கணக்கான மாணவர்களும் இருக்கும் பாடசாலையில் கற்பித்தவளுக்குச் சத்தமில்லாத அமைதியான வாழ்க்கை சலிப்பைத் தந்தது. மேல் வீட்டில் கீழ் வீட்டில் இருப்போருக்கு இடைஞ்சல் கொடுக்கும் சத்தம் கொடுக்கக் கூடாது. வாரநாட்களில் இரவு 10 மணியிலிருந்து 7 மணிவரையும் மதியம் 13.00 மணியிலிருந்து 15.00 மணி வரையிலும் வீடுகளில் சத்தம் கேட்கக் கூடாது. சத்தம் வந்தால் பக்கத்து வீட்டுக்காரர் காவல் துறைக்கு அறிவித்துவிடுவார்கள். இதனாலேயே இங்கு வளருகின்ற பிள்ளைகளுக்குச் சத்தமாகப் பேசுவது பிடிக்காது.

வீட்டுச் சாளரங்களுக்குத் தடுப்பு இரும்புப் பாதுகாப்புக்கள் இல்லை. வெறும் கண்ணாடியே. அதை உடைத்துக் கொண்டு உள்நுழைய வாய்ப்புக்கள் அதிகம். கதவைத் துறப்புப் போட்டுப் பூட்டாமலேயே வெளியே செல்லலாம். அதிகமான வீடுகளுக்கு வேலிகளே இருக்கவில்லை. இவையெல்லாம் எதற்குப் பாதுகாப்புக்குத்தானே. இங்குதான் களவுகள் சிநேகா ஜெர்மனிக்குள் நுழைந்த காலத்தில் இருந்ததில்லையே.

இவ்வாறாகத் தனிமையான சூழ்நிலையில் எப்படியும் இலங்கைக்குத் திரும்பிவிட வேண்டும். மீண்டும் ஆசிரியத் தொழிலில் சேர வேண்டும். விட்ட SLAS பரீட்சைக்கான கல்வியைத் தொடரவேண்டும் என்னும் எண்ணம் தலைக்குள் அரித்துக் கொண்டே இருந்தது.

ஆனாலும் ஒரு நாட்டில் வாழ்வதென்றால், அந்த நாட்டு மொழியைக் கற்க வேண்டிய அவசியம் இருக்கின்றது அல்லவா? ஜெர்மனி பல்கலைக்கழகத்தில் சிநேகாவை விட்டுப் படிப்பிப்பதற்காக அரவிந்தன் முயற்சி மேற்கொண்டான். ஆனால், அது பலிக்கவில்லை. அவனுடைய வருமானத்தில் சிநேகாவைப் பல்கலைக்கழகத்துக்கு ஆயிரக்கணக்கான அப்போதுள்ள பணமாகிய மார்க்கில் செலவு செய்து படிப்பிக்க முடியவில்லை. அதனால், Volkhochschule என்று சொல்லப்படும் கல்வி நிலையத்தில் மொழி கற்பிப்பதற்காக அனுப்பினான்.

மொழியின் பரீட்சயம் சிநேகாவுக்கு ஏற்பட வேற்று மொழி நண்பர்களின் தொடர்புகள் கிடைத்தன. ரஸ்யா, துருக்கி, மொறொக்கோ, போலந்து, இத்தாலி, கிறீஸ்லாந்து, றொமேனியன், போத்துக்கல், என்று பலதரப்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக வாழுகின்ற ஜெர்மனியைக் கற்றாள். அனைவரும் தம்முடைய தாய் நாட்டில் வாழுவதைப் போல சுதந்திரமாக வாழுகின்ற தன்மையை விரும்பினாள். ஹிட்லர் என்னும் ஒரு மனிதனால் அழிந்து மீண்டும் அனைத்து மக்களையும் வேற்றுமையின்றி நோக்குகின்ற ஒரு நாட்டை நேசிக்கத் தொடங்கினாள்.

ஜெர்மனி வீடுகளின் அழகு, அலங்காிப்பு, சுத்தம் அவளை மேலும் கவர்ந்தது. ஜெர்மனியில் 3 மாதங்களே சூரியனின் முழுப்பலனையும் அனுபவிக்கின்ற காலம் கோடை காலம். இது குறுகிய காலம் என்றாலும் தம்முடைய வீட்டுத் தோட்டங்களில் வகைவகையான பூஞ்செடிகளையும், மரங்களையும் நட்டு அழகு பார்க்கும் ஜெர்மனியரின் சுறுசுறுப்பு அவளுக்குப் பிடித்திருந்தது.

காலப்போக்கில் மகளையும் பெற்றாள். தமிழுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு முற்றாக அறுக்கப்பட்டது. ஜெர்மனிய நண்பர்கள், வாழ்க்கை முறை எனத் தொடர்ந்தது. அரவிந்தன் தான் தொழில் புரிந்த தொழிற்சாலையில் இரசாயனப் பகுதியில் முக்கிய பதவியில் இருந்தான். ஜெர்மனியில் அதற்கான கற்கை நெறியை முடித்து அப்பதவியில் அமர்த்தப்பட்டிருந்தான்.

ஆனால், சிநேகாவுக்கு அரவிந்தன் செய்கின்ற இந்தப் பதவியில் சிறிதும் நாட்டமில்லை. ஏனென்றால், அரவிந்தன் சுவாசிக்கும் போது இரசாயன மணம் கலந்து வருவது அவனுடைய உடலுக்கும் குழந்தைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பயந்தாள். இந்தக் காரணத்தால், இந்தத் தொழிலிலிருந்து அரவிந்தன் விடுதலையானான். அதன் பின் சரியான தொழில் கிடைக்காத காரணத்தால், தனக்குப் பிடித்த உணவகத்தில் சமையல் செய்யும் வேலையில் அமர்ந்தான்.

இதுவே அரவிந்தனைச் சொந்தமாக உணவகம் ஆரம்பிக்கும் ஆசையை வளர்த்தது. ஜெர்மனிய நண்பர்களான எடித்தும் டீட்டரும் பக்கத்துணையாக இருந்தார்கள். டீட்டர் பண உதவி செய்தார். எடித் உணவக அலங்காரம், வாடிக்கையாளர் கவனிப்பு என்று அனைத்தையும் பொறுப்பெடுத்தாள். முற்றுமுழுதாக உணவகத்திலேயே பணி புரிந்தாள்.



உணவகத்திலே பணி புரிகின்ற நேரத்திலே சுருதியும் உணவகத்தினுள் வந்து விளையாடிக் கொண்டு நிற்பாள். வாடிக்கையாளர் முதலில் பழகுவது சுருதியுடனேயே. வாடிக்கையாளர்களைக் கவனிக்கும் பொறுப்பு அவளிடமும் மேலும் 3 வேலையாட்களிடமும் இருந்தது. சமையல் பொறுப்பு அரவிந்தனிடமும் இன்னும் இரண்டு பையன்களிடமும் இருந்தது.

திருமணம் ஒரு பெண்ணின் வாழ்க்கையை எப்படித் திசை திருப்பிப் போடுகின்றது என்பதற்கு சிநேகாவின் வாழ்க்கை ஒரு உதாரணம். மனிதனுடைய

வாழ்க்கையிலே ஏற்றங்களும் இறக்கங்களும் இருக்கும். அதை மனதிலே போட்டுக் குழப்பிக் கொள்ளாதவரை வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். அதைத்தான் சிநேகாவும் செய்தாள்.

"சுடு சோற்றுக்குள் சிநேகா கை வைப்பவளாச்சே. அவளுக்கு என்ன கஷ்டம் தெரியப்போகிறது" என்று பாடசாலை ஆசிரியர்கள் அவளை வேடிக்கையாகப் பேசிய காலமும் இருந்தது. வீட்டிலே செல்லப்பிள்ளையாக சமயலறைப் பக்கமே போகாத சிநேகா. ரெஸ்டோரன்ட் மாப்பிள்ளை என்றால், தங்கச்சிக்கு வேண்டாம் என்ற அண்ணன்மார்கள். புத்தகக் கட்டுகளைத் தவிர வேறு எந்தப் பாரத்தையும் தூக்கி அறியாத சிநேகா அன்று வாடிக்கையாளர்களின் சாப்பாட்டுக் கோப்பைகளைக் காவினாள். உணவகத்தின் முதலாளி என்ற பெயருடன் தூக்கினாள். அதுதான் வேறுபாடு.

காலை எழுந்தவுடன் சுருதியைப் பாடசாலை அனுப்பிவிட்டு உணவகத்தினுள் நுழைவாள். நிலம் துப்பரவு செய்யும் பணிப்பெண் தன்னுடைய வேலையை முடித்துவிட்டுப் பணத்தைப் பெற்றுச் சென்றுவிட மேசை விரிப்புக்களை விரித்து மேசைகளை அழகுபடுத்தும் வேலைகளைச் செய்வாள். மேசை விரிப்புக்கள் கழுவி இஸ்திரி போட ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்தார்கள்.

அதன்பின் வீட்டிற்குள் நுழைந்து வீட்டு வேலைகளை முடிக்க நேரமாகி விடும். உணவகம் 6 மணிக்குத் திறப்பதற்கு அரவிந்தன் தயாராகிவிடுவான். அதுவரை அரவிந்தன் வேறு வேலைகளில் கவனமாக இருப்பான். நிலம் துடைக்கும் பெண் விடுமுறை எடுத்துவிட்டால், அந்த வேலையை அரவிந்தன் அல்லது சிநேகாவே செய்ய வேண்டும். சிநேகாவிடம் உள்ள ஒரு கெட்ட பழக்கம் சுத்தம் பார்த்தல். அரவிந்தன் திருமணத்துக்காகச் சிநேகாவைப் பார்ப்பதற்கு வருவதற்கு முன் கீரன் அரவிந்தனிடம் ஏற்கனவே சிநேகாவிடம் இருந்த சுத்தப் பழக்கத்தைச் சொல்லியிருந்தான்.

"தங்கச்சி சரியான துப்பரவு பார்ப்பாள். அது வித்தியாசமான துப்பரவு" என்றான்.

"பரவாயில்லை. நானும் அப்படித்தான். வாரம் ஒரு தடவை வீடு முழுவதும் கிளீன் பண்ணுவேன்" என்றான். அது இருவருக்கும் ஒற்றுமையானது. ஆனால், உணவகம் துப்பரவு செய்வது என்பது

நினைத்துக் கூட சிநேகா பார்க்காத வேலை. ஆனால், செய்தாள். வாழ்க்கை இன்னும் எதையெல்லாம் ஒளித்து வைத்திருக்கின்றதோ என்பதைப் புரியாமலே தொடர்ந்தாள்.

ஜெர்மனியில் காலடி எடுத்து வைக்கும் போது அடுத்தடுத்துத் தன்னைத் தாங்கி வளர்த்த 2 அன்புள்ளங்களை இழந்து, தன்னுடைய மனத்துக்குப் பிடித்த தொழிலைத் துறந்து, உற்றார், உறவினர்கள், நண்பர்களைத் துறந்து வந்த சிநேகா சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்ப்பது போல ஜெர்மனியில் கால் வைத்தாள்.

சிநேகா முன் பின் அறியாத குடும்பத்தில் பிறந்த ஒருவனே அரவிந்தன். கிழக்கின் பழக்கவழக்கங்கள் வேறு, வடக்கின் பழக்கவழக்கங்கள் வேறு. பேசும் மொழி ஒன்றாக இருந்தாலும் இனம் ஒன்றாக இருந்தாலும் பிரதேச வழக்கத்தால் வேறுபட்டவர்கள்.

ஒவ்வொரு குடும்பத்தினரும் வேறு வேறு பழக்கவழக்கங்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள். ஆனாலும், இந்த உலகம் இருவரையும் இணைத்து வைக்கின்றது. பார்க்கும் போது ஏன் இப்படிச் செய்கின்றார்கள் என்று இளையவர்கள் சிந்திக்கலாம். ஆனால், அங்குதான் ஒரு புதிய மரபணு உருவாக முடியும். ஒரு ஆணுக்கோ பெண்ணுக்கோ வேறுபட்ட உணர்வுகளைப் பொறுத்துப் போகும் பக்குவம் உருவாகும். இது ஒரு சமூகப் பரிசோதனையாகக் கூட இருக்கலாம்.

இதில் வெற்றி காண்பவர்கள் நீடித்து வாழுகின்றார்கள். மற்றவர்கள் பொறுத்துக் கொண்டு காலம் முழுவதும் உள்ளே அழுது வெளியே சிரித்து வாழாமலே வாழுகின்றார்கள். ஒன்றாக வாழுகின்றோம். ஒன்றாகவா வாழுகின்றோம் என்று வாழுகின்றார்கள்.

சிநேகா விடயத்தில் அரவிந்தனிடம் இருந்த தாய்மை உணர்வானது சிநேகாவையும் அரவிந்தனையும் ஒன்றாகப் பிணைத்துப் போட்டது. தாயகத்தைப் பிரிந்த போது இழந்த அனைத்தையும் அடையாளம் தெரியாமலே சிநேகா வாழக் கற்றுக் கொடுத்தான்.

உணவகத்தில் மக்கள் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால், உணவகத்தைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டது.

அதன் பின் நாட்கள் நகர்விலே சுருதி 9 வயதாகிய காலகட்டத்திலேயே தமிழோடு உறவாட சிநேகாவுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. சிநேகாவின்

உறவு முறையான இலட்சுமி என்னும் பெண்ணின் மூலமாக மண் என்னும் சஞ்சிகையில் எழுதும் வாய்ப்புக் கிட்டியது. அந்தச் சஞ்சிகையின் ஆசிரியர் இலங்கையில் வாழுகின்ற அனாதரவான மக்களுக்கான காப்பகங்களுக்கு ஜெர்மனியிலிருந்து பணம் சேகரித்து அனுப்பிக் கொண்டிருந்தார். அந்த விபரங்களை இந்தச் சஞ்சிகையில் வெளியிட்டு வருவார். அத்துடன் எழுத்தாளர்களின் படைப்புக்களையும் இச்சஞ்சிகையில் வெளியிட்டுக் கொண்டிருந்தார். அதிலேயே ஜெர்மனியில் தன்னுடைய முதல் இலக்கியப் படைப்பை சிநேகா படைக்கத் தொடங்கினாள்.

இலட்சுமியின் தூண்டுதலால் கவிதை, இலக்கியம், பாடல் என்று தன்னுடைய படைப்புக்களைத் தொடராக வானொலியில் எழுதத் தொடங்கினாள். அவ்வானொலி நிறுவனர் தான் நடத்திக் கொண்டிருந்த சிறுவர் நிகழ்ச்சியைச் சிநேகாவிடம் ஒப்படைத்தார். திங்கள் தொடங்கி வியாழன் வரை இந்நிகழ்ச்சி நடக்கும். முதலில் சிறுவர்களுக்கான தலைப்பைச் சிநேகா வழங்குவாள். அதற்குரிய கட்டுரையை எழுதி சிறுவர்கள் குரல் வழி அனுப்புவார்கள். எழுத்திலும் அனுப்புவார்கள். இவற்றைச் சேகரித்து ஒவ்வொரு படைப்பையும் விமர்சனக் கண்ணோட்டத்தில் பார்த்து அவர்களைத் தட்டிக் கொடுக்கும் பணியைச் செய்தாள்.

உதாரணமாக வீட்டின் அங்கங்களை மனித வாழ்க்கையுடன் ஒப்பிட்டு நோக்குக என்ற தலைப்பைக் கொடுத்து சிறு குறிப்புக்களும் கொடுத்து விடுவாள். அதனை வைத்துச் சிந்தித்த சிறுவர்கள் அது பற்றிக் கட்டுரைகள் எழுதுவர். 3 வருடங்கள் தொடராக இப்பணி கிழமையில் 4 நாட்கள் தொடர்ந்தது. ஆனால், மற்றைய நாட்கள் ஆக்கங்களைச் சேகரிப்பது. அதற்குரிய விமர்சனங்களைச் சொல்வது. பின் ஒரு கோப்புக்குள் அவற்றைக் கொண்டு வந்து ஒலிவடிவாக மாற்றுவது. பின் வானொலி நிலையத்துக்கு அனுப்புவது என்று முழுநேரப் பணியாகத் தொடர்ந்தது.

சிநேகா வானொலி வேலையை முழுநேர அர்ப்பணிப்பாகவே செய்தாள். இத்துடன் தன்னுடைய படைப்புக்களையும் எழுத வேண்டிய சூழ்நிலையில் இருந்தாள்.

எதிர்காலத் தமிழ்ச் சிறார்களின் தமிழ் வளர்ச்சியுடன் சிந்தனைத் திறனை மேம்படுத்துவதே அவளுடைய நோக்கமாக இருந்தது.

அதனாலேயே அவ்வாறான தலைப்புக்களைச் சிறுவர்களுக்கு அவள் வழங்கினாள். ஆனால், சம்பளமில்லாத உத்தியோகத்தை எவ்வளவு காலம்தான் செய்ய முடியும். அதனால், காலப்போக்கில் சிநேகா முழுநேரப் பணியை ஒரு நிறுவனத்திலே மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவளுடைய வாழ்க்கைக்கும் ஜெர்மனிய உறவுகளுடன் தொடர்பை வைப்பதற்கும் உழைப்பு அவசியமாகப்பட்டது.

ஆரம்பத்தில் இரண்டு பணிகளையும் முயற்சியுடன் செய்தாள். ஆனால், ஒரு குடும்பச் சூழ்நிலையில் வாழுகின்ற ஒரு பெண்ணுக்கு இது எந்த அளவிற்குச் சாத்தியம் என்பதை ஆரம்பத்தில் அவள் சிந்திக்கவில்லை. இது பெரிய மனவழுத்தத்தைக் கொண்டு வந்தது. இதனால், வானொலியிலிருந்து ஒதுங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

வானொலியில் பணி புரிந்த போது பிள்ளைகள் அன்ரி, அன்ரி என்று தொலைப்பேசியில் அழைப்பதும், வாழ்த்துவதும் தம்முடைய கதைகளைப் பரிமாறுவதும், அவர்களுடைய பெற்றோர்கள் அழைப்பதும் தம்முடைய எண்ணங்களைப் பரிமாறுவதுமாக ஓய்வின்றி சிநேகாவினுடைய நேரத்தைக் கொள்ளையடித்தார்கள். வானொலி யிலிருந்து நீங்கியவுடன் யாருமே அவளை அழைப்பதில்லை. வானொலி உரிமையாளர் கூட அழைப்பதில்லை. எப்படி இருக்கின்றீர்கள் என்று கூட சுகம் விசாரித்ததில்லை.

அப்போதுதான் ஒன்று வெளிச்சமாகியது. ஒரு மனிதன் இன்னுமொரு மனிதனைத் தேடுவது தன்னுடைய தேவையை நிறைவேற்றுவதற்காக மட்டுமே. அவனால் எந்தத் தேவையும் இல்லையென்றால், அவனைப் பற்றிய எண்ணம் யாருக்கும் வரப் போவது இல்லை. கண்விழித்த இரவுகளும், தன்னுடைய குடும்பத்திற்காக ஒதுக்காத பொழுதுகளும், அர்ப்பணிப்புக்களும், அவளுக்குத் தண்டனையாகின. அவளுடைய அர்ப்பணிப்புகள் விழலுக்கு இறைத்த நீர் போலானது. ஆனாலும், இருந்த காலத்தில் கொடுத்த சிந்தனைத் தூண்டல்கள் அப்பிள்ளைகளின் வாழ்க்கைக்கு ஒளியேற்றியிருந்தால், அதுவே பெரும் மகிழ்ச்சியாகும் என்று நினைவு தெளிந்தாள்.

இதன் பின் ஜெர்மனி எழுத்தாளர் சங்கம், கல்விச்சேவை என்று அனைத்திலும் இணைந்து கொடுத்த அர்ப்பணிப்புக்கள் தன்னுடைய ஆரம்ப ஆசிரியத் தொழில் போலவே அமைந்தன. கொடுக்கப்பட்டன.

எடுக்கப்பட்டன. எதில் இணைந்தாலும் தன்னுடைய முழுப்பங்களிப்பையும் ஆற்றும் மரபணுவே அவளிடம் இருந்தது. இது பரமசிவம் நன்றாகவே அவளிடம் அள்ளி வழங்கியிருக்கின்றார். மெழுகுதிரியாய் வாழ்வு அமைந்தது. ஓயாத அலைச்சல், போதும் அடங்கு என்று கொரொனா என்ற வல்லரக்கன் ஆட்சியிலே சிநேகா அடங்கிப் போனாள்.

இது அவளை அவள் மீட்டிப் பார்க்கும் காலமாகியது. ஏன் எதற்காக இந்த வாழ்க்கை, குளிரென்றும் பனியென்றும் பாராது ஓடியோடி நீ எதைச் சம்பாதித்தாய்? எதையோ எதிர்பார்த்துத்தான் உன்னோடு எல்லோரும் பயணம் செய்கின்றார்கள். இந்த எதிர்பார்ப்புக்களில் உள்ளவர்களில் எத்தனை பேர் உண்மையான அன்பை உனக்குத் தருகின்றார்கள்.

சேர்ந்திருக்கும் போது புகழ்ந்து தள்ளி மறுபுறம் பொறாமையால் உந்தித் தள்ளப்படுகின்றார்கள் என்பது பற்றி நீ உணரவில்லையா? நல்லவர்கள் போல நடித்து மறுபுறம் தப்பாக உன்னை விளம்பரப்படுத்துகின்றார்கள். இவ்வாறான மக்கள் வாழுகின்ற அமைப்புகளில் நீ ஒன்றாகப் பயணிக்க வேண்டுமா?

ஓரிருவர் நல்லவர்களாக இருந்தாலும் சேர்க்கைகளைத் தவிர்க்க வேண்டுமென்றால், எல்லாவற்றையும் தவிர்க்க வேண்டும்.

இலக்கிய உலகம் என்பது ஒரு மாயை. அது ஒரு கடல். அங்கே முதலைகளும், பாம்புகளும் இருக்கின்றன என்று யாரோ ஓர் எழுத்தாளர் எழுதியது ஞாபகத்துக்கு வருகின்றது. அதைப் புலம்பெயர்வில் நன்றாகவே புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அடையாளப்படுத்தப்படுபவர்கள் எல்லோரும் தம்மைப் பற்றி மட்டுமே சிந்திக்கின்றார்கள். மற்றவர்கள் அதாவது எதிரே நிற்பவர்களுடைய பக்கத்தில் நின்று யாருமே சிந்திப்பது இல்லை. அதனாலேயே அடுத்தவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாகிப் போகின்றார்கள்.

மிக்கேல் நைமி தன்னுடைய நூலிலே சொல்கிறார். ஒரு வீடு மின்னலைத் தன் பக்கம் இழுக்காமல் இடி அதன்மேல் விழுவதில்லை. இடி விழுவதற்கும் தனது அழிவுக்கும் வீடும் காரணமாகின்றது.

ஒரு மனிதன் பாதிக்கப்படுகின்றான் என்றால், பாதிக்க வைப்பவர்களைத் தன் பக்கம் ஈர்த்த குற்றம் அந்த மனிதனுக்கும் உள்ளது. எனவே மௌனமாகத் தெளிந்தாள்.

இயற்கை ஒரு தொடர்பை அவளிடம் அழைத்துக் கொண்டு வந்து விட்டது. இந்தியாவிலிருந்து ஒரு முனைவர் தன்னுடைய கல்லூரிக்கு உரையாற்றும்படிக் கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுதலுக்குச் சம்மதித்து சிநேகா, தான் மட்டுமல்லாது, தனக்குத் தெரிந்தவர்களையும் உரையாற்றுவதற்காக உதவி செய்தாள்.

அதன் மூலமாக அந்த முனைவரின் உந்துதலினால், தமிழ் வான் அவை என்னும் அமைப்பை நிறுவினாள். ஆனால், 2 நிகழ்வுகளுடன் அவருடைய பங்களிப்பு நின்று போனது. தன்னுடைய தாயின் சுகவீனம், இறப்பு, தந்தை நோய் என்று ஒவ்வொரு பிரச்சினை அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்டதால் அவரால் இணைந்து செயல்பட முடியவில்லை.

இதனால் முழுப் பொறுப்பையும் சிநேகாவே எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன் மூலமாகத் தன்னுடைய இலக்கியப் பசியைப் புலம்பெயர்வில் போக்கிக் கொள்ளமுடிந்தது. பழந்தமிழ் இலக்கியம் எதற்காகப் பேசப்படுகிறது. இப்போது இந்த இலக்கியங்கள் எதற்கு என்று பேசுபவர்கள் அதிகம். ஆனாலும் பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ள சுவையை இன்னும்தான் புதிய இலக்கியங்களில் தேடுகிறாள். அவளால் இன்னும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அதற்காகப் புதிதாகத் தோன்றும் இலக்கியங்கள் சுவையற்றவை என்று சொல்லிவிட முடியாது. காலத்தின் போக்கிற்கேற்ப நாம் மாறத்தான் வேண்டும். ஆனால்,

தோள் கண்டார், தோளே கண்டார், தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார், தடக்கை கண்டாரும் அஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?
ஊழ் கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்.

இந்தக் கம்பரின் கவிநயம் அவள் காவிய மனத்திலே ஆழமாகப் பதிந்து போனதே. அதனால் அவள் விரும்பினாள். விரும்புபவர்களை அணைத்தாள். வருடச் சந்தாவிலேயே குவியத்துக்குப் பணம் செலுத்தினாள்.

முற்றுமுழுதாகத் தன்னுடைய உழைப்பைத் தமிழ் வான் அவைக்குக் கொடுத்தாள். தனக்கான ஒரு சொந்த அமைப்பாக அதை நடத்தி ஆத்ம திருப்தியடைந்தாள்.

வருடா வருடம் மூன்று பெண் ஆளுமைகளைத் தெரிவு செய்து அவர்களை விடத் திறமையான ஓர் ஆளுமையை அழைத்து அவர் மூலமாகச் சாதனைப்பெண் விருது வழங்கிக் கௌரவிக்கின்றாள்.

மாதந்தோறும் ஓர் இலக்கிய கர்த்தாவை அழைத்து இலக்கியச் சொற்பொழிவை ஆற்றச் செய்கின்றாள். நாட்டார் இலக்கிய நிகழ்வுகளை நடத்துகின்றாள். நிகழ்ச்சிகள் ஊடாக நடன, இசை, நாட்டுக்கூத்து பயிலுகின்ற மாணவர்களை அழைத்து அவர்கள் திறமைகளைப் பார்வை யிடச் செய்து அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குகின்றாள். இவ்வாறு தமிழ் வான் அவையை உச்சத்துக்குக் கொண்டு செல்லும் முயற்சிகளைத் தவமாகப் பண்ணுகின்றாள்.

தமிழ் வான் அவை ஊடாகத் தனக்கு ஏற்படும் மகிழ்ச்சியையும், அன்பையும், கவலையையும் பரிமாறிக் கொள்வதற்கு நல்ல அன்பு உள்ளமாக அவளுக்குக் கிடைத்தவரே டென்மார்க் நிலா அக்கா. உடன்பிறவாச் சகோதரியாக ஆறுதல் வார்த்தைகளை அவர் வழங்கும் போது தன்னுடைய மலையளவு பிரச்சினையும் கடுகளவாகப் போவதை சிநேகா உணர்ந்தாள்.

உலகமெங்கும் பரந்து வாழும் சொந்தங்கள் குழலி, மகாகவி பாரதியாரின் சொந்தங்கள் உமா போன்ற அன்புத் தோழமைகள், கேட்டவுடன் உதவுகின்ற ஜீவலிங்கம் போன்ற தம்பிகள், அண்ணன்மார், ஐயாமார், அக்காமார் என ஆறுதல் அளிக்கும் பல அன்பு உறவுகள் அவளைத் தாங்குகின்றார்கள். வீட்டிற்குள்ளே இருந்தாலும் விரிகின்றது மனம். அணைக்கின்றது உலகம். மேலோங்குகிறது ஆர்வமும் அறிவும். தேடித் தேடி அறிவுப் பொக்கிஷங்களை மூளைக்குள் சேர்க்கின்றாள். மூளை வழிவிட்டு விரிகிறது.

நாங்கள் மேடை நிகழ்ச்சியில்தான் பங்கு கொள்வோம். குவியத்தில் எல்லாம் இணைய மாட்டோம், அதில் என்ன சுவை இருக்கிறது என்று சிலர் சொல்வார்கள். ஆனாலும் அவர்கள் நடத்துகின்ற மேடை நிகழ்ச்சிக்குச் சிநேகா போகவேண்டும். வீட்டுக்குள்ளே படுத்திருந்தோ, பிரயாணம் செய்து கொண்டோ தொலைப்பேசியினூடாக முகத்தைக் காட்டாமலும் பார்க்கக் கூடிய குவியத்தில் கலந்து கொள்ள அவர்கள் மனம் இடம்கொடுப்பதில்லை. சாதாரணமாக சிநேகாவுக்கு ஒரு ஆதரவு தருவதற்குக் கூட விரும்பாத நண்பர்களும் அவளுடனே பயணம் செய்கின்றார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருப்பங்கள், இரசனைகள், கொள்கைகள். இதில் யாரையும் யாரும் கட்டாயப்படுத்த முடியாது.

காலமெனும் காற்றுப் புரட்டிப் போட்டாலும்
வாழ்க்கையெனும் சூழல் வதைத்து நின்றாலும்
தமிழென்னும் கைத்தடி கொண்டு
தளராத மனம் கொண்டு
தமிழால் என்றும் நிமிர்ந்து நிற்பேன் என்று

எழுத்தை ஆயுதமாக்கினாள், சொற்களால் மனங்களுக்குப் பாலம் கட்டினாள், எழுத்தென்னும் ஏணியேறி உயர்ந்த சிந்தனையுள்ள மனிதர்களின் உள்ளங்களைப் பேச்சென்னும் நூல் இழையால் கட்டிப் போட்டாள்.

இத்தனைக்கும் அரவிந்தன் அவளுக்குப் பக்கபலமானான். அவள் எழுதும் போது தேநீர் கொடுப்பான். புதிய சிந்தனைக்கு ஆலோசனையை அள்ளித் தருவான். அவள் காணும் மேடைகளுக்கு அவனே பார்த்தசாரதி. அன்பும் பாசமும் வார்த்தைகள் அற்றது. அது உணர்வு ரீதியாகவே உணரப்படக் கூடியது. அந்த உணர்வே அரவிந்தனுக்கும் சிநேகாவுக்கும் இடையில் மந்திரமாகவும் தந்திரமாகவும் இருக்கின்றது.

# அத்தியாயம் 10

# யாவரும் கதை சுமப்போரே

சிநேகா வலியால் வருந்தினாலும் தன் உலக வாழ்க்கைக்கு ஆதாரமான தந்தையைத் தேடித் தானே மனம் போகின்றது. அவரிடம் போக வேண்டும். அவரிடம் நான்கு வார்த்தைகள் பேசினாலேயே அவரின் மனமும் சிநேகா மனமும் நிம்மதி காணும். சிநேகா தந்தையின் அருகே சென்றாள். நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார் பரமசிவம். உடலுக்குள்ளே புற்றுநோய் தன்னுடைய வளர்ச்சியை அபரிமிதமாக்கிக் கொண்டிருந்தது. கைகளால் தந்தையின் தலையை ஒரு தடவை கோதினாள். உடனே காத்திருந்தவர் போலப் பரமசிவம் கண் விழித்துப் பார்த்தார்.

எப்படித்தான் மருத்துவமனைத் தாதிகள் கடவுள் போல் கவனித்தாலும் உறவினர்கள், பெற்ற பிள்ளைகள் யாருமில்லாமல் தனியாக அநாதை போல் மருத்துவமனையில் படுத்திருப்பது என்பது ஒரு கொடுமை.

வேளாவேளைக்கு உணவு வரும். மன மகிழ்ச்சி வருமா? மன உணர்வுகளைப் பரிமாற யாராவது வேண்டுமல்லவா! கவனிக்க ஆயிரம் பேர் இருந்தாலும் பெற்ற பிள்ளைகளுடன் கதைப்பது போல் வருமா? ஓடி வந்து என்னைப் பார்க்கிறார்களே, இத்தனை நாளும் வளர்த்த கடமையை மனமுவந்து வழங்குகின்றார்களே என்னும் பெருமை போல் இருக்குமா?

தாய்ப்பாசத்துக்கும் தந்தையின் பாசத்துக்கும் வேறுபாடு எங்கு இருக்கிறது. தாய் உடனே தன்னுடைய மனத்தை வெளிக்காட்டுவாள். தந்தை மனத்துக்குள் வைத்துப் பிள்ளைகளின் உயர்வுக்காக உழைப்பார். அந்தத் தந்தைமார்கள் கட்டிலே சொந்தம் என்று இருக்கும் போது தொட்டில் சொந்தம் கூடவே இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

ஆனால், பிள்ளைகளால் அது முடிவதில்லை. பணிச்சுமை பெரிதாகப் படும்போது அவர்கள் மனச்சுமைக்கு இடம் தர முடியாது போகின்றது.

தற்போது பெற்ற பிள்ளைகளில் அவருக்கு அருகே இருப்பது சிநேகா மட்டுமே. அவள் ஒவ்வொரு நாளும் சுவாமி தரிசனம் செய்வது போல அவரிடம் சென்று வருவது வழக்கமாக இருந்தது. அவளுக்கு அது வசதியாகவும் இருந்தது. நோயோடு இருப்பவர்களுக்கு உறவுகளின் ஏக்கம் நிச்சயமாக இருக்கும். அவர்களுக்கு மீதமுள்ள வாழ்க்கையில் எது இருக்கப் போகின்றது?

எம்மோடு பேச யாராவது வரமாட்டார்களா என்ற ஏக்கம் நிச்சயம் இருக்கும். தம்முடைய பழைய நினைவுகளை மீட்டிக்கொண்டே இருப்பார்கள். அதுதான் வயதானவர்கள் எப்போதும் எங்கட காலத்தில... என்று பேசத் தொடங்குவது வழக்கம்.

தாயைத்தான் பாதியிலே பறி கொடுத்தவளாயிற்றே. தந்தையின் உணர்வுகளை, வார்த்தைகளை வாழ்த்துகளாகப் பெறவாவது அவரைத் தரிசிக்க வேண்டும் அல்லவா. அவருடைய எண்ணங்களும் செயல்களும் ஏற்கனவே கருமையத்தில் அலைஅலையாகப் பாய்ந்து கொண்டிருக்கின்ற உடலைத்தானே தாங்கி வளர்ந்தாள் சிநேகா. தந்தையை நினைக்கும் போதெல்லாம் தாயின் முகம் முன்னே வந்து நிற்கும். அவளுடைய வீட்டிலே எந்த சுவாமிப் படங்களையும் காணமுடியாது. தாயின் இழப்பு அவளை நாத்திகவாதியாய் மாற்றிவிட்டது.

பெற்றோரின் பதிவுகள் அவளுக்குள் மறக்கப்படக் கூடாது என்பதில் முழு அக்கறை கொண்டுள்ளாள்.

செல்லுகின்ற போதெல்லாம் தந்தை பரமசிவம் தாயைப் பற்றியும், தன்னுடைய வாழ்க்கையைப் பற்றியும் சிநேகாவின் மனத்துக்குள் பதியம் போடுகின்றார்.

தந்தைக்கு நாள் குறித்து விட்டது இயற்கை. வைத்தியர்கள் கைவிரித்து விட்டார்கள். இன்று நாளை என்று நாள்களை எண்ணிக் கொண்டிருக்கிறார் பரமசிவம். ஹீமோதெரபியை நிறுத்திவிட்டார்கள்.

படுக்கையில் இருந்தவர் எழுந்திருக்க முயல்கின்றார்.

“வேண்டாம் ஐயா. படுத்திருங்கள்” என்று சொல்லியபடி அருகே இருக்கும் நாற்காலியில் அமர்கின்றாள்.

தந்தையைப் பார்க்கும் போது சிநேகாவின் கண்களில் நீர் முட்டுகிறது. எத்தனை பெரிய மனிதர்களுடன் கைகோர்த்து நடந்தார். அவருடைய ராஜநடை கண்டு ஊரிலுள்ள மக்கள் ஜெமினி கணேசன் என்று அவரை அழைத்ததாக ஆச்சி சொன்னாவே! ஆனால் இப்போது உடல் இளைத்துக் கட்டிலுக்குள் அடைந்து கிடக்கும் நிலை ஏற்பட்டு விட்டதே!

"நீ ஏன் வந்த நீ. வேலைகளை எல்லாம் விட்டிற்றுப் பிள்ளையத் தனிய விட்டிற்று என்னை ஏன் வந்து பார்த்துக் கவலப்படுறாய். நான் இப்பிடியே காலத்தைக் கழிச்சிடுவன். நல்ல ஹொட்டலில இருக்கிறது போலத்தானே இருக்கிறன். நர்ஸ்மார் வந்து பார்க்கிறார்கள். என்ன பாஷைதான் பெரிய கஷ்டமா இருக்கு. சமாளிக்கிறன். வெள்ளைக்காரன் என்றா வெள்ளைக்காரன்தான். நாம என்னத்த அவங்களுக்குச் செஞ்சு கிழிச்சிட்டம். ஜெர்மன்காரர் எங்களுடைய நாட்டை ஆண்டார்களா? சொந்தப் பிள்ளைகள் கூட இப்படிக் கவனிக்க மாட்டுதுகள். இந்த நேர்ஸ்மார் கடவுள் போலெல்லா இருக்குதுகள். நான் ஒவ்வொருநாளும் அதுகளக் கும்பிடுறனான்."

இந்த மனம் இருக்கிறதே அன்புக்காக ஏங்கும். நோய் என்று படுக்கையில் விழுந்துவிட்டால், உதவி செய்பவர்களை அதுவும் மருத்துவமனைத் தாதிகளைக் கையெடுத்து வணங்கச் சொல்லும். அவர்கள் கைகளில் முத்தம் கொடுக்கச் சொல்லும். ஆனாலும் உறவு என்பது அனைத்தையும் கடந்தது. ஆயிரம் பேர் பக்கத்தில் இருந்தாலும் வயதானவர்கள் பிள்ளைகளைத்தான் தேடுவார்கள் என்பதை வயதான பின்தான் பிள்ளைகள் உணர்ந்து கொள்ளுவார்கள்.

"புலம்பெயர்ந்த மக்கள் ஒருவகையில் புண்ணியம் செய்தவர்கள் என்று சொல்ல வேண்டும் ஐயா. எவ்வளவு பெரிய நோயாக இருந்தாலும் எந்தவிதப் பணமும் கட்டாமல் வைத்தியம் பார்க்கலாம். மருத்துவக் காப்புறுதி செய்தவர்களின் பணம் எல்லாருக்கும் உதவும். சிறுநீரகம் பழுதடைந்தவர்களுக்கு ஒரு கிழமைக்கு 3 தடவை இரத்த சுத்திகரிப்புச் செய்கின்றார்கள். வீட்டுக்கு வாகனம் அனுப்பி அழைத்துச் செல்கின்றார்கள். இரத்த சுத்திகரிப்பு முடிந்தபின் திருமணவிழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்கின்றார்கள். ஆனால், எம்முடைய ஆசிய நாடுகளில் அனைத்துக்கும் பணம் கட்ட வேண்டும். இதனால், நோய் சுகமடையாமல் இறப்பு வீதம் அங்கேயெல்லாம் அதிகரிக்கின்றது" என்றாள் சிநேகா.

“இன்னும் எத்தனை நாளோ நான் இந்த உலகத்தில கிடக்கப் போறன்? யாருக்கும் சுமையாக இருக்காமல் போய்ச் சேர்ந்திட வேணும்.”

“ஏனய்யா அப்பிடிச் சொல்றீங்கள். நீங்கள் என்ன எனக்குச் சுமையா? நீங்கள் எங்களைச் சுமக்காத எதை நாம் சுமந்து விட்டோம், முதல் முதலாக ஆசிரிய ஆலோசகர் பதவி கிடைத்து மேற்பார்வைக்காக ஒரு பள்ளிக்கூடம் நான் போன போது என்னைச் சைக்கிளிலேயே ஏற்றிப் போனீர்களே. நான் வேண்டாம் வேண்டாம் என்னை இறக்கி விடுங்கள். பஸ்ஸில் போவேன் என்று சொல்லியும் கேட்காமல் சைக்கிளிலேயே பள்ளிக்கூட வாசலில் இறக்கி விட்டீர்களே. இதையெல்லாம் நான் மறந்து போகமுடியுமா ஐயா”

“என்ர பிள்ளைய மற்றவர்கள் பெருமையாகப் பார்ப்பது எனக்குச் சந்தோசம்தானே,”

“அதுபோலத்தான் ஐயா எங்களுக்கும் உங்களைத் தாங்குவது பேரின்பம். ஊரிலே சின்னண்ணனுடன் மகிழ்ச்சியோடு இருந்தீர்கள். இப்போது என்னோடு இருக்கின்றீர்கள். நோயும் துன்பமும் கடந்துதான் போகவேண்டும் ஐயா. ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான் என்று உங்களுக்குத் தெரியாதா? அது எனக்கும் இருக்கிறது ஐயா. நீங்கள் செய்ய வேண்டிய கடமைகள் இன்னும் இருக்கின்றன. என்னோடு நீங்கள் வாழ வேணும்.”

“நான் செய்தது எல்லாம் வீணாகத்தானே போயிற்று மகள். இந்த நோய் ஒரு பிசாசு. இந்தச் சனியன் சிகரெட்டைக் குடிக்காமல் விட்டிருந்தால், எனக்கு இந்த நிலமை வந்திருக்குமா? உன்னுடைய அம்மா எனக்கு எத்தனை தரம் சொல்லியிருப்பாள். கேட்டேனா? கீரன் ஒருநாள் எனக்கு முன்னுக்கு “நீங்கள் சிகரெட் குடித்தால் நானும் குடிப்பேன்” என்று குடித்துக் காட்டினான். நான் அதக்கூட கணக்கெடுக்கவில்லையே. அது ஒரு போதை. அப்போது புரியவில்லை. இப்போது புரிகிறது. காலம் கடந்து விட்டது. இனிவரும் மக்களுக்கு நான் ஒரு பாடமாக இருக்க வேண்டும். அம்மா கெதியில என்னக் கூட்டிற்றுப் போயிடுவா. அவளுக்கு என்னப் பிரிஞ்சு இருக்க முடியாது. இந்த ஒரு வருஷம் அவளில்லாமல் வாழ்ந்து கணக்க அனுபவிச்சிட்டன்” என்று புலம்பத் தொடங்கினார் பரமசிவம்.

“அவன் கந்தவனம் இருந்தால் என்னத் தூக்கப் பறிக்க சுகமாக இருக்கும். அந்தக் காலத்தில என்னுடைய வலதுகை போல நான்

சொல்றதுக்கெல்லாம் நாய்க் குட்டி போல வேல செய்து என்னோட இருந்தவன் திடீரேன்று எங்க போனானோ தெரியாது. அவன் இருந்தால் எவ்வளவு சுலபமா இருக்கும்'' என்ற பரமசிவத்திடம்,

''நீங்கள் செய்த புண்ணியம் ஒருநாளைக்குக் கைகொடுக்கும் ஐயா. வீட்டிற்குப் போனபின் உங்களைப் பராமரிக்க ஒருவரை நியமித்திருக்கிறேன். அவர் வயோதிபர் நோயாளிகள் பராமரிப்புப் படித்தவர். அவருடைய உதவி உங்களுக்குக் கிடைக்கும் ஐயா'' என்றாள்.

''என்ன சொல்கிறாய்? வீட்ட கூட்டிற்றுப் போறியா? உனக்கு ஏன் கரைச்சல்?''

''இல்லை ஐயா. எனக்கு என்ன கரைச்சல். ஹீமோதெரப்பி இனி உங்களுக்கு இலலை என்று சொல்லிவிட்டார்கள். நான் உங்களுடனேயே இருப்பேன். வேலை நேரம் தவிர நான் உங்களோடு இருக்கலாம். நீங்கள் செய்த புண்ணியத்துக்கு இந்த நேர்ஸ்மார் போல உங்களுடைய கந்தவனம் போல ஒருத்தன் வரமாட்டானா? என்று கூறியபடி ஜக்கெட்டை அணிந்தாள். நாளை வந்து பேசுகிறேன். அடுத்த வாரம் உங்களக் கூட்டிப் போறேன்'' என்று சொல்லியபடி வெளியேறினாள்.

''தம்பியைக் கேட்டேனென்று சொல்'' என்று அரவிந்தனை சுகம் விசாரிக்கச் சொல்லி வழியனுப்பினார் பரமசிவம்.

அரவிந்தன் கீழே வீதியில் கடைகளுக்குப் போய்த் திரும்ப வந்து சிநேகாவுக்காகக் காத்துக் கொண்டு நின்றான். வாகனத்துக்குள் ஏறிய சிநேகா

''நிருபாவிடம் கொண்டு போய் விடுங்கள் அப்பா. நான் பிறகு நிருபாவுடன் வீட்ட வாறன்'' என்று சொன்னாள்.

நிருபா வீட்டுக்குப் போகக் காலதாமதமாகியது. சிறிய பிழை என்றாலும் அந்த நிலத்தைத் தோண்டித் திருத்தி அழகு பார்ப்பது ஜெர்மனிக்கு அல்வா சாப்பிடுவது போல இருக்கும். உலகத்திலேயே சிறப்பான நெடுஞ்சாலை என்று பெயர் பெற்ற நாடு அல்லவா? நெடுஞ்சாலையில் அதிவேகத்துடன் வாகனம் செலுத்தக் கூடிய ஒரே நாடு ஜெர்மனி. அதனால் தான் விரைவாக வாகனம் செலுத்த ஆசைப்படுபவர்கள் ஜெர்மனிக்கு விசேடமாக விரைவாக வாகனம் செலுத்துவதற்காக வருவார்கள். அன்று நாம் சும்மா திருத்துகின்றார்கள் என்று நினைக்கும்

வீதியை வெட்டிக் கொத்தி அழகுபடுத்திக் கொண்டிருந்தார்கள். அதைவிட அன்று ஜெர்மனியில் கார்னிவல் கொண்டாட்டம் நடப்பது என்றால், வீதிகள் எல்லாம் மறைத்துக் கட்டியிருப்பார்கள். கொரொனா காலப்பகுதி என்ற காரணத்தால் கார்னிவல் கொண்டாட்டங்கள் எல்லாம் தடை செய்யப்பட்டிருந்தது.

கார்னிவால் தோற்றம் மதம் சார்ந்திருந்தாலும், மதம் சார்ந்திராத பெரும்பாலானவர்களும் இதனைக் கொண்டாடுகின்றார்கள். தவக்காலம் என்று சொல்லப்படும் நாட்களிலே தமக்கு விருப்பமான ஏதோ ஒன்றைத் தவிர்த்து விரதமாக இருப்பார்கள். சிலர் மது, அல்லது இறைச்சி, அல்லது மீன் அல்லது இனிப்புப் பண்டங்கள் என்று 40 நாட்கள் தவமிருப்பார்கள். இந்தத் தவத்துக்கு முன் இந்த ஆர்ப்பாட்டத் திருவிழாவாகிய கார்னிவேல் கொண்டாட்டத்தைச் செய்வார்கள்.

ஆடல், பாடல், ஊர்திகள், மது, என்று அமர்க்களமாக இருக்கும். மிருகங்கள் போல ஆடையணிந்து, காட்டு விலங்குகளை நாட்டுக்குக் கொண்டு வந்தது போல வீதியெல்லாம் திரிவார்கள். ஊர்திகளில் நிறுவனங்கள் இனிப்புப் பண்டங்களை, தம்முடைய விளம்பரப் பொருள்களை, ரோஜா மலர்கள் என்று நிற்கின்ற பார்வையாளர்களுக்கு எறிந்து கொண்டு ஊர்தியிலே ஏறி வீதியிலே செல்வார்கள். வீதியிலே நிற்பவர்கள் சிலர் தம்முடைய குடையை விரித்து மறுபக்கம் பிடித்துக் கொண்டு நிற்பார்கள். எறியப்படும் இனிப்புப் பண்டங்கள் குடைக்குள்ளே வந்துவிழும். அவற்றை எடுத்துத் தம்முடைய பைகளுக்குள் போடுவார்கள். வரிசை வரிசையாக அழகான ஆடைகளை அணிந்த பெண்கள் பேண்ட் வாத்திய இசையுடன் நடனமாடிக் கொண்டு வருவார்கள். ஊரே அமர்க்களப் பட்டிருக்கும். இவ்வாறான வீதியிலே வாகனங்கள் நிறுத்தப்பட்டு வழியை வேறுபக்கம் திருப்பி விடுவார்கள்.




இது நிருபாவிடம் போகும் பாதையில் தான் வருடாவருடம் நடைபெறும் . ஆனால் இன்று அந்தத் தெருவைத் திருத்திக் கட்டுவதனால் சுற்றி வளைக்க வேண்டியிருந்தது. வாகனத்தை நிருபா வீட்டின் முன் நிறுத்திய அரவிந்தன் ‘‘நேரத்துக்கு

வாங்கள்'' என்று சொல்லி நிருபா வீட்டில் இறக்கி விட்டு வீடு நோக்கிப் புறப்பட்டான். வேலைக்கு விடுப்பு எடுத்த அரவிந்தன் இன்று முழுவதும் சிநேகாவுடனேயே திரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

காலமும் நேரமும் இறக்கை கட்டிப் பறக்கின்றன. வாழும்போதே நாம் சாதிக்க நினைப்பவற்றைச் சாதித்துக் காட்டிவிட வேண்டும். வாழ்க்கை என்பது ஒருமுறைதான். ஆனால், வாழ்ந்தோம் என்பதற்கு அடையாளம் இந்தப் பூமியில் பதியமிட வேண்டியது அவசியம்.

''பெற்ற தாய் தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே''

என்று வள்ளலார் பாடுவது போல்,

சிநேகா கொண்ட கொள்கையை மறவாள். எண்ணத்திலே போட்ட திட்டமெனும் விதையானது கல்லைப் போல் கனத்துக் கொண்டிருந்தது. தான் நினைப்பது சட்டப்படிக் குற்றமா என்பது பற்றி அவளுக்குத் தெரியாது. அவளுக்கு நீதிபதி ஒருவர். அவர் அவளது கணவன் அரவிந்தன். பக்கத்துணை ஒருவர் அது நிருபா.

இப்போது சிநேகா நிருபா வீட்டில் இருந்தாள். பொதுவாகவே அரவிந்தனுக்குத் தெரியும். நிருபா வீட்டுக்குப் போனால், கணினியுடனும் தொழில் நுட்பத்துடனும் சிநேகா வீட்டையே மறந்து போவாள் என்பது.

''நிருபா உங்களிடம் ஓர் உதவி கேட்கிறேன். முடிந்தால் மட்டும் ஓம் என்று சொல்லுங்கள். முடியாவிட்டால் கஷ்டமென்றால் தேவையில்லை'' என்றால் சிநேகா.

''என்ன அன்ரி பெரிய பீடிகையாக இருக்கிறது. நீங்கள் எது கேட்டு நான் செய்யாமல் விட்டிருக்கிறேன். நான் எது கேட்டு நீங்கள் செய்யாமல் விட்டிருக்கின்றீர்கள். சொல்லுங்கள்'' என்றாள் நிருபா.

''நிருபா! புற்று நோயால் இறப்பவர்களுடைய உடலை அவர்கள் இறந்தவுடன் அப்படியே குளிரில் வைத்து, புற்று நோய்க்கு மருந்து

கண்டுபிடித்தவுடன் அந்த மருந்தை அவர்களுக்குச் செலுத்தி உயிர்பெற்று எழுப்புகின்ற கிரையோனிக் முறை என்று ஒருமுறை இருக்கிறது அல்லவா. அப்படி ஐயாவுடைய உடலை வைக்கலாமா நிருபா?'' என்று கேட்டாள் சிநேகா.

''செய்யலாம் அன்ரி. ஜெர்மனியில் இருக்கிறது. ஒரு மனிதன் இறந்தவுடனே அவருடைய உடலை 196 பாகை சென்றிகிரேட்டில் குளிர வைத்துப் பின் மருந்து கண்டுபிடித்தபின் நானோ ரெக்னோலஜியைப் பயன்படுத்திக் கெட்டுப் போன நோய் உறுப்பை வளர வைத்து எழுப்புவார்கள். உடல் கெட்டுப் போகாமல் இருக்கும். மூளை செயல் இழக்காமல் இருக்கத் தேவையான அளவு ஒட்சிசனை மூளைக்குக் கொடுப்பார்கள். உடலிலுள்ள இரத்தமும் நீரும் முழுவதும் வெளியேற்றப்படும். உடல் சிதையாமல் இருப்பதற்காக வேதிப்பொருளை இரத்தத்துக்குப் பதிலாகப் பாய்ச்சுவார்கள். அதன்பின் ஐஸ்கட்டிகளுக்குள் அந்த உடல் வைக்கப்படும். அதன்பின் 196 பாகை செல்சியஸ் நைதரசன் நிறைந்த கண்டைனருக்குள் வைப்பார்கள்.''

''அப்படி ஐயாவின் உடலைச் செய்யலாமா நிருபா?''

''ஆனால் அன்ரி, அதற்கு நிறையச் செலவாகும் அன்ரி. மருந்து எப்போது கண்டுபிடிப்பார்களோ தெரியாது. அப்படிக் கண்டுபிடிக்கும் போது உங்களுடைய அப்பாக்கு அந்த உலகத்தில் வாழ்வது எப்படி என்றே தெரியாமல் இருக்கும். நீங்களும் இருப்பீர்களோ தெரியாது. அப்பாவுடைய வயதுக்கு எப்படிச் சாத்தியப்படுமோ தெரியாது அன்ரி'' என்றாள்.

''அப்படியென்றால், இன்னும் ஒரு சிந்தனை இருக்கின்றது. ஐயாவினுடைய மூளைப் பதிவுகளை ஐயா இருக்கும் போதே எடுக்கலாமா? அலைகளாக மூளை பதிந்து வைத்திருப்பவற்றை அன்ரெனா அலைகளை இழுத்து எடுப்பது போல ஒரு முறை இருக்கின்றதா? அப்படி இருந்தால், முளைப் பதிவுகளைக் கொப்பி பண்ணி எடுத்துக் கொம்பியூட்டரில் பதிந்து விடுவோம். இரண்டு தலைமுறைப் பதிவுகளைப் படிப்பதற்கு வசதியாக இருக்கும் இல்லையா நிருபா'' என்றாள் சிநேகா.

''நீங்கள் சொல்வது பற்றித்தான் நான் இப்போது ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றேன் அன்ரி. ஒரு மென்பொருள் கண்டுபிடித்துள்ளேன். நீங்களும் உங்களுடைய அப்பாவும் சம்மதித்தால், முயற்சி செய்து பார்க்கலாம். ஆனால், இது சட்டவிரோதம் அன்ரி. யாருக்காவது

தெரிந்தால், பெரிய பிரச்சினையாகிவிடும். இதனை இன்று வரை விஞ்ஞானம் முயலவில்லை. இயற்கையை மீறிய செயல் என்று கிறிஸ்தவப் பாதிரிமார் பிரச்சினை எடுப்பார்கள். ஆனால், எனக்குச் சம்மதம்.''

''ஐயோ. இதைத்தானே நானும் நினைத்தேன். செய்வோம் செய்வோம்'' என்று துள்ளிக் குதித்தாள் சிநேகா.

''அதெப்பிடி அன்ரி நீங்களும் நானும் ஒரே மாதிரி யோசிக்கின்றோம்'' என்றாள் நிருபா.

சிநேகாவின் மனம் ஆனந்தத்தில் துள்ளியது.

''நிருபா எனக்குச் சிந்திக்கவே முடியும். உங்களுக்குச் செயல்படுத்த முடியும். உந்துதல் என்னுடைய விசை. பறப்பது நீங்கள். என்னவோ நான் இப்போது பறப்பது போல இருக்கிறது.

''உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து''

என்று வள்ளுவர் சொன்னதுபோல நடக்கும் என்று உயர்வாக நினைப்போம். சரிவராமல் போனால் பரவாயில்லை. இந்த முயற்சிக்குத் தாழ்வு வரப்போவதில்லை நிருபா.''

''ஐயாவிடம் கேட்டுப் பார்க்கிறேன். பராமரிப்பாளரை ஒரு குறிப்பிட்ட நேரம் வரச் சொல்லுவோம். நீண்டநாள் எடுக்காது என்று நினைக்கிறேன். ஹீமோதெரபிக்கு ஐயாவை அழைத்துப் போக வேண்டிய அவசியமில்லை. அவர்கள் அதற்காக மாத்திரைகள் கொடுக்கின்றார்கள். உங்களுடன் ஐயா தங்குவது உங்களுக்குப் பிரச்சினை இல்லையா நிருபா?'' என்று சிநேகா கேட்டாள்.

''எனக்கு இதில் பூரண சம்மதம் அன்ரி. நான் வேலைக்குப் போகும் நேரம் மட்டுமே ஆள் தேவை. அநேகமாக ஹோம் ஆபிஸ்தான் இருக்கும். என்னுடைய பரிசோதனை அறையைப் பூட்டி விடுவேன். அதனை யாரும் திறக்காமல் விட்டால் போதும். பராமரிப்பாளர் வந்து பார்க்கட்டும். பிறகு நீங்கள் வந்து நிற்பீர்கள் தானே. நாங்கள் தொடங்குவோம். நீங்கள் அங்கிளிடம் கேட்டு பெர்மிஷன் எடுங்கள். முயற்சி செய்வோம். கொஞ்சம் நாட்கள் கவனமாக இருக்க வேண்டும். பராமரிப்பாளருக்கும் தெரியக் கூடாது. பராமரிப்பாளர் உங்களுக்குத் தெரிந்தவராகக் கூப்பிடுங்கள்

அன்ரி. Pflege dienst எடுத்தால், அவர்களுடைய நிறுவனத்தில் பதிய வேண்டும். பிறகு எல்லாம் விசாரிப்பார்கள் அன்ரி. ஒரு கிழமை தாருங்கள். எல்லாம் ஒழுங்கு பண்ண வேண்டும். சிலவேளை ஒரு நாளிலேயே இரவிரவாக முயன்றால், முடித்துவிடுவோம்'' என்றாள் நிருபா.

''சரி நிருபா. எனக்குத் தெரிந்த ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த ஹெலி என்ர ஒருவர் இருக்கிறார். கேட்டுப் பார்க்கிறேன்.''

''கொஞ்சம் இருங்கள் அன்ரி நான் மூளை பற்றி எழுதிய கட்டுரை இருக்கிறது. அதைத் தருகின்றேன். வாசித்துப் பாருங்கள். வட்ஸ்அப் இல் அனுப்புகிறேன்'' என்று கூறித் தான் எழுதிய கட்டுரையைத் தேடுவதற்காக நிருபா சென்றாள்.

உயிரோடு இருக்கும் பரமசிவத்தின் மூளைப் பதிவுகள் அப்படியே மண்ணுக்குள் மறைந்து அழிந்து போகாமல் சேகரிக்கும் உத்தியை இருவரும் செய்வதற்குத் துணிந்தார்கள். நிருபாவுக்கு முதல் முயற்சி. பரமசிவத்தின் செல்கள் புற்றுநோய் சிகிச்சைக்காக அளிக்கப்படுகின்ற ஹீமோதெரபி சிகிச்சையினால், அழிந்து போகின்றன. நிருபாவின் முயற்சியினால், பதிவுகளை எடுக்கின்ற போது சிலவேளை அனைத்தும் அழிந்து போகலாம். மறைந்து போகலாம். ஆனாலும் ஒரு நம்பிக்கை இருவரிடமும் இருந்தது. பதிவுகளை மூளை அதிர்வுகளாகப் பதிந்து வைத்திருக்கின்றது. சிலவேளை படமாக வரலாம், சிலவேளை குரலாக வரலாம், சிலவேளை எண்களாக வரலாம். எப்படி மூளை வேலைசெய்து பதிவு செய்திருக்கின்றது என்பதைப் பொறுத்தே முடிவு கிடைக்கும்.

நிருபாவின் வாகனத்தில் சிநேகா வீடு வந்து சேர்ந்தாள். சிநேகா வீடு வந்த போது உணவு தயாராக இருந்தது. அரவிந்தன் இரவு உணவு தயாரித்து முடித்திருந்தான். கதவைத் திறக்கின்ற போது மகள் சுருதி ஓடி வந்து

''கை எப்படி இருக்கிறது அம்மா. டொக்டரிட்ட போகல்லையா'' என்று கேட்டாள். அவளுக்கு அவள் கவலை.

''ஓம் என்ன? அடே.. .. டொக்டரிட்ட போக மறந்திட்டன் மகள் என்று அவளை அணைத்தபடி நாளைக்கு வேலை முடிந்து போகிறேன்'' என்று வலியை மறைத்துக் கூறினாள்.

''உங்களுக்கு நாங்கள் சொன்னால் விளங்காது. உங்களுக்கு

யூட்டியூப் சொல்ல வேண்டும்'' என்று அவளுடைய பாணியில் சொன்னாள். சிரித்தபடி உணவுக்காக அமர்ந்த போது கை வலி தாங்க முடியாத வேதனையாக இருந்தது. வெளியே காட்டினால் இருவரிடமும் வரிசையாக வாங்கிக் கட்ட வேண்டும். அதனால், அடக்கிக் கொண்டாள்.

சமையலறைக் குளிர் வெளிக் குளிரை விட அதிகமாக இருந்தது. அரவிந்தன் சமைக்கின்ற போது சமையலறைக் கதவை இறுக்கி மூடிவிடுவான். மேலங்கி அணிந்து கொண்டு சாளரத்தை நன்றாக விரித்துத் திறந்து விட்டுச் சமையலறைக்குள்ளே மின்விசிறியைப் போட்டு விடுவான். சமைக்கின்ற போது ஏற்படுகின்ற மணத்தை மின்விசிறி சுழன்று அடித்து சாளரம் வழியாக வெளியே அனுப்பிவிடும். இல்லையென்றால், சமையலறைக்குள்ளே ஈரத்தன்மை பிடித்து பங்கஸ் ஏற்பட்டுவிடும். அதைவிடத் தமிழர்கள் பலருடைய ஆடைகளில், ஜாக்கெட்டுக்களில் சமையல் மணம் ஒருவிதமான எரிச்சலைத் தரும். மூக்கைச் சுளித்துக் கொண்டு வெளிநாட்டார் செல்வதை அவதானித்திருக்கின்றான். அதனால், தமிழர்களுடைய பொரித்தல், வதக்கல் போன்றவற்றைச் செய்கின்ற போது சிநேகாவும் அரவிந்தனும் கவனமாக இவ்வாறான ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

சமையலறைச் சாளரங்களை மூடி வெப்பமூட்டியைப் போட்டாலும் அறை வெப்பமாக நீண்ட நேரம் எடுக்கும். அதனால், சமையலறைக்குள் குளிர் அதீதமாக இருந்தது. அது எப்படியும் குறைந்து போகும் என்ற காரணத்தால், மூவரும் உணவருந்தச் சாப்பாட்டு மேசைக்கு வந்தனர்.

''நான் இந்தக் கிழமை போக அடுத்த ஒரு கிழமை நிருபா வீட்டில் நிற்கப் போறேன். நீங்கள் ரெண்டு பேரும் கொஞ்சம் சமாளித்துக் கொள்ளுங்கள். இடையிடையே வந்து போவேன். அவர்கள் ஏன் என்ற கேள்விக்கு இடம் வைக்காமல் தன்னுடைய திட்டத்தைச் சொன்னாள். அரவிந்தன் சும்மாவே இப்படியான விடயங்களுக்குத் தடைபோடுவான். இது கேட்டுத் தாம் தாம் என்று குதித்தான்.

''இதெல்லாம் என்ன சின்ன விஷயமா? தூக்கி ஜெயிலுக்குள்ள போட்டிருவார்கள். பேசாமல் நடக்கிற வேலையைப் பாருங்க. நிம்மதியாக அந்த மனிசனுடைய உயிர் போறதுக்கு விடுங்க. உங்களுடைய இந்த மோட்டு வேலையால அந்த மனிசனைக் கெதியில அனுப்பிடுவீங்க போல இருக்கு. தற்செயலாக நீங்கள் செய்யும் வேலையால உயிருக்கு

ஏதாவது ஆபத்து வந்தால் என்ன செய்றது. குடும்பமா கம்பி எண்ண வேண்டியதுதான்'' பொரிந்து தள்ளினான் அரவிந்தன்.

நிதானமாகப் பேசினாள் சுருதி. ''அம்மா இது புது ரெக்னோலஜி. நிருபா அக்காக்குச் சரியாகச் செய்ய வருமோ தெரியாது. தாத்தாக்குத் தாங்கும் சக்தி இருக்கோ தெரியாது. சிலவேளை மூளையில் எல்லாம் குழம்பிப் போகும். இப்ப என்னத்துக்கு அம்மா இந்த ரிஸ்க்.''

''இந்த உலகம் இருக்கிறதே மனிசன் உழைக்கிற உழைப்பெல்லாம் மறந்து போகும். வாழுகின்ற போது அவருடைய உழைப்பைப் பதிந்து வைத்தாலேயே உலகத்துக்குப் புரியும்.''

''எல்லாரும் அப்படித்தானே. அதுதானே இயற்கை''

''ஆனால், அவர் ஓடிய ஓட்டமெல்லாம் மற்றவர்களால் மறக்கப்படக் கூடாது. இப்படி ஒருவர் இருந்தார் என்று நிலை நிறுத்த வேண்டும். சாதாரணமாக எத்தனை பேர் தம்முடைய வாழ்நாளைச் சமூகத்திற்காக அழித்திருக்கின்றார்கள். இதெல்லாம் தெரியக் கூடாதா? இதைத் தெரியப்படுத்த வேண்டும். அது மட்டுமல்ல. ஐயாவினுடைய இளமைக் காலம் எப்படி இருந்தது? யாரெல்லாம் எங்களுக்குத் துரோகம் செய்தார்கள். அவருடன் அம்மா வாழ்ந்த வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை எல்லாம் அறிய வேண்டாமா? இது ஒரு புதிய முயற்சிதானே.

''ஏனம்மா அதை நீங்கள் தாத்தாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே'' என்று சுருதி கூற

''இல்லை மகள் அவர் களைத்துப் போகின்றார். பாவமாக இருக்கிறது. நான் அவரை, அம்மாவை, ஆச்சியை இளமைக் காலத்து விசுவலாகப் பார்க்கலாமே. இன்னும் பல ஆசைகள் இருக்கின்றன'' என்றாள் சிநேகா

''நீங்கள் நினைக்கிற மாதிரி விசுவல் எல்லாம் சரிவருமோ சந்தேகம். ஆனால், சரி வந்தாலும் அதை யாரிடமும் சொல்லக் கூடாது. இந்தப் பதிவுகளை வேறு ஒரு மனிதனின் மூளைக்குள்ளும் செலுத்தி அவனை மாற்றலாம். இது சட்டவிரோதம் அம்மா.''

''அவக்கு இதெல்லாம் விளங்காது மகள். அவ நினைச்சத செய்ய வேணும் அவ்வளவுதான். அதுக்கு அந்த நிருபா வேற'' என்றான் அரவிந்தன்.

“விடுங்களேன் அப்பா. நடப்பதைப் பிறகு பார்ப்போம்” என்று முற்றுப்புள்ளி வைத்தாள் சுருதி.

சுருதி தாய்க்கு எப்போதும் அறிவுரை சொல்லுகின்ற ஆசான் போல இருப்பாள். எதையும் நிதானமாகச் சிந்திக்கும் அவளாலேயே இந்த விஞ் ஞான ரெக்னொலொஜி அறிவுகள் சிநேகா வளர்த்துக் கொண்டாள்.

பிரபஞ்சம் பற்றிய கருத்துக்கள், நாசாவில் நடக்கின்ற ஆய்வுகள் பற்றியெல்லாம் அம்மாவுடன் அடிக்கடி பேசுவாள். யதார்த்தத்தை இலகுவாகப் புரிய வைப்பாள். அவள் வயதுக்கு வந்த பின்னேதான் சிநேகா முழுநேர வேலைக்குச் செல்ல முடிந்தது. அதுவரை அவளில் முழுக் கவனம் வைத்திருந்தாள். அதனாலேயே ஜெர்மனிய வாழ்க்கையில் அந்நிய கலாசாரத்துக்குள் அப்படியே அவள் அமிழ்ந்து போகாமல் காப்பாற்றக் கூடியதாக இருந்தது.

பங் என்று திரிவோரும், போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி வீதியில் வாழ்வோரும், கைகளை பிளேட்டால் கீறிக் கீறித் தம்மைத் தாமே துன்புறுத்துவோரும் எனப் பலவிதமாகத் தமது சுயத்தை இழந்து, பலவிதமான நிறங்களுள்ள இளைய சமுதாயம் வாழுகின்ற புலம்பெயர்ந்த சூழலில், தமிழருடைய கலாசாரத்தில் பிள்ளைகளை வளர்ப்பது இலகுவான காரியமில்லை. அரவிந்தனுக்கோ தான் வாழ்க்கையில் பட்ட கஷ்டங்களே எதற்கும் துணியாத பயத்தை அவனுக்கு ஏற்படுத்தியிருந்தது. உழைப்போம், வாழ்வோம் என்று அரவிந்தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டான்.

தந்தை மாரடைப்பால் இறந்த போது தாய் பாக்கியம் 5 பிள்ளைகளை எப்படி வளர்த்தெடுப்பேன் என்று தெரியாது தவித்து நின்றார். துணை இல்லாது பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் தைரியம் அவருக்கு இருந்ததில்லை. அமைதியும், பயந்த சுபாவமும் மிக்கவராகத் தாய் இருந்ததனால், தைரியமும் தன்னம்பிக்கையும் மிக்க இரண்டாவது மகனாகப் பிறந்த அரவிந்தன் குடும்பத்தைச் சுமக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானான். 12 ஆம் வகுப்பு இறுதித் தறுவாயில் கொழும்புக்கு உறவினர் துணையுடன் வேலைக்குச் சென்று அங்கிருந்து சிங்கப்பூரில் பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்ததனால், அங்கு சென்று தன் குடும்பத்தைத் தாங்கினான்.

சிங்கப்பூரிலிருந்து வீடு திரும்பிய சந்தர்ப்பத்தில் நாட்டிலே தங்க முடியாத சூழ்நிலை அரவிந்தனுக்கு ஏற்பட்டது. அன்றைய காலம்

இலங்கை வாழ் மக்களுக்கு ஒரு திருப்பத்தைத் தந்த காலப்பகுதி. தமிழ்ப் போராளிக் குழுக்களின் ஆட்சியிலே யாழ்ப்பாணம் அடங்கிக் கிடந்தது. அரசாங்கத்துக்கு எதிராகப் போர் தொடுப்பதற்காக நாட்டை விட்டு போராளிகள் ஒதுங்கி வாழ்ந்த காலப்பகுதி. அவர்களுக்கு உணவை ஊர் மக்கள் களவாகக் கொண்டு சென்று பரிமாறிய காலப்பகுதி. மண்ணையும் மனிதர்களையும் அவர்கள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை அங்கு வாழ்ந்த மக்களுக்கு இருந்தது.

தம்முடைய இயக்கங்களை வளர்ப்பதற்காகத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் பிரிந்து நின்று போராடத் தொடங்கினார்கள். தம்முடைய போராட்டத்துக்கு இளம் ஆண், பெண் பிள்ளைகளைக் கொண்டு சென்றார்கள். முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் வீட்டுக்கு ஒரு பிள்ளையைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் அப்பகுதி மக்களுக்கு இருந்தது.

யுத்தம் என்று வருகின்ற போது நாட்டு மக்களின் ஒத்துழைப்பு நிச்சயம் தேவை என ஒவ்வொரு நாடும் நினைக்கும். இது நாட்டுக்குரிய போரில்லை. ஒரே நாட்டுக்குள் இரு இனக்குழுக்களின் போர். இருந்தாலும் தமிழருடைய உரிமைப் போர் என்று ஆனபோது வலுக்கட்டாயமாக ஆண், பெண் பிள்ளைகள் இயக்கத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். இப்போராட்டத்தில் தாமாக விரும்பியும் இளம் வயதினர் இயக்கத்திற்குள் நுழைந்தனர். பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோருக்குத் தெரிய வேண்டும். யுத்தத்துக்குச் சென்றவர்களின் உயிர் தமக்குச் சொந்தமில்லை என்ற கசப்பான உண்மை.

இக்காலப்பகுதியிலே சிங்கப்பூரிலிருந்து அரவிந்தன் தாய் சகோதரர்களைப் பார்ப்பதற்காக வருகின்றான். அவன் வீடு வந்திருக்கும் செய்தி கேட்ட விடுதலைப்புலிகள் வீட்டை முற்றுகையிட்டனர். உடனடியாகத் தமக்குப் பணம் தரவேண்டும் இல்லையென்றால் உன்னைப் போட்டு விடுவோம் என்று கட்டளையிட்டனர். போடுதல் என்பது அவர்களின் கொலை செய்தல் என்பதற்கான குழூஉக்குறியாகும். ஆனால் அரவிந்தனோ அவர்களிடம் இருந்து தப்பி கொழும்பு வந்து அங்கிருந்து ஜெர்மனியை வந்தடைந்தான்.

தத்தமக்குள்ளே ஒற்றுமை இல்லாத காரணத்தினால் விடுதலைப் போராளிக் குழுக்களுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டன. அனைத்துக்

குழுக்களையும் அழித்து வலிமையுள்ளது வாழும் என்ற கோட்பாட்டுக்கமைய விடுதலைப் புலிகள் தனியாட்சி புரியத் தொடங்கினர். மொத்தமாக அனைத்து மற்றைய இளம் போராளிகளும் கொல்லப்பட்டனர். முதன்மைப் போராளிகளின் குழுவின் ஆட்சி யாழ் மண்ணில் செல்வாக்குச் செலுத்தியது. தம்முடைய இயக்கத்தை வளர்ப்பதற்காக மக்களிடம் இருந்து பணம், நகை போன்றவற்றைப் பெற்றும், அரசாங்க வங்கிகளைக் கொள்ளையடித்தும் இயக்கத்தை வலிமையுடையதாக்கினர். ஓர் இயக்கத்தை வளர்ப்பதற்கு இவை அவர்களுக்குத் தேவைப்பட்டது.

ஒழிந்திருந்து போராடிக் கன்னி வெடிகளை வைத்து இராணுவத்தினரைக் கொல்லும் தமிழ்ப் போராளிகளைப் பிடிக்க முடியாத இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று அப்பாவி ஆண்களைப் பிடித்துச் சுட்டுத் தள்ளினர். குடும்பமாக உணவருந்திக் கொண்டிருந்த அரவிந்தன் உறவினரில் ஓர் ஆண்மகனை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இழுத்துக் கொண்டு போய் அவர்களின் கண்ணுக்கு முன்னே சுட்டுப் போட்டு விட்டுப் போனார்கள். சரிக்குச் சரியாக இராணுவத்தினராலும் போராளிகளினாலும் பல உயிர்கள் இலங்கை மண்ணில் மாண்டன.

இந்தக் காரணங்களும், குடும்பத்தைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் அரவிந்தனுக்கு இருந்ததனால், அரவிந்தன் ஜெர்மனிக்குப் புலம்பெயர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1983 காலப்பகுதியில் ஜெர்மனிக்கு வந்தவர்கள் பலவிதமான அனுபவங்களைக் கொண்டிருந்தார்கள்.

அக்காலத்தில் இலங்கையிலிருந்து 10.500 ரூபாய் ரிக்கட் பெற்று மொஸ்கோ போகமுடியும். அங்கு ஒரு நாள் விசா கொடுப்பார்கள். அங்கிருந்து விமானம் எடுத்து கிழக்கு ஜெர்மனிக்கு வந்து இறங்குவார்கள். அப்போது கிழக்கு ஜெர்மனிக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் ஒரு விமான நிலையமே இருந்தது. அங்கிருந்து கீழே இறங்கும் போது பெர்லின் Schoen-enfeld தொடருந்து நிலையம் இருக்கும். அங்கு முன்னமே தங்கியிருக்கும் இலங்கை அகதிப் பையன்கள் இவர்களைக் கூட்டிக்கொண்டு தங்களுடன் தங்க வைத்து மேற்கு ஜெர்மனிக்குப் போவதற்குப் புகையிரதம் ஏற்றி விடுவார்கள். ஏற்றும்போது ஓர் எச்சரிக்கையும் சொல்லி அனுப்புவார்கள்.

இப்படித்தான் தர்மாவும் 1983 ஜெர்மனி மண்ணில் கால் பதித்தார். இவர் சிநேகாவின் அன்புக்குப் பாத்திரமான உடன்பிறவா அண்ணன் என்ற அந்தஸ்தைப் பெற்றவர். அவர் ஒரு முறை தன்னுடைய

அனுபவத்தைப் பகிர்ந்த போது அவரிடமும் இப்படித்தான் ஒருவன் கூறியிருக்கின்றான்.

"புகையிரதப் பயணம் ஆரம்பித்து Helmstadt என்னும் இடத்தில் காவல் துறையினர் ஏறுவார்கள். கவனம். அந்த ஸ்ரேசன் வரமுதலே நீங்க எல்லாரும் சீட்டுக்குக் கீழே இறங்கிப் படுத்திட வேணும். ஏனென்றால், போதைப்பொருள் கடத்துபவர்கள், உங்களப் போல அகதி அந்தஸ்துப் பெற வர்றவங்கள் எல்லாம் இந்தவழியாலதான் வாறவங்கள் பாருங்க. பொலிஸ்காரன்ட கண்ணில மண்ணத் தூவிட்டு இவனுகள் மேற்கு ஜெர்மனிக்குள்ள நுழைந்திடுவாங்கள். நம்மட சிறிலங்கன் மட்டுமில்ல வேற நாட்டுக்காரரும் இப்பிடித்தான் வர்றவங்க. உங்கட நேரம் நல்லதென்றால் போய்ச் சேர்ந்திடுவீங்க. இல்லையெண்டால்......" கையை விரித்தானாம்.

இவரும் புகையிரதத்துக்குள் ஏறினார். Helmstadt வரப்போகிறது என்றவுடன் படார் என்று சீற்றுக்குக் கீழே புகுந்தாராம். பக்கத்தில் இருந்த யூகொஸ்லாவியன் என்ன இது? என்று ஆச்சரியமாகப் பார்த்துக் கேட்டானாம். விபரத்தைச் சொல்லிவிட்டுக் குப்புறக்கிடந்தவரின் காலை யாரோ தட்டுவது போன்று இருந்ததாம். Helmstadt இல் ஏறிய பொலிஸார் யாரோ காட்டிக் கொடுத்ததனால் இவருடன் சேர்த்து 3 பேரை எழுப்பி யிருக்கிறார்கள். இவர்களோ எழுப்பாமல் கிடந்திருக்கின்றார்கள். சீற்றில் அடித்து எழுப்பி விட்டார்களாம். அவர்கள் தனியாகவா வந்தார்கள்? மோப்பம் பிடிக்கும் கெட்டிக்கார வல்லவன் நாயுடன் அல்லவா வந்திருந்தார்கள். அதனுடைய மூக்குக்கு யாராவது தப்ப முடியுமா?

போதைப் பொருள் கடத்துபவர்கள் இரண்டு விதமாகக் கடத்துவார்கள். ஒன்று ஒரு பொலித்தீன் பைக்குள் போதைப் பொருளை வைத்து மலவா யிலுக்குள் வைத்து விடுவார்கள். உரியவரிடம் சேர்க்கும் வரை கொண்டு வருபவர் மலம் கழிக்க முடியாது. இன்னும் ஒருமுறை இருக்கிறது. அது பொலித்தீன் பைக்குள் வைத்து விழுங்க வைப்பார்கள். அது பின் மலமாக வெளிவரும். எத்தனையோ பேருக்கு வயிற்றுக்குள் வெடித்து இறந்த சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இன்னும் இதைக் கவனிக்காமல் விடுவதற்குக் காவல்துறையினர் ஒன்றும் கடமைக்கு வேலை பார்ப்பவர்கள் இல்லையே.

ஜெர்மனியப் பொலிஸ்காரர்களை நிமிர்ந்துதான் பார்க்க முடியும். 171 சென்றி மீற்றர் உயரம். நீலநிறத்தில் மேற்சட்டை. அதிலே கறுப்பு நிறத்தில் பட்ஞ் அடித்திருக்கும். அதில் தங்க நிறத்தில் எழுத்துக்கள். தலைக்குப் போட்டிருக்கும் தொப்பி அது ஒருவித அழகு. அதைவிட மேற்சட்டைக்கு மேலே ஒரு ஜக்கட் போட்டிருப்பார்கள். பக்கெட்டுக்குள் கைத்துப்பாக்கி. அழகோ அழகு. தைரியத்தை அவர்கள் தோற்றம் காட்டிக் கொடுக்கும். ஆனால் என்னமோ அவர்களைப் பார்க்கப் பயமே வராது. முகத்தில் அப்படியொரு வசீகரம். எப்படித்தான் இவர்களை ஏமாற்றிப் போக மனம் வரும். ஆனால், வருகிறதே. அதுதான் தேவை கருதிய வாழ்வு.

பிறகு என்ன நடப்பதுதானே நடக்கும். நாமென்னவோ திட்டம் போடுகின்றோம். ஆனால், முன்னே ஒருவன் போட்டுவிட்டான் திட்டம். தர்மா அண்ணன் underground நில அறையில் இருந்தார். முதல்நாள் அலைச்சல். மாசி மாதக் கடும் குளிரில் இலங்கைச் சப்பாத்து என்னதான் பாவம் செய்யும். தாங்க முடியாத குளிரைத் தர்மா அண்ணன் பாதத்துக்குக் கடத்தியது. பனிக்குளிரில் கால் விரல்கள் விறைத்து ஊசியால் குத்துவது போன்ற வலி. வெப்பமூட்டி பொருத்திய அறை இதமாக இருந்தது. நன்றாகத்தான் உறங்கிப் போனார். அடுத்தநாள் வெளிநாட்டு அலுவலகம் சென்று சமூகநல அதிகாரியிடம் ஒப்படைத்தார்கள்.

அங்கு வாசலில் ஒரு தமிழன் நின்றானாம். அவர்களிடம் அகதி முகாமுக்கு நாங்கள் கூட்டிக் கொண்டு போய் விடுகின்றோம் என்று சொல்லித் தன்னுடைய வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போனான். சோறு தின்ற வாய் தர்மா அண்ணனுக்குத் தவியாய்த் தவித்தது.

சோறு கறி சமைத்துத் தருகின்றோம் என்று அவர் அழைத்துப் போய் நல்ல சாப்பாடு போட்டார். சோறு கண்ட இடம் சொர்க்கம் அல்லவா. சோறு கொடுத்தவன் கடைசியில் 3 நாள்கள் தங்க வைத்து சோறு போட்டதற்குக் கூலியாக 110 மார்க் கறந்து விட்டான். ஒரு மாதம் சாப்பிட வேண்டிய பணத்தை 3 வேளைச் சாப்பாடு தந்து அவன் கறந்த பின்புதான் இந்தத் தொழிலையே அவன் செய்கின்றான் என்பதும், இவன் இதற்காகவே வெளிநாட்டு அலுவலக வாசலில் தமிழனுக்கு உதவி செய்வது போல் வந்து நிற்கின்றான் என்பதும் தெரிந்தது. எப்படி எல்லாம் திருகுதாளம் போடுகின்றார்கள் என்று அன்றுதான் தர்மா அண்ணன் உணர்ந்தார்.

‘‘வாங்க உங்கள அன்னக்கிளியிட்ட கொண்டு விடுறம் என்று அவர்

தர்மா அண்ணனை அழைத்துச் சென்றார். அவர்களைப் பின்தொடர்ந்த போதுதான் தெரிந்தது அந்த அன்னக்கிளி என்பது சமூகநல அதிகாரி என்றும் விடயம். அன்னக்கிளி உண்மையில் சுந்தரக்கிளிதான். சுண்டினால் இரத்தம் வரும். பெயர் வைப்பதற்கு எம்மவருக்குச் சொல்லித்தர வேண்டுமா?

அன்னக்கிளி ஓர் அறையைப் பதிந்தபின் தர்மா அண்ணனை அந்த அறையில் விட்டார்கள். அவருக்குச் சாப்பாட்டுப் பெட்டி வழங்கப்பட்டது. உப்புச் சப்பில்லாத உணவு என்றார். எங்களுக்கு உப்பும் சப்பும் அந்த உறைப்புக்குள்ளும் பழப்புளிக்குள்ளும் தானே இருக்கிறது. அவர்கள் கொடுக்கும் சாப்பாட்டுப் பெட்டியுடன் 50 மார்க் பணமும் அவர்கள் சமைத்துச் சாப்பிடப் போகின்றோம் என்றதனால் சாப்பாட்டுச் சாமான் வாங்குவதற்கு 200 மார்க்குக்குப் பெறுமதியான பொருட்கள் வாங்குவதற்கு வவுச்சரும் கொடுத்தார்கள். அந்தப் பொருட்களை முன்னமே அந்தக் கிராமத்தில் வாழ்ந்த தமிழர்கள் அரை விலைக்கு வந்து வாங்குவார்கள். அந்தப் பணத்தை மிச்சம் பிடித்து இலங்கைக்கு இவர்கள் அனுப்புவார்கள்.

தமிழனுக்கு இது எல்லாம் சொல்லியா கொடுக்க வேண்டும்.

அங்கு வாழ்ந்த 11 மாதங்களும் சமூகநல அலுவலகம் இவர்களுக்கு வீரகேசரி பத்திரிகையும், தமிழ்ப் படக் கொப்பிகளும் கொடுத்தார்களாம். தன்னுடைய நோப்பட்ட இரண்டு கால்களையும் சத்திரசிகிச்சை செய்து குணப்படுத்திய அந்த நகரத்து அன்னக்கிளியைப் பற்றி தர்மா அண்ணன் அடிக்கடி பேசுவார். சிறந்த கவனிப்புடன் வாழ்ந்த அந்தக் கிராமத்தை விட்டுத் தர்மா அண்ணன் வேறு நகரத்துக்குப் போனதாகத் தன்னுடைய கதையைச் சொன்னார்.

இப்படி ஜெர்மனியில் புகுந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைச் சுமந்து கொண்டு தான் வாழ்கின்றார்கள். இதைவிட ஜெர்மனி நாட்டில் வாழுவதற்காக அகதி அந்தஸ்து பெறுவதற்காக ஒவ்வொருத்தரும் உருவாக்கிய கதைகள் ஏராளம். இவ்வாறு ஜெர்மனிக்கு வந்தவர்களில் ஒருவன்தான் அரவிந்தன்.

குழந்தை தத்தித் தத்தி நடை பழகுவது போல் ஜெர்மனி நாட்டைக் கற்றான். அகதிகளைக் கொண்டு வந்து ஒரு வீட்டில் விட்டால், அதில் குடிகாரர்கள் இருப்பார்கள், மரக்கறி மட்டுமே சாப்பிடுபவர்கள்

இருப்பார்கள், தாய்நாட்டிலே நன்றாகப் படித்தவர்கள் இருப்பார்கள், திருமணம் செய்வதற்காக வந்தடைந்த பெண்கள் இருப்பார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு சூழ்நிலையில் வளர்ந்தவர்கள். கல்வித் தராதரம் உயர்வு தாழ்வில் இருக்கும். இவ்வாறான கூட்டு வாழ்க்கையில் சண்டை சச்சரவுகள் வரும். தூய்மை, அசுத்தம் சேரும். அத்தனையையும் பொறுத்துக் கொண்டு வாழுகின்ற பக்குவம் உள்ளவர்கள் மட்டுமே ஒன்றாக வாழமுடியும். ஆனால் எல்லாராலும் முடியுமா?

அரவிந்தன் அட்டவணை ஒன்றைத் தயாரித்தான். இதன்படிதான் வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டும். யார் இப்படிச் சமைக்க வேண்டும். யார் இப்படித் துப்பரவு செய்ய வேண்டும். குளியலறை சமையலறை எப்படி இருக்க வேண்டும். என்றெல்லாம் ஒரு திட்டமிடுபவனாகப் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை.

எல்லாருக்கும் மண்டைக்குள்ளே ஊர்ந்து கொண்டிருக்கும் புழுவானது பணம், பணம். அது எக்கச்சக்கமாகக் குடைச்சல் கொடுத்துக் கொண்டே இருந்தது. அது சம்பாதித்தால் போதும். பட்ட கடனை வெட்டி நாட்டிலுள்ள உறவினர்களைச் சந்தோசப்பட வைக்க வேண்டும். அவர்கள் வந்த காலத்தில் சம்பாதிக்கச் சட்டம் இடம் தரவில்லை. அப்படியே ஒரு கொண்டைனருக்குள் இருப்பது போல வாழ வைத்து அப்படியே சேர்த்துக் கட்டி எல்லாரையும் திருப்பி அனுப்பும் நோக்கம் ஜெர்மனி அரசாங்கத்துக்கு இருந்தது. இவர்களோ சமூகநல அலுவலகம் கொடுக்கின்ற பணத்தை மிச்சப்படுத்தி ஊருக்கு அனுப்பி விடுவார்கள்.

அரசாங்கத்துக்குத் தெரியாமல் களவாக யாராவது வீட்டு வேலைகள் கொடுத்தால், அந்த வேலையைச் செய்து பணத்தைச் சேமிக்கத் தொடங்கினார்கள். வீடு துப்பரவு செய்வது வளவுகள் துப்பரவு செய்வது, வீட்டுக்கு வெள்ளை அடிப்பது என்று பல தரப்பட்ட வேலைகளைத் தராதரம் பார்க்காது செய்து முடித்தார்கள். எறும்பு சிறுகச் சிறுகத் தின்பண்டங்களைச் சேகரிப்பது போலப் பணத்தைச் சேகரித்துத் தாய்நாட்டுக்கு அனுப்பினார்கள்.

எவரும் களவெடுக்கவில்லை. அடுத்தவரை அடித்துப் பிடுங்கவில்லை. முயற்சி, முயற்சி இதுவே அவர்களின் உயர்ச்சியாக இருந்தது. தமிழன் எங்குச் சென்றாலும் தலை நிமிர்ந்து வாழத் தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வான். இதில் சில விதி விலக்குகள் இருந்தன.

மண்ணுக்குப் பாரமாக இயற்கை சிலரை வடிவமைக்கின்றது. எங்களை அகதிகளாக இவர்கள் ஏன் எடுத்தார்கள்? எடுத்தவர்கள் எங்களைப் பராமரிக்கத்தான் வேண்டும் என்று சமூக உதவிப் பணத்தில் சுகமாக வாழ்ந்தவர்களும், வாழுகின்றவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

ரஞ்சன் நன்றாகக் குடிப்பான். விசுவாசம் கோழி இறைச்சித் தோல்களை எல்லாம் அவித்துச் சாப்பிடுவான். ஒருநாள் ரஞ்சன் நன்றாகக் குடித்துக் குளிருக்குத் தாக்குப் பிடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த வெப்பமூட்டியிலே சலம் போனான். அதேபோல விசுவாசமும் பாத்திரங்கள் கழுவுகின்ற பேசனுக்குள் சலம் போன காரணத்தால் அந்த வீட்டில் தன்னால் வாழமுடியாது என்று சமூகநல (Sozial) அலுவலகத்திடம் கேட்டுத் தனியாக ஒரு வீட்டை எடுத்துக் கொண்டு அரவிந்தன் போய்விட்டான்.

சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது என்பதற்கிணங்க இலங்கை வாழ்க்கை முறை ஜெர்மனியில் கடினமானதாக இருந்தது. மொழி பெரிய பிரச்சினையாகப் பட்டது. கனடா சென்றால், ஆங்கில மொழியில் வேலை செய்யலாம் அல்லவா? முயற்சி செய்து நாடு கடந்து செல்லவும் இயற்கை அரவிந்தனைத் திரும்பவும் ஜெர்மனிக்கே இழுத்துத் தள்ளி விட்டது.

கனடாவுக்குச் செல்லும் போது விமான நிலையத்திலுள்ள காவல் அதிகாரி

“ஏன் கனடாவுக்குப் போகின்றாய்” என்று கேட்ட போது,

“இங்கு வேலை செய்ய அனுமதி இல்லை. படிக்க அனுப்புகின்றீர்கள் இல்லை. அதனாலேயே கனடா போகின்றேன்” என்று சொன்னான் அரவிந்தன்.

ஜெர்மனியிலிருந்து புறப்பட்டு மெக்ஸிகோ போய்ப் பின் அமெரிக்கா போய் அதன்பின் கனடா போகவேண்டும். ஆனால், மெக்சிகோ எல்லைக் காவலதிகாரியால் அரவிந்தன் பிடிக்கப்பட்டான். அங்கே இருந்து திருப்பி அனுப்பப்பட்டு பனாமாவுக்கு வந்தான். அங்கே வாழுகின்ற ஒரு தமிழன் கனடாவில் உன்னைக் கொண்டு விடுவேன். ஆனால், அங்கு யாராவது பொறுப்பு நின்று உனக்குப் பணம் தர வேண்டும் என்று சொன்னான். அரவிந்தனும் கனடாவில் இருந்த உறவினர்களுக்கெல்லாம் தொலைப்பேசியில் உதவி கேட்டான். அழுது பார்த்தான். ஆனால், யாருமே உதவ முன்வரவில்லை. அதனால், திரும்பவும் ஜெர்மனி விமான நிலையத்திற்குத் திரும்பினான்.

அப்போது போகும் போது நின்ற அதே காவல் அதிகாரி "என்ன திரும்பி விட்டாய்?" என்று கேட்டான். நிலைமையைச் சொன்ன போது ஓடித் தப்பு என்று அரவிந்தனை ஜெர்மனிக்குள் அனுப்பினான். அவன் நினைத்திருந்தால் அரவிந்தனை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியிருக்கலாம். ஆனால், கெட்ட காலத்திலும் ஒரு நல்ல காலம் இருந்திருக்கின்றது. அந்தக் காவல் அதிகாரியே திரும்பி வரும் போது இருந்ததும், அவன் நல்லவனாக இருந்ததும். இவ்வாறுதான் பிரபஞ்சம் சிலரைக் கடவுளாக அனுப்பும். இதை விட்டுவிட்டு நாம் கடவுளைத் தேடுகின்றோம்.

அரவிந்தன் ஜெர்மனியிலேயே வாழ வேண்டும் என்று இயற்கை தீர்மானித்து விட்டது.

என்ன செய்வது விதி விட்ட வழி volk hoch schule என்னும் தனியார் கல்வி நிறுவனத்தில் 10 ஆம் வகுப்பைக் கற்றுப் பரீட்சையில் சித்தியடைந்தான். அதன்பின் தளபாடங்கள், கைபிடிகள், சட்டைப் பொத்தான்கள் செய்கின்ற ஒரு கம்பனியில் பயிற்சி பெற்று அங்கேயே தரம் பிரித்தறியும் உத்தியோகத்தராகப் பணி ஆரம்பித்தான். அதைவிட நேரம் கிடைக்கும் போது உணவகத்தில் வேலை செய்யவும் துணிந்தான். கிறிஸ்தவ மோமோன் அமைப்பிலே இணைந்த காரணத்தினால் அவர்களின் உதவிகளும் அரவிந்தனுக்குக் கிடைத்தன.

கால ஓட்டத்திலே கால் பதிக்க நிலையாக ஒரு தொழில் தேவை. அதுவும் தன்னுடைய திறமைக்கு ஏற்றதாகவும் பயிற்சிகளால் ஏற்பட்ட பாண்டித்தியம் பொருந்தியதாகவும் இருக்க வேண்டும். சிநேகாவோ கற்ற தொழிலை விட்டுவிடும்படி நச்சரிக்கின்றாள். அதனால், உணவகம் ஒன்றைத் தனியாக நடத்துவதற்கு முடிவு செய்தான்.

அதற்கு எடித் உதவி செய்ய முன் வந்தாள். ஜெர்மனியப் பெண். அவளுக்கு வங்கித் தொழில். சிநேகா ஜெர்மனி வரப் போகின்றாள் என்ற செய்தி வந்ததுமே அரவிந்தன் வீட்டைத் தலைகீழாக மாற்றிப் போட்டவளா யிற்றே அவள். தளபாடங்கள் தொடங்கி வீட்டிற்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் சேகரித்துத் தன்னுடைய காதலனுடன் இணைந்து வீட்டை அழகுபடுத்தியவள். நேபாளம் அடிக்கடி சென்று வருவதனால் இந்து மதத்தில் அவளுக்கு ஈர்ப்பு அதிகம் இருந்தது. அவளுடைய வீட்டைப் பார்க்க வேண்டுமே பிள்ளையாரும் சிவபெருமானும் அவள் வீட்டில் அழகாகக் குடி வந்திருக்கின்றார்கள். தாவரவியல் பூங்காவில்

வருடம் ஒருமுறை நடக்கின்ற விழாவில் நேபாள நாட்டுப் பொருள்கள் அடங்கிய கடை போடுவாள்.

சிறந்த நண்பனான அரவிந்தன் உணவகம் தொடங்கப் போகின்றான் என்ற போது முழுக்க முழுக்க உறுதுணையாக இருந்தவள்தான் எடித். தன்னுடைய தந்தையால் இளவயதில் பாலியல் வன்முறைக்கு ஆளானவள்தான் எடித். இளவயதிலேயே வீட்டை விட்டுப் பிரிந்து தனியாளாக வாழ்ந்த ஆளுமை எடித்துக்கு இருந்தது.

அரவிந்தன் வேலைக்குப் போய்விட்டால் தன்னுடைய காதலன் டீற்றருடன் சேர்ந்து அரவிந்தன் உணவகத்தை அழகுபடுத்துவாள். அதேபோல் ஒரு பத்திரிகை நிறுவனத்தில் பொறுப்பான பதவியில் இருந்த தன் காதலன் டீற்றரிடம் பணம் பெற்று அரவிந்தன் உணவகம் திறப்பதற்கு உதவி செய்தாள். “ஓம் கணேசா நேபாள், இந்திய உணவகம்” என்ற பெயரிலே அமோகமான திறப்புவிழாவைச் செய்து முடித்தாள்.

உணவகம் திறக்கவும் தன்னுடைய வேலையிலிருந்து ஓய்வூதியம் பெற்றாள். உணவு பரிமாறும் வேலையைச் செய்வதற்காகச் சுடிதார் அணிந்தாள். தமிழர்கள் போல் நெற்றிப் பொட்டை வைத்தாள். உணவுக் கோப்பையைக் கையிலெடுத்து இலாவகமாக வாடிக்கையாளர்களுக்கு உணவு பரிமாறுவாள். ரேப்ரெக்கோடரில் இந்திய இசையை ஒலிக்கவிட்டு நடனம் ஆடுவாள். கலகலப்பாக உணவகம் பிரபல்யமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் உணவருந்துவதற்கு மேயர் தன்னுடைய நண்பியுடன் வருவார். எப்போதும் ஓர் இடம் அவருக்குப் பதிவு செய்யப்படும். அந்த இடத்திற்கு மேலாக அழகான பிள்ளையார் படம் துணியிலே வரையப்பட்டிருந்தது. மாதத்தில் ஒரு தடவை சோலிங்கன் அரசாங்க வைத்தியசாலை மருத்துவர்கள் உணவருந்த வருவார்கள். உடனுக்குடன் சமைத்துப் பரிமாறப்படும் உணவு என்ற காரணத்தால் ஓம் கணேசா ஒரு பெயர் பெற்ற உணவகமாகச் சோலிங்கன் மக்களால் கருதப்பட்டது. ஜெர்மனியர்களுக்கு ஏற்ற வகையிலே உறைப்பு உணவைத் தரம் பிரித்திருந்தான் அரவிந்தன்.

டுசுல்டோர்ப் நகரில் அடிக்கடி நடக்கின்ற வியாபாரக் கண்காட்சிக்கு உலகநாடுகளிலிருந்து பலர் கலந்து கொள்வார்கள். அது ஒரு தேசிய

விமானநிலையம் உள்ள நகரம். அந்தக் கண்காட்சிக்கு வரும் பலர் சோலிங்கனிலும் ஹொட்டல் எடுத்துத் தங்குவது வழக்கம். அதற்காக சோலிங்கனில் தங்கியிருக்கும் இந்தியர்கள் ஓம் கணேசாவுக்கு உணவருந்த வருவது வழக்கம். அன்று ஒருநாள் சிநேகா அவர்களுக்கு உணவு கொடுப்பதற்காகச் சென்றாள்.

ஜெர்மனியிலே குழாயால் நாம் எடுக்கும் தண்ணீருக்கு மாத்திரமல்ல, பாத்திரங்களையோ எதனையோ கழுவிக் கொட்டும் தண்ணீருக்கும் நகராட்சி நிறுவனத்துக்குப் பணம் செலுத்த வேண்டும். வழமையாக வாடிக்கையாளர்கள் உணவகத்தில் தண்ணீர்ப் போத்தலை வாங்கியே நீரருந்துவார்கள்.

இந்திய விருந்தினரைக் கவனிப்பதற்காக சிநேகா சென்றாள். அங்கே வந்து அமர்ந்திருப்பவர்கள் கால்களை இருக்கையின் மேல் வைத்து இருப்பதை அவதானித்தாள். அருகே மேயர் அமர்ந்திருந்தார். சத்தமாகப் பேசிக் கொண்டிருந்தவர்களிடம் கால்களைக் கீழே இறக்கும்படிக் கூறினாள்.

தமக்குக் குழாய்த் தண்ணீர் போதும் என்றார்கள். குழாய்த் தண்ணீருக்கு அரவிந்தன் பணம் வசூலிப்பதில்லை. அது ஒரு நன்கொடையாகச் செய்து கொண்டிருந்தான். ஆனால், அவர்கள் அடிக்கடி தண்ணீர் கேட்டதை அறிந்த அரவிந்தன் மேலதிகமாகக் கொடுப்பதை நிறுத்தச் சொல்லிவிட்டான்.

வந்திருந்த இந்திய விருந்தினர்கள் சுடுதண்ணீர் போத்தலில் மதுபானம் கொண்டு வந்து ஊற்றிக் குடித்துக் கொண்டிருந்தார்கள். அதுகூடப் பார்ப்பதற்குக் கேவலமாக இருந்தது. அவர்களின் அட்டகாசத்தைப் பார்த்த அரவிந்தன். அவர்கள் அருகே வந்தான்.

“இஞ்ச பாருங்கள். இது ஜெர்மனியர்கள் வருகின்ற உணவகம். எப்போதாவது வருகின்ற உங்களுக்காக அந்த வாடிக்கையாளர்களை நான் இழக்கக் கூடாது. இருக்கையில் கால்களை வைத்து இருத்தல் கூடாது. கொஞ்சம் நாகரிகமாக நடந்து கொள்ளுங்கள்” என்று பேசி அவர்களை அனுப்பி விட்டான்.

இந்தியாவிலிருந்து கண்காட்சிக்கு வருகின்ற நாகரிகமானவர்களும் உணவகத்திற்கு வருவார்கள். பணத்தை மட்டுமே வைத்துக் கொண்டு

பண்பு தெரியாதவர்களும் வருவார்கள். பலவித அனுபவங்களை இந்த உணவகம் சேர்த்துத் தந்தது.

உறைப்பையே விரும்பாத ஜெர்மனியர்களிடையே தமிழர்களை விட அதிகமாக உறைப்பு உணவு உண்ணும் ஜெர்மனியர்களும் இருந்தார்கள். பல நண்பர்களை இந்த உணவகம் பெற்றுத் தந்தது. அன்புக் காதலர்கள் இருவர். அடிக்கடி வருவதும் பேசி மகிழ்வதும் வழக்கமாக இருக்கும். வாடிக்கையாளர்கள் குறைந்தபின் அரவிந்தனும், சிநேகாவும் அவர்களுடன் இருந்து பேசி மகிழ்ந்திருப்பார்கள். ஜெர்மனியர்களுடன் பழகியதில் அவர்களுடைய மனம் பக்குவப்பட்ட சம்பவங்களும் உண்டு. பக்குவப்படுத்துவதுதானே பண்பாடு.

ஒருநாள் பௌள் என்னும் வாடிக்கையாளன் தனியே உணவருந்த வந்தான். தன் காதலி பியர்கிட் அவனுடன் வரவில்லை.

முதலில் சிநேகாதான் அவனருகே போனாள்.

“ஹாய் பௌள். எப்படிச் சுகம். ஸ்ரீலங்கா போனீர்களே. எப்படி இருந்தது? அட பியர்கிட் எங்கே? வரவில்லையே. நாங்கள் 2 மாதங்களாக உங்களை மிஸ் பண்ணினோம்” என்று கேட்டாள்

திறந்து விட்ட குழாய் நீர் போலச் சரசரவென்று பௌளினுடைய கண்களிலிருந்து கண்ணீர் கொட்டத் தொடங்கியது. கையில் கொண்டு வந்த பியர் தட்டை வைத்துவிட்டு அவனைக் கட்டிப் பிடித்து.

“அமைதியாக இரு பௌள். நான் கேட்கக் கூடாததைக் கேட்டு விட்டேன் போல இருக்கிறது. பியரைக் குடி. பிறகு பேசுவோம். என்ன சாப்பிடப் போகின்றாய்” என்று சிநேகா கேட்டாள்.

கண்களைத் துடைத்த பௌள்,

“கஸ்மீர் சிக்கின் கொண்டு வா சிநேகா” என்றான்.

பியர்கிட்டுக்கு என்ன நடந்திருக்கும்? ஏதாவது வருத்தமோ? இல்லை ஸ்ரீலங்காவில் ஏதாவது நடந்துவிட்டதோ? இந்த பௌளிடம் கேட்க முடியாது இருக்கிறதே. பார்ப்போம். பிறகு இவர் வேலை முடிந்தபின் நைசாகக் கதையைப் பிடுங்கலாம் என்று நினைத்தாள்.

சிநேகாவுக்கு பியர்கிட்டை நன்றாகப் பிடிக்கும். அழகும் அன்பும் சேர்ந்திருக்கும் அற்புதம் அவள். உணவு சாப்பிட்ட பின் ரிப்ஸ் கொடுக்கும்

போது கையில் கிடைக்கும் 20 அல்லது 50 ஐக் கூட வைக்கத் தயங்க மாட்டாள். கண்டவுடன் கட்டிப்பிடித்து அன்பைக் கொட்டுபவள். அவர்கள் ரெஸ்டோரன்ட் வந்தால், அதிகாலை 1 மணிவரை அரவிந்தனும் சிநேகாவும் கதைத்துக் கொண்டிருப்பார்கள். சிலவேளை சுருதி நித்திரையால் எழும்பி ரெஸ்டோரன்ட் கதவைத் தட்டிக் கொண்டிருப்பாள். பனிப்பொழிவில் நடுங்கிக் கொண்டு நிற்கும் சுருதியைத் தூக்கிக் கொண்டு போய்விடுவாள் சிநேகா. இவ்வாறு பல நாட்கள் நடந்திருக்கிறது.

கஸ்மீர் சிக்கனுடன் வந்தாள் சிநேகா. மேசையில் உணவு பரப்பப்பட்ட போது சிநேகாவின் கையைப் பிடித்தான் பௌள்.

‘‘பியர்கிட்டுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்பதை நீ நம்புகிறாயா?’’ என்றான்.

‘‘நைன். இல்லை. இது என்ன கொடுமை. என்னால் நம்பவே முடியவில்லை. சந்தோசமாகத்தானே ஸ்ரீலங்கா போனீர்கள்?’’

‘‘இப்போது அவளுக்கு வேறு ஒரு போய் பிரண்ட். என்னை பியர்கிட்டுக்குப் பிடிக்கவில்லையாம். அவளுக்குப் பிடிக்கவில்லை என்றால், நான் அவளை வற்புறுத்த மாட்டேன்.’’

‘‘பௌள்! ஒரு கதவு மூடினால், இன்னுமொரு கதவு திறக்கும். ஓடுகின்ற நீர் ஓர் இடத்தில் நிற்காது. வாழ்க்கையும் அப்படித்தான். நீ பார். விரைவில் உன்னோடு வேறு ஒரு கெஸ்ட் புதிதாக எங்களுக்குக் கிடைக்கப் போகிறது.  ரேக் இற் ஈசி. முதலில் கஸ்மீர் சிக்கின் வாடுகிறது. பாவம் அதை வயிற்றுக்குள் அனுப்பு’’ என்று சுவாரஸ்யமாக அவனுடைய எண்ணத்தின் திசையைத் திருப்பினாள் சிநேகா. கதையும் சிரிப்பும் கும்மாளமுமாகப் பேசிக் கொண்டு இரண்டு பறவைகள் எப்படிக் கொஞ்சிக் குலாவுமோ அப்படி இருந்த இணைக்கும் பிடிக்காமல் போகுமா?  என்று சிந்தித்தபடி நகர்ந்தாள் சிநேகா.

இந்த மூளை இருக்கிறதே. அது சிலவேளை இப்படியான திருகுதாளங்களைச் செய்யும். எதிர்பாராத விதமாகச் சில ஒவ்வாமைகளைக் காட்டும். இதற்குக் காரணங்களைத் தேடவோ, குற்றங்களைச் சுமத்தவோ கூடாது.

இரண்டு மாதங்கள் கழிந்திருக்கும் 4 இருக்கைகளை பியர்கிட் பதிவு செய்தாள். குறித்த நேரம் நால்வரும் வந்தனர். கண்களில்

ஆச்சரியத்தைக் காட்டாமல் சிநேகா மகிழ்ச்சியுடன் கைகளைக் குலுக்கி அவர்களை வரவேற்று இருக்கையில் அமர்த்தினாள். பியர்கிட்டின் புதிய காதலனும், பௌளின் புதிய காதலியும் சிநேகாவுக்கு அறிமுகமானார்கள். அதே சிரிப்பு மீண்டும் உணவகத்தில் நிறைந்தது.

இதுதான் வாழ்க்கை. எத்தனை பரந்துபட்ட மனம். துரோகம் செய்து விட்டாள் என்று முகத்தில் அசிற் ஊற்றவில்லை. அவளுடைய குடும்பத்தைச் சின்னாபின்னமாக்க முயற்சிகள் எடுக்கவில்லை. கொலை செய்ய முயலவில்லை. இது மனத்தோடு சம்பந்தப்பட்ட விடயம். மனம் யாரில் எப்படிப் பிடித்துப் போகும். எப்போது மாறும் என்று சொல்ல முடியாது. அதைப் புரிந்தால் மகிழ்ச்சி. புரியாவிட்டால் மனவழுத்தம்.

எடித்துடைய சிநேகிதன் வார இறுதி 2 நாட்களே எடித் வீட்டுக்குப் போய்த் தங்குவான். இருவரும் சந்திப்பார்கள். இது ஒரு ஒப்பந்தம். அந்த நாட்களில் ஒருநாள் எடித் உணவகத்தில் உதவி செய்ய வந்துவிடுவாள். அது போலவே நண்பன் டீற்றரும் வந்துவிடுவான் பியர், தேநீர் தயாராகும் இடத்தில் டீற்றர் பணிபுரிவான். இதன்பின் இருவரும் ஒன்றாக எடித் வீட்டுக்குப் போவார்கள். தம்முடைய வாழ்க்கையை இந்த உணவகத்தில் அர்ப்பணித்த ஜெர்மனியர்கள் போல் எத்தனையோ அன்பு உள்ளங்களை அரவிந்தன் பெற்றிருந்தான்.

அன்று டீற்றரின் தந்தை இறந்துவிட்டார். இருவரும் வேலைக்கு வரவில்லை. அரவிந்தனாலோ அவர்கள் வீட்டுக்குப் போக முடியவில்லை. உணவகத்திலோ வேலைப்பழு அதிகம். அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை சனக்கூட்டம் உணவகத்தில் நிறைந்திருந்தது.

“சிநேகா திங்கட்கிழமை டீற்றர் வீட்டுக்குப் போக வேண்டும்” என்று சிநேகாவிடம் சொன்னான்.

ஆனால், அன்றைய தினம் முடியாது என்று செவ்வாய்க்கிழமை போவதற்கு ஆயத்தமானார்கள். திங்கட்கிழமை உணவகத்தில் சிநேகா பரபரப்பாக இருந்தாள். வருகின்றவர்களுக்குப் படி ஏறும்போதே சந்தனக்குச்சியின் வாசம் மூக்கினுள் நுழைய வேண்டும். பிள்ளையார் சிலை மாலைபோட்டு இருக்க வேண்டும். பிள்ளையார் படம் போட்ட மின்சார விளக்குகள் பளீச்சிட வேண்டும். இவை உணவகம் திறக்க முன் சிநேகா செய்கின்ற பணி. எல்லாவற்றையும் முடித்தபின் முன் கதவைத் திறக்கின்றாள். டீற்றரும் தாயும் உணவருந்த உள் நுழைகின்றார்கள்.

இருவரையும் உள்ளே அழைத்து இருக்கையைக் காட்டினாள். டைலைட் என்று தன்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தாள். ‘‘குடிப்பதற்கு என்ன வேண்டும்?’’ என்று கேட்டபடி டீற்றருடைய தாயைப் பார்த்து ‘‘எப்படி இருக்கின்றீர்கள்?’’ என்று கேட்டாள்.

‘‘இப்போதுதான் Golf விளையாடி விட்டு வருகின்றோம்’’ என்றாள்.

‘‘வீட்டிலே இருந்தால் அம்மா யோசித்துக் கொண்டிருப்பா. அதனால், விளையாடக் கூட்டிப் போனேன்’’ என்றான் டீற்றர்.

எம்முடைய கலாசாரத்தில் ஓர் வருடத்துக்குக் கோயிலுக்குப் போகக்கூடாது. விசேடங்களில் கலந்து கொள்ளக்கூடாது. 30 நாட்கள் தீட்டு என்று எங்கும் போவதில்லை. உறவினர்கள் மரணம் சம்பவித்த வீட்டிலேயே தங்குவார்கள். மரணம் சம்பவித்த 30 நாட்களுக்கு அயலவர்கள் சமைத்துக் கொண்டு கொடுப்பார்கள். சமைத்துக் கவனத்தை வேறு பக்கம் திருப்ப விடமாட்டார்கள். வீட்டுக்குத் துக்கம் விசாரிக்க வருபவர்கள் கூட இறந்தவர் பற்றியே பேசி உறவினர்களின் துக்கத்தை மிதப்படுத்தி அழ வைத்துவிட்டே செல்வார்கள்.

வாழ்க்கையில் இது நடப்பது நிச்சயம். அதை நினைத்து வாழுகின்ற வாழ்க்கையைத் தொலைக்கக் கூடாது என்னும் தத்துவத்தைப் புரிய வைப்பதாக இந்தச் சம்பவம் இருந்தது. இந்த மனப்பாங்கு தமிழர்களுக்கு ஜெர்மனியர்களை அன்பில்லாதவர்கள் என்று அடையாளம் காட்டுகிறது. இந்த இடத்துக்கு வருவதற்கு நாம் இன்னும் பல வருடங்கள் கடக்க வேண்டியுள்ளது.

நாட்கள் நகர்கின்றன. டீற்றருடைய அம்மா ஹென்சலிடம் அடிக்கடி சிநேகா சென்று வருவாள். போகும் போதெல்லாம் உன்ரூவிடம் போய் வருவோமா என்று கேட்பார். சுடலைக்குப் போவோம் என்று ஒருநாள் கூட சொற்கள் தடுமாறியதில்லை. உன்ரூவின் வீடு அழகாக இருப்பதற்காக ஒவ்வொருநாளும் பூவால் அலங்கரிப்பாள். அங்கு பதியமிட்டிருக்கின்ற பூமரங்களுக்கு நீர் பாய்ச்சுவாள். அமைதியாக அவர் உறங்குவதற்கு இடையூறின்றி மெதுவாகப் பேசுவாள். மொத்தத்தில் உன்ரூவுடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றாள்.

‘‘நாங்கள் சுடலைக்குப் போனால், வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன் தலைமுழுகிய பின்புதான் வீட்டுக்குள் போவோம்’’ என்று சிநேகா சொன்னபோது,

“சிநேகா நீ என்ன சொல்கிறாய். உன்னோடு வாழ்ந்து, உன்னைச் சிரிக்க வைத்து, மகிழ வைத்து உன்னோடு உணவருந்தி மகிழ்ந்திருந்தவர்கள். அவர்கள் தொற்றுநோய்க் கிருமிகள் என்று நினைக்கின்றாயா?” என்று ஹென்சல் கேட்ட போது ஆயிரம் சம்மட்டி கொண்டு அவளுடைய தலையிலே அடித்தது போல சிநேகா உணர்ந்தாள்.

வாழ்க்கை ஒரு கல்விக்கூடம் ஒவ்வொரு மனிதனும் ஆசிரியனே.

சிநேகா ஒவ்வொரு மாதமும் மாதவிடாய்த் தொல்லையால் அவதியுற்றாள். 3 நாட்கள் வயிற்றைப் பிய்த்து எறிய வேண்டும் போன்ற வலி இருக்கும். இரத்தப்போக்கு குறைகின்ற போது எதுவுமே நடக்காதது போல் வயிறு மௌனமாக இருக்கும்.

அன்று சுருதிக்கு 10 ஆவது பிறந்தநாள் விழா. நண்பர்கள், உறவினர்கள் எல்லோரையும் உணவகத்திற்கு அழைத்திருந்தார்கள். மெஜிக் விளையாட்டுக்கள் செய்வதற்காக அரவிந்தனுடைய ஓர் இந்திய நண்பன் வந்திருந்தார். சிறுவர்கள் எல்லோரும் மிகச் சந்தோசமாகக் கலகலப்பாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால், சிநேகாவால் கலகலப்பாக இருக்க முடியவில்லை. இரத்தப்போக்கு அதிகமாக இருந்தது. அடுத்த வாரம் மருத்துவரிடம் சென்றாள்.

“உங்களுடைய கருப்பையினுள் தசைக்கட்டிகள் உருவாகி யிருக்கின்றன. அதனால் எந்தவிதப் பிரச்சினைகளும் இல்லை. உங்களால் வயிற்றுவலி தாங்க முடியுமானால் தாங்குங்கள். இல்லையென்றால், கருப்பையை வெளியே எடுக்க வேண்டும். யோசித்துவிட்டு வாருங்கள்” என்று அறிவுரை கூறினார்.

கருப்பை என்பது குழந்தைகள் உற்பத்தியாகும் ஆய்வுக்கூடம் தானே. அவள் இன்னுமொரு பிள்ளையைப் பெற்றெடுக்கும் எண்ணமே இல்லாது இருந்தாள். மாதாமாதம் இறந்து மீளும் இந்த வாழ்க்கை தேவையா? அரவிந்தனும் சிநேகாவும் முடிவு செய்தார்கள். உடலுக்குள்ளே ஓர் உறுப்பு வெட்டி எறியப்படப் போகின்றது. ஒருமுறை சிநேகாவின் தாய்க்கும் இந்த நிலை ஏற்பட்டது. மனிதனுக்கு இருந்த வால் தேவை யின்மை கருதி தானாகவே அகன்றதல்லவா! ஆண்களுக்கு வளரும் மார்பகம் தேவையின்மை கருதி நிறுத்தப்பட்டதல்லவா? அதேபோல் குழந்தை வேண்டாம் என்றால் கருப்பை எதற்கு?

மருத்துவரும் சத்திரசிகிச்சைக்கு நாள் குறித்துக் கொடுத்தார். முதல்நாள் மருத்துவமனையில் தங்க வேண்டும். தங்குவதற்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு சிநேகாவும் அரவிந்தனும் மருத்துவமனை நுழைந்தார்கள். மருத்துவமனையிலே

“இறுதியாக மாதவிடாய் எப்போது வந்தது?”

“மாதவிடாய் நின்று இரண்டு நாட்கள்”

“அப்படியென்றால் ஒபரேசன் செய்ய முடியாது 3 வாரம் கழித்து வாருங்கள். பரிசோதனை செய்த பின்தான் கத்தி வைக்க முடியும்.”

“ஏன்... இன்றைக்குத்தானே ரேர்மின் தந்தீர்கள்” என்றாள் சிநேகா.

“தற்செயலாக உங்களுக்குக் குழந்தை உருவாகும் சாத்தியமிருந்தால், எங்களால் ஆபரேஷன் செய்ய முடியாது. கத்தோலிக்க நிறுவனங்கள் எங்களுடன் பிரச்சினை எடுக்கும். உங்களுக்குப் புரியும் என்று நினைக்கின்றேன்” என்றார் மருத்துவர்.

எது, எப்போது எப்படி நடக்குமோ அப்படித்தானே நடக்கும். கருப்பை உருவாக வேண்டியிருந்தது. உடலுக்குள் உருவாகியது. பிள்ளை சுமந்தது. எப்போது பணி முடித்து இறக்க நினைக்கிறதோ அப்போது என் உடலை விட்டு நீங்கும் என்று நினைத்தவளாய்த் திரும்பினாள். சத்திரசிகிச்சைக்கான புதிய திகதியை எடுத்தார்கள். வீடு திரும்பினார்கள்.

அடுத்த திகதிக்கு மருத்துவமனைக்குச் சென்று கருப்பையில் குழந்தை இல்லை என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பின் கருப்பையை வெட்டி எடுத்தார்கள். 3 நாட்கள் மருத்துவமனையில் இருந்தாள். சுருதியையும் வெட்டியே எடுத்தார்கள். அப்போது இருந்த வலிக்கு இந்த வலி பெரிதாக இருக்கவில்லை.

சுருதியைப் பெற்றெடுத்தபோது ஏற்பட்ட அனுபவமே அவளுக்குப் புதியது. ஜெர்மனி வந்து 6 மாதங்களில்

அந்தரங்கங்களில் அற்புதம் தோன்றும்
அழுக்கென்பார் இரத்தத்தில் சொர்க்கம் பிறக்கும்
தலையணை மந்திரம் தாரக மந்திரமாகும்
இருட்டறை எதிர்காலத்தைக் காட்டும் - அங்கு
மனிதப்படைப்பு புனிதமாய் உருவெடுக்கும்

பலரைத் தோற்கடித்து சுருதி வயிற்றுக்குள் நுழைந்துவிட்டாள். வயிற்றைக் குமட்டி வாந்தி எடுக்கத் தொடங்கினாள். அரவிந்தன் பணிக்குச் சென்றுவிடுவான். அவன் வேலை செய்யும் அறையில் தனியாக அவனுக்குத் தொலைப்பேசி இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. அரிசியை ரைஸ் குக்கருக்குள் போட்டுச் சமைப்பாள். கரட் வெங்காயத்தைச் சிறிதளவு வதக்குவாள். சோற்றுடன் சேர்த்து உண்பாள். அவர்களுடைய வீட்டுக்கு அருகாமையில் இருந்த கமலா இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தாள். இவள் சிலவேளைகளில் சிநேகாவுக்கு உணவு சமைத்து எடுத்துக் கொண்டு வருவாள். எதைச் சாப்பிட்டாலும் வாந்தி வரும். ஆனாலும் பசிக்கும். குழந்தைக்குத் தலைமயிர் வளருகின்றது என்று வயதானவர்கள் கூறிய ஞாபகம் வந்தது. அப்போது வாந்தி கூட வெறுப்பைத் தரவில்லை.

நோயும் இன்பமாகும் காலம் கர்ப்ப காலம். அரவிந்தன் பணி முடிந்து வீட்டிற்கு வந்த பின் சிநேகாவை அழைத்துக் கொண்டு அருகே இருந்த பூங்காவுக்கு நடக்கப் போய்விடுவான். வீட்டுக்கு வந்தால், விதவிதமாகச் சமைத்துப் போடுவான். தாய் இறந்து 1 வருட காலமே ஆகியிருந்ததால் சிநேகாவுக்கு தாயின் கவலை அடிக்கடி வந்து போனது. அது ஒரு மனவழுத்தத்தை அவளுக்குத் தந்தது. தேவையில்லாமல் அரவிந்தனைக் காணும்போது அணைத்துக் கொண்டு அழுவாள். அப்போது புரியவில்லை இதுவும் ஒரு மனவழுத்தம் என்னும் உண்மை. இதுதான் கர்ப்ப காலங்களில் பெண்கள் கணவனைத் தேடுகின்றார்களோ?

அரவிந்தன் கர்ப்பம் சம்பந்தமான ஜெர்மனி புத்தகங்கள் எல்லாம் வாங்கி வாசித்து, அதுபோலவே சிநேகாவுக்குச் செய்து பார்ப்பான். பாலிலே குளிக்க விட்டான். பாலூறுமென்று கரட் ஜுஸ் குடிக்க வைத்தான், மரக்கறிகளை அரை அவியலில் அவித்துக் கொடுப்பான். விதம் விதமான பழங்களை நறுக்கி வைப்பான். எடித் அடிக்கடி வந்து சிநேகாவை வெளியிலே அழைத்துச் செல்வாள். இத்தனை கவனிப்பு இருந்தும் சிநேகாவுக்குச் சத்திரசிகிச்சை செய்தே பிள்ளையை வெளியே எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

குறிக்கப்பட்ட நாளுக்குப் பிள்ளை பிறக்கவில்லை. ஒரு வாரம் தாமதமாகிவிட்டது.

மருத்துவமனையிலே சிநேகாவை நிறுத்திவிட்டார்கள். நாளை பிள்ளை பிறப்பதற்குரிய அறிகுறிகள் இருக்கின்றன என்று அறிவித்துவிட்டார்கள்.

நாளைக்காலை வரும்படி அரவிந்தனை அனுப்பி விட்டார்கள். இரவிரவாகச் சிநேகாவால் தூங்க முடியவில்லை. வயிற்றுக்குள் இருந்து வெளியே வர பிள்ளை முயற்சிகளை மேற்கொண்டது. கர்ப்பப்பை வலி கண்டு துடித்தது. குழந்தையின் முயற்சி விபரீதத்தில் முடிந்தது. தொப்புள் கொடியில் தன்னுடைய தலையை இறுக்கிக் கொண்டு அசைய முடியாது விழித்த குழந்தையை உடனடியாக வெளியே கொண்டு வரவேண்டும் என்று மருத்துவமனையில் துரிதப்படுத்தினர்.

காலைவேளை மருத்துவமனையிலிருந்து அரவிந்தனுக்கு அழைப்பு வந்தது.

“உடனடியாக மருத்துவமனைக்கு வரவும்”

ஏனென்று கேட்ட அரவிந்தனிடம்

“வாருங்கள் சொல்லுகின்றோம்” என்றார்கள். என்ன நடந்தது என்று தெரியாமல் அரவிந்தன் கால்கள் தானாக நடந்தன. அப்போது அரவிந்தனிடம் சொந்தமாக வாகன வசதி இருக்கவில்லை. அவசரத்துக்குக்கூட யாரிடமும் உதவி கேட்கும் பழக்கம் அவனுக்கு இல்லை. பேருந்து உதவியுடன் மருத்துவமனையை அடைந்தான்.

“என்ன நடந்தது? ஆபரேஷன் செய்துதான் குழந்தையை வெளியே எடுக்க வேண்டுமாம்.”

“ஏன்? பொறுங்கள் வாறன்” என்று அரவிந்தன் மருத்துவரைப் பார்க்க அறையை விட்டு வெளியேறும் சமயம் மருத்துவரும் ஒரு தாதியும் அறைக்குள் வந்தார்கள்.

“நேற்று நோர்மலாகக் குழந்தை பிறக்கும் என்று தானே சொன்னீர்கள். இன்று என்ன திடீரென்று...” என்று அரவிந்தன் கோபமாகக் கேட்டான்.

“அரவிந்தன் இன்று வரை நாங்கள் அப்படித்தான் நினைத்தோம். இரவு உங்களுடைய குழந்தை திரும்ப முயற்சி பண்ணியிருக்கிறது. அது தொப்புள் கொடிக்குள் தலையை நுழைத்து விட்டது. நீங்கள் உடனே கையெழுத்துப் போட்டாலேயே குழந்தையைச் சுகமாக எடுக்க முடியும்“ என்று மருத்துவர் கூறினார்.

வேறுவழியில்லாமல் அரவிந்தன் ஒப்புதல் கையெழுத்து இட்ட மறுநிமிடமே, சத்திர சிகிச்சைக்கான ஆடை சிநேகாவுக்கு அணியப்பட்டது.

கழுத்து மட்டும் உள்நுழையும் வெள்ளை நிறத்தில் நீலப் புள்ளி போட்ட மேலாடை முழங்காலுக்கு மேல் வரை நீண்டிருந்தது. கைகளை இலகுவாக நுழைக்கும் வண்ணம் சட்டையின் இரண்டு கைகளும் நீண்டிருந்தன. பின்புறம் கழுத்துப் பகுதியை இணைக்கும் ஒரு நாடா இருந்தது. பின்புறம் திறந்த படியே இருந்த ஆடையானது சத்திர சிகிச்சைக்காகக் கட்டிலில் போட்டால் முதுகிலே எந்தவித அழுத்தத்தையும் தராது.

சத்திரசிகிச்சைக்கு சிநேகா ஆயத்தமானாள். மனத்திலே பயத்தை விடக் கவலையே ஏற்பட்டது. தன்னுடைய அம்மாவை நினைத்துப் பார்க்கின்றாள். என்னுடைய மகிழ்ச்சி எல்லாவற்றையும் கூடவே இருந்து அனுபவித்த அம்மா, இன்று இந்த நிலையில் என்னுடன் இல்லையே என்ற கவலை நெஞ்சுக்குள் அழுத்தியது. அவளுக்கு எங்கே தெரியப் போகிறது. தாய் கூடவே அவளுடன் பயணிக்கின்றாள் என்ற சங்கதி.

முள்ளந்தண்டிலே ஊசி போடும் போது அரவிந்தன் உள்ளே வர எத்தனித்தான். அவனை உள்ளே வர அனுமதிக்கவில்லை. முள்ளந்தண்டை வெட்டிக்கூறு போடுவது போன்ற வலி எடுத்தது. வாய்விட்டு அழுதாள் சிநேகா. இந்த ஊசி போடக்கூடாது என்றுதானே அரவிந்தன் கூடுதலான கவனத்தை சிநேகாவில் செலுத்தினான். முடிவில் என்ன நடந்தது. அடிவயிற்றின் கீழே விறைக்கப் பண்ணிக் குழந்தையை வெளியே எடுப்பதற்காகவே இந்த ஊசியை முள்ளந்தண்டிலே போடுகின்றார்களாம்.

மயக்க மருந்து எடுத்துக் கொண்டால் பிள்ளையும் உறங்கி விடும் என்று இந்த முறையைக் கையாளுவதாக அவர்கள் சொன்ன போது இத்தனை மாதங்களும் அதிக கவனம் எடுத்தது வீண் போனது. பிள்ளையைக் கத்தி வயிற்றிலே வைக்காமல் பெற்றெடுக்க வேண்டும் என்று எண்ணிய எண்ணமும், எடுத்த முயற்சிகளும் வீணாகின. இப்படித்தான் இந்தக் குழந்தை உலகத்துக்கு வரவேண்டும் என்பது விதியானால், அப்படித்தான் வரும்.

ஒரு மாதமாக அவளால் சுயமாக எதுவுமே செய்ய முடியவில்லை. செல்லப்பிள்ளையாக உடல் வளைக்காது வாழ்ந்த சிநேகாவால்

காயப்பட்ட மேனியைத் தாங்க உடல்வலு போதாமல் இருந்தது. எப்படியெல்லாம் இந்தப் பெண்கள் முறிந்து தம்முடைய உடலை வருத்தி வேலை செய்கின்றார்கள். 7 பிள்ளைகள், 12 பிள்ளைகள் என்று பெற்றெடுக்கின்றார்களே. எப்படித்தான் முடிகிறது என்று எண்ணினாள்!

அப்போதே அரவிந்தனும் சிநேகாவும் இதுதான் எங்களுக்கு முதல் பிள்ளையும் கடைசிப்பிள்ளையும் என்று முடிவெடுத்தார்கள்.

இவ்வாறு தன்னுடைய முதல் ஆபரேஷன் அனுபவத்தின் பின் இரண்டாவதாக அவளுக்கு ஏற்பட்ட ஆபரேஷன் அனுபவம். கருப்பை முழு மயக்கத்திலேயே வெளியெடுக்கப்பட்டது. என்னதான் இருந்தாலும் கூடவே பிறந்ததை வெளியே எடுக்கும் போது சிறிது மனச்சங்கடம் இருக்கும் அல்லவா? இருந்தாலும் 3 ஆம் நாளே நடப்பதற்கு இலகுவாக இருந்தது. வலிகூடப் பெரிதாகத் தெரியவில்லை. அவள் வாழ்ந்து பழகிவிட்டாள். புலம்பெயர்ந்த வாழ்வு வாழ்க்கைச் சுமையை அவளுக்குக் கற்பித்து விட்டது.

உணவகத்தில் ஓடியாடி வேலை செய்தது. அரவிந்தனின் வேலைச்சுமையால் ஏற்படும் ஆத்திரத்தைப் பழகிக் கொண்ட மனம், ஒவ்வொரு நாளும் உணவகத்தை அழகுபடுத்தல் என்னதான் பட்டதாரியாக இருந்தாலும் தேவைப்பட்டால் மலசலக்கூடம் கூடத் துப்பரவு செய்ய வேண்டியிருக்கும். சொந்தப் பணியகத்தில் வேலைக்கு அமர்த்தியவர்கள் விடுப்பு எடுத்தால், உரிமையாளர்கள்தானே செய்ய வேண்டும். சுருதியை 10 வயதுவரை தனியாக வளர்த்தெடுக்கப் பட்டபாடுகள். இவையெல்லாம் உடலாலும் உள்ளத்தாலும் சிநேகாவைப் பதப்படுத்தியிருந்தன.

4 வாரங்கள் கவனமாக இருக்க வேண்டும். அதற்குப் பிறகு நீங்கள் குதிக்கலாம், ஓடலாம் துள்ளித் திரியலாம் என்றார்கள். அவர்கள் சொல்வதென்ன 13 வயதிலிருந்து இந்த மாதவிடாய் அவளுக்குப் படுத்திய பாட்டுக்கு இப்போது அதற்குக் காரணகர்த்தாவை வெட்டி எறிந்ததற்கு அவள் துள்ளாமலா விடுவாள். குதிக்காமலா விடுவாள்.

காலப்போக்கில் தனியாக அரவிந்தனால் உணவு தயாரிக்க முடியாமல் போனது. சமையல் அறையினுள் மூவர் பணிபுரிந்தார்கள். உணவு பரிமாற நால்வர் பணிபுரிந்தனர். எடித் நோயாளியானாள். அவளால் தினசரி வர முடியவில்லை. சமையலறையில் பணிபுரிபவர்கள் முக்கியமான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை எடுத்துவிடுவார்கள். அரவிந்தனால்

தனியாகச் சமாளிக்க முடியாமல் போனது. ஜெர்மனியர்களில் உறைப்புப் பிரியர்கள் கிழமைக்கு ஒருமுறை வந்துவிடுவார்கள். 10 பேர் ஒரேயடியாக வருவார்கள். அதேபோல் கூட்டமாக வருபவர்களுக்கு ஒரேநேரத்தில் உணவு மேசைக்கு வரவேண்டும். அரவிந்தனால், தனியே தாக்குப்பிடிக்க முடியவில்லை.

இந்தியா சென்று சமையல்காரரைக் கொண்டு வரலாம் என்று சென்னையில் உணவகம் உணவகமாக ஏறி இறங்கினான். பல நேர்காணலின் முடிவில் ஒருவரைத் தெரிவு செய்து, "பரீட்சை எடுத்து வெளிநாட்டுத் தூதரகத்தில் லஞ்சம் கொடுக்க வேண்டுமென்றால், அதையும் கொடுத்து இங்கே வந்து சேர். அனைத்துப் பணத்தையும் இங்கு செட்டில் பண்ணலாம்" என்று சொல்லிக் கையில் பணத்தைக் கொடுத்துவிட்டு ஜெர்மனி திரும்பிவிட்டான்.

அரவிந்தன் மீண்டும் ஜெர்மனி வந்து சேர்ந்துவிட்டான். ஒருவிதப் பிரச்சினையும் இல்லை என்று நிம்மதியாக இருந்தான். ஆனால், அதுவும் நிலைக்கவில்லை. வெளிநாட்டுத் தூதரகம் நடத்திய தேர்வில் அரவிந்தன் தெரிவு செய்தவனால் தேர்ச்சி அடைய முடியவில்லை. காரணம், அவன் இலஞ்சப் பணத்தைத் தன்னுடைய செலவுக்கு எடுத்துவிட்டான். பாவம் அவனுக்கு என்ன சிக்கலோ. இல்லை அரவிந்தனுடைய சிக்கல் இன்னும் கொஞ்சக் காலம் நீடிக்கட்டுமே என்று பிரபஞ்சம் நினைத்துவிட்டதோ!

இருந்த கொஞ்ச நம்பிக்கையும் அரவிந்தனுக்குத் தீர்ந்து போனது. இந்தப் பணியாளர்கள் இருக்கின்றார்களே வேலையில் சேரும்போது அவருடைய வேலை சிறப்பாக இருக்கின்றதா என்று அவதானிப்பதற்காக ஒருவாரத்தை அரவிந்தன் தீர்மானிப்பான்.

அக்காலங்களில் அவர்கள் சொந்த உணவகம் போலப் பார்த்துப் பார்த்து வேலை செய்வார்கள். ஆனால், முழுநேரச் சம்பளத்துடன் வேலைக்குப் பதிந்துவிட்டால், எங்கே இருந்துதான் இவர்களுக்கு நோய் வருகின்றதோ தெரியாது. அதற்காகவே சில மருத்துவர்கள் இருக்கின்றார்கள். உங்களுக்கு கிரங்க் எழுத வேண்டுமா என்று மருத்துவ விடுப்பை எழுதிக் கொடுத்துவிடுவார்கள். அந்தத் துண்டைக் கொடுத்துவிட்டு வீட்டில் ஆனந்தமாக இருக்கச் சம்பளப் பணம் வங்கியில் விழுந்து கொண்டே இருக்கும்.

மூன்று மாதங்கள் முழுச்சம்பளமும் கிடைக்கும். அதற்குப்பின் அரைவாசி மருத்துவக்காப்புறுதி ஏற்றுக் கொள்ளும். அதனால், மூன்று மாதங்களுக்கு நோய் வந்துவிடும். இல்லையென்றால், வேறு ஏதாவது வேலை இருந்தால் மருத்துவரிடம் போய் விடுப்பு எடுத்துவிட்டு வேலைக்கு மட்டம் போட்டுவிடுவார்கள். அவர்களுக்கு அவர்களைப் பற்றித்தான் சிந்தனை. வேலை கொடுக்கும் அதிகாரி என்ன கஷ்டப்படுவார் என்ற சிந்தனை அவர்களுக்கு வரப்போவதில்லை.

கிறிஸ்மஸ் காலங்களில் ஒவ்வொரு நிறுவனங்களும் வேலையாட்களுடன் சேர்ந்து உணவகங்களில் உணவருந்தச் செல்வது வழக்கம். அப்போது 25, 50 பேருக்கு என்று இருக்கைகள் பதிவு செய்வார்கள். அன்று கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்காக 25 பேர் அடங்கிய ஒரு குழுவினர் உணவகத்திற்குள் நுழைந்தார்கள். அதைவிட வழக்கமாக வருபவர்களும் சேர்ந்து கொண்டார்கள். உணவகம் நிரம்பி வடிந்தது.

சிநேகா உடல்நலக் குறைவால் உணவகத்திற்கு வரவில்லை. சமையலறையில் பணிபுரிகின்றவனும் வரவில்லை. முன்னே ஒருவனே வேலைக்கு வந்திருந்தான். தனியே அரவிந்தனால் சமையல் செய்வதற்கு முடியவில்லை. வந்தவர்களை முடியாது என்று திருப்பி அனுப்பிவிட்டு கதவைப் பூட்டிவிட்டு வந்துவிட்டான். அதுவே அரவிந்தன் இறுதியாக உணவகம் திறந்த நாள். அதீத மனவழுத்தத்தால் அரவிந்தனால் உணவகத்தில் வேலை செய்ய முடியவில்லை

சிநேகாவுக்கோ உணவகம் மூடியது மனத்துக்குள் மகிழ்ச்சியையே தந்தது. இழந்த நிம்மதியை இனிமேல் பெறலாம், விழாக்கள், பண்டிகைகள் கொண்டாடலாம், நண்பர்களைச் சந்திக்கலாம். இவற்றையெல்லாம் இந்த உணவகம்தானே கொள்ளையடித்து வைத்திருந்தது.

இப்படித்தான் விழுந்து எழுந்து, விழுந்து எழுந்து அரவிந்தனுக்கு மனம் காய்ச்சிப் போய்விட்டது. எடுக்கும் முயற்சிகள் எல்லாம் தோல்வி யில்தான் முடிந்தது. படித்துப்பெற்ற வேலையை இரசாயனப் பொருள் உடலுக்குத் தீங்கை விளைவிக்கும் என்று எண்ணிய இருவரும் எடுத்த முயற்சியால் நிறுத்தப்பட்டது. உணவகங்களில் செய்கின்ற வேலை உதவி யின்றி மனவழுத்தத்தால் செய்வதற்கு முடியவில்லை.

அவனுடைய வாழ்க்கையானது அடிமேல் அடி போட்டு ஒரு நிலையான தொழிலில் இப்போது இருத்தியிருக்கிறது.

அந்த நிம்மதி கூட சிநேகாவின் வேண்டாத வேலையால் எங்காவது கொக்கில் போட்டு இழுத்துவிடுமோ என்ற பயம் அரவிந்தனுக்கு இருந்தது. உதவி செய்தவர்கள் எல்லாம் நன்றி மறந்தவர்களாகி விடுகின்றார்கள். ஏன் மாய்ந்து மாய்ந்து இவர்களுக்குச் செய்கின்றீர்கள் என்றால், கேட்காத மனம் பட்டபின் நொந்து போகும். பின் பட்டதை மறந்து போகும். மீண்டும் பிறருக்காக வாழும்.

சகோதரர்களுக்காக வாழ்ந்தது போய் உறவினர்களுக்காக வாழ்ந்தது போய் இப்போதுதான் தன் குடும்பம் என்று வாழத் தொடங்கியுள்ளான்.

கனடா போவதற்காக ஒரு ஏஜன்சி பணம் கேட்கின்றான் 2 ஆயிரம் மார்க் கொடுக்கின்றீர்களா என்று கேட்ட உறவினருக்கு சிநேகாவினுடைய நகைகளை விற்றுக் கொடுக்க நினைத்தான் அரவிந்தன். நல்ல வேளை சிநேகா மறுத்த காரணத்தால், ஓர் உறவினரிடம் கடன்பட்டுக் கொடுத்தான். அந்தப் பணத்தை 25 வருடங்கள் கழித்து ஓர் உரையாடலின் போது உங்களுக்கு நான் கனடாக்குப் போவதற்காகக் கடன் வாங்கித் தந்தேன் என்று ஞாபகப்படுத்திய போது பணம் பெற்றவர் நீங்கள் எங்கே பணம் தந்தீர்கள்? என்று கேட்டபோது மனம் உடைந்து போனான். பணத்தைத் திருப்பிக் கேட்கவில்லை. உரையாடலின் போது வந்த செய்தியைப் பொய்யாகப் பேசுகின்றார் என்று சொன்ன போது மனம் எத்தனை வேதனையை அடைந்திருக்கும். வட்டிக்குப் பணம் கொடுத்தவர்களோ வட்டிக்குக் கொடுத்தோம் என்று தெரிந்தால் தமக்கு மரியாதையில்லை என்று முழுப்பூசணிக்காயைச் சோற்றில் போட்டு மறைத்துவிட்டார்கள்.

கனடாக்குப் புலம்பெயர எண்ணிய அரவிந்தனுக்கு அவனால், தன்னிடம் உதவி பெற்ற உறவினர்களே கையை விரித்த போது உறவினர்களில் வெறுப்பு அதிகமாகியது.

இவ்வாறு காலம் கற்றுத் தந்த துரோகங்களும், நன்றி கெட்ட மனிதர்களும், தோல்விகளும், அரவிந்தனுக்கு எதிலும் கைவைக்கப் பயம் காட்டியது.

இப்போது சிநேகா தன்னுடைய தந்தையின் மூளைப் பரிசோதனையில் மாட்டுப்பட்டு விடுவாளோ என்ற பயத்தில் தயங்கினான்.

“எக்கேடு கெட்டாவது போங்கோ.....” என்று சிநேகாவில் கத்திவிட்டுப் படுக்கப் போய்விட்டான்.

சிநேகா படுக்கையில் விழுந்தபோது கையிலே கைத்தொலைபேசியைத் தூக்கினாள். வட்ஸ்அப் இல் நிருபா அனுப்பிய கட்டுரை வந்து விழுந்தது.

உடலென்னும் உரிமைக்குத் தலைமையகம் நம்முடைய மூளைதானே. அந்த மூளையிலே கை படாமல் கை வைக்க சிநேகா முயல்கின்றாளே! அதற்கு மூளை பற்றி அவள் கற்றிருக்க வேண்டுமல்லவா. அதனால், ஏற்கனவே மூளையைத் தன்னுடைய கடவுள் என்று கருதும் சிநேகா விருப்புடனே கட்டுரையைப் படிக்கத் தொடங்கினாள்.

சிம்பன்சி கொண்டிருந்த மூளை படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று கோடிக்கணக்கான ஆண்டுகள் தாண்டி ஹோமோ டியஸ் நிலைக்கு மனிதன் மூளை முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அதனாலேதான் மனிதனின் இறப்பை அஃறிணைப் பொருட்களின் இறப்புடன் இணைத்துப் பார்க்க மனிதன் மறுக்கின்றான். சொர்க்கம் என்றும் நரகம் என்றும் இறப்பின் பின் மனிதன் நிலை என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றான்.

நரம்புகள் இல்லையென்றால் எமது உடலே இயங்காது. உடலிலிருந்து வருகின்ற ஒவ்வொரு சமிக்ஞைகளையும் வைத்து நரம்புமண்டலங்கள் தொழிற்படுகின்றன. தண்டுவடமும் மூளையும் சேர்ந்துதானே மத்திய நரம்பு மண்டலம் அமைந்திருக்கின்றது. புற நரம்பு மண்டலத்திலே மூளை நரம்புகளும் தண்டுவட நரம்புகளும் ஒன்றாகச் சேர்ந்திருக்கும். இந்த நரம்பு மண்டலங்களின் சிறப்புக்கு முக்கிய காரணம் நம்முடைய மூளை அல்லவா. சிம்பன்சிக் குரங்கிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து நம்முடைய மூளை இப்போது இந்த நிலையில் இருக்கின்றது. காலப்போக்கில் இன்னும் மாற்றங்கள் வரலாம். மனிதன் இறைவன் நிலைக்கு உயரலாம்.

ஒரு வயதான மனிதனுடைய மூளையின் நிறை 1.2 கிலோவிலிருந்து 1.4 கிலோ வரையில் இருக்கும். மனிதர்களின் உடம்பின் நிறையின் 2 வீதம் மூளையின் நிறையாக இருக்கின்றது. மூளைக்கு நரம்பு மண்டலங்களின் மூலமாக மூளைக்கு வருகின்ற தகவல்களைப் பிரித்து அந்தந்தப் பகுதிகளுக்கு தலாமஸ் என்னும் பகுதி அனுப்புகின்றது.

எங்களுடைய மூளையில் கோடிக்கணக்கான நியூரோன்கள் இருக்கின்றன. ஒரு நியூரோன் 1000 இலிருந்து 10 ஆயிரம்

நியூரோன்களுடன் தொடர்பில் இருக்கின்றது. இரண்டு நியூரன்கள் தொடர்புபடுகின்ற இடத்தை சினெப்ஸ் (synapse) என்பார்கள். இங்கேதான் எங்களுடைய நினைவுகள் பதிவு செய்யப்படுகின்றன. அது அடிக்கடி செயல்பட்டாலேயே நினைவுகள் இருக்கும். இல்லையென்றால், மறைந்துவிடும். எப்படி நாம் பயன்படுத்தும் பொருட்கள் பயன்பாடில்லாத போது துருப்பிடித்தல் போலத்தான் எமது மூளையும் இருக்கிறது.

இதனாலேதான் குறுகியகால நினைவுகள், நீண்டகால நினைவுகள் என எங்களுடைய நினைவுகளை நாம் பிரிக்கின்றோம். ஆழமாகப் பதிகின்ற நினைவுகள் அப்படியே மூளையில் பதிந்துவிடும்.

மூளையில் எல்லா இடங்களும் நினைவுகளைச் சேகரித்து வைக்கும். எமது பழைய நினைவுகள் காலப்போக்கில் அனுபவங்களின் அடிப்படையில் மாற்றி மாற்றி பதிவுகளைத் திருத்தி அமைக்கும். உதாரணமாக நாங்கள் சிறுவயதில் பதிவு செய்திருக்கும் கீறிய விடு வயதான பின் வாழும் வீடாக பதிவு செய்துவிடும்.

மூளையிலுள்ள ஹிப்போஹெம்பஸ், அமெக்டாலா என்னும் அமைப்புக்கள் எங்களுடைய மூளை நினைவுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. ஹிப்போகெம்பஸ்தான் ஞாபக சக்திக்கு தொடர்புடைய பகுதி. இது நாங்கள் கற்றுக் கொள்ளும் விடயங்களை படிப்படியாக குறுகிய கால ஞாபகம், நீண்டகால ஞாபகம் என்று பதிவு செய்து வைக்கும். புதியதாக ஒரு விடயத்தை நாம் அறிகின்ற போது அது குறுகிய கால ஞாபகப்பதிவிலிருந்து நீண்டகால ஞாபகப்பதிவுக்கு மாற்றிப் பதிவு செய்து கொண்டு இருக்கின்றது.

ஹிப்போகெம்பஸ் இன் வலது இடது புறங்களில் அமிக்டாலா இருக்கிறது. உணர்ச்சிகளுக்குத் தொடர்புடைய பயம், கோபம், கவலை போன்றவற்றை அமிக்டாலா கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. இதேபோல நெயோகோட்டெக்ஸ் (Neocortex) பார்த்தல், கேட்டல், முடிவுகளை எடுத்தல், சிந்தித்தல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு உதவுகின்றது. இதைவிட basel ganglia, Prefrontal cortex என்று பல பகுதிகள் மூளை செயற்பாட்டுக்கு உதவுகின்றன. வயதாகின்ற போது ஹிப்போகெம்பஸ் இன் அளவு குறைந்து கொண்டே போகும். அதனால், மறதியும் வந்துவிடும்.

எனக்குத் தேவையான பகுதிகளை வெட்டி நிருபா அனுப்பி யிருக்கின்றாள் என்பதை சிநேகா ஊகித்துக் கொண்டாள்.

மின்சாரம் இல்லாமல் கணினி தொழிற்படாது. உயிர் இல்லாது மூளை வேலை செய்யாது. உயிரைப் பாதுகாக்க வேண்டுமென்றால், உடலைப் பாதுகாக்க வேண்டும் இல்லையா? அதனால்தானே "உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" என்கிறார் திருமூலர்.

பரமசிவத்தின் பழைய பதிவுகளை ஒழுங்காகப் படிப்படியாக அவருடைய மூளையிலே ஹிப்போகெம்பஸ் பதிவு செய்து வைத்திருக்கின்றது. முதலிலே அங்குதானே செய்திகளை அனுப்பினார். அதை மீண்டும் சிந்திக்காமல் விட்டிருந்தாரேயானால் அது அழிந்திருக்கும் என்று சிநேகா நம்பினாள்.

# அத்தியாயம் 11

# கையுடைந்த காரிகையும் கையுடைந்த வாகனமும் துர்நிமித்தங்கள்

அடுத்த வாரம் எப்படியும் ஐயாவை நிருபா வீட்டுக்குக் கொண்டு வந்துவிட வேண்டும். விடிந்ததும் அனெஸ்தாசியா வீட்டுக்குப் போக வேண்டும். நாளைய வேலை அவளுடன்தான் என்று பணி அட்டவணை போட்டுக் கொடுத்திருந்தார்கள். போனால்தான் அவளைப்பற்றித் தெரியும். சிநேகாவினுடைய மூளை முழுவதும் புதிய பரிசோதனையே ஆக்கிரமித்திருந்தது. யாரும் திட்டம் போட்டு எதுவுமே நடப்பதில்லை. இந்தப் பிரபஞ்சம் மனிதனை இயக்கிக் கொண்டே இருக்கும்.

முதன் முதலாக அனெஸ்தாசியாவிடம் வேலைக்குப் போகின்றாள். இப்படித்தான் அவளுக்கு என்று வாடிக்கையாளர்களை மாத ஆரம்பத்தில் பதிவு செய்து விடுவார்கள். சிநேகாவினுடைய நீலக்கலர் பென்ஸ் அவளுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது. சிநேகாவுக்கு வேலை இருக்கின்ற நாட்களில் அரவிந்தன் பேருந்திலேதான் வேலைக்குப் போவான். சிற்றுந்துக்குள் ஏறுகின்றாள். அவளுடைய பார்த்தசாரதியாகிய நவிகேசனை வெளியே எடுத்தாள். அனெஸ்தாசியாவினுடைய விலாசத்தைப் பதிவு செய்தாள். அழைத்துச் செல்ல பார்த்தசாரதி ஆயத்தமாகிவிட்டது. ஸ்ரியரிங்கை அசைக்க முடியவில்லை. கைவலி தாங்க முடியாமல் இருந்தது. இன்று எப்படியும் மருத்துவரிடம் போக வேண்டும்.

வலிக்கு கட்டளை போட்டுவிட்டு வாகனத்தைச் செலுத்தினாள். வீட்டிலிருந்து பிரதான பாதை நோக்கிப் பயணமாகியது. அங்கிருந்து 7 கிலோ மீற்றரே காட்டியது. ஸ்ரட்லிச கிரங்கன் ஹவுஸ் என்று சொல்லப்படும் பிரதான மருத்துவமனைக்கு முன்பே இருந்த வீதியால்

காரைத் திருப்பினாள். மருத்துவமனைக்கு உள்ளே யாரும் உடனே போகமுடியாது. பலர் வெளியே நின்றார்கள். அனைவரின் முகத்திலும் முகக்கவசம். உறவினர்களை உள் அனுப்பிவிட்டு வெளியே நிற்கிறார்கள் போலும். எல்லோருடைய முகத்திலும் மரணபயம்.

சிநேகா வீட்டிலும் நச்சரிப்பு. வீடுகளுக்குப் போகின்றீர்கள். நீங்கள்தான் வீட்டுக்குக் கொரோனாவைக் கூட்டிக் கொண்டு வரப் போகின்றீர்கள். விடுப்பு எடுக்கலாமே என்று மகள் கணவனுடைய நச்சரிப்பு. எப்படி எடுக்க முடியும்? சிநேகா செய்கின்ற பணி ஒரு அர்ப்பணிப்புள்ள பணி அல்லவா. இவள் இல்லையென்றால், பழக்கப்பட்டவர்கள் வீட்டுக்கு வராவிட்டால் டிமென்ஷியா நோயாளிகள் வருபவர்களை அடையாளம் காணமாட்டார்கள். கத்திக் கூச்சல் போட்டுத் திருடி நுழைந்துவிட்டாள் என்று ஆர்ப்பாட்டம் செய்து விடுவார்கள். அதனால், புதிதாகப் பொருத்தமான ஒருவரைச் சிநேகா வேலை செய்த நபரிடம் அனுப்புவது கடினம்.

இன்று அவள் வேலைக்குப் போகும் இடம் டிமென்ஷியா நோயாளி இல்லை. பிள்ளைகளுடன் ஆசிரியராக வேலை செய்த அனுபவம் சிநேகாவுக்கு இருந்த காரணத்தால், அனெஸ்தாசியாவிடம் அனுப்பி யிருந்தார்கள். வீட்டிற்கு முன்னே பார்த்தசாரதி காரைக் கொண்டு வந்து நிறுத்தியது. காரை நிறுத்துவதற்கு இடம் இல்லாமல் வாகனங்கள் நிறைந்திருந்தன.

மருத்துவமனைக்குப் போகின்றவர்கள் எல்லோரும் இலவசமாகக் காரை நிறுத்தலாம் என்று இப்பாதைதோறும் நிறுத்தியிருந்தார்கள். ஒருவாறாக இடத்தைக் கண்டுபிடித்து வாகனத்தை நிறுத்தினாள். சரியாக 7.30க்கு வேலை ஆரம்பம். ஒரு நிமிடம் கூட நேரம் தாமதிக்கவோ முந்தவோ கூடாது. இது நம்முடைய ஆசிய நாட்டவர்கள்தான் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னோ பின்னோ எந்தவித விவஸ்தையும் இல்லாமல் வீட்டு அழைப்புமணியை அழுத்துவார்கள். ஜெர்மனியர்கள் நேரத்தில் கவனம் எடுப்பவர்கள். அதுவும் சிநேகா செய்கின்ற வேலைக்கு அவளுடைய வாடிக்கையாளர்களுக்கு ஏற்கனவே நேரத் திட்டம் கொடுக்கப்பட்டு விட்டது. அதனால், முன்னமே போய்த் தொந்தரவு கொடுக்கக்கூடாது.

சரியாகக் காலை 7.30க்கு அழைப்பு மணியைச் சிநேகா அழுத்தினாள்.

“யாரது?”

“நான் சிநேகா பெற்றோயிங் கிராப் (Betreuung kraft Home in stadt)” என்று தன்னை அறிமுகப்படுத்தினாள்.

“ஓகே. அங்கேயே நில்லுங்கள் நான் வருகின்றேன்”

கதவின் முன்னே சிநேகா காத்து நின்றாள். அனெஸ்தாசியா வீட்டின் லிப்ட் மூலமாக இரண்டு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வந்தாள். நடக்க முடியாமல் கைத்தடித் துணையுடன் தாண்டித் தாண்டி நடந்தாள். இரண்டு பிள்ளைகளும் தோளிலே புத்தகப் பையைச் சுமந்து வந்தார்கள். ஒரு பிள்ளை பாலர் பாடசாலையில் படிக்கின்றாள் என்று சிநேகா நினைத்தாள்.

“ஹலோ அனெஸ்தாசியா! நான் சிநேகா...”

“ஹலோ சிநேகா! எனக்கு ஓர் அக்ஸிடன்ற் நடந்தது. அதனால், இந்தக் கால்தான் இப்போது” என்று கைத்தடியைக் காட்டினாள். மகளைக் காட்டி “இவளை ஹின்டர்கார்டனில் விடவேண்டும்” அதற்குப் பிறகு மகனைக் காட்டி

“இவனை ஸ்கூலில் கொண்டு விட வேண்டும். அதற்குப் பிறகு நான் ஹொஸ்பிட்டலுக்குப் போகவேண்டும்” என்றாள்.

“ஓஹோ அப்படி என்றால், இன்று நான்தான் உங்களுடைய ட்ரைவர்” என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

“அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன்” என்றாள் அனெஸ்தாசியா.

பிள்ளைகளைப் பின்பக்க இருக்கையில் இருக்க வைத்து அவர்கள் உள்ளே இருந்து வெளியே கதவைத் திறக்காதபடி லொக் போட்டாள். முன் இருக்கையிலே அனெஸ்தாசியாவை இருக்கச் செய்து எங்கே போக வேண்டும் என்ற விபரத்தைக் கேட்டபடி வாகனத்தைச் செலுத்தினாள்.

அனெஸ்தாசியா போலந்துப் பெண். கணவனைப் பிரிந்து இரண்டு பிள்ளைகளுடன் வாழுகின்றாள். ஒரு சிறிய விபத்தினால் கால் பாதிக்கப்பட்டதால் சிநேகா வேலை செய்கின்ற நிறுவனத்தில் உதவிக்கு ஆள் கேட்டிருக்கின்றாள். பிள்ளைகளுடன் வேலை செய்த அனுபவம் பெற்ற சிநேகாவை அனெஸ்தாசியாவின் கால் சுகமாகும் வரை சிநேகாவினுடைய நிறுவனம் வேலைக்கு அமர்த்தியிருக்கின்றது.

வாகனம் சென்று கொண்டிருக்கும் போதே அனெஸ்தாசியா தன்னுடைய கணவனைப் பிரிந்து வாழுகின்ற கதை, தனக்கு ஏற்பட்ட விபத்து எல்லாவற்றையும் விளக்கிக் கொண்டு வந்தாள். சிநேகாவும் தனக்குக் கை பிரச்சினையாக இருப்பதாகவும் மருத்துவரிடம் போக வேண்டும் என்றும் சொன்னாள்.

"ஓ... டொக்டர் கிரங்க் (மருத்துவ விடுப்பு) எழுதினால், எனக்கு வேற யாரையும் போட்டுவிடுவார்களே! பிற்ற பிற்ற(துயவுசெய்து) நீயே வாயேன்" என்றாள்.

"முடியுமானவரை முயற்சி செய்கிறேன். ஸ்ரெயரிங் திருப்பும் போது வலி அதிகமாக இருக்கிறது. அதனோடு வாகனம் செலுத்தினால், பிரச்சினை அதிகமாகும் இல்லையா" என்று சிநேகா சொன்னாள்.

"நீ வரவேண்டும் என்றுதான் விரும்புகிறேன்" என்றாள்.

"பார்ப்போம்" என்று அவளை மருத்துவமனைக்கு அழைத்துப் போய்த் திருப்பி அழைத்து வந்து வீட்டிலே விட்டதன்பின் அடுத்த வாடிக்கையாளரிடம் சிநேகா போய்விட்டாள்.

அது வழமையாகப் போகும் லிண்டா. தனக்காகக் காத்திருந்த லிண்டாவிடம் போனபோது

"ஹாய் லிண்டா. போவோமா" என்று வெளியே நடக்க அழைத்துச் செல்வதற்குக் கேட்டாள்.

"எனக்கு கைன லூல்ற்" என்றாள் லிண்டா. அவளுக்கு வெளியே போவதற்கு மனமில்லையாம்.

"உனக்கு என்ன நடந்தது. ஏன் இன்றைக்கு உனக்கு விருப்பமில்லை. நடந்தாலேயே உடம்புக்கு நல்லது. வா... வா ஒரு 10 நிமிடங்கள் நடப்போம்" என்று லின்டாவினுடைய சப்பாத்தை எடுத்துப் போட்டுவிட்டாள்.

"சரி கோப்பி குடிக்கப் போவோம். எனக்கு நடக்க முடியாது" என்றவளை வாகனத்திலே கூட்டிப் போய்க் கோப்பிக் கடையிலே சிறிதளவு வெளியுலகத்தைக் காட்டக் கூட்டிக்கொண்டு போனாள். கேக்கையும் கோப்பியையும் வாங்கி இருவரும் இருக்கையில் அமர்ந்த போது கேக்கை எடுத்துக் கடதாசியினாற்ச் சுற்றி கைப்பைக்குள் வைப்பதற்கு லிண்டா முயன்றாள்.

“என்ன செய்கின்றீர்கள் லிண்டா” என்று சிநேகா கேட்டபோது.

கண்களைச் சுருக்கி சிநேகாவைப் பார்த்தபடி எதுவுமே பேசாமல் கைப்பைக்குள் வைத்தாள். வழமையாக உருளைக்கிழங்கு போன்ற உணவுப் பொருள்களை ஏதாவது மறைவான இடத்தில் மறைத்து வைக்கின்ற பழக்கம் லிண்டாவுக்கு இருக்கிறது. யுத்தக் காலத்திலே சிறு பிள்ளையாக இருக்கும் போது உணவுப்பொருள்களை மறைத்து வைத்த ஞாபகம் இப்போது அவளுக்கு இருக்கிறது.

அவள் சிலவேளை ஹிட்லரைப் புகழ்வதையும் சிலவேளை ஹிட்லரை இகழ்வதையும் சிநேகா நன்றாக அறிந்திருக்கின்றாள். யூதர்கள் ஜெர்மனியர்களை அடிமை வேலைக்காரர்களாக வைத்திருந்து கொடுமைப்படுத்தியதாகவும் அவர்களை ஹிட்லர் அழித்தது நல்லது என்றும், ஜெர்மனியர்களுக்கு வேலை கொடுத்தது, முதன்முதலில் துரித பாதை அமைத்தது பற்றியும், ஹிட்லரின் நல்ல பக்கங்களையும் அவளுடைய வாடிக்கையாளர்கள் பேசுவதை சிநேகா அறிந்திருந்தாள்.

ஆனாலும் ஹிட்லர் செய்த கொடுமைகளால் தாம் சிறுவயதில் பட்ட கஷ்டங்களைப் பேசியவர்கள் அநேகம். வீட்டிலிருந்து வயதானவர்கள் என்று கூட சிந்திக்காமல் வேலைக்குக் கட்டாயமாக அழைத்துச் சென்று கொடுமைப்படுத்தியதையும், உணவுக்காக ஏங்கியமையையும், பற்றிக் கதைகதையாகச் சொல்லும் போது தற்காலத்தில் வேலைக்குப் போகாமல் வீட்டுக்குள் இருந்து சகல சௌபாக்கியங்களையும் அனுபவிக்கும் மனிதர்களையும் இணைத்துப் பார்க்கும் போது இந்த உலகம் எத்தனை அதிசயங்களையும், ஆச்சரியங்களையும், துயரங்களையும், வேடிக்கைளையும், வேதனைகளையும், போகிற போக்கில் காட்டிவிட்டுப் போகின்றது.

இதனால்தானோ என்னவோ இயற்கையே மனிதனுக்கு மறதி என்னும் அற்புதச் சக்தியைப் படைத்து உருவாக்கியிருக்கின்றது என்று தனக்குள்ளே பல தடவைகள் சிநேகா சிந்தித்திருக்கின்றாள்.

உலகத்திலே ஒவ்வொரு மனிதர்களும் பல பக்கங்களைச் சுமந்து கொண்டு தான் திரிகின்றார்கள். இராவணனுக்குப் பத்துத் தலை வைத்துக் காட்டியதுதானே இராமாயணம். ஹிட்லருடைய வடுக்கள் இன்னும் காயவில்லை. லிண்டா மறைத்து வைக்கும் பொருள்கள் அவளுடைய அடிமன ஆழத்தில் புதைந்திருக்கும் அழியாத வடுக்கள்.

கைப்பைக்குள் வைத்த கேக்கைத் திரும்பவும் வெளியே எடுக்க முடியாது. கைப்பையிலிருந்து வெளியே எடுத்தால் பெரிய பூகம்பமே நடத்தி விடுவாள். தன்னுடைய கேக்கை சிநேகா களவாடி விட்டதாகக் குற்றச்சாட்டும் வரும். அதனால், வேறு ஒரு கேக் வாங்கி முள்ளுக்கரண்டியை அதிலே குத்திக் கையிலே Bitte schön என்று கொடுத்தாள். பேசாமல் Danke என்று சொல்லியபடி அதை வாங்கிச் சாப்பிட்ட லிண்டா கோப்பியை அழகாக அருந்தினாள்.

என்னதான் 90 வயது கடந்திருந்தாலும் லிண்டாவினுடைய உடல் உறுதியைப் பார்க்கும் போது தன்னுடைய அம்மாவை நினைத்துப் பார்ப்பாள் சிநேகா. ஜெர்மனியர்களின் மரபணுக்களின் வலிமையை ஒவ்வொரு வாடிக்கையாளர்களிடமும் அறிந்திருக்கின்றாள்.

உலகநாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வீட்டை அழகாக வைத்திருப்பதில் முன்னிடத்தில் இருப்பவர்கள் ஜெர்மனியர்களே. அவர்கள் வீட்டுக்கு விருந்தினர்களை அழைப்பது அருமை. ஏனென்றால் வீட்டின் அழகு கலைந்துவிடும். அவர்களும் மேலதிகமாக வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அதனால், உணவகம் அல்லது கோப்பிக் கடைச் சந்திப்புதான் அதிகமாக இருக்கும்.

கோடைகாலத்தில் என்ன வயதானாலும் வீட்டின் முன்புறத்தில் கொத்தி வெட்டிப் பூமரங்களை நாட்டி அழகு பார்ப்பார்கள். பூமரங்கள் மாரி வரையுமே வாழப் போகும் என்று அறிந்திருந்தும் அழகாகக் கையாள்வார்கள். எந்த வயதானாலும் தத்தித் தத்தியாவது வீட்டை அழகுபடுத்துவார்கள். ஒழுங்கு, கட்டுப்பாடு சிறுவயதிலிருந்து அவர்களுக்கு ஊட்டி வளர்க்கப்படுகிறது. பொருள்களை ஓரிடத்திலிருந்து எடுத்தால், திரும்பவும் அதே இடத்தில் அப்பொருளைக் கொண்டு போய் வைக்க வேண்டும். இப்படி ஏகப்பட்ட ஒழுங்குமுறைகள் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டதால், சிநேகாவுக்கு ஆசிய நாட்டவர்களிடம் சில வேளை மனம் ஒட்டுவதில்லை.

சிநேகாவினுடைய வேலை நேரம் முடியப் போவதால் லிண்டாவை வீட்டில் விட்டு மீண்டும் அனெஸ்தாசியாவிடம் போனாள்.

அனெஸ்தாசியா வீட்டிலிருந்து கீழே இறங்கி சிநேகாவுக்காகக் காத்திருந்தாள். கைகுலுக்கி மீண்டும் சிநேகாவை வரவேற்று வாகனத்தினுள் ஏறினாள். பிள்ளைகள் இருவரையும் அவரவர் பாடசாலைகளிலிருந்து ஏற்றி வந்து வீட்டின் முன் காரை நிறுத்தினாள் சிநேகா.

சிநேகா பின்சீட்டில் இருந்து பிள்ளைகள் இறங்க முடியாதவாறு சிற்றுந்தைப் பாதுகாப்புப் பூட்டுப் போட்டுப் பூட்டி வைத்திருந்தாள். வாகனம் நின்றவுடன் இறங்கிய அனெஸ்தாசியா பிள்ளைகளை இறக்குவதற்காகப் பின்பக்கக் கதவுக் கைப்பிடியை முடிந்தவரை இறுக்கி இறுக்கி இழுத்தாள். வாகனத்துக்குள் ஏதோ செய்து கொண்டிருந்த சிநேகா பின் கதவைத் திறக்கவில்லை. சிநேகாவிடம் எதுவுமே கேட்காமல் முடிந்தவரை இழுத்துத் திறந்ததால் வாகனத்தின் பின்பக்கக் கதவுக் கைப்பிடி உடைந்து கையில் வந்துவிட்டது.

‘‘ஐயோ கதவு உடைந்து விட்டது’’ என்று அனெஸ்தாசியா ஓங்கி உரைத்தாள்.

சத்தம் கேட்டு உடனே கீழே இறங்கிய சிநேகா

‘‘ஏன் இப்படி அவதிப்பட்டீர்கள்’’ என்று கேட்டபடி சிநேகா பிள்ளைகளை வெளியே இறக்கி, அவர்களுடைய பிள்ளைகள் இருக்கும் இருக்கைகளையும் கழட்டி, வெளியே எடுத்து அவர்களை அழைத்துக் கொண்டு சென்றாள். ஜெர்மனியில் சாதாரணமாக வாகன இருக்கையில் அமர்வதற்கு 1,50 மீற்றர் உயரம் இருக்க வேண்டும். 12 வயது வரையுள்ள பிள்ளைகளைப் பிரத்தியேகமான இருக்கைகளில் அமர்த்தவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் காவல்துறை கண்களில் பட்டால் தண்டப்பணம் கட்டவேண்டும். மனத்துக்குள் போராட்டம். கைப்பிடி திருத்துவதற்குச் செலவாகுமே. அரவிந்தன் கூட கத்தப் போகிறானே என்று கலவரமாக இருந்தது.

வீடு போகும் வரை ‘‘மன்னிக்கவும் மன்னிக்கவும்’’ என்று சொல்லிக்கொண்டே வந்தாள் அனெஸ்தாசியா.

‘‘நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் காப்புறுதி செய்து வைத்திருக்கின்றேன். காப்புறுதி பொறுப்பெடுக்கும். நான் என்னுடைய வக்கீலுடன் கதைக்கின்றேன்’’ என்றாள்.

சரி என்று அவர்களை வீட்டினுள் விட்டு வந்த சிநேகா. மறுபுறமாக வாகனத்தினுள் ஏறி உடைந்த பக்கக் கதவைப் பூட்டிவிட்டு வீட்டை அடைந்தாள். வந்தவுடன் தன்னுடைய நிறுவனத்துடன் தொலைப்பேசியில் நடந்த விபரங்களைக் கூறினாள். அவர்களும் அனெஸ்தாசியாவிடம் கதைப்பதாகக் கூறினார்கள்.

தன்னுடைய கையும் உடைந்தது. வாகனத்தினுடைய கையும் உடைந்தது. அரவிந்தன் வந்து தாம்தூம் என்று குதிக்கப் போகின்றானே. அதுவேற சிநேகாவுக்குக் கிடிக்கலக்கமாக இருந்தது. 3 மணி போல் மருத்துவரிடம் கைக்கு என்ன மருத்துவம் செய்யலாம் என்று கேட்பதற்காகச் சென்றாள்.

6 தடவை கைக்குரிய பயிற்சிக்குத் தருகின்றேன். சரிவராவிட்டால் சத்திரசிகிச்சைதான் முடிவு. வலி அறியாமல் இருக்கக் குளிசை தருகிறேன். கையை அதிகமாக நோப்படுத்தும் வேலை செய்ய வேண்டாம். வேலைக்கு 1 வாரம் விடுப்பு எழுதித் தருகின்றேன். கை சரிவரவில்லை என்றால், மீண்டும் வந்து வேலைக்கு விடுப்புக் கடிதத்தைப் புதுப்பித்து வாங்குங்கள் என்று மருத்துவர் அறிவுரை சொன்னார்.

இக்கடிதம் மருத்துவர் தந்தால் வேலைக்குப் போக முடியாது. என்ன செய்வது? கைக்கும் வேலை கொடுக்கக் கூடாது. உடனடியாகப் பணிபுரியும் நிறுவனத்துக்கு அறிவித்தாள். இவளுக்காக வேறு யாரையும்தான் அனுப்ப வேண்டும்.

வாகனத்தின் கைப்பிடி உடைந்த விடயத்தை மீண்டும் மின்னஞ் சல் மூலமாகப் பணி புரியும் நிறுவனத்துக்கு அறிவித்தாள். அதன் பின் அவர்களிடமிருந்து பதில் கடிதம் வந்தது. உங்களுடைய வாகனத்துக்கு நாங்கள் காப்புறுதி செய்யவில்லை. உங்களுக்குத்தான் காப்புறுதி செய்துள்ளோம். ஆனாலும் அனெஸ்தாசியாவிடம் பேசி அவளுடைய காப்புறுதியுடன் கதைக்கச் சொல்லுகின்றோம். 3 நாட்கள் அவகாசம் தாருங்கள் என்றார்கள்.

வருவதென்றால் எல்லாம் ஒன்றாகவே வரும். அன்று 5 மணி போல் வேலை முடிந்து அரவிந்தன் வீட்டுக்கு வந்து நடந்ததை எல்லாம் கேட்டான். உடனடியாக அரவிந்தனுடைய நண்பன் ஸ்ரெபான் வாகன மெக்கானிக்காக இருக்கின்றான். அவனிடம் சிற்றுந்தைக் கொண்டு சென்றான்.

ஜெர்மனிய இனத்தவனான ஸ்ரெபான் ஆங்கிலப்பட வில்லன்கள் போல இருப்பான். அதிகமான வாகனங்களை ஆசைப்பட்டுத் திருத்த ஒப்புக்கொள்ள மாட்டான். அவன் என்ன துருக்கி நாட்டவனா? பணத்தைப் பெருக்க வேண்டும் என்று சட்ட திட்டங்களை எல்லாம் காலுக்குள் போட்டு மறைத்துவிட்டு ரிப்ரொப்பாக அநேகமான துருக்கி நாட்டவர்கள் ஜெர்மனியில் வசிக்கின்றார்கள். ஆனால் ஸ்ரெபானுக்குப் பரம்பரைச்

சொத்து இருக்கிறது. பிடித்த தொழில். சொந்த இடம். உதிரிப்பாகங்கள் வாங்க வேண்டுமென்றால், அதற்குரிய பணத்துடன் தன்னுடைய வேலைக்குத் தக்க பணம். இதைத்தவிர பெரிதாகப் பணத்தில் குறியாக இருக்கமாட்டான். ஆசுவாசமாக நேரம் எடுத்து வாகனங்களைத் திருத்துவான். இயற்கையானது அரவிந்தனுக்குக் கொண்டு சேர்த்த நட்பு.

ஸ்ரெபான் நட்பு அரவிந்தனுக்குக் கிடைத்தது பெரிய வசதியாகப் போய்விட்டது. ரோல்ஸ் உம், வடையும் உறைப்பில்லாமல் கொண்டு கொடுத்தால் அவனுக்கு அதுவே திருத்துவதற்குப் பெரிய பணமாகப் போகும். அரவிந்தன் வீட்டுக்கு அடிக்கடி விருந்துக்கு வந்து போவான். ஜெர்மனியர்களுக்குத் தமிழர்களுடைய உணவென்றால், அமிர்தம் என்று பெருவிரலையும் ஆள்காட்டி விரலையும் உதட்டில் தொட்டுச் சுப்பர் என்று காட்டுவார்கள். அதற்குள்ளேயே அடங்கிப் போவார்கள்.

ஸ்ரெபானைக் கவிழ்க்க ஆட்டிறைச்சி ரோலும், பருப்புக் கறியும், கஸ்மீர் சிக்கின் கறியும் போதும். அரவிந்தன் காரை திருத்தும் இடத்தில் கொண்டு விட்ட பின் நடந்த கதையை அரவிந்தன் ஸ்ரெபானிடம் கூறினான்.

“அரவிந்தன். பென்ஸ் இல் கைவைத்தால் அது நன்றாக நம்மைக் குடிக்கும். நீ கொம்பனிக்குக் கொண்டு விட்டால், டபுள் செலவு. நான் உனக்கு ஒரு புத்தி சொல்றன். தனியப் பிடி திருத்த முடியாது. கதவைத்தான் இதற்குப் பொருத்தமாக வாங்க வேண்டும். நீ கொஞ்சம் பொறு. கதவு இந்தக் கலருக்குப் பார்க்கிறன். இல்லையென்றால், வேறு கலரில் கிடைத்தால் வாங்கி கலர் அடிக்க வேண்டும். அது இங்கே செய்ய முடியாது. அரவிந்தன் பேசாம இந்தக் காரை விற்றுவிடன்” என்றான்.

“ஹேய் ஸ்ரெபான் நல்லாக் கதைக்கிறா. உடனே வாங்குவதென்றால் சும்மாவா. வேறு ஏதாவது செய்யலாமா என்று பார்” என்றான்.

“ஓஹோ இப்போதைக்குக் கதவை இறுக்கிப் பூட்டிவிடுகிறேன். அந்தப் பக்கத்தைப் பாவிக்காதே. அந்தப் பெண்ணுடைய காப்புறுதி என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். அதற்குப் பிறகு யோசிப்போம். இப்போது ஒரு கப் காப்பி குடிப்போம்” என்றான்.

கதவு அப்படியே மாற்ற வேண்டும் என்றால் செலவு 1,500.00 ஒயிரோக்கள் வரும் என்றான். கதைப்பதாகச் சொன்ன பணி நிறுவனம் அனெஸ்தாசியாவுக்கு அழைப்பு விடுக்கும் போதெல்லாம் அவள்

தொலைப்பேசி அழைப்புக்கு வரவில்லை என்றும், உடனே சிநேகா பணி புரியும் நிறுவனத்திலிருந்து அவள் விலகிவிட்டதாகவும் சொன்னார்கள்.

போலந்துக்காரர் இப்படிச் செய்வது எல்லாம் புதிய விடயமில்லை. சர்வசாதாரணமாகச் செய்வார்கள்.

# அத்தியாயம் 12

# உலகப்பரப்பில் அப்பாவிகளே தண்டிக்கப்படுகின்றார்கள்

நினைவுகள்தானே எம்மை ஆட்டிப் படைக்கின்றன. ஆசைகளும் எதிர்பார்ப்புக்களும் துணிந்து செயற்படுத்தப்படும் போதுதான் வெற்றியடைகின்றன. ஆரம்பத்திலேயே தோல்வியை நினைத்துத் தயக்கம் ஏற்பட்டால் செயல் நடைபெறாது. ஏமாற்றமே ஏற்படும்.

சிநேகா மனத்துக்குள் தீபம் போல் ஏற்றிய எண்ணம் சுடர் விட்டுக் கொண்டேயிருந்தது. விடுதலை கேட்டுத் தந்தை உயிர் தவிக்கின்றது. அதன் கணக்கில் இருக்கும் நாட்களைத் தனக்குச் சாதகமாக்கத் துடிக்கிறது சிநேகா எண்ணம்.

நிருபாவும் சிநேகாவும் போட்ட திட்டம் நிறைவேறியது. எப்படிப் பரமசிவம் நிருபா வீட்டிற்கு வந்தார்? ஆச்சரியமே. ஆனால், அந்த பரீட்சைக்கு நிருபாவும், சிநேகாவும் தயாராகி விட்டார்கள். வெளியே யாருக்கும் தெரிந்தால், பிரச்சினையாகிவிடும். கணினி நரம்பியல் பட்டப்படிப்பு முடித்தவள் நிருபா. நரம்பியல் கற்றாலும் கணினியிலும் பட்டப் படிப்பு கற்றிருக்கின்றாள். தொழிலை வீட்டிலிருந்தபடி செய்பவள். கற்றலும் வருமானமும் தன் வாழ்க்கையை அழகாகக் கொண்டு செல்வதாக மனத்துக்குள் ஆழமாகப் பதித்திருந்தாள்.

‘‘திருமணம் என்பது பெண்களுக்குக் கால்கட்டும், மனக்கட்டும் போடுவது அன்றி. ஏன் அன்றி கல்யாணம் செய்தால்தான் பெண்கள் வாழலாமா? அவரவரை அவரவர் இஷ்டத்துக்கு விடலாமே. கல்யாணம் குடும்பம், பிள்ளைகள் என்று வாழுகின்ற ஒரு கூட்டம் இருக்கிறது. அவர்கள் இந்த உலகத்துக்கு மனிதர்களைத் தரலாமே. என்னை ஏன் அன்றி அம்மா கல்யாணம் கட்டு என்று கரைச்சல் கொடுக்கிறா? தெரியாத

யாரையோ எல்லாம் கொண்டு வந்து காட்டுறா. என்னுடைய உலகம் வேற. அப்படி வாழத்தான் நான் வந்து பிறந்திருக்கிறேன். எந்த ஒரு ஆணின் கட்டுப்பாட்டிலும் வாழ எனக்கு இஷ்டமில்லை. அதிலும் தமிழ் ஆண்கள் பெண்களை எப்படி அடிமையாக நினைக்கின்றார்கள் என்பது எனக்கு நல்லாவே தெரியும். இதை எனக்காக அம்மாவிடம் பேசுங்கள் அன்ரி'' என்று நிருபா அடிக்கடி சிநேகாவிடம் முறையிடுவாள்.

``எல்லோரையும் என்னைப் போல நினைக்கலாமா? நிருபா. அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை அப்படி. அம்மாவுக்கு வேறு விடயங்களில் நாட்டம் இல்லை. பேரப்பிள்ளையைக் கொஞ்சுவதைத் தன்னுடைய எதிர்காலம் என்று நினைக்கிறா போல இருக்குது. கவலைப்படாதே. நான் அம்மாவிடம் கதைக்கிறேன்'' என்றாள்.

ஓர் உயிர் உலகத்துக்கு வர ஓர் ஊடகமாக இருப்பவர்களே பெற்றோர்கள். அந்தப் பிள்ளையை வளர்ப்பதற்குரிய கடமையை இயற்கை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றது. அதைவிட எதையும் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கக் கூடாது என்ற அறிவு ஏனோ பெற்றோர்களுக்கு வருவதில்லை.

நிருபாவினுடைய அம்மா கணவனை இழந்து தனியாக வாழுகின்றாள். கணவன் போராட்டக் காலங்களில் புலிகளுக்காகப் பணம் சேகரித்தார். அந்தப் பணத்தை இலங்கைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். தாம் சேகரித்த பணத்தை சுவிஸ் வங்கியில் போடுவதற்காக வாகனத்தில் தன்னுடைய நண்பனுடன் சென்றபோது விபத்து ஏற்பட்டுத் துரிதப் பாதை முழுவதும் பணம் முழுவதும் சிதறுண்டு கிடந்தன. வானகத்தின் உதிரிப் பாகங்களுக்குள் பதுக்கிக் கொண்டு போன பணம் வெளிச்சத்துக்கு வந்தபோது காவல்துறையினர் உசாரானார்கள். அந்தச் சம்பவத்தின் பின் காவல் துறையினரின் விசாரணைகள் தமிழர்கள் மத்தியில் அதிகமாகியது.

துரிதப் பாதையிலே இருவரின் உயிர்களும் விபத்து நடந்த அதே இடத்தில் பிரிந்தன. இச்சம்பவத்தின் பின் ஜெர்மனியில் தமிழர்களுக்கு எதிரான விசாரணைகள் அதிகரித்தன. நிருபாவின் தந்தையின் இழப்புத் தாய்க்குப் பெரிய சோகத்தைத் தந்தது.

அன்றிலிருந்து நிருபா கல்வியில் தன்னுடைய கவனம் முழுவதையும் செலுத்தினாள். ஐரோப்பிய வாழ்க்கையின் சுவடுகளைத் தன்னுடன் இணைக்கும் போது பல பரீட்சைகளைத் தனக்குள் நடத்தினாள்.

தாய்நாட்டின் நினைவுகளைத் தன்னிடமிருந்து நீக்கினாள். வாழுகின்ற வாழ்க்கையை மகிழ்ச்சியாக நடத்துவதற்காகக் கலாச்சாரப் போர்வைக்குள் ஒதுங்க அவள் விரும்பவில்லை.

பெற்ற அனுபவங்களை வைத்துப் பரமசிவத்தின் ஆய்வைப் பரீட்சித்துப் பார்க்கச் சிநேகாவுக்கு உந்துதலாக இருந்தாள் நிருபா.

வீட்டுக்கு வந்த பரமசிவம் அவருக்காக அமைக்கப்பட்ட அறையிலே கட்டிலில் அமர்ந்தார்.

"இதுதான் நிருபாவினுடைய வீடா? நல்ல வடிவாக வைத்திருக்கிறாள். பிள்ளைக்குக் கரைச்சல் இல்லையா?"

"எனக்கு என்ன கரைச்சல் ஐயா. அன்ரி எப்போதும் இருப்பா. உங்களைக் கவனிக்க ஒருவரை ஒழுங்கு பண்ணியிருக்கின்றோம். இதில் எனக்கு என்ன கரைச்சல்" என்றாள் நிருபா.

அழகான தனி வீடு. எந்த அப்பாட்மென்டும் அருகில் இல்லை. வூப்பர் நதி கொஞ்சம் தள்ளிப் போனால் சலசலவென்று சங்கீதம் பாடிக் கொண்டே இருக்கும். பரமசிவம் அறை சாளரத்தினூடாகப் பார்த்தால் மலைகளிலே புற்கள் படர்ந்து பச்சைப் பசேல் என்று பாய் விரித்துப் படுத்திருக்கும். வாகன இரைச்சலுக்குப் பல கிலோ மீற்றர் போக வேண்டும். அண்டை வீட்டுக்காரர்களின் வாகனங்கள் மட்டுமே சிலநேரங்களில் ஊர்ந்து போகும் 30 கிலோ மீற்றருக்கு மேலே ஊர்ந்து போகாது. முன் வீட்டில் ஒரு ரஷ்ய நாட்டு வயதான குடும்பம் இருக்கின்றது. எப்பொழுதும் வீட்டை அழகுபடுத்துவதும் வாசலில் பூமரங்களை அழகுபடுத்துவதுமாகக் காலத்தைக் கழிக்கின்றார்கள். வீட்டுத் தோட்டத்தில் நாற்காலி போட்டுப் பகல் பொழுதைக் கழிக்கலாம். ஆனால், படுக்கையில் இருக்கும் பரமசிவத்திற்கு முடியாத காரணத்தால் சாளரத்தினூடாகத் தொலைக்காட்சியே பார்க்க முடியும்.

பரமசிவத்தின் கட்டிலின் அருகே இரண்டு கணினிகள் பூட்டப்பட்டு இருந்தன. பெரிய மொனிற்றர் அருகே இருந்தது. இதயத்துடிப்பை அளவிடுகின்ற இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கின்றது. படுக்கையறைக்கும் கணினிக்கும் இடையே பாம்புபோல் மின் தொடுப்புக்கள் நிறைந்திருந்தன. நிருபா அதிவேக இணையத் தொடுப்பை எடுத்திருந்தாள். கணினிக்கும் பரமசிவத்தின் மூளைக்கும் இடையே ஒரு இயந்திரம் பொருத்தப்பட்டது. அந்த இயந்திரத்தினூடாகப் பதிவுகள் கணினிக்கு மாற்றப்படும். இவற்றையெல்லாம் கவனித்த பரமசிவம்.

‘‘ஏன் மகள் என்ன இது? ஒரு மாதிரி செற்றிங் எல்லாம் இருக்கின்றது’’ என்று கேட்டார்.

‘‘வாழ்க்கையில் வெகுதூரம் பயணம் செய்து விட்டீர்கள் ஐயா. ஒவ்வொரு மனிதர்களும் தமக்குள் ஆயிரம் நினைவுப் பெட்டகங்களுடன் மண்ணுக்குள் மறைந்து போகின்றார்கள். கேவலம் அழியத்தான் இந்தப் பிறப்பு எடுத்தோமா? வாழ்க்கை என்பது வழுக்கையா? தோன்றி மறையும் புற்றீசல் போலத் தொலைந்து போகத்தான் எங்களையெல்லாம் வளர்த்தெடுத்தீர்களா? பொய்யான இந்த உலக வாழ்க்கை முழுவதும் மனத்துக்குள் எங்களுடைய வளர்ச்சி பற்றியும் ஊர் மக்களுடைய சிறப்புப் பற்றியும் சிந்தித்தீர்களா? நினைக்க நினைக்க உடலெல்லாம் கண்ணாக மாறிக் கண்ணீர் வடிக்கின்றது. எல்லோரும் போலச் சிரிக்கின்றேன். ஆனால், என்னுடைய மனத்துக்குள் ஏதோ ஓடிக் கொண்டிருக்கின்றது.’’

‘‘இதுதான் உலக வாழ்க்கை மகள். நான் என்ன இந்த உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே இதுதான் நடக்கின்றது. பிறந்தவர்கள் எல்லாரும் இறக்காமலிருந்துவிட்டால் இந்த உலகம் தாங்குமா? எனத் தனக்கேயுரிய பாணியில் பேசியபோது அவருக்கே மனத்துக்குள் ஏக்கங்கள் பாய்ந்து வந்து தொற்றிக்கொண்டன.

‘‘நான் இப்போது வாடி மடிய இருக்கின்ற ஒரு பூ மாதிரி. ஒருநாளே வாழப் போகின்றேன் என்று தெரிந்தும் பூ மலராமல் இருக்கிறதா. அந்த ஒருநாளிலே வாசனையையும் அழகையும் அள்ளித் தந்துவிட்டுத்தானே போகின்றது.’’

‘‘அதுதான் ஐயா. ஒரு மனிசன் இறந்து போய்விட்டானென்றால், அவன் வாழ்ந்த வாழ்க்கையும் உலகத்தில் அழிந்து போய் வெற்றுப் பத்திரிகை போல அவனுடைய அடையாளமே உலகப்பந்திலே தெரியாமல் போய் விடுகிறதே. அதுதான் ஐயா நிருபாவுடைய திறமையால் உங்களுடைய பதிவுகளை இந்தக் கணினிக்குக் கொண்டு வரப் போகின்றோம். இது ஒரு சின்ன விடயம் இல்லை. இதுவரை யாரும் செய்யவில்லை. முயற்சி செய்யப் போகின்றோம். நல்ல பவர்புல்லான Software பொருத்தியிருக்கின்றோம். நீங்கள் உறக்கத்தில் இருக்கும் போது தான் பதிவுகள் எடுக்கப் போகின்றோம். நீங்கள் சம்மதித்தால் சரி ஐயா.’’

‘‘எனக்கு என்ன மகள். இன்றைக்கோ நாளைக்கோ போகப்போற உயிர். உன்ர ஆசையைத் தீர்த்து வச்சுட்டுப் போறனே. ஆனால்,

என்னைத் தூக்கிப் பறிக்க கந்தவன் தான் திரும்ப வர வேண்டும். அவனுக்குத்தான் என்னத் தூக்குகிற பலம் இருக்கும்.''

அவருடைய வாழ்க்கை நோயோடு உறவாடிப் போனாலும், நான்குபேருக்கு நல்லது செய்தேன் என்னும் மகிழ்ச்சி அவரிடம் இருந்தது.

``மகள் அண்ணன் கீரனோட கதைப்பமா? அவனைப் பார்க்க வேணும் போல இருக்கு. சிவமும் என்னோட கதைக்கல்ல. சிந்துவ ஒருக்கா என்னை வந்து பார்த்திட்டுப் போகச் சொல்லேன்.''

``அது எல்லாம் ஒழுங்கா நடக்கும் ஐயா. நீங்கள் வீட்டுக்கு வந்த விசயம் எல்லாரிடமும் சொல்லி விட்டேன். சிந்து வருவதாகச் சொல்லியிருக்கிறாள். இனி உங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லையென்று தானே டொக்டர் சொன்னவர்.''

``ஓம்... ஓம் ஐயாக்கு ஒன்டுமே தெரியாது என்று நினைக்கிறாய். இந்தக் கால் ஓடாத பாதை இல்லை, இந்த வாய் பேசாத சொல் இல்லை. எத்தனையோ கடந்து வந்திட்டன். எனக்கு என்ர நிலமை தெரியாதா? ஒன்றும் மட்டும் தெரியல்ல. எனக்கு ஏன் இந்த வருத்தம் வந்தது? ஏன் இந்த வருத்தம் வரவேணும்? இதுதான் கொஞ்சமும் புரியல்ல. நீ நாள் எண்ணத் தொடங்கிட்டாய் என்று எனக்குத் தெரியும் மகள்.''

அந்த வார்த்தைகளின் விரக்தி சிநேகாவின் உள்ளத்துக்குள் வேதனைப் புயலை வீசியது.

``கர்மா என்ற ஒன்று இருக்கிறது இல்லையா ஐயா. தருவதை எல்லாம் வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். இந்தக் கண்ணாடிய மாட்டுங்கள் ஐயா. அண்ணன் லைனில் வருவார்'' என்று சொல்லியபடி ஒரு மூக்குக் கண்ணாடியைப் போல ஒரு பெரிய சதுரக் கண்ணாடியைப் பரமசிவத்திற்கு மாட்டினாள் சிநேகா.

``என்ன இது....''

``பாருங்கள் ஐயா. அண்ணன் இப்போது உங்களுடன் பேசுவார். உங்களுக்கு முன் வருவார்'' என்றாள்.

விசன்புரோ கமராவால் கீரனுடன் பேசுவதற்கு ஒழுங்கு பண்ணிக் கொடுத்திருந்தாள். கண்கள் முற்றாக மூடியபடி இருக்கும் இச்சாதனம் இப்போதுதான் விற்பனைக்கு வந்திருக்கின்றது. அப்பிள் கொம்பனி

தயாரித்து வெளிவிட்டிருந்தது. நிருபா அதை சிநேகாவின் அப்பா பேசுவதற்காக ஒழுங்கு பண்ணிக் கொடுத்திருந்தாள்.

விசன் புரோ கண்ணாடியைக் கண்களில் போட்டால், மறுமுனை யிலிருந்து பேசுபவர் அருகே இருந்து பேசுவது போல இருக்கும். கண்ணுக்கு முன்பாகவே படங்கள் கண்களால் பார்ப்பதுபோலவே பனரோமாக் காட்சியாக இருக்கும். மடிக்கணினி தேவையில்லை. தொலைக்காட்சிப் பெட்டி தேவையில்லை. எதுவும் இல்லாமலே முன்னே வந்து இருந்து பேசுவார்கள்.

அருகே பிள்ளைகளை வைத்து கீரன், சிவன், சிந்து அவர்கள் பிள்ளைகள் எல்லோருடனும் இளைத்து இளைத்துப் பேசி முடித்தார். ஒரு வார்த்தைக்கும் மறு வார்த்தைக்கும் இடையில் இடைவெளி அதிகரித்துக் கொண்டே போனது. இடையிடையே கண்ணீர் பதில் சொன்னது. ஆனாலும் பிள்ளைகளுடன் பேசிய மகிழ்ச்சியை அவர் முகத்தில் காண முடிந்தது.

பேசிய பின் அப்படியே படுக்கையில் சாய்ந்தார்.

வெளியே வந்த சிநேகாவும் நிருபாவும் தம்முடைய திட்டம் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள். அழைப்புமணிச் சத்தம் கேட்டபோது பரமசிவத்தைப் பராமரிக்கும் பணிபுரியவிருக்கின்ற ஆப்பிரிக்க நாட்டுக்குக் கறுப்பு இன ஹெலி அங்கு வந்தான்.

நல்ல கறுத்த வாலிப்பான தோற்றம். நிமிர்ந்த நடை மட்டுமல்ல குரலிலும் ஒரு கம்பீரம். எப்படித்தான் இந்த கறுப்பினத்தவர்களுக்கு இப்படிக் கனமான உடல் வாய்க்கப்பட்டிருக்கின்றது என்பது புரியாத விடயம். அதுமட்டுமல்ல, இசைத்துறை, நடனம், விளையாட்டுத்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் திறமைமிக்கவர்களாக இருக்கின்றார்களே! அவர்களுடைய நாடுகளில் பஞ்சம் மிதமானாலும் இந்தப் பிரபஞ்சம் திறமைகளை அள்ளிக் கொடுத்திருக்கின்றது என்று சிநேகா நினைத்துக் கொள்வாள்.

தன்னுடைய வீடு மாறுகின்ற போது வீட்டிலிருந்த பியானோவைத் தோளில் சுமந்து வந்தவன் ஹெலி. 5 பேர் சுமக்கும் பியானோவை 3 பேராகக் குறைக்கச் செய்தவன். அப்போதே அவனுடைய தொலைபேசி இலக்கத்தைச் சிநேகா வாங்கி எடுத்திருந்தாள். தன்னுடைய தந்தையின் விடயம் பற்றிப் பேச அழைத்திருந்தாள்.

“குடன்ராக் ஹெலி” என்று காலைவணக்கம் சொல்லிக் கைகொடுத்து அவனுக்கு வணக்கம் தெரிவித்தாள். அவனும் பதிலுக்கு குடன்ராக் சொன்னான்.

இருக்கையில் அமர்ந்தான் ஹெலி. என்ன குடிக்கின்றீர்கள் என்று கேட்டுத் தெரிந்துவிட்டு நிருபா கோப்பி தயாரிக்கச் சென்றாள். பரமசிவம் படுத்திருக்கும் அறைக்கு ஹெலியை அழைத்துச் சென்றாள் சிநேகா.

“ஹெலி இங்கே பாருங்கள். இதுதான் என்னுடைய அப்பா. இவரைத்தான் நீங்கள் பராமரிக்க வேண்டும். காலையில் வந்து அவரைக் குளிக்க வைத்து ஆடை மாற்றிவிட வேண்டும். இன்னும் அவருக்குரிய வயர்களை நாங்கள் பொருத்தவில்லை. இன்றுதான் ஹொஸ்பிட்டலில் இருந்து கூட்டிவந்தோம். இந்த அலமாரியில் அவருடைய உடுப்புக்களே இருக்கின்றன. காலணி தொடங்கி உள்ளங்கிகள் வரை தனித்தனியாக ஒவ்வொரு பகுதியில் அடுக்கி இருக்கின்றன. துவாய்கள் இங்கே இருக்கின்றன. ஒவ்வொருநாளும் குளிக்க வேண்டும். கிழமையில் ஒரு தடவை தலை கழுவினால் போதும். ஞாயிற்றுக்கிழமை உங்களுக்கு விடுமுறை” என்று அனைத்தையும் விளக்கமாகக் கூறி குளியலறையையும் காட்டினாள். சம்பள விபரம் பேசப்பட்டது. “ஒவ்வொரு நாளும் 2 மணித்தியாலங்கள் வேலை செய்யவேண்டும். விரும்பினால், வீட்டுத்தோட்டத்துக்கு அல்லது பரமசிவம் விரும்பினால், கொஞ்ச தூரம் வெளியே அழைத்துச் செல்லலாம்” என்று விபரமாக விளக்கினாள் சிநேகா.

கண்விழித்த பரமசிவம் அதிர்ச்சியில் கண்ணை விழித்துப் பார்த்தார். அவர் விரும்பியது போலவே கந்தவனம் நேரே வந்து நின்றான்.

“இதுதான் ஹெலி ஐயா. நன்றாக ஆங்கிலம் பேசுவான். இவன்தான் நான் சொன்ன பராமரிப்பாளர்” என்று ஹெலியை அறிமுகப்படுத்தினாள்.

பரமசிவத்தின் கைகளைப் பிடித்து வணக்கம் சொன்னவனை ஆச்சரியம் மேலிடப் பார்த்துக் கொண்டே இருந்தார் பரமசிவம். அவர் கூறிய கந்தவனத்தைப் போலவே காட்சியளித்த ஹெலியின் தோற்றத்தை அவர் பார்க்க அவருக்கு மேலும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

சிறிது நேரம் இருந்து பேசியபின் ஹெலி விடைபெற்றான். 1 வாரத்தின் பின் வேலை தொடங்கலாம் என்று சிநேகாவால் சொல்லப்பட்டது. நிருபாவினுடைய ஆய்வுப் பயிற்சிக்கு எத்தனை நாளாகும் என்னும்

விபரம் நிருபாவுக்கே தெரியாது. ஹெலி விடைபெற்றபின் தொலைப் பேசி அழைப்பு வந்தது.

“ஹலோ... ... ஆ... கலா சொல்லுங்கள்.”

“அக்கா... ... எங்களுடைய ரெஸ்ரோரன்றில் பெரிய பிரச்சினை. இவருக்கும் இவருடைய பார்ட்னருக்கும் இடையில் பெரிய பிரச்சனை. இவர் கடையை விட்டு விலகிவிட்டார். அவன் எங்களுடைய காசைத் தர மாட்டேன் என்று சொல்லுகின்றான். முழுநாளும் அதற்குள் நாங்கள் குடும்பமாக வேலை செய்கின்றோம். எந்தவிதப் பலனும் இல்லை. உங்களுக்கு யாராவது லோயரைத் தெரியுமா? என்று கேட்டாள் கலா.

“கலா இவருக்குத் தெரிந்த ஒருவர் இருக்கிறார். நான் இப்போது வேறு வீட்டில் நிற்கிறன். வீட்டுக்குப் போய் இவரிட்டக் கேட்டிற்றுச் சொல்றன். கவலைப்படாதீர்கள்” என்று சொல்லி தொலைப்பேசியைத் துண்டித்தாள்.

“ஆன்ரி நீங்கள் எல்லோருக்கும் நேரம் எடுத்து பேசுகின்றீர்கள். அவர்கள் பிரச்சினைகளைக் காதுகொடுத்துக் கேட்கின்றீர்கள். ஆறுதல் சொல்லுகின்றீர்கள். ஆனால், உங்களுடைய நேரத்தைக் களவெடுத்தவர்கள், உங்களுடைய உதவிகளைப் பெற்றவர்கள், தங்களுடைய பிரச்சினைகள் தீர்ந்தவுடன் உங்களைக் கண்டு கொள்வதில்லையே. அன்ரி எனக்கு எல்லாம் தெரியும் அன்ரி. உங்களை நன்றாக மிஸ்யூஸ் பண்ணுகிறார்கள்.”

“நிருபா! இதுதான் பிரபஞ்சம் எனக்குத் தந்திருக்கும் வேலை. அதை மனப்பூர்வமாக விரும்பிச் செய்யவேண்டும். கருவேப்பிலையாக என்னைத் தூக்கி எறிபவர்கள் எறியட்டும். எனக்குக் கவலையில்லை நிருபா. இந்தக் கலா இலங்கையில் என்னிடம் படித்த பிள்ளை. சோஸ்ரில் தான் இப்போது குடும்பமாக இருக்கிறாள். அவள் எனக்கு ஒரு விதத்தில் சொந்தக்காரியும் கூட. நல்ல பிள்ள. தனி பிஸ்னஸ் ஸ்ராட் பண்ணி பிட்ஸாக் கடை நடத்தினார்கள். இப்போது பிரச்சினையாம். இலங்கையில் 10 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போதே இஸ்லாமியப் பிரச்சினையாலும் இந்திய இராணுவப் பிரச்சினையாலும் ஊரைவிட்டு மட்டக்களப்பில் இருந்து ஓடி வந்தவ. ஜெர்மனியிலிருக்கும் ஒரு பையனைத் திருமணம் பேசி ஜெர்மனிக்கு வந்தவா. இது பெரிய கதை நிருபா.”

“சொல்லுங்கள் அன்ரி” என்றாள் நிருபா.,

“வந்தாறுமூலை என்னும் இடத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம் இருந்தது. இஸ்லாம் தமிழ் பிரச்சனையின் போது அது அகதி முகாமாக இருந்தது. அங்கே தான் முதலில் கலாவும் அவளுடைய அப்பா, அம்மா தம்பியும் தங்கி இருந்தார்களாம். ஒரு தடவை தன்னுடைய கண்ணுக்கு முன்னே தன்னோடு படித்த மாணவர்கள் உட்பட 140 பேரைச் சந்தேகத்தின் பேரில் ஆமிக்காரர்கள் பிடித்துச் சென்றார்களாம். 3 பஸ்ஸில் அவர்களின் கைகளைக் கட்டி ஏற்றிச் சென்றதைத் தன்னுடைய கண்களால் கண்டது இன்னும் மறக்கமுடியாது இருக்கின்றது அக்கா என்று கவலைப்படுவாள். பிடித்துச் சென்றவர்கள் அப்படியே போனவர்கள் தான். அத்தனை பேரையும் ஒரு பெரிய கிடங்கு வெட்டி அதற்குள் சுட்டுத் தள்ளிவிட்டு மூடிவிட்டார்களாம். தலையாட்டி என்று இருவரைக் கொண்டு வந்து வைத்துத் தான் இவர்களைப் பிடித்துச் சென்றிருக்கின்றார்கள்.”

“அது என்ன அன்ரி தலையாட்டி?”

“கலவரம் நடந்த காலத்திலே போராளிகளாக இருந்து ஆமிக்காரர்களால் பிடிபட்ட பையன்களையும் தமிழர்களுக்கு எதிரான சில இஸ்லாமிய இளைஞர்களையும் முகத்தை மூடிக் கட்டி அழைத்து வருவார்கள். அவர்களுக்கு முன்னே ஆண்களை நிறுத்துவார்கள். அவர்கள் தலை ஆட்டுவதைப் பொறுத்து பையன்களைப் பிடித்துச் செல்வார்கள். அவர்கள் தலை ஆட்ட வேண்டிய அவசியமும் இருந்திருக்கின்றது. இல்லையென்றால், அவர்களுடைய உயிருக்கு ஆபத்து. ஆனால் 140 பேருக்குத் தலையாட்டியது. மன்னிக்க முடியாத குற்றமாக நான் நினைத்தேன். எவ்வித இயக்கத் தொடர்பும் இல்லாமல் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள், பிற தொழில் செய்கிறவர்கள் என்று அப்பாவிகளைத் தலையாட்டிக் கொன்ற செயல் மனத்துக்கு வேதனையைத் தந்தது. அவரவர் பிரச்சினை அவரவர்களுக்குத்தான் தெரியும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நியாயம். நாங்கள் ஜட்ஜ்மென்ற் கொடுக்க முடியாது.”

“அப்படியா அன்ரி”

“அதன்பின் கலா திருமணம் செய்து பயணமுகவர் மூலம் பணம் கொடுத்து மொஸ்கோ சென்றாள். அங்கே ஒரு வீடு வாடகைக்கு ஏஜென்சிக்காரன் எடுத்துக் கொடுத்திருக்கின்றான். 2 வாரங்களின் பின் அர்மானியா நாட்டுக்குக் கூட்டிச் சென்றார்களாம். அங்கு 1 வாரம்

தங்கியிருந்து அதன் பின் ஹொலன்ட் வந்த கலாவை ஏஜென்சிகாரன் அகதியாகப் பதிவு செய்தானாம். அதன்பின் கலாவினுடைய கணவன் சிற்றுந்து கொண்டு போய் ஜெர்மனிக்கு அழைத்து வந்து ஜெர்மனியில் அகதி விண்ணப்பம் செய்து பதிவு செய்தார்களாம். சோலிங்கன் நகரிலே இவளைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஒரு வீட்டில் ஒரு அறை கொடுக்கப்பட்டுள்ளது. அதிலே கலாவையும், கலாவுடன் சேர்த்து ஒரு பிள்ளையையும் விட்டிருக்கின்றார்கள். பக்கத்து அறைகளில் வேறு நாட்டு அகதி அந்தஸ்து கோரிய ஆண்கள், பெண்கள் என்று இருந்திருக்கின்றார்கள். ஒரு சமையலறை, ஒரு மலசலக்கூடம், ஒரு குளியலறை. இவர்கள் மலசலக்கூடம், அல்லது குளியலறை பாவிப்பதாக இருந்தால், ஒருவர் வெளியே பாதுகாவலாக நிற்பார்களாம்.

கலாவின் உறவினர் குடும்பமாக சோலிங்கனில் வசித்திருக்கின்றார். அவர்களுடைய வீட்டில் அழுக்கு உடைகளைக் கழுவி எடுத்துக் கொண்டு வந்து தாம் தங்கியிருக்கின்ற வீட்டில் காயப் போடுவார்களாம். அந்த உடுப்புக்களைக் காவிக்கொண்டு சிற்றுந்தில் செல்வதாகவும் பல கஷ்டங்களை அனுபவித்ததாகவும் கலா சொன்னாள். அவள் இருந்த இடத்தைக் கொண்டு போய்க் காட்டினாள். நல்ல மலைப்பகுதியில் ஒடுங்கிய ஓர் அடுக்குமாடிக் கட்டிடம். எப்படிக் கடினத்தை அனுபவித்திருப்பாள் என்று உணரக்கூடியதாக இருந்தது.

10 ஆம் வகுப்பு முடிக்காமலே அந்த வயதில் தனியாக வீட்டிலிருந்து வெளியேறி, புரியாத மொழி பேசும் நாடுகள் எல்லாம் திரிந்து, தங்கிச் சமைத்துச் சாப்பிட்டு வாழ்ந்த வாழ்க்கையை இப்போது நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கின்றது என்று சொல்வாள்.

ஒரு பெண்ணாக எத்தனை மொழி தெரியாத ஆண்களின் கழுகுப் பார்வையில் இருந்து தப்பி இப்போது இப்படி வாழ்வதாகச் சொல்வாள். புலம்பெயர்ந்த மக்களின் செல்வச் செழிப்புக்குப் பின்னே எத்தனை வேதனைக் காயங்கள் இருக்கின்றன என்பதைத் தாய்நாட்டிலே இருக்கின்றவர்களுக்குப் புரியாது நிருபா''

''இதைவிட எனது மகள் அப்பிள் மாமா என்று சொல்லுகின்ற சிறி அண்ணனுடைய மனைவி பிள்ளைகள் ஜெர்மனி வந்து சேர்ந்த கதை பெரியது நிருபா.

முதலில் அவர்கள் வெளிநாட்டுக்கு ஆட்களை ஏற்றுகின்ற முகவர்களிடம் பணத்தைச் செலுத்தி மலேசியா வந்து, அங்கே இருந்து மொஸ்கோவுக்குப் போய் அங்கே இருந்து ருமேனியாக்குப் போயிருக்கிறார்கள். 35 டிக்கிரி வெப்பத்தினால் பழக்கப்பட்ட உடம்பு மைனஸ் டிக்கிரிக்கு எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். அவர்களின் குறிக்கோள் ஜெர்மனி இல்லையா எத்தனை நாளைக்கு றொமேனியாவில் நிற்பது.

அங்கே இருந்து காரிலே கூட்டிக் கொண்டு போன போது ஜெர்மனி போர்டர் வந்திருக்கின்றது. அப்போது ஒரு பத்தைக்குள் குதிக்கச் சொன்னார்களாம். அப்படிக் குதித்து உருண்டு போய் ஒரு சேற்றுக்குள் விழுந்தார்களாம். அந்தச் சேற்றுக்குள் நடந்து வந்து பயணமுகவர் கொண்டு நிறுத்திய லொறிக்குள்ளே ஏறியிருக்கின்றார்கள். அந்த நேரம் ஆமிக்காரர்கள் வருவதைக் கண்ட பயணமுகவர் இவர்களை விட்டு ஓடிவிட்டானாம்.

பிறகென்ன பழைய குருடி கதவைத் திறடி என்பது போல இவர்களை பொலிஸ்காரர்கள் பிடித்து ஜெயிலில் போட்டார்களாம்.

சிறையிலே அவர்களோட வந்த ஒருத்திக்கு 3 ஆவது நாள் பிள்ளை பிறந்து விட்டது. அந்தப் பிள்ளைக்கு ஆயுள் காலங்கள் 6 நாட்கள்தான். அவளுடைய நிலையைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள் நிருபா. சிறி அண்ணனுடைய மகன் சின்னப்பிள்ளை என்ற காரணத்தாலே ஒரு பொலிஸ்காரி தன்னுடைய சிநேகிதி வீட்டில் சிறி அண்ணனுடைய மகனையும் மனைவியையும் கொண்டு போய் விட்டாளாம். மகன் தினேஸ் சின்னப் பிள்ளை என்ற காரணத்தாலே இவர்களுக்குத் தீமைக்குள்ளும் ஒரு நன்மை இருந்திருக்கிறது.

அங்கே இருந்து ஒரு கட்டிடத்தில் இவர்களை மாற்றியிருக்கிறார்கள். நீங்களாக இருந்தால் எப்படி அங்கே தங்கியிருப்பீர்கள் என்று என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை என்று அக்கா என்னிடம் சொல்லுவா நிருபா. அந்த அளவுக்கு நரக உலகமாக அக்கட்டிடம் இருந்திருக்கிறது. அழுக்கு மூட்டையுடன் வாழ்ந்தது போல இருந்ததாம். றொமேனியாவில் இருந்து வேறு ஒரு பயணமுகவர் ஒரு வேனிலே ஏற்றிக் கொண்டு வந்தாராம். ஒரு காட்டு வழியால் அவர்களைக் கொண்டு வந்து ஜெர்மனியில் விட்டாராம். அங்கிருந்து ஒற்றையடிப் பாதைபோல ஒரு

ஒடுக்கமான பாலத்திலே நடந்து வூப்பற்றால் வந்து சேர்ந்ததாகச் சொன்னா. குளிருக்குப் போடுகின்ற சப்பாத்துக்களோ ஆடைகளோ சரியாக அவர்களிடம் இருக்கவில்லையாம் நிருபா.

இப்போது BMW Car இல் பயணம் செய்து அழகான வசதி படைத்த வீட்டில் குடியிருக்கின்ற அவர்களுடைய தாய் தந்தையர் எப்படி ஜெர்மனிக்கு வந்தார்கள், இந்த வாழ்வை வாழுகின்றார்கள் என்ற சரித்திரம் பிள்ளைகளுக்குத் தெரியவேண்டும். நல்ல வேளை என்னுடைய அம்மா, அப்பா செய்த புண்ணியம் என்னவோ இந்த அனுபவங்கள் எல்லாம் எனக்குக் கிடைக்கவில்லை. கொழும்பில் விமானம் எடுத்து டுசுல்டோப் வந்து இறங்கி மலர்ச் செண்டுடன் என்னை இவர் கூட்டிக் கொண்டு வந்தார்.''

என்று ஜெர்மனிக்கு மக்கள் வந்த சங்கதிகள் எல்லாம் விளக்கிய சிநேகாவிடம்

''அன்ரி எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இலங்கையைப் பற்றி வழமையாகப் புகழோ புகழ் என்று புகழ்ந்து கொட்டுவீர்கள். ஆனால், ஏன் இப்படி எல்லாம் கஷ்டப்பட்டு இங்கு வர வேண்டுமா? ஏன் கலா என்பவருடைய நண்பர்களைப் பிடித்துக் கொல்ல வேண்டும். அப்படி உங்களுடைய ஊரில் என்ன நடந்தது.'' மிகவும் ஆர்வமாக நிருபா கேட்கும் போது உண்மையைச் சொல்லியே ஆக வேண்டிய சூழ்நிலை சிநேகாவுக்கு இருந்தது.

''நிருபா! ஆறாத காயங்கள் என் மனத்துக்குள்ளே இருக்கின்றன. எங்களுடைய குடும்பம் நிலைகுலைத்தது, ஆளுக்கொரு திக்கில் பிரிந்தது, உறவினர்கள் எல்லோரும் ஊரை விட்டு ஓடியது, சுடுகாடாய் எங்களுடைய ஊர் மாறியது, அம்மா, அப்பாவை இழந்து இன்று நான் தவிக்கின்றமைக்கு எல்லாம் முற்றுமுழுதான காரணம் அரசாங்கம் மட்டுமல்ல.

நான் பிறந்த மண் ஏறாவூர். 5 குறிச்சிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 3 குறிச்சிகளில் இஸ்லாமியர்கள் வாழ்ந்தார்கள். நான்காம், ஐந்தாம் குறிச்சிகளில் தமிழர்கள் வாழ்ந்தோம். இருவரும் சந்திக்கும் புள்ளியாக ஏறாவூர் சந்தை அமைந்திருந்தது. சந்தையைக் கடந்து இஸ்லாமியர்கள் வாழ்ந்தார்கள்.

1985 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் ரோந்து வருவதனால் அடிக்கடி பிரச்சினைகள் எங்களுடைய ஊரில் வருவது வழமை. அதனால், எங்களுடைய அத்தை குடும்பம் இரவிலே வந்து எங்களுடைய வீட்டில் தங்குகின்ற வழக்கம் இருந்தது. ஒருநாள் இரவு நாங்கள் வீட்டிலே நித்திரையில் இருந்த போது ஒருநாள் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் பலமாகக் காதைப் பிளந்தன. எங்கே என்ன நடக்கின்றது என்று யாருக்கும் தெரியாது. இரவோடிரவாகக் கையிலே கிடைப்பதை எடுத்துக் கொண்டு பின் வழியால் கிழக்குப் பல்கலைக்கழக மண்டபத்திற்குப் போகலாம் என்று வீட்டைவிட்டு வெளியேறினோம்.

கும்மிருட்டு. ஒருவரை ஒருவர் பிடித்தபடி கால்களை எங்கே வைக்கின்றோம் என்று தெரியாது நகர்ந்தோம். புலிகள் நுழைந்து விட்டார்கள் என்ற அச்சத்திலே இருட்டுக்குள் பதுங்கிக் கொண்டு வந்தபோது துப்பாக்கி சுமந்தபடி இளைஞர்கள் திரிவது தெரிந்தது. நாங்கள் யார் என்பதைத் தெரியப்படுத்துவதற்காக இருட்டிலே பரமசிவம் குடும்பம் என்று கத்தியபடி நடந்தோம்.

ஐயாவினுடைய பெயரைக் கேட்டவுடன் போராளிகள்,

“சரி ஐயா கவனமாகப் போங்கள்” என்று எங்களை வழி அனுப்பினார்கள்.

அன்று பொலிஸ் நிலையம் போராளிகளால் குண்டு வைத்து உடைக்கப்பட்டது. அதுதான் அந்தத் துப்பாக்கிக் குண்டுச் சத்தத்தை நாம் கேட்டிருக்கின்றோம் என்னும் விடயம் பின்புதான் அறிந்தோம்.

அன்று வந்தாறுமூலைப் பல்கலைக்கழக வளாகத்திலே சத்திரத்துப் பிச்சைக்காரர்கள் போலக் கிடந்தோம்.

அன்றைய பொழுது அச்சத்தில் கழிந்தது.

அதன் பின் ஆகஸ்ட் 3 ஆம் திகதி 1990 இல் காத்தான்குடியில் நடந்த கலவரம் என் வாழ்க்கையைத் திருப்பிப் போட்டது.

இந்தச் சம்பவம் நடந்த போது ஏறாவூரில் சரிக்குச் சமமாக இஸ்லாமியருடன் வாழ்ந்த நாம் தமிழர்கள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தோம்.

காத்தான்குடி என்ற இடத்திலே இஸ்லாமியருடைய ஜும்மா பள்ளிவாசலிலே முஸ்லிம்கள் இரவுத் தொழுகையிலே ஈடுபட்டிருந்தனர்.

அங்கு நுழைந்த விடுதலைப்புலிகளின் துப்பாக்கிச் சூட்டினாலும், கைக்குண்டுத் தாக்குதலாலும் பல முஸ்லிம்கள் உயிரிழந்தார்கள். அங்கிருந்து மஞ்சந்தொடுவாய் ஹுசைனியா பள்ளிவாசலில் இருந்த முஸ்லிம்களையும் தாக்கியிருந்தார்கள். எத்தனை பேர் இறந்தார்கள் தெரியுமா? சிறுவர்கள், முதியவர்கள் என்று 103 பேர் கொல்லப்பட்டார்கள். 140 பேர் வரை காயப்பட்டார்கள்.

இங்கு ஒரு கிராமத்தில் ஒரு பன்றி இறைச்சிக் கடையின் கண்ணாடியை வெளியே நின்ற ஒரு பன்றி ஆக்ரோசமாக உடைத்து உள்ளே புகுந்து ரகளை பண்ணியதாகவும், இந்தப் பன்றியை அடக்க முடியாமல் இருந்ததாகவும் ஒரு நியூஸ் பேப்பரில் வந்ததே. மிருகமோ மனிதரோ உணர்ச்சி என்பது ஒன்றுதானே நிருபா. அதனாலேயே இஸ்லாமியர்களும் நாங்களும் ஏறாவூரில் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தோம்.''

இஸ்லாமியரால் பிரச்சினை வரப் போகின்றதா? இல்லை ஏறாவூர் இஸ்லாமியரை விடுதலைப் புலிகள் கொல்வார்களா? என்று எல்லோரிடமும் அச்சம் பரவி இருந்தது.''

சிநேகா பேசப் பேச நிருபா கன்னத்தில் கை வைத்து மிக ஆர்வமாகவும், ஆச்சரியமாகவும் சிநேகாவைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவளுடைய எதிர்பார்ப்பெல்லாம் சிநேகா குடும்பத்தினர் என்ன செய்தார்கள்? அவர்களின் நிலைமை என்ன? என்பதுதான். தொடர்ந்தாள் சிநேகா.

``ஐயா இஸ்லாமியர்களுக்கு எவ்வளவோ உதவிகள் செய்திருக்கின்றார். ஆனால், பிரஜைகள் குழுத் தலைவராக இருந்த காரணத்தாலே ஐயாவைத்தான் முதலில் கொழும்புக்கு அனுப்பினோம். ஏறாவூர் இஸ்லாமியரும் அங்கு நடந்தது, நடந்து விட்டது. நாங்கள் ஒற்றுமையாக இருப்போம் என்று கூறி முஸ்லிம்கள் பேசாமலேயே இருந்தார்கள்.

இனிமேல் ஏறாவூரில் இருப்பது பாதுகாப்பில்லை என்று கருதினோம். அன்று 7 ஆம் திகதி ஆகஸ்ட் 1990. நானும் அம்மாவும் சின்ன அண்ணனும் சிந்துவும் மட்டக்களப்புக்குப் போய் அங்கே இருந்து கொழும்புக்குப் போவதற்குத் தீர்மானித்தோம். பெரிதாக எந்தப் பொருள்களையும் எடுக்கவில்லை. ஒரு பயணப்பொதியுடன் சான்றிதழ்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு இந்தியா போகின்ற எண்ணத்திலே ஏறாவூரை விட்டு வெளியேறினோம். இதுதான் என் வீட்டின் கடைசி நாள் என்பதை நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அம்மாவுக்காக ஐயா ஆசையுடன் கட்டிய வீடு. முன்புறத்திலே மண் பரப்பி சதுரமாகப் பாத்திபோல கட்டி அதற்குள்ளே அம்மா விரும்பிய போகன்வில்லா, செவ்வந்தி, ரோஜா மலர்கள் என விதம் விதமான பூந்தோட்டம் அமைத்து ஒகிட்மலர்கள் வளர்வதற்குத் தேங்காய் மட்டையால் பாதுகாப்புக் கொடுத்து அம்மா பார்த்துப் பார்த்து அழகு சேர்த்த பூங்காவனத்தை இனி யார் பராமரிப்பார்? என்று நினைக்கவில்லை. காலைவேளை குழாய் நீரை வாசலிலே பாய்ச்சி தூசி தணிக்கும் அம்மா இந்த இனப்பிரச்சினைக்கு யார்தான் தண்ணீர் தெளித்துத் தணிய வைக்கப் போகின்றார்கள் என்று அடிக்கடி சொல்லும் சொல் மனத்தில் நின்றது.

மட்டக்களப்புக்குச் சென்று விட்டோம். கொழும்பு பஸ்ஸிற்குப் பதிவு செய்து விட்டுப் பெரியம்மா வீட்டிலே தங்கினோம். கொழும்புக்குச் செல்லும் பஸ் இப்போது போகாது என்று நாட்கள் நகர்ந்தன.

1990 ஆகஸ்ட் 12 ஆம் திகதி. நிருபா! இரவு விடுதலைப் புலிகள் ஏறாவூர் கிராமத்துக்குள் நுழைந்து விட்டார்கள். இரவோடிரவாக 121 முஸ்லிம் பொது மக்கள் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் யார்? இஸ்லாமியர்களாகப் பிறந்த பாவத்தைத் தவிர இவர்கள் என்ன செய்தார்கள்? பிறந்த குழந்தை என்ன செய்தது? வயிற்றில் இருந்த குழந்தை என்ன செய்தது? இந்த அகோரத் தாண்டவத்தால், வெறுப்படைந்த முஸ்லிம்கள் ஏறாவூர் தமிழர்கள் வாழ்ந்த பகுதிக்குள் நுழைந்து விட்டார்கள். மக்களின் கூக்குரல் கேட்ட மாத்திரத்தில் கையில் கிடைத்தவற்றைத் தூக்கிக் கொண்டு தப்பி ஓடியவர்கள் தவிர மற்றையவர்கள் முஸ்லிம்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்கள்.

உறவுகளைப் பறி கொடுத்தவர்கள், இரத்த இரவை சந்தித்தவர்கள் கொதித்தெழ மாட்டார்களா? ஒரு கோவலன் இறந்ததற்குப் பாண்டிய நாட்டையே கண்ணகி அழித்தாள் அல்லவா? நீங்கள் இக்கதை கேள்விப்பட்டீர்களா? நிருபா.

பெரியண்ணனும் அண்ணியும் ஆச்சியும் வீட்டிலிருந்து ஓடிப் போய் பல்கலைக்கழகத்தினுள் நுழைந்து தப்பி விட்டார்கள். அண்ணனுடைய மகன் கைக்குழந்தை. எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. வீடு உடைக்கப்பட்டது, பொருள்கள் களவாடப்பட்டன. எதுவுமே இல்லாமல் கனவுகள் சுமந்த வீடு. கட்டாந்தரையானது. எனக்குத் தரப்பட வேண்டிய வீடு நிருபா. இன்று இங்கே யாரோ கட்டிய வீட்டில் வாடகை செலுத்திக் கொண்டு வாழுகின்றேன்.

சில நாட்களின் பின் அண்ணன் ஆமிக்காரர்களின் துணையுடன் வீட்டைப் போய்ப் பார்த்திருக்கிறார். அடையாளம் தெரியாமல் வீடு உடைக்கப்பட்டிருந்தது. பிரச்சினைக்குத் தப்பி ஓடாமல் பிள்ளைகள் மனைவிமாரை அகதி முகாமுக்கு அனுப்பிவிட்டு வீட்டிலே தங்கியிருந்த எத்தனையோ ஆண்களை வீட்டுக்குள்ளேயே வெட்டிப் போட்டு நெருப்பு வைத்திருக்கின்றார்கள்.

எங்களுடைய வீடு குட்டிச்சுவராகியது. ஐயா தன்னுடைய கையால் தன்னுடைய பாக்கெட்டிற்குள் இருந்து எத்தனை ரூபாய்களை இவர்களுக்குத் தானம் பண்ணியிருப்பார். தன்னுடைய கையால் எத்தனை கடிதம் எழுதி வாழ்வாதாரம் பெற்றுக் கொடுத்திருப்பார். சூறாவளி அடித்து ஏறாவூர் மக்கள் வீடு வாசல் இழந்து எங்களுடைய வீட்டுக்கு முன்னே இருந்த ரெயில்வே ஸ்ரேசனில் தஞ்சம் புகுந்த போது எங்களுடைய வீடும் உடைந்து போயிருந்தாலும் அத்தனை பேருக்கும் உணவு சமைத்துப் போட்டாரே.

எந்த நன்றியுணர்வும் இல்லாமல் எப்படி எங்களுடைய வீடுகளைக் காடையர்கள் உடைத்த போது அப்பகுதி மக்கள் வழிவிட்டார்கள்? கோயில் பண்டிகை என்று கொண்டாடிய ஊர் சுடுகாடாக மாறிய அனுபவம் யாருக்கும் கிடைக்கக் கூடாது. அனுபவித்தோம். ஆறாத காயங்கள் அடி மனத்திலே புதைந்திருக்கின்றன. அப்பாவிகள் தண்டிக்கப்படுகின்றார்கள். குற்றவாளிகள் தப்பிக் கொள்ளுகின்றார்கள். இதுதானே இப்போதும் உலக நாடுகளில் நடக்கின்றன.

உறவினர்கள் யாருமே ஊருக்குள் நிற்க முடியாத மரணபயம். இந்த நிலை முடிவுக்கு வர எத்தனையோ ஆண்டுகள் எடுத்தன. காரணம் இல்லாமல் எங்கள் ஊர் சவக்குழியானது. நடமாடிய உறவுகள் இஸ்லாமியர்களின் வஞ்சம் தீர்க்கும் வெறியிலே வெந்து சாம்பலாகின.

நிருபா நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விடயம் என்னுடைய சிநேகிதியின் அம்மாவுக்கு நடந்தது. இஸ்லாமியக் காடையர்களின் பழிவாங்கல் ஓரளவு தணிந்த போது தன்னுடைய வீட்டைப் பார்க்கப் போயிருக்கின்றாள். வீட்டில் நிலைமையைப் பார்த்த போது அவளால் தாங்க முடியவில்லை. பக்கத்து வீடுகளுக்குத் தன்னுடைய கைகளால் எத்தனை நாள் சமைத்துப் போட்டிருப்பாள். எவ்வளவு பொருட்களை அள்ளிக் கொடுத்திருப்பாள். ஆனால், அவர்களின் கண்ணுக்கு முன்னே

இத்தனை கொடுமை நடந்திருப்பதைப் பார்த்த போது அவளால் தாங்க முடியாது திட்டித் தீர்த்திருக்கிறாள். இந்த விடயத்தை யாரோ காடையர்களுக்குச் சொல்லிவிட்டார்கள். திரும்பி முகாமுக்கு வந்துவிட்டு மீண்டும் ஒருநாள் வீடு பார்க்கப் போயிருக்கின்றாள். அப்போதுதான் அந்தக் கொடுமை நடந்தது.

அவள் வீடு பார்க்க வந்த செய்தியைக் கேள்விப்பட்ட காடையர்கள், அவளை அடித்துக் கொன்றது மட்டுமல்லாமல் தலையை அம்மியில் தூக்கி வைத்து அடித்து அடித்து இறந்த உடலைச் சித்திரவதை செய்திருக்கின்றார்கள்.

"போதும் அன்ரி. போதும். மட்டக்களப்புப் போராட்டத்தில் பாதிக்கப்படவில்லை என்றுதான் கேள்விப்பட்டிருக்கின்றேன். இது என்ன கொடுமை. உங்களுடைய அண்ணன் அண்ணிக்கு என்ன நடந்தது."

"அண்ணனும், அண்ணியும் அவர்கள் கைக்குழந்தையும், ஆச்சியும் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழக அகதிமுகாமே தமது சொந்தவீடாகக் காலத்தைக் கடத்தினர். நாங்களோ கொழும்பு செல்லக் காத்திருந்து காத்திருந்து ஒருநாள் விடிவு வந்தது. 7 பஸ்கள் இராணுவத்தினர்களின் பாதுகாப்புடன் கொழும்புக்குப் பதிவு செய்தவர்களை ஏற்றிக் கொண்டு போகப் போகின்றன என்ற செய்தி கேட்டு ஆயத்தமானோம்.

நாளும் வந்தது நாங்கள் ஒரு பஸ்ஸிலே இடித்துப் பிடித்து ஏறினோம். இடம் இல்லையென்றால் இறக்கிவிடுவார்கள். அதனால், எதையும் கவனிக்காது உள்ளே நுழைந்துவிட்டோம். பிரச்சினையின் பின் முதன் முதலாக மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் தொடங்கியது. வந்தாறுமூலை தாண்டும் போது அகதி முகாமாகிய பல்கலைக் கழகத்தைப் பார்த்த போது எத்தனை உயிர்கள் அந்த இடத்துக்குள் அடங்கிக் கிடக்கின்றன. அதற்குள் என்னுடைய பிள்ளையும் அம்மாவும் அகப்பட்டுக் கொண்டார்களே என்ற ஏக்கம் அம்மாவின் மனத்துக்குள் தவியாய்த் தவித்தது.

322 கிலோ மீற்றர் தூரத்தை ஆறரை 7 மணித்தியாலத்துக்குப் பிரயாணம் செய்ய வேண்டிய கால அளவு நீண்டது. காரணம் நிருபா இன்று நினைத்தாலும் நெஞ்சுக்குள் இரத்தம் கசிகிறது. சோதனைச்

சாவடிகளில் அடிக்கடி இறங்கி ஏற வேண்டும். அங்கே தலையாட்டிகள் என்று நிற்கின்றவர்கள் தலையை ஆட்டிவிட்டால், அத்தோடு பிறந்து வளர்ந்த காலங்களுக்கு விடை கொடுக்க வேண்டும்.

வெலிக்கந்தை என்னும் இடத்தில் சோதனைச்சாவடி எல்லாரும் இறங்குங்கள் என்று ஆமிக்காரர்கள் இறக்கினார்கள். 7 பஸ்களிலும் இருந்து ஆண்கள் ஒரு புறமும் பெண்கள் ஒரு புறமும் பிரிக்கப்பட்டனர். பெண்களெல்லாம் திரும்பவும் பஸ் வண்டிக்குள் ஏற்றப்பட்டனர். சின்ன அண்ணன் கீழே. அண்ணனைத் தான் திருமணம் செய்வேன் என்று அடம்பிடித்து எங்களோடு கொழும்புக்கு வந்த சக்தியும் எங்களுடன் ஏறி விட்டாள். பஸ் வண்டிக்குள் இருந்த எல்லோருடைய மனங்களும் திக்குத் திக்கென்று அடித்துக் கொண்டிருந்தன. ஆண்களை என்ன செய்யப் போகின்றார்கள் என்று இருண்ட மனத்துடன் எல்லாப் பெண்களும் மௌனமாக இருந்தார்கள். சிறிது நேரத்திலே ஆண்கள் ஒவ்வொருவராக பேருந்துக்குள் வந்து ஏறினார்கள்.

பஸ் புறப்படத் தயாரானது. அண்ணன் வரவில்லை. நாங்கள் கீழே இறங்கி ஓடினோம். அண்ணனுடன் சேர்த்து நான்கு ஆண்களைப் பிடித்து வைத்திருந்தார்கள். நான்கு பேரும் நல்ல திடகாத்திரமான உயரமானவர்கள். நாங்கள் அழுது புலம்பினோம். விடும்படிக் கெஞ்சிக் கூத்தாடினோம். போகமாட்டோம் என்று அடம்பிடித்தோம். எங்களுடைய காலுக்குக் கீழே துப்பாக்கியால் சுட்டு, பஸ் போகப்போகிறது ஓடுங்கள் என்று துரத்தினார்கள். எங்களுக்கு எதுவுமே செய்ய முடியவில்லை. ஜீப்பிலே நான்கு பேரையும் ஏற்றிக் கொண்டு போய்விட்டார்கள். கண்ணீரும் கம்பலையுமாய் பஸ்ஸிற்குள் ஏறினோம். கடைசியாக எங்களுடைய பஸ் கிளம்பியது. கொழும்பு வரும்வரை அமைதியாகவே பிரயாணம் நடந்தது. அழுது அழுது கண்ணீர் வற்றிவிட்டது. ஏறும் போது இருந்த ஆர்வம் இறங்கும் போது இருக்குமா? சொல்லுங்கள். கனத்த மனத்துடன் இறங்கினோம்

பஸ் இல் இருந்து இறங்கிய போது பஸ் ஸ்ராண்டில் வந்து நின்ற ஐயா, எங்களைக் கண்டவுடன் என்ர பிள்ளய அவனுகளிட்டக் கொடுத்துப் போட்டு வந்திருக்கிறீங்களா? என்று கத்தியபடி நிலத்திலே அப்படியே இருந்து விட்டார். அன்றுதான் முதன்முதலாக ஐயா அழுததைப் பார்த்தேன். ஒருமுறை அண்ணனைப் புலிகள் கொண்டு போய்ப் பணம் கேட்டு வைத்திருந்த போது அவர்களிடம் மண்டியிட்டார். அதை

நான் காணவில்லை. இன்று ஆமிக்காரர்கள் கையில் பிடிபட்ட போது மண்ணில் கிடந்தார். நாங்கள் இறங்கும் முன்னமே முன் பஸ்களில் வந்தவர்கள் ஐயாவிடம் விபரத்தைச் சொல்லி விட்டார்கள். பஸ் தரிப்பு முழுவதும் எங்களுடைய பேச்சுத்தான். ஏறாவூரில் உயிரைக் காப்பாற்றி வெலிக்கந்தையில் பறி கொடுத்தது போல் ஆயிற்று.

அங்கே இருந்து விடுதி ஒன்றில் எல்லோரும் ஆட்டு மந்தைகள் போலத் தங்கினோம். இது கொழும்பில் இருந்த ஒரு விடுதி போலப் பெரிய மண்டபம். அதில் எத்தனை பேரும் தங்கலாம். ஒரு ஹோலிலே நாங்கள் குடும்பமாகத் தங்கினோம். சாஹிர் மௌலான என்னும் அண்ணனுடைய நண்பர் ஒருவர் இஸ்லாமியர்களின் அரசியல்வாதியாக இருந்தார். அவருடைய தொலைப்பேசி இலக்கத்தை எப்படியோ ஐயா பெற்று அவருடன் பேசினார். அவரும் உடனடியாக வெலிக்கந்தை பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு அங்குள்ள மேலதிகாரி பொலிஸ் உத்தியோகஸ்தருடன் தொடர்பை ஏற்படுத்தி அண்ணனைக் கவனமாகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கும் படிக் கேட்டிருக்கிறார். அவரும் சாஹிர் மௌலானாவின் நண்பன் என்ர காரணத்தால், அண்ணனை அழைத்துத் தன்னுடைய வீட்டில் தங்க வைத்து உணவு கொடுத்துக் கவனமாகத் திரும்பவும் கொழும்புக்கு அனுப்பி வைத்தார்.

“நீ சாஹிர் மௌலானவின் நண்பராக இருந்தது உனக்கு நல்ல காலமாகப் போய்விட்டது” என்று நட்புடன் அந்த அதிகாரி பேசியதாக அண்ணன் சொன்னார்.

ஒருநாள் முழுவதும் மறியலில் இருந்தது ஜீப்பில் ஏற்றிக் கொண்டு போனபோது இவர்கள் அடித்த அடி இடுப்பிலே தாங்கியதும் அண்ணனுக்கு மிகுந்த வலியை ஏற்படுத்தியிருந்தது.

அண்ணனைக் கண்ட பின்புதான் எங்களுடைய வயிற்றுக்குள் உணவு இறங்கியது. அம்மாவுக்கும் ஐயாவுக்கும் இதயம் ஒன்றும் இரும்பால் செய்யவில்லை. ஒரு மனிதன் வாழ்ந்த வாழ்க்கையைப் பறி கொடுத்துக் கசப்புக்களையும், கொடுமைகளையும் அனுபவிக்கும் போது அந்த மனம் எப்படி உடைந்து போகும் என்பதை அனுபவிப்பவர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.

ஊரிலே பிரபல்யம், நினைவுகள் முழுவதும் ஊர் மக்கள் என்று வாழ்ந்த நினைவுகளைச் சுமந்து, யானை போல நடந்து பூனை போலப்

பயந்து இன்று ஐயா கட்டிலிலே மனவழுத்தங்களால் புற்றுநோயாளி. அம்மா மூளைக்குள்ளே தாங்க முடியாத வேதனைகளால் நலிவடைந்த நரம்புகளின் தாக்கத்தால் விண்ணிலே.

அதற்குப் பிறகு கொழும்பில் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்து, அதன்பின் நீர்கொழும்பில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து வந்து நான் இங்கு வரும்வரை அங்குதான் தங்கினோம்.

அதுமட்டுமல்ல எங்களுடைய மாமா துரைக்கு நடந்த கதை இன்னும் கவலைக்குரிய விடயம். அத்தையின் கௌரி விரத நூல் எடுப்பதற்காக மட்டக்களப்புக்குப் போனார். இக்காலப்பகுதி ஓர் அளவு நிலைமை அமைதிக்கு வந்துவிட்டது என்றே நாம் கருதி இருந்தோம். ஆனால், பரிசோதனைச் சாவடிகள் இருந்தன. பரிசோதனைகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தன. இவர் சென்ற பேருந்து நிறுத்தப்பட்ட போது ஊர்க்காவல் படையில் இருந்த இஸ்லாமிய இளைஞர்கள்.

"வாங்கள் துரை அண்ணன் உங்களிடம் ஒரு விசாரணை இருக்கிறது"

என்று அழைத்துச் செல்லப்பட்டார்.

"என்னட்ட என்னடா கேட்கப் போறீங்கள்" என்று மாமா கேட்ட போது,

"சும்மா தான் திருப்பி அனுப்பிவிடுவோம்" என்று சொல்லிக் கூட்டிச் சென்றார்கள். அவ்வளவுதான் இன்றும் மாமா வருவார் என்று தேடிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

மாமா எந்தவிதமான இயக்கத் தொடர்பிலும் இல்லை என்பது நிச்சயமாக அவர்களுக்குத் தெரியும். ஆனாலும் கொல்ல வேண்டும். ஊர்ப் பிரமுகர்களை அழிக்க வேண்டும் என்ற வெறி அவர்களிடம் இருந்தது.

திடகாத்திரமான அவருடைய தோற்றமும், தைரியமும், அழகும் இந்தப் பிரச்சினையில் தோற்றுப் போய்விட்டது. மனித மனங்களின் அரக்கத்தன்மையை எப்படி விளக்குவது.

இத்தனை அழிவை இழப்பைச் சந்தித்தும் எமக்கு என்னதான் கிடைத்துவிட்டது. நினைக்கும் போது வேதனையாக இருக்கிறது. அடிப்படையில் நாம் செய்கின்ற தவறுகள் எம்மைத் துரத்திக் கொண்டே இருக்கும்.

நிருபா உங்களுக்குத் தெரியாததில்லை. நான் ஒரு புத்தகப்பூச்சி. மூத்த எழுத்தாளரும், ஆய்வாளரும், மட்டக்களப்பு மான்மியம் என்ற மகத்தான புத்தகத்தையும், புகழ்பெற்ற மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் என்ற நூலையும் தந்த என்னுடைய ஆசான். என்னைத் தன்னுடைய மானசீக சிஷ்யை என்று சொல்வார். அவர் தான் வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராஜா அவர்கள். அவருக்கு ஒரு தமிழ் வான் அவை நிகழ்ச்சி அஞ்சலி நிகழ்ச்சியாகச் செய்திருக்கிறேன். அவர் ஒரு பெரிய நூலகத்தை வீட்டுக்குள்ளேயே கட்டிவைத்திருந்தார். அதில் இருந்த 2 பிரதிகள் உள்ள நூல்களில் ஒன்றை எனக்கு அன்பளிப்பாகத் தந்திருந்தார். எங்களுடைய வீட்டில் எனக்காக ஓர் அறை இருந்தது. அங்கு நானும் ஒரு சிறிய நூலகம் வைத்திருந்தேன். கண்ணாடி அலமாரிக்குள் வைத்து பழைய தமிழ் இலக்கிய நூல்களைக் கட்டிக் காத்திருந்தேன்.

இந்திய இராணுவம் வந்த போது ஏற்பட்ட பிரச்சினையால், ஏதாவது பிரச்சினைக்கு உள்ளாவோம் என்று வீட்டுக்கு அருகாமையில் ஒரு கிடங்கு தோண்டினோம். பயிர்களுக்கு உரங்கள் வருகின்ற பை இருக்கிறதே அதை ‘உர பேக்’ என்று சொல்வார்கள். அதற்குள்ளே நூல்களை எல்லாம் போட்டுத் தற்காலிக அடக்கம் செய்து கிடங்கை மூடி வைத்தேன். வீட்டில் கிடங்கு வெட்டியவர்கள் “பொன்னையும் பொருளையும் கிடங்கிலே போட்டு மறைத்து வைப்பார்கள். தங்கச்சி புத்தகங்களை வைக்குது” என்று நக்கல் அடித்தார்கள்.

அகதி முகாமிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்த போது எங்கள் வீட்டுச் சமையல் கட்டுக்குக் கீழே சாரைப் பாம்பு பதுங்கியிருந்தது. சாரை தங்கிய வீடு பாழடையும் என்று ஒரு பழமொழி இருக்கிறது. அன்று அதை நாம் பெரிதாகக் கவனம் எடுக்கவில்லை. அதேபோல ஒருநாள் வெளவால் வீட்டினுள் பறந்தது. அப்போதும் வெளவால் வீட்டுக்குள் வரக்கூடாது என்றார்கள். முதுமொழி பழையமொழி என்று கருதினோம். ஆனால், அது மெய்மொழி என்று இன்று உணருகின்றோம்.

வீட்டுக்கு வந்த பின் அடக்கம் செய்த நூல்களை முதல் வேலையாக வெளியே எடுத்தேன். ஆனால், நான் எடுக்காமல் விட்டிருந்தால், அவற்றை நான் இழந்திருக்க மாட்டேன். வானத்தில் பறந்த ஹெலிகொப்டர் போட்ட குண்டிலே வீடு முற்றாக அழிந்த போது என்னுடைய நூலகமும் தீக்கிரையாகியது. தீயிலே எரிந்து காற்றிலே கலந்த நூல்களின் சாம்பலைப் பிரபஞ்சம் ஏற்றுக் கொண்டது.

கதையைக் கேட்ட நிருபா நீண்ட பெருமூச்சு விட்டாள்.

“அன்ரி இதைத்தான் கர்மா என்பார்களோ. உங்களுடைய அப்பா இன்னும் எத்தனை கதையைப் பொத்தி வைத்திருக்கிறாரோ” என்றாள்.

சிவந்த கண்களிலே மறைந்து போன கண்ணீருடன் எழுந்தாள் சிநேகா. கால்கள் ஐயாவைப் பார்க்கச் சென்றன. ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த பரமசிவத்தின் தலையைத் தன் கைகளால் தடவினாள். அவரின் கால்களின் மேல் ஏறி நடந்து சதங்களைப் பெற்றுக் கொண்டு பல்லி முட்டாசு வாங்க ஓடிய காலங்கள் நினைவுக்கு வந்தன. தோய்த்துப் போட்ட வெள்ளைத் துணியைப் போல கேசம் பளிச்சென்று கிடந்தது. கண்களிலிருந்து பனித் துளிகள் கன்னத்தைத் தாண்டிச் சென்றன.

நாளை பரிசோதனை ஆரம்பமாகி விடும். துணிந்த மனத்துக்கு இயற்கை கைநீட்டி வந்து கைகுலுக்கியது. வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்பவும் நிருபா படுக்கை அறையில் பங்கெடுக்க வேண்டும். பரிசோதனை முடிந்தபின் ஐயாவை வீட்டுக்கே அழைத்துப் போய்விடலாம் என்ற சிந்தனையில் வெளியேறினாள்.

# அத்தியாயம் 13

# அருட்பேராற்றலின் அன்புக் குரல்

தூங்கா இரவாகப் பொழுது விடிகிறது. கட்டிலில் புரண்டு புரண்டு உடற்பயிற்சிதான் செய்தாள். வலது தோள்பட்டை தூக்க மாத்திரை கேட்டுத் துடித்தது. இது சரிப்பட்டு வராது. ஈபுபுரோபின் சிறுநீரகத்துக்குள் கை வைத்துவிடும். அதற்கு முன் ஏதாவது வழி பார்க்க வேண்டும்.

அதிகாலைச் சூரியன் ஜெர்மனி ஆகாயத்துக்கு விடுப்புப் பத்திரம் அனுப்பியிருந்தான். காலை 5 மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்தாள் சினேகா. தந்தையினுடைய அறையைப் பார்வையிட மூளை கட்டளை யிட்டது. பரமசிவம் அறைக் கதவைக் கைகள் தொட்டன.

சில விடயங்கள் சிந்தனைக்கு எட்டாமலே செயல்படத் தொடங்கும். பூட்டப்படாத கதவுகள் தானாகத் திறந்தன. பரமசிவம் நல்ல உறக்கத்தில் குறட்டை இராகம் இசைத்துக் கொண்டிருந்தார். அறையினுள் குறைவாக விட்டிருந்த வெப்பமூட்டியை நான்கு எண்ணிக்கையில் கூட்டி விட்டாள். பரமசிவம் எழுந்தவுடன் குளிக்கச் செல்ல வேண்டும். அறை குளிராக இருக்கக் கூடாது அல்லவா. கதவை மெல்லச் சாத்திவிட்டு தன்னுடைய கடமைகளை முடித்து விட்டு 7 மணிக்குத் திறந்திருக்கும் நோவோற்றேகும் உடற்பயிற்சி சிகிச்சை நிலையத்துக்குப் போக வேண்டும்.

சிகிச்சைக்குரிய நாட்களைப் பதிவு செய்ய வேண்டிய கடமை இருந்தது.

நான் சிலவேலைகள் முடிக்க இருக்கிறது நிருபா. அதனால் வெளியில் போகின்றேன் என்று ஒரு கடதாசித் துண்டில் எழுதி சமையலறை மேசையில் வைத்துவிட்டுக் கிளம்பினாள்.

சிகிச்சை நிலையத்திற்குச் சென்று வன்னாவிடம் சிகிச்சைக்கான திகதிகளைப் பெற்றுக்கொண்டாள். வீட்டுக்கு வந்தபோது அரவிந்தன் வேலைக்குச் சென்று விட்டான். மகள் வீட்டிலே இருந்து வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். கதவு திறக்கும் சத்தம் கேட்டவுடன்

"அம்மா.. ..என்று அழைத்தபடி வந்தவள்

"தாத்தா எப்படி அம்மா இருக்கிறார்? நாளைக்கு நானும் வருகிறேன். எத்தனை நாளைக்கு அம்மா. நிருபா அக்கா வீட்டில் நிற்கப் போறீங்கள்?"

"தெரியாது மகள். என்ன சாப்பிட்ட நீ. ஏதாவது செய்து தரவா?"

"இல்ல. அப்பா செய்து வச்சிட்டுப் போயிருக்கிறார். இரவைக்கு சலாட்டும் இறைச்சியும் சாப்பிடுவோம் என்று சொன்னவர்"

"பரவாயில்லை மகள். நான் நிருபாக்கும் ஐயாக்கும் சமைச்சு எடுத்திட்டுப் போக வேணும். அதனால உங்களுக்கும் ஒரேயடியாகச் செய்து வைக்கிறன். பின்னேரம் அப்பாவோட வா. கடைக்குப் போய்க் கொஞ்சம் சாமான் வாங்க வேணும். நிருபா அக்கா வீட்டிலேயே சமைத்தால் நல்லது. வேறு கொஞ்சம் சாமான்கள் தாத்தாக்கும் வாங்க வேண்டும்."

மீண்டும் சுருதி தன்னுடைய அறைக்குள் சென்று கதவைப் பூட்டி வேலையைத் தொடர்ந்தாள். வீட்டுக்குள்ளே இருந்தபடி கணினியுடன் உறவும், பொழுதும் இணைந்தே செல்லுகின்ற வேலையானது மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியில் எங்கே போகப் போகின்றது என்று மனத்துக்குள் சிந்தித்தவளாய்ச் சிநேகா சுறுசுறுப்பானாள். சமையல் செய்து நெகிழிப் பெட்டிகளில் அடைத்தாள்.

காற்சட்டைக்குள் ஒரு காற்சட்டை, இரண்டு சுவெட்டர், தலைக்குக் குளிருக்கான தொப்பி, கழுத்தைச் சுற்றி கம்பளித் தாவணி அணிந்தவளாய் மகளை அழைத்து ஒரு முத்தம் தந்தாள். காது இரண்டுக்குள் தொலைப்பேசித் தொடர்பை ஏற்படுத்துவதற்காக செவிபேசியைப் போட்டாள். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள். இசையின் இன்பமும் பெற்றாள். காதுக்குள் நுழையும் குளிரையும் தடுத்து விட்டாள். முதுகில் உணவைத் தாங்கிய பையை ஏற்றினாள், வெளியேறினாள். என்ன வாழ்க்கை? அரக்கக் குளிரின் தாக்கத்தால் படும் வேதனையை ஆண்டு தோறும் சளிப்புடன் கூறுவதும், கோடை வந்ததும் அதனை மறந்து

விடுவதும் ஐரோப்பிய நாட்டில் வாழும் தமிழர்களுக்குப் பழக்கமாகப் போய்விட்டது.

வீட்டிலிருந்து ஒரு 100 மீற்றர் தூரத்தில் பேருந்து நிலையம் இருந்தது. 30 நிமிடங்களுக்கு ஒருமுறை பேருந்து தரிப்பிடத்துக்கு வரும். பாடசாலைப் பிள்ளைகள் வருகின்ற நேரமே கொஞ்சம் நெருக்கமாக இருக்கும். சிநேகாவின் வீட்டுக்கு முன்புறமாக இருக்கும் Real Schule என்று சொல்லப்படும் பாடசாலை மாணவர்கள் பேருந்துக்குள் பாடசாலை ஆரம்பம், முடியும் நேரம் மட்டுமே நெருக்கமாக நிற்பார்கள். மாரிக்குளிருக்கு உடலைப் பாதுகாப்பதற்காக அணிந்திருக்கும் ஆடைகள் நெருக்கத்தில் உடல் வெப்பத்தை நீர் வடிவில் வியர்வையாக அள்ளிக் கொட்டும். பேருந்தைவிட்டு வெளியே வரச் சட்டென்று ஒட்டிக் கொள்ளும் குளிரை ஏற்றுக் கொள்ளாத உடல் தடிமன் நோயாகப் பிரதிபலிக்கும்.

4 ஆம் வகுப்பு முடிந்தபின் மாணவர்களை ஆசிரியர்கள் அவரவர் தரத்துக்கு ஏற்றவாறு Gymnasium, Real Schule, Gesamt Schule, Haupt Schule என்று ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வித் திறன்களையும், சமூகத் தொடர்புகளையும் மனத்தில் வைத்துப் பிரித்து அனுப்புவார்கள். அறிவுத் திறமையில் 2 ஆம் படிநிலையில் உள்ள மாணவர்கள் இந்த Real Schuleக்கு ஆசிரியர் பரிந்துரை செய்வார்கள். 4 வருடங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து அவர்கள் தரும் தீர்ப்பு பிள்ளையின் கற்றல் நடவடிக்கைக்கு இலகுவாக இருக்கும். ஆனால், தமிழர்கள் தம்முடைய பிள்ளைகள் அறிவாளிகள் என்று காட்ட வேண்டும் என்பதற்காகப் பிள்ளைகளை Gymnasium அனுப்புவதற்காகத் தொல்லை கொடுப்பதனால் பிள்ளைகள் வளர்ந்தபின் இடையூறுகளைப் பிள்ளைகளின் நடவடிக்கைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது என்னும் விடயம் பேருந்தினுள் நுழைகின்ற போது சிநேகா மூளைக்குள் வந்து ஒரு மின்விளக்கைத் தட்டியது.

695 ஆம் இலக்கப் பேருந்துக்குள் நுழைந்தவுடன் ஏற்கனவே எடுத்து வைத்திருந்த 4 தடவைகள் இயந்திரத்தில் அடிக்கக் கூடிய பேருந்துப் பயணச் சீட்டை எடுத்து இயந்திரத்துக்குள் விட்டு எடுத்தாள். அது டிக் என்ற ஒலியைத் தந்தது. இருக்கையில் அமர்ந்தாள். அருகே வயதான ஒரு பாட்டி நின்றாள். இருக்கப் போகின்றீர்களா என்று சிநேகா அவளைப் பார்த்துத் தயங்கித் தயங்கிக் கேட்டாள். பொதுவாகவே வயதானவர்கள், தம்மை வயதானவர்கள் என்று கருதுவதில்லை. இருக்கப்

போகின்றீர்களா என்று கேட்டால். நாம் அவர்களை முடியாதவர்கள் என்று கருதுகின்றோம் என்று நினைப்பார்கள். மரியாதைக்கு இருக்கச் சொல்லும் பழக்கத்தை எல்லாம் எங்களுடைய நாட்டில் விட்டு வந்துவிட வேண்டும். இருந்தாலும் சிநேகாவின் மனம் கேட்கச் சொன்னது. பாட்டியும் நான் நிற்பேன் என்றாள். ஓகே என்று சொன்னபடி சிநேகா பேருந்தின் போக்கிற்கு ஈடு கொடுக்கும் அவளுடைய தளர் நடனத்தை மனத்துக்குள் பார்த்துச் சிரித்தபடி அமர்ந்திருந்தாள். பேருந்து சிநேகாவைச் சுமந்து நிருபா வீட்டிற்கு அருகாமையில் இருந்த பேருந்துத் தரிப்பிடத்தில் இறக்கியது.

சிநேகா நிருபா வீட்டுக்கு வந்த போது பரமசிவம் வரவேற்பறை யிலிருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார். இரண்டு கைகளிலும் சுமந்து வந்த பொருட்களைக் கண்டவுடன்

‘‘ஏன் மகள் உனக்கு இவ்வளவு கஷ்டம். இதெல்லாம் உன்ர அம்மா கண்டிருக்க வேண்டும். இந்தப் பாவி உன்னப் போட்டுக் கஷ்டப்படுத்திறன்’’ என்று தொடங்கினார்.

இலங்கை மண்ணிலே இப்படியாகச் சுமைகள் சுமந்த அனுபவம் அவளுக்கு எங்கே இருக்கிறது. ஒருமுறை பரமசிவமே சிநேகாவிடம் கேட்டார்.

‘‘மகள்... ... உன்னட்ட யாராவது வந்து மார்க்கட் எங்கே என்று கேட்டால் என்ன சொல்லுவாய். அதுக்காகவாவது ஒருதரம் மார்க்கட்டுக்குப் போவன்’’ என்று சொல்வார். வீட்டு வேலைக்கும் கடைகளுக்குப் போவதற்கும் வேலைகாரர்களை வைத்திருந்தவர் அல்லவா. அவருக்கு மகளின் சிறிய வேலையும் பெரிய வேலையாகத்தான் தெரியும்.

‘‘இதென்ன கஷ்டம் ஐயா. இது என்ன இலங்கையா? வீட்டு வேலைக்கு ஆள் வைக்க’’ என்று சொல்லிய படி சமையலறை மேசை யிலே மதிய உணவை வைத்தாள்.

‘‘உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா ஐயா! நீங்கள் ஆட்களுக்கு வேலை எடுத்துக் கொடுக்கும் விஷயமாக கொழும்பு வந்தால் பேராதனை யூனிவெர்சிட்டிக்கு என்னைப் பார்க்க வருவீர்கள். அப்போது நீங்கள் ரோல் கேக், பருத்தித்துறை வடை, கஜ், இப்படி நிறையச் சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவீர்கள். நீங்கள் வந்து போனால் என்னைத் தேடி

என்னுடைய பிரன்ட்ஸ் எல்லாரும் வந்துவிடுவார்கள். அதுவும் அந்த புங்குடுதீவு மாலா இருக்கிறாள். எங்கட பக்கமே தலைகாட்ட மாட்டாள். ஆனால், நீங்கள் வந்த செய்தி அறிந்தாளென்றால்,

"என்னடி.. .. என்னடி .. .. .. எப்பிடிடி இருக்கிறா"

என்று ரூமுக்குள்ளேயே வந்துவிடுவாள். எங்களுடைய காலத்தில் அப்பா என்று பார்க்க வருவது நீங்கள் மட்டும்தான் ஐயா. அப்போது நீங்கள் தூக்காத பாரங்களையா நான் இப்போது தூக்குகிறேன்.

வேலைக்காரன் வைக்க நாம கோடீஸ்வரராக இருக்க வேண்டும். இல்லையென்றால், நோயாளியாக இருக்க வேண்டும். அப்பிடி என்றால்தான் சமூக உதவிகள் எமக்குக் கிடைக்கும். ஒருவர் வந்து உதவி செய்து விட்டுப் போவார். இலங்கையில் வாழ்ந்த வாழ்க்கை கனவு போலப் போய்விட்டது ஐயா. ஆனால், உங்களுக்காக இதையாவது செய்வதற்குக் கிடைத்ததே ஐயா அது சந்தோசம்."

"காலையில என்ன சாப்பிட்டீங்க. நிருபா வேலை செய்து கொண்டா இருக்கிறா" என்று கேட்ட படி தேநீர் தயாரித்தாள். பரமசிவம் தேநீர் பைத்தியம். வெள்ளைநிற அரக்கன் கைகளில் இருந்த காலத்தில் அது புகையைக் கக்கிய போது எடுத்த தாகத்தைத் தணிப்பதற்குத் தேநீரைத் தான் அடிக்கடி அருந்துவார். இன்று குளிரின் நடுக்கத்தைப் போக்க அதே தேநீர்த் தாகம் பரமசிவத்திடம் ஒட்டிக் கொண்டது.

"மகள்... ... நிருபா பாணில் பட்டர் பூசி ஷூஸ்ற் வைத்துத் தந்தா. என்ன பிள்ள மகள் அது? இப்பிடி ஒரு மனசு யாருக்கு வரும் சொல்லு. சொந்தக்காரரே நோய் என்றவுடன் தள்ளி நின்று கதவோரம் கதை சொல்லிவிட்டுப் போகிற காலத்தில் யாருக்கோ பிறந்த பிள்ள இப்படி" என்று கண்கலங்கினார் பரமசிவம்.

"ஐயா இந்த இயற்கை கடவுளை நேரடியாகக் காட்டுவதில்லை. விதியோடு விளையாடும் வாழ்க்கைக்கு விருந்தினராக வருகின்ற நல்ல உள்ளங்களை அன்புப் பரிசாகத் தரும். அப்படி எங்களுக்குக் கிடைத்த அன்புப் பரிசு நிருபா.

"உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு"

என்று மூதுரையில் சொன்னது போல எங்கோ இருந்து வரும் சொந்தம் எமக்குப் பக்க துணையாகும். அவளின் நல்ல உள்ளத்திற்குள் நுழைகின்ற பாக்கியம் உங்களுக்கும் எனக்கும் கிடைத்திருக்கின்றது. அவளுக்குப் பெரிதாக ஏதாவது செய்ய வேண்டும் என்றுதான் மனம் சொல்லுகிறது. காலம் அதையும் எங்களுக்குக் கொண்டு வந்து முன் நிறுத்தும்'' என்று கூறிய படி பரமசிவத்தின் அருகே வந்து அமர்ந்தாள் சிநேகா.

''என்ன சாப்பாடு சமைத்திருக்கிறாய் மகள்?''

''ஐயா பூசணிக்காய் சூப்பும், கோழிக்கறியும், கத்தரிக்காய் வெள்ளைக்கறியும், இரசமும் வைத்திருக்கிறேன். இந்தப் பூசணி நீங்கள் ஒருபோதும் சாப்பிட்டதில்லை ஐயா. இது அதிகமாக ஜெர்மனியில் நடக்கும் (Erntedankfest) எர்ன்ர டங்க் பெஸ்ற் பண்டிகைக்காகப் படைப்பார்கள். விழா முடிந்த பிறகு தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுப்பார்கள். வியாபார நிலையங்களிலும் வாங்கலாம். இதில் விதம் விதமாகப் பல இரக பூசணிகள் பயிரிடுகின்றார்கள்.

''அதென்ன மகள் எர்ன்ர டங்க் பெஸ்ற்''

''அது ஐயா! நாங்கள் விவசாயம் செய்து முதல் அரிசி எடுத்து சூரியனுக்கு நன்றி சொல்வதற்காகப் பொங்கல் விழா செய்கிறோம் அல்லவா. அதேபோல் விவசாயிகள் தங்களுடைய விவசாயம், தோட்டத்தில் விளைந்த மரக்கறிகளை சேர்ச் இல் வைத்து வழிபடுவார்கள். இதை அறுவடைப் பிரார்த்தனை என்பார்கள்.



ஒக்டோபர் மாதத்தில் வரும் முதல் ஞாயிற்றுக் கிழமையில் வழமையாக இந்த விழா நடக்கிறது. இந்தக் காலத்திலேதான் இப்படியான பூசணிக்காய்கள் விற்பனைக்கு வரும். இதனுடைய சுவை சாதாரண பூசணிக்காய்களை விட அபாரமாக இருக்கும். நான் ஐயா வாங்கி நல்லாக் கழுவி வெட்டி உறை குளிரில் வைத்து விடுவேன். பிறகு வருடம் முழுவதும் தேவைப்படும் போது சமைக்கக் கூடியதாக இருக்கும். எப்பிடி... ...''

''அடேங்கப்பா. நீ அம்மாவ மிஞ்சி விடுவா போல இருக்கு. அம்மா என்ன செய்வா தெரியுமா. ஒவ்வொரு நாளும் சோறு சமைக்கும் போது ஒரு பிடி அரிசி எடுத்து ஒரு சருவப் பானையில் போட்டு வைப்பா. அந்தச் சாப்பாட்டறை மூலையில இருந்துதே அந்தச் சருவப் பானைதான். அதற்குள்ளே போட்டு வைக்கும் அரிசியை இஸ்லாமிய உம்மாமார் கஷ்டம் என்று வரும்போது எடுத்துக் குடுப்பா. உங்கட நாட்டில அந்தப் பிரச்சினை இல்லைதானே. ஜெர்மனி யாரையும் சாப்பாட்டுக்குப் பட்டினி போடாது. ஆட்களைப் பார்க்கிறதுக்குத்தான் பட்டினி போடுது'' என்று சொல்லிச் சிரித்தார்.

''சரியாகச் சொன்னீர்கள் ஐயா. ஒருநாள் நான் வேலைக்குப் போயிட்டு வரும் போது கார் நகர முடியாமல் ரோட்டெல்லாம் அடைச்சுப் போய் இருந்தது. பிறகுதான் தெரிந்தது. ஒருவர் 3 ஆவது மாடியில் வாழ்ந்திருக்கிறார். அவருடைய நிறை 300 கிலோக்கு மேலேயாம். அவரைப் படிகளால் இறக்கிக் கொண்டு வரமுடியாமல் பலகணிக் கதவால் எடுத்து கிரெய்ன் கொண்டு வந்து அதன் மூலமாக இறக்கினார்கள். இவர் யாரோடையும் தொடர்பில் இருக்கவில்லையாம். இதை விட எத்தனை பேர் ஆள் தொடர்பில்லாமல் இறந்து போய்க் கிடந்திருக்கிறார்கள் தெரியுமா? அதேபோல எங்களுடைய தமிழன் ஒருவர் ஒரு வீட்டுக்குள் இறந்து கிடந்திருக்கின்றார். அவருடைய வீட்டில் நிலத்துக்குப் போட்டிருக்கும் கார்ப்பெற்றுக்குக் கீழே கட்டுக்கட்டாகக் காசு இருந்திருக்கின்றது. சரி அந்தக் கதையை விடுங்கள் இந்தாருங்கள் உங்களுடைய தேத்தண்ணி'' என்று பரமசிவம் கைகளில் தேநீரைக் கொடுத்தாள் சிநேகா.

இங்கிலாந்தில் தேநீர் போல் ஜெர்மனியில் கோப்பியே பிரபலம். ஜெர்மனியக் குளிருக்கு எதிரி கோப்பி. ஆவி பறக்கும் கோப்பி சோர்வை ஓடஓட விரட்டும். நுரை தள்ளிய பாலில் (Schaum) பிள்ரர் கோப்பியை (Espresso) ஊற்றி அதற்கு மேல் கொக்கோ பவுடரைத்

தூவிய கோப்பிக்கப்புடன் ஒரு பிஸ்கட்டும் வைத்த தட்டை சிநேகா நிருபாவுக்காக அவளுடைய அறைக் கதவில் தட்டிவிட்டு அவளிடம் கொண்டு கொடுத்தாள்.

வீதியிலே சிற்றூந்துகள் வரிசையாக ஹோர்ன் அடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தன.

‘‘என்ன மகள் ஜெர்மனியில் காரில் தேவையில்லாமல் ஹோர்ன் அடிக்கக் கூடாது என்று சொன்னாய். இதென்ன தொடர்ந்து அடித்துக் கொண்டு போகின்றார்கள்’’ என்றார் பரமசிவம்

‘‘ஏனய்யா ஹோர்ன் அடிக்கலாம். அது தேவைக்கு மட்டுமே. நான்கு விஷயங்களுக்காக இங்கு ஹோர்ன் சத்தம் கேட்கலாம். ஒன்று துரித பாதையில் போடப்பட்டிருக்கும் பாலத்தில் நின்று யாராவது கைகாட்டி துரிதபாதையில் போகும் வாகனங்களுக்கு டாட்டா என்று காட்டினால், கார் ட்ரைவர்ஸ் ஹோர்ன் அடித்து சைகை காட்டுவார்கள்.

அடுத்தது கால்பந்தாட்டத்தில் வென்ற நாட்டு ரசிகர்கள் தம்முடைய வாகனங்களின் ஹோர்ன்னைச் சத்தமாக அடித்துக் கொண்டு போவார்கள். உடனே நாம் உதைபந்தாட்ட விளையாட்டு முடிந்துவிட்டது என்பதை அறியலாம்.



அடுத்தது கல்யாண வீடு என்றால், மணமகன், மணப்பெண் போகின்ற காருக்குப் பின்னுக்கு வருகின்ற வாகனங்கள் ஹோர்ன் அடித்துக் கொண்டு போகும். அது மட்டுமில்லாமல் மணமகன், மணமகள் வாகனத்தின் பின்புறம் தகர டப்பாக்களைக் கட்டிவிடுவார்கள். அடுத்து அவசரத் தேவைக்காக யாராவது வாகனத்தின் குறுக்கே வந்தால், ஏதாவது வாகனச் சட்ட ஒழுங்குகளை மீறி எம்முடைய வாகனத்துக்கு இடைஞ்சல் செய்தால் ஹோர்ன் அடிப்பார்கள். இதைவிட எங்களுடைய நாடுகள் போலக் கண்டதுக்கெல்லாம் இங்கே ஹோர்ன் அடிப்பதில்லை ஐயா.’’

``ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு சட்டதிட்டங்கள். கலாசாரங்கள். நாங்களும் அதற்கேற்றாற் போல மாற வேண்டியதுதான்'' என்று பரமசிவம் சொல்லும் போதே கொஞ்சம் களைத்துப் போனார்.

இப்போதெல்லாம் கொஞ்ச நேரம் இருந்து உரையாடினால் பல மணி நேரம் படுக்கைக்குப் போவது பரமசிவத்தின் வழக்கமாகப் போய்விட்டது. சிநேகாவின் ஆவி பறக்கும் தேநீரின் சுவையுடன் சிந்து தயாரித்துக் கொடுக்கும் தேநீரைப் பற்றிச் சொன்னார்.

``அம்மா போனாப்பிறகு மகள் தேத்தண்ணி கொஞ்சம் போடு மகள் என்றால், சிந்து மறு பேச்சுப் பேசாமல் கொண்டு வந்து நீட்டுவாள். பாவம் அவளுடைய வாழ்க்கையைத் தான் பார்க்க முடியாமல் அம்மா போயிட்டா. நானும் இங்க வந்திட்டன். சிவம் அவளுக்கு நல்ல விதமாகக் கல்யாணத்தச் செய்து வச்சிட்டான். கீரனும் கனடா போற நேரமாப் போச்சு. ஏதோ அம்மா பக்கத்தில நின்று அவளுடைய கல்யாணத்த நடத்தியிருக்கிறா போல இருக்கு. இப்ப லண்டனில நல்ல வசதியா வாழுகிறாள். கீரனுக்குத்தான் கனடா போற அலுவல் சரிவரல்ல. அவர்ற காலம் இலங்கையிலதான் என்று எழுதி வச்சிருக்கு. அது அதுக்கு காலம் வரவேணும். பிள்ளைகளின் காலத்திலயாவது வெளிநாடு வரட்டும். காலம் சிலவற்றை மாற்றும். மனிதர்கள் மனங்களையும் திருப்பும். மறக்கச் செய்யும். யாரையும் நொந்து பேசவோ குறை கூறவோ முடியாது. அவர்களாக ஒரு சமயம் உணர்ந்து கொள்வார்கள்'' என்று பேசிக் கொண்டிருக்கின்ற போது நிருபா வேலை முடிந்து அறையை விட்டு வெளியே வந்தாள்.

சிநேகாவைக் கட்டி அணைத்து அன்பைப் பரிமாறிக் கொண்டாள். எல்லாம் ஆயத்தமாக இருக்கும் விடயத்தைக் கண்சாடையால் உணர்த்தினாள்.

மதிய உணவு மேசையில் தயாராக இருந்தது. ஆயினும் குளிரில் பயணப்பட்ட உணவு நடுங்கிக் கொண்டிருந்தது. சூடாக்கிப் பரிமாற சிநேகா ஆயத்தமானாள்.

``நிருபா! இந்தப் பொண்ணு வீட்டில சிங்காரியா இருந்தவ. இவட பெரிய மாமா இவவ சிங்காரி என்றுதான் கூப்பிடுவார். ஒரு வேலை செய்யமாட்டா. அம்மாதான் எல்லாம் செய்ய வேணும். கைகழுவிச் சாப்பிட பஞ்சிப்பட்டு பசிக்கல்ல என்பா இந்த நோனா. அம்மா சாப்பாடு குழைத்து ஊட்டி விடுவா. அப்ப அவுக் அவுக் என்று இறங்கும். இப்பப்

பாருங்க நிருபா. வெளிநாடு ஆள எப்பிடி மாத்தியிருக்கு" என்று சொல்லிச் சிரித்தார்.

"ஐயா மட்டும் என்னவாம். இருந்த இடத்தில இருந்தபடி தண்ணி கேட்பார். குடிச்ச தண்ணிக் கோப்பையைக் கொண்டு வைக்கக் கூட ஆள் தேவைப்படும். ராஜா மாதிரி வாழ்ந்து ஆட்களை மேய்த்தார் இல்லையா? காலம் எப்படி ஐயாவ மாத்தியிருக்குப் பார்த்தீர்களா?"

என்று கூறிய படி பின்புறம் வந்து பரமசிவம் கழுத்தைக் கட்டிப் பிடித்து முத்தம் தந்தாள்.

"என்றாலும் நீ மாறியதுதான் பெரிய மாற்றம். சுற்றிவர பள்ளிக்கூடப் பிள்ளைகள் மிஸ் மிஸ் என்று வந்திடுவார்கள். அதச் சாட்டுச் சொல்லி ஒரு வேல கூடச் செய்யத் தெரியாது" என்று பதிலுக்கு நையாண்டி பண்ணினார்.

"அப்படியா அன்ரி? மாமாதான் ஆள மாத்தியிருக்கிறார் போல" என்றாள் நிருபா சிரித்தபடி

"அதுதான் பெண்களுடைய நிலை நிருபா. என்னதான் பட்டம் எடுத்தாலும் கறியைக் கிளற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பிருக்கிறது. இதற்காகத்தானே பெண்கள் பிறக்கின்றார்கள். சில விதிவிலக்குகளும் இருக்கின்றன. நிருபா! பெண்களின் வாழ்க்கையைத் திருமணத்தின் பின், திருமணத்தின் முன் என்று பிரிக்க வேணும். என்ன தான் வீட்டில் செல்லம் கொஞ்சினாலும் கல்யாணம் செய்த பிறகு வாற கணவனுக்கு அவ எப்படி வாழ்ந்தாள் என்று தெரியப் போகிறதா? யாரும் சொன்னாலும் உணரத்தான் முடியுமா? கல்யாணத்துக்குப் பிறகு நாங்கள் நடந்து கொள்ளுவதுதான் தெரியும். அதனால கல்யாணத்துக்குப் பிறகு பெண்கள் மீண்டும் பிறக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நான் நல்லாப் படிச்சிட்டன் நிருபா."

"இப்ப சொல்லுங்க அன்ரி. நான் ஏன் இந்த மாற்றத்துக்கெல்லாம் போக வேண்டும். எனக்கு இப்பிடியே வாழ்ந்து விட்டுப் போக வேணும். இதுதான் இந்த விஷப்பரீட்சை எனக்கு வேண்டாம். என்னுடைய சாதனையை ஊர் சொல்ல வேண்டும். அதுதான் என்னுடைய இலட்சியம்" என்று தன்னை வெளிப்படுத்தினாள் நிருபா.

பின் மூவரும் உணவு அருந்தினார்கள். மதிய உணவின் பின் பரமசிவம் சிறிது உறங்குவது வழக்கம். அன்று பரிசோதனை ஆரம்பமாக

வேண்டும். இரவு உணவைச் சற்று முன்னதாகக் கொடுத்து உறங்க விட்டால் பதிவுகளை இரவு முழுவதும் பெற்றுக் கொள்ளலாம் என்று இருவரும் தீர்மானித்தார்கள்.

நிருபா மீண்டும் தன்னுடைய பணியைத் தொடங்கினாள். சிநேகா கணினியைத் திறந்தாள். 1365 சந்தாதாரர்கள் யூடியூப் இல் இருக்கின்றார்கள். முயற்சியிலிருந்து சற்றும் தளராமல் ஒரு சிறுகதையைப் பதிவிறக்கினாள். சிநேகா வாரந்தோறும் ஒரு கதையும் ஓர் இலக்கியமும், ஆன்மீகமும் தன்னுடைய சேனலில் பதிவு செய்வது வழக்கம். இதற்குரிய தொழில் நுட்பத்தை எப்படிக் கற்றாள் என்பது வியப்புத்தான். படங்கள் தெரிவு செய்வதும், அதனைத் தொகுப்புச் செய்வதும், அதற்குரிய இசையைச் சேர்ப்பதும், என்று போட்டோஷொப், காணொளித் தொகுப்பு என்று தனியாளாகச் செய்கின்ற போதும் தன்னுடைய பிரயத்தனங்களுக்குப் பலன் கிடைக்காத போது சிறிது சோர்ந்து போகின்றாள். வீட்டில் சுருதியும் அரவிந்தனும் அவளைக் கேலி செய்கின்ற போது மனத்துக்குள் வேதனையை அடக்கிக் கொள்வாள்.

“24 மணி நேரமும் சம்பளமில்லாத உத்தியோகம் உன்னுடைய அம்மா பார்க்கின்றா” என்று அரவிந்தன் சுருதியிடம் சொல்வான். சமூகச் செயற்பாட்டுக்குப் பணம் எதிர்பார்ப்பதில்லை என்பது அவர்களுக்குப் புரியாது.

இதை ஏன் செய்கின்றோம் என்பதை எம்முடைய மனம் தீர்மானிப்பதில்லை. நிறுத்த வேண்டும் என்று தோன்றும் போது ஏதோ ஒரு உந்துதல் வந்து ஊக்கத்தைக் கொடுக்கும். அந்தக் கணம் கிடைக்கின்ற மகிழ்ச்சி மேலும் மேலும் முயற்சி செய்ய வைக்கும். இதைப் பிரபஞ்சத்தின் கட்டளையாகவே சிநேகா கருதினாள்.

சிநேகா செய்கின்ற முயற்சிகளுக்கு முழுமையாக முழுமனத்துடன் பெருமைப்படுகின்ற ஒரே ஜீவன் பரமசிவம் தான். சிநேகாவினுடைய ஒவ்வொரு முயற்சியையும் கடின உழைப்பையும் கூடவே இருந்து பார்த்தவர் அல்லவா. தன்னுடைய ஓயாத உழைப்பும் அடுத்தவரின் உயர்வில் மகிழ்ச்சியை அனுபவிக்கும் விருப்பும் சிநேகாவிடம் காணப்படுவதை எண்ணி அவரின் உள்ளம் பெருமைப்படும்.

புத்தகங்கள் எழுதி வெளியீடு செய்கின்றாள், காணொளிகள் செய்கிறாள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் எழுதுகின்றாள், வெற்றி

மணி என்னும் பத்திரிகையில் தவறாமல் கட்டுரைகளை மாதந்தோறும் வெளிவரச் செய்கிறாள், புத்தகங்கள் வாசிக்கின்றாள், ஆன்மீக இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றுகின்றாள். தமிழ்வான் அவை என்று ஓர் இலக்கிய கர்த்தாக்களின் சந்திப்பை மாதா மாதம் நடத்துகின்றாள், குடும்பத்தில் சேதாரம் வராது கண்காணிக்கின்றாள். இத்தனையையும் செய்துவிட்டுச் சோர்வில்லாமல் பல நட்புகளையும் பேணி வருகின்றாள். இருந்தாலும், அவள் படித்த படிப்புக்குரிய எந்தவித வருமானமும் அவளால் ஈட்ட முடியவில்லையே என்ற கவலை அவரின் அடிமனத்தில் இருந்தாலும் அதனை வெளிக்காட்டாமல் பரமசிவம் அவளைப் பாராட்டிக் கொண்டே இருப்பார்.

“மகள் சிலர் பிறப்பது பிறர் மகிழ்ச்சிக்காகத்தான். உன்னாலே மற்றவர்களுக்குச் சந்தோசம் கிடைக்கின்றது என்றால், அதற்காகத்தான் நீ பிறந்தாய் என்று நினைத்துக் கொள்” என்று பரமசிவம் சொல்லும் போது,

“நான் யாருக்கு என்ன செய்தாலும் கடைசியில் நன்றி கெட்டவர்களாகத்தானே அவர்கள் மாறுகின்றார்கள். அப்படி இருந்தும் நான் ஏன் இப்படி இருக்கின்றேன்” என்று தாய் பார்வதி அடிக்கடி கூறிய வார்த்தைகளைச் சிநேகா நினைத்துப் பார்ப்பாள்.

தற்போது தத்தளித்துக் கொண்டிருக்கும் பணியும் கைவிட்டுப் போகப் போகின்ற நிலையை சிநேகா வெளிக்காட்டாமல் இருப்பதைப் பரமசிவம் அறிந்தார். பணியின் போது பழுதாகிய வாகனத்தைத் திருத்த முடியாது என்று பணியிடம் கூறியதால், அங்கு பணி புரியத் தடை ஏற்படுகின்றது. காலம் அவளைத் தள்ளி விழுத்திய காரணத்தால், முறிவேற்பட்ட கையும் பணிபுரியத் தயங்கியது. முடிவாக வேலைக்கு வரமுடியாது என்று கடிதத்தை அனுப்பிவிட்ட நிலைமையை சிநேகா சொன்ன போது பரமசிவம் மகளின் நிலைமையை நினைத்து மனத்துக்குள் கலங்கினார்.

ஜெர்மனியிலே தன்னுடைய கணவன் தான் வாங்கிய வீட்டின் மேல்மாடியிலே 2 நாட்களாக இறந்து கிடந்த விடயத்தைத் தெரியாது மனைவி பிள்ளைகள் கீழ் வீட்டிலே வாழ்ந்த உண்மைச் சம்பவத்தைக் கதையாக்கி, அதனைச் சிநேகா தன்னுடைய குரலிலே காணொளியாகச் செய்து காணொளியை யூரியூப்பில் இலே பதிவிறக்கிய போது நேரம் ஐந்து மணியாகியது.

பணி முடித்து நிருபா வெளியே வந்தாள். தூக்கத்திலிருந்து எழுந்து பரமசிவம் வெளியே வந்தார். இப்போது சிநேகாவின் கணினி உறக்கத்துக்குச் சென்றது. நன்னாரி வேர் போட்ட தேநீர் தயாராகியது. அவளுடைய சிநேகிதி ஜெகா அனுப்பிய அதிரசமும் வாழைப்பழமும் தேநீரும் பரமசிவத்தின் முன் நீட்டிய போது அதனைக் கையில் வாங்கிய பரமசிவம் கண்கள் கலங்கின.

"ஐயா... ..." என்று அவரைக் கட்டிப் பிடித்தாள் சிநேகா.

"இது எப்பிடி மகள்" என்று விம்மத் தொடங்கினார்.

பரமசிவம் மனத்துக்குள் எத்தனை கவலைகளைத் தாங்கிக் கொண்டு வேதனையின் வடிவமாக இருக்கின்றார் என்பதைச் சிநேகாவால் உணர முடிந்தது. எத்தனை இழப்புக்களைத் தாங்குகின்றார், எத்தனை ஆசைகளை மனத்துக்குள் புதைக்கின்றார் என்பதை அதிரசத்தை அவர் உண்ணுகின்ற அழகில் அவளுக்கு வெளிச்சமாகியது. ஒரு கடி ஒரு சிரிப்பு.

கேதார கௌரி விரதம் என்றால், கற்பூர வாசனை கலந்த காற்றைத்தான் பரமசிவம் வீட்டில் சுவாசிப்பார்கள். 21 நாட்கள் காலையில் தலைமுழுகி துணியைச் சேர்த்துக் கொண்டை முடித்து பூஜை அறை யிலே மணிச் சத்தத்துடனும் மந்திர உச்சாடனங்களுடனும் பூஜை முடித்து சமையலறை வருவாள் பார்வதி. ஒரு தேநீரை மட்டுமே காலை உணவாகக் கொண்டு வதக்கல், பொரியல், என்று சைவச் சமையல் முடித்து மேசையில் மதிய உணவுகள் எல்லாம் ஒவ்வொரு சில்வர் பாத்திரத்திலே எடுத்து வைத்துவிட்டுத்தான் தலைமுடிக்குள்ளே புதைந்து கிடக்கின்ற துவாயை அகற்றுவாள்.

அவர்கள் வீட்டில் வந்தாறுமூலை பாடசாலையில் கல்வி கற்பதற்காகப் போரதீவு என்ற கிராமத்திலிருந்து கரண், சுயன், தங்கத்துரை என்னும் 3 பையன்கள் தங்கியிருந்தார்கள். அவர்கள் உட்பட வைரவள்ளி ஆச்சி, சிநேகா, அவளுடைய சகோதரர்கள் மூவர், சிவத்தின் மனைவி கயல், வேலைக்கு வந்து போகும் கண்ணம்மா ஆச்சி, பரமசிவம், பார்வதி என்று 12 பேருக்கு ஒவ்வொரு நாளும் சமையல் நடைபெறும். கண்ணம்மா ஆச்சி சமையலுக்குத் தேவையான ஆயத்தங்கள் செய்து வைப்பாள். இது பார்வதி சமைப்பதற்கு கைத்துணையாக இருக்கும்.

கேதார கௌரி விரத உபவாசம் அன்று காலை 5 மணிக்கே வைரவள்ளியும், சிநேகாவும் ஒரு புறமும், கீரனும், சிவமும் வேறு புறமும்

என்று ஏறாவூர் கிராமத்துக்குள் பூப்பறிக்கச் சென்று விடுவார்கள். ஏறாவூர் வீடுகளிலுள்ள பூமரங்கள் எல்லாம் பரமசிவம் வீட்டுக் கேதார கௌரி விரதத்துக்கு மொட்டையடிக்கப்படும்.

வீட்டுக்கு மலர்கள் குவிந்த பின் சுவாமி அறைக்குள் சிநேகா நுழைவாள். சிநேகா 7 வயதிலிருந்து இந்த நோன்பைப் படிப்படியாகச் செய்து வருகின்றாள். 10, 15 பேர் பரமசிவம் வீட்டுக்கு நோன்புக் கயிறு கட்டுவதற்காக வருவார்கள். அவர்கள் அனைவரினதும் பூசைச் சட்டிக்குள் வைப்பதற்காக 21 என்ற வீதமாக அனைத்து மலர்களும் பிரித்து ஒவ்வொருவர் சட்டியிலும் வைக்கப்படும். அது மட்டுமன்றி வெல்ல உருண்டை, சந்தன உருண்டை, மஞ்சள் உருண்டை, பாசி மணி, அதிரசம், வாழைப்பழம் என எண்ணிக்கை மாறாமல் வைக்கப்படும்.

அதிரசம் செய்யும் பொறுப்பு வைரவள்ளி ஆச்சியிடம் தான் ஒப்படைக்கப்படும். அவர்தான் பக்குவமாகப் பதம் மாறாமல் அதிரசத்தைப் பொரித்து எடுப்பார். சட்டிக்குப் பொறுப்பானவர்கள் ஒவ்வொருவராகத் தம்முடைய அதிரசத்துக்கான மாவை இடித்துக் கொடுப்பார்கள். ஒவ்வொருவருடைய மாவும் எடுத்தபின் உரல் கழுவப்பட்டு மற்றையவருடைய மா இடிக்கப்படும். இவ்வாறு சட்டிகளின் கணக்குப்படி கழுவிக் கழுவி தனித்தனியாக அதிரச மா இடிக்கப்படும். அந்தச் சட்டியில் வைக்கப்படும் அதிரசமோ வாழைப்பழமோ சட்டி உரிமையாளரின் இரத்த உறவுகள் மட்டுமே உண்ணலாம்.

ஒவ்வொரு சட்டிக்கும் முன்னே இளநீர் மேற்பகுதி தட்டையாகச் சீவி வைக்கப்படும். பூசை நடக்கின்ற போது அந்த இளநீரின் மேல் வைக்கப்பட்ட கற்பூரமே எரிக்கப்படும். இவ்வாறு கடுமையாக அனுஷ்டிக்கப்படும் விரதத்தின் பூசையைப் பூசாரி வேதநாயகமே செய்வார். மாதவிடாய் நின்று போன பின் பார்வதி பூசை செய்ய சிநேகா கேதார கௌரி விரதப் புத்தகத்தை வாசிப்பது வழக்கமாக இருந்தது. விரதத்துக்குரிய காப்புக்கயிறு மட்டக்களப்பில் வசித்த சிநேகாவினுடைய பெரியப்பா வீட்டிலேயே பரிசுத்தமாகத் தயாராகும். விரத ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு நாளும் ஒரு முடிச்சுப் போட்டு 21 ஆவது நாள் 21 ஆவது முடிச்சைப் போட்டு நோன்புக் கயிறுகள் ஆயத்தமாக இருக்கும். சிவம் மட்டக்களப்பு போய் விரதம் அனுஷ்டிக்கின்றவர்களுடைய அனைத்து நோன்புக் கயிறுகளையும் எடுத்து வருவது வழக்கமாக இருந்தது. சிநேகாவின்

பெரியப்பா ஈஸ்வரன் அவர்களே முதன் முதலாக மட்டக்களப்பில் கேதார கௌரி விரதத்தை அறிமுகப்படுத்தியவர்.

பூசை முடிந்த பின் ஒவ்வொருவரும் தூக்கிக் கொண்டு வரும் இளநீரை வெட்டிக் கொடுக்கும் பொறுப்பு பரமசிவத்துடையது. கத்தியுடன் அவர் ஆயத்தமாக இருப்பார். பரமசிவத்தின் காலிலே பார்வதியும் சிநேகாவும் விழுந்து வணங்கி அவருடைய ஆசீர்வாதம் பெற்ற பின்னர் அவர் வெட்டிக் கொடுக்கும் இளநீரை அன்றைய முதல் பானமாகத் தொண்டையை நனைக்க அருந்துவார்கள். அதன்பின்புதான் சட்டி அதிரசம், வாழைப்பழங்களை உண்பார்கள். பறங்கி வாழைப்பழமும் அதிரசமும் இணைந்த சுவை தித்திப்பை மீதப்படுத்தும்.

அந்த அதிரசத்தைப் பார்வதி, வைரவள்ளி இழப்பின் பின் கண்டறியாத கண்ணும், சுவைத்தறியாத நாவும் அன்று மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியது. சில சுவைகளை எங்கள் நா வலிந்து கேட்கும். கிடைக்காது தவிக்கும் போது ஏக்கம் மிதமாகும்.

இன்றைய அதிரசத்தின் சுவை பரமசிவத்தைப் பார்வதியுடன் இணைத்தது. நிருபாவிடம் அதிரச புராணத்தைப் பாடிய சிநேகா நன்னாரி வேர் போட்ட தேநீரை அருந்திய வண்ணம். ஐயாவிடம் இன்றைய பரிசோதனை பற்றி விளக்கினாள்.

இன்றைய நாள் இருவரும் கண்விழிக்க ஏற்பாடாகியிருந்தது.

“ஐயா... இன்றைக்கு உங்களுடைய மூளையினுள் அடைந்து கிடக்கின்ற தகவல்களை வெளியே கொண்டுவர நிருபா முயற்சி செய்யப் போகின்றா. உங்களுக்கு ஓகேதானே”

“அதுதானே ஓமென்று ஆரம்பத்திலேயே சொல்லிப் போட்டேனே.”

“ஏதாவது தயக்கம் இருக்கிறதா? உங்களுடைய பூரண சம்மதத்துடன்தான் செய்ய வேண்டும்.”

“ஒன்றும் பிரச்சினை இல்ல. இதோட என்ர கதை முடிவதாக இருந்தாலும் பரவாயில்ல. அந்தப் புள்ளைட முயற்சிக்கு நான் ஒத்துழைப்பேன். எனக்கு உன்ர அம்மாவப் பார்க்க வேணும். அதுக்கு ஏதாவது வழியிருந்தால் சொல்லு”

“அதப்பற்றிப் பிறகு யோசிப்பம். இவர் வருவார். கடைக்குப் போய் வந்து அதற்குப் பிறகு இரவுச் சாப்பாட்டை முடித்த பிறகு ஆரம்பிப்போம்.

நித்திரைக் குளிசை தருவோம் ஐயா. உங்களுக்குப் பிரச்சினை இல்லையா"

"இஞ்சபாரு இதக் கேட்காத. விரும்பியது போலச் செய்" என்றார்.

பரமசிவம் ஒரு முற்போக்குவாதி. இதற்குத் தயங்கவா போகின்றார்.

அரவிந்தனும் சுருதியும் நிருபா வீட்டிற்கு வந்தடைந்தார்கள்.

"வாங்கள் தம்பி, வாம்மா சுருதி" என்று பரமசிவமே வரவேற்றார்.

"எப்படி இருக்கிறீர்கள் தாத்தா?" என்றாள் சுருதி.

"நான் சுப்பரா இருக்கிறன். உன்ர அம்மா என்ன நல்லாத்தானே பார்க்கிறா. நிருபா அக்காவும் நல்லா கவனிக்கிறா."

"உங்களுக்கு ஹொஸ்பிட்டல விட இது லேசா?"

"அங்க இருந்தால் உன்னுடைய அம்மாக்கு கஷ்டம் இல்ல. அவள் நிம்மதியா நித்திரை கொள்ளலாம். ஆனால், அவங்கதானே என்னை இனி முடியாது என்று அனுப்பிட்டாங்க."

"இல்ல தாத்தா அமெரிக்காவில ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். சிலவேளை அது இருந்தால் உங்களைச் சுகமாக்கலாம்."

"இனிமேல் நான் வாழ்ந்து என்ன சாதிக்கப் போறன் குஞ்சு"

"தாத்தா அப்பிடிச் சொல்லாதீங்க"

என்று சுருதி பரமசிவத்தைத் தடுத்தாள். பரமசிவத்துடன் அரவிந்தனும் சிறிது உரையாடிய பின் சிநேகாவுடன் கடைகளுக்குப் போவதற்காக ஆயத்தமானார்கள்.

பனிமழை வீதியெங்கும் அரை மணித்துளியில் மழையாகக் குவிந்து விட்டது. வாகனத்தில் படிந்திருக்கும் பனியை அகற்றவே நேரம் சரியாக இருக்கும். கைகள் மரத்துப் போய் வெளிறி மஞ்சள் நிறமாகி இரத்தத்தைத் தடை பண்ணிவிடும். நீளக்காற்சட்டை பனிநீரில் தொப்பட்டமாக நனைந்து காலை விறைக்கப்பண்ணிவிடும். நுவரெலியாவில் இருந்து பரமசிவத்தின் நண்பன் திருமண வீட்டுக்குச் சென்று வந்த சமயம் பரமசிவம் வெறுப்புடன் சொன்ன நினைவு சிநேகாவுக்கு வந்தது.

"வெள்ளை வேட்டி, சேட்டுடன் மட்டும் போனது பெரிய பிரச்சினையாய்ப் போயிட்டு அங்க இருக்கிறதுகள் அங்கத்தையக்

குளிரைப் பற்றிச் சொல்றதில்லையா? இதென்ன மனிசனைக் கொல்லுற குளிர். இனிமேல் நுவரெலியாப் பக்கம் போறதே இல்லை" என்று நுவரெலியா சென்ற போது தனக்குக் கிடைத்த அனுபவத்தைக் காய்ச்சலுடன் திரும்பிய பரமசிவம் சொன்னார். இன்று வீட்டைச் சுற்றிய பனிக்குகைக்குள் வாழுகின்றார்.

காலம் பல திருப்பங்களை நாம் விரும்பியோ விரும்பாமலோ எம்மிலே பிரதியீடு செய்து பார்க்கும். அதுதான் ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் பணி புரிந்து இலங்கை மண்ணில் வாழ வேண்டிய சிநேகாவை ஜெர்மனி கொண்டு வந்தது. வடக்கில் பிறந்த அரவிந்தனையும் கிழக்கில் பிறந்த சிநேகாவையும் ஒன்றாக இணைத்தது. ஊருக்காக உழைத்த பரமசிவத்தை நாடு கடத்தியிருக்கிறது. வாழ்க்கை ஒரு நல்ல நாவல். அது தருகின்ற திருப்பங்களே நாவலின் அத்தியாயங்கள்.

நீளக் காற்சட்டையை மூடியது போன்ற சப்பாத்தை சிநேகா அணிந்தாள். 6 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை ஈபுபுரோபின் குளிசை போட்டுக் கொண்டே அன்றாடக் கடமைகள் முடிக்க வேண்டி இருக்கின்றது. கை வலிக்கு அவளுடைய தியானமே கைகொடுக்கும் என்று பலமாக நம்பினாள். பரமசிவத்திடம் சொல்லிவிட்டு மூவரும் வீட்டுக்கு வெளியே வந்தனர். நிருபா வழியிலே படிந்து கிடந்த மூடுபனியைச் சவளால் அகற்றிக் கொண்டு நின்றாள். பாதையைத் துப்பரவு செய்து விட்டால் நடப்பதற்கு இலகுவாக இருக்கும். வீட்டின் முன்புறமுள்ள வீதியையும் துப்பரவு செய்ய வேண்டிய கடமை இருக்கின்றது. யாராவது தடக்கி விழுந்து விட்டால், நிருபாவே அவர்களுக்குத் தண்டனையாகப் பணம் கட்ட வேண்டும். இதுதான் ஜெர்மனி விதி. சட்ட ஒழுங்கு.



மாரிகாலமே இயற்கை ஜெர்மனியர்களுக்குக் கொடுக்கும் தண்டனைக் காலம். உடல் முழுவதும் மறைக்கும் ஆடை, வீதிகளின் கேளிக்கைக் கொண்டாட்டங்களுக்கு அடக்கம். இப்படிக் கட்டுப்பாடுகள். இதுதான் மாரி காலத்தில் பியர் நன்றாகக் குடிக்கின்றார்கள், பன்றி இறைச்சி வாட்டி நன்றாகச் சாப்பிடுகின்றார்கள், பாற்கட்டியில் விதம் விதமாக உணவு செய்து உண்கின்றார்கள். கொழுப்பு உணவு காலத்தின் தேவை. அதுபோல் உடலின் அசைவும் இக்காலத்தின் தேவையே.

அரவிந்தன் சிற்றுந்தைச் சூடாக்கிவிட்டான். குளிர் படுகின்ற போது சிநேகாவினுடைய கை நோ மாத்திரை மயக்கத்தைத் தாண்டி மேலெழுகின்றது.

"எழுதித் தாங்களேன். நானும் சுருதியும் போய் வாங்கி வருகின்றோம்" என்று அரவிந்தன் கடிந்து கொண்டான்.

"இல்லை பரவாயில்லை. பார்க்கும் போதுதான் சில பொருள்கள் ஞாபகத்துக்கு வரும்" என்றாள் சிநேகா

தரமாகவும் மலிவாகவும் உணவுப் பொருட்கள் வாங்க வேண்டும் என்றால் அல்டியும், லிடிலும் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு ஏற்ற கடை. இப்போது சுவிஸ், பரிஸ், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா என்று தன்னுடைய வியாபாரப் பரப்பை உயர்த்தியிருக்கின்றது. ஏடெக்கா, கௌப்லாண்ட் இரண்டும் கூட சிநேகா போகின்ற கடைகளாக இருக்கும். அல்டியும் லிடிலும் வழமையாகப் பக்கம் பக்கமாக அமைந்திருக்கும். இரண்டு கடைகளுக்கும் போவதற்கு இலகுவாக இருக்கும். சிற்றுந்தை லிடில் தரிப்பிடத்தில் நிறுத்தினான் அரவிந்தன்.

உணவு அடுக்கும் வண்டிலை எடுத்துக் கொண்டு அரவிந்தன் உள்நுழைந்தான்.

சிநேகா பொருட்கள் எல்லாம் எடுத்து வண்டிலுக்குள் போட்டாள். சிலருக்குச் சில நோயுண்டு. காணும் பொருட்கள் எல்லாம் தேவையென்று வாங்கிக் கொண்டு போய் வீட்டை நிரப்புவது. அது பின்பக்கமாகப் போய்ப் போய் இறுதியில் பழுதாகித் தூக்கி எறிவது. ஆனால், சிநேகா கையில் தேவையானவற்றை எழுதிய துண்டைப் பார்த்து தேவையானவற்றை வாங்குவாள். அரவிந்தன் கடைக்குப் போகும் போதெல்லாம் ஏதோ ஒன்று வாங்கியே வருவான். பொருட்கள் எல்லாம் எடுத்தபின் வரிசை யிலே நிற்கும் போது அரவிந்தனே அப்பொருட்களை விரைவாகவும்

ஒழுங்காகவும் அடுக்குவான். எந்த இடத்திலும் நேர்த்தி குறையக் கூடாது என்பது அவனுடைய சட்டம். ஏன் பிரச்சினை என்று சிநேகாவும் சுருதியும் ஆறுதலாகப் பின்னே வருவார்கள்.

வியாபார நிறுவனத்தினர் வியாபார உத்தியாகச் சில பொருட்களைப் பணம் செலுத்தும் இடத்திற்கு அருகாமையிலேயே அடுக்கி வைப்பார்கள். கடைசி நிமிடத்தில் மனம் திரும்பக் கூடிய வகையிலே அடுக்கி வைத்திருப்பார்கள். சுவிங்கம், இனிப்புகள் போன்றவற்றுடன் சிகரெட் பொதியும் இருக்கும். கூடவே அதைப் புகைப்பதனால், உள் உறுப்புக்கள் எவ்வாறு புகைந்து போகின்றன என்னும் விபரத்தை விளக்கும் படங்களுடன் அதன் பெட்டிகள் இருக்கும். இருந்தாலும் நீங்கள் வாங்குங்கள் என்பது போல் மனத்தை மாற்றும் வகையில் முன்னே அடுக்கி வைத்திருப்பார்கள். அதைப் பார்க்கும் போதெல்லாம் சிநேகாவுக்கு பரமசிவத்தின் ஞாபகமே வரும்.

நிருபா 2 வாரங்கள் கடைக்குப் போகத் தேவையில்லை. முழுவதுமாக பரமசிவத்துடன் இருக்கலாம். தன்னுடைய சிகிச்சைக்கு மட்டுமே வெளியே போய்வர வேண்டும். தகவல்கள் ஒரு நாளிலோ 2 நாளிலோ பதிவாகிவிடும் என்று அவள் நம்பினாள்.

வீடு திரும்பியதும் இரவு உணவு நூடில்ஸ் தயாராகியது. சுருதியும், அரவிந்தனும் பரமசிவத்துடன் இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். சுருதி தாத்தாவுடைய கைகளைப் பிடித்தபடியே இருந்தாள்.

"தாத்தா அம்மாவுடைய சோதனைக்கு நீங்கள் ரெடியா? உங்களுக்கு விருப்பமா தாத்தா?" என்று கேட்டாள். தாத்தாக்கு விருப்பமில்லாமல் அம்மா செய்யப் போகின்றாவோ என்று மனத்துக்குள் அவள் நினைத்துக் கொண்டாள்.

"ஓமோம். அவள் என்ர பிள்ள. என்னப் போலத்தானே இருப்பாள். சுருதி நீ கவலைப்படாத. அவளப்பற்றி எனக்கு நல்லாத் தெரியும்" என்றார் பரமசிவம்.

நூடில்ஸை அரைத்த இறைச்சியில் செய்த சோஸ் மேலே பரப்பி நால்வருக்கும் கொடுத்துவிட்டு சிநேகா தக்காளி சோஸ் செய்து தனக்காக எடுத்து வைத்தாள்.

“அன்ரி இனி இறைச்சி சாப்பிடவே மாட்டீர்களா? நீங்கள்தானே கோயிலுக்குப் போவதில்லை. சாமி கும்பிடுவதில்லை. இறைச்சி சாப்பிடலாம் தானே” என்றாள் நிருபா.

“அன்ரி அம்மாக்குள்ள கடவுள் இருக்கிறாராம். வெளியில் தேடப் போவதில்லையாம். கடவுள் இருக்கிற உடம்பில் இறைச்சி சாப்பிடக் கூடாதாம். அம்மாக்குத் தெரியாது போல எங்களுடைய உடம்பும் இறைச்சிதான் என்று” என்று தொடர்ந்தாள் சுருதி.

“ஓமோம் எனக்கு ஒன்டும் தெரியாது. உனக்குத்தான் எல்லாம் தெரியும். யாராவது அவர்களுடைய உடம்பை வெட்டிக் கறி சமைச்சுச் சாப்பிடுவார்களா? உயிர்கள் வெட்டும் போதும் கொல்லப்படும் போதும் எவ்வளவு கஷ்டப்படும் என்று தெரியாதா? ஏன் நீயே சொல்லுவாயே மிருகங்களை கஷ்டப்படுத்தி ஜல்லிக்கட்டு செய்கிறார்கள். மிருகக்காட்சி சாலையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். பசுக்குப் பால் கூடச் சுரக்க வேண்டும் என்று அன்ரிபியோட்டிக் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வாயே. நிருபா! சுருதியும் கொஞ்சநாள் இறைச்சி சாப்பிடவில்லை. இப்போது எனக்கு நக்கல்” என்றாள்.

“எப்படி அன்ரி இறைச்சி சாப்பிடுவதை விட்டீர்கள்” என்று நிருபா கேட்டாள்.

“எல்லாரும் சாப்பிடுங்கள் சொல்லுறன். அம்மா இல்லாது வாழத் தெரியாத நான் எப்படி வாழுகிறேன். சுட்டுப் போட்டாலும் சமையல் வராத நான் எப்படிச் சமைக்கிறேன். சாதாரணமான ஓர் ஆசிரியராக இருந்த நான். முழுநேர எழுத்தாளராக எப்படி மாறினேன். வயோதிபர்களுடன் எப்படி வேலை செய்தேன். எப்படி யூரியூப் செய்கிறேன். இப்படி தற்செயல்கள் எல்லாம்தான் ஒருத்தரை மாற்றுகின்றன.

யூரியூப் தொடங்கிய போது போட்டோசொப் தெரியாது. அதற்காகப் படித்தேன். வீடியோ எடிற்றிங் தெரியாது. அதற்காகப் படித்தேன்.

கார் ரைய்விங் விருப்பம். ஆனால் கார் ஓட்டுவதற்குத் தெரியாது. அதனால் வயோதிபர் பராமரிப்பு படிக்கும் இடத்தில் பழக்கினார்கள் படித்தேன். இரண்டும் படித்தேன்.

இலங்கையில் பத்திரிகைகளில் எழுதிய நான். ஜெர்மனியில் 10 வருடங்கள் எழுதாமல் வேறு கவனத்தில் இருந்தேன். பகி அண்ணனின் தூண்டுதலாலும் அக்காவின் தூண்டுதலாலும் இலண்டன் தமிழ்

வானொலிக்கும் மண் சஞ்சிகைக்கும் எழுதத் தொடங்கினேன். இப்போது முழுநேர எழுத்தாளராக மாறிவிட்டேன்.

இந்திய முனைவர் ஒருவரின் விருப்பத்தில் தமிழ் வான் அவையை நிறுவினேன். இரு நிகழ்ச்சியுடன் அவர் காணாமல் போக அதனைத் தொடர்ந்து நடத்த வேண்டிய சூழ்நிலையில் தமிழ் வானவை நிகழ்ச்சிகளை நடத்துகிறேன். இவ்வாறுதான் ஆன்மீகமும்.

“அன்ரி அம்மா தொடங்கிற்றா. இனி ஓம்... ஓம்... நாங்கள் போனதன் பிறகு கேளுங்கள்” என்று சுருதி இடையில் நிறுத்தினாள். அரவிந்தனும் “உங்களுக்கு இன்றைக்கு நிறைய வேலை இருக்கிறது. நாங்கள் போறம். ஆறுதலாக சிநேகா புராணம் கேளுங்கள்” என்றபடி இருவரும் போவதற்கு ஆயத்தமானார்கள். பரமசிவத்திடமும் விடைபெற்று அவர்கள் சென்றவுடன்

பரமசிவமும் “நீ சொல்லு மகள். நானும் அறிய வேண்டும்” என்றார்.

“ஒருமுறை இதேபோல கையிலே ஒரு தாங்கமுடியாத நோ வந்தது ஐயா. கொம்பியூட்டரில் தொடர்ச்சியாக இருந்ததாலோ என்னவோ. சரியான வலி. எந்த நேரமும் கரண்டில் சூடாக்கும் தலையணையை முதுகிலே வைத்துக் கொண்டு படுத்தே இருப்பேன். இவர் சாப்பிடக் கூப்பிட்டால், எழுந்து வந்து உணவருந்தும் நேரத்தில் மீண்டும் வலி தொடங்கிவிடும். படுக்கும் போது மட்டுமே நோ இல்லை. எழும்பி நின்றால் பரவாயில்லை. இருக்கவே முடியாது. வேலைக்குக் காரில் போகின்ற போது சீட் ஹீட்டரை போட்டுப் போவேன். வேலை செய்வதும் கடினம். அன்று ஒரு நாள் நான் படுத்திருக்கின்ற போது எனக்கு நித்திரையும் இல்லை. முழிப்பும் இல்லை.

என் நெற்றியிலே அகண்ட வானம். இருண்ட அந்த வானத்திலே இலட்சக்கணக்கான நட்சத்திரங்கள் மின்னி மின்னிக் கொண்டிருந்தன. கண்களைத் திறந்து பார்த்தேனோ? கண்களுக்குள் பார்த்தேனோ? எனக்குப் புரியவில்லை. அந்த அற்புதமான காட்சி சில நிமிடங்கள் தோன்றி மறைந்தது. அதுவே பிரபஞ்ச அற்புதம் என்பதை இன்று உணர்கின்றேன். அந்தக் காட்சியில் தோய்ந்து மூன்று நாட்களிற்குப் பின் ஒருநாள், இந்த நோவுக்கான மாத்திரை ஈபுபுரோபின் தொடர்ந்து போட்டால், உடம்புக்கு ஆகாது. என்ன செய்வதென்று யோசித்துக்

கொண்டிருந்த போது என்னுடைய குருஜி தொடர்ந்து எனக்கு மெசேஜ் போடுவது ஞாபகம் வந்தது.

குருஜியை வட்ஸ்அப் மூலம் அழைத்தேன்.

"குருஜி. உங்களிடம் ஒரு கேள்வி. நான் கீழே விழுந்ததனால், என்னுடைய தோள் மூட்டிலே ஒரு வெடிப்பு வந்திருக்கின்றது. ஆபரேஷன் செய்யும் படி சொல்கின்றார்கள். தியானம் மூலமாக இதைச் "சரிப்படுத்தலாமா?"

"ஆம் அம்மா. நீங்கள் உங்களுடைய நண்பர்களையும் இணைத்துக் கொள்ளுங்களேன். இணைந்து தியான முறைகளையும் சொல்லித் தருகின்றேன். முயன்று பாருங்கள்."

"எப்படி குருஜி. இணையம் மூலம் சரிவருமா?"

"ஏன் சரி வராது. முயன்று பாருங்கள். இந்த உலகமே அலைகள் நிறைந்த பிரபஞ்சம் தானே. வீட்டுக்குள்ளே இருக்கும் தொலைக்காட்சிக்குள்ளே எப்படி இசை வருகின்றது. படம் வருகின்றது. தொலைக்காட்சி அந்த அலைகளை இழுத்து எடுப்பதனாலேதானே."

"அதற்கு அன்ரெனா இருக்கிறது"

"ஏன் உங்களிடம் அன்ரெனா இல்லையா? துரியம் என்று சொல்லப்படுகின்ற உச்சிப்பகுதியிலே பிரபஞ்ச ஆற்றலை இழுத்து எடுக்கக் கூடிய சக்தி இருக்கிறதுதானே. நீங்கள் அடுத்தவரை வாழ்த்தும் போது அது எப்படிப் பலிக்கிறது? உங்களிடம் இருக்கின்ற ஆரா பற்றி உங்களுக்கே தெரியாது. அதனை வளர்த்துக் கொள்ளுங்கள்."

"சூம் மூலமாகத் தீட்சை பெறலாமா குருஜி."

"நிச்சயமாக... ஆனால், சில தீட்சைகள் நான் தொட்டுத் தர வேண்டும். அது நீங்கள் இறையாசிரியர் பயிற்சி முடித்தால் மட்டுமே பெறலாம். அதற்கு முறையாகப் படித்து பிரம்மஞானத்தை நீங்கள் பெற வேண்டும். வேதாத்திரி மகரிஷி உங்களுடன் தொடர்பில் எப்போதும் இருப்பார்" என்றார் குருஜி.

இந்த ஆன்மீகத்தில் எல்லாம் நம்பிக்கை இல்லாத சுருதியின் அப்பா ஏதோ உங்களுடைய விருப்பம் என்று சொல்லிவிட்டார். அம்மா இறந்தபின் ஜெர்மனிக்கு வந்து பகுத்தறிவுக் கொள்கைகளில் நாட்டம்

கொண்டு கடவுள் வெளியில் எங்குமே இல்லை. கடவுள் உலகத்தைப் படைக்கவில்லை என்று கருதியவள் நான். கடவுள் உலகத்தை, உயிர்களைப் படைத்தால், வெளியே நீங்கள் கொண்டு வைக்கும் பாண் துண்டிலே எப்படி நுண்ணங்கிகள் உருவாகின்றன என்பது போல் கேள்வி மேல் கேள்விகள் கேட்டு என் மனத்தைப் பக்குவப்படுத்தி வைத்திருக்கும் அரவிந்தன் தொலைக்காட்சிகளில் வேற்றுக் கிரக ஆராய்ச்சிகள் பற்றிய செய்திகளையே பார்ப்பான். அதற்குமேல் சுருதி. இந்தச் சூழ்நிலையில் இது எப்படிச் சாத்தியப்படும் என்று நினைத்தேன் ஐயா.

அதனாலேயே விஞ்ஞானத்திலே மெய்ஞ்ஞானத்தைக் கண்ட வேதாத்திரி மகரிஷியின் பார்வை என்மேல் பட்டது.

உடனே என்னுடைய பிரெண்ட்ஸ் அவுஸ்திரேலியாவிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும் 4 பேர் என்னுடன் சேர்ந்தார்கள். அன்று தொடங்கியதுதான் தியானம். அதிலே பிரம்மஞானம் வரை முடித்துவிட்டேன் ஐயா.

யாருமே நம்ப மாட்டார்கள் ஐயா குருஜி தந்த தீட்சையால் தியானத்தில் இருக்கும் போது என்னுடைய நெற்றிக்கண்ணாகிய ஆக்னை யிலேயும் துரியம் என்று சொல்லப்படும் உச்சியிலும் சுழற்சி ஏற்படும். இதனை அனுபவத்தின் மூலமே பெற முடியும். இதனை நம்புபவர்கள் நம்புவார்கள். நம்பாதவர்கள் நக்கல் அடிப்பார்கள். ஆனால், இந்த அண்ட சராசரங்களில் ஏதோ இருக்கின்றது. அருட்பேராற்றலின் தன்னியக்கச் சூழ்ந்தமுத்தும் ஆற்றலாலேயே இந்த உலகம் தோன்றியது. உயிர்கள் தோன்றியது என்று ஆழமாக நம்பினேன்.

அலைகளின் தாக்கம் மனிதனில் எப்படிப் பிரதிபலிக்கின்றது என்பதற்கு அத்தாட்சியாகச் சுருதி சென்ற வாரம் தலையிடியாக இருக்கிறது. வாந்தி வருகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தாள். அதன் பின்புதான் தெரிந்தது. இத்தாக்கம் பலருக்கு அன்றைய நாள் ஏற்பட்டிருக்கின்றது. ஏனென்றால் அன்றைய தினம் பூமியிலிருந்து வருகின்ற கதிர்வீச்சானது வழமைக்கு மாறாகக் கூடுதலாக வந்திருக்கின்றது. இதுபோலத்தான் பூரணையில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் இயல்பானது வழமைக்கு மாறாக அதியுச்சத்தைத் தாண்டுகின்றது.

நான் கோயிலுக்குப் போவதில்லை. எனக்குள்ளே நிறைந்திருக்கும் அந்த இறையாற்றலைத் தேடுகின்றேன் ஐயா. கவலைகள், துன்பங்கள்,

இறப்புக்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தியிருக்கிறேன் ஐயா. நான் நினைப்பவை நடக்கின்றன. சிறிது நேரம் காலையில் தியானம் செய்தால், மனம் நிம்மதியாக இருக்கிறது. சில தீர்மானங்களைத் தியானத்தின் மூலம் எடுக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆன்மீகச் சொற்பொழிவுகள் செய்கின்றேன். ஒருமுறை நாங்கள் விடுமுறைக்கு பெர்லின் சென்றிருந்தோம். முடிக்க முடியாத சில காரியங்களை நான் முடித்துக் காட்டினேன். தனவந்தர்கள் மாத்திரமே நுழைய முடியும் என்றிருந்த ஆட்லன் ஹொட்டலுக்குள் நான் உள் நுழைந்து சுற்றிப் பார்த்து வந்தேன். சில விடயங்கள் நான் எதிர்பார்க்காது நடப்பதை உணர்ந்திருக்கின்றேன் ஐயா'' என்று சிநேகா சொல்லி முடித்தாள்.

``நீ எப்படி வாழ வேண்டும் என்பதை நீ தீர்மானிப்பதில்லை. நாம் நினைத்தோமா ஜெர்மனியில் வாழ்வோம் என்று. நீ எதற்காகப் படித்தாய். பட்டம் பெற்றாய். எங்களை ஏதோ இயக்குகின்றது. அது மட்டும் நிச்சயம். ஒரு மனிதன் வேறு மனிதனோடு கொண்டுள்ள தொடர்பையும், பிரபஞ்சம் உயிர்களோடு கொண்டுள்ள தொடர்பையும் காலம் தன்னுடைய நினைவில் வைத்திருந்து தன் கணக்கைத் தீர்க்க வலியுறுத்தும். அதுவே நீ குருஜியுடன் கொண்ட தொடர்பு. என் கடமை முடிந்தது. இனி நீ உன் வாழ்க்கையின் கடமைகளை நிறைவேற்று'' என்றார் பரமசிவம்

பேச்சுடனே இரவு உணவு முடிந்து விட்டது. நினைத்த காரியம் நடைபெற வேண்டும். இருவரும் துரிதமானார்கள். பரமசிவம் ஆயத்தமானார்.

# அத்தியாயம் 14

# பரிசோதனை ஆரம்பம்

பரமசிவம் நிருபா வையும் சிநேகா வையும் கட்டியணைத்தார். கண்கள் பனித்தன. ஆனாலும் ஏதோ திடமான எண்ணம் அவர் மனத்துக்குள் ஆணி அடித்தது போல இருந்தது. படுக்கையில் வந்தமர்ந்தார்.

‘‘சுருதியைக் கவனமாகப் பார்த்துக்கொள். அண்ணன்மார்களுடன் அடிக்கடி பேசு. சிந்துவை இங்கு வரச்சொல். வேலைக்குப் போகாவிட்டாலும் மூளையைக் கறள் பிடிக்க விடாதே. ஏதோ சொல்ல வேண்டும் போல் இருக்கிறது. நிருபாவில் நம்பிக்கை இல்லாமல் இல்லை. எனக்குத் தைரியம் இல்லை. ஆனாலும் மனத்துக்குள் ஏதோ சாதிக்கப் போகிறோம் என்று மனம் சொல்கிறது. நிருபா தொடங்கு மகள்’’ என்றார்.

சிநேகாவின் உள்ளத்துக்குள்ளே ஒரு திடமான நம்பிக்கை இருந்தது. செயற்கை நுண்ணறிவு செய்கின்ற சாதனையில் இது ஒன்றும் பெரிய விடயம் இல்லை. மனிதனின் அளவிட முடியாத திறமையைக் கண்டு சமய நிறுவனங்கள் அஞ்சுவதனாலே இவ்வாறான கண்டுபிடிப்புக்களுக்குத் தடை செய்கின்றார்கள். பூமி உருண்டை என்பதற்கே படாதபாடு பட்டு நிறுவவேண்டியிருந்தது.

கணினி மனிதனின் கண்டுபிடிப்பில் அற்புதம். கணினி மனித மூளையை விட அதி அற்புதமான வேகத்துடன் பணிபுரியக் கூடியது. பரமசிவம் மூளையில் இருக்கின்ற பதிவுகள் கணினியில் பிரதியாக எடுத்துப் பதியப்படும். பொதுவாகவே ஒரு கோப்பை எடுத்து அதை நாங்கள் கணினியில் பதிகின்ற போது அது அப்படியே எடுக்கப்பட்ட இடத்தில் இருக்க அதனைப் பிரதியாக எடுத்து வேறு ஒரு கோப்புக்குள் போடுவோம். அதை மீண்டும் எடுத்துப் படிக்கக் கூடியதாக இருக்கும் அல்லவா? அது போலவே பரமசிவம் மூளைக்குள் இருக்கின்ற பதிவுகளை அவை அப்படியே அழியாமல் இருக்க எடுத்த பதிவுகளை கணினிக்

கோப்புக்குள் போட்டு வாசிக்க முடியும் என்று சிநேகாவும் நிருபாவும் நம்பினார்கள். நம்பிக்கையே பல சாதனைகளை நிகழ்த்தும் என்பதை அறிந்திருக்கின்றோம் இல்லையா என்று இருவரும் பேசிக் கொள்வார்கள்.

நரம்பு மண்டலங்களின் பிரச்சினையைத் தலையிலே ஸ்ரிக்கர் போன்ற ஒன்றை ஒட்டி, அதில் கம்பிகளைப் பொருத்தித் தலைக்கு எந்தவித பாதிப்புக்களும் இல்லாமல் ஓர் இயந்திரம் மூலமாக (EEG) எலக்ரோஎன்சேபாஃலோகிராபிக் மூலம் நரம்புப் பிரச்சினைகளைக் கண்டுபிடிக்கின்றார்களே. நியூரோன் தொழிற்பாட்டில் ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டுபிடித்து விடுகின்றார்களே.





எங்களுடைய உடலை ஓர் இயந்திரத்துள் விட்டால் (MRI Scan) அது உள்ளே இருக்கும் விடயங்களைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது அல்லவா? வரைபடமாக வருவதை மருத்துவர்கள் வாசித்துக் கண்டுபிடிக்கின்றார்களே.

ECG மூலமாக இதயத்துக்குள் போகின்ற மின் தொழிற்பாடுகளை உடலைக் கூறுபோடாமல் கண்டுபிடிக்கின்றார்களே. இரத்த நரம்புகளின் அடைப்புக்களைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றதே.

CT angiography போன்ற இவை எல்லாம் சாதனைகள் செய்கின்ற போது மூளைப் பதிவுகளை வாசிப்பதற்கு எலன்மாஸ்க் இன்

பணியாளர்கள்தான் மென்பொருள் கண்டுபிடிக்க வேண்டும் என்றில்லை. நிருபாவின் திறமையும் கண்டுபிடிப்புக்குக் கைகொடுக்கும்.

பதிகின்ற அனைத்தும் இலக்கங்களாகவே பதியக் கூடிய தன்மை கணினிக்கு இருக்கிறது. உதாரணமாக 0B85 என்றால் அ. இதை பைனறி என்பார்கள். அதனால் அலைகளாகவோ எப்படியோ மூளையிலே பதியப்பட்டவற்றைக் கணினி எடுத்து இலக்கங்களாகப் பதிந்துவிடும்.

உதாரணமாகச் சொல்வதானால், பொதுவாகவே oovan என்னும் மென்பொருளானது பாமினியிலா, ஒருங்குறியிலா நாங்கள் கணினியில் பதிந்து வைத்திருக்கின்றோம் என்று கண்டு பிடிப்பதைப் போல நிருபா கண்டுபிடித்த மென்பொருள் மூளை பதிந்து வைத்திருக்கும் விடயத்தை வாசிக்கக் கூடியதாக இருக்கும் என்று நிருபா ஆணித்தரமாக நம்புகின்றாள்.

பரமசிவத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இடையிலே எழுந்து செல்லாமல் சிறுநீர் கழிக்க அதற்குரிய ஆயத்தங்கள் செய்தா யிற்று. இரத்த அழுத்தம் தொடர்ச்சியாகக் கணக்கு எடுக்கப்பட்டது. இரத்த அழுத்தம் அதிகரித்தால் நிச்சயமாக மின்சார இணைப்பை நிறுத்துவதாக முடிவு எடுக்கப்பட்டிருந்தது. எதற்கும் தயாராக இருக்கும்படிக் கண்களின் இமைகளுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தார்கள்.

மூக்கினூடாக செயற்கை சுவாசம் தேவைப்பட்டால் செலுத்துவதற்கு ஆயத்தமாக ஒட்சிசன் அருகே இருந்தது. மின்சாரம் இல்லாமல் கணினி தொழிற்படாது. உயிர் இல்லாது மூளை வேலை செய்யாது. அந்த உயிர் ஒட்சிசன் காற்று இல்லாமல் காற்றோடு காற்றாகக் கலந்து விடும். அதனால், ஒட்சின் அருகே எதற்கும் ஆயத்தமாக இருந்தது.

நல்ல காற்றோட்டம் அறையில் நிறைந்திருப்பதற்காகப் பரமசிவம் படுக்கைக்குச் செல்வதற்கு முன்னமே சாளரம் திறக்கப்பட்டு 15 நிமிடங்கள் விடப்பட்டு மீண்டும் மூடப்பட்டது. பரமசிவத்தின் தலைமயிர் குறிக்கப்பட்ட இடத்தில் வழிக்கப்பட்டது. இறுக்கம் இல்லாத உடைகள் அணிவிக்கப்பட்டது. பரமசிவம் கட்டிலில் படுத்தார்.

தலையிலே ஸ்ரிக்கர் மூலமாக ஒட்டப்பட்ட குழாய்கள் ஒரு இயந்திரத்தில் பொருத்தப்பட்டு அங்கிருந்து கணினிக்கு இணைப்புக் கொடுக்கப்பட்டன. கணினியைத் திறந்து அதற்குரிய ஆயத்தங்களை நிருபா செய்தாள். அவருக்கு அருகிலே மெல்லிய இசை தவழவிடப்பட்டது.

பக்கத்திலே சிநேகாவும், நிருபாவும் அமர்ந்து கொண்டார்கள். இன்று இரவு முழுவதும் இவர்கள் இருவருக்கும் உறங்காப் பொழுதுகள். இருவருடைய கண்களிலும் கலவரம் குடிகொண்டது. தந்தையின் அருகே சிநேகா உள்ளம் தத்தளித்தது. விஷப் பரீட்சைக்கு ஆயத்தமாகி விட்டார்கள். சிநேகாவையும் பரமசிவத்தையும் நோட்டமிட்டபடி நிருபா மின்சார இணைப்பை அழுத்தினாள். கண்களால், நன்றியைத் தெரிவித்த பரமசிவம் கண்களை மெதுவாக மூடினார்.

நித்திரை வரவில்லையானாலும் கண்களை மூடி மௌனத்தை இறுக்கிப் பிடித்த வண்ணம் உறங்க ஆசைப்பட்டார். இசையின் அணைப்பில் உறங்கிப் போனார். கணினியைப் பார்த்தாள் நிருபா. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் கன்னத்தைத் தொட்டுக் கீழிறங்கியது. சிநேகா வைத்த கண் வாங்காமல் தந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நீலக் கோடிட்ட படி பதிவுகள் கடகடவென்று கணினியில் பதிவாகிக் கொண்டிருந்தன. தலையை அசைத்தபடி கண்களை மூடினாள். சிநேகாவைக் கட்டி அணைத்தாள்.

"தேங்க்ஸ் அன்ரி. தேங்க்ஸ். உங்களைத் தவிர வேறு யாரும் இதற்கு இடம் தர மாட்டார்கள். உங்களுடைய இந்தப் பண்பு எப்படி மாணவர்களுக்குப் பணியாற்றியிருக்கும் என்று எனக்கு இப்போது விளங்குகின்றது. ஐயா எங்களுக்குத் தன்னுடைய நினைவுப் புத்தகத்தைத் திறந்து தந்து கொண்டிருக்கிறார் அன்ரி."

"பதிகின்றதா நிருபா. எனக்கு எப்படி மகிழ்ச்சியைக் காட்டுவது என்று தெரியவில்லை. ஐயாதான் இந்த உலகத்திலே முதல் மூளைப்பதிவைக் கணினிக்கு வழங்கியவராக உலகத்துக்கு அறிமுகமாவார். நீங்கள்தான் முதல் சாதனைப் பெண்" என்று கூறி நிருபாவை ஆரத் தழுவினாள் சிநேகா.

"இன்று பதிவுகள் முழுவதும் வந்து விடும் அன்ரி. பின் மின்சார இணைப்பைத் துண்டித்து விடுவோம். ஐயா எழும்பிய பின் கம்பிகளைக் கழட்டிவிடலாம். ஏனென்றால், அவருடைய நித்திரை குழம்பிவிடும். மிக வேகமாகப் பதிவுகள் நடக்கின்றன" என்றாள் நிருபா.

"இது உங்களுடைய புதிய கணினி. இதிலே வேறு எந்தவிதப் பதிவுகளும் இல்லை. அதனாலேதான் ஸ்பீடாக வேலை செய்கிறது. இருந்தாலும் அரை மணி நேரத்தில் மின்சார இணைப்பை நீக்குவோம்

நிருபா. பின் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு திரும்பவும் போடுவோம். எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள் சிநேகா.

‘‘ஓகே அன்ரி. அந்த நேரத்தில் வந்த பதிவை என்னுடைய software இல் போட்டு எழுத்துருவத்துக்குக் கொண்டு வருவோம்‘‘ என்று கூறிய நிருபா ஒரு மணி நேரத்தில் மின் இணைப்பைத் துண்டித்தாள்.

‘‘உங்களுடைய பிரபஞ்சத்திட்டக் கேளுங்கள் அன்ரி என்னுடைய software இந்தப் பதிவைக் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லை.''

‘‘நல்லது. நான் தியானத்துக்குப் போறன். நீங்கள் முயலுங்கள்'' என்றபடி சிநேகா வெளியே வந்தாள். பரமசிவம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

தன் கண்களை மூடினாள் சிநேகா. ‘‘நான் அமர்ந்திருக்கும் இடம். இந்த இல்லம் முழுவதிலும் நல்ல தெய்வீக ஆற்றலே நிரம்பின. அருட்பேராற்றல் இரவிலும் பகலிலும் எந்த நேரத்திலும் உறுதுணையாகவும் பாதுகாப்பாகவும் அமைவதாக. அன்னைக்கு வணக்கம். தந்தைக்கு வணக்கம், குருவுக்கு வணக்கம். அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி சூட்சுமமாகக் கூடவே இருந்து இந்தத் தவத்தை வழி நடத்துவாராக'' என்று மனத்துக்குள் நினைத்த வண்ணம் துரியாதீத தவம் இயற்றத் தொடங்கினாள். நெற்றிப் பொட்டிலே மனத்தைப் பதித்தாள். அங்கிருந்து உச்சிக்கு மாறினாள். துரியம் தொழிற்படத் தொடங்கியது. உச்சியிலே வழமைக்கு மாறாக நன்றாகவே சுழற்சி ஏற்பட்டது. சிநேகாவினுடைய எண்ணம் முழுவதும் தன்னுடையதும் நிருபாவினுடையதுமான முயற்சி வெற்றியீட்ட வேண்டும். நூல் வடிவிலே தன்னுடைய தந்தை காலம் கடந்து வாழவேண்டும் என்றே இருந்தது.

அரை மணிப் பொழுதுகள் கழித்து மீண்டும் நினைவுக்கு வந்தவள். முதல் வேலையாக நிருபா விடம் ஓடினாள். வாயை மூடியபடி கண்களை அகலத் திறந்து கணினிக்குள் புகுந்திருந்த நிருபா சிநேகாவைப் பார்த்தாள்.

கண்களால் என்ன செய்தி என்று கேட்டாள் சிநேகா.

கதைத்தால் பரமசிவம் நித்திரையிலிருந்து எழுந்துவிடுவார் என்று வட்ஸ்அப்பில் எழுதினாள்.

“அன்ரி. நிறையப் பதிந்திருக்கின்றது. நான் கொன்வேட் பண்ணிவிட்டேன். படங்கள் பதிந்திருக்கின்றன. ஆனால் உருவங்கள் எதுவும் தெளிவில்லை. மூளையில் முகங்கள் நன்றாகப் பதியாது என்று சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன்.

புகைப்படக்கருவியை விட மனிதக் கண் 576 படத்துணுக்குகள் கொண்டது. இது மெகாபிக்சல். கண் ஞாபக வங்கியில் சேமிக்க ஸ்னாப்ஷாட்களை எடுக்கிறது அன்ரி. கண்கள் உங்கள் சுற்றியுள்ள சூழலிலிருந்து தடயங்களை எல்லாம் சேர்க்கும். அதன்பின் சேர்த்த தகவல்களை எல்லாம் மீண்டும் மூளைக்கு எடுத்துப் போய்த் துண்டுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழுமையான படத்தை உருவாக்குகிறது. நான் நினைத்தேன் நல்ல தெளிவாக வரும் என்று. ஆனால், தெளிவாகப் பதியவில்லை.

“ஓம் நிருபா. நான் எத்தனையோ முறை அம்மாவைக் கனவு கண்டிருக்கின்றேன். ஆனால், முகம் மட்டும் தெளிவில்லை. இப்போதுதான் புரிகின்றது. முகங்களை மூளை தெளிவாக நினைவில் வைப்பதில்லை என்னும் விடயம்.

தொழிற்சாலையில் இரவுநேரப் பிரிவு தொழிற்படுவது போலப் படபடவென்று வேலையை முடித்தாள் நிருபா. பதிவில் எடுத்தவற்றை பிரின்டர் மூலமாகக் கடதாசியில் பதிவுகளை வெளியெடுத்தாள்.

ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் பதிவு ஆரம்பமானது. பரமசிவமோ சிநேகா, நிருபாவுக்கு கைகொடுப்பதே தன்னுடைய தொழில் என்று நினைத்தவராக நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். இரவிரவாக வேலை சிறப்பாக முடிந்தது. ஏகப்பட்ட தகவல்கள் சேகரித்து விட்டார்கள்.

“இனிமேல் வேண்டாம் நிருபா. தேவையென்றால், நாளை பார்ப்போம். நீண்டநேரம் மின்சாரம் தொழிற்படுவது ஐயாவின் உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நிருபா. இந்தத் தகவலை வைத்து நான் ஊகித்துக் கொள்வேன். இதை வைத்துத் தொடர்புடையவர்களுடன் பேசியும் ஐயாவின் நினைவில் இருப்பவற்றைக் கொண்டும் தெளிவைப் பெற்றுவிடுவேன்.”

“ஓம் அன்ரி. எனக்கும் சக்சஸ். உங்களுக்கும் திருப்தி, ஐயாவுக்கும் மகிழ்ச்சி. இப்போதைக்கு இந்த விஷயத்தை வெளியில் யாருக்கும் சொல்ல வேண்டாம். நிலைமையை யோசித்துச் செய்வோம்.”

“நிருபா காலையில் ஐயா எழும்பட்டும். சந்தோசப்படுவார். இதை இப்படியே விடக்கூடாது. நீங்கள் வெளியிடாவிட்டால், உங்களுடைய பெருமை வேறு யாருக்கோ போய்விடும். உங்களுடைய சாதனையை விஞ்ஞான உலகம் புரிந்து கொள்ள வேண்டும். இதை வைத்தே கோடிக்கணக்கில் நீங்கள் உழைக்கப் போகின்றீர்கள் பாருங்கள். என் ஆசை, என் அன்பு நிருபா” என்று நிருபா வை இறுகக் கட்டிப் பிடித்தாள் சிநேகா. கட்டுக்கட்டாகக் கரங்களில் கடதாசிகள் பரமசிவம் கதையைச் சுமையாகக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்க்கப் பார்க்க நிருபா பெருமையின் உச்சத்துக்குப் போனாள்.

இரவு முழுவதும் இருவரும் முழித்தே இருந்தார்கள். பரமசிவத்துக்கு ஏதாவது நடந்து விட்டால் என்ற மனப்பயம் மனத்துக்குள் சுமையாகவே இருந்தது.

நித்திரையான பரமசிவம் கண் முழிக்கவே இல்லை. மூளை அசதியாக உறங்கிக் கொண்டிருந்தது. மின் அழுத்தம் மூளைக்குக் களைப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அதிகாலை தூங்குவதற்காக நிருபா வை அனுப்பிய சிநேகா தந்தையின் அருகே அமர்ந்திருந்தாள். விழிகள் திறக்க முடிவெடுத்தாலும் மூளை உறங்க உத்தரவு கேட்டுக் கொண்டே இருந்தது. இறுதியில் அனுமதி பெறாமலே கண்கள் மூடிவிட்டன. தன்னையறியாமல் உறங்கிவிட்டாள். திடுக்கிட்டு எழுந்தாள் சிநேகா நேரம் 10 மணி தாண்டி ஓடிவிட்டது. பதறிப்போய்ப் பரமசிவத்தைப் பார்த்தாள். அவர் இன்னும் உறங்குகின்றார். பதற்றத்துடன்.

“ஐயா... ... ஐயா என்று தட்டித் தட்டி துயில் எழுப்பினாள். இதயம் படபடவென்று பெரிய சத்தத்துடன் துடித்தது. பனிக் குளிரிலும் உடல் வியர்த்துக் கொட்டியது.

கண்களை மெல்லத் திறந்த பரமசிவம்

“என்ன மகள்...” என்றார்.

அப்படியே நாற்காலியில் பொத்தென்று விழுந்தாள். கண்களிலிருந்து ஆற்றொழுக்குப் போல் வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி.

“உடம்பு எப்படி ஐயா இருக்கிறது” என்று கேட்ட படி எழுந்து மாத்திரைகளைப் பரமசிவம் போடுவதற்காக எடுத்தாள்.

“பயந்திட்டியா... சும்மா உங்கள ஏமாற்ற மாட்டன். எல்லாம் சரியாக நடக்கிறது என்று தெரிந்த பிறகுதான் எனக்கு நித்திரையே வந்தது. என்ன வழமைக்கு மாறாக கொஞ்சம் கூடப் படுத்திட்டன். சொல்லு எப்படி எல்லாம் ஓகே யா? நிருபாக்குச் சந்தோசமா?”

மாத்திரைகளைப் பரமசிவத்தின் கைகளில் கொடுத்து தண்ணீரையும் குடிக்கக் கொடுத்தாள். சோலிங்கன் குழாய்த் தண்ணீர், போத்தல் தண்ணீரை விடச் சுத்தமானது. சிநேகா இந்த வருடம் முதலாம் திகதியிலிருந்து போத்தல் தண்ணீர் வாங்குவதில்லை என்று முடிவெடுத்திருந்தாள். ஏனென்றால் ஜெர்மனிய நண்பர்கள்

“எதற்காகத் தண்ணீரைக் கடையில் வாங்குகின்றாய்” என்று சிநேகாவிடம் அடிக்கடி கேட்பார்கள். “எல்லாம் மனப் பயம்தான்” என்று அவளும் சொல்லுவாள். இப்போதுதான் குழாய்த்தண்ணீர் நன்னீரானதே. அந்த நன்னீரின் துணையுடன் பரமசிவத்தின் மாத்திரை உள்நுழைந்தது.

“எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கிறீங்க ஐயா. நிருபாக்குப் பேரும் புகழும் உங்களால் வரப் போகிறது. அதேபோல நிருபாவின் திறமைக்கு நாங்களும் ஒரு வடிகாலாக இருந்திருக்கிறோம். இந்த அளவில் எனக்குக் கிடைத்தது போதும். சந்தேகங்களை உங்களிடம் கேட்கிறேன்.”

“அத நான் பார்க்கலாமா மகள்”

“என்ன ஐயா. இவ்வளவு உயிரைக் கையில பிடித்து இந்த பரிசோதனைக்கு உதவி இருக்கிறீங்கள். நீங்கள் பார்க்காமலா? நிருபா எழும்பினாப் பிறகு படங்களைக் காட்டுறன்.”

முதல் கேள்வியாகக் கேட்டார்.

“அம்மா தெரியிறாவா? அவள ஒருக்கா பார்க்க வேணும். அந்த ரோஸ் கலர் ஷோட்டி என்ர கண்ணுக்குள்ள இருக்கு. அதோடதானே அவளத் தூக்கிற்று ஓடினம்.”

“ம்.. எனக்கும் அதுதான் கண்ணுக்குள்ள இருக்கிறது.. ..”

“அவள் இருக்கிற நேரம் எதுவுமே எனக்குத் தெரியல்ல. பிறகுதான் தெரிஞ்சது. அவள் என்னப் பிச்சிட்டுத்தான் போயிருக்கிறாள் என்ற விஷயம். ஒரு மனிசன் உயிரோட இருக்கக்குள்ள ஒன்டுமே

விளங்கிறதில்ல. நான் வாழல்ல மகள். அவள் வாழ வச்சிருக்கிறாள்'' என்று பரமசிவம் புலம்பத் தொடங்கினார்.

''சரி ஐயா. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி கவலைப்பட்டிற்று இருக்கப் போறீங்கள்? எல்லாரும் பதிவில் தெரிகின்றார்கள். ஆனால், எதுவுமே தெளிவில்லை. மூளை படங்களைத் தெளிவில்லாமல்தான் பதிந்து வைத்திருக்கிறது.''

''பொறுங்கள். உங்களுடைய தேத்தண்ணியப் போட்டிற்று வாறன். என்று கூறிய படி தொலைப்பேசியைத் திறந்தாள். பல தொலைப்பேசிகள் வந்திருக்கின்றன. சுருதி 10 தடவைகள், அரவிந்தன் 5 தடவைகள், மருத்துவமனை இரண்டு தடவைகள் அழைப்பு விடுத்திருந்தனர். முதலில் மருத்துவமனையிலிருந்து வந்த அழைப்புக்கான காரணத்தை அறிய வேண்டும். மருத்துவமனை இலக்கங்களை அழுத்தினாள். மறுமுனையில்,

''ஹலோ.. .. .. சிநேகாவா? உங்களுடைய அப்பாவை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சேருங்கள். நுரையீரல் புற்றுநோய்க்கான மருந்து கண்டுபிடித்து இப்போது சோலிங்கனுக்கு வந்து சேர்ந்திருக்கின்றது. உடனடியாகச் சிகிச்சை அளிக்க வேண்டும்'' என்று ஜெர்மனி மொழியில் அவசரமான குரலில் கூறினார்கள்.

மனம் துள்ளிக் குதிக்கும் என்பார்களே, அதை அப்போது உணர்ந்தாள். சிகிச்சை மேல் சிகிச்சை. பரீட்சை மேல் பரீட்சை. பரமசிவம் காலத்தோடு போராடிக் கொண்டே இருக்கிறார். வல்லமையுள்ளது வாழும். வாழ்க்கையின் சுவாரசியங்களை இரசிக்க வேண்டிய மனிதர்களுக்கு இயற்கை இடம் கொடுக்கும். இயற்கை அவரை வாழ வைக்கத் துடிக்கிறது. பரமசிவம் அறைக்குள் ஓடினாள்.

''ஐயா.. .. என்று ஓடி வந்து கட்டிப்பிடித்தாள். நுரையீரல் புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடித்து விட்டார்களாம். இந்தியா என்றுதான் நினைக்கிறேன். ஆஸ்பத்திரியிலிருந்துதான் ரெலிபோன் பண்ணினார்கள். உங்களக் கூட்டிற்று வரட்டாம். கெதியா வெளிக்கிடுவம்.''

ஓடிப்போய்த் தேநீருடன் பரமசிவத்துக்குக் காலை உணவு தயாரித்தாள். பாணிலே சீசும் (பாற்கட்டி), வூஸ்ட் (வாட்டிய இறைச்சி) உம் வைத்தாள். முட்டை ஒன்றை அவித்து அதையும் எடுத்து மேசைமேல் வைத்தாள்.

தேநீரைப் பரமசிவத்திடம் கொடுத்துவிட்டு சுருதிக்குத் தொலைப்பேசி எடுத்தாள். மறுமுனையில்

“என்ன அம்மா. நீங்கள் லூசா. எத்தனை தரம் எடுப்பது. ஹொஸ்பிட்டலில இருந்து ரெலிபோன் எடுத்தவங்க. நான் எத்தனை தரம் உங்களுக்கு ரெலிபோன் எடுத்தேன். தாத்தா எங்கே? என்ன நடந்தது.”

“கதைச்சு முடிஞ்சுதா? தாத்தா நல்லா இருக்கிறார். ஹொஸ்பிட்டலோட கதைச்சுப் போட்டன். நிருபா அக்காக்கு வெற்றி. தாத்தாவ ஹொஸ்பிட்டலில கொண்டு விட வேண்டும். மருந்து கண்டு பிடிச்சிட்டாங்களாம். சரி வேற ஒன்டும் இல்லை தானே. நான் இப்ப அப்பாவ வரச் சொல்ல வேணும். தாத்தாவ ஹொஸ்பிட்டலில கொண்டு விட வேணும். ரெலிபோன வை.”

அரவிந்தனுக்குத் தொலைப்பேசி அழைப்பு விடுத்து தொழிலகத் திலிருந்து அரவிந்தனை வரச் சொன்னாள். பரமசிவத்தைப் பிடித்துக் கொண்டு போய் குளிக்கக் குளியலறைக்கு அனுப்பிவிட்டு மருத்துவமனைக்குக் கூட்டிச்செல்வதற்குரிய ஆயத்தங்களைச் செய்தாள். அச்சமயம் நிருபாவும் எழுந்து வந்தாள்.

“நிருபா .. .. .. ஐயாவ ஹொஸ்பிட்டலுக்குக் கூட்டிப் போக வேணும். மருந்து வந்துவிட்டதாம். அதுதான் வெளிக்கிடுறன். சரி அன்ரி நானும் வாறன்.”

“பரவாயில்லை நிருபா. இவர வேலையில இருந்து வரச் சொல்லி யிருக்கிறன். நீங்கள் கொஞ்சம் ரிலேக்ஸ் ஆகுங்கள்.”

“அங்கிள் வரத் தேவையில்ல. நீங்கள் என்னுடைய காரை எடுத்துப் போங்களேன்.”

“ஓமென்ன. நல்ல விஷயம்”

உடனடியாக அரவிந்தனுக்குத் தொலைப்பேசி அழைப்பு விடுத்து வரவேண்டாம் என்றாள்.

“உங்களுக்கு என்ன விளையாட்டா? நான் வெளிக்கிட்டிற்றன். நான் உங்கள விட்டிற்று திரும்ப வேலைக்குப் போகலாம். வெளிக்கிட்டு நில்லுங்கள்” என்றான்.

உண்மையில் அவளுக்கு மண்டைப் பழுதுதான். வேலையிலிருந்து வரும்படி அழைத்துவிட்டுப் பிறகு வர வேண்டாமென்பது காலம் கடந்த

பேச்சுத்தானே. சந்தோசத்தில் சிநேகாவுக்கு தலைகால் தெரியவில்லை. அதுதான் மூளையையும் மழுங்கடிக்கும்.

பரமசிவம் ஆயத்தமானார். காலை உணவு மதிய உணவாகியது. பரமசிவம் விருப்பப்படி நிருபா பதிவுப் படங்களைக் காட்டினாள். பெருமூச்சொன்றை விட்டபடி

"பார்த்தியா மகள். அவள் போனது போனதுதான். தன்னுடைய முகத்தை நினைச்சாலும் உங்களால் பார்க்க முடியாது என்று சொல்லிக் காட்டுறாள்."

"இதுதான் ஐயா "வாழ்க்கை என்பது முட்டாள் ஒருவன் எழுதிய கதை. இது இரைச்சலிட்டுக் கத்தும் அர்த்தமில்லாத ஓசை போன்று எந்தவித அர்த்தமுமின்றி இருக்கிறது என்பதுதான்" என்று சேக்ஸ்பியர் தன்னுடைய மேக்பத் என்னும் நாடகத்தில் மேக்பத் சொல்வதுபோல எழுதியிருக்கிறார். அம்மாவை நினைத்தால்.. .. .. .." என்று பொருமத் தொடங்கினாள்.

பரமசிவம் சிநேகாவின் நிலையை அறிந்து

"சரி சரி விடு மகள். எனக்கு இந்த ரீற்மன்ட் எல்லாம் தேவை யில்ல. என்ன அப்பிடியே விட்டிடலாம். நான் இனி வாழ்ந்துதான் என்ன சாதிக்கப் போறன். நாலு எட்டு நடந்தால் மூச்சிறைக்குது. பேசாமல் விடன்" என்றார்.

"இல்ல ஐயா. இந்தப் பிரபஞ்சம் சும்மா எதுவும் செய்வதில்லை. காரணம் இல்லாமல் எதுவும் நடப்பதில்லை. நீங்கள் இந்த உலகத்துக்குத் தேவை என்று இயற்கை நினைக்கிறது. இலங்கையப் போல ஜெர்மனியில் காசு கட்டி மருத்துவம் பார்க்க வேணும் என்ர அவசியம் இருக்கிறதா? வசதி கிடைக்கும் போது செய்வோம். இவர் கட்டிய மருத்துவக் காப்புறுதியில் நாங்கள் மருந்துக்குச் செலவு செய்வது குறைவுதானே. எத்தனையோ பேருக்கு அது உதவி இருக்கிறதுதானே. அந்தப் பலன் இப்போது உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இலங்கையைப் போல காசு வாங்கி விட்டு மருத்துவம் பார்க்கும் பழக்கம் ஜெர்மனியில இல்ல. மருத்துவம் பார்த்த பிறகுதான் காசுக் கணக்குக் கேட்பார்கள். முயற்சி செய்து பார்ப்போம்" என்று பேசிக் கொண்டிருக்கும் போது அரவிந்தன் வந்து விட்டான்.

அரவிந்தன் பரமசிவத்தைப் பிடித்து நடக்க, நிருபாவிடம் சொல்லிவிட்டு மூவரும் வாகனத்தை அடைந்தார்கள். வேகமாக மருத்துவமனைக்குள் செல்லவும் மருத்துவர் பரமசிவத்தைத் தன்னுடைய அறைக்கு அழைத்தார்.

‘‘புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பலர் குணமடைந்துள்ளார்கள். இப்போதுதான் ஜெர்மனிக்கு இறக்குமதியாகி சோலிங்கன் நகருக்கு வந்திருக்கின்றது. பரமசிவம் சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார். இது எந்த அளவுக்குச் சாத்தியப்படும் என்று சொல்ல முடியாது. பரமசிவம் கடைசி ஸ்ரேஜில் இருக்கிறார். முயற்சி செய்து பார்ப்போம். நீங்கள் அவரை இங்கே விடுங்கள்’’ என்று மருத்துவர் கூறினார். அறை இலக்கம் கொடுக்கப்பட்டது. அறைக்குள்ளே வேறு யாரும் இல்லை. தனியாக இருக்க வேண்டிய அவசியம் இருந்தது. நல்ல வெளிச்சமான அறை. சாளரத்தினூடாகப் பார்த்தால் பச்சை நிறம் போர்த்திய மலைகளைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். படுக்கைக்கு நேரே உயரத்தில் தொலைக்காட்சி பொருத்தப்பட்டிருந்தது. படுத்துக் கொண்டே பார்க்கலாம். சிநேகா மடிக்கணினி ஒன்றைப் பரமசிவத்திடம் கொடுத்திருந்தாள். பரமசிவத்தின் கட்டிலுக்கு அருகாமையிலுள்ள மேசையிலே அது வைக்கப்பட்டிருந்தது. அலமாரிக்குள் பரமசிவத்தின் உடுப்புக்களை அடுக்கினாள். கைத்தொலைபேசி ஒன்று பரமசிவத்திடம் இருந்தது. எல்லாவற்றையும் ஒழுங்கு பண்ணிவிட்டு,

‘‘ஐயா நான் போகிறேன். நாளைக்குக் காலையில் வருகிறேன். ஹெலியை நாளைக்குக் கூட்டிக் கொண்டு வருகிறேன். அவன் உங்களோடேயே நிற்பான். இரவில் மட்டும்தான் நீங்கள் தனியாக இருக்க வேண்டும்‘‘ என்று சொல்லிக் கொண்டே ஜக்கட்டை அணிந்தாள்.

அரவிந்தன் வேலைக்குப் போகும் போது நிருபா விடம் சிநேகாவை இறக்கி விடுவதாகச் சொன்னான்.

பரமசிவத்திடம் விடைபெற்று இருவரும் வெளியேறினார்கள்.

# அத்தியாயம் 15

# ஜெர்மனியர்கள் பற்றிய தவறான கருத்து

நிருபாவிடம் சென்ற சிநேகா அவளுடன் இணைந்து அறையைத் துப்பரவு செய்தாள். இருவரும் இயந்திர இணைப்புக்கள் எல்லாம் துண்டித்துப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தார்கள். வாழ்க்கை என்பது இப்படித்தான் என்ன வரவிருக்கின்றது என்று அறியாமலேயே இருக்கும் போது ஏதோ ஓர் அதிசயத்தைக் காட்டும். பரமசிவம் மீண்டும் மருத்துவமனையைத் தரிசிப்பார் என்பது அவர்கள் நினைத்துப் பார்க்காத விடயம். இறுதிக்காலம் வரை அரசாங்கம் கொடுத்த வீட்டில்தான் இருப்பார் என்று நினைத்தார்கள். ஆனால், இன்று நடந்தது யாருமே நினைத்துப் பார்க்க முடியாத திருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்தியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட புற்றுநோய்க்கான மருந்தை ஜெர்மனி கொள்வனவு செய்திருக்கின்றது.

நிருபா விடம் விடைபெற்று பரமசிவத்தின் பதிவுகள் அடங்கிய கடதாசிக் கட்டைத் தூக்கியபடி சிநேகா வீட்டுக்கு வந்தாள். அவளுடைய எண்ணம், மூச்சு எல்லாம் பதிவுகளைப் புத்தகமாகக் கொண்டு வர வேண்டும் என்பதுதான். நூலாக வெளிவரக் காலங்கள் செல்லலாம். அதனால் ஒரு பிரதியை எடுத்துவிட வேண்டும் என்று மூளை முழுவதிலும் அதைப் பற்றியே சிந்தித்தாள்.

அரவிந்தனுடைய தொழிலகத்தில் புதிய பிரதி எடுக்கும் இயந்திரம் வாங்கினார்கள். எப்போதும் எழுதிக் கொட்டும் சிநேகாவுக்கு பிரயோசனப்படும் என்று பழையதை அரவிந்தன் வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தான். அதன் விலை 1000 ஒயிரோக்களுக்கும் அதிகமானது. அந்த இயந்திரத்தில் புத்தகமே அடிக்கலாம். புத்தகமாக ஆக்குவதற்கு முன் ஒரு மென்பொருளுக்குள் நூலாக்கத்துக்கு ஒழுங்கு பண்ண வேண்டும்.

அந்த மென்பொருளை (In Design) வானொலி நடத்துகின்ற ராகவன் சிநேகாவுக்குக் கொடுத்திருந்தார். சிநேகா அதை யூடியூப் மூலமாக எப்படிப் பயன்படுத்துவது என்பதை விளக்கமாகப் படித்து வைத்திருந்தாள்.

தற்போது சிநேகாவின் மூளைக்கும் மனத்துக்கும் கணினிக்கும் இடையிலே நெருக்கமான பிணைப்பு இருந்தது. காரியங்களைக் கட்டாயமாக மனம் ஏற்றுக் கொண்டால், காரியம் ஒன்றும் கடினமாக இருக்காது. சிநேகாவுக்குப் பிடிக்காத அறை சமையலறை. மிகவும் பிடித்த அறை கணினியுடன் கலந்திருக்கும் அறை. முழுமூச்சாக எழுத்து வேலையில் ஈடுபட்டாள். நினைத்துப் பார்க்க முடியாத வேலைத் திட்டங்களை இந்தக் காலப் பகுதியில் சிநேகா செய்ய வேண்டிய தேவை இருந்தது.

இடையிலே தன்னுடைய பணி ஞாபகம் வந்த போது கிளமென்ஸ் நிலையை அறிய மனம் துடித்தது. பொதுவாகவே வாடிக்கையாளருடன் தொலைப்பேசி நேரடித் தொடர்பு கொள்ள முடியாது. இவள்தான் இனிமேல் பணிக்குச் செல்லப் போவதில்லையே. மனம் என்னவோ கிளமென்ஸ் நிலையை அறியத் துடித்தது. ஒவ்வொரு வாரமும் நான்கு நாட்கள் தன்னோடு குழந்தை போலப் பழகியவர் அல்லவா? அவருடைய மகளுடன் தொடர்பு கொள்ள எண்ணியவளாய் சிநேகா, லீனாவைத் தொலைப்பேசியில் அழைத்தாள்.

வெள்ளைக்காரர்கள் பாசம் இல்லாதவர்கள் என்பது தமிழர்களுடைய எண்ணப்பதிவு. ஆனால், சிநேகா பல ஜெர்மனியர்களுடன் பழகி இருக்கிறாள். பணி புரிந்திருக்கிறாள். ஆனால், அது முற்றிலும் தவறான கருத்து என்ற திடமான நம்பிக்கை அவளிடம் இருந்தது.

பெற்றோரைத் தம்முடனே வைத்திருந்து கரித்துக் கொட்டும் எத்தனையோ தமிழர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால், ஜெர்மனியர்கள் வயதானவர்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று தனியாக வீடு எடுத்துக் கொடுத்து, அவர்களைப் பராமரிப்பதற்கு ஆட்களை நியமித்து, வாரந்தோறும் அவர்களிடம் சென்று கட்டியணைத்து முத்தம் கொடுத்துத் தம்முடைய அன்பைப் பரிமாறிக் கொள்ளுகின்ற பலர் இருக்கின்றார்கள். நாம் அன்பை வெளிக்காட்டத் தயங்குபவர்கள். அவர்களோ இடம், பொருள், ஏவல் பார்த்து அன்பைப் பரிமாறுவதில்லை. தோன்றும் போது வெளிப்படுத்திவிட்டுப் போவார்கள்.

பொதுவாகவே ஞாயிற்றுக் கிழமைகளில் யாரையும் வீட்டுக்கு

அழைக்க மாட்டார்கள். யாரையும் சந்திக்க அனுமதிக்க மாட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை பெற்றோர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சேர்ந்திருக்கும் நாள். இதில் இடையூறு வரச் சம்மதிக்க மாட்டார்கள். வாரந்தோறும் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைக்காத பிள்ளைகள் தவறாமல் கிறிஸ்துமஸ் பண்டிகையில் பெற்றோருடன் மாத்திரமே களித்திருப்பார்கள்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு இங்கிலாந்துக்காரர் ஒருபடி மேல். அலங்காரங்களும், அளவிட முடியாத உணவுப் பண்டங்களும், விதம் விதமான ஆடை அலங்காரங்களும் பண்டிகை மகிழ்ச்சியைப் பன்மடங்காக்கும். இரவு 12 மணிவரை உண்பார்கள். இயேசு பிறந்ததாகச் சொல்லும் 12 மணிக்குப் பரிசுப் பொருட்களைப் பிரிப்பார்கள். பரிசுப் பொருள் சிறிய பூவாக இருந்தாலும் காணாததைக் கண்டது போலத் துள்ளிக் குதிப்பார்கள்.

மனம் விட்டுச் சிரிக்கவும், மகிழவும் இங்கிலாந்துக்காரர்கள் ஜெர்மனியர்களை விட ஒருபடி மேல். இங்கிலாந்து மக்களில் சிநேகாவுக்கு அனுபவம் ஏற்படக் காரணம் கதறினா, மைக்கல்.

மைக்கலும் கதறினாவும் அரவிந்தன் உணவகத்துக்கு உணவருந்த வந்து வாடிக்கையாளராகிப் பின் உறவு போலான சொந்தங்கள். கதறினா ஒரு ஆங்கிலோ இந்தியனுக்கும் இங்கிலாந்துப் பெண்ணுக்கும் பிறந்த பெண். மைக்கல் இங்கிலாந்துக்காரன். சோலிங்கனிலே பிரிட்டிஸ் எவன்ற்ஸ் தியேட்டர் கொம்பனி நடத்துகின்றார்கள். இருவருக்கும் உள்ள உறவுமுறை தமிழர்களைப் பொறுத்தவரை புதுமையானதுதான்.

இருவரும் காதலர்களாக இருந்து பின் நல்ல நண்பர்களாக ஒரே வீட்டில் ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசையாகக் காதலர்கள் என்ற உறவைத் தவிர்த்து நல்ல நண்பர்கள் என்ற பெயருடன் பிற்காலத்தில் வாழ்பவர்கள். அரவிந்தன் சிநேகாவுடன் பழக்கம் ஏற்பட்ட போது இந்தியா செல்லும் விருப்பம் அவர்களுக்கு இருந்தது. கதறினா தன்னுடைய தந்தையின் உறவினர்களைக் காண ஆசைப்பட்டாள். அதனால், இந்தியா போக விரும்பினாள். இருவரும் ஹிந்தி மொழி கற்றனர். தெருநாய்கள் கடித்து விடுமே என்று தடுப்பூசி போட்டார்கள். இந்தியாவில் தமக்கு ஏதாவது நடந்து விட்டால், யாராவது ஒருவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால், தம்முடைய சொத்துக்களின் பாதுகாப்புக்காகப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார்கள்.

திருமணத்து அன்றே கதறினாவுக்குப் போட்ட மோதிரத்தை மைக்கல் வாங்கிவிட்டான். இது என்னுடைய அம்மாவின் ஞாபகார்த்த மோதிரம் என்பது அவன் பக்க நியாயம். இது எமக்குச் சிரிப்பாக இருந்தாலும் கதறினாவுக்குப் பதிவுத் திருமணம் ஒன்றும் பெரிய விடயம் இல்லை. பதிவுத் திருமணம் என்பது அவர்களுடைய சொத்துக்களுக்கு உரிமை கொண்டாடுவதற்குச் செய்த முன்யோசனையே. கணவன் மனைவி என்ற வார்த்தைகளை இருவரும் பயன்படுத்துவது கிடையாது. நல்ல நண்பர்கள் அவ்வளவுதான். ஆனால் ஒரே வீட்டில் ஒன்றாகவே வாழுகின்றார்கள். இன்ப துன்பங்களைப் பங்கு போட்டுக் கொள்ளுகின்றார்கள். இருவரின் உறவும் எமக்குப் புதுமை. ஆனால் அவர்களுக்குச் சாதாரணம்.

அரவிந்தன், சிநேகா இருவரும் உணவகத்தில் பணி அதிகமானால், சுருதியைத் தம்முடைய வீட்டில் வைத்திருந்து அன்போடு பாதுகாப்பதுடன் அவளுக்கு ஆங்கிலத்தையும் அகழ்வாராய்ச்சி, வரலாறு, வாசிப்பின் முக்கியத்துவம் போன்றவற்றையும் நான்கு வயதிலிருந்து போதித்தவர்கள்.

வருடந்தோறும் கிறிஸ்மஸ் பண்டிகை அவர்கள் வீட்டிலேயே கொண்டாடுவார்கள். விதம்விதமான அன்பளிப்புக்களை அழகாக வடிவமைத்துக் கொடுக்கும் பாங்கே தனி அழகு. இங்கிலாந்து உணவுமுறைகளையும் கிறிஸ்மஸ் நடைமுறைகளையும் மைக்கல், கதறினாவிடமிருந்தே சிநேகா கற்றுக் கொண்டாள். வருடந்தோறும் புதுவருடக் கொண்டாட்டம் அரவிந்தன் கைப்பக்குவத்திலேயே அமைந்திருக்கும்.

மைக்கல், கதறினா, அரவிந்தன், சிநேகா, சுருதி ஐவருடனேயே 15 வருடங்கள் தொடர்ச்சியான கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களும், புதுவருடக் கொண்டாட்டங்களும் அமைந்திருந்தன. அதன்பின் தம்முடைய நாடான இங்கிலாந்துக்கு அவர்கள் இடம்பெயர்ந்து விட்டார்கள். அதன்பின் இரண்டு வருடங்களே இங்கிலாந்து சென்று இணைந்து கிறிஸ்மஸ், புதுவருடக் கொண்டாட்டங்களைக் கொண்டாட முடிந்தது.

அன்று எப்படியும் கிளெமன்ஸ் பற்றி அறிய லீனாக்குத் தொலைப்பேசி இணைப்பை ஏற்படுத்தினாள் சிநேகா

'லீனா. கிளெமன்ஸ் எப்படி இருக்கிறார்'

எத்தனை வயதானவர்களாக இருந்தாலும் பெயர் சொல்லியே அவர்களை அழைப்பது ஜெர்மனியர் வழக்கம். அதைவிடப் பெயர்களை

நன்றாக ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். வருடங்கள் கடந்து ஒருவரைச் சந்தித்தால், நாமெல்லாம் அவர்களுடைய பெயரைச் சிந்தித்து விழி பிதுங்கி நிற்போம். ஆனால், ஜெர்மனியர்களோ கண்டவுடன் பெயர் சொல்லி மகிழ்ச்சியோடு அழைப்பார்கள். நாம் உறவுமுறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் எம்முடைய மூளை பெயருக்கு முக்கியம் கொடுப்பதில்லை என்று நினைக்கிறேன்.

‘‘லீனா! எனக்கு நேரம் கிடைக்கவில்லை. அதனால், உன்னைத் தொடர்பு கொள்ளவில்லை’’ என்றாள்.

‘‘சிநேகா! நேரம் கிடைத்தால், இன்று கோப்பிக் கடையில் சந்திப்போமா? வந்து எல்லாம் சொல்லுகிறேன். நான்கு மணிக்கு வா’’ என்று கோப்பிக் கடையின் விலாசத்தைத் தந்தாள்.

அவள் குறிப்பிட்ட 4 மணிக்குக் கோப்பிக்கடைக்குச் சிநேகா சென்றாள்.

கோப்பியைப் பருகிய வண்ணம் இருவரும் அமர்ந்திருந்தனர். லீனா முகத்தில் இறுக்கம் இருந்தது. அவளாகவே தொடங்கினாள். கண்ணீர் முத்துக்கள் கன்னங்களில் படரத் தொடங்கின.

‘‘இற்ஸ் ஓகே. அமைதியடை லீனா. இதுதான் நடக்க வேண்டும் என்று விதி இருந்தால் அதைத் தடுக்க முடியாது’’ என்று ஆறுதல் படுத்தினாள் சிநேகா.

‘‘அவரை மருத்துவமனையில் வைத்துப் பராமரிக்க எனக்குக் கொஞ்சம் கூட விருப்பம் இல்லை. அவருக்கு வேறு ஒரு நோயும் இல்லை. ஆனால், பிள்ளைகள் வீட்டில் சுதந்திரமாக இருக்க முடியவில்லை. சத்தமாகக் கதைக்க முடியாது. பூனைபோல் பதுங்கிக் கொண்டே தான் வாழவேண்டும். எந்த அவசரமென்றாலும் தனியே அவரை விட்டுச் செல்ல முடியவில்லை. கதவைத் திறந்து ஓடி விடுகின்றார். தண்ணீர், குக்கர் எல்லாம் கரண்ட் கட் பண்ணித்தான் வைக்க வேண்டி இருந்தது. உனக்குத் தெரியும்தானே ஹோலுக்குள் மல, சலம் கழிக்கத் தொடங்கி விட்டார். ஏனென்றால், பாத்ரூம் எங்கே இருக்கிறது என்று அவருக்குத் தெரியவில்லை. இப்படிப் பல பிரச்சினை. அதனால்தான் வயோதிபர் மடத்தில் ஸ்பெசல் பிரிவில் காசு மேலதிகமாகக் கட்டி விட்டிருக்கின்றேன். சிநேகா. அவருக்கு என்னைக் கூடச் சில சமயங்களில் யாரென்று

தெரியவில்லை.'' என்று விக்கி விக்கி அழுதாள். அவளை அருகே போய் இறுகக் கட்டி அணைத்து

''கவலைப்படாதே.. எனக்கு என்ன ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை. மனத்தைத் தேற்றிக்கொள்'' என்று சிநேகா சொன்னாள்.

''அப்பாக்குப் பிள்ளைகளைத் தெரியாதது போலக் கொடுமை இந்த உலகத்தில் இருக்கிறதா? பிள்ளைகளால் இதைத் தாங்க முடியவில்லை சிநேகா. இந்த நோயைக் குணப்படுத்த முடியாது. தள்ளிப் போடலாம் என்று டொக்டர் சொல்கிறார். இப்போதெல்லாம் அவர் நிசப்தமாக ஒரே இடத்தில் கண்களை மூடிக் கொண்டே இருக்கிறார். அவருடைய மூளை நினைவுகள் எல்லாவற்றையும் இழந்து விட்டது. நடக்கத் தெரியாது. பேசத் தெரியாது.''

அடுத்த வார்த்தை வர முடியாது விக்கித்து நின்றாள். வாழ்க்கையில் ஏற்படும் சில கவலைகளுக்கு யாராலும் ஆறுதல் படுத்த முடியாது. அவர்களே ஆசுவாசப்பட வேண்டியிருக்கிறது. இதைத்தான் நரகவேதனை என்பார்களோ!

''லீனா நீ கேள்விப்படவில்லையா? எலன் மாஸ்க் நியூரோ லிங்க் என்று ஒரு சிப் கண்டு பிடித்திருக்கின்றார். அதை மூளைக்குள் பொருத்தினால் இந்த அல்ஸ்கைமர் நோயைக் குணப்படுத்த முடியுமாம்'' என்றாள் சிநேகா.

''ஓம் கேள்விப்பட்டேன். ஆனால், அது பாவனைக்கு இங்கு வர எவ்வளவு காலம் எடுக்குமோ தெரியாது.''

நீண்ட சம்பாஷனையின் பின் இருவரும் விடைபெற்றனர். இந்த நோய் சிறிது சிறிதாக ஒருவரைக் கொல்லும் என்பது நிச்சயம் இல்லை. தேங்காய் எண்ணெய்யும், மஞ்சளில் செய்த மாத்திரையும் நல்ல மருந்தாக இருக்கிறது. இது காலம் தாழ்த்தியே சிநேகாவால் அறிந்து கொள்ள முடிந்தது.

கிளமென்ஸ்க்கு இப்படித்தான் இந்த நோய் ஆரம்பமாகித் தொடர்ந்தது.

பாடசாலை பியானோ ஆசிரியரான கிளமென்ஸ் பாடசாலை முடிந்த பின் தனது சிற்றுந்தைக் கொண்டு ஒரு வீட்டின் முன் நிறுத்தினார். வாகனக் கதவுகளைப் பூட்டிய பின் அந்த வீட்டின் முன் கதவைத் திறந்தார், திறந்தார் திறக்க முடியவில்லை. என்ன இது? என்று

மாறிமாறித் திறப்பைப் பார்த்தார். திடீரென்று நினைவு திரும்பியவராய் இது யாருடைய வீடு? என்னுடைய வீடு இல்லையே! எப்படி இங்கே வந்தேன். எங்கே வந்திருக்கிறேன்! எதுவுமே தெரியாமல் மங்கிப் போயிருந்த தனது வீட்டு விலாசத்தை நினைத்து நினைத்துப் பார்த்தார். அதன்பின் ஞாபகம் வந்தவராய் திரும்பவும் காரை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினார்.

ஏற்கனவே வீடு திரும்பியிருந்த மனைவி லீனா ''என்ன.. இவ்வளவு நேரமும் எங்கே போனீர்கள்?'' என்று கேட்டாள்.

''நான் வீடு மாறிப் போயிற்றன். ஏனென்று தெரியல்ல. எனக்கு எங்கட வீட்டு அட்ரஸ் மறந்திட்டுது லீனா''

''ஓ.. எனக்கும் அப்படித்தான் சில வேளைகளில் மறக்கிறது. வயதாகிறது இல்லையா!'' என்று கிளமென்ஸ் ஐ சமாதானப்படுத்திய லீனா மனத்துக்குள் பெரும் போராட்டத்தைக் கொண்டு வந்தாள். ஏன் இப்படி ஒரு மறதி இவருக்கு வருகிறது. சில நாட்களாக அதிகமாக இருக்கிறதே. ப்ரிட்ஜிக்குள் கண்ணாடியைக் கொண்டு போய் வைக்கிறார். ஏதோ பேச வந்து ஒன்றுமில்லை என்று விடயத்தை மறந்து விடுகின்றார்.

பாடசாலையிலும் சில தவறுகள் நடப்பதாக ஆசிரியர்கள் சொல்வதை முன்னமே அறிந்திருந்த லீனா, மெல்ல கிளமென்ஸ் இடம் வந்து

நாங்கள் ஒருக்கா டொக்டரிட்டப் போய்க் காட்டலாமா? என்று கேட்டாள்.

''சீச்சி.. அது ஒன்றுமில்ல. எனக்கு ஒன்றுமில்ல. நாளைஞ்சு நாளா நித்திரை இல்ல. அதுதான். நல்லா நித்திரை கொண்டால் சரியாகி விடும்'' என்றார்.

''தெரியுமப்பா.. எதுக்கும் ஒருக்கா போய்த்தான் பார்ப்பமே'' என்றாள்.

சம்மதித்த கிளமென்ஸ் மருத்துவரிடம் சென்றார். பல பரிசோதனைகள் மூலம் நிலைமையை அறிந்த டொக்டர்.

''கிளமென்ஸ்க்கு வந்திருப்பது டிமென்சியா என்று சொல்லப்படும் ஞாபகமறதி நோய். நான் சில மருந்துகள் எழுதித் தருகின்றேன். சில பயிற்சிகள் செய்வதற்கான ஆளை நியமிக்க வேண்டும். நான் தருகின்ற துண்டைக் கொடுத்துக் குறிக்கப்பட்ட இடத்திற்குக் கொண்டு கொடுங்கள்.

அவர்கள் இதற்குரிய ஆளை வீட்டிற்கு அனுப்புவார்கள். சிறிது நாட்கள் பார்ப்போம். தேவையென்றால், ஹொஸ்பிட்டலில நிற்க வேண்டி வரும். இப்போதைக்குத் தேவையில்லை'' என்று சொன்னார்.

நோய் பற்றியும் நோயின் பாதிப்புப் பற்றியும் அறிந்திராத லீனா. கிளமென்ஸை வீட்டில் விட்டுவிட்டு மருத்துவரிடம் தன்னுடன் பேசுவதற்கான ஒரு நேரத்தைத் தொலைப்பேசியில் கேட்டுப் பெற்றுவிட்டு மருத்துவரைச் சந்திக்க வந்தாள்.

''டிமென்ஸியா என்றால் என்ன டாக்டர்? அந்த நோய் வருவதற்குக் காரணம் எதுவாக இருக்கும். பிளீஸ் இந்த நோய் பற்றிய விபரத்தைச் சொல்வீர்களா டாக்டர்?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''மூளையின் வழமையான செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுவதைத்தான் டிமென்ஷியா என்பார்கள். ஆழ்மனத்தில் ஒரு விடயம் ஓடிக்கொண்டிருக்கும் 24 மணி நேரமும் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார். மூளையின் செல்கள் சிறிது சிறிதாக இறக்க ஆரம்பிக்கும். இதனால் மூளை தன்னுடைய வேலை, செயல்பாட்டை இழக்கிறது. மனத்திலே குழப்பம், ஞாபக மறதி, பேச முடியாத நிலை, மனநிலையிலே மாற்றங்கள், ஆளுமையிலே மாற்றங்கள் போன்றன தோன்றும்.

அல்ஸ்கைமர், டிமென்சியா நோயாளிகள் எல்லோருடைய மூளையும் செல்களை இழக்க ஆரம்பிக்கின்றது. அமெக்டாலா என்னும் ஞாபகங்கள் பதியப்படும் இடம் முதலில் பாதிக்கப்படும். இதற்கு ஒரு காரணம் மூளையினுடைய இரசாயனப் பற்றாக்குறையே. அசிரைல் கோலின் (Acetyl choline) என்னும் மூளையில் சுரக்கப்படுகின்ற இரசாயனப்பொருளானது ஒரு மூளை செல்லிலிருந்து இன்னுமொரு மூளை செல்லுக்குச் செய்திகளின் பரிமாற்றம் செய்வதற்கு உதவி புரிகின்றது. செல்களின் இழப்பினால் இதன் அளவு குறையும் போது செய்திப் பரிமாற்ற அளவு குறைகின்றது. இதனால் செய்கைகள் மொழி போன்றவற்றை பரிமாற்ற முடியாது போகின்றது. இதனால் ஞாபக சக்தி குறைகின்றது.

இன்னுமொரு காரணம் மூளையில் கெட்ட புரதங்கள் அதிகரித்து மூளையின் செல்களை உயிரிழக்க வைக்கின்றது. இந்த நோயின் தாக்கத்தைத் தற்போது நிறுத்த முடியாதுள்ளது. குறுகிய கால நினைவுகள்

இழப்பதுதான் ஆரம்ப அறிகுறியாக இருக்கிறது. முதல் ஞாபக மறதி பின் போகப் போக மற்றைய மூளைப் பகுதிகள் பாதிக்கப்படும். கதைப்பது, மற்றைய வேலைகள் செய்வது போன்றவை பாதிக்கப்படும். உடலின் இயக்கம் அனைத்திற்கும் மூளையே ஆணை பிறப்பிப்பது என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். ஆனால், இந்த மூளைச் செல்களே சாகும் போது மூளை தன்னையும் பாதுகாக்க முடியாது, தனது உடலையும் பாதுகாக்க முடியாது போகின்றது.

பொதுவாக ஒரு மனிதன் 60 வயதைத் தாண்டும் போது 5 வீதமும் ஒவ்வொரு 5 வருடங்களும் இரண்டு மடங்காகவும் தாக்கத்தை அனுபவிக்கின்றான். 80 வயதாகும் போது 20-25 வீதம் அதிகரிக்கும். வயது குறைந்தவர்களுக்கும் இந்த நோய்ப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஆரம்பத்தில் குறுகியகால நினைவு இழப்பு, குழப்பங்கள் ஏற்படும். சில மணிநேரங்கள், நிமிடங்களுக்கு முன் நடந்ததை மறப்பார்கள். ஆனால் பழைய நினைவுகள் நன்றாக இருக்கும்.”

இவ்வாறு நீண்ட விளக்கத்தைக் கொடுத்த டாக்டர்

“பயப்பட வேண்டாம். அப்படி ஒன்றும் அவ்வளவு விரைவாகப் பாதிப்பு ஏற்படாது” என்று கூறினார்.

மனத்திலே ஏக்கம். மாயமாய் வந்திணைந்த கணவனின் நோயின் தாக்கம். வாசிப்பை நேசித்து, இசையைச் சுவாசித்து, நாளும் நல்ல காற்றுச் சுவாசிக்க நடை பயின்று, நன்மக்களைப் பெற்று வழமாக வாழ்ந்த இவருக்கா இப்படி நோய் வந்திருக்கிறது! உள்ளக் கனத்தைச் சுமக்க முடியாது தெருவோரம் இருந்த இருக்கையில் அமர்ந்தாள் லீனா. சுற்றித் திரிகின்ற மனிதர்கள் எல்லோரும் தமக்குள் எத்தனையோ நோய்களைத் தாங்கிக் கொண்டுதான் திரிகின்றார்கள் என்று உணர்ந்தாள்.

தனக்குள்ளே கணக்குப் போட்டாள். தொடரும் நாட்களில் இவரைக் கண்காணிக்கும் பாரிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. உண்மையைப் பிள்ளைகளிடம் கூற வேண்டும். அமைதியாக இவரிடம் நோய் பற்றிச் சிறிது அறியத் தரவே வேண்டும். பொதுவாக வாசிப்பில் நுழைந்திருக்கும் இவருக்கு நானொன்றும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனாலும், அவர் மனத்தை மகிழ்ச்சியுடன் வைத்திருக்க வேண்டியது நமது கடமையல்லவா! சிந்தித்துக் கவலைப்பட்டு ஒன்றும் ஆவதில்லை. இனிவரும் காலங்களில் எப்படித் திட்டமிட வேண்டும் என்பதே அவசியம் என்ற துணிவுடன் எழுந்து நடந்தாள், லீனா.

வீட்டிற்குள் நுழைந்த லீனாவைக் காத்திருந்த கிளமென்ஸ் தொலைக்காட்சியில் மூளையைப் புதைத்திருந்தார். செய்தியில் நடந்த விடயங்களை லீனாவிடம் எடுத்துரைப்பது இவரது வழக்கமாக இருந்தது.

‘‘ஆ.. லீனா எங்கே போயிருந்தாய்?’’

‘‘கடைக்குச் சாமான்கள் வாங்குவதற்காகப் போயிருந்தேன். இடையில் மற்றினாவைச் சந்தித்தேன். நேரம் போவது தெரியாது அவளுடன் பேசி யிருந்துவிட்டதால் கடை பூட்டும் நேரத்தைப் பார்க்கவில்லை. என்ன நியூஸ் பார்க்கிறீங்களா? என்ன நடந்தது?

‘‘அதுவா உன்னட்டச் சொல்ல வேணுமென்று இருந்தனான். அன்றைக்கு அமெரிக்காவில் பொம்ப் வெடித்ததாகச் சொன்னார்களே. அதுட தாக்கமாக ஏதோ. இப்போத்தானே பார்த்தேன். அதுக்குள்ள மறந்திட்டு. உன்னட்ட சொல்ல வேணுமென்று நினைச்சேனே. ஏதோ..’’

‘‘சரி சரி விடுங்க திரும்பவும் வீடியோ ரெக்ஸ் இல் பார்ப்போம். நான் சாப்பாடு செய்றன்’’ என்று சொல்லிய லீனா சமையலறையினுள் சென்றாள். மனமோ படபடவென்று அடித்தது. டொக்டர் சொல்லிய

‘‘ரிவி பார்த்துக் கொண்டிருந்து விட்டு அடுத்த நிமிடம் என்ன நிகழ்ச்சி பார்த்தார்கள் என்பதையே மறந்து போய் விடுவார்கள்.’’

இந்த வார்த்தைகள் மனத்தைக் குடைந்தெடுத்தன. இப்படிக் கொஞ்ச நாட்களாக கிளமென்ஸ்க்கு இருப்பதை அன்று நினைத்துப் பார்த்தாள் லீனா.

இரவு உணவு தயாரானது. வழமையாக இரவுணவு உண்பதற்குப் பிள்ளைகள் அனைவரும் வந்து ஒன்றாக அமர்ந்து விடுவார்கள். 6 பிள்ளைகளைப் பெற்றெடுத்த கிளமென்ஸ், லீனாவின் 2 பிள்ளைகளே தற்போது இவர்களுடன் வாழ்கின்றார்கள். மற்றையவர்கள் பட்டப்படிப்புக் காரணமாக வெவ்வேறு நகரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அனைவரும் சாப்பாட்டு மேசையில் உணவருந்த அமர்ந்தனர். சுவாரசியமாகச் சிரித்துப் பேசி ஒரு மணித்தியாலம் உணவு மேசை கலகலப்பாகியது. ஆனால், கிளமென்ஸ் இடம் பழைய கலகலப்புக் குறைந்திருப்பதைப் பிள்ளைகள் அவதானித்தார்கள்.

‘‘என்ன பப்பா இன்றைக்கு போறிங்காக (Boring) இருக்கிறீங்கள். சாப்பாடு சரியில்லையா? பப்பா. சொல்லுங்க பப்பா..’’ என்று கேட்ட

பிள்ளைகளிடம். மேசையில் ஓங்கி அடித்தார், கிளமென்ஸ். ‘‘என்னை அமைதியாக இருக்க விடுங்கள்’’ என்று கத்தினார்.

என்றுமே இப்படி அப்பா நடக்காது, இன்று இப்படி நடந்த விதம் பிள்ளைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. சாப்பாட்டை அப்படியே விட்டபடி அழுது கொண்டு போனாள் கடைக்குட்டி ரோசி, அவள் பின்னால் மகன் நிக்லஸ் எதுவுமே பேசாமல் கோபத்துடன் சென்றான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த லீனா, மெதுவாக கிளமென்ஸ் பக்கத்தில் வந்து, அவர் தோள்களை அணைத்தாள். சிறு குழந்தை போல் அவள் நெஞ்சுக்குள் முகம் புதைத்தார் கிளமென்ஸ். தேம்பித் தேம்பி அழுதார்.

‘‘ஒன்றுமில்லப்பா... ஒன்றுமில்ல... பிள்ளைகளுக்கு எம்முடைய ரென்ஸன் விளங்காது. அவங்க எங்களோட இருக்கிற நேரம் கொஞ்சம். அது கிடைக்காமல் போனால் கவலைப் படுவார்கள்தானே. விடுங்க அவங்க எங்கட பிள்ளைகள் கொஞ்ச நேரத்தில எல்லாம் மறந்து பப்பா... ... என்டு ஓடி வருவாங்க. ரேக் இற். ஈசி’’

‘‘இல்ல லீனா! எனக்கு எப்பிடி அப்படி ஒரு கோபம் வந்தது? என்னால கொன்றோல் பண்ண முடியல்ல.’’

‘‘இற்ஸ் ஓகே.. பிளீஸ் அதை விடுங்க. வாங்க நாங்க கொஞ்ச நேரம் ஏதாவது விளையாடுவோம்’’ என்றபடி மூளைக்கு வேலை கொடுக்கும் ஒரு விளையாட்டை எடுத்து இருவரும் விளையாடினார்கள். காலத்தின் போக்கில் கிளமென்ஸ் வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. முதலில் வேலையிலிருந்து நிரந்தர ஓய்வைப் பெற்றுக் கொண்டார். 62 வயதான அவரைப் பார்க்கும் போது இப்போதெல்லாம் 82 வயதானவர் போல் காட்சியளிக்கின்றார். சுத்தக் காற்றைச் சுவாசிக்கக் காட்டுப் பகுதியில் நடைப்பயிற்சி, சுகாதார உணவு, பிள்ளைகளுடன் பொழுது போக்கு, பியானோ இசையை மனமுருக வாசிக்கும் கலை எனத் தன்னுடைய வாழ்க்கையை இன்பமாகக் கழித்த கிளமென்ஸ் வாழ்க்கையைக் காலம் அப்படியே திருப்பிப் போட்டது.

லீனா கூட வேலை நேரத்தைக் குறைத்து இரண்டு நாட்களே வேலைக்குச் சென்று வந்தாள். அவ்வேளையில் வீட்டுத் திறப்பைத் தன்னுடனேயே கொண்டு போய்விடுவாள். அவசியமில்லாமல் வீட்டைவிட்டு வெளியில் போய்விட்டால் இடம் தெரியாமல் அலைந்துவிடுவார் என்ற பயம் அவளுக்குத் தற்போது அதிகமாகவே இருந்தது.

ஒருநாள் இரவு நித்திரை இல்லாமல் திரும்பித் திரும்பிப் புரண்டு கொண்டிருந்தார் கிளமென்ஸ். காலையில் எழுந்த லீனா. காலை உணவு தயாரித்துப் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பியபின் படுக்கை அறை யினுள் வந்தாள். அங்கே கிளமென்ஸ் ஏதோ தேடிக்கொண்டிருந்தார்.

"என்ன தேடுகின்றீர்கள்?" என்று அன்புடன் கேட்ட லீனாவிடம்

"என்னுடைய தலையணையை இங்கேதான் வைத்தேன். யாரோ களவாடிப் போய்விட்டார்கள். நிக்லஸ்தான் எடுத்திருப்பான். இல்லாட்டால். யாரோ களவெடுத்து விட்டார்கள். எனக்கு என்ர தலையணை வேணும்" என்று அடம்பிடித்தபடி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். கட்டிலிலேயே கிடந்த தலையணையைக் காணவில்லை என்று தேடிக்கொண்டிருந்தார். தன்னுடைய தலையணை இதுதான் என்று மறந்த நிலையில் அதற்கான காரணத்தைப் பிறரிடம் பழி போடுகின்ற இவருடைய நிலையைக் கண்டு லீனா

"இஞ்ச பாருங்க.. இந்தா இருக்கிறது உங்களுடைய தலையணை. இதுதான் உங்களுடையது. யாருமே எடுக்கவில்லை" என்றபடி கையில் தலையணையைக் கொடுத்தாள். "வாங்கள் குளித்துவிட்டுச் சாப்பிடுவம்." இப்போதெல்லாம் கிளமென்ஸ் தனியே குளிக்கக் கூட முடிவதில்லை. மறதி என்பதைத் தாண்டி தன்னுடைய வேலைகளைச் செய்வதற்குக் கூட அவரால் முடிவதில்லை. யாராவது ஞாபகப்படுத்தினாலன்றி அவரால் குளிப்பதற்குச் சாப்பிடுவதற்குக் கூடத் தெரியாமல் போய்விடுகின்றது.

குளித்து உடை மாற்றி உணவை உண்டபின் அவருக்காகக் கொடுக்கப்பட்ட குளிசையைக் கொடுத்த லீனா அவரின் பதற்றம் நீங்கியபின்

"கிளமென்ஸ்! நான் இன்றைக்கு வேலைக்குப் போக வேண்டும். உங்களுக்கு ஏதாவது ஹெல்ப் வேணுமென்றால், நான் திரும்ப வரும்வரை ஒரு லேடி இங்கு வந்து நிற்பா. அவ உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வா" என்று லீனா சொல்லி முடிப்பதற்கு முன்னமே

"இல்ல... இல்ல... இங்க யாரும் வரவேண்டாம். என்னுடைய வேலையை நான் செய்வேன். நான் ஒன்றும் வருத்தக்காரன் இல்ல. யாரும் வரத் தேவையில்ல."

இதைத் திரும்பத் திரும்ப 10 தடவை சொல்லியிருப்பார். இது நோயின் தாக்கம் என்பதை அறிந்து கொண்ட லீனா. பேசுவதைத் திரும்பத் திரும்பப் பேசுவது தற்போது அவருடைய பழக்கமாகவே இருந்தது. இதைச் சொன்னேன் என்பதை மறந்தே விடுகின்றார். திரும்பவும் ஒப்புவிக்கின்றார்.

"இல்ல கிளமென்ஸ்... இங்க வருபவர் என்னுடைய நண்பிதான். அவரும் ரீச்சராக இருந்தவர்தான். உங்களுக்கு உதவி செய்வதற்காக மட்டுமல்ல. நானும் பிள்ளைகளும் இல்லாத போது நீங்கள் அவருடன் பேசிக் கொண்டிருக்கலாம். தனியே இருக்காமல் இருப்பது போல் இருக்கும் அல்லவா? நான் வந்தபின் போய்விடுவார்" என்று ஆறுதல் படுத்தினாள். இந்த வேலைக்காக நியமிக்கப்பட்ட பெண்தான் சிநேகா.

சிநேகா அங்கு வந்தாள். இருவரிடமும் கைகுலுக்கி வணக்கத்தைத் தெரிவித்தவளை லீனா, கிளமென்ஸ் இடம் அறிமுகப்படுத்தினார். லீனா கண்களால் சிநேகாவிடம் அனுமதி பெற்று விடைபெற்றாள். அருகே சென்ற சிநேகா

"எப்படி இருக்கின்றீர்கள்?" என்று கேட்டாள்.

"நல்லம் என்று பதில் சொன்னார். மீண்டும் பல கேள்விகளைக் கேட்டபோது எந்தவிதப் பதிலையும் கிளமென்ஸ் சொல்லவில்லை. படுக்கப் போவதாகச் சொல்லி வரவேற்பறை சோபாவில் அமர்ந்தார். போர்த்துவதற்கான போர்வையைப் பல தடவை எடுப்பதும் விழுத்துவதுமாக இருந்தவரிடம்.

"நான் உதவி செய்யலாமா? என்று சிநேகா கேட்டபோது

"ஆம்" என்றார். அவரைப் படுக்கப் போர்த்திவிட்டு தொலைக்காட்சியைப் போட்டுவிட்டாள்.

"சரி நீ போகலாம்" என்று கிளமென்ஸ் கட்டளை பிறப்பித்தார்.

ஓகே என்று சிரித்தவளாய் மறு அறையினுள் போய் அமர்ந்த சிநேகா அடிக்கடி அவரின் நிலையைப் பார்த்தபடி இருந்தாள். இவ்வாறாக சிநேகாவின் கவனிப்பில் நாட்கள் கரைந்தபோது கிளமென்ஸால், நீண்ட நாட்கள் வீட்டில் இருக்க முடியாது என்னும் விடயத்தை சிநேகாவால் உணர முடிந்தது.

ஒருநாள் லீனா போனபின் உணவருந்த மேசையில் இருந்தவர் பாணில் பட்டர் பூசும் கத்தியை ஜேமுக்குள் விட்டார். கத்தியை ஆட்டி ஆட்டி தேநீருக்குள் சீனி கலக்குவது போல் கலக்கினார். திரும்ப எடுத்த கத்தியைப் பாணில் தட்டித் தட்டிப் பூசினார். பார்த்துக் கொண்டிருந்த சிநேகா, அவரின் கையைப் பிடித்து உதவி செய்ய நினைத்தாள். ஆனால், சிநேகாவின் கையைத் தட்டிவிட்ட கிளமென்ஸ் எதுவுமே சொல்லாமல் மேலும் தனது வேலையைத் தொடர்ந்தார். 2 மணித்தியாலங்களாக இரண்டு துண்டுகள் பாண் சாப்பிடும் கிளமென்ஸை நினைக்க சிநேகாவுக்குக் கவலையாக இருந்தது. ஏதோ ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தார். அவர் எதைச் சொல்லுகின்றார் என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. ஏன் அவராலேயே புரிந்து கொள்ள முடியவில்லை,

உணவருந்தியபின் எழுந்தவர் வீட்டின் மேல்மாடி, கீழ்ப்பகுதி என்று எதையோ தேடுவது போல் அலைந்து கொண்டிருந்தார். தன்னுடைய அறையினுள் சென்று சாளரத்தைத் திறப்பதும் மூடுவதுமாக முயற்சி செய்து கொண்டிருந்தார். மூடவேண்டுமா? திறக்க வேண்டுமா? என்பதை அவராலேயே முடிவு செய்ய முடியவில்லை. சமையலறை அடுப்பைப் போடுவதும், அதை அப்படியே விட்டுவிட்டு மேலே போவதுமாக அவரால் மனம் ஒருநிலைப்பட முடியவில்லை. ஒருவாறு அமைதிப்படுத்தும் குளிசையை சிநேகா கொடுத்ததும் மேல்மாடியில் மகனுடைய அறையைத் தன்னுடைய அறை என்று எண்ணியவராய்க் கட்டிலிலே படுத்துவிட்டார். படுத்தவுடன் குளிசையின் வீரியத்தில் உடனே தூங்கிப்போனார்.

மெதுவாகப் போர்வையை எடுத்துப் போர்த்திய சிநேகா அமைதியடைந்தவளாய்த் திரும்பிய போது மகள் ரோசி அவ் அறை யினுள் சென்றாள். வெளியே வந்த சிநேகா திரும்பி ரோசியைப் பார்த்தாள். ரோசி தந்தையினுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். நித்திரையின் போது மட்டும் தந்தையின் ஸ்பரிசத்தைப் பெறக்கூடிய நிலையில் இருக்கும் பிள்ளைகளை நினைத்து மனம் மிகக் கலங்கிய நிலையில் வீடு திரும்பிய லீனாவிடம் அனைத்தையும் கூறி விட்டு வீடு திரும்பினாள்.

சிநேகா இறுதியாக கிளமென்ஸைப் பார்த்த அன்றைய நாள் இரவு முழுவதும் தூங்கவில்லை. இப்போதுதான் தூங்குகின்றார். இப்போது எழுந்திருக்க மாட்டார் என்று சொல்லிச் சென்ற லீனாவை அனுப்பிவிட்டு

நேரமாகியும் எழுந்திருக்காத கிளமென்ஸைப் பார்ப்பதற்காக அறைக்குள் சிநேகா சென்றாள். அங்கு குளியலறை என்ற எண்ணத்துடன் மலம் கழிப்பதற்காக அமர்ந்தவரை ஓடிச்சென்று அழைத்துக் கொண்டுபோய் குளியலறையினுள் விட்டாள். நீண்டநேரமாகக் கதவு திறக்கப்படாத காரணத்தினால் கதவைத் திறந்து பார்த்த போது காற்சட்டை என்று நினைத்துத் துவாயை எடுத்துப் போடுவதற்கு நீண்ட நேரமாக முயற்சி செய்து கொண்டிருப்பது தெரிந்தது.

''இங்க பாருங்க கிளமென்ஸ்! இது துவாய் இங்கே இருக்கிறது உங்கள் காற்சட்டை'' என்று சிநேகா கொடுத்த போது அவளுடைய கைகளை கிளமென்ஸ் தட்டிவிட்டார். அருகே வைத்துவிட்டு வந்த சிநேகா, திரும்பவும் சென்று பார்த்தபோது அக்காற்சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார். அவ்வேளை திரும்பி வந்த லீனாவிடம் கிளமென்ஸை ஒப்படைத்துவிட்டு வீடு திரும்பினாள் சிநேகா.

அதன் பின் கிளமென்ஸ் இடம் செல்வதற்குள் இத்தனையும் நடந்துவிட்டது. அவரும் வயோதிபர் விடுதியில் மருத்துவர்களின் பராமரிப்பில் இருக்கிறார்.

### நூலாக்கம் ஆரம்பம்

சிநேகா இப்போது பரமசிவத்தின் வரலாறு எழுதுவதற்காக மேசை யிலே அமர்ந்தாள். விரல்களைக் கணினித் தட்டச்சில் அழுத்தினாள். வார்த்தைகளுக்கு வரிவடிவம் கொடுக்கப்பட்டது. முழுமூச்சாக ஈடுபட்டாள். தன் தட்டச்சுப் பொறியிலே தட்டினாள்.

''உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்''

என்று வள்ளுவர் உரைத்தமைக்கு அமைய முழுக்கவனமும் செலுத்திச் சோர்வின்றி செயற்பட்ட முடியுமானால், நினைத்ததை நினைத்தவாறே நடத்தலாம். அவளுக்கு ஆள் பலம் உண்டு. நூலாக்கப் பணபலத்தைப் பிரபஞ்சத்திடம் ஒப்படைத்தாள். ஒரு பிரதியை உடனடியாக முடிக்க வேண்டும். சுயமாக நூலாக்க வேண்டும். பின் மற்றவற்றைப் பற்றிச் சிந்திக்கலாம். அதற்கிடையில் வாரத்துக்கு இரண்டு காணொளிகள் யூடியூப்பில் ஏற்ற வேண்டும். தமிழ் வான் அவை நிகழ்ச்சிக்குரிய ஆயத்தம் செய்ய வேண்டும்.

ஓடிச் செல்லும் கடிகாரமே ஒரு மணிநேரம் தாமதிக்க மாட்டாயா?
உன் கம்பிகளின் விசைக்குக் கட்டுப்பாடு விதிக்க மாட்டாயா?
வரலாறு தோற்கவிடாது உன் பங்களிப்புத் தர மாட்டாயா?
செய்திகள் நிரம்பிய இதயத்தை இறக்கி வைக்க நினைக்கிறேன்.
இலக்கு அடைவதற்கு துணை நாடி நிற்கிறேன்

என்று ஒரு விண்ணப்பத்தைக் கடிகாரத்துக்குச் சமர்ப்பித்தாள்.

தந்தையுடன் அடிக்கடி சென்று வரும் பொறுப்பு ஹெலிக்குக் கொடுக்கப்பட்டது. ஆங்கிலம் அவனுக்கு பரீட்சயம் என்ற காரணத்தால் பரமசிவத்துடனேயே பணிபுரிவது அவனுக்கு இலகுவாகவே பட்டது. பரமசிவத்துக்கும் ஹெலியோடு உரையாடுவது இலகுவாகப்பட்டது. முதல்நாள் ஹெலியைக் கண்டவுடன் பரமசிவம் ஸ்தம்பித்துப் போனார். என்னைத் தூக்க அவன் வரவேண்டும். அவனாலேயே என்னைக் கவனிக்க முடியும் என்றவருக்கு கந்தவன் போன்றே உடல்வாகும் உறுதியும் உள்ள ஹெலியைக் கண்டவுடன் கந்தவன் வந்துவிட்டான் என்றே நினைத்தார். ஒருவரைப் போல் 7 பேர் இருப்பார்கள் என்று கேள்விப்பட்டுள்ளார். தன் கண்களுக்கு அந்தக் காட்சி தெரியும் போது மகிழ்ச்சியாக இருந்தது.

அந்த கந்தவனம்தான் இவன் ரூபத்தில் வந்துள்ளான் என்று கற்பனை பண்ணிக் கொண்டார். மிக்க அன்புடன் பழகக் கூடிய ஹெலியைத் தம்பி என்றே பரமசிவம் அழைத்தார். இரவு நேரம் மட்டும் அவனுக்கு அங்கு தங்க அனுமதியில்லை. மற்றைய பொழுதுகள் பரமசிவத்துடனேயே தங்கினான்.

சிநேகா ஒருநாளுக்கு ஒரு தடவை தந்தையைப் பார்த்து வந்தாள். நினைத்தது ஒன்றை முடித்துவிட்டாள். அடுத்த கடமை அவளுடைய இதயம் முழுவதும் நிறைந்திருந்தது தந்தையின் கதை.

கையில் நிறைந்து கிடக்கும் பரமசிவத்தின் மூளைப் பதிவுகள் அடங்கிய காகிதக் கட்டுக்கள் அத்தனையும் சிநேகாவின் மூளைக்குள் அமர்ந்து கொள்ளுகின்றன. அனைத்தையும் இரசிக்கின்றாள், ருசிக்கின்றாள், உள்ளத்துக்குள் மகிழுகின்றாள். விரல்களினூடாகப் பரமசிவத்தின் பதிவுகள் தட்டச்சில் மிதக்கின்றன. அதனூடு கணினித்திரை சொற்களைக் கோர்த்து எடுக்கின்றது.

# அத்தியாயம் 16

# இன்னும் வாழ்கின்றேன்

பரமசிவத்தின் உடல்நிலை மருந்துக்குப் பணிந்து போகவில்லை. ஆரம்ப நிலை என்றால், கண்டுபிடித்த புதிய மருந்து விரைவாகச் சுகத்தைத் தரும். ஆனால், பரமசிவமோ ஏற்கனவே மருத்துவர்களால் கைவிடப்பட்டவர் அல்லவா. உடல் முழுவதும் பரவிய புற்றுநோய்ச் செல்கள் பரமசிவத்தின் உடலை நன்றாகவே தின்று தீர்த்தது. மூச்சுக்குழாயை இறுக்கிப் படர்வதனால், பரமசிவத்தால் மூச்சுவிடுவது கடினமாகப்பட்டது. கட்டிலைப் பிடித்துக் கொண்டு மேல் மூச்சுக் கீழ் மூச்சு என்று நெஞ்சுக் கூட்டைப் போராடச் செய்தார். நடப்பது கூடக் கடினமான செயற்பாடாகப் போக ஹெலியின் உதவி அவருக்கு அவசியமாகியது. அரவிந்தன் போகின்ற போது தன்னால் முடிந்த உதவிகளைச் செய்தான்.

சிநேகா பரமசிவம் அறைக்குள் நுழைந்தாள். மகளைக் கண்டவுடன் எங்கிருந்தோ தைரியம் பரமசிவத்துக்கு ஓடிவந்து ஒட்டிக்கொண்டது. தந்தையின் தலையைத் தடவினாள். இவ்வளவு விரைவாக நிலைமை மோசமாகும் என்று அவள் நினைத்துப் பார்க்கவில்லை. அவளும் இவ்வளவு விரைவாகப் பரமசிவம் வாசிப்பதற்குப் புத்தகத்தை முடிப்பாள் என்று நினைத்துப் பார்க்கவில்லை.


பரமசிவம் கைகளில் புத்தகத்தைக் கொடுத்தாள். ஆனந்தத்தில் அவரை மீறி முன்னேறியது அவருடைய கைகள். ஆர்வம் மீறிய செயலாக இழுத்துப் புத்தகத்தைப் பறித்தெடுத்தார். படபடவென்று பக்கங்களைப் புரட்டினார். அந்நூலை எழுதுவது பரமசிவமாகவே எழுத்தோட்டத்தைச் சிநேகா கொண்டு வந்திருந்தாள்.

பரமசிவம் முதல் பக்கத்தைத் திறந்தார்.

பார்வதி சிரித்துக் கொண்டு அவரைப் பார்த்தாள். AI மூலமாகப் பார்வதி திருவுருவப் படத்தைச் சிநேகா அழகாக வடிவமைத்திருந்தாள். அப்படியே அந்தப் படத்தைப் பார்த்தபடி இருந்தார். கண்கள் பனித்தன. சிநேகாவை ஒருமுறை பார்த்தார். அப்பார்வையிலே நன்றி சொல்லும் சமிக்ஞை இருந்தது.

கண்களிலிருந்து வடிந்த உள்ளக் குமுறல்களைக் கைகளால் துடைத்தபடி பக்கங்களைத் திருப்பினார். ‘‘மகள் நீ வாசிக்கிறாயா? எனக்கு எழுத்துக்கள் மங்கலாக இருக்கின்றன. சொற்களுக்கு இடையிலே இடைவெளி தெரியவில்லை. சுவாரஸ்யம் தெரியவில்லை. நீ வாசித்தால் கண்ணை மூடிக் கேட்டுக் கொண்டே இருப்பேன்’’ என்றார்.

‘‘சரி ஐயா’’ என்று அவரைப் படுக்க வைத்து சிநேகா வாசிக்கத் தொடங்கினாள்.


இன்னும்
வாழ்கின்றேன்
பரமசிவம்
தமிழ் வான் அவை வெளியீடு



## என் இதயத்து மலருக்குச் சமர்ப்பணம்

என் உணர்வின் மகத்தான பொக்கிசமே!
விடியலில்லாப் பொழுதை எனக்காய் விதைத்துவிட்டு
வானுலகின் வற்றாப் பேரொளியோடு கலந்தாயா – உன்னைத்
தொலைத்தநாள் என் மகிழ்வைத் தொலைத்தநாள்
உன்னோடு வாழ்ந்தநாள் மண்ணோடு மகிழ்ந்தநாள் – இன்று
அரையுயிராய் வாழ்கிறேனென்று அறிய வைத்தாயே
இன்னுமென் இதயத்திலெதைப் புதைக்கப் போகின்றாய்
கையிருந்த திரவியமேயுனைத் தட்டிப்பறித்தான் ஆண்டவன்
பிறந்தேன் வாழ்ந்தேன் மறைந்தேன் என்றில்லாது
கோடி கொடுத்தும் கிடைக்காத பொக்கிசத்துடன்
வாழ்ந்த வாழ்வின் அர்த்தமான பொழுதுகளை
வடிக்கவே வரியெடுத்தேனவள் வரம் தரவே

## முன்னுரை

சுவைகளும் சுகங்களும் சுமைகளும் நிறைந்த வாழ்க்கையிலே என் கடந்த காலங்கள் கணினித் திரையிலே காட்சிப்படுத்தப்படுகின்ற போது கற்பனை கடந்த நிகழ்வாக அதைக் காணுகிறேன். விஞ்ஞானம் எதைத் தந்தது என்றால், இன்று வரை அது ஆற்றிய சேவைகள் அளப்பரியன. என்னை, என் இளம் பருவத்துத் துடிப்புக்களை, என் ஆற்றல்களை, என் சேவைகளை, என் துயரங்களை, வேதனையை அள்ளிக் கொண்டு வந்து தரப்படுகின்ற போது அசந்து விடுகிறேன். ஒவ்வொரு மனிதனும் சரித்திரம். அவன் ஆற்றிய சேவைகள் அப்படியே அவன் இறக்கும் போது, உடல் சாம்பலாகும் போது, முற்றாக நினைவுகளும் நிஜங்களும் மண்ணுக்குள்ளே மறைந்து போகின்றன.

என் மகள் நினைத்த போது இது எப்படிச் சாத்தியம் என்று நினைத்தேன். ஆனால், நாளை பேசப்படும் ஒரு நிகழ்வாக இது இருப்பதற்கு முதல் காலடி எடுத்து, முயற்சியில் வெற்றி கண்ட நிருபாவின் கரங்களுக்கு என் நன்றி மலர்களைக் காணிக்கையாகத் தருகின்றேன். என்னைத் தொடரும் என் மகள் சிந்தனைக்குள் பாய்ந்த எண்ணக் கருக்களை அவள் தாயின் வழிநடத்தல் என்றே உணருகின்றேன்.

இந்த நூல் உங்களுடைய கைகளில் ஏன் தவழ வேண்டும். நான் ஏன் எழுத வேண்டும்? என்றால் மீண்டும் பல கேள்விகள் எனக்குள்ளே எழுகின்றன. நான் ஏன் தமிழனாகப் பிறந்தேன்? என் மண்ணை ஏன் நேசித்தேன்? என் மக்களுக்காக என் பொழுதுகளை ஏன் அர்ப்பணித்தேன்?

என் வீட்டு வாசலுக்கு வரும் மக்களைப் பற்றிய சிந்தனை எனக்கு ஏன் வரவேண்டும்? மற்றவர்களுக்காக ஏன் நான் துடித்தேன்? நான் ஏன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறினேன்? இவையெல்லாம் கனவாகிப் போன காலங்கள் என் நினைவுகளில் நிழலாடுகின்றன. அதை எதிர்காலமும் நோக்கும் என்ற எண்ணத்தை என்னுள் ஏற்றிய மகளுக்கு என்னுடைய ஆசிகள் இருக்கின்றன.

இந்நூலிலுள்ள அத்தனையும் என் அனுபவப் பாய்ச்சல். உண்மையைத் தவிர வேறொன்றில்லை என்பதை உறுதியாகச் சொல்கிறேன். என்னையும் தமிழையும் நேசித்த காரணத்தால் என் மகள் இந்த முயற்சியைத் தொடங்கினாள். அது சிறப்பாகவே நடந்திருக்கின்றது. நான் யார் என்பதை இந்த உலகம் அறிந்து கொள்ளும்.

நன்றி
பரமசிவம்

கிழக்கு மாகாணத்தில் மீன் பாடும் தேன் நாடு என்று போற்றப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருக்கின்றது என்னை வளர்த்தெடுத்த மண். மட்டக்களப்பு நகரிலிருந்து 15 கிமீ வடமேற்கே அமைந்திருந்ததே ஏறாவூர். வடக்கே வங்கக் கடலையும், கிழக்கே ஆறுமுகத்தான் குடியிருப்பு எனும் தமிழ்க் கிராமத்தையும், மேற்கே செங்கலடிப் பிரதேசத்தையும், தெற்கே மட்டக்களப்புக் கடல் ஏரியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஏறாவூரின் கிழக்கு மேற்காக ஊடறுத்துச் செல்லும் புகையிரதப் பிரதான வீதிகள் கிழக்கிலங்கையை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கின்றன.

இங்கு தமிழர்கள், இஸ்லாமியர்கள், பறங்கியர்கள் என்று 3 இனத்தவர்கள் வாழுகின்றார்கள்.

இங்குதான் என் தாய் யசோதையின் கருவறையிலிருந்து 27.07.1933 ஆம் ஆண்டு தரைக்கு வந்தேன். எல்லோரையும் போலச் சகோதரர்களுடன் நானும் வளர்ந்தேன். ஆனால், இலட்சியங்களுடன் வாழ இயற்கை என்னைத் தயார்ப்படுத்தியது. மகன் பிறந்த செய்தியை ஒரு வர்த்தகரிடம் சொன்ன போது “பாருங்கள் ஐயா உங்களுடைய மகன் பெயர் சொல்லும் பிள்ளையாக வளர்வான்” என்று கூறியதாக என் அம்மா நான் வளர்ந்து நிற்கும் போது கூறினார்.

நான் கறுப்பன். ஆனாலும் கலையானவன். நான் கறுப்பன் என்ற காரணத்தால், என்னுடைய தாய்க்கு என்னை அவ்வளவாகப் பிடிக்காதாம். என்னை அரவணைத்தபடியே “என்ர பிள்ளை கறுப்புத் தங்கம்டி” என்று என்னுடைய தந்தை சொல்வாராம். ஆனால், கடைசிவரை என் தாயை வைத்துப் பராமரித்தது நானும் என்னுடைய பார்வதியுமே. ஒரு பணிப்பெண் போலக் கவனித்தவளை

“இப்படி ஒரு மச்சாளை இந்த உலகத்தில் எங்கே போய் நாங்கள் காணப் போகின்றோம்” என்று என்னுடைய தங்கை ஏங்கிச் சொல்வாள்.

பிரசித்தி பெற்ற பத்திரகாளி அம்மன் ஆலயமும் வரசித்தி விநாயகர் ஆலயமும் மக்களின் குறை தீர்க்க அமைந்திருந்த இந்து ஆலயங்களாகும். முகைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் இஸ்லாமிய மக்களின் வணக்கத் தலமாகக் காணப்பட்டது.

ஒரு மனிதனின் முன்னேற்றத்துக்கு முக்கிய காரணமாக இருப்பது பாடசாலை. அவனுடைய மனநிம்மதிக்குக் காரணமாக இருப்பது ஆலயம்.

எங்களுடைய ஊரிலே கல்வியின் வரலாற்றை நினைத்துப் பார்க்கின்ற போது இங்கு தற்போது 13 பாடசாலைகள் காணப்படுகின்றன.

ஆனால் அன்று முதற் பாடசாலை 1850 இல் ஆரம்பிக்கப்பட்ட மெதடிஸ்த மிஷன் பாடசாலை. அது தற்போது விபுலானந்த வித்தியாலயமாகத் திகழுகின்றது. இது ஏறாவூரின் 5 ஆம் குறிச்சியில் இருந்த வீரபத்திரன் கோயிலுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. அதன் பின் தோன்றிய ஏறாவூர் அரசினர் கனிஷ்ட பாடசாலை. இங்குதான் தமிழர்களும் இஸ்லாமியர்களும் இணைந்து கல்வி கற்றார்களாம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதன்பின் 1912 ஆம் ஆண்டு கிராமப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதுவே பின் கனிஷ்ட பாடசாலையாக மாற்றப்பட்டது. பின் சிரேஷ்ட பாடசாலை, முஸ்லிம் மகாவித்தியாலயம், அலிகார் மகாவித்தியாலயம், அலிகார் மத்திய கல்லூரி, அலிகார் தேசியப் பாடசாலை என வளர்ச்சி பெற்றது.

அரைக்காற்சட்டையும் மேலங்கியும் அணிந்து ஓடிச் சென்று காலையில் மணி அடிக்கும் போது இருக்கையில் அமர்ந்து கொள்வேன். நான் சிறுவயதில் நடந்து பாடசாலைக்குப் போனதில்லையாம். ஒரு கையில் புத்தகங்களை வைத்துக் கொண்டு மறு கையை முன்னே நீட்டிப் பிடித்து மோட்டார் சைக்கிளில் போவதுபோல ஓடியேதான் செல்வேனாம்.

பள்ளிக்கூடம் எனக்கு மனத்துக்குள் துள்ளலைத் தரும் ஒன்றாகும். சிரேஷ்ட பாடசாலையிலே தான் என்னுடைய அரிவரி தொடங்கியது. “இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை” என்று ஹார்மோனியம் பெட்டியை அசைத்து நான் பாடினேனேயானால், மாணவர் பட்டாளங்கள் என்னை வளைத்துக் கொள்ளும். ஒவ்வொரு நாளும் பாடசாலையிலே என்னுடைய

பாட்டுக் கச்சேரி இருக்குமாம். சுறுசுறுப்பும், ஆர்வமும் என்னிடம் இருந்ததினாலேதான் என் வாழ்க்கை வாழும்வரை சுறுசுறுப்பாகவே செல்கிறது.

நான் இளைஞனாக வளர்ந்தேன், கற்றலை நிறைவு செய்து வருமானவரி மேற்பார்வையாளராகப் பணி ஏற்றேன். கல்வி கற்கின்ற காலத்திலே என்னோடு கற்க வந்தவள்தான் பார்வதி. என்னைவிட 3 வயது இளமையானவள். என்னுடைய உறவுக்காரியான அவளின் அன்பும் அழகும் அவளில் ஒரு ஈர்ப்பை எனக்கு ஏற்படுத்தியது. மனத்தைப் பறி கொடுத்தேன் என்று சொல்லுங்களேன். ஆனால், அவளுடைய தாயை நினைத்தால் மனது தள்ளி நில் என்று அச்சுறுத்தும். எப்படி அவளைத் திருமணம் செய்து தாருங்கள் என்று கேட்க முடியும்.

ஆனாலும் பார்வதி செக்கச் சிவந்த தேகமும், தங்கம் போல் மின்னும் முகவசீகரமும் மிக்கவள். வாழைத்தண்டு போல உடம்பு என்று பாடுவார்கள் அல்லவா. அதை நான் சத்தியம் பண்ணிச் சொல்வேன். அது கவிஞனுடைய கற்பனை அல்ல. நிஜம்.

ஏறாவூரிலே இப்படி ஓர் அழகி இல்லையென்று எல்லாரும் பெருமை கொள்ளும் கொள்ளை அழகைப் பார்வதிக்குப் பிரம்மன் கொடுத்துள்ளான். யார் அந்தப் பிரம்மன் வேறு யாருமல்ல. மாம்பலக் கலர் சங்கிலிக் கந்தசாமியும், மஞ்சள் அழகு வைரவள்ளியும் சேர்த்துச் செய்த பொம்மை அல்லவா பார்வதி. அவர்களே பிரம்மாக்கள். அழகுக்கேற்ப அறிவும், தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை என்பார்கள். கண் கண்டது கை செய்யும் என்பார்கள். இதுவே பார்வதியின் பண்பும். முதல் பார்வையில் உள்வாங்கி பார்வைக்கு அழகு சேர்த்துப் படைக்கும் அறிவும் அவளிடம் இருந்தது.

பாடசாலை வாழ்க்கையே எனக்கு அவளில் ஈர்ப்பை ஏற்படுத்தியது. ‘‘இன்னாருக்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று’’ என்று ஒரு பாடல் இருக்கின்றது. இருவரும் உறவுக்காரர்களே. ஆனாலும் உறவு தொடரக் காரணமானது பாடசாலை.

அக்காலத்தில் பெண்பிள்ளைகளே தாயுடன் சேர்ந்து வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும்.

காலம் கற்பித்த பாடங்களில் பெண்களின் வேலைகளுக்கு ஆண்களும் கைகொடுக்க வேண்டும் என்னும் கட்டாய பாடம் இப்போது வாழ்க்கைப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுவிட்டது.

பார்வதிக்கு வீட்டுவேலை அதிகமானால், பாடசாலை வீட்டுப் பாடம் செய்ய முடியாமல் போய்விடும். அக்காலச் சட்டம்பியாருக்கு பெண் என்ன ஆணென்ன எல்லாம் ஒன்றுதான். நீட்டுப் பாவாடையைத் தூக்கிக் கொண்டு பெஞ்சுக்கு மேலே பார்வதி ஏற வேண்டும். என்னதான் கெட்டிக்காரி என்றாலும் தண்டனை என்பது எல்லாருக்கும் பொதுதானே. கண்களிலிருந்து பார்வதி கண்ணீர் பெருக்கெடுத்ததே முதன்முதலாக என்னுடைய மனத்தை நனைத்தது. நீரால் நனைந்த நெஞ்சம் வலித்தது.

அவள் பெஞ்சுக்கு மேலே ஏறினால் எனக்கு ஏன் வலிக்கிறது! அன்றிலிருந்து பார்வதியின் அழகு எனக்கு மயக்கத்தை ஊட்டியது. என் எண்ணத்தில் ஏதோ ஒரு புதிய உணர்வு பாய்ச்சப்படுகின்றது. அவளைத் தொடரவேண்டும். கண்காணிக்க வேண்டும். மிதமிஞ்சிய அன்பைக் கொடுக்க வேண்டும் என்னும் எண்ணங்கள் மனத்துக்குள் அலையலையாக அடித்தன.

எங்களுடைய பாடசாலையில் பாமா, ருக்மணி நாடகம் போட்டார்கள். அந்த நாடகத்தில் நான் பாமாவாகவும் பார்வதி ருக்மணியாகவும் நடித்தோம். அந்த நாடகம் எங்களுக்குள் மேலும் ஒரு நெருக்கத்தைக் கொண்டு வந்தது.

கண்களே முதலில் பேசத் தொடங்கின. காலப்போக்கில் வார்த்தைகள் மனத்தின் ஆழத்தைக் கொட்டின. பேசப் பேச ஆசை மெல்ல மெல்ல நகர்கிறது. பார்வதி நெஞ்சுக்குள் பதிகிறது. ஆம் இருவரும் ஒருவரை ஒருவர் முதலில் நேசித்தோம். அதுவே காலப் போக்கில் காதலாக வடிவம் பெற்றது.

தொடர்ந்து பார்வதியால் பாடசாலைக் கல்வியைத் தொடரமுடியாமல் போகின்றது. ஆனாலும் தொடர்பு தொடர்ந்தது. ஏனென்றால், உறவுகள் தொடர்கதை அல்லவா. மெல்ல மெல்ல மாமியுடன் சொந்தம் கொண்டாடுவதற்காக நான் வீட்டிலிருந்து ஏதோ ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு "அம்மா தந்தார் மாமி" என்று பார்வதி வீட்டிற்கு வருவேன். வைரவள்ளி மாமி உலக வாழ்க்கையின் பல படிகளைக் கடந்தவள் அல்லவா.

மனிசி ஆணுக்கு ஆண். பெண்ணுக்குப் பெண். இராசாத்தி மாதிரி வாழ்ந்து கையிலுள்ள பணத்தை எல்லாம் கோட், கேஸ் என்று கணவன் தொலைத்து இறந்து போகத் தற்போது தனியாக வாழுகின்றாள்.

அவளுக்கு முன்னே நின்று கதைப்பதற்கு ஆண்களே தயங்குவார்கள். நான் பொடிப்பயல் எப்படிப் போய்க் கேட்பது. ஆனால், வீட்டுக் கஷ்டம் காரணமாகப் படிப்பை இடை நடுவே கைகழுவி விட்ட பார்வதியின் அறிவுக்கும், அழகுக்கும், திறமைக்கும் யாராவது கொத்திக் கொண்டு போய்விட்டால் என்ன செய்ய முடியும்.

தாமதிக்காமல் 1956 ஆம் ஆண்டு. தற்போது நினைத்துப் பார்த்தால், திருமண வயது எனக்குக் குறைவுதான். பார்வதிக்கோ 20 வயதுதான் ஆகியிருந்தது. நான் தான் கைநிறைய உழைக்கிறேனே. அரசாங்க உத்தியோகம் அந்தக் காலத்தில் குதிரைக் கொம்பாகத்தானே இருந்தது. அரசாங்க உத்தியோகமும் செய்கின்றேன். சும்மா சொல்லக் கூடாது நான் நல்ல வாட்டசாட்டமான ஆண்பிள்ளைதான். என்னை ஜெமினி கணேஷன் என்று தான் ஊரார் அழைப்பது வழக்கம். பார்வதிக்குப் பக்கத்தில் நிற்பதற்கு நல்ல தகுதி எனக்கு இருக்கிறது. அடிக்கடி உறவுமுறை சொல்லி அவர்கள் வீட்டுக்குப் போய் வந்து வைரவள்ளி மாமியிடம் நல்ல பெயர் வாங்கியிருக்கிறேன்.

பார்வதியின் அண்ணன் கூட்டுறவு மேலாளர். அவர் கொஞ்சம் சாந்தமானவர்தான். தம்பிதான் கொஞ்சம் சண்டித்தனம். கோபக்காரனும் கூட. என்ன செய்வதென்று சிந்தித்து நேரடியாக மாமியிடம் கேட்டுவிடலாம் என்று முடிவு எடுத்து முன்னே போய் நின்றேன். அவவாகவே வாய்திறந்தார்.

“என்ன தம்பி நீ வாங்கிப் போட்ட கதிரையில பார்வதி இருந்து இருந்து பார்த்துச் சிரிக்கிறாள். எல்லாருக்கும் தானே வாங்கிப் போட்டாய்? அவள் என்னவோ தனக்குப் போட்டமாதிரி நினைக்கிறாள்? உண்மையைச் சொல்லிப் போடு” என்றார் மாமி. அவ என்ன லேசுப்பட்ட ஆளா? மூன்று பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கி நிமிர்ந்து நிற்கிறா என்றால், எப்படித் தைரியம் வேண்டும். கண்களைப் பார்த்து மனத்தைக் கரைத்துக் குடிப்பவள் அல்லவா?

“இல்ல மாமி. வாங்கித் தர வேண்டும் என்று நினைச்சன். வாங்கிட்டன். அதுக்காக ஒன்றும் பார்வதிய எனக்குக் கட்டித் தாங்க என்டு நான் கேட்கல்ல. நான் கலியாணம் செய்தால் அவ நல்லா இருப்பா என்று நினைக்கிறன்.”

“அடிடா சக்க. ஓஹோ அப்பிடிப் போகுதா சங்கதி. எங்க அந்தக் கழுத? நான் கேட்கிறன்.”

“ஐயோ... ... பார்வதிக்கு ஒன்டும் தெரியா மாமி. அவள விட்டிறுங்க.”

“சரி விடுறன். நீ போ.”

“இல்ல மாமி.. .. .. .. உங்களுக்குப் பிடிச்சா.. .. .. .. அவள நான் கலியாணம் செய்றன்.”

“அதுதான் மருமகனே விடுறன் என்று சொல்லிட்டனே.” என்று மாமி சொன்ன போது உச்சந்தலையில உர்ற்ற் என்று ஏறியது.

“ஓமா மாமி.”

“ஓம் .. .. ..”

மாமியிடம் சம்மதம் பெற்றேன். பிறகு என்ன?

பார்வதியைப் பதிவுத் திருமணம் புரிந்து 4 பிள்ளைகளையும் பெற்று விட்டேன். இரண்டு ஆண்கள் மூத்தவன் சிவம், இரண்டாவது கீரன், அடுத்து சிநேகா. பல வருட இடைவெளியின் பின் வந்த மகள் சிந்து.

நான் சிநேகாவின் வீட்டுக்குள் சென்றபின் பார்வதியின் மூத்த அண்ணன் வேலாயுதத்துக்கு வாகனேறி கூட்டுறவுச் சங்கத்தில் வேலை கிடைத்தது. பார்வதியின் தம்பி திரு ஒரு வாகன உதிரிப்பாகங்கள் விற்கின்ற கடை போட்டுவிட்டான். ஊரார் உள்ளத்துக்குள்ளே ஒரு கேள்வி எழுந்தது. என்ன வைரவள்ளிக் குடும்பத்துக்குப் புதையல் கிதையல் கிடைச்சிற்றுதோ என்று பேசத் தொடங்கிவிட்டார்கள். அந்தக் குடும்பத்தில் என்னுடைய மரியாதை மேலெழுந்தது. தங்கள் குடும்பத்தைக் காக்க வந்த கடவுள் என்று என்னைக் கருதினார்கள். அன்றிலிருந்து மாமி இறக்கும் வரை ஒரு வார்த்தை என்னை எதிர்த்து அவர் வாயிலிருந்து கொட்டியதே இல்லை. என்னுடைய மச்சான்மாரும் எனக்கு எதிரிலே நின்று பேசியதே இல்லை.

அக்காலத்தில் மருமக்களை மாமிமார் எப்படி மதிப்போடு நடத்தினார்கள் என்பது இனிமேல் எழுத்திலேதான் பார்க்க முடியும். மச்சான்மாரின் பாசத்தைக் கனவிலேதான் காண முடியும். காலம் எத்தனையோ பண்புகளைத் துடைத்து எறிந்து விட்டு மனித மனங்களுக்குள் வேசங்களைப் புதைத்து விட்டிருக்கின்றது என்று நினைத்துப் பார்க்கிறேன்.

என்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பற்றுக்கள். என்னுடைய வாழ்க்கையின் பாதையைத் திசை திருப்பியது. தானாக எனக்கு இயற்கை கொடுத்த கட்டளைகளாக அவற்றைத் தலைமேற் கொண்டேன். சமூகப்பற்று, மொழிப்பற்று, கலை கலாச்சாரப் பற்று என்ற மூன்று பற்றுக்களும் நான் தமிழரசுக் கட்சியில் இணைந்த பின் தொடர்ச்சியாக உள்நுழைந்தன.

மனிதன் பிறக்கும் போது சில கடமைகள் அவனுக்காக விதிக்கப்படுகின்றன. அதற்கு அவன் வாழுகின்ற சூழலும், கல்வித் தராதரங்களும், சேருகின்ற மக்களும் ஏற்படுத்திக் கொடுத்துவிடுவார்கள். அதுபோலவே நானும் எனக்குள் சில பொறுப்புக்களைக் கைகளில் ஏந்தினேன். அது சுடரொளியாக என் கிராமத்தில் வீசியது. அதற்கு பார்வதியின் ஒத்துழைப்பும் எனக்குக் கிடைத்தது.

என்னுடைய சமூகத்தை உயரத்தில் வைத்துப் பார்க்க எண்ணினேன். அதுதான் எனது ஊரில் கோயில், பாடசாலை, போன்ற பல அம்சங்கள் வெளிவரக் காரணங்களாயின. இதற்கு முதலில் மொழிப்பற்று கூடவே வந்தது.

என் உள்ளத்துக்குள்ளே தமிழுணர்வை ஊட்டியதில் முக்கிய பங்கு வகித்தவர் இராஜதுரை அண்ணன். பகுத்தறிவுக் கொள்கையை அவர் மேடையிலே முழங்கும் போது ஊசி ஏற்றுவது போல எங்கள் உள்ளத்துக்குள் பதிந்துவிடுகின்றது. அவர் ஒலிவாங்கியைப் பிடித்துக் குரல் எடுத்தால், என்ன மாயமோ தெரியவில்லை இளையவர்கள் உள்ளத்துக்குள்ளே ஒரு ஒளிக்கீற்று தோன்றும். அதுவும் என்னைப் போன்ற சமூகச் சிந்தனையுள்ள இளையவர்களுக்கு அவரின் பேச்சு மூச்சாகியது.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் அரசியல் இயக்கத்தைத் தந்தை செல்வாவுடன் சேர்த்துத் தோற்றுவித்த பெருமை பெற்றவர் திரு. செ. இராஜதுரை அவர்கள்.

கிழக்கிலங்கையில் தமிழரசு அரசியலுக்கு அஸ்திவாரமிட்டவர். 1956 ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்புத் தொகுதியின் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்தவர். அவரின் உறவு எனக்குக் கிடைத்தமை என் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருந்தது. அவர் வீட்டு வாசலின் முன் நிற்கும் அன்பர்களிலே என்னைக் கண்டால், கண்களால், உள்ளே வரும்படி உடனடியாக அழைப்பார்.

நான் தமிழரசுக்கட்சியை ஏறாவூரில் பரப்புவதற்கு முன் வந்து உழைத்தேன். மேடைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. வீடுவீடாகச் சென்று அரசியல் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. எங்களோடு ஏறாவூரிலே பல நண்பர்கள் சேர்ந்து கொண்டார்கள். வீட்டுக்கு வருகின்ற தொண்டர்களுக்குத் தேநீர் பணிவிடை பார்வதியே செய்வாள்.

ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில் அருகாமையில் உள்ள பிள்ளைகள் படிப்பதற்கான பாடசாலை ஏற்கனவே இருந்தது. நான்காம் குறிச்சியில் உள்ள பிள்ளைகள் படிப்பதற்காக அயலிலே ஒரு பாடசாலை இருந்தால் நல்லது என்று சிந்தித்தேன். இடையிடையே இஸ்லாமிய மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலே கருத்து வேறுபாடுகள் வரத் தொடங்கி யிருந்தன. பிரச்சினையை வளர்த்தெடுக்காது. எமக்கென்று ஒரு பாடசாலையை அமைப்பது நியாயமானதாகப்பட்டது. எங்கள் ஊரிலிருந்த சில நலன் விரும்பிகளும் இதற்கு ஒத்துழைத்தார்கள்.

03.07.1966 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இராஜதுரை அண்ணன் உதவியுடன் எமது நான்காம் குறிச்சியில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கல்வித் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொண்டேன். அப்போதுகூட விரிவுபட்ட மனம் இல்லாத சிலர் பல எதிர்ப்புகளைக் காட்டினர். ஏற்கனவே அலிஹார் மகாவித்தியாலயம் இருக்கிறது. ஐந்தாம் குறிச்சியில் பாடசாலை இருக்கிறது. இங்கும் ஒன்று வேண்டுமா? என்று பிரச்சினையைக் கிளறினார்கள்.

இருப்பது எல்லாம் இருக்கட்டும் சிறப்பு. ஆனால், நான்காம் குறிச்சி மாணவர்கள் அருகே இடம் இருக்க ஏன் அலைய வேண்டும்.

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”

ஒரு ஊருக்கு அழகு பாடசாலை, கல்விமான்கள். இதற்கு அவசியம் பாடசாலை என்று என் உரமுள்ள வரை முயன்றேன். என்னுடன் பலர் உறுதுணையாக இருந்தனர். அவர்கள் எல்லோரும் இணைந்து பாடசாலையை ஏறாவூர் பத்திரகாளியம்மன் ஆலயத்துக்கு

அருகாமையில் கட்டினோம். ஆலயத்துக்கு உரித்தான காணியைப் பாடசாலை அமைப்பதற்கு நிருவாகம் ஒப்புக் கொண்டது.

முதலில் ஒரு பெரிய மண்டபம் கட்டினோம். அதனோடு சேர்த்து ஒரு காரியாலயம் அமைந்தது. அதற்குள்ளே கல்வியதிகாரிகளுக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டன. இப்பாடசாலைக்குத் தலைமையாசிரியராக யாரை நியமிக்கலாம்? என்ற போது அது எங்களுடைய இனத்தவராக இருக்க வேண்டுமே என்று நினைத்தோம். அப்போது அங்கு ஆசிரியப் பயிற்சி முடித்து ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த பொன்னுச்சாமி என்பவரைத் தலைமையாசிரியராக நியமித்தோம்.

பாடசாலை கட்டியாயிற்று, ஆசிரியர் நியமித்தாயிற்று. தமிழ்க் கலவன் பெண்கள் பாடசாலை ஒன்றிலே பார்வதியின் அண்ணன் வேலாயுதம் மனைவி சாருநிதி கற்பித்துக் கொண்டிருந்தார். சாருநிதி பாடசாலைக்குப் போகும் போது சிறியவளாக இருந்த சிநேகாவையும் அழைத்துச் செல்வது வழக்கம். மாணவர்கள் வந்தால், ஆசிரியர்கள் தேவை அல்லவா. சாருநிதியை எப்படியும் புதிதாகக் கட்டிய இந்தப் பாடசாலைக்குக் கொண்டு வர வேண்டும். அத்துடன் இன்னும் ஆசிரியர்கள் வேண்டும். மீண்டுமாய் நான் உசாரானேன். மீண்டும் இராஜதுரை அண்ணனிடம் கையேந்தினேன்.

“அண்ணன் ஸ்கூல் கட்டி விட்டோம். பார்வதியிட அண்ணனின் மனைவி மட்/அல் முனீரா மகளிர் மகாவித்தியாலயத்தில் படிப்பிக்கிறா. அவாவை இந்தப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுவர வேண்டும்.”

“சரி சரி பரமசிவம் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதை கொழும்பில் இருக்கும் கல்வி அமைச்சுக்குக் கொண்டு கொடுக்க வேணும். அங்க இருந்து மட்டக்களப்புக் கல்வித் திணைக்களத்துக்குக் கடிதம் போடுவார்கள்” என்று உடனடியாகக் கடிதம் எழுதித் தந்தார். நானும் கொழும்பு சென்றேன். கடிதத்துடன் வந்தேன். கொழும்பும் ஏறாவூரும் எனக்கு மட்டக்களப்பும் ஏறாவூரும் போல இருந்தது. ஊருக்காக கொழும்புக்குப் போய்வர நான் செலவழித்த பணத்துக்கு இன்னுமொரு வீட்டைக் கட்டியிருக்கலாம். என்னுடைய பிள்ளைகளுக்கு அப்பா அடிக்கடி கொழும்பு போறார் என்றுதான் தெரியும். ஆனால், ஓடியோடி அப்பா எங்களை விட்டுப் போட்டு எங்கே போகிறார் என்பது தெரியாது. ஐயா கொண்டு வரும் றம்புட்டானும், மங்குஸ்தானும், அப்பிளும் சொல்லும் ஐயா கொழும்பு போய் வருகிறார் என்னும் சங்கதியை.

மெல்ல மெல்ல ஆசிரியர்களை, மாணவர்களை ஏறாவூர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பித்த பாடசாலைக்குச் சேர்த்தா யிற்று. அப்போதுதான் முதலாம் வகுப்பிற்கு அடியெடுத்து வைக்கின்ற சிநேகாவை ஏறாவூர் முஸ்லீம் பெண்கள் பாடசாலையிலிருந்தும், கீரனை ஏறாவூர் முஸ்லீம் ஆண்கள் பாடசாலையிலிருந்தும் விடுப்புப் பத்திரம் பெற்று இப்பாடசாலைக்குக் கொண்டு வந்து சேர்த்தேன்.

மெல்ல மெல்ல பொன்னுச்சாமி முயற்சியிலும் ஊர் மக்களின் ஒத்துழைப்பிலும் பாடசாலை முன்னேறியது. பாடசாலை மண்டபம் வகுப்புக்களுக்குப் போதாமல் இருந்த காரணத்தினால், ஓலைக் கொட்டில் ஒன்றை மேலதிகமாகக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. யாழ்ப்பாணத் திலிருந்தும் ஆசிரியர்கள் கற்பிப்பதற்காக வந்து சேர்ந்தார்கள்.

அடிக்கடி நடைபெறும் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் பாடசாலைத் தேவைகளை ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் நிவர்த்தி செய்தோம். கல்விக் கண்கள் பெருகின.

பாடசாலையிலே மேலதிகமான வகுப்புக்கள், விழாக்கள் நடத்தப் பட்டன. நடனம் பயிற்றுவிக்க புன்னைக்குடாவில் நடனம் பழகிய ஓர் ஆசிரியையைப் பின்னேரங்களில் நடனம் கற்பிப்பதற்காக இப்பாடசாலையில் நியமித்தோம். சிநேகாவும் அவரிடமே நடனம் பழகினாள். கலைவிழாக்கள் நடத்தப்பட்டன.

பெண்கள் அதிகமாகக் களிமண்ணைப் பதப்படுத்தி மட்பாண்டம் செய்து, குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்புள்ள சமூகம் அங்கே இருந்தது. ஆண்கள் வியாபாரம், வேளாண்மை, நகைத்தொழில், கொல்ல வேலை என்று நாளும் தொழில் புரியும் ஒரு சமூகம் வாழ்ந்து வந்தது. பெரிதான மாட மாளிகைகள் இல்லாவிட்டாலும் மனத்துக்கு மகிழ்ச்சி அந்த மக்களிடம் குடியிருந்தது. இன்று நாம் காணமுடியாத கூட்டுக் குடும்ப வாழ்க்கை இருந்தது. ஒரு மனிதனுக்கு உணவு, உடை, உறையுள் மூன்றும் அவசியம். இதிலே எவ்வளவுதான் வேலையாக வெளியே திரிந்தாலும் வீட்டுக்கு வந்து பச்சைத் தண்ணீரைக் குடித்தாலேயே மனம் அமைதியாகும்.

வீடு என்பது வெறுமனே கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டதல்ல. கலாசாரத்தை, பண்பாட்டை, பாசத்தை, நேசத்தை வாழ்க்கை முறைகளைத் தேக்கி வைத்திருக்கும் இடம். இன்று ஒரு மூடிய கதவுக்குள்ளே நாம்

வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அன்று திறந்தே கிடக்கும் வீடு. வீதியால் போகின்றவர்கள் ஒருமுறை பரமசிவத்தைப் பார்த்துவிட்டுப் போவோம் என்று நுழைவார்கள். எங்களுடைய வீட்டுக்கு அருகாமையில் பேருந்துத் தரிப்பு நிலையம் இருந்த காரணத்தால் மனிதர்களின் பாதங்களுக்கு எங்கள் வாசல் பழக்கப்பட்டு விட்டது. வருகின்றவர்கள் உணவு, தேநீர் அருந்தாமல் யாரும் வெளியே சென்ற சரித்திரம் இல்லை.

பிள்ளை தேநீர் கொண்டு வா என்றால், சிநேகாவிடம் கொடுத்துப் பார்வதி அனுப்புவாள். யார் மாமா வந்திருக்கிறாரா? சித்தப்பா வந்திருக்கிறாரா? அண்ணா வந்திருக்கிறாரா என்று இல்லாத உறவுமுறைகள் எல்லாம் சொல்லிக் குழந்தைப் பருவத்தில் உறவுகளைச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே ஊட்டப்படும். அதுபோல வீட்டுக்கு வருபவர்கள் வயிறார உண்டு மனதாரச் செல்ல வேண்டும் என்பதை அறியாமலே பிள்ளைகளின் உணர்வுகளுக்குக் கொடுக்கப்படும். இவ்வாறு வீடு என்பது ஒரு சமூக ஒற்றுமையை வளர்க்கின்ற இடம்.

இந்தச் சமூக ஒற்றுமையை மேலும் வளர்ப்பதற்கு யாது செய்யலாம்? என்று எண்ணிய போது கூட்டுப்பிரார்த்தனை என் எண்ணத்துக்குள் இடம்பிடித்தது.

பாடசாலையில் கற்பித்த ஆசிரியரின் மனைவி சங்கீதம் கற்றிருந்த காரணத்தால், வெள்ளிதோறும் அவரைக் கொண்டு கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்துவதற்காக எண்ணிய எண்ணத்தைச் செயற்படுத்த முடிவு செய்தேன். சிறுவர்கள், இளையவர்கள் சேர்ந்து தேவார, திருவாசகங்களை ஆலயத்திலிருந்து இசைத்தால், அவர்களின் மனத்திலே நல்லெண்ணச் சிந்தனைகள் வளர்க்கப்படும். ஒவ்வொருவருக்குமிடையே நல்லிணக்கம் தோன்றும் என்று முடிவு செய்தேன்.

வம்மியடி என்று எங்கள் மக்கள் வாயாரப் புகழும் இடத்தில் வம்மி மரம் இருந்ததாக ஞாபகம். அதுகூட என் பதிவில் என் மூளைச்சாமி அழித்துவிட்டார். அவ்வீதியே ஏறாவூரின் பிரதான வீதி. பார்வதியின் அம்மாவின் சொத்துக்களில் மாமி மிச்சமாக வைத்திருந்த காணிகளிலே மச்சான்மார் கடைகள் கட்டிவிட்டிருந்தார்கள். அதில் பார்வதி பெயரிலேயே மாமி காணிகளை வைத்திருந்தார். பெண்ணுக்குச் சொத்து. ஆண்களுக்கு உழைப்பும், படிப்பும் கொடுத்திருந்தார். பார்வதியின் படிப்பைத் தனக்குத்

துணையாக இருப்பதற்காக இடையிலேயே நிறுத்தி விட்டாரே. இருந்தாலும் என்ன பார்வதி கண்டதை மூளையில் பதிக்கின்ற ஒரு கரக்டர்தானே.

தையல், சமையல், அலங்காரம் என்பவை அவளுக்கு நிகர் அவள்தான். கூடுதலாக என் மனைவியைப் புகழுகின்றேன் என்று நினைக்க வேண்டாம். இந்தியாவிலிருந்து மாதாமாதம் வருகின்ற சஞ்சிகை, நாவல்களை அவளுடைய மாமாவின் மகளுடன் இணைந்து வாங்குவாள். இருவரும் பணம் செலுத்தி வாங்கும் புத்தகங்களை இருவரும் பகிர்ந்து வாசிப்பார்கள். வாசிப்புப் பழக்கம் அவளிடம் நிறையவே இருந்தது. இந்த நூல் வாசிக்கும் பழக்கம் பிள்ளைகள் பிறக்க மெல்ல மெல்லக் குறைந்து போனது. இலங்கையின் இலக்கிய வளர்ச்சி பாதிக்கப்படும் என்று கருதிய இலங்கை அரசாங்கமும் இந்தியாவிலிருந்து வருகின்ற நூல்களுக்குத் தடை விதித்தது. நூல்களுடன் இலங்கை நோக்கி வந்த ஒரு கப்பலைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். பார்வதியின் வாசிப்பு குறைந்து போனதற்கு அதுவும் ஒரு காரணமாகியது.

அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாக இருந்தார். அவர் தான் உலகத்திலேயே முதல் பிரதம மந்திரி என்பது எத்தனை பேருக்குத் தெரியும் என்பதை நான் அறியேன். நூல்கள் மட்டுமல்ல, உற்பத்திப் பொருள்களையும் தடைசெய்தார். அக்காலத்தில் இலங்கை மண்ணில் தோட்டத்தொழில் வெகுவாக வளர்ச்சி கண்டது.

இதனாலேயே இந்தியாவிலிருந்து வந்த நாவல், சிறுகதைகள், சஞ்சிகைகள் தேக்கம் கண்டன. பார்வதியின் தொடர்கதை வாசிப்பும் தடைப்பட்டது.

பார்வதியோடு வாழ்ந்து பார்த்தவர்களுக்கே அவளின் பெருமை புரியும். எள் என்னும் முன்னே எண்ணெய்யாக நிற்கும் பணிவும் அவளுக்கு இருந்தது.

ஒவ்வொரு நாளும் சமைக்கும் உணவை என்னுடைய வீட்டுக்கு மாமியிடம் கொடுத்து அனுப்புவாள். அவள் விதம் விதமாகச் சமைத்த உணவை என் அம்மாவும் சுவைக்க வேண்டும் என்று ஆசைப்படுவாள். மாமி அந்தச் சாப்பாட்டுக் கூடையைச் சுமந்து சென்று என் அம்மாவுக்குக் கொடுப்பார். இன்று அதை நினைத்துப் பார்க்கும் போது என்னையறியாமலே என் கண்கள் பனிக்கின்றன. எப்படி ஆழமான பாசப் பிணைப்புக்கள் அன்று இருந்திருக்கின்றன.

அவரைத் திருமணம் செய்தேன். அவருடைய அம்மாவைப் பார்க்க வேண்டிய கடமை எனக்கு என்ன தலைவிதியா? அவர்கள் சும்மா இருக்க நான் வேலை செய்ய வேண்டுமா? எனக்கு இருக்கிற வேலைக்கு இந்தச் சாப்பாட்டைக் காவிக் கொண்டு செல்ல வேண்டுமா? விருப்பமென்றால் வரட்டும் ஆக்கின சோற்றில் தின்டிற்றுப் போகட்டும் என்னும் ஒருவகை இனம் வாழுகின்ற காலத்தில் இவர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதே நிஜம்.

என்னுடைய தங்கை சாரதா திருமணம் செய்யும் வரை பார்வதி அவளைப் பிள்ளை போல் கவனித்துத் திருமணம் செய்து வைத்தாள். அவளுக்கு விதம் விதமான ஆடைகள் தைத்துப் போட்டுப் பார்த்துத் தலை பின்னிக்கட்டி அவளை அழகு பார்ப்பாள். என்னுடைய கடைசிக் காலத்தில் அம்மா கூட என் வீட்டிலிருந்தே காலஞ்சென்றார். அவவை குளிக்க வைத்து உணவு கொடுத்துப் பராமரித்தவளும் பார்வதியே.

இவ்வாறு உறவுகள் என்னை இன்று வரை தாங்கிப் பிடிப்பதாலேயே இன்னும் நான் உயிர் வாழுகின்றேன். பார்வதி எனக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம் என்பதை இறக்கும் தறுவாயிலும் மனத்துக்குள் பச்சை குத்தி வைத்திருக்கிறேன்.

கடைகளை வாடகைக்குக் கொடுத்திருந்தோம். ஒரு கடையை எடுத்து மச்சான் திரு நடத்திக் கொண்டிருந்தார்.

இந்தக் கடைகளுக்கு நேரெதிராக எங்கள் வீடு. அந்த வீடு எனக்குத் தந்த அனுபவங்கள் ஏராளம். அவற்றை இப்போது நினைக்காமல் என்னால் இருக்க முடியவில்லை. பார்வதியுடன் நான் வாழ்ந்த காலங்கள். அந்த வீட்டுக்குக் காணியை ஒரு தேவைக்காக வேலாயுதத்தின் பேரில் மாமி எழுதிக் கொடுத்திருந்தார்.

வீட்டுக்குப் பின்புறம் ஒரு வில்வ மரம் இருந்தது. மரங்கள் மௌனமாக உலகத்தை உள்வாங்கிக் கொண்டிருக்கும். சிநேகா இரவில் சாளரம் அருகே போடப்பட்ட கட்டிலிலே தூங்க மாட்டாள். இரவானால் சாளரத்தைப் பூட்டுவதற்குப் போக மாட்டாள். இரவில் அந்த வில்வமரத்தைப் பார்த்தால் ஓர் உருவம் நிற்பது போல இருக்கும். அதனால், பேய் வீட்டுக்குள் வந்துவிடும் என்ற பயம் அவளுக்கு இருந்தது. யாராவது 6 மணிக்கே சாளரங்களைப் பூட்டிவிட வேண்டும். அக்காலத்தில் என்ன பழக்கமோ தெரியாது சாளரத்தை ஒட்டியே

கட்டில்களைப் போடுவோம். சுவாமி அறைக்குள்ளும் கட்டில் அப்படியே போடப்பட்டிருந்தது. சமையலறை சாளரத்தையும் பூட்டிவிட வேண்டும். இல்லையென்றால் இரண்டு அறைக்குள்ளும் தலைகாட்ட மாட்டாள். ஊருக்குப் புறத்தே நாங்கள் புதிய வீடு கட்டிப் போகும் வரை அவளுக்கு இந்த நடைமுறைதான் இருந்தது.

எங்களுடைய வீடு நெருப்பெட்டி போல இருக்கும். நான்கு அறைகள். சுவாமி அறை, வரவேற்பறை, படுக்கையறை, பெரிய சாப்பாட்டறை என்று கட்டப்பட்டிருந்தது. நான்கு அறைகளையும் பூட்டிவிட்டால் சமையலறைக்குள் நுழைய முடியாது. வரவேற்பறைக் கதவைத் திறந்தே சமையலறைக்கு வர வேண்டும். சமையலறைக்கு முன்னே விறாந்தை இருந்தது. அதிலே அம்மி குழவி, உரல் உலக்கை, மாமியின் சட்டிபானைகள் வைக்கப்பட்டிருந்தன.

சமையலறைக்குப் பக்கத்திலே ஒரு குளியலறை தொட்டியுடன் இருந்தது. அதிலிருந்து படியிறங்கிப் போனால், கிணற்றடி. கிணற்றடியின் அருகே ஒரு சிறிய தண்ணீர்த் தொட்டி. அதற்குள்ளே தண்ணீர் நிரப்பி என் பிள்ளைகள் நீச்சலடிப்பார்கள். ஏன் நானும் நீச்சல் அடித்திருக்கிறேன். இப்போது வீட்டுக்குள்ளே தொட்டி கட்டி நீங்கள் நீச்சல் அடிக்கிறீர்கள். நான் வானம் பார்க்கத் தொட்டி கட்டி நீச்சல் அடித்தேன்.

கிணற்றைச் சுற்றிவரச் செவ்வாழை மரங்கள், பப்பாளி மரங்கள், பாக்கு மரம், கறிவேப்பிலை மரம் போன்றவை உடலின் உறுதிக்கு கொடைவள்ளல்களாகப் பயன்களை அள்ளித் தந்து கொண்டுதான் இருந்தன. பப்பாளியின் உள்ளே சிவந்த நிறத் தசைப்பகுதி இப்போது நினைத்தாலும் நாவில் சுவை கூட்டுகின்றது.

கிணற்றிலிருந்து வாளியால் நீர் மொண்டு பக்கத்தில் இருந்த குளியலறைத் தொட்டிக்கு ஊற்றுவோம். வாளி நீர் சிறிய தொட்டிக்குள் ஊற்றினால், அந்த நீர் குளியலறைக்குள் உள்ள தொட்டிக்குள் விழும். அதற்குரிய அமைப்பு எல்லாம் சீமெந்தால் கட்டப்பட்டிருந்தது. புதிய வீட்டில் குழாய் வசதிகளைச் செய்வதற்கு இவைதான் அனுபவங்களாகப்பட்டன.

கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தால், நாம் நீராடும் அழகை பேருந்தில் செல்பவர்கள் இரசித்துக் கொண்டே போவார்கள். என்ன அற்புதமான நாட்கள்.

சமையலறைக்கு முன்னே சீமெந்துத் தரை கட்டப்பட்டிருந்தது. அதிலேதான் மாமியின் சட்டி பானை வியாபாரமோ, தொழிற்சாலையோ எல்லாம் இருந்தது. நாற்சந்தி வீட்டில் எல்லோரும் கூடுவது போல இந்தத் தரையிலேயே கதிரைகளைப் போட்டு சம்பாஷணைகளும் நடத்துவோம். கச்சிதமான வீட்டில் வாசல் பெரிதாக இல்லை. கேட்டைத் திறந்து வெளியே வந்தால், பிரதான வீதி.

காலைவேளை நாம் விழிக்கும் முன்னே சிறிய முற்றத்தில் நட்டப்பட்டிருந்த பவளமல்லிகை மணம் காற்றோடு வீட்டுக்குள்ளே நுழையும். பூமிப்படுக்கையில் பவளமல்லிகை மலர்கள் நிறைந்து மெத்தை போட்டு இறுதிக் காலத்துக்குத் தயாராகிவிடும். ஆரஞ்சு நிறத் தண்டிலே வெள்ளை நிற இதழ்களை அடுக்கி வைத்து நடுவே ஆரஞ்சு நிறப் புள்ளியை வைத்துவிட்டது இயற்கை. நான் நினைத்துப் பார்ப்பேன் இயற்கை மனிதனைவிடச் சிறந்த கலாரசிகன். அவன் பார்த்துப் பார்த்துச் செய்த சோலைகளும், மலைகளும், கடல்களும், எல்லையில்லா இன்பத்தைக் கொட்டிக் கொடுத்திருக்கிறதே. இதைத்தான்

“எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா இறைவா இறைவா!
சித்தினை அசித்துடன் இணைத்தாய் அங்கு
சேரும் ஐம்பூதத்து வியனுலகம் அமைத்தாய்
அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சியமாகப்
பல பல நல்லழகுகள் சமைத்தாய்”

என்று பாரதியார் பாடினார். அந்தப் பவளமல்லிகை மரத்தைப் பார்க்கின்ற போது இரண்டு விடயங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. அந்த மரத்தின் கீழே வைத்துத்தான் சிவம், அழ அழத் திருவை அடித்துத் துவசம் பண்ணினான்.

காரணம் யாருக்கும் தெரியாமல் சிவம் தன்னுடைய சைக்கிளை எடுத்துக் கொண்டு வீதியால் போன சமயத்திலே, ரெக்டர் ஒன்றில் கொழுவி றோட்டில் இழுத்து வரப்பட்டான் என்னும் செய்தி கேட்டு மிக்க கோபம் அடைந்தான் திரு. வீட்டுக்கு வந்த பிள்ளை காயப்பட்டிருக்கிறான் என்ற வருத்தம் சிறிதும் இல்லாமல் திரு, சிவத்தை அடித்த காரணம் அனுமதி இல்லாமல் சைக்கிள் எடுத்து ஓடியது. அதுவும் மெயின் றோட்டில் ஓடியது.

அடுத்தது கீரன் செய்யாத குழப்படிக்கு அம்மரத்தில் வைத்துத்தான் வாங்கிக் கட்டினான். தன்னுடன் படிக்கின்ற பரமாவை செருப்பால் அடித்து விட்டான் என்று அவளுடைய அப்பா திருவிடம் முறையிடப் பவளமல்லிகை என்னும் தண்டனை கொடுக்கும் மரத்தில் கட்டப்பட்டு அடிவாங்கினான். அதன்பின்புதான் உண்மையை அந்தப் பரமாவே சொல்லி அறிந்தோம்.

அக்காலத்திலும் பிள்ளைகளின் சேட்டைக்கு அளவேயில்லை. பரமா தன்னுடைய சிநேகிதி ரெத்தினத்தின் தலைமயிரிலே ஆமணக்கங்காய்களைப் பின்புறமாகப் போட்டிருக்கின்றாள். அக்காய்களில் இருந்த முட்கள் ரெத்தினத்தின் தலைமயிர் முழுவதையும் சிக்காக்கி விட்டது. மயிர்களில் இருந்து இக்காய்களை அகற்ற முடியாமல் போய்விட்டது. யார் இந்த வேலையைச் செய்தது என்று ஆசிரியர்கள் கேட்ட போது பரமாவும் கீரனை அடையாளம் காட்டிவிட்டாள். கோபத்தில் கீரனும் உன்னைச் செருப்பால் அடிப்பேன் என்று பரமாவிடம் சொன்னதைக் கேட்ட பரமா தன்னுடைய அப்பாவிடம் வந்து கீரன் செருப்பால் அடித்துவிட்டான் என்று ஒரு பெரிய பொய்யைச் சொல்லியிருக்கின்றாள். செய்யாத பிழைக்குக் கீரன் தண்டனையாக மரத்தின் தடியால் துடிக்கத் துடிக்க அடி வாங்கினான். ஒரு பெண்ணுக்குச் செருப்பால் அடிப்பது என்பது சிறிய விடயமாக அக்காலத்தில் இருக்கவில்லை. எங்களுடைய வீடு பிரதான வீதியில் இருந்த காரணத்தால் முன் வாசல் கதவு திறந்திருந்தால், எங்கள் வீட்டின் முன்புறம் நடப்பவை அனைத்தும் தெரியும். வீதியால் போன பரமாவினுடைய தந்தை ஓடிவந்து தடுத்த காரணத்தாலேயே திருவின் கோபம் தணிந்தது.

“கவனமா நடந்துகொள் வடுவா” என்று அதட்டிவிட்டுத் தடியை எறிந்து விட்டுத் திரு போனான்.

அடி வாங்கிய மகனை ஓடிப்போய் அணைத்தெடுத்துத் தடவிக் கொடுத்தாள் பார்வதி.

அக்காலத்தில் மாமன் கண்டிப்பு மிக்கவன். மருமக்கள் செய்கின்ற தவறுகளைக் கண்காணிக்கும் பொறுப்பு அவர்களிடம் இருந்தது. மாமனுக்குப் பயந்தே மருமக்கள் வாழ்வார்கள். அதேவேளை பெற்ற தாயோ தந்தையோ அந்தக் கண்டிப்பைத் தடுக்கும் பண்பு அக்காலத்தில் இல்லை. பிள்ளைகள் தறுதலையாகப் போய் விடக்கூடாது என்பதில் மாமாக்கள் அதிகக் கவனம் செலுத்துவார்கள். இன்றைய காலகட்டத்தில்

என் பிள்ளையை அடிக்க உனக்கு என்ன உரிமை? என்று கேட்டுத் தடுப்பார்கள். தற்காலத்தில் பிள்ளைகள் உறவுகளின் மகத்துவத்தைத் தெரியாமலேயே வளர்க்கப்படுகின்றார்கள்.

அதைவிட ஒருமுறை நான் வருமானவரி உத்தியோகத்தர் பதவி யிலிருக்கும் போது கணக்கில் குழறுபடி வந்து வேலையிலிருந்து நிறுத்தப்பட்டேன். அந்தச் சமயத்திலே எங்கள் வீட்டு அடுப்படியை உறங்கவிடாது பார்த்துக் கொண்டதில் ஒரு பகுதி திருவையே சாரும். சந்தைக்குச் சென்று மீன் வாங்கி வந்தால் முதல் எங்கள் வீட்டுச் சமையலறைக்கே மீன் பை திறக்கப்படும். அதற்குப் பின்புதான் அவர்களுடைய வீட்டுக்கு மீன் பை செல்லும். மாமியும் பார்வதியும் மனக்கவலை தெரியாது என்னைக் கவனித்தது நான் செய்த புண்ணியமே என்று கருதுகிறேன். இந்தப் பிரச்சினையிலிருந்து நான் மீண்டதற்கு எத்தனை நாள் நித்திரை முழித்துக் கால்களை ஆட்டி ஆட்டிப் பார்வதி ஆடைகள் தைத்து விற்றிருப்பாள். மாமியும் சட்டிபானைச் சூலையிலே நெருப்பு வெக்கையிலே எப்படியெல்லாம் வாடியிருப்பார். இருவரும் அயராது உழைத்தார்கள். தற்கொலை என்னும் முடிவை நான் தேடிப் போகாமல் பிரச்சினையிலிருந்து என்னை மீட்ட பெருமை இந்தத் தன்னிகரில்லாத பாசத்திலேயே அடங்கிக் கிடக்கிறது.

ஒருமுறை சிறுநீரகக் கோளாற்றினால் நான் துன்புற்றபோது மாமி உண்ணா நோன்பு இருந்து என்னுடைய நோய் குணமாகக் கடவுளை வேண்டினார். இந்தச் சம்பவங்களை இன்று நான் நினைத்துப் பார்த்த போது இன்னும் என் மாமியைப் பட்டுப் பீதாம்பரம் அலங்கரித்து மணி மாடத்தில் உயர்த்தி வைத்து, அழகு பார்த்திருக்க வேண்டாமா என்று மனம் ஏங்குகின்றது.

திரு, திருமணம் செய்வதற்கு முன் திருவின் சைக்கிள், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் விற்கும் கடையில் வேலை பார்த்தவர்களுக்கு எங்கள் வீட்டிலேயே பார்வதி சமைத்துப் போடுவாள். சாப்பாட்டு மேசையில் உணவைச் சமைத்து மேசையிலே வைத்துவிடுவாள். அவர்கள் தமக்கு ஏற்றது போலப் போட்டுச் சாப்பிட்டு விட்டுப் போவார்கள். ஒரு தடவைகூட அவர்களுக்குத் தட்டில் உணவு போட்டுக் கொடுத்ததில்லை. காரணம் கேட்டால், அவர்கள் வயிறு நிறையச் சாப்பிட வேண்டும். நாங்கள் நின்றால், கூச்சப்பட்டு சாப்பாட்டைக் குறைத்து விடுவார்கள் என்பாள்.

இவ்வாறு மனம் படைத்தவளைக் கடவுள் 58 வயதிலேயே அழைத்துக் கொண்டு போய்விட்டார். தன் வீட்டுச் சமையலறையில் தொழில் கொடுப்பதற்கு என்று என் வீட்டுச் சமையலறையின் பொலிவை இறைவன் நீக்கிவிட்டான் என்று நினைக்கிறேன். எங்களுடைய வீட்டுக்குப் பக்கத்திலே இராஜன் டொக்டர் என்பவர் மருத்துவம் பார்த்து வந்தார். பார்வதிக்கு விற்றமின் பியை ஊசி மூலம் வீட்டுக்கு வந்தே செலுத்திவிடுவார். எங்கள் வீட்டுச் சமையலறையிலிருந்து பார்த்தால், அவருடைய மருந்தகத்தின் பின்னேயிருந்து அவர் இளைப்பாறுவது தெரியும். சிலவேளைகளில் சீட்டுக்கட்டு விளையாடுவார். ஒருமுறை பெரியவர்கள் விளையாடுவதைக் கீரன் பார்த்துக் கொண்டு நின்றான் என்பதற்காகப் பிரம்பு உடையும் வரை பார்வதி அவனை அடித்ததை நினைக்கும் போது சீட்டுக்கட்டில் அவளுக்கிருந்த வெறுப்பு நன்றாகவே விளங்கியது.

அக்காலத்தில் சீட்டு விளையாடிக் கெட்டுப் போனவர்கள் அதிகம். அந்த நிலை தன்னுடைய பிள்ளைகளுக்கு வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தாள். ஆனால், ஜெர்மனியில் பார்த்தால், பிள்ளைகளுக்கு அதிகமாகச் சீட்டு விளையாட்டுக்கள் இருப்பதைக் காணுகின்றேன். அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு உதவும் என்று சொல்லுகின்றார்கள். விளையாட்டின் மூலமே இலகுவாகக் கற்பிக்கலாம் என்று கருதுகின்றார்கள். காலம் பலவற்றை எம்முடைய மனத்தில் கழுவித் துடைத்து விட்டுப் புதிய பாதையைக் காட்டுகிறது.

டொக்டருடைய மருந்தகத்திற்கு அடுத்து இந்தியர்களின் ஒரு சாக்குத் தைக்கின்ற கடை இருந்தது. அதைக் கடந்தால், ஒரு கிறவள் வீதி இருந்தது. இந்த வீதியில் சாக்குகளை விரித்து விடுவார்கள். திரும்பினால் பிள்ளையார் கோயில் தென்படும். கோயிலின் மறுபக்கம் பிரதான வீதி இருந்தது. அங்கேயே பிரதான பஸ் தரிப்பு நிலையம் இருந்தது. முன்புறம் திரும்பிய வாசற்படியில் உள்ளே பிரவேசிக்காமலே வீதியில் நின்று பிள்ளையாரைத் தரிசிக்கலாம். இப்பிள்ளையார் கோயிலுக்கு மாத்திரமே பிராமணக்குருக்கள் பூஜை செய்வதற்கு அமர்த்தப்பட்டார்கள்.

மாமரக்காட்டுக்குள்ளே மாங்காட்டுக்காளி அமர்ந்திருப்பாள். இந்த பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு எம்முடைய உறவினர்களே பூசை செய்வார்கள்.

எங்கள் ஊரின் அடையாளமே அங்கே இருந்த இரண்டு கோயில்களும்தான். ஒன்று பத்திரகாளி அம்மன் கோயில். மக்கள் படபத்திரகாளி என்று அழைப்பார்கள். கடவுள் படைத்தல் தொழில் மட்டும் செய்யவில்லை. தவறுகளைக் கண்டால் அழித்தல் தொழிலும் செய்யும். ஆத்திரம் கொண்டவள் படபத்திரகாளி என்பார்கள். அதனால், கோயிலுக்குத் தனியாகப் போவதற்கே அக்காலத்தில் மக்கள் தயங்குவார்கள். அக்காலம் இலத்திரனியல் இல்லாத காலம். மக்களின் வார்த்தைகளுக்கு மட்டுமே மதிப்புக் கொடுத்த காலம். பயமென்ற ஒன்று ஊட்டப்பட்டது என்றே நம்புகிறேன். தவறு செய்யாத மனிதன் எதற்காக ஆண்டவனுக்குப் பயப்பட வேண்டும்.

பிராமணரைத் தவிர்த்து விஸ்வகுல மக்களுக்கு மாத்திரமே பூணூல் போடுகின்ற தகுதி இருக்கின்றது. கோயில் மூலஸ்தானத்தில் காலடி வைக்கும் உரிமையும் இருக்கின்றது. பரிசுத்தமான தாலியைச் செய்கின்ற போது விரதம் இருந்தே தாலி செய்வார்கள். அம்மனைத் தொட்டு அலங்கரிக்க அவர்களுக்கே உரிமை இருந்தது. நாங்கள் தங்கத்தைத் தொட்டு தொழில் புரிபவர்கள் என்று நிமிர்ந்து நின்று பெருமை பேசுவார்கள். அதனாலேயே ‘‘இறக்கப் போனாலும் சிறக்கப் போவார்கள்’’ என்று பொற்கொல்லருக்கு ஒரு பழமொழி இருக்கின்றது. காளியம்மன் கோயில் விஸ்வகுல மக்களாகிய பொற்கொல்லராலேயே பூசை செய்யப்பட்டது.

ஓர் அம்மன் சிலை செய்தார்களாம். அந்த அம்மனுக்கான உரிமைப் போராட்டம் நடந்ததாம். அம்மன் சிலை செய்த சிற்பி. அது தனக்குத்தான் சொந்தம் என்றானாம், அதற்கு ஆடை கட்டிய நெசவாளி அது தனக்குத் தான் சொந்தம் என்றானாம். இறுதியாக நகை போட்டுத் தாலியைக் கட்டி விட்டு எனக்குத்தான் சொந்தம் என்று உரிமையை எடுத்துக் கொண்டானாம் பொற்கொல்லன் என்று ஒரு கதை சொல்வார்கள். அதனால், அம்மன் கோயில் எம்மவர்க்குச் சொந்தமானது.

பிள்ளையார் கோயிலில் தினப்பூசை நடைபெறும். ஆலயமணி ஓசை எங்கள் வீடு வரை ஒலிக்கும். மணிச் சத்தம் கேட்டவுடன் கோயிலுக்கு ஓடிப் போய்விடுவார்கள். அங்குதான் வாராவாரம் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை ஒழுங்கு பண்ணியிருந்தேன். சொன்னால் உடனே கேட்கும் மனிதர்களை எந்தக் காலத்தில் நாம் கண்டிருக்கின்றோம்.

வீடுவீடாகச் சென்று பிள்ளைகளைக் கூட்டுப்பிரார்த்தனைக்கு வரும்படி அழைத்தேன். காரணம் பிள்ளைகளுக்கு ஒருங்கிணைப்பு, ஒழுக்கமுறை, ஒற்றுமை போன்றவை போதிக்கப்பட வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது. சங்கீத ஆசிரியை பஜனைப் பாடல்களைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பார். இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருந்தார். அவருடைய கணவன் எங்களுடைய பாடசாலையிலே கற்பிப்பதற்காக வந்திருந்தார். இவர் தன்னுடைய வீட்டிலிருந்து பிள்ளைகளுக்குச் சங்கீதம் ரியூசன் சொல்லிக் கொடுப்பார்.

“பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்.”

“ஓம் சக்தி ஓம். ஓம் சக்தி ஓம் ஓம் பராசக்தி” என்று அவ பாட பிள்ளைகள் சத்தமாகப் பாடுவார்கள்.

அவர்களுக்குக் கடலை, அவல், பொங்கல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பேன். நானும் இருந்து பிள்ளைச் செல்வங்களுக்குத் தேவாரங்கள் சொல்லிக் கொடுப்பேன்.

“பிடியதன் உருவுமை கொளமிகு கரியது..” என்று பாடத்தொடங்கினால் எதிர்கால எங்கள் ஊர்ச் செல்வங்கள் தொண்டையைத் திறந்து பாடும் போது மனத்துக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

“இந்தத் தேவாரம் நீங்களே என்னுடைய மனத்தில் பதித்தீர்கள் குஞ்சப்பா” என்று பரமா சொல்லும் போது அவளுடைய மனத்தைத் தட்டிய என் குரலை எண்ணி மகிழ்வேன்.

என் வெற்றி எங்கே இருக்கிறது? என்றால் ஊர் மனை எங்கும் வெள்ளிக்கிழமை தோறும் ஒலித்த சிறுவர்களின் பஜனைப் பாடல்களிலே தான் இருக்கிறது. அதன் பின்புதான் மாலைப் பூஜை நடைபெறும்.

நான் அந்தக் குழந்தைகளின் குரலில் கரைந்து போவேன். பிள்ளைகளுடன் பேசும்போது பிள்ளையாக மாறிவிடுவேன். இளைஞர்களுடன் பேசும்போது இளைஞனாகி விடுவேன். அதனால், எல்லாருக்கும் நான் ஐயாதான். இதனாலேயே இவற்றைக் கேட்டு வளர்ந்த என் உதிரத்தில் பிறந்த என் பிள்ளைகளும் என்னை ஐயா என்றுதான் அழைக்கின்றார்கள். என் ஊரை வெகுவாக நான் நேசித்தேன். அதில் ஒவ்வொரு முகங்களும் எனக்குப் பரிச்சயமானவை. சொந்தம் கொண்டாடியவை.

இதேபோல திருவெம்பாவை நாட்களில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வீடுவீடாக அதிகாலையில் திருவெம்பாவைப் பாடல்கள் பாடிச் சென்றதை நினைத்துப் பார்க்கும் போது எத்தனை இனிமையான அனுபவங்களை இழந்து இப்போது ஒரு வேற்றுலக வாசிகள் போல் நாம் வாழ்வது மனத்துக்குள் ஒரு வெறுமையைக் கொண்டு வருகிறது.

இவை எல்லாவற்றையும் எங்கள் போராட்டம் அழித்துவிட்டது. இளைஞர்களைப் பொத்திப் பொத்திப் பெற்றோர் பாதுகாக்கத் தொடங்கிவிட்டார்கள். மக்களின் மனங்களில் எல்லாம் பயமும் பீதியுமே குடி கொண்டிருந்தது.

எங்களுடைய பத்திரகாளி அம்மன் ஆலயம் பற்றி நன்றாகவே வரிக்கு வரி மூளை பதிந்து வைத்திருக்கின்றது. நான் மறந்தாலும் என் மூளைக்கடவுள் மறக்க மாட்டாது என்று நினைக்கிறேன். கோயில் என்பது ஒரு கட்டிடம் மட்டுமல்ல. எங்களுடைய மக்களின் வரலாறு, கலாசாரம், பண்பாடு. அம்மன் கோயில் ஒன்றும் தான்தோன்றியாகத் தோன்றியது அல்ல. அம்மன் தேடிவந்து அமர்ந்து கொண்ட வரலாறு அதற்கு உண்டு.

இப்போது ஆலயம் அமைந்திருக்கும் இடம் முற்காலத்தில் காட்டுமாமரங்கள் அமைந்திருந்த சோலையாக இருந்தது. அக்காலத்தில் அங்கே யானைகளைக் கட்டி வைப்பது வழக்கம். எம்முடைய ஊர் மக்கள் தம்முடைய காலைக்கடனை முடிப்பதற்காக அங்கு வருவதும் வழக்கமாக இருந்தது. ஒருநாள் உலகநாதர் என்பவர் தன்னுடைய காலைக்கடனை முடிப்பதற்காக ஒரு மரத்தின் கீழ் அமரப் போயிருக்கின்றார். அப்போது ஒரு கரிய உருவம் காட்டுமரம் ஒன்றில் ஏறுவதைக் கண்டு பயந்து வீட்டுக்கு ஓடியிருக்கின்றார். திடீரென ஏற்பட்ட பயத்தின் காரணத்தினால், இவருக்குக் காய்ச்சல் நெருப்பாய்க் கொதித்திருக்கின்றது. பொதுவாகவே உடல் வெப்பம் அதிகரிக்கும் போது உடல் உறுப்புக்களில் அந்நிய உணர்வு ஏற்படும். அப்போது மூளை கூடத் தன்னுடைய தொழிற்பாட்டை அதிகரிக்கும். இவருக்குக் கந்தப்பர் என்பவர் திருநீற்றிலே மந்திரங்கள் ஓதி நெற்றியிலே பூசி, முகத்துக்கு நேராக ஊதி விட்டார். ஊரிலே அக்காலத்தில் கந்தப்பரே இந்த மந்திரங்கள் செய்பவராக இருந்தார். எனக்குக் காய்ச்சல் வந்தாலும் அம்மா இப்படி மந்திரம் தெரிந்தவர்களிடம் சொல்லித் திருநீறும், தண்ணீரும் ஓதிக் குடிக்கத் தந்ததாக ஞாபகம் இருக்கின்றது.

இந்த எக்ஸ்ரே கதிர்கள், எம்.ஆர்.ரி ஸ்கேனிங், இரத்தப் பரிசோதனை எதுவுமே இருந்ததில்லை. ஒரு திருநீறு எல்லா நோய்க்கும் எமனாகி விடும். அது தாண்டினால், கை நாடியைப் பிடித்து உடல் உள்ளே என்ன நடக்கிறது என்று கண்டு பிடித்துவிடுவார்கள். அதற்கேற்ப மூலிகை வைத்தியம் கிடைக்கும்.

காய்ச்சல் மிகுதியால் உலகநாதர் ஒரு கனவு கண்டாராம். அக்கனவில் ஒரு பெண் தோன்றி "நான் காளி. இந்தியாவிலிருந்து வந்திருக்கின்றேன். நாங்கள் சகோதரிகள் மூவர் இலங்கை வந்திருக்கின்றோம். ஓர் அக்கா சம்பூருக்குப் போய்விட்டார். நான் இங்கே வந்திருக்கின்றேன். எனக்கு ஒரு கோயில் கட்ட வேண்டும்" என்று கூறியிருக்கின்றாள். எங்கே கட்ட வேண்டும் என்று உலகநாதர் கேட்டதாகவும், அதற்கு "யானை கட்டும் காட்டு மாமரச்சோலைக்குள் போய்ப் பார் அங்கு தெரியும்" என்ற மறைந்ததாகவும் அவர் கூறினார்.

அதற்குப் பிறகு உலகநாதர் கந்தப்பரையும் சில ஊராரையும் கூட்டிக் கொண்டு போய்ப் பார்த்தபோது ஒரு மரத்தின் கீழ் வெள்ளிப்பிரம்பும், தேசிப்பழமும், ஒரு இயந்திரத் தகடும் கண்டிருக்கின்றார்கள். உடனே அந்த இடத்தில் பூசை செய்து ஒருநாள் சடங்காக ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் கந்தப்பருக்கே ஓரளவு மந்திரம் தெரிந்திருந்தது. அந்த மந்திரங்களின் உதவியுடன் பூசை செய்திருக்கின்றார். ஆனாலும், காளி அம்மனைக் குளிர்விக்கும் குறித்த மந்திரங்கள் எனக்குத் தெரியவில்லையே எப்படி என்னால் முறைப்படி பூசை செய்யமுடியும்? என்று கந்தப்பர் கலங்கி அம்பாளிடம் புலம்புவது வழக்கமாக இருந்ததாம். அப்போது அம்பாள் அவருடைய கனவில் தோன்றி அவருடைய நாவை நீட்டும்படிச் சொல்லி நாக்கிலே சூலம் அடையாளம் போட்டாளாம். அதன்பின் நீ கேட்பது கிடைக்கும் என்று சொல்லி மறைந்தாளாம். இதேவேளையிலே ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

ஏறாவூர் 5 ஆம் குறிச்சியிலே பரமக்கட்டாடியார் என்னும் ஒருவர் இருந்தார். ஓர் இந்தியப் பிரயாணி இவருடைய வீட்டிலே தங்கியிருந்தார். அவர் அங்கிருந்து கிளம்பும் போது ஓர் இரும்புப் பெட்டியைப் பரமக்கட்டாடி வீட்டிலே வைத்துவிட்டுப் போய்விட்டார். அந்தப் பெட்டிக்குள்ளே எப்போதும் மணி அடிக்கின்ற ஒலி வந்து கொண்டிருக்குமாம். கந்தப்பர் அவரிடம் போனபோது இவ்விடயத்தை அவர் கந்தப்பரிடம் சொல்லியிருக்கின்றார். அவரும் ஏதாவது அதற்குள் இருந்து உனக்கு "ஏதாவது பிரச்சினை வந்துவிடும் உடைத்துப் பார்" என்று சொன்னாராம்.

பரமக்கட்டாடியும் சம்மதித்து அந்தப் பெட்டியை உடைத்துப் பார்த்த போது அதற்குள் ஏட்டுக்கட்டுகள் இருந்தனவாம். அதிலே அம்பாளின் பூசை விதிமுறைகள் முழுவதுமாகக் காணப்பட்டனவாம். பரமக்கட்டாடியும் இதை நான் வைத்து என்ன செய்யப் போகின்றேன். நீங்களே கொண்டு போங்கள் என்று கொடுத்ததாகவும், அதைப் படித்தே கந்தப்பர் முதன்முதலாகப் பூசை விதிமுறைகளின் படி ஆலயச் சடங்குகளும் பூசைகளும் செய்ததாகவும், இந்தப் பூசை நடைபெறுகின்ற போது வண்ணார் குல மக்கள் 5 ஆம் குறிச்சியிலே மாரியம்மனுக்கு பூசை செய்கின்ற வழக்கம் இருந்தது. இதுவே பத்திரகாளியம்மன் ஆலயம் தோன்றிய வரலாறாகக் கூறப்படுகிறது.

முதலில் இவ் ஆலயம் பந்தலாகக் கட்டப்பட்டுப் பின் களிமண்ணால் கட்டப்பட்டுக் கல்லால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது மக்கள் வாய்மொழி வந்த கதையாகவே இருக்கின்றது. எனக்குள்ளாகவே பல கேள்விகள் இருக்கின்றன. ஏன் இந்தக் கனவுகளும் கடவுளின் நேரடித் தோற்றமும் இக்காலத்தில் நடப்பதில்லை. கலியுக காலம் என்பதனால், இப்படித்தான் எல்லாம் அழிந்தும் மறைந்தும் போகுமோ என்னவோ.

கோயிலிலே நடக்கின்ற சடங்கு முறைகளும் வழிவழி வந்ததாகவும் அதனைத் தொடர்ந்து அதேபோலவே நடக்க வேண்டுமென்றும் எம்மூர் மக்கள் விரும்பினார்கள். அதில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டால், அது தெய்வக் குற்றமாக மாறிவிடும் என்று அவர்கள் நம்பினார்கள். இந்த நம்பிக்கையில் வழிவழி வந்த அந்த மந்திரங்களைக் கற்றுப் பூஜைகள் நடத்தப்பட்டன.

இந்தச் சடங்குமுறைகள் மிக அற்புதமாக இருக்கும். சாத்திரச் சம்பிரதாயங்களை உடைக்காமல் நடத்தப்பட வேண்டும் என்பது எம்முடைய கிராம மக்களின் கட்டுப்பாடாக இருந்தது. கோயில் சடங்கு ஆரம்பித்து விட்டால் வெளியூரிலே தொழில் நிமித்தம் வாழுகின்ற எம்மூர் மக்கள் ஊருக்கு வந்துவிடுவார்கள். சடங்கு ஆரம்பக் காலத்தில் ஒருநாள் நடத்தப்பட்டு முறையே 3,5,7,9.11,13 என்று வளர்ந்து வந்து தற்போது 13 நாட்கள் அல்லது 11 நாட்கள் நடத்தப்படுகின்றன.

முதலாவது நாள் ஏறாவூரிலே குறிக்கப்பட்ட ஒரு காணிக்குள் வாழைப்பழம் பழுக்கப்போடுவார்கள். கிடங்கு வெட்டி அதற்குள்

வாழைக்காய்களைப் போட்டு மூடிவைப்பார்கள். அதற்குள் வாழைக்காய்கள் மூன்றாவது நாள் கனிந்து பழமாகியிருக்கும். அதன்பின் மூன்றாம் நாள் அந்த வாழைப்பழங்களை வெளியே பிள்ளையார் கோயிலிலே இருந்து மேளதாளங்களுடன் ஊர் வலமாக எடுத்து வந்து முதலாவது சடங்கு நடைபெறும். இச்சடங்கை நிருவாக சபையினரே நடத்துவார்கள். அம்மனுடைய முகக்களை பிள்ளையார் கோயிலிலிருந்து எடுத்து வரப்படும். கோயில் தலைவர் தலையிலே முகக்களைத் தட்டு வைக்கப்படும். அந்தத் தட்டைத் தலைவர் அம்மன் கோயில் வரைக் காவி வரவேண்டும். அன்றைய நாள் அவரவர் வீட்டுக்கு முன் கும்பம், குத்துவிளக்கு போன்றவையும் கடலை, அவல் போன்ற படையல்களும் வைப்பார்கள். நான் தலையிலே முகக்களை தூக்குவதைத் தவிர்த்து வந்தேன். ஒருநாள் தெய்வக்களை ஆடி வருகின்ற ஒருவர் தெய்வம் ஆடிவந்து என்னை இழுத்துக் கொண்டுபோய் என்னுடைய தலையிலே அம்மனுடைய முகக்களையைத் தூக்கி வைத்து விட்டார். ஒரு சிறிய தங்கத்தால் செய்யப்பட்ட அந்த அம்மனின் முகம் மட்டுமே அத்தட்டிலே இருந்தது. நான் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத பாரமாக அத்தட்டு இருந்தது. தலை உடைந்து விடும் போன்ற பாரமாக இருந்தது. இது எனக்கு ஆச்சரியத்தையும் அற்புதத்தையும் காட்டியது.

இவ்வாறு பத்திரகாளி அம்மன் கோயிலுக்குக் கொண்டுவரப்பட்ட அம்மனின் முகக்களையை மூலஸ்தானத்துக்குக் கொண்டு வந்து பிரம்ம மூகூர்த்தத்தில் பூசை ஆரம்பிக்கப்படும். இதற்கு முந்தைய நாள் இரவு தொடர்ந்து வரும் 13 நாட்கள் நடைபெற இருக்கின்ற சடங்கிலும் எவ்விதக் குற்றங்களும் இடையூறுகளும் ஏற்படா வண்ணம் கோயிலைச் சுற்றி நான்கு மூலையிலும் அட்டதிக்குப் பாலகர்களுக்கு நோற்புக் கட்டும் நிகழ்வு நடைபெறும்.

ஒவ்வொரு நாள் சடங்கின் போதும் பட்டு எடுத்து வரப்படும். 4 தடியிலே உச்சியில் சீலை கட்டி 4 பேர் பிடித்துவர அதற்குக் கீழே அம்மனுக்கு உடுத்தும் பட்டாடை, கமுகம்பாளை, தோடம்பழம், பலாப்பழம் போன்றவற்றைத் தட்டுக்களில் ஏந்தி வருவார்கள்.

ஒவ்வொருநாள் சடங்கிலும் தெய்வம் ஆடுபவர்களுடன் பூசை நடைபெறும். நேர்த்திக்கடன் வைத்த பெண்கள் தீச்சட்டி, கற்பூர விளக்கு, ஏந்தி அம்பாளுக்குக் காணிக்கை செலுத்துவார்கள். தெய்வம் வந்து ஆடுபவர்கள் அருள்வாக்கு எனப்படும் கட்டுச் சொல்வார்கள்.

ஒவ்வொருவரும் தமக்குக் கட்டுச் சொல்ல மாட்டார்களா என்று தலையை நீட்டி நிற்பார்கள். ஆனால், தெய்வம் தண்ணீர் எறிந்து யாரை அழைக்கின்றதோ, அவர்களுக்குத்தான் அந்த வாய்ப்புக் கிடைக்கும். அவர்களின் முகத்தில் மஞ்சள் பூசி அவர்களின் குறைகளைத் தீர்க்கும் பரிகாரம் தெய்வம் ஆடுபவர்களால் சொல்லப்படும். இதனால் பலனடைந்த பக்தர்கள் கோயிலுக்கு அம்மன் கேட்டவற்றைச் செய்வார்கள்.

ஒவ்வொருநாளும் அம்மனுக்குப் படைக்கின்ற உணவு உள்ளமுது என்ற பெயர் கொண்டு அழைக்கப்படும். சமைப்பவர்கள் தங்களுடைய வாயையும், தலைமயிரையும் துணியால் கட்டிப் பரிசுத்தமாகச் சமைப்பார்கள். அத்துடன் மா, பலா, வாழை, மாதுளம்பழம், தேன், தேசிப்பழச் சாறு, தோடம்பழம் போன்றவற்றைக் கலந்து செய்யப்படும் பானக்கம் என்ற ஒரு பானமும் படைப்பார்கள். இந்த இரண்டும் எத்தனை கோடி கொடுத்தும் உங்களால் வாங்கமுடியாது. தேவாமிர்தம் என்று சொல்வார்களே அதை நான் சுவைத்துப் பார்த்ததில்லை. ஆனால், அது இந்தச்சுவை போலத்தான் இருக்கும் என்று நம்புகின்றேன். எங்களுடைய வீட்டுப் பெண்களும் இதைப் போல் சமைக்க முயன்று தோற்றுத்தான் போவார்கள்.

அம்மனுக்குப் படைத்த இந்த உள்ளமுதுச் சோற்றை எடுத்து வாழை யிலையிலே கட்டி எனக்கு வண்ணக்கர்மார்கள் தருவார்கள். இந்த உணவு மடப்பள்ளி என்று சொல்லப்படும் கட்டிடத்திலேயே சமைக்கப்படும். அதை அப்படியே வீட்டுக்குக் கொண்டு வந்து கொடுப்பேன். கைகளிலே அந்தச் சோற்றைப் பார்வதி கைப்பிடியாக ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிப்பாள். சில விடயங்கள் இறக்கும் வரை எமக்குப் புரிவதேயில்லை. இந்தச் சோறு வழமையாக நாம் வீட்டிலே சமைக்கின்றது போலவேதான் சமைக்கப்படும். முருங்கைக்காய், கத்தரிக்காய், வாழைக்காய் என்று மரக்கறி வகைகளைச் சமைப்பார்கள். அத்தனையும் சோறு உட்படத் தேங்காய்ப் பாலினாலேயே சமைக்கப்படும். அம்மன் சன்னிதியில் அம்மனுக்காகச் சமைத்துப் படைக்கப்படும். கற்பூரம், சந்தனக்குச்சி, சாம்பிராணிப் புகைகளின் வாசனையும் சேர்த்தே இத்தகைய நறுமணத்தைக் கொடுக்கிறது என்று நான் நம்புகிறேன்.

ஒவ்வொரு நாள் பூசையும் தெய்வம் ஆடுவது, அருள்வாக்குச் சொல்வது, கோயிலைச் சுற்றித் தெய்வம் ஆடி வருவது, அத்தெய்வங்களை மந்திரம் தெரிந்தவர்கள் தம்முடைய மந்திரத் திறமையால் கட்டுவது,

அதனால், அவர்கள் ஆடிவரும் வேகத்திலே விழுவது, அதனை மந்திரம் தெரிந்த பூசாரிமார் தம்முடைய மந்திரத் திறமையால் எழுப்புவது எனச் சடங்கு ஆர்ப்பாட்டமாக இருக்கும்.

11 ஆவது நாள் அம்பாள் ஏறாவூர் வீதிகளில் ஊர்வலம் வருவாள். அப்போது ஒவ்வொரு வீட்டுக்காரரும், கடைக்காரரும் தம்முடைய வீட்டுக்கு அம்பாள் வருவது போலப் பாவனை பண்ணி வீட்டின் முகப்பை அலங்காரம் செய்து நிறைகுடம் விளக்கு வைத்து, அவல், கடலை, பொங்கல் போன்றவற்றைச் செய்து வைத்திருப்பார்கள். அம்பாளுடன் வருகின்ற சனக்கூட்டத்திற்கு அதனைப் பகிர்ந்தளிப்பார்கள். அம்பாள் பவனி வரும் அழகே அழகுதான்.

12 ஆம் நாள் காலையில் சடங்கில் நோற்பு நெல் நேர்தல் நடைபெறும். அதாவது தெய்வாதிகளுடன் கோயிலை வலம் வந்து 5 அல்லது 7 பெட்டிகளில் நெல் எடுத்து வந்து அந்த நெல்லை வெயிலில் காயப்போடுவார்கள்.

பிற்பகல் பலி கொடுக்கப்படுபவற்றுக்குக் காப்புக்கட்டி விடுவார்கள். அக்கோழி, ஆடு, மாடு போன்ற நேர்த்திக்கடனுக்கு வந்தவற்றைச் சடங்குகள் முடிந்தபின் விற்றுக் கோயிற்பணிக்கும் பயன்படுத்துவார்கள்.

12 ஆம் நாள் இரவு 10 மணிக்கு விநாயகப்பானை எழுந்திரப் பண்ணல் பூசை நடைபெறும். பொங்கல் பொங்கப்படும். அது பொங்கிய பின் அதிலிருந்து எடுக்கும் நெருப்பினாலேயே தீக்குளி மூட்டப்படும். தீக்குளி மூட்டும் முன், தீக்குளி மூட்டும் இடத்தின் 4 மூலைகளுக்கும் பூசை செய்யப்படும்.

கோயிலின் 13 ஆம் நாள் தீமிதிப்புக்கு முந்திய நாள் இரவிரவாகக் கோயிலில் பூசை நடந்து கொண்டிருக்கும்.

13 ஆவது நாள் தீமிதிப்பு வைபவம் நடைபெறும். அதற்கும் ஒரு வரலாறு சொல்லப்படுகின்றது. முதல் பூசாரி “நரபலி தரவேண்டும்” என்று கேட்டதாகவும் அதற்குச் சம்மதிக்காத போது “அக்கினி வளர்த்து அக்கினியில் நாங்கள் இறங்க வேண்டும்” என்று கேட்டதாகவும் அதனாலேயே தீக்குளிக்கும் சடங்குமுறை ஆரம்பிக்கப்பட்டது என்று வரலாறு கூறுகின்றது.

அத் தீமிதிப்பு நிறைவு பெற்றதும் பிற்பகல் 4 மணியளவில் சக்கரையாமுது கொடுப்பார்கள். அதன் பின் பாலமிர்தம் (பொங்கல், கூழ், தளிர், வாழைப்பழம், பலகாரம், எல்லாவற்றையும் கரைத்து எடுப்பது) வைத்து அட்டதிக்குப் பாலகர்களுக்கு இத்தனை நாளும் இந்தச் சடங்கு நடைமுறைகள் எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் நடப்பதற்குப் பாதுகாத்தமைக்காக அவர்களைச் சந்தோசப்படுத்தும் வண்ணம் நோற்பு எட்டுத் திக்குகளுக்கும் எறியப்படும்.

ஒரு காலப்பகுதியில் ஏறாவூரிலே பிறக்கின்ற ஆண் குழந்தைகள் பிறந்தவுடன் இறந்துவிடுமாம். காரணம் தெரியாது மக்கள் தவித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த பால்குடி பாவா என்னும் ஒரு சித்தர் அதற்குப் பரிகாரம் சொன்னாராம். அதாவது உங்களுடைய கோயிலிலே நடக்கின்ற சடங்குக் காலப்பகுதியில் ஏழு கன்னிமாருக்கு ஓர காத்தானை வைத்துக் கோயிலிலே தீமிதிப்பு முடிந்தபின் ஏழு கன்னிமாருக்கும் காத்தான் மூலமாகச் சுகம் தருவீர்களா? சுகம் தருவீர்களா? என்று மூன்று முறை கேட்டு பானக்கம் கொடுக்க வேண்டும் என்று சொன்னாராம். இந்த நடைமுறை இன்றும் நடத்தப்படுகின்றது. இதனைச் சக்கரையாமுது என்பார்கள்.

இவ்வாறு கோயில் சடங்கு முறைகள் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட விதி முறைகளுக்கேற்ப வருடாவருடம் நடைபெறும். இவ்விதி முறையை மாற்றுவதை ஊரார் விரும்புவதில்லை. மூதாதையரின் பண்பாடு தொடர வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக இருக்க வேண்டும்.

இந்த ஆலயம் பற்றிப் பல வரலாற்றுக் கதைகள் வாய்மொழி மூலம் வழங்கி வருகின்றது. அங்கே கோயிலுக்கு ஒரு திருடன் வந்திருக்கின்றான். அவனை அச்சுறுத்துவதற்காக அம்மன் தன்னுடைய சூலாயுதத்தால் எறிந்திருக்கின்றார். அச்சூலாயுதம் ஓட்டைக் கிழித்து அங்கிருந்த காட்டு மாமரத்திலே குத்தப்பட்டு அப்படியே இருந்திருக்கின்றது. கோயிலுக்கு வந்தவர்கள் ஒரு மனிதன் தடவிக்கொண்டு வெளியே போக முடியாமல் கண் தெரியாமல் நிற்பதைக் கண்டு

“நீ யார்?” என்று கேட்டபோது,

“நான் இங்கு உண்மையில் களவெடுக்கவே வந்தேன். ஒரு வெளிச்சம் எனக்குத் திடீரெனத் தெரிந்தது. அதற்குப் பிறகு என்னுடைய கண் தெரியவில்லை” என்று சொன்னானாம்.

சூறாவளியிலேதான் அம்மரம் சாய்ந்தது. என் இரு கண்களாலும் இந்தச் சூலாயுதத்தைக் கண்டிருக்கின்றேன்.

அதைவிட அண்மையில் கொழும்பிலே வாழ்ந்து வந்த பத்மாவதி என்னும் ஒரு பெண் முற்காலத்திலே ஏறாவூரிலே இடியப்பம் விற்று வந்திருக்கின்றாள். காலையில் விடிவதற்கு முன்னமே கோயில் வீதியால் அவள் செல்வது வழக்கம். ஒருநாள் அங்கிருந்த ஒரு மரத்தின் மேலே அவவை ஒரு காடேறி என்று சொல்லப்படும் வனதுர்க்கை விளையாட்டாக ஏற்றி விட்டதாகவும், அதன்பின் அம்மன் அங்கு வந்து ஒரு வெள்ளிப் பிரம்பையும், வேப்பம் குலையையும் கையிலே கொடுத்துப் ‘‘பயப்படாமல் வீட்டுக்குத் திரும்பிப் பார்க்காமல் போ’’ என்று அனுப்பியதாகவும் அந்தப்பெண் சாகும் வரை அந்தப் பிரம்பை வைத்திருந்ததாகவும் அறிந்தேன். காடேறி என்பது அம்மனுக்கு இரு பக்கமும் காவலாக இருப்பவர்கள். இவர்களை இந்தச் சம்பவத்திற்குப் பின் கோயிலுக்குள் கொண்டு வந்து வைரவ வேலிக் கட்டுப்பாட்டுடன் வைத்திருந்தார்கள்.

தற்போது இலண்டனில் வசிக்கின்ற ஒரு பெண்ணின் தந்தை எங்கள் ஊரில் சுருட்டுக் கடை வைத்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். ஒருநாள் காலையில் பாடசாலைக்குப் போவதற்கு முன் பத்திரகாளி அம்மன் கோயிலுக்குப் போவோம் என்று போயிருக்கிறாள். அதிகாலை உள்ளே போன போது மூலஸ்தானப் படிக்கட்டிலே நீண்ட தலைமயிரை விரித்து விட்டு வெள்ளைச் சீலை உடுத்த ஒரு பெண்ணைக் கண்டு பயந்து ஓடி வந்தார். அன்றிலிருந்து கடுமையான காய்ச்சலில் இருந்தார். இவ்வாறு பல சுவையான வாய்மொழிக் கதைகளைத் தாங்கிப் பத்திரகாளி அம்மன் அற்புதங்களை நடத்தினார்.

இக்கோயிலிலே தலைவராகவும், செயலாளராகவும் நான் இருந்து கோயில் கட்டிடப் பணிகளுக்கு உழைத்திருக்கின்றேன். அரசியல்வாதிகளிடம் சென்று உதவித்தொகை பெற்றிருக்கின்றேன்.

இத்தனை இளஞ் சமுதாயம் உலகளாவிய ரீதியிலே தொடர்புகளை வைத்திருக்கின்றார்கள். கைக்குள்ளே உலகத்தைக் கொண்டு செல்கின்றார்கள். இதுவரை நான் செய்ததுபோல ஒரு கலைவிழாவை என் காலத்துக்குப் பிறகு யாருமே செய்யவில்லை என்பதை நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்லுகின்றேன்.

கோயில் வீதியிலே பெரிய மேடை அமைத்து இரவிரவாகக் கலை நிகழ்ச்சிகளை நடத்துவோம். ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு நிரம்பி வடிவார்கள். கோயில் வீதியிலே சுற்றி வரக் கடைகள் போடப்பட்டிருக்கும். பலவிதமான வளையல்கள், சட்டிபானைகள், எனப் பலதரப்பட்ட பொருட்கள் அங்கு விற்பனைக்கு இருக்கும்.

அடுத்த நாள் தீமிதிப்புக்காக வந்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அமுது கொடுக்கப்படும். அங்கு கோயிலுக்கு அருகாமையில் இருந்த மண்டபத்திலே இந்த உணவு தயாரிக்கப்படும். இந்த உணவை நானும், சிவமும், திருவும் சேர்ந்து தான் கொடுத்தோம். எங்கள் குடும்பச் செலவில் கொடுக்கப்பட்ட இந்த உணவுக்கு அன்று இரவிரவாகச் சமையல் வேலைகளைக் கண்காணித்துப் பார்வதி காலையிலேதான் வீட்டுக்கு வருவாள். பனை ஓலைப் பாயை விரித்து அதன்மேலே சமைத்த சோற்றைக் கொட்டி மரக்கறிகளையும் அம்மனுக்குப் படைப்பார்கள். பூசாரியார் வந்து அந்த உணவுக்கும் அம்மனுக்கும் பூசை பண்ணியபின்பே பக்தர்களுக்கு உணவு பரிமாறப்படும். சுடச் சுடப் பாயில் கொட்டிய உணவு பனை ஓலையில் அவிந்து ஒருவித வாசனையையும் சுவையையும் கொடுக்கும்.

அன்றைய நாள் இரவிரவாகக் கலைநிகழ்ச்சிகளை நானே பொறுப்பேற்று நடத்தினேன். இந்தக் கலைநிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்து கலந்து கொள்வார்கள். இந்தியாவிலிருந்து சௌந்தரராஜனின் மகன் செல்வகுமாரை அழைத்து வந்தேன். இவருடைய குழுவினர் எங்களுடைய வீட்டிலேதான் தங்கியிருந்தார்கள். மட்டக்களப்பு மண்ணின் சுவை உங்களுடைய மனைவியின் கைகளில் இருக்கிறது என்று சௌந்தரராஜனின் மகன் செல்வக்குமார் பார்வதியைப் பற்றி என்னிடம் புகழ்ந்தார். இந்த நிகழ்ச்சியில் அறிவிப்பாளராக வானொலி அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜாவை அழைத்திருந்தேன். அக்காலப்பகுதியில் மிமிக்ரி செய்வதில் புகழ்பெற்ற கலைஞர்களான வண்ணாத்திப்பூச்சி சகோதரர்களை சென்னையிலிருந்து அழைத்து வந்தேன்.

இதைவிடச் சின்ன மேளம் என்று சொல்லப்படும் பெண் மேளம் வாசிப்பவர்களையும் அழைத்திருந்தேன். கலைவிழாவில் பங்கு கொள்ளும் அனைத்துக் கலைஞர்களையும் எங்களுடைய வீட்டிலேதான் தங்கவைத்தேன். திறந்தவெளி அரங்கிலே மக்கள் புடைசூழ நிகழ்ச்சிகள்

நடைபெறும். இவ்வாறு பிரபலங்களை எமது கோயிலுக்கு அழைத்து வந்து நடத்துவதன் மூலமாக எம்முடைய கோயில் இலங்கை முழுவதிலும் பிரபலமானதுடன் எங்களுடைய கோயில் வருமானமும் அதிகரித்தது.

ஒருநாள் கூட பார்வதி நிகழ்ச்சி பார்த்தது இல்லை. அந்தச் சமயத்திலே மக்களுக்கான அமுது தயாரித்துக் கொண்டிருப்பாள். அவளுக்கு ஆதரவாகப் பலர் வெங்காயம் உடைப்பதும், காய்கறிகள் நறுக்குவதும், தேங்காய் துருவுவதும், பால் பிழிவதும் என்று ஆர்ப்பாட்டமாக இருக்கும். சமையல் செய்வதற்கு என்று ஆண்கள் நிற்பார்கள். பெரிய சருவப்பானையிலே சமையல் செய்வார்கள்.

தீமிதிப்பு வைபவம் நடக்கின்ற போது தெய்வக்களை வந்தவர்கள் அங்கு தீயிலே முதலில் இறங்குவார்கள். தொடர்ச்சியாக நேர்த்திக்கடன் தீர்ப்பதற்காக வந்திருந்த பக்தர்கள் தீயிலே இறங்குவார்கள். தீயின்மேல் சாம்பல் பூத்திருந்தால் சுட்டுவிடும். தீயிலே இறங்கியவர்களுக்குக் காலிலே நெருப்புச் சுட்டுவிடக் கூடாது என்பதற்காகப் பச்சைத் தென்னைமட்டையால் அடித்து அடித்து அந்தச் சாம்பலை அகற்றிவிடுவார்கள். நெருப்புப் படுக்கை மட்டப்படுத்தப்பட்டுக் கொண்டே இருப்பதற்குப் பலர் நெருப்பைச் சுற்றி நிற்பார்கள். ஒரே இடத்தில் நின்றால்தான் கால்களைச் சுட்டுவிடும். கால்களை விடுவிடு என்று எடுத்து நடந்தால் கால்கள் சுடாது. தீயில் வேகமாக ஓடிக் கால் சுட்டுத் தீப்புண் வந்தவர்களும் இருக்கின்றார்கள்.

எனக்கோ எனது குடும்பத்தினருக்கோ இதுவரை தீமிதிக்கச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அதற்குரிய அவசியத்தையும் இந்தப் பிரபஞ்சம் எங்களுக்கு ஏற்படுத்தித் தரவில்லை.

தீமிதிப்பு வைபவம் நடந்து முடிந்து எல்லோரும் உணவுக்காக எங்களுடைய உணவு தயாரிக்கப்பட்ட மடத்துக்கு வந்தடைவார்கள். அதற்குள் உணவு பரிமாறுவதற்கு நாம் தயாராகிவிடுவோம். பெரிய பாய்களை விரித்து அதற்கு மேலேயே சோற்றைக் கொட்டி வைப்போம். பெரிய சருவப்பானை என்று சொல்வார்களே அதிலேயே கறிகள் தயாராகும். அங்கு தயாராகும் கத்தரிக்காய் பொரித்த குழம்பை நினைக்கும் போது இன்னும் என் நாவில் சுவையூறுகின்றது. பூசணிக்காய்கள் வெட்டிப் போடுகின்ற இடம் இன்னும் கண்களுக்குள் நிற்கிறது. பூசாரியைக் கொண்டு வந்து படைக்கப்பட்ட உணவுகளுக்குப் பூசை பண்ணிய பின்புதான் உணவு பரிமாற ஆயத்தமாகும்.

பந்திக்கு முந்துவதற்கு அடித்துப் பிடித்துக் கொண்டு சனம் குவியும். வரிசையில் போடப்பட்டிருந்த பாய்களில் வந்தவர்களை இருக்க வைப்போம். பரிமாறுபவர்கள் ஒவ்வொருவரும் தூக்குவாளியிலே சோறு கறிகளைப் போட்டுக் கொண்டு வரிசையாக உணவைப் பரிமாறுவார்கள். என்ன மந்திர மாயமோ தெரியவில்லை. அந்த உணவுக்கு எங்கே யிருந்துதான் சுவை வந்ததோ என்று இன்றுவரை எனக்குப் புரியவில்லை. இதுமட்டுமல்ல கோயிலிலே கொடுக்கப்படும் உள்ளமுதுக்கும் உறுசுவை ஊட்டியது யாரென்று புரியவில்லை.

கலையின் மேல் நான் கொண்ட நாட்டங்களைக் கோயில் இறுதிச் சடங்கில் நடத்துவது மட்டுமன்றி மேள கர்த்தாக்களை அழைத்து வந்ததன் மூலமாக மேள இசையின் மகத்துவத்தை எம்முடைய மக்கள் அறியக்கூடியதாக இருந்தது. இலங்கை முழுவதிலும் சல்லடை போட்டு மேள கர்த்தாக்களை அழைத்து வருவேன். முதன்முதலாகச் சின்ன மேளம் என்று அழைக்கப்படும் பெண் மேளக் கலைஞர்களை அழைத்து வந்த பெருமை என்னையே சாரும். எங்களுடைய வீட்டிலே அவர்களைத் தங்க வைப்பேன். அவர்களும் மட்டக்களப்புச் சமையலின் மகத்துவத்தைப் புகழ்ந்து தள்ளிவிட்டுப் போனார்கள்.

மேளம் வாசிக்கக் கலைஞர்கள் ஆரம்பித்தால், அப்படியே ஆலயத் தரையில் அமர்ந்துவிடுவேன். என் புலன் அனைத்தும் அதற்குள் அடங்கும். கைகள் என் மடியிலே தாளம் போடத் தொடங்கும். தலை தன்னை மறந்து அசையத் தொடங்கும். கண்கள் வெளியுலகை மறந்து மூடிவிடும். அந்த அற்புத இசையை இசைக்கத் தெரியாவிட்டாலும், இரசிக்கத் தெரியாத மனிதன் இந்தப் பிறப்பு எடுத்ததே புண்ணியம் இல்லை என்று கருதுவேன். எங்களுடைய கோயிற் சடங்கு நாட்கள் அத்தனையும் ஊரே களைகட்டும் நாட்களாகும். இது ஓர் இரம்மியமான காலப்பகுதி. என் வாழ்க்கை இவற்றையெல்லாம் இப்போது இழந்த நிற்கிறது.

பிள்ளையார் கோயிலிலே மேளக்கச்சேரி ஆரம்பிக்கும். ஊரெங்கும் உல்லாசக் காற்று இசையோடு வீசத் தொடங்கும். உள்ளத்துக்குள்ளே குதூகலம் துள்ளும். கோயிலில் பூசை முடிந்து ஊர் பவனி ஆரம்பிக்கும். சந்திக்குச் சந்தி நின்று மேள கர்த்தாக்கள் இசைக்கத் தொடங்குவார்கள். அற்புதமான பாடல்கள் இசைக்கும் போது எம்மை மறந்து நிற்போம். தில்லானா மோகனாம்பாள் திரைப்படத்தில் வருகின்ற இசை துள்ளலை

ஏற்படுத்தும். மேளக்காரர்களே அந்த சந்தர்ப்பங்களில் ஹீரோக்களாக இருப்பார்கள்.

எதிலும் முற்போக்குச் சிந்தனையும், ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கும் எண்ணமும் கொண்ட எனக்கு எமது ஆலயத்தில் ஏன் தினப்பூசை செய்து திருவிழாக் கொண்டாடக் கூடாது? என்ற எண்ணம் தோன்றியது. உயிர்களைக் கொல்வதை வெறுக்கும் நாம் ஏன் கோயில்களிலே பலி கொடுக்கும் பழங்காலத்து மனிதர்களின் பழக்கவழக்கங்களை ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், ஏற்கனவே கோயிலிலே பலி கொடுக்கும் நடைமுறையில் நாட்டம் இல்லாத எனக்கு இந்த நடைமுறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று விரும்பினேன்.

என்னுடைய இந்தச் சிந்தனைக்கு என்னோடு சிலர் ஒத்துழைப்புத் தந்தார்கள். சிலர் எதிர்த்து நின்றார்கள். கோயிலுக்கு வருகின்ற வருமானம் குறைந்து விடும் என்ற காரணத்தை முன்வைத்தார்கள்.

ஆனால், முடிவாகக் கோயிலிலே பலிபீடம் கட்டப்பட்டது. 1974 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டது. தினப்பூசை நடத்தப்பட்டது.

ஒருநாள் திடீரென இராமலிங்கம் என்பவர் தன்னுடைய வீட்டிலிருந்து அம்மனுடைய களை தனக்கு வந்ததாகக் கூறிக் கொண்டு வந்து பலிபீடத்தை உடைத்து கோழி ஒன்றைத் தன்னுடைய வாயால் கடித்துக் கொன்றார்.

அன்றிலிருந்து கோயில் நடைமுறைகள் எதிலும் நான் கலந்து கொள்ளவில்லை. அவர் இறந்த பின் அவருடைய உடலிலே பொக்களங்கள் தோன்றி வெடித்ததாக ஊரார் சொல்லக் கேள்விப்பட்டேன்.

கடவுள் என்பது உண்மையாக இருக்குமானால் படைத்து உயிர்களைக் காக்கும் கடவுள் உயிர்களைத் துடிக்கத் துடிக்கக் கொல்வதை ஒருபோதும் அனுமதிக்காது என்பதை இவருடைய இறப்பு தெரியப்படுத்தியது என்றே நான் கருதுகின்றேன்.

காய்க்கின்ற மரத்துக்குத்தான் கல்லெறி விழும் என்பார்கள். கல்லெறி விழுகின்றது என்று மரம் காய்க்காமல் இருப்பதுமில்லை. அதனுடைய பலனை மற்றவர்களுக்குக் கொடுக்காமல் இருப்பதுமில்லை. மீண்டும் அனைவரின் வேண்டுகோளுக்கும் இணங்க மீண்டும் கோயிலைப் பாரம் எடுத்தேன்.

சைவ இளைஞர் மன்றம் ஆரம்பித்தேன். அதன் மூலமாக இளைஞர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்குத் தலைமைப்பண்பை வளர்க்கும் உற்சாகத்தைக் கொடுத்தேன். மீண்டும் ஆலயம் களைகட்டியது.

கலையிலும், தமிழிலும், அரசியலிலும், விளையாட்டுத்துறையிலும் எனக்கு இருந்த நாட்டமே என்னை இன்றும் உற்சாகமாக வைத்திருக்கிறது.

உதைபந்தாட்டம் நடக்கும் இடத்தில் நான் இருப்பேன். அது மலையகமானாலும், தலைநகரமானாலும் அங்கு சென்று விடுவேன். தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் போது கவனம் முழுவதையும் விளையாட்டில் பதிப்பேன்.

இசையில் இருந்த நாட்டத்தினால் என்னுடைய மகளுடைய பூப்புனித நீராட்டு விழாவுக்கு ஆதவன் இசைக்குழுவை அழைத்து வந்தேன்.

அக்காலத்திலேயே அதிநவீன அழைப்பிதழைத் தயார் செய்து விருந்தினரை அழைத்தேன். முல்லைத்தீவில் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த X.M. செல்லத்தம்பு அவர்களும் இன்னும் பல அரசியல்வாதிகளும் விருந்துண்டு என்னுடைய மகளை ஆசீர்வதித்துச் சென்றார்கள். 3 நாட்கள் இந்த விழாவைக் கோலாகலமாக நடத்தினேன்.

கோயில் இறுதி விழாவுக்கும் என்னைப் போல் மற்றவர்களும் இன்பம் அனுபவிக்க இசைக்குழுக்களை அழைத்து வருவேன்.

தமிழை யார் எங்கே கொண்டாடுகின்றார்களோ அங்கே நான் நிற்பேன். அப்படியேதான் நான் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு யாழ்ப்பாணம் சென்ற அனுபவம் அமைந்திருந்தது.

தமிழின் மேல் பற்றுக்கொண்ட நான் 1974 ஆம் ஆண்டு தை மாதம் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்குச் சென்றிருந்தேன். மிக அற்புதமாக ஊர்திகளின் பவனியுடன் பல தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் பங்குபற்றி தமிழின் பெருமையை அறியச் செய்தார்கள். மாநாட்டின் இறுதிநாள் 10 ஆம் திகதி எந்தச் தீயசக்தியின் கண்பட்டதோ தெரியவில்லை. இலங்கைக் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூடு உட்படக் கண்ணீர்ப்புகைத் தாக்குதலினாலும் மக்கள் சின்னாபின்னமாக ஓடியதுடன் மதில் மேல் ஏறித் துள்ளியபோது கிணற்றுக்குள் விழுந்து இறந்தவர்களும், ஓடிய

மக்களின் கால்களில் மிதிபட்டு இறந்தவர்களும் பதினொரு பேர் உலக உருண்டையிலிருந்து மறைந்தார்கள்.

இந்த நாள் என் உயிரும் என்னுடைய உடலை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும். ஆனால், நான் நினைக்கிறேன் பிரியாத காரணம் இந்தச் செய்திகளைச் சொல்வதற்காகவும், இவ்வுலகில் என் பணி இன்னும் இருக்கிறது என்பதை இப்பிரபஞ்சம் எனக்கு அறிவுறுத்துவதற்காகவும் என்று நினைக்கின்றேன்.

அன்றைய தினம் நடைபெற்ற கண்ணீர்ப்புகைத் தாக்குதலால் என்னுடைய கண்களில் புகை உள்நுழைந்து மயக்க நிலைக்குத் தள்ளப்பட்டேன். நின்ற இடத்திலிருந்து எப்படி விழுந்தேனோ தெரியவில்லை. என் மீது ஏறிச் சென்றவர்கள் என் வேட்டியையும் இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள். கண் விழித்துப் பார்த்தேன் வெட்டவெளியிலே தனியாளாகக் கிடந்தேன். என் உயிர் என்னைவிட்டுச் செல்லவில்லை. எல்லோரும் ஓடிக் கொண்டிருந்தது என் கண்களுக்குத் தெரிந்தது. மனிதர்களின் பாதச்சுவடுகள் தாங்கிய என்னுடைய மேனியில் எங்கிருந்துதான் அந்த வலிமை வந்ததோ தெரியாது. வேட்டியில்லாமலே ஓடினேன். அப்போது பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த ஒருவர் தன்னுடைய சால்வையை எனக்குத் தந்தார். அதைக் கட்டிக்கொண்டு ஓடினேன். அவர் பின் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் என்னுடைய அரைநிர்வாணக் கோலத்துக்குத் தான் துண்டு தந்து மறைத்த செய்தியைக் கூறியிருந்தார்.

இது போன்றே கால்பந்தாட்டம் இலங்கையில் எங்கு நடைபெறுகிறதோ அங்கெல்லாம் நான் ஆஜராகிவிடுவேன். நான் நினைக்கிறேன் மொத்தத்தில் நல்ல இரசிகனாகவே என் வாழ்க்கை ஒவ்வொரு துறையிலும் கொண்டு சென்றிருக்கின்றது. குடும்பம் என்ற கூட்டுக்குள் ஒடுங்கிவிடாமல் வாழ்க்கையை எனக்காகவும் மக்களுக்காகவும் மகிழ்ச்சியாக அர்ப்பணித்திருக்கின்றேன்.

செல்லையா இராஜதுரை அண்ணனுடைய உதவியுடன் பலருக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. ஊரின் தேவைகளைச் சிறுகச்சிறுக நிறைவேற்ற முடிந்தது. ஆனால், அவருடைய அரசியலிலே பங்கம் ஏற்பட்டது.

எந்த இயக்கத்தை உயிர் மூச்சாக நினைத்து முப்பது ஆண்டுகள் பாடுபட்டாரோ, அந்த இயக்கத்திலிருந்து இராஜதுரை அண்ணனை

வெளியேற்றுவதற்குத் தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னால் அவர் கால்களுக்குக் கீழ் ஆழமாகக் குழி வெட்டப்பட்டது. தந்தை செல்வாவின் வீட்டுத் திண்ணையில் பல வாரக்கணக்கில் அவருடன் கலந்துரையாடி, அவரது தீர்க்கதரிசனத்தினால் உருவாக்கப்பட்ட கட்சியின் ஸ்தாபக உறுப்பினராக இருந்த ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் இராஜதுரை அண்ணனே. 20 ஆண்டுகள் தொடர்ந்து வெற்றியீட்டிய அவரை வேறு தொகுதிக்கு மாறுமாறு கட்டளை பிறப்பித்தார்கள். சூழ்ச்சியுடன் வழக்கமான இராஜதுரை அண்ணனுடைய வீட்டுச் சின்னத்தைப் பறித்தார்கள். உதயசூரியன் சின்னத்தைக் கொடுத்தார்கள். வீட்டுச் சின்னம் கண்டு பழக்கப்பட்ட மக்கள் தடுமாறிப் போவதற்காக அச்சின்னத்தை அவருக்கு எதிராகத் திசை திருப்பியவருக்குக் கொடுத்தார்கள்.

அவர் இராஜதுரை அண்ணனால் வளர்க்கப்பட்டுப் படிக்க வைத்தவர். அவரை இந்தியாவுக்குப் படிக்க அனுப்புவதற்காக திருமதி இராஜதுரை அவர்கள் தன்னுடைய தாலிக்கொடியை அடகு வைத்துப் பணம் கொடுத்து அனுப்பினார். அவர் காச நோயால் பீடிக்கப்பட்ட போது அசைவ உணவு உண்டு அறியாத அம்மையார், வீட்டுக்குள்ளேயே மாட்டிறைச்சி எடுக்காத அம்மையார், தனது கைகளால் மாட்டு ஈரல் சமைத்துக் கொண்டு போய் வைத்தியசாலையில் உண்ணக் கொடுத்தார். இந்த நன்றி உணர்வு சிறிதும் இல்லாதவரை இராஜதுரை அண்ணன் தொகுதியிலேயே அமர்த்தினார்கள். அவரும் “வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல” “கஞ்சியூட்டிய கரங்களை வெட்டி எடுப்பது போல” அவரும் அதற்குச் சம்மதித்தார்.

ஒரே கட்சியில் இருவரென்றால் வாக்குப் பிரிக்கப்படும் என்று அண்ணன் கேட்டுக் கொண்ட போதும் அவருக்குக் கிடைக்கவிருக்கும் வாக்குகளைக் குறைப்பதற்காகப் போட்டியிட வைத்தார்கள். ஆனாலும் அந்த தேர்தலிலும் இராஜதுரை அண்ணன் அமோகமாக வெற்றியீட்டினார் என்றால் மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பாகியது.

தொடர்ந்து அண்ணன் அவமதிக்கப்பட்டார்.

“ஓர் அரசியல் கட்சியின் செயலாளர் விரும்பினால் அக்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரை விலக்கிவிட்டு அந்த இடத்தில் பிரியமான ஒருவரை நியமிக்கலாம் என்ற சரத்தின்படி நீங்கள் பழிவாங்கப்படுவீர்கள் உடனடியாகக் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்யுங்கள்” என்று நாடு

முழுவதிலும் இருந்து இராஜதுரை அண்ணனின் அபிமானிகள் கேட்டுக் கொண்டார்கள். ஆனாலும் அவரால் கட்சியிலிருந்து விலக முடியவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமர் பிரேமதாச உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு மட்டக்களப்புக்கு வருகை தந்தார். அவரைச் சந்தித்த அண்ணன் மட்டக்களப்பின் பின்தங்கிய நிலை பற்றி வாக்காள பெருமக்கள் முன்னிலையில் உரையாற்றினார். அதை ஏன் இப்படிச் செய்தாய்? என்று மேலிடம் குறை கூறியது. கேட்டவர்கள் யாரென்றால், மந்திரிகளின் பார்ட்டிகளில் கலந்து உண்டு, குடித்து உறவாடிக் களித்தவர்கள். மந்திரிமார்களின் படிகளில் ஏறி உத்தியோகமும், கோட்டாவும், மாறுதல்களும், கோப்பரேஷன் நியமனங்களும், அரசாங்க பதவிகளும் யாசகமாகப் பெற்றவர்கள்.

பதில் தர 30 நாட்கள் கேட்டார். ஏனென்றால், மட்டக்களப்பு சூறாவளியால் 1978 ஆம் ஆண்டு பேரழிவுக்கு உட்பட்டிருந்தது. ஆனால், அதற்குக் கட்சியில் வைத்த பதவியையும், செயற்குழு உறுப்பினர் அங்கத்துவப் பதவியையும் பறிமுதல் செய்தார்கள். அதனால், இராஜதுரை அண்ணன் உடனடியாக அம்மாதம் 9 ஆம் திகதி இராஜினாமாக் கடிதம் சமர்ப்பித்தார். மட்டக்களப்பிலே 1978 நவம்பர் 23 ஆம் திகதி நடந்த சூறாவளியினால் வரலாறு காணாத பேரழிவு மட்டக்களப்பு மண்ணுக்கு ஏற்பட்டுள்ளது. 30 ஆண்டுகளாக நடத்தி வந்த மேடைப்பேச்சுகளும், போராட்டச் சவால்களும், கறுப்புக் கொடிகளும், ஹர்த்தால்களும், அடுத்த பொதுத் தேர்த்தலில் வெற்றியீட்டி பாராளுமன்றப் படிகளில் ஏறுவதற்குப் பயன்படலாம். ஆனால், அழிவுற்ற என் தாய்த் திருநாட்டைப் புனர் நிர்மாணம் செய்யவோ வாழ்விழந்த மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவோ உடனடியாகப் பயன்படாது. அரசாங்கத்தின் உதவியும் பெருநிதியும் இருந்தால் மட்டுமே 15 வருட காலத்திலாவது மீண்டும் மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பொலிவுற்ற பிரதேசமாக்க முடியும் என்று அண்ணன் முடிவெடுத்தார்.

சூறாவளிப் பணிக்காக ஓடித்திரிந்தோம். இராஜதுரை அண்ணன் பிரதமரை வரவேற்று உதவி கேட்டது குற்றமானது. மட்டக்களப்பு மாவட்டக் கல்குடாத் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் நீதி அமைச்சர் திரு.கே. டபுள்யூ தேவநாயகம் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட புனர் வாழ்வு மறுசீரமைப்புக் குழுத் தலைவராக இருந்தார். அவரை வரவேற்று அபிவிருத்திப் பணியைத் துரிதப்படுத்தலாம் என்றால், அது

குற்றமாக்கப்பட்டது. இந்தக் காரணங்களும் கட்சித் துரோகங்களும் அண்ணன் இராஜதுரையை இராஜினாமாச் செய்யத் தூண்டியது.

இக்காரணங்களே என்னையும் ஊரின் அபிவிருத்தியின் பக்கம் திருப்பியது. 1979 மார்ச் மாதம் 22 ஆம் திகதி இராஜதுரை அண்ணன் இந்து சமய பண்பாட்டுத் தமிழ் அமுலாக்கல் பிரதேச அபிவிருத்தி அமைச்சரானார். பின் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டார். திரு கே.டபுள்யூ தேவநாயகம் அமைச்சர் என்னில் அளவுகடந்த பாசம் வைக்கத் தொடங்கினார்.

அவருடைய வயற்காணிகளை மேற்பார்வையிடல் தொடக்கம் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவரானேன். பணி அதிகரித்தால் அமைச்சர் உணவருந்த மறந்து பணியிலேயே இருப்பார். அவருடைய மனைவி என்னை அழைத்து அவரை உணவருந்தச் சொல்லும்படி பணிப்பார். நான் கூறினால் அவர் கேட்பார் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. என்னுடைய வீட்டு வாசலிலே அரிசி மூட்டைகளை அவரே தன்னுடைய வாகனத்தில் கொண்டு வந்து இறக்கிய காட்சிகளை நினைத்துப் பார்க்கிறேன். அவருடைய மனைவி கூட என்னில் அளவுகடந்த பாசம் வைத்திருந்தார். திடீரென எங்களை விட்டு அவர் இறந்து போன செய்தி கேட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்து போனோம். எத்தனை பெரிய மனிதர்கள் என்னோடு பாசத்தைக் கொட்டியிருக்கின்றார்கள், எல்லோரும் திக்குத் தெரியாமல் பிரிந்து போயிருக்கின்றோம். இன்றைய சமூக ஊடகங்கள் அன்று இருந்திருந்தால் இழப்புக்களிலும் சில மகிழ்ச்சிகளைக் கண்டிருப்போம். அப்போதும் என்னுடைய மக்களுக்காக மந்திரிகள் வீட்டு வாசலில் நின்றிருப்பேன்.

எங்களுடைய பாடசாலைக்கு ஒரு கட்டிடம் அவசியமாகப்பட்டது. முதலில் திறந்தவெளி ஓலைக்கொட்டகை போல் கட்டினார்கள். அந்தக் கட்டிடத்தைக் கல்லினால் கட்டுவதற்கு அப்போது அமைச்சராக இருந்த இராஜதுரை அண்ணனையும், நீதி அமைச்சர் கே.டபள்யூ.தேவநாயகம் அவர்களையும் நாடி உதவி கேட்டேன். அவர்களும் நிதி ஒதுக்கினார்கள். உள்ளத்திலே பேருவகை ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியை எப்படி வெளிப்படுத்தலாம் என்று நினைத்தபோது எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 1977 ஆம் ஆண்டு இருவரையும் மாலை மரியாதையுடன் ஊர்வலமாகப் பிரதான வீதியிலிருந்து அழைத்து வந்து அவர்களுடன்

ஊர் மக்கள் அனைவருக்கும் விருந்து கொடுத்துக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்ட வைத்தேன். என்னுடைய முயற்சிக்கு ஊர் மக்களும் ஒத்துழைப்புத் தந்தார்கள். இரண்டாவது அடுக்குமாடிக் கட்டிடத்தில் பாடசாலை நிமிர்ந்து நின்றது.

கட்சியும் அரசியலும் யாருக்காக? மக்களுக்காகத்தான். அந்த மக்கள் நன்றாக வாழ வேண்டும் என்றால், அதற்குரிய இடத்திலேயே நாம் நிற்க வேண்டும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கரங்களையே நாம் பற்ற வேண்டும். பட்டினி கிடந்து இறப்பதை விடப் பசித்த வயிற்றுக்கு உணவு கொடுக்கும் வழியைத் தேட வேண்டும். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியை நான் நாட வேண்டியிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையிலே நான் இருந்த வீட்டிலிருந்து வேறு வீடு கட்டி மாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. உறவுகள் சிலவேளைகளில் செய்கின்ற துரோகங்கள் நன்மையிலே முடிந்து விடுகின்றது.

பார்வதியின் மூத்த அண்ணன் வேலாயுதம் ஏதோ கடன் தொல்லை ஏற்பட்ட போது நாம் இருந்த வீட்டை எமக்குத் தெரிவிக்காமலே விற்று விட்டார். வங்கியில் கடன் எடுக்க வேண்டும் என்றால், ஏதாவது சொத்தைக் காட்டவேண்டும். அதனால், தாய்க்கு பட்டர் பூசினார். கடன் எடுத்துக் கட்டியபின் தங்கச்சிக்கு காணியை எழுதி விடுவேன் என்று சொல்லிப் பத்திரத்தைப் பெற்றுவிட்டார். இந்தச் செய்தி பின்னரே அறிந்தேன். ஆனால், அந்தக் காணி தங்கச்சி பெயரில் மாற்றப்படவில்லை வேறு யாருடைய பெயருக்கோ மாற்றப்பட்டது. விற்றுவிட்டார். குடும்பங்களில் சகோதரர்கள் இப்படித்தான் நம்பிக்கைத் துரோகங்கள் செய்வார்களோ!

குடும்பத்துக்குள் பூசல் ஏற்பட்டது. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. பிரதான வீதியில் இருந்த வீட்டை விட அமைதியான இடம் தேடினேன். அவர்களுடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே காணி வாங்கி அவர்களுக்கு எதிராக வாழ்ந்து காட்டுகிறேன் என்று சபதம் செய்தேன். பார்வதி விரும்பியவாறு நவீன வசதிகளுடன் 1978 இல் புதிய வீட்டைக்கட்டி குடும்பமாகக் குடி புகுந்தோம்.

என்னுடைய புதிய வீட்டிலே பெரிய மண்டபம் நடுவிலே அமைத்திருந்தேன். அதிலேயே கட்சிக் கூட்டங்கள் நடத்தினேன்.

வாரத்தில் ஒருதரம் இலங்கைத் தொலைக்காட்சி ரூபவாஹினி யிலே தமிழ்ப் படம் ஒளிபரப்பாகும். அந்தப் படத்தைப் பார்ப்பதற்கு எங்களுடைய வீட்டிற்கு அருகாமையில் இருக்கும் தமிழ் இஸ்லாமிய மக்கள் எங்களுடைய வீட்டுக்கு வருவார்கள். அவர்களுக்காக முன் மண்டபத்தை ஒழுங்கு பண்ணி வைப்போம். அவர்கள் பார்த்துவிட்டுப் போவார்கள்.

ஒருநாள் இரவு என் வாழ்க்கையிலே அனுபவிக்காத ஒரு சம்பவம் நடந்தது. "The A Team" என்னும் பிரபலமான ஆங்கிலத் திரைப்படம் வாரந்தோறும் ஒளிபரப்புவார்கள். அதனை நாங்கள் குடும்பமாகப் பார்த்துக் கொண்டு இருந்தோம். கதவு யன்னல்கள் எல்லாம் அடைத்து விட்டோம். இரவு 9 மணிக்குப் படம் ஆரம்பமாகும். விறுவிறுப்பாகப் படம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் போய்க் கொண்டிருந்தது. கதவு, யன்னல்கள் எல்லாம் படபடவென்று அடிக்கும் சத்தம் கேட்டது. சிங்களத்திலே தாம் ஆமிக்காரர்கள். சோதனைக்கு வந்திருக்கின்றோம். கதவைத் திறங்கள் என்று சத்தமாகக் கத்தினார்கள். உடனே ஆமிக்காரர்கள் என்ற சத்தம் கேட்டவுடன் கதவைத் திறந்தோம். பிள்ளைகளைக் கொண்டு போகப் போகின்றார்கள். சுட்டுத் தள்ளப் போகின்றார்கள் என்று மனத்துக்குள் பயம் குடிகொண்டது.

ஆமிக்காரர்களின் சீருடை அணிந்து துப்பாக்கி ஏந்தியவர்களாக நான்கு இளைஞர்கள் உள்ளே நுழைந்தார்கள். முதன் முதலாக இரண்டாவது மகன் கீரனைத் துப்பாக்கி முனையில் ஒரு கதிரையில் இருக்க வைத்து ஓடப் போகின்றாயா? என்று கேட்டு கீரனின் பக்கத்தில் ஒருவன் நின்று கொண்டான். நான் உட்பட மற்றவர்களையும் சோபாவில் இருக்க வைத்தார்கள். பார்வதியைத் துப்பாக்கி சகிதம் ஒருவன் பின்புறம் அழைத்துச் சென்றான். மனம் படபடத்துக் கொண்டு இருந்தது. சிநேகாவிடமும், மருமகளிடமும் உங்களுடைய நகைகளைக் கழட்டுங்கள் என்றார்கள். அக்காலகட்டத்தில் இராணுவம் கொள்ளையடித்ததாகச் செய்திகள் கேள்விப்பட்டிருந்தோம்.

பின்புறம் சென்ற பார்வதி திரும்பி வந்து "நகைகளைக் கழட்டித் தரச் சொல்லுகின்றார்கள் அப்பா" என்று சொல்லிக் கொண்டு வந்தார். புத்திசாலித்தனமாக நகைகளைக் கழட்டச் சொல்லிய போது பார்வதி தன்னுடைய தாலிக்கொடியைக் கழட்டி குளியலறை தொட்டிக்குள் போட்டுவிட்டு வந்துவிட்டார். மிகத் துரிதமாக என்னுடைய

மூளை தொழிற்படத் தொடங்கியது. அவர்களுடைய கால்களைப் பார்த்தேன். ஆமிக்காரர்கள் அணிகின்ற காலணிகளை அவர்கள் அணிந்திருக்கவில்லை.

“எடுடா கீரன் துவக்கை என்று சத்தமாகக் கத்தினேன்” நிலைமையைப் புரிந்து கொண்ட கீரனும் வேகமாக எழுந்து தன்னுடைய கால்களால் தனக்குப் பக்கத்தில் நின்றவனை உதைத்துத் தள்ளினான். சற்றும் நினைத்துப் பார்க்காது திடீரென நடந்த நிகழ்ச்சியைச் சமாளிக்க முடியாமல் பக்கத்தில் நின்றவன் எங்களுடைய முன் போட்டிக்கோவில் வைக்கப்பட்டிருந்த பூச்சட்டியின் மேல் விழுந்தான். விழுந்தவன் எழுந்து ஓட்டம் பிடித்தான். அவனுக்குப் பின்னே மற்றவர்களும் ஓட்டம் பிடித்தார்கள். கீரன் துரத்திக் கொண்டு ஓடினான். ஓடியவர்கள் எங்களுடைய முன்பக்கத் தலைவாயிலுக்குச் சென்று துப்பாக்கியால் சத்தம் செய்து மறைந்து போனார்கள். அன்றைய நிகழ்ச்சி ஒரு திரைப்படம் பார்த்தது போல இருந்தது.

அன்றைய தினம் ஏறாவூரில் மூன்று வீடுகளில் களவு போயுள்ளது. ஆனால், அவர்கள் எங்களுடைய வீட்டிலேயே தோற்றுப் போனார்கள்.

மகிழ்ச்சியாகவும், மனநிறைவோடும் நாம் புதிய வீட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கும் போதுதான் இயற்கை எம்முடன் விளையாடத் தொடங்கியது.

அழகாக எங்கள் குடும்பம் ஆட்சி செய்த வீட்டின் மேல் கண்ணூறு பட்டதுபோல சூறாவளி அரக்கன் புகுந்தான். துவசம் புரிந்தான். 23.11.1978 ஆம் ஆண்டு. அன்றைய நாளை மட்டக்களப்பு மக்கள் யாராவது மறப்பார்களா? என் வாழ்நாளில் இந்த அனுபவம் இறப்புவரை தொடரும். வானத்துக்குக் கீழே வீட்டைக் கட்டிவிட்டோம். எப்போது எது நடக்கும் என்று தெரியாமலேயே பூமியின் மேலிருந்து அண்டவெளியில் சுழன்று கொண்டிருக்கின்றோம்.

அன்று வானொலிகளில் சூறாவளி வரப் போகின்றது என்றுதான் சொன்னார்கள். இப்படி வரும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. தொடர் மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளம்தானே என்று நாம் நினைத்தோம். பணி முடிந்து நானும், பாடசாலை முடிந்து பிள்ளைகளும் வெள்ளம் பாய்ந்தே வீட்டிற்கு வந்தோம். விசை குறைவான காற்று வீசிக் கொண்டிருந்தது. மெல்ல மெல்லக் காற்றின் வேகம் அதிகரித்தது.

வீட்டுக்கு வந்து இரவு உணவை முடித்து விட்டோம்.

மெல்லிய தென்றலாய் நுழைந்து இலைகளின் சல்லாபத்தில் இன்னிசை ஒலியலையாய் மனதை வருடும் காற்றானது எப்படி இப்படிப் பேயாட்டம் ஆடுகிறது? சுழன்று சுழன்று துவசம் செய்கிறது. இயற்கையை மனிதன் மறந்தானா? இயற்கைக்கு ஏனிந்த வக்கிரம். நாளை என்ன நடக்கவிருக்கிறது என்று அறியாத காலநிலையில் இரவிரவாகக் கண்விழித்தோம். மின்சாரம் நிறுத்தப்பட்டதோ, மின்கம்பம் விழுந்ததோ வீடு ஒளியிழந்தது.

இத்தனை கலவரத்திலும் சிநேகா மேசைக்குக் கீழே குப்புறப்படுத்துக் கொண்டு குப்பிலாம்பு விளக்கிலே நாளைக்குப் பரீட்சை என்று படித்துக் கொண்டிருந்தாள்.

"ஊரே கலவரத்தில் இருக்கிறது. உனக்கு நாளைக்கு ரெஸ்ட் தான் நடக்கப் போகிறது" என்று கத்தினேன். இரவு காற்றின் வேகம் அதிகரித்தது. 205 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று சுழன்றடிக்கத் தொடங்கியது. இரவிரவாக ஓயாது உய்ய்ய் என்ற சத்தத்துடன் வீசிய காற்றிலே வீட்டுக் கூரைகள், தகரங்கள், பொருட்கள் வானத்திலே பறந்தன. காற்றின் வேகத்தின் உரசலில் நெருப்புப் பொறி தென்பட்டது. இன்னும் என் காதுகளில் அந்த உய்ய் என்ற சத்தம் கேட்கிறது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொடருந்து தானாகவே ஓடத் தொடங்கியது. இதனால் இருட்டில் காற்றின் ஓசையின் காரணத்தால் தொடருந்து ஓசையின் ஒலி கேட்காத இருவர் நசுக்குண்டு இறந்தார்கள்.

எங்களுடைய வீட்டின் கூரையின் ஓடுகள் உடைந்து விழுந்து சோபாக்களைக் கிழித்தெடுத்தன. கண்ணாடிகள் கீழே விழுந்து நொறுங்கின. வீட்டுத் தளபாடங்கள் தாறுமாறாகப் புரண்டன. எங்களுடைய வீட்டின் சமையலறையில் கொங்கிறீற் கட்டுகளைக் கட்டியிருந்தேன். சமையல் வேலை செய்வதற்கு பார்வதிக்கு உதவியாக இருக்கும் என்று இவ்வாறான ஏற்பாட்டைச் செய்திருந்தேன். அவற்றின் கீழ் எல்லோரும் பதுங்கிக் கொண்டோம். வீட்டுக்குள்ளே மழை பெய்தது. வீட்டினுள் இருந்து வானத்தைப் பார்த்தோம். நெருப்புப் பொறிகளும் உய்ய் என்ற சத்தத்துடன் வீசிய காற்றும் எங்களைக் கதிகலங்க வைத்தது.

இரவிரவாக அடித்துத் துவசம் செய்த காற்று மட்டக்களப்பு மண்ணை அழிக்க வந்த ஊழிக்காற்றாக அமைந்திருந்தது. மழை ஓய்ந்து தன் இறுதி மூச்சை விட்டு மௌனமானது சூறாவளி. விடியற்காலை வெளியே வந்து பார்த்தோம். மரண அமைதி நிலவியது. மரங்களெல்லாம் வீதியில் மல்லாந்து கிடந்தன. பிரளயம் வந்தது போல் ஏறாவூர் காட்சியளித்தது. மழை பெய்யாது விட்டிருந்தால், தீயின் சேதம் அதிகமாக இருந்திருக்கும். எங்கள் ஊர் மக்கள் என்ன கஷ்டத்தை அனுபவித்தார்களோ? யாருக்கு என்ன நடந்ததோ? ஓலை வீட்டில் இருந்த வயதான உறவினருக்கு என்ன நடந்ததோ? என் எண்ணங்கள் என்னை விட்டுப் பறந்து கொண்டுதான் இருந்தன.

மின்சாரம் இல்லை. விறகுகள் நனைந்து ஈரமாக இருந்தன. எங்கள் வீட்டின் முன்னே இருந்த புகையிரத நிலையத்தில் அகதிகளாகப் பல மக்கள் தஞ்சம் அடைந்திருந்தார்கள். என் கால்களுக்குச் சிறகு முளைத்தது. உடனே அவர்களைப் போய்ப் பார்த்தேன். சிறு குழந்தைகளும் பெரியவர்களும் என மழைக்குளிரில் ஒடுங்கிப் போயிருந்த மக்களுக்கு உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும். வீட்டுக்கு வந்து எங்களிடம் இருந்த அரிசி, பருப்பு, கருவாடு போன்றவற்றை எடுத்து உடனடியாகச் சமையல் செய்யச் சொன்னேன். சமைத்து அனைவருக்கும் உணவு கொடுத்தேன். பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் எல்லோரும் எங்களுடைய வீட்டுக்குள் வந்துவிட்டார்கள்.

இச் சூறாவளியினால், குளிருக்கு இறந்து மிதந்தவர்களும், வீட்டுக்குள்ளேயே குளிரில் மடிந்தவர்களும், வாகனங்கள் தன்னிச்சையாக அடித்துச் செல்லப்பட்டு அதன் இடிபாடுகளுக்குள் நசுங்கி இறந்தவர்களும் எனக் கிட்டத்தட்ட 1000 பேர் இறந்து போனார்கள். ஒரு மில்லியனுக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். மட்டக்களப்பிலே கிட்டத்தட்ட 250,000 வீடுகள் முற்றாக அல்லது பகுதியாகச் சேதமாக்கப்பட்டு 240 பாடசாலைகள் சேதமாகின. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் அழிந்தன. 14 இலட்சம் தென்னைகள், கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள், உள்ளூராட்சி மன்றக் கட்டிடங்கள், நெல் சேமிக்கும் குதங்கள், வர்த்தக நிலையங்கள், படமாளிகைகள், மீனவ தோணிகள், மீன் வலைகள், நெசவு நிலையங்கள் என்று இன்னும் சொல்ல வேண்டுமா?

பேரழிவு மட்டக்களப்புக்கு ஏற்பட்டு விட்டது. இதிலிருந்து மீண்டு வர 15 வருடங்களாவது எடுக்கும் என்று பேசப்பட்டது.

ஆனாலும் நிலைமை சீரானது. இதன் பின் மாதக்கணக்கில் மின்சாரம் இல்லாது கஷ்டப்பட்டோம். ஆனாலும் நிலவொளியின் இரம்மியத்தை இக்காலப்பகுதியிலேயே அனுபவித்தோம். பாடசாலைகள், பணியகங்கள் நீண்ட இடைவெளிக்குப் பின்னரே இயங்கத் தொடங்கின. அரசியல் உதவிகள் உடனடியாக எமக்குத் தேவைப்பட்டது. முடிந்தவரை ஊருக்கு நல்லது ஆற்ற அமைச்சர்களின் உதவிகளைப் பெற்றோம். மீண்டோம். மட்டக்களப்புக்கு உலகின் பல பக்கங்களிலும் இருந்து உதவிகள் கிடைத்தன.

எங்களுடைய வீட்டின் முன் அறையை உதவி அரசாங்க அதிபருக்கு வாடகைக்குக் கொடுத்திருந்தோம். அவரின் மூலமும் சில அரசாங்க உதவிகள் பெற்று ஆடை, உணவு வகைகளை எம்முடைய ஊர் மக்களுக்கு வழங்கினேன். வெளிநாடுகளிலிருந்து பெட்டி பெட்டியாக ஆடைகள் பாடசாலை உபகரணங்கள், பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் என வந்து குவிந்தன. கே.டபுள்யு.தேவநாயகம் அவர்களும் எங்கள் வீட்டில் குடியிருந்த உதவி அரசாங்க அதிபரும், செல்லையா இராஜதுரை அவர்களும் செய்த உதவிகளின் மூலம் எம்மக்களுக்குச் சில கொடுப்பனவுகள் கிடைக்கப் பண்ணினேன். காலடிகள் நீண்டு ஏறாவூர் மண் தளைத்து ஓங்கியது.

காலத்தின் இயற்கையின் பேரடியிலிருந்து மீண்டு அப்பாடா என்று பெருமூச்சு விட்டபோது மீண்டும் நாம் துன்பச் சோதனைக்குள் அகப்பட்டோம்.

தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என்ற வாக்கியத்தில் பற்று வைத்த காரணத்தாலேயே தமிழரசுக் கட்சிக்காக உழைத்தேன். அதன் நேர்மையற்ற போக்கால் அதைவிட்டு வெளிவந்தேன். மீண்டும் என் இளைய பிள்ளைகள் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் பாடுபடுகின்றார்கள். தம்முடைய இளைமைக் கனவுகளை ஒதுக்கத் தொடங்குகின்றார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தேன். பிரஜைகள் குழுத் தலைவராக இருங்கள் ஐயா என்று கேட்டுக் கொண்டார்கள். சம்மதித்தேன்.

ஆனால், அவர்கள் பல குழுக்களாகப் பிரிந்து நின்று போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களிடையே போராட்டங்கள் நடந்தன. சகோதர

இயக்கங்கள் கொல்லப்பட்டன. இந்திய இராணுவத்தினர் இலங்கை வந்தபோது மாலை சூடி வரவேற்புக் கொடுத்தவர்களே, அவர்களை நோக்கித் துப்பாக்கியைத் திருப்பினார்கள். இந்திய இராணுவத்தினரும் ஈவிரக்கம் இல்லாது பலரைக் கொன்று குவித்தார்கள்.

சுற்றிவளைப்பு என்று ஒவ்வொரு பகுதிகளாகச் சுற்றி வளைத்து எல்லாரையும் ஓர் இடத்திலே குவிப்பார்கள். அவர்களுக்கு உடந்தைகளாக இருப்பவர்களை அழைத்து வந்து முகத்தை மூடிக்கட்டி கண்களை மட்டுமே திறந்து விட்டு யார் இயக்கத்தினர் என்று காட்டும்படிக் கேட்பார்கள். அவர்கள் யாரைத் தலையாட்டுகின்றார்களோ அவர்களைப் பிடித்துக் கொண்டு போனால், அவர்கள் திரும்புவதில்லை.

பிள்ளையாரடி என்னும் இடத்தில் இருந்த ஓர் அப்பாவிக் குடும்பத்தைக் கொன்று குவித்தனர். இப்படிச் சொல்வதானால் எத்தனையோ சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்திய இராணுவம் செய்த கொடுமையை நினைத்துப் பார்க்க முடியாமல் இருக்கின்றது. அதேபோல் எங்களுடைய பிள்ளைகளும் அவர்களுக்குள்ளே அடிபட்டு கொலை செய்யப்பட்டமை. மனத்துக்குள் வேதனையைத் தருகின்றது. உணர்ச்சி வசப்படல் பல பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைகின்றன. ஆழமாகச் சிந்தித்தும் தீர்ப்பளிக்க வேண்டிய தன்மையை, உடனடியாக உணர்ச்சிவசப்படல் தவறான தீர்ப்புக்குக் கொண்டு போகின்றது. பல தமிழ் அரசியல் தலைவர்கள், சகோதர இயக்கங்கள், கொல்லப்பட்டமை சரியான தீர்ப்பா என்பது கேள்விக்குறி. என்னுடைய வயது சொல்கிறது கொலைக்குக் கொலை தீர்ப்பல்ல என்பதே. ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்கு மௌனமாகவே நான் இருந்தேன். எங்களுடைய பிள்ளைகளின் முயற்சி வெற்றியளிக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனையாக இருந்தது.

விழுந்து எழுவது என்பது எனக்கொன்றும் பெரிய பிரச்சினை இல்லை. என் மக்களுக்குப் பிரச்சினை என்றால், அது எனக்கும் பிரச்சினையே. 1987 இல் ஆழ்ந்த உறக்கத்தில் நான் இருந்த போது சாமத்தில் திடீரென என்னைத் தட்டி எழுப்பினாள் பார்வதி.

“எங்களுடைய பிள்ளைகள் வந்த வாகனம் போராளிகள் வைத்த கன்னிவெடிக்கு உள்ளாகிவிட்டதாம். எல்லாரையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விட்டார்களாம்” என்று பார்வதி சொன்ன போது குதித்து

எழுந்தேன். என்னுடைய மனத்துக்குள் போராட்டம். உடனே போய்ப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும்.

நகைத்தொழில் செய்வதற்காக யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து தொழில் செய்தவர்களே இவர்கள். ஒருநாள் இராணுவம் செலுத்திய செல் தாக்குதலினால், பாலனுடைய அக்காவுடைய கணவன் உயிரிழந்தமையாலும், இந்திய இராணுவத்தினரின் பிரச்சினைகளாலும் இனி மேலும் யாழ்ப்பாணத்தில் இருப்பது ஆபத்து, அங்கிருந்து தொழில் செய்ய முடியாது என்று நினைத்து உடனடியாகத் திரும்பவும் ஊருக்குத் திரும்புவதற்காக பேருந்திலே போரதீவு, மட்டக்களப்பு, ஏறாவூர் என்று பல இடங்களுக்கும் போவதற்காகப் பயணமானவர்களே இத்தாக்குதலுக்கு உட்பட்டார்கள்.

குதித்து எழுந்த நான் உடையை மாற்றிவிட்டு உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றேன். இராணுவத்திற்கு வைத்த குறி தப்பி எங்களுடைய இளந்தலைமுறையில் விழுந்தது. இவ்வாறு தெரியாமல் நடந்த தவறுகள் பல. என்னுடைய உறவினர் ஒருவரின் மூளை பாதிக்கப்பட்டது. எதுவுமே தெரியாதவராக அப்படியே மௌனமாக இருந்தார். இன்னும் ஒருவர் தோள் மூட்டு உடைந்து போய் இருந்தார். சிலர் இறந்து போனார்கள். இவ்வாறாக அவர்களைப் பார்த்துவிட்டுச் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றேன். அங்குள்ள இராணுவ அதிகாரியுடன் பேசி நடந்த சம்பவங்களை அறிந்தேன். சம்பவம் நடந்த இடத்திலே அதிகப்படியான தங்கம் கிடந்திருக்கின்றது. அவற்றை இராணுவத்தினர் எடுத்துக் கொண்டு போய் அதிகாரியிடம் ஒப்படைத்திருந்தார்கள்.

அந்த நகைகளை வைத்திருக்கும் படியும் சரியான அத்தாட்சியுடன் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் அதிகாரியிடம் சொல்லிவிட்டு வந்தேன். இவர்கள் ஓரளவு சுகமானபின் அவர்களை அழைத்துச் சென்று அவ்வளவு தங்கக் கட்டிகளையும் நகைகளையும் மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைத்தேன். பாதுகாப்பாக வைத்திருந்து அத்தனை தங்கக்கட்டிகளையும் நகைகளையும் ஒப்படைத்த இராணுவ அதிகாரிக்கு நன்றிக்கடனாக ஒரு தங்கச் சங்கிலியை அன்பளிப்பாக வழங்குமாறு சொல்லி வாங்கிக் கொடுத்தேன். இராணுவத்திலும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் இருக்கின்றார்கள் என்பதற்கு இவர் ஒரு முன்னுதாரணமாக எனக்குத் தென்பட்டார்.

அடுத்தவர்களைப் பற்றியே மூளைக்குள் போட்டுச் சிந்திக்கும் போது சிறிது பரந்த நோக்கில் அகலப் பார்வையைச் செலுத்தினேன்.

இருப்பவர்களிடமிருந்து இல்லாதவர்களுக்குக் கொடுக்கலாம். இருப்பவர்களின் துணையோடு செயற்படலாம். தட்டுங்கள் திறக்கப்படும். அதனால், மனங்களைத் தட்டி உதவிகளைப் பெறலாம். எல்லாம் எதற்கு? யாரும் 100, 105 வயது கடந்து வாழப் போவதில்லை. வாழும்போதே வாழ்க்கையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு, அடுத்தவர் சிரிக்க நாமும் இணைந்து சிரிக்க வேண்டும். என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதற்கமைய வெளி இடங்களில் வாழுகின்ற மக்களுக்கும் என்னுடைய பணி சென்றடைய இயற்கை வழி காட்டியது.

1960 தொடங்கி 1965 காலப்பகுதியில் வடமுனைப் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேறிவிடுவார்கள் என்று கருதிய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பொ.மாணிக்கவாசகர் அவர்கள் குடியேற்றத் திட்டம் ஒன்றை ஆரம்பித்தார். ஆனால், அவரால் அதனைத் தொடர முடியவில்லை. அதன்பின் 1977 இல் பதவிக்கு வந்த நீதி அமைச்சர் கே.டபுள்யு.தேவநாயகம் அவர்கள் இதனை மீண்டும் முன்னெடுத்தார். அதற்கமைய நான், பொறியியலாளர் மரியசிங்கம், சென்ற் அன்ரனி டாக்டர் ஆகியோருடன் இணைந்து மலையக மக்களும், சித்தாண்டியில் வாழ்ந்த மக்களும் படுகின்ற கஷ்டங்களைத் தீர்த்து வைக்கும் முகமாக வடமுனையில் அவர்களைக் குடியமர்த்தினோம்.

இந்தத் திட்டத்திற்கு உதவுவதற்காக வெளிநாடுகளிலிருந்து வெள்ளைக்காரர்கள் இலங்கை வந்திருந்தார்கள். அவர்கள் எங்களுடைய வீட்டிலே உணவருந்துவது வழக்கம். பார்வதியின் புட்டு, மாசிச் சம்பல் சுவையை அவர்கள் பலதடவை வாயாரப் புகழ்ந்திருக்கின்றார்கள். வெள்ளைக்காரருக்கு அந்தக் காலத்திலேயே உறைப்பான உணவு கொடுத்த பெருமை பார்வதியையே சாரும்.

வடமுனையில் குடியமர்த்திய குடும்பங்கள் படுகின்ற கஷ்டத்தைத் தீர்த்து வைப்பதற்காகச் செய்த உதவிகளில் ஒன்றே சத்தியா, பாலன் என்னும் இரண்டு பிள்ளைகளை என்னுடைய வீட்டில் கொண்டு வந்து வைத்திருந்தேன். இவர்களில் சத்தியாவைப் பார்வதி தன்னுடைய பிள்ளை போலவே நகை போட்டு அழகான ஆடை தைத்துப் போட்டு அழகு பார்த்தாள்.

பாலன் வீட்டில் உதவி செய்த பின் சைக்கிள் கடைக்கு அனுப்பிச் சைக்கிள் திருத்துகின்ற வேலையைப் பழக விட்டோம். பின் அவன் பழகிய பின் தன்னுடைய பெற்றோரிடம் அனுப்பி வைத்தோம். சத்தியாவும் வயதுக்கு வந்தபின் அவர்களுடைய பெற்றோரிடம் சென்று விட்டாள்.

வாழைச்சேனை கிராமசபையில் நான் வேலை செய்த காலத்தில் அக்கிராம மக்களுக்குப் பலவித உதவிகளைச் செய்யக் கூடிய பாக்கியம் எனக்குக் கிடைத்தது. காணி வழக்கு என்று போய் அவர்கள் காணி மீட்கப்படுவதும், அவர்களின் கஷ்டங்களைத் தீர்த்து வைப்பதும் எனக்கு வழக்கமாகிப் போனது. ஊர் மக்களின் முகங்களைப் பார்க்கின்ற போது அவர்கள் ஏதோ ஏங்கிப் பார்ப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படும். சட்டைப்பைக்குள் இருக்கின்ற பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு என் செலவை நினைத்து அதன்பின்தான் ஏங்குவேன். இந்த மனம் இருக்கிறதே அது கண்ணை மூடிக் கொண்டு மூளைக்குள் கட்டளையைப் பிறப்பித்து விடும். அதனை எம்மை அறியாமலே நாம் செய்துவிடுகின்றோம். கடவுள் இப்படித்தான் உதவும் கரங்களை உருவாக்குகின்றார்.

மந்திரி தேவநாயகம் ஐயா அவர்கள் எனக்குக் கிடைத்தது. என் பாக்கியம் என்றே கருதுகின்றேன். அவரின் உதவியுடன் வாழைச்சேனை கிராம மக்களுக்குப் பணி புரிய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. கல்குடாத் தொகுதியில் அவர் அமைச்சராக இருந்த காரணத்தால் அவரால் கேட்கும் போது மறுக்காமல் உதவி செய்ய முடிந்தது. அதனாலேயே தேர்த்தலின் போது அவருக்கு வாழைச்சேனையில் அதிக வாக்குகள் கிடைத்தன.

இவ்வாறு மக்களின் முகம் பார்த்து நான் வாழ்ந்த காலப்பகுதியிலேயே சொந்த ஊர் அன்னியமாகப் போகும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது.

ஏறாவூரிலே அடிக்கடி இஸ்லாமிய இனத்திற்கும் தமிழர்களுக்கும் இடையில் பிரச்சினைகள் நடப்பது ஒன்றும் புதுமை இல்லை. அடிக்கடி பிரச்சினை வருவதும் தீர்வதுமாக இருக்கும். ஏறாவூர் எல்லையில் கத்தியுடன் கறுப்பண்ண சாமி போல வடிவேல் என்னும் இளைஞன் நிற்பான்.

ஒருமுறை பிரச்சினை அதிகரித்த போது வியாபாரத்துக்காகவும் வயற்காணிகளைப் பராமரிப்பதற்காகவும் ஏறாவூர், செங்கலடி தமிழ்ப் பகுதிகளைத் தாண்டி இஸ்லாமியர்கள் போக வேண்டிய கட்டாயம்

இருந்தது. அதேபோல் ஏறாவூர் முஸ்லிம் மக்கள் வாழுகின்ற பகுதிகளைத் தாண்டியே தமிழ் மக்கள் மட்டக்களப்புக்குப் போக வேண்டிய கட்டாயம் இருந்தது. இதனால் வியாபாரம், தொழில்கள் தடைப்பட்டு நின்றன. அக்காலத்தில் இயக்கப் பிரச்சினையால் இயக்கங்களுக்கிடையே போராட்டம் ஆரம்பிக்கத் தொடங்கவில்லை.

இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்த்து வைக்கலாம் என்று தீர்மானித்த போது நானும், ஈ.பி.ஆர்.எல்.எப். என்னும் இயக்கத்தைச் சேர்ந்த சில பையன்களும், இப்போது கனடாவில் வசிக்கும் வாசன் என்னும் பையனும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்க வாசனுடைய அப்பாவின் ரெக்டர் வாகனத்தில் சென்றிருந்தோம். அவர்களுடன் பேசிப் புரியவைத்து சமாதானமாகும்படி கேட்டுக் கொண்டேன். அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். அதன்பின் ஏறாவூர் இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் சண்டை சச்சரவுகள் ஏற்படவில்லை.

ஆனால், 1990 இந்த ஒற்றுமையைத் தலைகீழாகத் திருப்பிப் போட்டது. இஸ்லாமியரின் படுகொலைக்கு முன்னதாக, இஸ்லாமியர்கள் தமிழ்ப்பகுதிகளையும் தமிழர்களையும் அழித்ததற்கு முன்னதாகவே முதன் முதலாக வீட்டைவிட்டு அனுப்பப்பட்டவன் அடியேனே. இனப்பிரச்சினை கட்டுக்கடங்காது போகும்போது தமிழ் குழுக்களுக்கு ஆதரவு அளித்தவர்கள் என்று முதலில் என்னைத் தேடியே வருவார்கள் என்று என்னை கொழும்புக்கு வீட்டார் அனுப்பிவிட்டார்கள். நானோ கொழும்பில் உடலும் ஏறாவூரில் உயிருமாக வாழ்ந்து கொண்டிருந்தேன்.

அன்று தொடர்பு கொள்ள வட்ஸ்அப் இருக்கவில்லை. என்ன நடக்கிறது என்று வானொலி செய்திகளே சாட்சியம் சொல்லும். ஏறாவூரில் இஸ்லாமியர்கள் படுகொலை, இஸ்லாமியர்களால் தமிழர்கள் பகுதிகள் அழிக்கப்பட்டன. தமிழர்கள் கொல்லப்பட்டனர். இச்செய்திகள் நாரசமாக என் காதுகளில் விழுந்தன. என் குடும்பத்திற்கு என்ன ஆச்சு? என்ன ஆனார்கள்? எதுவுமே புரியவில்லை. 7 பேருந்துகள் இராணுவப் பாதுகாப்புடன் கொழும்புக்கு வருகின்றன என்ற செய்தி கேட்டேன். பேருந்துகள் குறிக்கப்பட்ட இடத்திலேயே நிறுத்தப்படும் என அறிவிப்புக் கிடைத்தது. அந்த இடத்துக்கு ஓடினேன். பேருந்துகள் வந்துவிட்டன. முதல் பேருந்தில் வந்தவர்கள் சொல்லிவிட்டார்கள்.

“ஐயா உங்களுடைய இரண்டாவது மகன் கீரனை இராணுவம் சோதனைச்சாவடியில் பிடித்துவிட்டார்கள்” என் நெஞ்சுக் கூட்டுக்குள் ஒரு பெரிய பாறாங்கல்லால் அடித்தது போன்று இருந்தது. அப்படியே கொழும்பு வீதியில் அமர்ந்து விட்டேன்.

“எப்படி இருந்த மனிதன் இப்படி இருக்கிறார்” என்று போனவர்கள் சொல்லிக் கொண்டு போவது காதுகளில் விழுகிறது. தொடர்ந்து பேருந்துகள் நிறுத்தப்பட்டன. எழுந்து ஓடினேன். ஒவ்வொரு பேருந்தாகத் தேடினேன். ஒரு பேருந்தினுள் இருந்து ஒவ்வொருவராக எனது குடும்பத்தினர் அழுது அழுது வீங்கிய கண்களுடன் இறங்கினார்கள். என்னை முதன்முதலாக என் குடும்பம் கொழும்பில் சந்தித்த போது கீரன் இல்லை, சிவம் இல்லை. என்ர பிள்ளைகளைக் கொடுத்துப் போட்டு நீங்கள் ஏன் வந்தீர்கள்? என்று கேட்டுத் தரையிலே இருந்து அழத் தொடங்கிவிட்டேன்.

யாருக்கு யார் ஆறுதல் சொல்ல முடியும். 3 சந்தர்ப்பங்களில்தான் இந்த பரமசிவம் என்ற மலை தளர்ந்தது. ஒன்று மூத்தவன் காச நோயாளியான போது, இரண்டாவதாகக் கீரன் விடுதலைப் புலிகளால் பணம் கேட்டுக் கடத்தப்பட்ட போது, மூன்றாவதாகக் கீரனை இராணுவம் பிடித்துவிட்டார்கள் என்ற செய்தி கேட்ட போது. இருந்தாலும், எல்லோரையும் அழைத்துக் கொண்டு லொட்ஜ் இல் அறை எடுத்து விட்டபின் தொடராக முயற்சி செய்து கீரனை வெளியே கொண்டு வந்தேன்.

அப்போது என் ஓய்வூதியப் பணம் வங்கியில் நிறுத்தப்பட்டிருந்தது. கீரனுடைய வங்கிப் பணம் நிறுத்தப்பட்டிருந்தது. சிநேகாவினுடைய சம்பளப் பணமே மிஞ்சியிருந்தது. அந்தப் பிரச்சினை தொடங்குவதற்கு முன்னதாக இந்தியா செல்ல வேண்டும் என்று நினைத்து கைகளில் அவள் எடுத்து வைத்திருந்தாள். 25,000 ரூபாய்களே கைவசம் இருந்தன. அக்காலத்தில் அப்பணம் எங்களுக்குப் பெரிய தொகையாகவே பட்டது.

கொழும்பில் தங்கினோம். வாழ்க்கையைக் கொண்டு நடத்தப் போதிய வருமானம் கிடைக்கவில்லை. காலப் போக்கில் மாமியும் அகதிமுகாமிலிருந்து எங்களிடம் வந்து சேர்ந்தார். நீர்கொழும்பில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து வேறு ஒரு குடும்பத்துடன் இணைந்து ஒரு வீட்டில் 2 குடும்பங்களாகத் தங்கினோம். அதுகூடப் பொருத்தமாக இருக்கவில்லை. அதன்பின் வேறு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தோம். அப்போது எங்கள் கைகளில் பயணப்பொதி மாத்திரமே இருந்தது.

சிநேகா நீர்கொழும்புப் பாடசாலையில் ஆசிரியையாக நியமனம் பெற்றாள். கீரன் வியாபாரத்தை மேற்கொண்டான். காலப்போக்கில் ஒரு பயணப்பொதி வீடு நிறைந்த தளபாடங்களாகப் பெருகியது. என் வாழ்க்கை நீர்கொழும்பிலும் தலை நிமிர்ந்து நின்றது.

என் வாழ்க்கையும் அமைதி நிலையை அடைந்தது. அதன் பின் பார்வதி என்னை விட்டுப் பிரிந்தாள். என்னுடைய இதயத்தைத் திறந்தவள். என் பாதைக்கு விளக்கேற்றியவள். என் தைரியத்தின் பாதை. அவளின் இழப்பு என்னை உடைத்துப் போட்டது. திடீரெனக் காலன் அவளை அழைத்துக் கொண்டு போக நான் நடைப்பிணமானேன். மாமி மரணித்தார். மகளின் இறப்பினால் வாயில் உணவை வைக்காது பட்டினி கிடந்து ஞாபக மறதி வந்து படுக்கையிலேயே மலம், சலம் கழித்து உடலைக் களைந்தார்.

இளமைத் துடிப்பில் நான் வாயில் வைத்த சிகரெட் அரக்கனானது காலப்போக்கில் என் உயிருடன் போராடத் தொடங்கியது. சங்கிலித் தொடராக நான் புகைத்துத் தள்ளிய சிகரெட்டானது பார்வதியைப் பிரிந்த சில நாட்களிலே மனக்கவலையைச் சாதகமாக எடுத்துக் கொண்டு தன்னுடைய கைவரிசையைக் காட்டத் தொடங்கியது. கவலை மேம்படும் போதே நோயின் தாக்கம் அதிகரிக்கும் என்பார்கள். சாதாரண இளைப்புடனேதான் தொடங்கியது. காலப்போக்கில் அதனுடன் போராட எனக்குத் தைரியமும் இல்லை, ஆர்வமும் இல்லை. இன்று என்னை நான் இழக்கும் நிலையில்.. .. ..

கடந்து வந்த பாதையிலே ஏற்றமும், இறக்கமும், கரடு முரடுகளும், தூரத்து வெளிச்சமும், அச்சமும், மரணபயமும், தோன்றித் தோன்றி மறைந்தன. நல்லது நடக்கும் என்று நம்பி ஏமாந்துதான் போனோம். மக்களையும், மண்ணையும் நேசிக்கும் மனிதர்கள் ஓய்ந்து போவதில்லை. ஆயினும் என்றோ ஒருநாள் காலம் எம்மைக் கரைத்துவிடத்தான் போகின்றது என்பதை ஒவ்வொரு மனிதர்களும் புரிந்த கொண்டு வாழப் பழக வேண்டும்.

என் அனுபவம் தந்த பாடத்தை வரிகளில் இறக்கி வைக்கின்றேன். இவை உங்களுக்குப் பயன்படட்டும்.

## முடிவாக முடித்தது முடிவான வார்த்தைகள்

பரந்து விரிந்து, திறந்து கிடக்கும் உலகத்திலே மனத்தை மட்டும் மூடி வைக்காதீர்கள். நீங்கள் மண்ணில் பிறந்த காலத்திலிருந்து விண்ணை நோக்கித்தான் உங்களுடைய பயணம் இருக்கிறது. உடலைப் புதைத்து, எரித்து விட்டாலும் எரியாத ஆன்மா மூடிவைத்த மனத்தோடு தொடரும் பயணத்தைத் தொடர இடம் தராதீர்கள்.

வயதான காலங்கள் வயதான மக்களோடே கழியட்டும். யாருக்கும் புத்தி சொல்லாதீர்கள். யாரும் அதைக் கேட்கப் போவதில்லை. எல்லோருக்கும் எல்லாம் தெரியும். வாழ்ந்த அனுபவத்தைச் சொல்லுங்கள். கேட்பவர்களுக்குப் பயன்படட்டும். கேட்காதவர்களுக்குத் தெரியாமலே போகட்டும்.

வயதான உங்களை உங்களுடைய பிள்ளை பார்க்க வேண்டும் என்ற கட்டாயம் ஒன்றுமில்லை. நீங்கள் நோயாளியாகப் படுத்தால் நோய் தொற்றிவிடும் என்று வாசற்படியில் நின்று பார்த்துவிட்டுப் போகின்ற பிள்ளைகளும் உங்களுக்கு அமையும். அது குற்றம் என்று நான் கருதவில்லை. எங்கள் மகிழ்ச்சிக்காக மண்ணுக்குக் கொண்டு வந்தவர்களே அவர்கள். அவர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நீங்கள் முடிவு செய்ய முடியாது. அவர்களின் வாழ்க்கையில் எது சரி என்று படுகிறதோ அதை அவர்கள் செய்வார்கள். அவர்களின் சுதந்திரத்தில் உங்களுடைய தலையீடு இருக்கக் கூடாது.

ஊருக்காக நாட்டுக்காக நீங்கள் உழைத்தவை எல்லாம் உங்கள் கடைசிக் காலத்தில் நோய் வந்து படுத்தால் துணைக்கு வரப் போவதில்லை. நீங்கள் இறந்தால் வந்து இறுதி அஞ்சலி செலுத்திவிட்டுப் போவார்கள். உங்களுடைய குடும்பம் மட்டுமே என்றும் உங்களுடன் கூட வரும். அதனால் முடிந்தவரை குடும்பத்துக்காக நேரத்தை ஒதுக்குங்கள்.

வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிந்து வாழப் பழகிக் கொள்ளுங்கள். பந்து போல் தொடங்கிய இடத்துக்கே வாழ்க்கை வந்து முடியும். அசையும் போதே உங்களுடைய பூரண வாழ்க்கையைக் கண்டு செல்லுங்கள்.

வயோதிபர் மடம் ஒன்றும் தவறான இடம் என்று கருதாதீர்கள். அங்கு பணி புரிபவர்கள் உங்களைக் கவனிப்பதற்கு என்றே கடமை புரிபவர்கள். முறையான நிர்வாகம் அமைந்துவிட்டால், நீங்கள் அங்கு

மகிழ்ச்சியாக இருக்கலாம். பாடவும், ஆடவும் பலர் வருவார்கள். உங்களுடன் பேசிக் கொண்டிருக்க நண்பர்கள் இருப்பார்கள். சுத்தக் காற்றைச் சுவாசிக்க உங்களை அழைத்துச் செல்வார்கள். நீங்கள் விரும்பிய போது உங்களுடைய உறவினர்கள் பார்க்க வருவார்கள்.

பேரப்பிள்ளைகள் உங்களுடைய கவனிப்பில் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. கட்டாயமும் இல்லை. காலம் அவர்களுக்குப் புதியவற்றைப் போதித்து விட்டது. உங்களால் அவர்களுடன் இணைந்து ஓடமுடியாது. நீங்கள் முயற்சி செய்தாலும் உங்களுடைய காலம், வாழ்க்கை முறை திரும்பி வரப் போவதில்லை.

நாட்குறிப்பு எழுதுகின்ற பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனுடைய நாட்குறிப்பும் ஒரு வரலாறு. நீங்கள் எழுதவில்லையானால், நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை இந்த உலகம் மறந்துவிடும். நீங்களும் கூட மறந்துவிடுவீர்கள்.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். நடக்கப் போவதில் விட்ட தவறுகளைக் களைந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். மீண்டும் தொடங்கிய இடத்திற்கு வந்து தொடர மனம் ஒப்புக்கொள்ளக் கூடாது

உங்களை முழுமையாக வெளிக்காட்டுங்கள். உங்களுக்குத் திரை எதற்கு? திரை போட்டு உங்களை ஒரு பொலித்தீன் பையால் சுற்றிக் கொண்டு வெளியுலகத்தோடு உறவாடாதீர்கள். நான் என்று வெளியே வாருங்கள். உங்களுடைய தன்னம்பிக்கையும் ஆளுமையும் வெளிப்படும். பல்கலைக்கழக வாசலை மிதிக்காதவன் நான் எப்படி பெரிய ஆளுமைகளுடன் நேருக்கு நேர் நின்று பயணம் செய்தேன்? என்னை நான் மதித்தேன்.

எடுத்த இடத்திலேயே மழையாய் நீரைத் தந்து விட்டுப் போகும் மேகம் போல நீங்கள் கற்ற கல்வியும் பெற்ற அனுபவமும் எடுத்த இடத்திலேயே கொடுக்கப்பட வேண்டும். எழுத்தாக, காணொளியாக, மேடைப் பேச்சாகக் கொடுத்துவிடுங்கள். நீங்கள் பெற்றது மூளை என்னும் தொழிற்சாலையில் போட்டுப் பதப்படுத்தப்பட்டதாக இருக்கட்டும்.

இந்த உலகமே உங்களுக்காக இயங்குகிறது என்பதை மறந்து விடாதீர்கள். காலையில் கண் விழிப்பதிலிருந்து மாலையில் உறங்குவது வரை உங்களுக்காகப் பிறர் உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் உழைத்த உழைப்பிலேயே வாழுகின்றீர்கள். யாரிடமிருந்து

பெற்றீர்களோ அவர்கள் யாரென்பதை நீங்கள் புரிந்து கொள்வதில்லை. எனவே உலகத்துக்கு நன்றி சொல்லுங்கள்.

யாராவது உங்களுடன் பழகும் போதோ, தம்முடைய பிரச்சினைகளை முன் வைக்கும் போதோ அவர்களிடமிருந்து வெளியே நின்று பாருங்கள். மூன்றாவது ஆளாக நீங்கள் நிற்கும் போதுதான் உங்களால் சரியான தீர்ப்பை வழங்க முடியும்.

எல்லாரும் எப்போதும் ஒற்றுமையாக வாழ முயற்சி செய்யுங்கள். அழிந்து போகும் உடல் கூட தன்னுடைய செல்களால் இறுகப் பற்றிக் கொண்டுதான் வாழுகின்றது.

இறுதியாக ஒன்றை மட்டுமே எல்லாரிடமும் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். இதயத்தை விரியுங்கள். அங்கு அனைவரும் அமர்ந்து கொள்ள இடம் அளியுங்கள். மனிதனைத் தரம் பிரித்துப் பார்க்காதீர்கள். அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப நாங்களும் வளர்ந்து செல்வோம். அதுதான் உலக நியதி. அங்கு எம்முடைய பண்புகளும் பண்பாடுகளும் நசுக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

உள்ளத்து உணர்வுகளை ஞாபகப் பதிவுகளை
கள்ளமாக வைத்து கரைந்து போகாமலிருக்க
வெண்கூற்றாய் என் கதையைத் தந்து உங்கள்
கண்களுக்குள் விரித்துக் கடமை முடித்தேன்.

# அத்தியாயம் 17

# அறிவியலுக்கு அங்கீகாரம்

சிநேகா புத்தகத்தை மூடிப் பரமசிவம் கைகளில் கொடுத்தாள். அவர் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டிக்கொண்டு இருந்தது.

"ஐயா.. .. .." தந்தையை இறுக அணைத்தாள்.

"இந்தப் போராட்டம் தொடங்கியிருக்கக் கூடாது. எங்களுடைய ஊர் மண்ணை நாங்கள் பிரிந்திருக்கக் கூடாது. நாங்கள் நீர்கொழும்பு வந்திருக்கக் கூடாது. பார்வதி 58 வயதிலேயே என்னை விட்டுப் பிரிந்திருக்கக் கூடாது. நாங்கள் எல்லாம் ஒவ்வொரு திக்கிலே சஞ் சரித்திருக்கக் கூடாது. எல்லாம் நடந்துவிட்டது" என்று மனம் வெதும்பி பரமசிவம் கண்ணீர் விட்டார்.

"ஐயா நீங்கள்தானே சொல்வீர்கள் நாம் நினைத்து எதுவுமே நடப்பதில்லை என்று. இந்த வாழ்க்கை நாடகத்தில் உங்களுடைய நடிப்பு இவ்வளவுதான். அம்மாவினுடைய பாத்திரத்தை நன்றாக நடித்து முடித்துச் சென்று விட்டார். மனத்தைப் போட்டுக் குழப்பாதீர்கள். எதையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள் ஐயா. நான் வெளிக்கிடப் போகிறேன் ஐயா! நிருபாவின் நண்பி டாக்டர் என்ற காரணத்தாலேயே இவ்வளவு நேரமும் நிற்க முடிந்தது. ஹெலி நேரத்துக்கு வந்திடுவார். நான் போயிட்டு வாறன் ஐயா" என்றாள்.

மகளின் கைகளைப் பிடித்தார்.

"மீண்டும் சொல்கிறேன். யாராவது எம்மைப் பற்றிப் பேச வேண்டும் என்று நினைத்து எதுவுமே நாம் செய்வதில்லை மகள்! எமக்குள்ளே ஒரு தூண்டுதல் எம்மை இயக்கிக் கொண்டிருக்கும். தனக்கு விருது கிடைக்க வேண்டும் என்று பாரதி எழுதவில்லை. அவருடைய படைப்புக்கள்

இன்றுவரை பேசப்படுகின்றன. ஆனால், உன்னால் நான் வாழுவேன் என்று நம்புகிறேன். பரமசிவம் என்று ஒருவர் வாழ்ந்தார் என்று எதிர்காலச் சமுதாயம் அறிந்து கொள்ள நீ வகை செய்திருக்கின்றாய்.''

''இது என்னுடைய கடமை ஐயா. நான் கற்ற தமிழ் எனக்குக் கை கொடுத்திருக்கிறது. இந்த நூல் உங்களுக்கும் எனக்கும் ஒரு Power Bank போன்றது ஐயா'' என்றாள் சிநேகா.

''இந்தத் தமிழைப் படித்து என்ன செய்யப் போகின்றாய்? என்று அன்று நான் கேட்டதற்கு இன்று வெட்கப்படுகின்றேன். நான் நினைக்கிறேன் மகள் இந்த உலகத்தில் என்னுடைய கடமை முடிந்துவிட்டது என்று. உனக்குப் பிடித்தது போல வாழ். எப்படி வாழ வேண்டும் என்பதை உன்னுடைய அனுபவம் கற்றுத் தந்திருக்கும். அந்தப் பிள்ளை நிருபா விடம் நன்றி சொல்லி விடு.''

''மூத்தவன் சிவம் கோயில் முன் மண்டபம் ஒன்று தனியனாய் நின்று கட்டியிருக்கின்றான் என்று அறிந்தேன். நான் விட்ட பாதையை அவன் தொடர வேண்டும். ஆனால், என்னைப் போல் நேர்மையாகச் செய்யட்டும். மற்றவர்கள் வாயிலிருந்து அவன் வாழ்த்தை மட்டுமே பெற வேண்டும். எல்லாரும் போற்ற வாழ வேண்டும். அதுவே அவனுடைய எதிர்காலத்தில் புண்ணியத்தை அவனுக்குத் தேடித்தரும்.''

''ஐயா நிருபாவுக்கு விருது கிடைக்கின்றது. நான் கதை எழுதுகின்ற சமயத்திலே நிருபா DPMA என்று சொல்லப்படுகின்ற Pattern und Marken Amt க்கும் WIPO க்கும் அறியச் செய்து உங்களுடைய ரிப்போர்ட் எல்லாம் கொடுத்தாள். நிருபாவுக்கு நிறையப் பிரச்சினைகள் வந்தன. கிறிஸ்வதப் பாதிரிமார்கள், காவல்துறையினர் என்று நிருபாவைக் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். ஆனாலும், உலகத்துக்குப் பயன்படும் என்று கருதிய காரணத்தாலும் ஏதோ நல்ல காலம் எமக்கு இருக்கின்ற காரணத்தாலும் எல்லாம் நல்லபடியாக முடிந்தது. அவர்கள் இங்கே வந்து உங்களைப் பார்த்தார்கள். இனிமேல் இந்த உலகத்திலே இந்தக் கருவிக்கு உரிமையாளி நிருபாதான். அவ இனிமேல் கோடீஸ்வரி ஐயா''

''அப்படியா! கேட்கவே சந்தோசமாக இருக்கிறது. நான் சாகப் போகின்றபோது கூட ஒரு நன்மை செய்து விட்டுத்தான் போகிறேன். ஹெலி நிற்கும் போது ஒரு 4 பேர் வந்திருந்தார்கள். எனக்கு ஞாபக மறதி இருக்கிறதா? என்று ரெஸ்ட பண்ணினார்கள். கைகளை நேராகப்

பிடிக்கச் சொன்னார்கள். இப்படி சில ரெஸ்ட் செய்து பார்த்தார்கள். நிருபாவும் வந்திருந்தாள். நடந்த ரெஸ்ட் பற்றி அறிய வந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பிள்ளை நல்லா இருக்க வேணும்.''

''உங்களுக்கும் பணம் கொடுப்பார்கள் ஐயா''

பரமசிவம் விழுந்து விழுந்து சிரித்தார்.

''புதைகுழிக்குள் போகின்ற போது கூட வருவதற்கா... ... நீதான் இதற்காக முயன்றாய். உன்னுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அது பயன்படட்டும். முதல் முதலாகப் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர் பரமசிவம் என்ற பெயர் எனக்கு நிலைத்திருக்கும். நீ இந்த உலகத்தில் விதையாக விழு.

''சரிசரி வெளிக்கிடு அங்க தம்பி காத்துக் கொண்டு இருக்கப் போகுது. காரில் தானே வந்தாய். கவனமாய்ப் போ'' என்று சிநேகாவை வழி அனுப்பி வைத்தார் பரமசிவம்.

மாதம் சித்திரை மலர்கள் பூத்துக் குலுங்கும் காலம் டுசில்டோப்

இடம்: Heinrich Heine Universit’t Düsselorf

நேரம்: 14.00 மணி

மண்டபம் நிறைந்த கூட்டம். உலகத்து விஞ்ஞானிகள் அணிவகுப்பு. உலகமே அசந்து போகும் புதிய கண்டுபிடிப்பு. பல குற்றங்கள், நடக்க இருக்கின்ற அழிவுகள், பழைய நினைவுகளை மூளையிலிருந்து பக்கம் பக்கமாகக் காட்டக்கூடிய இயந்திரத்தை உயர்ந்த மேடையிலே கொண்டு வந்து வைத்தாள் நிருபா. முன் இருக்கையிலே விஞ்ஞானிகளின் மத்தியில் பரமசிவம் அமர்ந்திருக்கின்றார். அவர் கையில் இன்னும் வாழ்கிறேன் என்னும் பரமசிவத்தின் புத்தகம். அவர் அருகே சிநேகா.

மேடை ஒலிவாங்கியைக் கையில் எடுத்தாள். தன்னுடைய கருவி பற்றிய விளக்கத்தை அழகாகக் கொடுத்தாள். காட்சிப் படமாக அனைத்தும் பீமாவால் காட்சிப்படுத்தப்படுகின்றன. பரமசிவத்தின் படம் அழகாகத் திரையில் விழுகின்றது. தந்தையைத் திரும்பிப் பார்க்கின்றாள். அத்தனை ஆராய்ச்சியாளர்கள் முன்னிலையில் பரமசிவத்தின் ஆராய்ச்சிப் படம் காட்சிப்படுத்தப்படுகிறது. இதழ்களில் புன்னகை. கண்களில் கண்ணீர். பரமசிவத்தின் கைகளை இறுகப்பற்றுகிறாள் சிநேகா. அப்படியே நிமிர்ந்து

மேடையைப் பார்க்கின்றாள். சிறிது நேரத்தில் இலேசாகக் கைகள் குளிர்கின்றன. திரும்பித் தந்தையை அசைக்கின்றாள்.

“ஐயா.. .. . . ஐயா.. .. ..”

சத்தம் இல்லை. தன்னுடைய கடமை முடித்துப் பரமசிவத்தின் ஆத்மா சாந்தியடைந்தது. குமிறி வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள். யாருக்கும் தொந்தரவில்லாமல் மெல்லத் தந்தையின் சக்கர நாற்காலியைத் தள்ளிய படி வெளியே வந்தாள். தான் விடைபெறும் காரணத்தை நிருபாவுக்கு எழுத்தில் எழுதிப் பாதுகாவலன் ஒருவனிடம் கொடுத்து அனுப்பினாள். துரித வாகனத்துக்கு அழைப்பு விடுத்தாள். அரவிந்தனிடம் தொலைப்பேசியில் நிலைமையைச் சொன்னாள். அப்போதுதான் வாய்விட்டு அழுதாள்.

தந்தையின் புத்தகத்தை மார்பிலே அணைத்தாள். தொலைப்பேசி அழைப்பு விடுத்துச் சில நிமிடங்களில் துரிதவாகனம் வந்தது. பரமசிவத்தை ஏற்றிக் கொண்டு சென்றது.

பரமசிவம் என்ற சகாப்தம் இவ்வுலக வாழ்க்கையை அடையாளப்படுத்திவிட்டு மறைந்தது. ஒவ்வொரு ஆத்மாக்களும் தமது கடமை முடிந்தால், சில மணித்துளிகள் கூட பூமியில் தங்காது என்பதே நிஜம்.

ஒரு விதை மரமாக வளர்ந்து கிளைகளைப் பரப்பிச் செழிப்புடன் நிற்கின்றது என்றால் அந்தச் செழிப்புக்கு இந்த ஆரோக்கியமான விதைதான் காரணம்.

சிநேகாவை இந்தப் பூமி இன்னும் தாங்குகின்றது. பயணங்கள் தொடர்கின்றன. சிநேகா ஒன்பது மாதங்களே தன்னுடைய மகளைக் கருவறையில் தாங்கினாள். ஆனால், காலம் கடந்தும் நினைவுப் பேழையிலிருந்து அழிக்க முடியாத கல்வெட்டுக்களாய் அவளுடைய பெற்றோரைத் தன்னுடைய இதயத்துக்குள் தாங்குகின்றாள். அதனால் அவளுக்குள் இருந்து இன்னும் அவர்கள் கனக்கின்றார்கள்.

•